தமிழ்ப் பேரவைச் செம்மல்

# வெள்ளைவாரணனார்

**நூல் வரிசை – ④**

## *திருவருட்பாச் சிந்தனை*

*ஆசிரியர்*

பேராசிரியர் **க.வெள்ளைவாரணனார்**

மாணவர் பதிப்பகம்

<u>நூற்குறிப்பு</u>

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **வெள்ளைவாரணனார் நூல் வரிசை : 4 திருவருட்பாச் சிந்தனை** |
| ஆசிரியர் | : | **பேராசிரியர் க.வெள்ளைவாரணனார்** |
| பதிப்பாளர் | : | **இ. தமிழமுது** |
| மறு பதிப்பு | : | 2014 |
| தாள் | : | 16.0 கி. மேப்லித்தோ |
| அளவு | : | 1/8 தெம்மி |
| பக்கம் | : | 20 + 300 = 320 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | **உரு. 300/-** |
| நூலாக்கம் | : | டெலிபாய்ண்ட் சென்னை -5. |
| அட்டை வடிவமைப்பு | : | வி. சித்ரா |
| அச்சு | : | வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ் இராயப்பேட்டை, சென்னை - 14. |
| கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| வெளியீடு | : | **மாணவர் பதிப்பகம்** பி-11, குல்மொகர் அடுக்ககம், 35, செவாலியே சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர், சென்னை -600 017 தொ.பே: 2433 9030 |
| நூல் கிடைக்கும் இடம் | : | **தமிழ்மண் பதிப்பகம்** தொ.பே. : 044 2433 9030. |



தமிழ்ப்பேரவைச் செம்மல்

# க.வெள்ளைவாரணனார்

**தோற்றம்** **மறைவு**

*14.01.1917* *13.06.1988*

# பதிப்புரை

*19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியும், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியும் தமிழ்ப்புலமையும் தமிழாய்வும் மேலோங்கி வளர்ந்த பொற்காலமாகும். இப் பொற்காலப் பகுதியில்தான்* ***தமிழ்ப்பேரவைச் செம்மல்*** *பெருந்தமிழறிஞர்* ***க. வெள்ளைவாரணனார்*** *தோன்றி வளர்ந்து வாழ்ந்து தாய்மொழித் தமிழுக்கு வளமும் வலிமையும் சேர்த்தார்.*

*இப்பெரும்பேரறிஞர் எழுதிய நூல்கள் அனைத்தையும் வெளியிட முடிவுசெய்து* ***க.வெள்ளைவாரணனார் நூல் வரிசை*** *எனும் தலைப்பில் 21 தொகுதிகள் முதல் கட்டமாக வெளியிட்டுள்ளோம். கைக்குக் கிடைக்கப் பெறாத நூல்களைத் தேடியெடுத்து இனிவரும் காலங்களில் வெளியிட முயல்வோம்.*

***தமிழ் இசை, தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம், சைவ சித்தாந்தம்*** *ஆகிய நால்வகைத் துறைகளை மையமாகக் கொண்டு இவர் எழுதிய நூல்கள் தமிழுக்கும் தமிழருக்கும் பெரும் பயன்தரக் கூடிய அறிவுச் செல்வங்களாகும். ஆழ்ந்த சமயப்பற்றாளர், பதவிக்கும் புகழுக்கும் காசுக்கும் தம்மை ஆட்படுத்திக் கொள்ளாது தமிழ்ப்பணி ஒன்றையே தம் வாழ்வின் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர், நடுவணரசு தமிழகத்தில் கலவைமொழியாம் இந்தியைக் (1938) கட்டாயப் பாடமாகத் தமிழ்நாட்டுக் கல்வி நிறுவனங்களில் புகுத்தியபோது அதனை எதிர்த்துப் போர்ப்பரணி பாடிய தமிழ்ச் சான்றோர்களில் இவரும் ஒருவர்.* ***காக்கை விடுதூது*** *எனும் இந்தி எதிர்ப்பு*

நூலை எழுதி அன்று தமிழ்நாட்டு ஆட்சிக் கட்டிலில் முதல்வராக அமர்ந்திருந்த இராசாசிக்கு அனுப்பித் தம் எதிர்ப்பைப் பதிவு செய்தவர்.

தம்முடைய தமிழாய்வுப்பணி மூலம் தமிழ் வரலாற்றில் நிலைத்து நிற்பவர், தமிழையும் சைவத்தையும் இரு கண்களெனக் கொண்டவர். தமிழிலக்கணத் தொன்னூலாம் **தொல்காப்பியத்தையும்**, பின்னூலாம் **நன்னூலையும்** ஆழ்ந்தகன்று கற்று ஒப்பாய்வு செய்தவர், தம் கருத்துகளும் வாழ்க்கை முறையும் முரண்படாமல் எண்ணியதைச் சொல்லி, சொல்லியபடி நடைமுறையில் வாழ்ந்து காட்டிய பெருந்தமிழறிஞர்.

**தொல்காப்பியன்** என்ற பெயர் இயற்பெயரே என்று நிறுவியவர், தொல்காப்பியர் காலத்தில் வடக்கே **வேங்கடமலைத்தொடரும்**, தெற்கே **குமரியாறும்** தமிழக எல்லைகளாக அமைந்திருந்தனவென்றும், கடல்கோளுக்குப் பிறகு **குமரிக்கடல்** தென் எல்லை ஆனது என்பதையும், தொல்காப்பியர் இடைச்சங்கக் காலத்தவர், தொல்காப்பியம் இடைச்சங்கக் காலத்தில் இயற்றப்பட்டது என்பதையும், முச்சங்க வரலாற்றை முதன்முதலில் கூறியது இறையனார் களவியல் உரைதான் என்பதையும், தொல்காப்பியம், சங்கச் செய்யுளுக்கும் திருக்குறளுக்கும் நெடுங்காலத்திற்கு முன்னரே இயற்றப்பட்டது என்பதையும், திருமூலர் தம் **திருமந்திரமே** சித்தாந்த சாத்திரம் பதினான்கிற்கும் முதல் நூலாக திகழ்வது என்பதையும், திருமுறை கண்ட சோழன் **முதலாம் இராசராசன்** அல்ல **முதலாம் ஆதித்தனே** திருமுறை கண்ட சோழன் என்பதையும், **வள்ளலாரின் திருவருட்பா** தமிழின் சொல்வளமும், பொருள் நுட்பமும், ஒப்பற்றப் பேரருளின் இன்பமும் நிறைந்தது என்பதையும், சைவ சமயம் ஆரியர்க்கு முற்பட்டது என்பதையும், பழந்தமிழ் நாகரிகத்தின் ஊற்றுக்கண் தமிழும் சைவமும் என்பதையும் தம்

நூல்களின் வழி உறுதி செய்தவர். தம் ஆய்வுப் புலமையால் பல புதிய செய்திகளையும் தமிழ் உலகுக்கு அளித்தவர்.

இவர் எழுதிய நூல்கள் தமிழ்உலகிற்குப் பெருமை சேர்ப்பன. தமிழ் இலக்கிய வரலாற்றிற்கு கூடுதல் வரவாக அமைவன. இவருடைய அறிவுச் செல்வங்களனைத்தையும் ஆவணப்படுத்தும் நோக்குடன் தொகுத்து தமிழ் உலகிற்கு வைப்பாகக் கொடுத்துள்ளோம். இதனை வெளிக்கொணர எமக்குத் துணையாயிருந்த எம் பதிப்பகப் பணியாளர்கள், நூல்கள் கொடுத்து உதவியவர்கள், கணினி, மெய்ப்பு, அச்சு, நூல் கட்டமைப்பு செய்து இந்நூல்வரிசை செப்பமுடன் வெளிவரத் துணைநின்ற அனைவருக்கும் நன்றி. எம் தமிழ்க் காப்புப் பணிக்கு துணை நிற்க வேண்டுகிறோம்.

*2010* **பதிப்பகத்தார்**

## தமிழ்ப்பதிப்பு முன்னோடிகளை வணங்குவோம்!

“தமிழாராய்ச்சியின் வளர்ச்சியில் புதிய போக்குகளை உண்டாக்கிய பெருமைக்குரியவர்கள் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த அறிஞர் களேயாவர். ஏட்டுச் சுவடிகளில் இருந்த இலக்கிய, இலக்கணப்பெருஞ் செல்வங்களை அனைவரும் அறியுமாறு செய்து புதிய ஆய்விற்குத் தடம் பதித்தவர்கள் இவர்களே ஆவர்.

மேலை நாட்டார் வருகையினால் தோன்றிய அச்சியந்திர வசதிகளும், கல்வி மறுமலர்ச்சியும் புதிய நூலாக்கங்களுக்கு வழி வகுத்தன. ஆறுமுக நாவலர் (1822-1879) சி.வை. தாமோதரம் பிள்ளை (1832-1901), உ.வே. சாமிநாதையர் (1855-1942) ஆகியோர் தமிழ்ப்பதிப்பு முன்னோடிகளாய் விளங்கித் தமிழுக்கு வளம் சேர்த்தனர்” என்று தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர், இ. சுந்தரமூர்த்தி தனது ‘பதிப்பியல் சிந்தனைகள்’ எனும் நூலில் பதிவு செய்துள்ளார். இந்நூல் தொகுதிகளை வெளியிடுவதன் மூலம் தமிழ்ப்பதிப்பு முன்னோடிகளை வணங்குவோம்.

# முன்னுரை

திருவிளங்கச் சிவயோக சித்தியெலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவானுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்க ஒளிசிறந்த திருவிளக்கே
உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்க அருள் உதவு பெருந்தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே!

*அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த் துறைத் தலைவராய் விளங்கிய பன்மொழிப் புலவர் டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களுடன் சித்தாந்த கலாநிதி உரை வேந்தர் ஔவை. துரைசாமிப் பிள்ளையவர்களும், யானும் 1944-45-ஆம் ஆண்டில் வடலூரில் நிகழ்ந்த சன்மார்க்க சங்கக் கூட்டத்திற்குச் சென்றிருந்தோம். அக்கூட்டத்திற்குத் தமிழ்த்தென்றல் திரு. வி. கல்யாண சுந்தரனார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். அப்போது 'தேவாரத் திருமுறையும் திருவருட்பாவும்' என்ற பொருள் பற்றிப் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. 15 மணித் துளியில் யான் பேசிய பேச்சைக் கேட்ட திரு.வி.க. அவர்கள், அப்பேச்சினை விரித்து ஒரு கட்டுரையாக எழுதும்படி பணித்தார்கள். சைவத்திருவாளர் திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்களிடமும் சொல்லி நினைவு படுத்தினார்கள் எனினும் பல்கலைக்கழகப் பணிகளுக்கிடையே அதனைச் செய்து முடிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தார் கேட்டுக் கொண்டபடி "அருட்பா அறம்" என்ற வரிசையில் நான்கு*

நிமிட அளவில் ஆறு பேச்சுக்கள் வானொலியில் நிகழ்த்தப் பெற்றன. சைவத்திருமுறைகளிலும், திருவருட்பாவிலும், உறுதியான ஆர்வமும், ஈடுபாடும், புலமையும் தியான அனுபவமும், ஒருங்கு வாய்க்கப் பெற்ற வடலூர் வாழ் திருவாளர் பழ.சண்முகனார் அப்பேச்சுகளைத் தொகுத்து வெளியிடவிரும்பிக் கையெழுத்துப் படியினை வாங்கிச் சென்றார்கள். இருபது பக்க அளவில் அமைந்த அக் கையெழுத்துப் படியினைக் கண்ணுற்ற மதுரைக் காமராசர் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் டாக்டர்.வ.சுப. மாணிக்கனார் அவர்கள் சிறிய அளவில் இதனை வெளியிடுவதைக் காட்டிலும் இக்கருத்துக்களை மேலும் விளக்கித் தனிநூலாக வெளியிடுதலே பயனுடையதாகும் என வற்புறுத்தி னார்கள். அவர்களது வற்புறுத் தலுக்கு இணங்க மேலும் பல தலைப்புக்களில் விரிந்த பொருளமைப்பினைப் பெற்று இந்நூல் வெளிவருகின்றது.

இராமலிங்க வள்ளலார் அருளிய திருவருட்பா செந்தமிழ்ச் சொல்வளத்தாலும், ஆழ்ந்த பொருள் நுட்பத்தாலும் ஒப்பற்ற பேரருளின்பக் கடலாகும். அதனை ஆராயப் புகுந்த யான் "கடலுற்றுண் பெரு நசை ஒரு கணங்களை யொக்குந் தகைமையேன்" என்பதனை நன்கறிவேன். ஆயினும் சைவத் திருமுறைகளில் எனக்கு இயல்பாக வுள்ள ஆர்வத்தாலும் அத்திருமுறைகளுக்கு விளக்கவுரை போன்று வள்ளலார் பாடியருளிய திருவருட்பாப் பனுவலின் சிறப்பினைச் சைவவுலகம் உள்ளவாறு உணர்ந்து போற்றுதல் வேண்டும் என்னும் ஆசையினாலும் இச்சிறுநூலை எழுதத்தொடங்கினேன். எனக்கு உறுதுணையாய்ப் உடனிருந்து உரியகருத்துக்களை வழங்கி இந்நூலை எழுதி நிறைவேற்றியவர் அருள் நெறிச் செல்வர் பழ. சண்முகனார் அவர்களேயாவர். அவர்கட்கு எனது வணக்கத் தினையும், நன்றியையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சைவத் திருமுறைகளில் உண்மையான மதிப்புடைய சித்தாந்தச் சைவர்கள் சிலர் சமயங்கடந்த பொது நெறியாகிய சுத்த சன்மார்க்கத்தை வற்புறுத்தும் "**திருவருட் பாவினைச் சைவத்திருமுறைகட்கு மாறுபட்ட கருத்துக்களை வற்புறுத்தும் நூலாகப் பிறழவுணர்ந்து அயன்மை செய்து வருகின்றனர். திருவருட்**

**பாவின் சமரச நன்னெறியினை வற்புறுத்தும் குறிக்கோளு டைய சன்மார்க்க அன்பர்களில் ஒரு சாரார் வள்ளலார் பாடிய முதல் ஐந்து திருமுறைகள் சைவத் திருமுறையாசிரி யர்களையும் அவர்கள் அருளிய திருமுறைப்பனுவல் களையும் போற்றுதலால் அவற்றை ஏற்றுக் கொள்ளும் விருப்பின்றிச் சிறப்பாகச் சாதிசமயப் பிணக் கொழித்துச் சமரச சன்மார்க்க நெறியினை வற்புறுத்தும் ஆறாந் திருமுறையினையே தமக்குரிய ஆதார நூலாகக் கொள்கின்றனர்.**

இராமலிங்க வள்ளலார் வற்புறுத்தும், சமரச சுத்த சன்மார்க்கத்தின் விளைபுலமாகவும் தமிழ்மக்களின் தெய்வத்திறம் பேசும் திருவரு ளிலக்கியமாகவும் திகழும் சைவத் திருமுறைகளை ஆதாரமாகக் கொள்ளுதற்கு அன்னோர் தயங்குகின்றார்கள். மேற்குறித்த இருதிறத்தாரும் சைவத் திருமுறைகளையும் அவற்றில் தோய்ந்து இறைவன் திருவருளில் திளைத்த இராமலிங்க வள்ளலார் அருளிய திருவருட்பாவினையும், காய்தலுவத்தலகற்றி ஒப்பு நோக்கி ஆராய்வார்களானால், சைவத்திருமுறைகள் மூல நூலாகவும், திருவருட்பா அவற்றின் பெருவிளக்கவுரையாகவும் அமைந்துள்ள ஒற்றுமைத் திறத்தினை உள்ளவாறுணர்வர். அதனால் திருமுறைகளும் திருவருட்பாவும் தம்முட் பொருளால் முரண்படுவன அல்ல என்னும் தெளிவுடையராவர் என்பது திண்ணம். இவ்வாறு சைவத் திருமுறை கட்கும் திருவருட்பாவுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினையும், அவ்விரண்டுக்கும் பொருள் மாறுபாடு சிறிதும் இல்லை என்பதனையும் எடுத்துக் காட்டி விளக்குவதே இச்சிறுநூலின் நோக்கமாகும்.

சாதிமதவேற்றுமையொழிப்பு, வேதாந்த சித்தாந்த சமரசம் இராமலிங்க வள்ளலார் வற்புறுத்திய சாகாக் கல்வி, மரணமிலாப் பெருவாழ்வு பற்றிய கருத்துக்கள் பல திருமூலர் முதலிய திருமுறையாசிரியர்கள், காழிச் சிவஞான வள்ளலார், தாயுமானவர் ஆகிய பெருமக்கள் இயற்யி நூல்களிலும், இடைக்காலத்துச் சித்தர் பாடல்களிலும், பிற்காலத்தில் வாழ்ந்த அனுபவ ஞானியாகிய குமாரதேவர் நூல்களிலும் கூறப்பட்ட பழைமையுடையனவே

யன்றி வள்ளலாரால் எவையும் புதியனவாகப் புனைந்து கூறப்பட்டன அல்ல. இடைக்காலத்தில் வாழ்ந்த சிவஞானச் செல்வர்கள் கண்டுணர்த்திய அக்கருத்துக்களை விளக்கி உலகமக்கள் பலரும் தம் வாழ்வியல் நடைமுறையில் பின்பற்றி யொழுக நெறிப்படுத்தி உறுதியாக விரிவாக வழங்கிய தொன்றே வள்ளலார்குரிய தனித் தன்மையாகும். வள்ளலார் பின்பற்றிய நெறி சைவசித்தாந்தமே என்பது முப்பத்தாறு தத்துவங்கள் பற்றியும், மும்மலங்களாகிய பாசங்கள் பற்றியும், ஆன்ம வியல்பு பற்றியும் பதியியல்பு பற்றியும் அவர்கூறும் விளக்கங்களால் நன்கு புலனாகும்.

இந்நூலை எழுதும்படி தூண்டித் துணைபுரிந்தவர் தில்லைத் திருக்கோயில் திருப்பணிச் செல்வர் தருமபூஷணம் செ. இரத்தினசாமி செட்டியாரவர்களின் முதல் மைந்தர் என கெழுதகைத் தம்பியார் திரு. பாலசுப்பிரமணியம் ஆவர். செந்தமிழும் சிவநெறியும் தம் இரு கண்களாகக் கொண்டு போற்றும் இயல்பினராகிய இவரும், இவருடைய தம்பியர் திரு.இராமநாதன் திருநாவுக்கரசு ஆகியோரும் சுற்றமும் நட்பும் சூழப் பொன்னம்பலத்தில் அருள்நடம் புரியும் அம்பலவாணர் திருவருளால் எல்லாச்செல்வங்களும் நற்பேறுகளும் இனிது பெற்று நாடு நலம் பெற நீடு வாழ்தல் வேண்டும் என உளமுவந்து வாழ்த்துகின்றேன்.

உடல் நலங்குறைந்த நிலையிலும் இத்தகைய தமிழ்ப் பணிகளில் யான் ஈடுபடும் அளவுக்குத் தனது உடல் நலத்தைப் பொருட் படுத்தாது எனது உடல் நலத்தைப் பேணி வரும் என் வாழ்க்கைத் துணைவி திரு.பொற்றடங்கண்ணி உடல்நலமும் உளநலமும் பெற்று நீடு வாழ்தல் வேண்டும் என அன்புடன் வாழ்த்துகிறேன்.

சைவத்திருமுறைகளில் நிலை பெற்ற சிந்தையராய் வள்ளலார் அறிவுறுத்திய சமரச சுத்த சன்மார்க்கச் செந்நெறி யினைக் கடைப் பிடித்தொழுகும் செந்தமிழ்ச் செல்வர் திரு. பழ.சண்முகனார் அவர்களது ஆர்வத்தின் விளைவாக, அமைந்ததே "திருவருட்பாச் சிந்தனை" என்னும் இந்நூலாகும்.

இதனை அன்புகூர்ந்து உடனிருந்து எழுதி நிறைவேற்றிய அவர்கட்கு எனது நன்றியும், வணக்கமும், வாழ்த்தும், பாராட்டும் என்றும் உரியவாகும்.

இந்நூல் மாணிவாசகர் நூலகத்தின் வெளியீடாக வெளிவருதற் குரிய ஊக்கவுரையினை நல்கியதுடன் அருட்பிரகாச வள்ளலார் அருளிய திருவருட்பாவின் செம்பொருள் நுட்பங்கள் இனிது புலனாக ஆய்வுநலம் சிறந்த அணிந்துரையினை ஆர்வமுடன் எழுதி இந்நூலினைச் சிறப்பித்த மதுரைக் காமராசர் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மூதறிஞர் செம்மல் டாக்டர் வ. சுப. மாணிக்கம் பி.எச்.டி., டி.லிட்., அவர்களுக்கு எனது உளமார்ந்த வணக்கத்தினையும் நன்றியினையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தம் தந்தையார் விரும்பிய வண்ணம் வனப் புற வெளியிட்டு உதவியவர், சிறந்த நூல்களை வெளியிடுந் திறத்தால் செந்தமிழ் வளர்க்கும் மணிவாசக நூலக உறுதுணையாளரும் அண்ணா மலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளரும் ஆகிய நண்பர் திரு.ச. மெய்யப்பன் எம்.ஏ. அவர்கள் ஆவர். இவர் நாள்தோறும் கூத்தப் பெருமானை வழிபட்டு வரும் பெற்றியர். தமிழ் வளர்ச்சியில் ஆர்வமுடைய இவர் தில்லைச் சிற்றம்பலவன் திருவருளால் எல்லாச் செல்வங்களும் பெற்று நல்ல தமிழ்ப் பணிகள் புரிந்த, நாடு நலம்பெற வாழ்க என உளமுவந்து வாழ்த்துகின்றேன்.

சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவேன் உய்திபெற
நல்ல தமிழ்ப்பணியை நல்குவான் - செல்வமலி
புள்ளிருக்கு வேளூர்ப் புகழ்ச்செவ்வேள் பொன்னடியென்
உள்ளிருக்க என்றும் உவந்து.

**க. வெள்ளைவாரணன்**

கனகசபை நகர்.
11/86

# அணிந்துரை

**மூதறிஞர் செம்மல்**
**வ. சுப. மாணிக்கம், பி.எச்டி., டி. லிட்**
*முன்னைத் துணை வேந்தர்,*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.*

பேராசிரியர் திருமுறைச் செல்வர் வெள்ளைவாரணனார் மாணுற எழுதிய திரவருட்பாச் சிந்தனை என்ற பெருவிளக்க நூலுக்குக் கெழுதகை நட்புக்கருதி அணிந்துரை எழுத வேண்டியவன் ஆகின்றேன். குங்கிலியம் சண்முகனார் பங்கும் ஈடுபாடும் இப் பனுவலுக்கு உண்டு என்று அறியும் போது, என் அணிந்துரையைப் பணிந்துரையாகவே கருதவேண்டும். துணை வேண்டாச் செருவென்றி என்பது போல, அணிந்துரை வேண்டா அருள் நூல் இது.

அருட்பாச்சிந்தனை என்ற இந்நூல் திருவருட் பாவைக் களமாகக் கொண்டு பல்லாயிரம் ஆண்டுகளாக இடையறாது ஓடிவந்த தமிழ்ச் சிந்தனைகளின் வரலாறு கூறும் முறை நூலாகும். 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன் அன்றோ, என்ற படி தொல்காப்பியவாழை, சங்கவாழை, திருக்குறள் வாழையாக, திருமுறை பிரபந்த வாழையாக, தாயுமானார் வள்ளலார் வாழையாக, தாயுமானார் வள்ளலார் வாழையாக, பாரதியார் பாரதிதாசன் வாழைக்கன்றுகளாக வற்றாது பாய்ந்து வரும் தமிழ் நீரியலைப் பளிங்குப் படுத்துளது இச்சிந்தனை நூல். வாழையடி வாழையாக வந்தாலும் அவற்றின் தாற்றுக் கொழுமைகள் வேறுபடுமன்றோ?

வள்ளலார் உலகிற் பரப்ப எண்ணிய சமரச சுத்த சன்மார்க்க நெறியானது சைவசமயத்திற் கால் கொண்டு வளர்ந்தது என்று வரன்முறை விளக்கம் தரும் பேராசிரியர் வெள்ளைவாரணனார். அருட்பாவினால் பழந்தமிழ்க் கொள்ளைகள் புதுமலர்ச்சி பெற்றதையும், முன்னூல்களில் நுண்ணிதிற் கிடந்த மறைமொழிகள் பலரறிய வெளிப்பாடு ஆனதையும், இதுகாறும் யாரும் காட்டாத தடம் புகுந்து அழுத்தமாக எழுதியுள்ளார். இச்சிந்தனை நூலின் தனிச்சிறப்பு இது.

''சன்மார்க்க நெறி பரப்பிய இராமலிங்க வள்ளலார் இன்றைக்கு நூறாண்டுகட்கு முன்னரே இறைவன் திருவருளால் தெளிந்து வகைப்படுத்தி உணர்த்திய தேக சுதந்திரம், போக

சுதந்திரம், சிவசுதந்திரம், திருவருட் சுதந்திரம் ஆகிய சுதந்திர வுணர்களின் இயல்பினை மக்கள் எல்லாரும் நன்குணர்ந்து, பயன் பெறும் வண்ணம் உலகமக்கள் அனைவர்க்கும் ஆங்கிலம் முதலிய பல்வேறு மொழிகளிலும் கட்டுரை வாயிலாகவும் சொற்பொழிவு வாயிலாகவும் அறிவித்தல் நம்நாட்டு அறிஞர் பெரு மக்களின் தலையாய கடமையாகும் என்பது திருமுறைச் செல்வரின் நல்லுரை. அதன்படி இந்நூலேனும் பன் மொழிப்படும் என்று ஆசைப் படுவோமாக. பாரத வொருமைக்கும் ஞாலவொருமைப்பாட்டிற்கும் நன்னெறியம் காட்டவல்லநாடி எம்மொழிஉண்டு? அம்மொழி தான் தமிழ்.

இச்சிந்தனை நூல் கடவுள் ஒருவரே என்பது முதலாக, திருமுறையும் திருவருட்பாவும் என்பது ஈறாகப் பதினாறு பகுதி கொண்டது. வள்ளலாரின் ஓதா வுணர்வு, பன்னூற் புலமை, யாப்பு வளம், உரைநடைத் திறம், விண்ணப்ப நடை, இசைப்பாடல்கள், தெய்வக் காதல், திருமுறைப் பதிவு, இலக்கியச் செல்வாக்கு எல்லாம் பன்னூற் சான்றுகளொடு நன்னடையில் விளக்கம் பெற்றுள. தேசியவி பாரதியார்க்குக் கருத்தாலும் நடையாலும் வழிகாட்டிய பெருமான் வள்ளலார் என்பதனை நாம் மறக்க லாகாது. பாரதியார் சாதியின் கொடுமையைத்தான் மிகுதியாகத் தாக்கிப் பாடினார். சாதி, சமயம் மதம் சாத்திரக் குப்பை என்ற விகற்ப விளையாட்டு எல்லாம் கண்மூடி வழக்கமெல்லாம் மண் மூடிப்போக என்று அதிர் பறை யறைந்தவர் வள்ளலார்.

என் அணிந்துரைக்கண் மரணமிலாப் பெருவாழ்வுக் கோட்பாட்டினைச் சற்று விரிவாக அலசியதன் நோக்கம் வள்ளலாரின் புதிய தூய சிந்தனை வளர்ச்சியை உள்ளவாறு புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்கேயாம். எல்லாரும் சாகாவாழ்வு பெறலாம் என்று அவர் மொழிந்த கருத்தினை முன்வைக் கின்றோமே யன்றி அதற்கு அவர் விதித்த சுத்தசன்மார்க்கம், கொலைபுலையின்மை, ஜீவ காருணியம் என்னும் உயிரிரக்கம் என்ற தகுதிப்பாடுகளை மக்கள் முன் நாம் மறைக்கிறோம் சொல்ல அஞ்சுகின்றோம். இன்னும் சொல்லப்போனால் அருட்பாவை வஞ்சிக் கின்றோம். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகின்றோம்.

வள்ளற் பெருமான் உலகிற்கு வழங்கிய அழியா முழு முதற்கோட்பாடு ஒன்றே ஒன்றுதான். அதுவே சீவகாருணியம் என்னும் உயிரிரக்கப்பண்பு. இரக்கமும் இராமலிங்க கும்குணங் குணியாம் இரண்டற்ற நிலையாம். இராமலிங்க சுவாமிகளின் சமயம் என்ன என்று எவரேனும் கேட்பின், அவர்சமயம் அருள்நெறி என்பர் திரு.வி.க. மரணமிலாப் பெரு நாழ்வுகூட முத்திபோலத் தனிமனிதப் பயனாகும் ஆருயிரின் தனி வேட்கை யாகும். முத்தர்க்கு உலகமக்கட் சமுதாபத் தொடர் அற்றது போல, உடற்சோதி யினர்க்கும் பழைய உடம்பு போல வினையாற்றலும் உலக வுறவும் இரா. ஆதலின் சீவகாருணியமே சுத்தசன்மார்க்கம் என்று அருளறம் தெளித்தார் இராமலிங்கர். அதனாற்றான் அவர்பாடியவை அருட்பா ஆயின. அவரும் அருட்பிரகாசர் ஆயினர். அவர்தம் மந்திரமும் அருட்பெருஞ் சோதியாயிற்று. ‘அருளே நங்குலம் அருளே நம்மினம்’ என்பது வள்ளலாரின் நிறைமொழி. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை என்பது திருக்குறள், இவ்வுலகமேயில்லை என்பது அருட்பா,

வள்ளலாரின் திருமுகம் எப்போதும் துயரக்குறையாய் இருந்தது என்று அறிகின்றோம். அவருக்கு ஏற்பட்ட துயரங்கள் எனை? பயிரின் வாட்டங் கண்டு வாடினார் உயிர்ப்பலி வாங்கும் சிறுதெய்வ வெங்கோயில் கண்டு பயந்தார். யாரே யாயினும் பசியாற் பிணியால் வெதும்பியபோது பதைத்தார்; இறந்தார்க்காக உறவினர் அருகுரல் கேட்டபோது நடுங்கினார்; பகைமன்னர்கள் போர் கொலை குவித்தபோது தளர்ந்து துடித்தார்; பல்லி கூகை காக்கை, பருந்து இவற்றின் கடுங்குரல் கேட்டபோதெல்லாம் என்ன துன்பப்பட்டனவோ என்று கலங்கினார். பாம்புபடமெடுத்த போது நஞ்சு எதனைக் கொல்லுமோ என்று உள்ளம் ஒடுங்கினார்; வீடுதோறும் இரந்தும் பட்டினி கிடப்பாரைக் கண்டு இனைந்தார். பசித்தார்க்கு உதவ முடியவில்லையே என்று வருந்தித்தான் சிறிய அளவே உண்டார்.

சாதி மத சமயச் சடங்குகளின் வேதாகமங்களான சாத்திரங் களில் வள்ளலார் ஒருமைப்பாடு காணவிரும்ப வில்லை என்பதனை யும் இவையெல்லாம் பொய்யாம் சழக்காம் என வெறுத்தார் என்பதனையும் கருதுக.

சாதிகுலம் என்றும் சமயமதம் என்றுமுக
நீதியியல் ஆச்சிரம் நீட்டென்றும் – ஓதுகின்ற
பேயாட்டம் எல்லாம் பிதிர்ந்தொழிந்த வேபிறர்தம்

வாயாட்டம் தீர்ந்தனவே மற்று.
வேதாக மங்களென்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேதாக மத்தின் விளைவறியீர் – சூதாகச்,
சொன்னவலால் உண்மைவெளி தோன்ற உரைக்கவிலை
என்ன பயனோ இவை.

வேதங்களையும் விரிவுகளையும் புராண சாத்திரங்களையும் வடமொழி வாயிலாகவே திறம்படக் கற்றவர் எனினும் பகுத்தறிவுக்கும் உலக வொற்றுமைக்கும் உயிர் நலத்துக்கும் ஒவ்வாதவற்றைக் கடுஞ் சொற்களால் இகழ்ந்துரைத்தவர் இராமலிங்கனார் போல் யாருமில்லை. அவ்வுலக நாட்டமின்றி இவ்வுலக நாட்டமின்றி இவ்வுலக நாட்டம் வலியுறுத்தியவர். அருட்பாவின் உள்ளத்தைத் தெள்ளிதின் உணர்ந்த பேராசிரியர் வெள்ளைவாரணனார்.

‘ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமை யுளராகி உலகியல் நடத்தல் வேண்டும்’

என்றபடி ‘இந்நாட்டிற் கல்வி, செல்வம் முதலியவற்றால் ஒத்தார் உயர்ந்தார் தாழ்ந்தார் ஆகிய எல்லா மக்களும் தம்முள் வேறு பாடின்றி ஒத்த உரிமை யுடையராகி, நமது நாட்டின் அரசியல் ஆட்சியில் பங்கு கொள்ளும் வாய்ப்பினைப் பெறுதல் வேண்டும் என்பதே வடலூர் வள்ளலாரின் உயர்ந்த குறிக் கோளாகும்’ என்று முடித்திருப்பது சிறிதும் புனைந்துரையன்று. இந்தியப் பாரதத்தில் எவ்வகைக் கொள்கையினரும் சிந்திக்க வேண்டிய செயலுரையாகும். அருட்பா என்று பெயர்கொண்ட திருமுறையில், ‘கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக’ என்று

பாடியிருப்பரேல், கண்ணோட்டத்தையும் மக்களாட்சியையும் மதித்த வள்ளலாரின் குடியரசு முறை தெளிவாகும்.

அடிகளாரின் கருத்துணர்ச்சியைச் சென்னைச் சிந்தனை, வடலூர்ச் சிந்தனை, என இவ்வகைப் படுத்தலாம். முதற் பகுதியில் (1825-1858) பழைய சைவத்திரு முறைப் போக்காகவும், பிற்பகுதியில் (1859-1874) புதிய பொதுநெறிப் போக்காகவும் அருட்பாசுரங்கள் காட்சியளிக்கின்றன. முருகவழிபாடு, மூவருள் சிவன் முதன்மை, சிவனடிப்பேறு, ஐந்தெழுத்தின் சிறப்பு, அடியார் கூட்டம், பெண்ணாசையின்மை, ஐம்புலவொடுக்கம், முத்திப்பேறு, சித்தாந்த மெய்ம்மைகள் என்ற மரபுப்பொருட்கள் முற்பகுதியில் பழையதடத்தில் நடைப் படுகின்றன.

பூமாந்தும் வண்டெனநின் பொன்னருளைப் புண்ணியர்கள்
தாமாந்தி நின்னடிக்கீழ்ச் சார்ந்து நின்றார் ஐயோநான்
காமாந்த காரமெனும் கள்ளுண்டு கண்மூடி
எமர்ந்தேன் ஒற்றி எழுத்தறியும் பெருமானே

என்ற நடைப்பட்ட மரபியற் பாசுரங்களே கருங்குழிக்கு வருவதற்கு முன்புவரை மிகுதியாகவுள். பின்வாழ்விலும் இத்தகைய பாசுரங்கள் இருந்தாலும், புதிய வேகத்தையும், குற்றங்குறை காணப்பெறாத் துயரத்தையும், மன்பதை தழுவிய இவ்வுலக சீர் திருத்தத்தையும், பயிரையும் உயிராகக் கொண்ட ஆன்மநேய வொருமைப் பாட்டையும், மரணமிலாப் பெருவாழ்வையும், சீவகாருணியம் என்னும் உயிரிரகத்தையும் கருங்குழி வடலூர் சித்திவளாகப் பாடல்கள் காட்டுகின்றன. உயிரிரகத்திற்கும் சமரச சன்மார்க்கம் என்னும் பொது நெறியத்திற்கும் எதிரான எதனையும் சாதி மத சமய சாத்திரம் எதனையும் அதிரச்சாடித் தூக்கி எடுத்தெறியும் வன்னடைப் புரட்சியை வடலூர்ப்பாக்களில் கடலோர அலை போல் காண்கின்றோம். வள்ளலார் பாடியவை என்பதனால் அருட்பா முழுமைக்கும் ஒத்த மதிப்பு உண்டென்றாலும் பிள்ளைப் பெரு விண்ணப்பம், நடராச பதிமாலை, சுத்தசிவநிலை, உலகர்க்கு உய்வகை, புனிதகுலம் பெறுதல், சமாதி, சன்மார்க்க உலகநிலை என வரும் செய்யுட் பகுதிகள் வள்ளலாரின் தனிச்சிந்தனை வளர்ச்சிகள். இவ்வளர்ச்சியின்றேல், எத்துணையோ தெய்வப்பாடல்களைப் பாடியோருள் ஒரு பொது வடியவராக இராமலிங்கர் அடங்கி யிருப்பர்.

வள்ளலாரின் வடலூர் வாழ்க்கை மக்கள் நோக்காயிற்று; பைந்நிலப் பார்வையாயிற்று; உயிர்த் தொண்டாயிற்று. இறைவனைத் தன் முத்திக்கு வழிகேட்ட முன்னோரினும் வேறாக, இறைமையை உயிர்ப்பொது நலத்துக்கு வழிப்படுத்தினார் இராமலிங்கர். ஏனை அருளாளர்கள் போலன்றி, சாலை சங்கம் சபை கண்டும் கொடி நாட்டியும் யாவரும் வழிபடும் ஒளிக்கோயில் அமைத்தும் அருட்பெருஞ் சோதி தனிப்பெரும் கருணையெனத் தனி மந்திரம் ஓதியும் தன்கொள்கைக்குச் செயல் வழிகளைத் தானே கண்ட இயக்காளர் இராமலிங்கனார்.

'பெரியதோர் ஞானம் நான்கினும் ஆசை
முத்தி பெற்றிடவும் பெற்றிலேன்
உரியதோர் இச்சை எனக்கிலை என்தன்
உள்ளம் நீ அறிந்ததே எந்தாய்'

'ஆதலால் இரக்கம் பற்றி நான் உலகில்
ஆடலே யன்றி ஓர்விடயக்
காதலால் ஆடல் கருதிலேன் விடயக்
கருத் தெனக் கில்லை'

எனவரும் அருட்பாக்கள் வள்ளலாருக்குத் தனிமுத்திப் பற்று இன்மையையும், எல்லாவுயிர்களின் பொதுநலம் காணும் சமுதாயப் பற்று இருந்ததையும் தெளிவாக்கும். ஏனை யடியவர்களினும் வள்ளலாரைப் பிரித்துக் காட்டுவது இப்பொதுவுணர்வே யாகும். உயிர்த்தொகை நலத்திற்காக முத்தித் தன்னலத்தைத் துறந்தமையால், வள்ளலார் என்ற பெயர் இவ்வகையிலும் பொருந்தும். 'வீடும் வேண்டா விறலின் விளங்கினார்' என்று சேக்கிழார் பெருமான் குறிக்கும் அடியவர் இலச்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்பவர் வள்ளலாரே எனப் பேராசிரியர் வெள்ளைவாரணனார் போற்றி யிருப்பது அரிய கருத்தாகும்.

வள்ளலார் அழுத்தமாகச் சாற்றிய சிறப்புக் கோட்பாடுகளில் ஒன்று மரணமிலாப் பெருவாழ்வு. ஒளியுடம்பு பெறும் இக்கொள்கை புதிதன்று எனவும், சங்கவிலக்கியம் திருக்குறள் திருமந்திரம் திருவாசகம் பெரியபுராணம் தாயுமானவர் முதலான தமிழ் நூல்களிற் சான்றுகள் உண்டு எனவும் பேராசிரியர் வெள்ளைவாரணனார் வன்முறைச் சிந்தனையாக எடுத்துக் காட்டுவர். இவ்வாறு சிவஞானி களுக்கு வற்புறுத்திக் சமாதிக் கிரியையைச் சன்மார்க்க நெறி நிற்போர் அனைவர்க்கும் உரிய கிரியையாக இராமலிங்க வள்ளல் வற்புறுத்தியுள்ளார் என்று பேராசிரியர் க.வெ. எழுதுவதும் குறிப்பிடத்தகும். எதனையும் மக்கட் பொதுவகைச் செய்வது வள்ளலாரின் பெருநெறியாதலின் சாகாக்கலையும் பொதுவாயிற்று.

இக்கலைபற்றி விரிந்த விளக்கங்கள் பல்துறையறிஞர்களால் எழுதப்பட்டு வருகின்றன. திரு.வி.க. பின்வருமாறு கருதுவர்.

'சாகாநிலை என்னும் ஒருநிலையுண்டு என்பர். எனது ஆராய்ச்சியில் விளங்கிய உண்மைகளுள் ஒன்று. அது குறித்து எனக்கு எவ்வித ஐயமாதல் திரிபாதல் மயக்கமாதல் இல்லை. அந்நிலையில் எனக்கு உறுதி யுண்டு. நமது நாட்டு ஆன்றோர் ஒரு முகமாக அறிவுறுத்திய அப்பெருநிலை இப்பொழுது மேல்நாட்டறிஞர் பலராலும் உறுதி செய்யப்பட்டு வருகிறது, என்று விளக்கும் திரு.வி.க. இப்பிறவியிலேயே தான் அந்நிலையை அடைய வேண்டும் என அவாவினார். வள்ளலாருக்கு முன்விளங்கிய பெரியோர்கள் எல்லாம் பிறவாமை வேண்டினார் எனவும், வள்ளலார் இறவாமை வேண்டினார் எனவும், இப்புழுக் குரம்பையே சுத்த சன்மார்க்கத் தொடர்பினால் நித்தியமாகும் எனக் கண்டார் எனவும் அருட்பாவில் முழுமைத் தோய்வுடைய ஊரனடிகள் தெளிவுப்படுத்துவர். 'கருவுற்று வந்தால் தான் புதுப்பிறப்பு என்பதல்ல, புதுப்பிறப்பின் பயனை ஈண்டு இவ்வுடலுடன் பெறுவதே உயரிய பிறப்பு' என்று சுருங்கச் சொல்லுவர் குங்கிலியசண்முகனார். சாங்கை மருத்துவக் கல்லூரி மூப்பு வாரா மருந்தினைக் கண்டுபிடித்திருப்பதாகவும் அதனை யுண்டவர் வெண்ணரை நீங்கி மீண்டும் கருமயிர் பெற்ற தாகவும் மூப்புக்கு உரிய நலிவுகள் இம்மருந்தினால் குணமடை வதாகவும் ஒரு சீனச் செய்தி

வெளியாயிற்று. ஆதலின் திருமூலர், தாயுமானவர், தாயுமானவர், இராமலிங்கனார் சித்தர்கள் சொல்லி வரும் ஒளியுடம்பு எதிர்காலத்தில் இன்னும் உறுதிப் படலாம். விண் வெளியாராய்ச்சி முனைப்பாக நடக்கும் அறிவியற் காலம் இது. அங்குச் செல்லுநர் மானிடவுடம்போடு சென்றாலும் அவ்வுடம்பும் பல பதம் பெற வேண்டும். கனந்தோன்றா மென்மையாக வேண்டும் காற்றுப்போல இயங்க வேண்டும். அதற்குத்தகமனமும் அறிவும் பயிற்சி பெற வேண்டும்.

முன்னையோரைக் காட்டிலும் சாகாநிலையுடம்பு என்ற கோட்பாட்டினை வள்ளற்பெருமான் வெளிப்படையாகவும் அழுத்தமாகவும் ஆசைப்படும் படியும் பாடிவிட்டார் என்பது என் கருத்து.

'மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ் செய்கின்றேன்.'

'இற்றிதனைத் தடுத்திடலாம் என்னொடுஞ் சேர்ந்திடுமின்
என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் தானே'

'செத்தார்கள் எல்லாம் திரும்ப எழுந்துமனம்
ஒத்தாராய் வாழ்க உவந்து.'

எனவாங்குப் பாடல்களில் சிவனுரை தன்னுரையாகவே வலியுறுத் துவர் இராமலிங்கர். துயில்வது போலப் புதையுங்கள்; எரியிற் சுடாதீர்கள்; சுடுவது கூடக் கொலை என்ற அளவுக்கு அருட்பா சென்றுவிட்டது. பரிசுச்சீட்டு வாங்கினார்க்கெல்லாம் முதற்பரிசு விழும் என்ற கதையாயிற்று. அறிஞர் ம.பொ.சி. சுட்டியதுபோல, அடிகள் எவ்வளவுக்கு அவர் உலகத்தாரால் புரிந்து கொள்ள முடியாதவராயினார். செத்தார் எழுதல் என்ற இயக்க நிலையை வள்ளலார் வெளிப்படுத்திய போது, கொஞ்சமேனும் உள்ளப் பக்குவப் பண்பாடு இன்றிப் பொதுமக்கள் சவங்களைக் கொண்டு வந்து எழுப்பித் தர மன்றாடினார்கள் என்று மன்பதையின் பேதைமையைக் கண்டிப்பர் குங்கிலியம் சண்முகனார்.

இரக்கம் நீங்கில் என்னுயிரும் நீங்கும்; என்னையும் இரக்கத்தையும் ஒன்றாக இசைவித்தான் திருச்சிற்றம்பலத்தான எனவும், உயிர்கள் படும் துயரங்களைப் பார்த்தும் கேட்டும் கணமும் பொறுக்கமாட்டேன் எனவும், உயிர்களின் துன்பம் தவிர்க்கும் வரம் அருளுக எனவும் வள்ளற் பெருமான் தொடுத்த பாக்கள் சீவகாருணியம் என்னும் உயிரிரக்கமே அருட்பாவின் சித்தாந்தம் என்பதைத் தெளிவாக்கும். சீவகாருணியமே சன்மார்க்கமாம், புண்ணியமாம், கடவுள் வழிபாடாம், முத்தியின்பமாம் ஆன்ம இயற்கை விளக்கமாம்: மற்றையவெல்லாம் மாயாசாலச் செய்கைகளாம் என்று சீவகாருணிய ஒழுக்கம் எனப்பெயரிய தம் உரைநடை நூலிலும் வள்ளலார் அழுத்தம் திருத்தமாக எதிர் வாதங்களோடு நாட்டியிருப்பதை நாம் ஒருதலையாகக் கடைப் பிடிக்க வேண்டும்.

அருட்பிரகாச வள்ளலின் இரக்கவெல்லைக்கும் இரக்கப் புறனடைக்கும் ஓர் எடுத்துக்காட்டு; கொலையையும் முற்றும் கண்டிப்பவர் அடிகளார்; கொலைஞரையும்

புலாலுண்ணி களையும் பகையாகக் கருதுபவர் அடிகளார். இவ் விருசாராரையும் மனிதவினமல்லாதவர் என்று தள்ளும்படி அடிகளார் செய்வர்: என்றாலும் இவர்கள் பாலும் ஒரு நிலையில் அடிகளார்க்கு இரக்க வுணர்வு உண்டு. அவர்களும் பசித்துயர்படப் பொறார்.

உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பும் உடையவர்கள் எல்லாம்
உறவினத்தா ரல்லர் அவர் புறவினத்தார் அவர்க்குப்

பயிர்ப்புறுமோர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக, என்பது அருள்விளக்க மாலை. இரக்கத்துக்கு எக்கொடிய உயிருட் கூட விலக்கில்லை என்ற அடிகளாரின் ஆன்ம நேய வொருமைப்பாடு தெளிவாம். இரக்கச் செயலே அருட்பா வழங்கும் பேரறம் என உணர்வோமாக. தெய்வப் பாசுரங்களின் ஆழமும் கரையும் கண்ட சான்றோர் வெள்ளைவாரணனார் 'வறியோரது பசிப்பிணியை மாற்றுதலின் இன்றியமையாமையை எல்லோர் உள்ளத்திலும் நன்க பதியும்படித் தெளிவாக வற்புறுத்திய அருளாளர் அருட்பிரகாச வள்ளலார் ஒருவரே' எனச் சுட்டியிருப்பது நடுநிலைமை காட்டும் மதிப்பீடாகும்.

மேலே விளக்கியபடி, திருவருட்பாச் சிந்தனை என்னும் இப்பனுவல் தொன்று முதல் இன்று காறும் தமிழினம் போற்றி வளர்த்த வாழ்வுச் சிந்தனைகளின் அருட்பேழையாகும். நுண்போர்க் கருவிகளாலும், கொள்கை முனைப்புக்களாலும் இகல்வேக வுணர்ச்சிகளாலும் இப் பைஞ்நிலம் அழியுங்கொல் என்று கவலை மீதூரும் இக் காலத்துக்கு, உலகவொருமைப்பாடு சாற்றும் அருட்பா உலகர் அனைவரும் கைக்கொள்ளத் தகும் பொருட்பா என்றால் மிகையன்று. இம்மறை தமிழ்மொழியில் இருப்பதால் உலகோர் அறியச் செய்தல் தமிழர்கடன் தமிழகப் பல்கலைக் கழகங்களின் பொறுப்பு. திருக்குறள் போலத் திருவருட்பா மறையும் பன்மொழியில் நடமாடும் பெருமை எய்துக. அதனால் உலகில் ஒருமை நாட்டம் வளரும்.

தந்தையார் வாழ்த்தாலும் சான்றோர்களின் உறவாலும் பதிப்புச்செம்மல் மெய்யப்பனாரின் ஆள்வினையாலும் மணிவாசகர் நூலகம் என்னும் ஆலமரம் வெற்றித்தழை செழித்துக் கிளைபெருக்கி விழுதுவிட்டு யாதும் ஊரே எனப் பரவித் தமிழ்நிழல் தருகின்றது. நூலொன்று வாராது நாளொன்று போகாது என்று சொல்லும் வண்ணம் எளிய இனிய உயரிய பல்துறை நூல்களையும் பொதுவறிவு நூல்களையும் ஒப்பியல் நூல்களையும் வரிசை நூல்களையும் காஞ்சி வனப்போடு பதிப்பித்து வருகின்றது. கல்லார்க்கும் கற்றவர்க்கும் தமிழ்க்களிப்பு ஊட்டும் மணிப்பதிப்பகமாக இலங்குகின்றது.

பேராசிரியர் திருமுறைச் சான்றோர் வெள்ளைவாரணனார் பழுத்த பேரானந்தப் பழமாக ஆழ்பெரும் புலமையோடு எழுதிய திருவருட்பாச் சிந்தனை என்ற நூலை மணிவாசகர் நூலகர் வெளியிட்டிருப்பது அதன் பதிப்பு வரலாற்றில் பெருமைதரும் தொண்டாகும். வள்ளற் பெருமான் வாழ்த்தும் கூடவே கிடைக்குமன்றோ.

# பொருளடக்கம்


1. கடவுள் ஒருவரே ........ 1
2. சமயங்களின் தோற்றமும் வளர்ச்சியும் ........ 14
3. ஆன்ம நேய ஒருமைப்பாடு ........ 40
4. உயிரிரக்கம் ........ 50
5. பசிப்பிணி மருத்துவர் ........ 68
6. கொலையும் புலையும் தவிர்த்த குரிசில் ........ 89
7. ஓதாதுணர்ந்த மாதவச் செல்வர் ........ 96
8. சன்மார்க்க நெறி வளர்த்த தவச் செல்வர் ........ 115
9. சமுதாயச் சீர்திருத்தச் சான்றோர் ........ 148
10. சிவனருள் பெற்ற சித்தர் ........ 163
11. மரணமிலாப் பெருவாழ்வு ........ 169
12. வள்ளலார் செந்தமிழ் ........ 213
13. செந்தமிழ்ப் புலமையினைத் தூண்டும் திருவருட்பா ........ 239
14. அகத்துறைப் பாடல்கள் ........ 246
15. சுதந்தரம் பெற வழி வகுத்த தோன்றல் ........ 263
16. திருமுறையும் திருவருட்பாவும் ........ 272

# திருவருட்பாச் சிந்தனை

# 1. கடவுள் ஒருவரே

இவ்வுலக நிகழ்ச்சியைக் கூர்ந்து நோக்குங்கால் காணப்படும் உலகம் ஓர் நிலையாகிய கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நின்று செயற்படுதல் இனிது புலனாகும். இத்தகைய நியதியோடு பொருந்திய உலகின் இயக்கத்திற்கு வினைமுதலாய் (கருத்தாவாய்) உடன் நின்று இயக்கி நிற்கும் பேரறிவும் பேராற்றலும் பேரருளும் வாய்ந்த முழுமுதற் பொருளொன்று உலகுயிர்கட்குச் சார் பாயிருத்தல் வேண்டும் என்பது அறிஞர் பலரும் ஒப்ப முடிந்த உண்மையாகும். இங்ஙனம் எல்லார்க்கும் புலனாகும் நிலையில் காணப்படும் உலக நிகழ்ச்சியாகிய காரியத்தை அடிப்படையாகக் கொண்டு இக் காரியத்துக்குரிய கர்த்தாவாய் உலகுயிர்களை உடன்நின்று இயக்கியருளும் முழுமுதற் பொருளாகிய கடவுள் ஒன்று இருத்தல் வேண்டும் என்பதனை உலகத்தாருக்கு உணர்த்தக் கருதிய திருவள்ளுவர் "அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி, பகவன் முதற்றே உலகு" (1) எனவரும் திருக்குறளால் எடுத்துரைத்தார். இத்திருக்குறள் காண்டற்கரிய கடவுளின் உண்மையினைக் கருதலளவையால் நிறுவுவதாகும். "எழுத்துக்களெல்லாம் தம்மை உடனிருந்து செலுத்தும் அகர ஒலியினைத் தமக்கு முதலாக உடையன. அதுபோல, உலகமும் தன்னை உடனிருந்து இயக்கி நிற்கும் ஆதிபகவனாகிய இறைவனைத் தனக்கு முதலாக உடையது" என்பது இப்பாடலின் பொருளாகும். இதன்கண் "உலகு" என்றது, உடம்பொடு காணப் பெறும் உயிர்தொகுதியினை. ஓர் வரையறையுடன் காணப்படும் இவ்வுலக இயக்கமாகிய காரியத் தினை அடிப்படையாகக் கொண்டு இதற்கு நிமித்தகாரணமாகிய முழுமுதற் பொருளொன்று உண்டு எனத் துணிய வேண்டி யிருத்தலால் "உலகு ஆதிபகவனை முதலாக உடையது" என உலகின் மேல் வைத்துக் கடவுள் உண்டு எனும் உண்மை யினைப் புலப்படுத்தினார் திருவள்ளுவர். ஆயினும், தனக்கு முதல்வனாக ஆதிபகவனைத் தேர்ந்து கொள்ளும்

உணர்வுரிமையும் உடைமைத்தன்மையும் உலகிற்கு இல்லை. ஆதலால் உலகிற்கு முதல்வன் ஆதிபகவன் என்பதே இத் திருக்குறளின் கருத்தாகக் கொள்ளுதல் வேண்டும் என விளக்கங் கூறுவர் பரிமேலழகர்.

ஆசிரியர் தொல்காப்பியனாரும் "எழுத்தெனப்படுவ அகரமுதல்" (தொல்,நூன்மரபு.1) எனவும் "மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" (தொல், மொழிமரபு 13) எனவும் வரும் நூற்பாக்களில் எழுத்துக்கள் எல்லாவற்றின் இயக்கத்திற்கும் காரணமாய் நிற்கும் அகரம் முதன்மையுடையதாதலைத் தெளிவாகத் குறித்துள்ளார். "அகரம் தனியே நிற்றலானும் பலமெய்க்கண் நின்று அவ்வம் மெய்கட் கிசைந்த ஓசைகளைப் பயந்தே நிற்றலானும் வேறு பட்டதாதலின் ஒன்றேயாயும், பலவேயாயும் நிற்பதோர் தன்மையுடைத்து என்று கோடும் (கொள்ளுதும்). இறைவன் ஒன்றேயாய் நிற்கும் தன்மையும், பல்லுயிர்க்கும் தானேயாய் நிற்கும் தன்மையும்போல" எனவும், "இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்பமுடிந்தாற்போல, அகரமும் உயிர்க்கண்ணும் ததனிமெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையேயாய் நிற்கும் என்பது சான்றோர்க் கெல்லாம் ஒப்ப முடிந்தது. அகரமுதல என்னும் குறளால் 'அகர மாகிய முதலையுடைய எழுத்துக் களெல்லாம்; அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து உலகம்' என வள்ளுவனார் உவமை கூறிய வாற்றாலும், கண்ணன் எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே எனக் கூறியவாற்றானும் பிற நூல்களாலும் உணர்க" எனவும் தொல்காப்பிய முதற் சூத்திர உரையில் நச்சினார்க்கினியர் அகரத்தைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் திருக்குறள் கடவுள் வாழ்த்திலுள்ள முதற்குறளின் விளக்கமாக அமைந்திருத்தல் காணலாம். "அகர முதல" என்னும் இத்திருக்குறளைத் திருமூலர் முதலிய திருமுறை ஆசிரியர்களும், மெய்கண்டார் முதலிய சைவசித்தாந்த நூலாசிரியர்களும் தாம் வழிபடும் சிவபரம் பொருளுக்குரிய உண்மையியல்பினை அறிவுறுத்தும் நிலையில் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார்கள். தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளியதிருக்குறளில் கடவுள், உயிர், உலகம் என்னும் முப்பொருளைப் பற்றிக் கூறப் பெற்றுள்ள தத்துவ உண்மை களை அடியொற்றிச் சைவ சித்தாந்த மெய்ந்நூற் பொருளை

விரித்துரைப்பது உமாபதி சிவம் இயற்றிய திருவருட் பயன் என்னும் சித்தாந்த நூலாகும். இந்நூல் திருக்குறளைப் போலவே பத்துக் குறளைத் தன்னகத்தே கொண்டது ஒரு அதிகாரமாகப் பதிமுது நிலைமுதல் அணைந்தோர்தன்மை ஈறாகப் பத்து அதிகாரங்களை யுடையது. திருவள்ளுவர் "அகர முதல்" எனத் தொடங்கியது போலவே உமாபதி சிவா சாரியாரும் "அகர உயிர்போல் அறிவாகி எங்கும், நிகரிலிறை நிற்கும் நிறைந்து" என இந்நூலைத் தொடங்கி யுள்ளார். அகர ஒலி நாதமாத்திரையாய் எத்தகைய திரிபுமின்றி இயற்கையில் தோன்றுவதாய் ஏனைய உயிர்ரெழுத்துக்கள் தோறும், மெய்யெழுத்துக்கள் தோறும் நிறைந்து முதன்மை உற்று நிற்க, ஏனைய எழுத்துக்கஎெல்லாம் அவ்வகரத்தின் இயக்கத்தால் வெவ்வேறு முயற்சியில் தோன்றித் திரிபுடையனவாய் நிலவுதல் போல, ஆதி பகவனாகிய இறைவன் இயற்கையுணர் வினனாய் முற்று முணர்ந்து யாண்டும் நீக்கமற நிறைந்து முழுமுதல்வனாய் விளங்கி நிற்ப, உலக உயிர்கள் யாவும் அம்முதல்வனது ஆணைக்குள் அடங்கித் தத்தம் வினைக் கீடாக உலகு, உடல், கருவி. நுகர்வு ஆகியவற்றைப் பெற்றுத் திரிபுடையனவாய் நிலவாநின்றன என்பதாம் எழுத்துக்கள் எல்லாவற்றிலும் நிறைந்து அவற்றிற்கெல்லாம் முதலாய் நிற்கும் பொது இயல்பு பற்றி அகரத்தை இறைவனுக்கு உவமையாகக் கூறினார். ஆயினும் அப்பரம்பொருள் அறிவே உருவாய் எவ்விடத்தும் நீக்கமற நிறைந்து எப்பொருட்கும் ஆதாரமாய் நிற்கும் முழு முதலாகவும், உலகப் பொருள் அனைத்தினையும் தனக்கு உடைமையாகக் கொண்ட தன்னேரில்லாத் தலைவனாகவும் திகழ்தலால் உண்மையாக ஆராய்ந்து பார்க்குங்கால், அம்முதல்வன் தன் உடைமைப் பொருள்களாகிய பசுபாசங்கள் ஒன்றினோடும் உவமிக்கப் படுபவன் அல்லன் என்பது திருவள்ளுவர் கருத்தாகும். இவ்வுண்மையை அறிவுறுத்துவார், "அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து" என்றார் உமாபதி சிவனார். 'அகர உயிர் போல்' என்பது 'அகர முதல்' என்னும் முதற்குறளையும் 'அறிவாகி' என்பது இரண்டாங்குறளில் உள்ள வாலறிவன், என்ற தொடரையும் 'நிகரில் இறை, என்பது தனக்கு, உவமை இல்லாதான் (7) என்னும் தொடரையும் 'எங்கும் நிறைந்து நிற்கும்' (5) என்பது, 'இறைவன்' (10) என்னும் பெயர்க்காரணத்தையும் விளக்கும் முறையில் அமைந்துள்ளமை காணலாம்.

எழுத்துக்கள் உயிர், மெய் என இருபகுதியனவாய் அகரத்தைத் தமக்கு முதலாகக் கொண்டு இருத்தல் போன்று. உலகமும் உணர்வுடைய உயிர்கள், உணர்வில்லாத பொருள்கள் என இருபகுதியை உடையதாய் ஆதிபகவனைத் தனக்கு முதலாக உடையது என்று அறிவுறுத்துவது திருக்குறளின் முதற்குறளாகும். உயிரெழுத்து ஆன்மாவுக்கும், மெய்யெழுத்து தத்துவப் பிரபஞ்சத் திற்கும், அகரம் ஆகிபகவனாகிய இறைவனுக்கும் உவமை.

திருக்குறளில் முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்தில் ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான் வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், பொறி வாயில் ஐந்தவித்தான், தனக்கு உவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தான் என்பது கடவுளுக்குரிய திருப்பெயர்களாகக் குறிக்கப் பெற்றுள்ளன. இவையனைத்தும் இறைவனை ஒருவனாகவே வைத்துக் கூறுதலாலும், மெய்யுணர்தல் என்னும் அதிகாரத்தில் முழுமுதற் கடவுளாகிய செம்பொருளை "ஓர்த்துள்ளம் உள்ள உணரின்" என்ற தொடரில் "உள்ளது" என ஒருமை வாசகத்தால் குறிப்பிடுதலாலும், இறைவன் ஒருவனே என்பது தெய்வப்புலவர் கருத்தாதல் நன்கு தெளியப்படும்.

ஒருவாற்றானும் தனக்கு ஒப்பில்லாதவனாய் யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையானாக உயர்ந்து விளங்கும் இறைவன் ஒருவனே என்னும் இவ்வுண்மையினை வற்புறுத்தும் நிலையில் அமைந்தது "தனக்கு உவமை இல்லாதான்" என்னும் திருக்குறள் தொடராகும். இத் தொடர்ப் பொருளை விரித்து உரைப்பது,

> "பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்
> அருமைக்கும் ஒப்பின்மை யான்" (3)

எனவரும் திருவருட் பயனாகும்.

மிகப் பெரிய அண்டங்கள் யாவும் தன் விரிவினுள் (வியாபகத்துள்) அடங்க, தான் அவையெல்லாவற்றையுங் கடந்து மேலாக விரிந்து நிற்கும் பெருமையாலும், உயிர்தோறும் உயிர்க் குயிராய் உள்நின்று அருள்சுரக்கும் பெருங் கருணைத் திறத்தினாலும், உயிர்களின் முயற்சியால் சென்று அடைய முடியாத "திரு" வாகிய வீடு பேற்று இன்பத்தினை உயிர்களின் அறிவெல்லைக்கு அப்பாற் பட்டு நின்று வழங்கியருளும் அருமைத் திறத்தினாலும் தன்னை யொப்பார் ஒருவருமில்லாத தனிமுதல்வன் இறைவன் ஒருவனே

என்பது இதன் பொருளாகும். "தன்னை ஒப்பார் எவரும் இல்லாதவன்" எனவே தன்னின் மிக்கார் ஒருவரும்இல்லான் என்பதும் தானே விளங்கும். ஒரு பொருளுக்கு எடுத்துக் காட்டும் உவமையினை ஒத்தது, உயர்ந்தது என இருவகையாக வகுத்துரைத்தல் மரபு. ஒத்ததனை ஒப்பு எனவும், உயர்ந்ததனை உவமன் எனவும் வழங்குவர் சான்றோர். அம்முறையில் இறைவனுக்கு ஒப்பாக ஒன்றைக் கூறுங்கால் அவனுக்கு ஒப்பாருமில்லை; உயர்ந்தாருமில்லை என்பதனைத் திருமுறை ஆசிரியர் இனிது விளக்கியுள்ளார்கள்.

'ஒப்புடையனல்லன் ஓர் உவமனில்லி' **(6-97-10)** எனவரும் அப்பர் அருள்மொழி இங்கு ஒப்பு நோக்குதற்குரியதாகும். இவ்வாறு உலக உயிர்த்தொகுதிகளில் ஒன்றையும் உவமை கூற உண்ணாதபடி உயர்வற உயர்ந்து விளங்குதல் முழுமுதற்பொருளின் இயல்பாதலின், அம் முதற்பொருளை "ஒன்றலாஒன்று" எனக் குறித்தார் மெய்கண்ட தேவர். ஒன்றலா ஒன்று என்றது, உலகாகிய சடப்பொருள், உயிர்களாகிய சேதனப் பொருள் என்னும் இவ்விரு வகையுள் ஒன்றினும் அடங்காது இவற்றிற்கெல்லாம் மேலாய் நின்று இவற்றை இயக்கி நிற்கும் முழுமுதற்பொருள் என்றவாறு.

மாயையின் காரியமாகிய உலகம், அறிவில்லாத பொருளா தலாலும், உலகில் வாழும் மன்னுயிர்கள் ஆணவ இருளால் மறைக்கப்பெற்றுச் சிற்றறிவினை உடையன ஆதலாலும் இவ்விரு வகைப் பொருளையும் ஒருங்கு இயக்குதற்கு இவற்றின் வேறாகிய முதற்கடவுள் ஒன்று உண்டு என்பது பெறப்படும்.

பெறப்படவே, காணப்படும் உலகம் வியக்கத்தக்க இயக்கம் உடையதாய்த் தொழிற்படுதலின் இவ்வுலகினை இயக்கும் முதற் கடவுள் அளவிலா ஆற்றலும், முற்றுணர்வும் பேரருளும் முதலியன வாக எண்ணப்படும் குணங்களுடையன் என்பதும் பெறப்பட்டது. எனவே அத் தன்மையனாகிய முதற்கடவுள் ஒருவனே அமையும்; வேறு அத்தன்மைய பொருள் ஒன்று உண்டு எனக் கொள்வதற்குச் சிறிதும் இடம் இல்லை. அன்றியும் ஒரு பொருளுக்குக் கூறப்படும் இலக்கணத்திற் சிறிதும் வேறுபாடு இல்லாத நிலையில் அப்பொருள் ஒன்றாக இருத்தல் கூடுமேயன்றிப் பலவாக இருத்தல் இயலாது என்னும் கருத்தினாலேயே "ஒன்றலா ஒன்று" என்றார். "ஒன்று அல்லா ஒன்று என்றது, உருவும், அருவுமாகிய இருகூற்றுப் பிரபஞ்சத்துள் ஒன்றுமல்லாத முழுமுதற் பொருள் என்றவாறு.

''ஒன்று என்பது இலக்கணத்தால் வேறுபாடு இல்லது என்னும் பொருட்டு'' எனச் சிவஞான முனிவர் இத் தொடர்ப் பொருளை விளக்கி முதற்கடவுள் ஒருவரே எனத் தெளிவித்துள்ளமை இங்கு நினைவுகூரத் தகுவதாகும்.

கடவுள் ஒருவரே என்னும் இவ்வுண்மை ''ஒன்றவன் தானே'' (திருமந்திரம்) எனவும், ''ஒன்றேகுலம் ஒருவனே தேவனும்'' (திருமந்திரம். 2104) எனவும் திருமூலநாயனார் வற்புறுத்தியுள்ளார். இவ்வாறே தேவார ஆசிரியர்களும் ''ஒருவனார்'' (7-76-1) ''ஒருவர் தாம் பலபேருளர் காண்மினே'' என்றாங்கு இறைவன் ஒருவனே எனத் தெளிந்து போற்றியுள்ளார்கள். அறிவினாற் சிவனேயாகிய மணிவாசகப்பெருந்தகையாரும் ''ஒருவன் என்னும் ஒருவன் காண்க'' (திருவண்டப் - வரி. 43). எனவும் ''சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம் ஒருவனே'' (கோயில் திருப்பதிகம்) எனவும் ''ஒருத்தனே'' (அருட்பத்து 2) எனவும் போற்றி யுள்ளமையால் ஒரு தெய்வக் கொள்கையே திருமுறை ஆசிரியர்களின் துணிபாகும் என்பது நன்கு தெளிப்படும், ''ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு'' எனத் தொடங்கும் பட்டினத்தடிகள் பாடலும் ''அங்கிங்கெனாதபடி'' எனத் தொடங்கும் தாயுமானவர் திருப்பாடலும் தெய்வம் ஒன்றே என்னும் இத்துணிபினை நன்கு வற்புறுத்துதல் காணலாம்.

திருமூலர் முதலிய திருமுறை ஆசிரியர்கள் கடவுள் ஒருவரே எனத் தெளிந்து உணர்த்தியது போலவே அவ் அருள் ஆசிரியர்களின் வாய்மொழிகளை உளங்கொண்ட அருட்பிரகாச வள்ளலாரும் தாம்பாடிய திருச்சிற்றம்பலத் தெய்வமணிமாலையில் ''திருச்சிற்றம் பலந்தனிலே தெய்வம் ஒன்றே கண்டீர்'' எனத் தெளிவுபட அறிவுறுத்தியுள்ளமை இங்கு மனங்கொள்ளத் தகுவதாகும்.

இறைவனை வழிபட்டு நற்பேறு அடைதற்குரிய ஆன்மாக் களை அடிசேர்ந்தார், புகழ்புரிந்தார், ஒழுக்கநெறி நின்றார் என்றாங்குப் பன்மை வாசகத்தால் திருவள்ளுவர் கூறுதலால் உயிர்கள்பல என்பதும் ''துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று'' என்னும் திருக்குறளால் அவ்வுயிர்கள் எண்ணில் அடங்காதவன என்பதும் ஆசிரியர் திருவள்ளுவர் கருத்தாதல் நன்கு புலனாகும்.

இறைவனைக் குறித்த தொடர்களாகத் திருவள்ளுவர் கூறியவற்றுள் முதற் குறளில் அமைந்தது ஆதிபகவன் என்பதாகும்.

இதனை இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகக் கொண்டு ஆதியாகிய பகவன் என விரித்து முதற் கடவுள் எனப்பொருள் கொள்வர் பரிமேலழகர். இத் தொடரை ஆதியோடு கூடிய பகவன் என விரித்துப் பொருள்கொள்வர் ஆளுடைய பிள்ளையார். இத்தொடரில் ஆதி என்பது எப்பொருளையும் தோற்றுவிக்கும் அன்னையாகிய சத்தியை. உலகத் தோற்றத்திற்குக் காரணமானவள் என்ற பொருளில் ஆதி என்னும் சொல் சத்தியாகிய அன்னையைக் குறிக்கும் காரணப் பெயர் ஆயிற்று. ஆதியாகிய சத்தியோடு பிரிவின்றித் திகழ்வேன் இறைவன் என்பது இத்தொடரின் பொருள் ஆகும். ஆதி என்னும் பெயர்கள் சங்க காலத்தில் மக்களுக்கு இட்டு வழங்கும் பெயர்களாக ஆளப் பெற்றுள்ளமையால், திருவள்ளுவர் குறித்த ஆதி என்னும் இச்சொல் உலகுயிர்களைப் படைத்துக் காக்கும் இறைவனது பேராற்றலாகிய அருட்சத்தியைக் குறித்த தமிழ்ப் பெயரெனவே கொள்ளத் தகுவதாகும். ஆதியாகிய சத்தியை ஒரு பாகத்தில் கொண்டவன் இறைவன் என்பது புலப்பட 'ஆதி பகவன்' என்றார் திருவள்ளுவர்.

சத்தியுள் ஆதியோர் தையல் பங்கன் **(1-115-4)** என வரும் திருஞானசம்பந்தர் தேவாரத் தொடர். ஆதி பகவன் என்னும் இத் திருக்குறள் தொடரின் விளக்கமாக அமைந்துள்ளமை அறியத் தகுவதாகும்.

எல்லாம் வல்ல இறைவனை அம்மையுடன் அமர்ந்த அப்பனாக (மாதொருபாகனாகக்) கருதிப் போற்றும் வழிபாட்டு முறை தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு நிலை பெற்று வருவதாகும். இத்தகைய மாதொரு பாகர் வழிபாடு-

"நீலமேனி வாலிழைபாகத்து
ஒருவன்"- (ஐங்குறு நூறு-கடவுள் வாழ்த்து)

எனவும்,

"பெண்ணுரு வொருதிறனாகின்று அவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினும் கரக்கும்" (புறநானூறு - கடவுள் வாழ்த்து)

எனவும்,

"ஊர்ந்தது ஏறே, சேர்ந்தோள் உமையே" (அகநானூறு - கடவுள் வாழ்த்து)

எனவும் வரும் சங்கச் செய்யுட்களில் இடம் பெற்றுள்ளமை காணலாம். முழுமுதற் பொருள் அம்மையப்பராகத் திகழும் தொன்மைக் கோலத்தினை

தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையுமுடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பி

எனவரும் திருவாசகத் திருப்பாடலால் மணிவாசகப் பெருமான் சொல்லோவியம் செய்து காட்டிய திறம் நினைந்து போற்றுதற் குரியதாகும்.

இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கிய முற்றுணர்வினனாகிய இறைவன், உலகப்பொருள்கள் எவற்றிலுந் தோய்வின்றித் தானே திகழொளியாய்த் தனித்து நிற்கும் நிலையில் சிவம் (அப்பன்) எனவும், உலகெலாமாகி வேறாகி உடனுமாய் இவ்வாறு உலகு உயிர்களொடு கலந்து நிற்கும் நிலையில் சத்தி (அம்மை) எனவும், கூறப்படுவான். ஒருமையில் இருமையனாய் (தாதான்மிய சம்பந்தத்தால் இருதிறப்பட்டு) உலகினை இயக்கி நிற்றல் பற்றி அம் முதல்வனை ஆதிபகவன் (அம்மையப்பன்) என்று வள்ளுவனார் குறித்துள்ளார் எனக் கொள்ளுதல் பெரிதும் ஏற்புடையதாகும். சத்தியும் சிவமும் குணமும் குணியுமாக (பண்பும் பண்புடைய பொருளுமாக) ஒன்றியியைந்துள்ள தொடர்பினைப் புலப் படுத்துவதே "ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்" என்னும் திருமந்திரமாகும். இத்திருமந்திரப் பொருளை மேலும் விரித்து விளக்கும் நிலையில் அமைந்தது,

"பிணைபெணொ டொருமையின் இருமையு முடையணல்"* (1-121-3)

எனவரும் ஆளுடைய பிள்ளையார் அருளிச் செயலாகும். 'பிணைபெண்ணோடு ஒருமையின் இருமையுமுடை அண்ணல்' எனப்பிரித்துப் பொருள் கொள்க. தன்னோடு பிணைந்துள்ள அருட்சத்தியாகிய உமாதேவியுடன் பிரிவின்றி இயைந்த ஒருமைத் தன்மையின்கண் சத்தியும் சிவமுமென இரண்டாகப் பகுத்துரைக்கும் இருமைத் தன்மையினை உடைய இறைவன்* என்பது இத்தொடரின் பொருளாகும். சிவம் முழுமுதற்பொருள். அருளாகிய சத்தி சிவத்தின் குணமாகும். குணத்திற்கும் குணமுடைய பொருளுக்கும் உள்ள இயைபு தாதான்மிய சம்பந்தமெனப்படும். தாதான்மியம் என்பதற்கு அதுதான் ஆதல் எனப்பொருள் கொண்டார் சிவஞானமுனிவர். தாதான்மிய சம்பந்தமாவது, பொருளால் ஒன்றேயாயினும் ஒருவாற்றால் இரண்டாகப் பகுத்துக் கூறுதற்குரிய தன்மையாகிய

தொடர்பு. இத்தொடர்பினை "ஒருமையின் இருமை" என அழகிய தமிழில் ஆளுடைய பிள்ளையார் புலப்படுத்தியுள்ளமை உன்னுந் தோறும் உவகை தருவதாகும். அவையே தானேயாய் உலகுயிர்கள் தோறும் நீக்கமின்றி விரிந்து நிற்கும் முதல்வன், தன் ஆணையாகிய சத்தியுடன் பேதமும் அபேதமுமின்றி அவ்விரண்டிற்கும் பொதுவாய் நீக்கமின்றி நிற்கும் தொடர்பினை "ஆணையின் நீக்கமின்றி நிற்குமன்றே" என மெய்கண்டதேவர் (சிவஞான போதச் சூத்திரம்-2) விளக்கியுள்ளார். இங்ஙனம் நீக்கமின்றி நிற்றலாகிய இத்திறம் ஆளுடைய பிள்ளையாரால் ஒருமையின் இருமை யெனக் குறிப்பிடப் பட்டதாகும்.

இங்ஙனம் இறைவன் அம்மையப்பனாய்ப் பிரிவற நின்றே உலகினைப் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருள் புரிகின்றான் என்பது,

"தன்னிற் பிரிவிலா எங்கோமான்" (திருவெம்பாவை 16)

எனவும்,

"எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்"
(சிவஞானசித்தியார் சுப- 165)

எனவும் வரும் ஆன்றோர் உரைகளால் இனிதுணரப்படும்.

இறைவன் தனது அருளாகிய சிற்சத்தியுடன் வேறாதலும் (பேதமாதலும்) ஒன்றாதலும் (அபேதமாதலும்) இன்றி அவ் விரண்டிற்கும் பொதுவாய்த் தாதான்மிய சம்பந்தத்தால் நீக்கமின்றி எங்கும் விரிந்து நிற்பன் என்பதனை 'எந்த எந்தப் பொருள் யாண்டும் விரிந்து நிற்கின்றதோ அந்த அந்தப் பொருள் ஒன்றாதலும் இரண்டாதலும் இன்றி அவ்விரண்டிற்கும் பொதுமையில் நிற்கும்; தன் எல்லையளவும் விரிந்து பரவிநிற்கும் ஞாயிறு தன்னொளிக் கதிரொடு நீக்கமின்றி நிற்றல் போலும்' என்னும் ஏதுவால் வலியுறுத்துவர் சிவஞான முனிவர். இங்ஙனம் இறைவன் தானும் சத்தியும் என இருதிறப்பட்டுத் தனது ஆணையாகிய சிற்சத்தியுடன் நீக்கமின்றி நிற்றலை வலியுறுத்தும் நிலையில் அமைந்தது "ஆதிபகவன்" என்னும் இத்திருப்பெயர் என்பதும் இது மாதொரு கூறராகிய அம்மையப்பரைக் குறித்த பெயரென்பதும் இங்கு மனங்கொளத்தக்கன.

அம்மையப்ப ரேயுலகுக் கம்மையப்பர் என்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர் - அம்மையப்பர்

எல்லா வுலகுக்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார் போல் நிற்பர் அவர் (திருக்களிற்றுப் படியார் -1)

எனவரும் பாடல் "ஆதிபகவன்" என்னும் திருக்குறள் தொடரோடு ஒப்பவைத்துச் சிந்தித்து உணர்தற்குரியதாகும்.

அம்மையப்பராகிய இறைவர் தன்னிற் பிரிவிலா அருளாகிய சத்தியால் உலகுயிர்களோடு இரண்டறக் கலந்து ஐந்தொழில் நிகழ்த்தி யருளுதலாகிய பொதுவியல்பும் இவ்வாறு உலகுயிர் களோடு பிரிவறக் கலந்து நிற்பினும் அவற்றின் தன்மை தனக் கெய்தலின்றி அவை யெல்லாவற்றையுங் கடந்து சிந்தனைக்கரிய சிவமாகித் தனித்து மேற்பட்டு விளங்கும் தன்னுண்மையாகிய சிறப்பியல்பும் ஒருங்குணர்த்துவது மேற்குறித்த திருக்களிற்றுப் படியார் பாடலாகும். இது திருக்குறளின் முதற் குறளில்மைந்த 'ஆதிபகவன் முதற்றேயுலகு' என்னும் தொடரால் உணர்த்தப்படும் இறைவனது பொதுவும் சிறப்புமாகிய இருவகை இலக்கணங் களையும் நன்கு புலப்படுத்தும் நிலையில் அமைந்துள்ளமை காணலாம்.

தொன்று தொட்டுத் தமிழ் முன்னோர்களால் வழிபடப் பெற்றுவரும் மாதொரு பாகனாகிய இறைவனது தொன்மைக் கோலத்தினை உளங்கொண்ட திருவருட் பிரகாச வள்ளலார்,

திருவிளங்கச் சிவயோக சித்தியெலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவானுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம் பலத்தே
திருக்கூத்து விளங்க ஒளி சிறந்த திருவிளக்கே;
உருவிளங்க உயிர்விளங்க உணர்ச்சியது விளங்க
உலக மெலாம் விளங்க அருள் உதவு பெருந்தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க
வயங்குமணிப் பொது விளங்க வளர்ந்த சிவக்கொழுந்தே.
(திருவருட்பா - 3268)

எனவரும் திருப்பாடலில் தில்லையம்பலப் பெருமானை அம்மையப்பராகப் பரவிப் போற்றியுள்ளார்.

மாற்றம் மனங்கடந்து நின்ற இறைவன் தனது பேரின்ப நிலையாகிய ஆனந்த வீட்டின் எல்லையை நிலை பெற்ற ஆன்மாக்கள் வந்து பொருந்தும்படி உதவி செய்யும் அருளாகிய

*பராசத்தியுடனே பேதமின்றி ஒன்றி நிற்பான் என்னும் இவ் வுண்மையினை,*

> "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
> பின்னமிலான் எங்கள் பிரான்" (திருவருட்பயன் -2)

*எனவரும் திருவருட்பயனில் உமாபதி சிவாசாரியார் விளக்கி யுள்ளார். இங்ஙனம் மன்னுயிர்கள் பிறவிப் பிணிப்பினின்றும் நீங்கி இறைவனது பேரின்ப வாழ்வைத் தலைப்படுதற்குத் துணைநின்று உதவிபுரிவது இறைவனது திருவருட்சத்தியே என்பதும், அவ்வருட் சத்தி முழுமுதற் பொருளினின்றும் பிரித்துணரவொண்ணாதது என்பதும், அருளாகிய தாயின் உதவிபெற்றே தந்தையாகிய சிவபரம் பொருளை அடைந்து இன்புறுதல் இயலும் என்பதும் ஆகிய வுண்மைகளை மேற்காட்டிய திருவருட்பாவில்*

> உருவிளங்க உயிர் விளங்க உணர்ச்சியது விளங்க
> உலகமெலாம் விளங்க அருளுதவு பெருந்தாயாம்
> மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொரு பால்விளங்க
> வயங்கு மணிப்பொது விளங்க வளர்ந்த சிவக் கொழுந்தே.

*எனவரும் தொடர்களில் இராமலிங்க வள்ளலார் இனிது விளக்கியுள்ளமை காணலாம்,*

> "எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்
> இயல் உண்மை அறிவின்ப வடிவாகி நடிக்கும்
> மெய்ப்பொருளாம் சிவம் ஒன்றே என்றிந்தேன்
> உனக்கும் விளம்புகின்றேன்." (திருவருட்பா-5803)

*எனச் சிவம் ஒன்றே என்று வற்புறுத்திய அடிகளார், "அருளுதவு பெருந்தாயாம் மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க வயங்குமணிப் பொது விளங்க வளர்ந்த சிவக் கொழுந்தே" என அம்மைப்பர் என இருமையில் வைத்துப் போற்றியது எவ்வாறு பொருந்தும் எனச் சிலர் வினவுதல் கூடும். இவ்வினாவுக்கே விடையாக அமைந்தது 'ஒன்றுமலார் இரண்டுமலார் ஒன்றிரண்டு மானார்' (திருவருட்பா **3283**)*

*எனவரும் திருவருட்பாத் தொடராகும்.*

"ஞாயிறு" என்னும் ஒருபொருளே உலகப் பொருளில் தோய்ந்து விளக்கு மிடத்துக் கதிர் என்னும் பெயரும், தன்னை

விளக்குமிடத்துக் ‘கதிரோன்’ என்னும் பெயரும் பெற்று இரு திறப்பட்டு இயைந்து நிற்குமாறு போல, பேரறிவாகிய முழுமுதற் பொருள் ஒன்றே உலகுயிர்களாகிய புறப்பொருளை நோக்கி நிற்கும் தன்னிலையில் சிவம் என்னும் பெயரும் பெற்று ஒருமைத் தன்மையின்கண் இருதிறப்பட்டு இயைந்து குணமும் குணியுமாய் (பண்பும் பண்புடைப் பொருளுமாய்)த் திகழ்தலால் அம்மையும் அப்பனுமாகிய அப்பெருமானை

> “ஒன்றுமலார், இரண்டுமலார், ஒன்றிரண்டு மானார்”

என அருட்பிரகாச வள்ளலார் குறிப்பிட்டமை பொருத்த முடையதே யாகும், இவ்வாறு அருட்சத்திக்கும் சிவபரம் பொருளுக்கும் அமைந்த தொடர்பு பற்றிய இவ்விளக்கம் ‘பிணை பெண்ணொடு ஒருமையின் இருமையுமுடை அண்ணல்’ எனவரும் ஆளுடைய பிள்ளையார் அருள் மொழியை அடியொற்றி அமைந்ததாகும். இவ்வாறு ஒன்றுமலார் இரண்டுமலார் ஒன்றிரண்டு மானார் என்ற இறைவனை ஆண் என்று குறிப்பதா, பெண் என்று குறிப்பதா என ஒரு வினா எழுதல் கூடும். இவ்வினாவுக்கு விடையாக அமைந்ததே “ஒன்றிரண்டுமானார்,” என்ற அடிகளார் திருவாக்காகும். “ஆணும் பெண்ணுமாய் அடியார்க்கு அருள்நல்கி” எனவரும் ஆளுடைய பிள்ளையார் அருள்மொழி இங்கு நினைக்கத் தகுவதாகும்.

> அருவருக்கு முலகவாழ் வடங்க நீத்தோர்க்
> கானந்தப் பெருவாழ்வா மாடல் காட்ட
> மருவருக்கன் மதிவளிவான் யமானன் தீநீர்
> மண்ணெனுமெண் வகையுறுப்பின் வடிவு கொண்ட
> ஒருவனுக்கும் ஒருத்திக்கு முருவென் றாலவ்
> வுருவையிஃ தொருத்தன் என்கோ ஒருத்தி என்கோ
> இருவருக்கு முரித்தாக ‘ஒருவர்’ என்றோர்
> இயற்சொல் லிலதெனனின் யான்மற் றென்சொல்கேனே. (54)

எனவரும் சிதம்பரச் செய்யுட்கோவையில் குமரகுருபர அடிகள் அம்மையப்பனாகிய இறைவனை ஒருவன் என்றோ ஒருத்தி என்றோ பிரித்து வழங்கத் தேவையில்லை என்றும், ஆணும் பெண்ணுமாகிய இருவருக்கு முரியதாக அமைந்த ‘ஒருவர்’ என்னும் இயற்றமிழ்ச் சொல்லாலேயே அம்மையப்பராகிய இறைவரைப் போற்றுதல் பெரிதும் பொருத்தமுடைய தென்றும் சுவைபடக் குறித்துள்ளமை காணலாம்.

*ஒருவர் என்னும் சொல் "ஒரு" என்னும் பகுதியால் ஒருமை யினையும் "அர்" என்னும் விகுதியால் ஆண் பெண் இருவருக்கு முரிய உயர்திணைப் பன்மையினையும் உணர்த்தும் இயல்பினைப் பெற்றுள்ளமையால், அச்சொல் ஒருவன் ஒருத்தி என்னும் இருபாற்கு முரிய பொதுமையினைப் பெற்ற இயற்றமிழ்ச் சொல்லாகும் என்பது,*

ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி
இருபாற்கும் உரித்தே தெரியுங் காலை. (தொல்-பெயர். 37)

*எனவரும் தொல்காப்பியச் சூத்திரத்தால் இனிது விளங்கும். ஒருவர் என்னும் இவ்வியற் சொல் பொருளுணர்த்தும் திறத்தைத் தெளிய உணர்ந்த வள்ளலார்,*

ஒன்றுமலார் இரண்டுமலார் ஒன்றிரண்டும் ஆனார்
உருவும் அலார் அருவும் அலார் உருஅருவும் ஆனார்
அன்றும் உளார் இன்றும் உளார் என்றுமுளார் தமக்கோர்
ஆதியிலார் அந்தமிலார் அரும்பெருஞ் ஜோதியினார்
என்று கனல் மதியகத்தும் புறத்தும் விளங்கிடுவார்
யாவுமிலார் யாவுமுளார் யாவும் அலார் யாவும்
ஒன்றுறுதாம் ஆகிநின்றார் திருச்சிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக் கடவுள் ஒருவர் உண்டே கண்டீர்
(திருவருட்பா. 3282)

*எனவரும் இத்திருப்பாட்டில் அம்மையப்பராகிய இறைவரைக் 'கடவுள் ஒருவர்' என ஒருவர் என்னும் இயற்றமிழ்ச் சொல்லால் குறித்துப் போற்றியுள்ளமை இங்கு உளங் கொளத் தகுவதாகும்.*

*இதுகாறும் எடுத்துக் காட்டிய அருளாளர்கள் வாய்மொழி களாலும், அவை பற்றிய விளக்கங்களாலும் உலகுயிர்களை இயக்கியருளும் அம்மையப்பராகிய முழு முதற் கடவுள் ஒருவரே என்பதும் "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" எனத் திருமூலநாயனார் வற்புறுத்திய ஒரு தெய்வக் கொள்கையினையே போற்றுதற்குரிய தவப்பெருஞ் செல்வராகிய அருட்பிரகாச வள்ளலாரும் தாம் பாடிய திருவருட்பாவில் வலியுறுத்தியுள்ளார் என்பதும் இனிது விளங்கும்.*

# 2. சமயங்களின் தோற்றமும் வளர்ச்சியும்

எல்லாம் வல்ல இறைவனை அம்மையப்பர் திருவுருவில் அமைத்து வழிபடும் வழிபாடு தொன்மை வாய்ந்ததாகும் திருச்செங்கோடு என்னும் மலைமேல் வழிபடப்பெறும் அர்த்த நாரீசுவரர் திருவுருவம் உமையொருபாகர் வழிபாட்டின் தொன்மை யினைப் புலப்படுத்துவதாகும்.

தோலும் துகிலும் குழையும் சுருள் தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ் சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையு முடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ!

(திருவாசகம்-18 திருக்கோத்தும்பி)

என மாணிக்கவாசகர் அருளிய திருப்பாடல் உமையொருபாகர் திருக்கோலத்தின் எழில் நலத்தினையும் அதன் தொன்மையினையும் விரித்துப் போற்றுதல் காணலாம்.

தமிழகத்தில் மாயோன் சேயோன் கொற்றவை முதலாகப் பல்வேறு திருவுருவங்களில் வைத்து வழிபடப் பெறும் எல்லாத் தெய்வங்களும் முழுமுதற் கடவுளாகிய பரம்பொருள் தன்னை வழிபடும் அன்பர்களின் உள்ளத்திற்கேற்ப மேற்கொண்ட அருள் வெளித் தோற்றமே என்னும் மெய்ம்மையினைத் தெரிந்துணர்ந் தவர்கள் சங்க காலத் தமிழ் மக்கள். பல்வேறு வடிவங்களிற் பலவிடங்களிலும் மக்களால் மேற்கொள்ளப்படும் எல்லா வழிபாடுகளும் முழுமுதற் கடவுளாகிய ஒரு பொருளையே சார்ந்து பயன் விளைவிக்கும் என்பது பண்டைத் தமிழ் மக்களது தெளிவான தெய்வக் கொள்கையாகும். இவ்வுண்மையை,

வேறுபல் லுருவிற் கடவுட் பேணியும் (பத்து - குறிஞ்சி)

எனவும்,

ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்
கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்
அவ்வவை மேய வேறு வேறு பெயரின்
எவ்வயி னோயும் நீயே (பரிபாடல்-திருமால்)

எனவும் வரும் சங்க இலக்கியங்களால் நன்குணரலாம்.

இறைவனைத் தாயுந் தந்தையுமாகக் கருதி வழிபடும் நிலையில் தந்தையினும் தாயினை முந்தி வழிபடுதல் வேண்டும் என்னும் ஆர்வமுடையோர் மிகுதியாக, அவர்களால் அம்மைக் குரிய தனிக் கோயில்கள் சிவபெருமான் திருக்கோயிலின் அகத்தும் புறத்தும் அமைக்கப் பெற்றன. காடுறையுலகமாகிய முல்லை நிலத்தின் தெய்வமாக நீலமேனி நெடியோன் வழிபடப் பெற்றது போலவே, காடு கிழாளாகிய கொற்றவையும் நீலநிறம் வாய்ந்த திருமேனியுடையவளாகவும், ஆழியும் சங்கும் ஏந்திய கையினளா கவும் திருவுருவமைக்கப் பெற்று மாயோன்தங்கையாக வழிபடப் பெற்றாள். போரில் வெற்றி நல்கும் கொற்றவையாகிய அன்னை அமைதியளிக்கும் நிலையில் சிவனது இடப்பாகத்தில் அமர்ந் தருளிய உமையம்மையாகவும் இயைத்துப் போற்றப் பெற்றாள். தெய்வ வழிபாட்டில் இத்தகைய உறவுமுறைச் சங்க காலத்திற்கு முன்னிருந்தே வழங்கியிருத்தல் வேண்டும் எனக் கருத வேண்டி யுள்ளது. சிவபெருமான் தனது சத்தியாகிய உமையம்மையினை ஒருருவிற் கொண்டு அர்த்தநாரிசு வரத் திருமேனியினராக (மாதொரு பாகராக) அருள் புரிதல் போலவே, உமையின் தமையன் எனப் போற்றப் பெறுந் திருமாலைத் தனது ஒருபாகத் தடக்கிய நிலையில் சங்கர நாராயணர் (மாலொருபாகர்) ஆக அன்பர்க்கு அருள்புரி கின்றான் என்பதும் சங்காலந்தொட்டு நிலை பெற்று வரும் தெய்வ வழிபாட்டு மரபாகும்.

சிவனும் திருமாலும் ஒருருவினராக (சங்கர நாராயணராகப்) போற்றப்பெறும் இவ்வழிபாடு, சைவத் திருமுறைகளிலும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலும் இடம் பெற்றுள்ளது.

வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உருவுட னியைந்த தோற்றம் போல
அந்தி வானமொடு கடலணி கொளாஅ
வந்த மாலை. (அகம் - 360)

எனவரும் அகப்பாடலில் அந்திவானமும் கருங்கடலும் இயைந்த தோற்றத்திற்கு மாலொருபாகர் (சங்கர நாராயணர்) திருமேனியை மதுரைக் கண்ணத்தனார் உவமை கூறியுள்ளார். எனவே மாலொரு பாகர் (சங்கர நாராயணர்) திருமேனி கடைச்சங்க காலந்தொட்டுத் தமிழகத்தில் வழிபடப் பெற்று வருகின்றதெனத் தெரிகிறது. சிவனும் திருமாலும் முழுமுதற் பொருளால் ஒன்றே என வலியுறுத்தும் முறையில் அமைந்த சங்க நாராயணர் திருவுரும் அப்பனாகிய, சிவமும் அம்மையாகிய சத்தியும் ஞாயிறும் அதன் கதிரும் போலப் பொருளால் ஒன்றேயென வற்புறுத்தும் உமையொரு பாகர் (அர்த்தநாரீசுரர்) திருவுருவ அமைப்பினை அடியொற்றியதாகும். மாயோன்தங்கை மாயோர் எனவும், நாராயணன் தங்கை நாராயணி யெனவும், காத்தற் கடவுளாகிய திருமாலின் அமிசமாகக் கொண்டு போற்றப் பெறும் கொற்றவை, சிவனுக்குரிய கொன்றையும், திருமாலுக்குரிய துளவமும் சேரத் தொடுத்த மலர்மாலையைச் சூடியவளாகவும், திருமால் போன்று ஆழியும் வளையும் ஏந்திய கையினாளாகவும், சிவபெருமானைப் போன்று நஞ்சுண்ட கறுத்த கண்ட முடையவளாகவும் சிவபெருமான் நிலையிலும் திருமால் நிலையிலும் ஒருங்கு வைத்துச் சிலப்பதிகார வேட்டுவ வரியிற் போற்றப் பெற்றுள்ளமை காணலாம். சிவனும் உமையும் ஒருவராகத் திகழும் அர்த்த நாரீசுவரர் திருவுருவினைப் போன்றே சிவனுடன் திருமாலையொரு கூற்றினராகக் கொண்டு போற்றும் சங்கரநாராயணர் திருவுருவம் அன்பர்களால் ஒருருவாக வைத்துப் போற்றப் பெறுவதாயிற்று. சிவபரம் பொருள் ஒன்றே சத்தியும் சிவமும் என இருமைத் தன்மையில் வைத்து வணங்கப் பெறுதல் போன்று, முழுமுதற் பொருள் ஒன்றே சத்தியும் சிவமும் என இருமைத் தன்மையில் வைத்து வணங்கப் பெறுதல் போன்று, முழுமுதற் பொருள் ஒன்றே சிவனும் திருமாலும் என இருமை நிலையில் வைத்து வணங்கப் பெறுகின்றது என்னும் இவ்வுண்மை மாதொரு கூறர் (அர்த்தநாரீசுவரர்) மாலொரு கூறர் (சங்கரநாராயணர்) ஆதிய திருவுருவ அமைப்புக்களால் இனிது புலனாகும்.

கிழக்கே விடியற் காலையிலே இளஞ்செவ்வியுடைய செஞ்சுடர் விரிந்து திகழக் கடலிடையே தோன்றும் ஞாயிறு, தன்கீழுள்ள கடல்நீர் நீலமும் பசுமையும் கலந்த நிறத்தினதாய் துலங்காநிற்பக் காணப்படும் அழகிய காட்சி, அழகேயுருவாகிய முருகன் எழில்கிளர் தோகையினையுடைய நீலமயிலின்மேல்

அமர்ந்து தோன்றினாற் போலுந் தெய்வத் தோற்றத்தினைப் புலப்படுத்தி நிற்றலின், வைகறை விடியலில் மலர்தலை யுலகின் மாயிருள் நீங்கத் தோன்றும் புலர்புகழ் செஞ்ஞாயிறே மைவரை யுலகின் தெய்வமாகிய சேயோனாகவும், கதிரவனுக்குக் கீழே தோன்றும் நீல நிறக் கடலே சேயோனது ஊர்தியாகிய மயிலாகவும் கருதிக் காலைக் கதிரவனைச் சேயோனாக எண்ணிப் போற்றுதல் தமிழ் நாட்டார் மரபாயிற்று. சேயோனாகிய முருகப் பெருமான் வைகறைப் பொழுதிலே மாயிருள் நீங்கத் தோன்றும் இள ஞாயிற்றின் தோற்றமுடையவனாகத் திருமுருகாற்றுப் படையிற் போற்றப் பெற்றுள்ளமை அம் முதல்வன் என்றும் இளையோனாக உலக வாழ்க்கையில் ஈடுபடும் மக்கட் குலத்தார்க்கு மெய்யுணர் வென்னும் வேற்படையினால் அச்சம் அகற்றி, அறிவும் ஆண்மையும் நல்கி அவர் தம் வாழ்வில் முன்னியது முடித்தருளும் பெற்றியனாகப் தம் வாழ்வில் முன்னியது முடித்தருளும் பெற்றியனாகப் போற்றப் பெறும் செந்தமிழ்க் கடவுளாகத் திகழ்கிறான்.

இனி, கதிர்சாயும் காலமாகிய மாலை வேளையில் மேற்கே காணப்படும் கதிரவனே, தன் செவ்வொளி தோய்ந்த முகிற் குழாங்கள் வானமுகட்டின் நாற்புறத்தும் சொக்கர்ச் சடையெனச் சிவந்து மிளிர, அம்முகிற் குழாங்களின் இடையே தோன்றும் வெண்பிறையானது, அவிர் சடைக் கற்றைமேல் நிவந்து தோன்றும் வெண்பிறை என விளங்காநிற்கச் சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி அம்மானை மனம் கொள்ளச் செய்யும் தெய்வத் தோற்றம் உடையனவாகத் திகழ்தலின் செவ்வானன்ன மேனியன் சிவன் எனவே வைத்து வழிபடப் பெறுவானாயினன். இவ் வுண்மை,

'அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்க னாவான் அரனுரு வல்லனோ' (5-100-8)

எனவரும் அப்பர் அருள்மொழியினால் நன்கு புலனாதல் காணலாம்.

காலையில் தோன்றும் இளஞாயிறு, இருளிற் றுயிலும் மன்னுயிர்களைத் தன் ஒளிக் கதிர்களால் இருள் நீக்கி எழுப்பிப் பல்வேறு தொழில்களில் ஈடுபடுத்தி வாழ்க்கையில் அச்சம் அகற்றி, வெற்றி நல்கி வையத்து வாழ்வாங்கு வாழ்தற்கு உதவுமாறு போலவே, என்றும் இளையோனாகிய சேயோனும் மக்கட்குலத்தார் குற்றமற்ற கோட்பாடுகளால் தாம் தாம் மேற்கொண்ட தொழில்களை வெற்றி பெற முடித்து வையத்து வாழ்வாங்கு வாழும் வண்ணம் அவர்தம்

மனத்தகத்தே இளஞாயிறாகத் தோன்றி அவர்தம் அறியாமை இருளை நீக்கி, அச்சம் தவிர்த்து அவர்கள் அறியாமை இருளை நீக்கி, அச்சம் தவிர்த்து அவர்கள் உள்ளத்தே எண்ணிய அனைத்தையும் இனிதே முடித்தருளுகின்றான் எனச் செந்தமிழ்ப் பனுவல்கள் போற்றுகின்றன. ஆதலால் காலைக் கதிரவனது தோற்றம் முன்னியது முடித்து அருளும் முருகப் பெருமானது தோற்றப் பொலிவிற்கு உவமையாயிற்று. பகலெல்லாம் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு உழைத்து இளைத்த மக்கட் குலத்தார் தமது உடல் இளைப்பும் உள்ளக் கவலையும் நீங்கி ஓய்வுபெறும் நிலையில் மாலைப் பொழுதில் ஞாயிற்றின் தோற்றம் அமைதி வழங்குமாறு போன்று, உலக வாழ்கையில் பலப்பல பிறவிகளை எடுத்து அல்லல் உற்ற மாந்தர் "எம்பெருமானே எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தோம்; எங்களது பிறவிப் பிணிப் பகற்றிப் பிறவா நெறியினை அளித்து அருள்வாயாக" என ஐம்பொறிகளை அடக்கிய செம்புலச் செல்வர் களாய் மனம் குளிர்ந்து போற்றி ஒருமைநிலை பெற்று அமைதிபெறும் நிலையில் அமைந்தது சிவ வழிபாடாகும் எனவே காலை இளஞாயிற்றின் தோற்றம் என்றும் இளையோனாகிய சேயோன் திருமேனியையும், மாலை ஞாயிற்றின் முதிர்ந்த செவ்வித்தாகிய அந்தி வானத் தோற்றம் முது முதல்வனாகிய சிவபெருமானது செம்மேனியையும் குறிப்பனவாக இலக்கியங்களில் குறிக்கப் பெறுதலின், காலை இளங்கதிரவனை என்றும் இளையோனாகிய முருகன் எனவும், மாலை முதிர் கதிரவனை முருகனுக்குத் தந்தையாகிய சிவபெருமான் எனவும் தமிழ் முன்னோர் கருதிப் போற்றினர் எனத் தெரிகிறது. காலை ஞாயிறும் மாலை ஞாயிறும் கால வேறுபாட்டால் இரு நிலையினவாகக் காணப்படினும் பொருள் அளவில் இரண்டும் ஒன்றே ஆதல் போன்று சேயோனும் சிவனும் இரு தெய்வங்களாக வைத்து வணங்கப்பட்டாலும் இருவரும் ஒருவரே என்பது சேயோன் சிவன் என வழங்கும் பெயர் ஒற்றுமையாலும் இனிது புலனாகின்றது. முருகனுக்கு உரிய சேயோன் என்னும் பெயர் செம்மை நிறம் வாய்ந்த திருமேனியை உடையான் என்னும் பொருளுடையது. சிவன் என்னும் பெயரும் சிவந்த நிறத்தினன் என்னும் பொருளையே தருகின்றது. எனவே சொல் ஒற்றுமையாலும் பொருள் ஒற்றுமையாலும் சேயோனாகிய முருகனும் சிவனாகிய இறைவனும் ஒரே முழுமுதற் கடவுளாகக் கருதப்பெற்றமை காணலாம். குமரனாகிய முருகனும் அவன்

தந்தையாகிய சிவனும் முழு முதற்கடவுளின் இருவேறு கோலங்களே என்னும் மெய்ம்மையினைப் புலப்படுத்தும் முறையில் அமைந்ததே கந்தபுராண வரலாறு ஆகும். முருகப் பெருமானைக் குறித்து வழங்கும் திருப் பெயர்களுள் கந்தன் என்பதைத் தமிழ்சொல்லாகக் கொண்டு கந்தன் - தூண் வடிவில் நிறுத்தப்பட்ட கந்தில் உறையும் தெய்வம் எனப்பொருள் கொள்ளுதற்கும் இடம் உண்டு. "வல்வேற் கந்தன் நல் இசை உள்ளி" (புறநானூறு - *38*) என வரும் தொடரைக் கூர்ந்து நோக்குங்கால் 'கந்தன்' என்பது சங்க காலத்திலேயே தெய்வப் பெயராக மக்களுக்கு இட்டு வழங்கப் பெற்றது என்பது உய்த்து உணரப்படும்.

குறிஞ்சி நிலத் தெய்வமாகிய சேயோனை நிலம் கடந்த நிலையில் முழுமுதற் கடவுளாகப் போற்றப் பெறும் சிவபெருமானுடைய திருமகனாகக் கொண்டு வழிபடும் நிலை ஏற்பட்டபின் சிவபெருமான் திருக்கோயிலின் அகத்தும் புறத்தும் முருகப் பெருமானின் திருவுருவம் இடம் பெறுவதாயிற்று. இவ்வாறே முருகப் பெருமான் திருக்கோயில்களில் முதல்வனது தந்தை என்ற முறையில் சிவலிங்கத் திருவுருவமும், தாய் என்ற முறையில் கொற்றவை திருவுருவமும் இடம் பெறுவனவாயின. திருப்பரங் குன்றம், திருச்சீலைவாய் என்னும் திருச்செந்தில், திருவாவினன் குடி, திருவேரகம், திருச்செங்கோடு முதலிய குன்றுகள் சங்க கால முதல் முருகப்பெருமானுக்குரிய சிறப்புடைய திருக்கோயில்களாக வழிபடப்பெறும் தொன்மை உடையனவாகத் திகழ்கின்றன.

இற்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன் மதம் என்ற சொல், சமயக் கொள்கை என்ற பொருளில் வழங்கப் பெறவில்லை. கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பின்னர்த் தோன்றிய மணிமேகலையில்தான் 'சமயம்' என்ற சொல் முதன் முதல் ஆளப்பெற்றுள்ளது. கடவுளைப் பற்றியோ உலகத்தைப் பற்றியோ உயிர்களைப் பற்றியோ மக்கட் குழுவினர் கொண்ட கொள்கை யினையும், தாம் தாம் மெய் எனத் துணிந்துள்ள கொள்கை பற்றிய ஒழுகலாறுகளையும் குறித்து வழங்கப்பெறுவதே சமயம் என்ற சொல் ஆகும். பண்டைத் தமிழியல் நூலாகிய தொல்காப்பியத்திலும், அதன் பின்னர்த் தோன்றிய சங்கத் தொகை நூல்களிலும் மதம் என்ற சொல்லோ, சமயம் என்ற சொல்லோ இடம் பெறவில்லை. பலவகைச் சமயங்களும் தோன்றி அவ்வச் சமயங்களின் பெயரால் தமிழ் மக்கள் தம்முட் பிரிவுபடுவதற்கு முன்னரே இயற்றப் பெற்ற

தொன்மை உடையன தொல்காப்பியமும் சங்கத் தொகை நூல்களும் என்பது இதனால் நன்கு துணியப்படும்.

தொல்காப்பியர் காலத்திலே மாயோன், சேயோன் இந்திரன், வருணன் ஆகிய நானிலத் தெய்வங்களின் வழிபாடும், கொற்றவை வழிபாடும், நில வெல்லையினைக் கடந்த பொதுமை நிலையிற் சிவவழிபாடும் நிலைபெற்று வழங்கின என்பது முன்னர் விளக்கப் பெற்றது. இவ் வழிபாடுகள் யாவும் பலதிற மக்களும் தம் தம் சூழ்நிலைக்கும் தாம் தாம் உள்ளத்திற் கருதிய தெய்வத் தோற்றத்திற்கும் ஏற்ப மேற்கொண்டுள்ள தெய்வ வழிபாடுகள் என்ற பொதுமை நெறியில் நிகழ்ந்தனவே அலறிப் பிற்காலத்திற் போன்று குறிகளாலும் அடையாளங்களாலும் வேறுபட்ட தனிக்கொள்கை யினையுடைய சமயங்களாக அவை வழங்கப் பெறவில்லை என்பதும், மக்கண் ஒற்றுமையைக் குலைக்கும் நிலையில் அவைவேறுபட்டு காணப்படவில்லை என்பதும் இங்கு மனங்கொள்ளுதற்குரியனவாகும்.

இனி, கடைச்சங்க காலத்தை யடுத்துத் தோன்றிய சிலப்பதிகாரம் மணிமேகலை என்னுங் காப்பியங்களில் தான் சிவவழிபாடு, திருமால் வழிபாடு, கொற்றவை வழிபாடு, செவ்வேள் வழிபாடு என்னும் இவ்வழிபாடுகளும் இவற்றின் வேறாகச் சமணமும் புத்தமும் வேதநெறி பற்றிய கொள்கைகளும் தத்துவ அளவில் தனித்தனிச் சமயங்களாக வேறுபடுத்திப் பேசப்படுகின்றன. சிவ வழிபாடு, திருமால் வழிபாடு, கொற்றவை வழிபாடு, செவ்வேள் வழிபாடு என்னும் நான்கும் தம்முள் உறவு முறைத் தொடர் புடையனவாகவும், இவற்றுட் சிவவழி பாடொன்றுமே தலைமைச் சிறப்புடையதாகவும் திகழ்ந்தமையும், இவையன்றி ஞாயிறு வழிபாடு, திங்கள் வழிபாடு, மழை வழிபாடு, இந்திர விழா, காம வேள் விழா என்பன அக்காலத் தமிழ்மக்களால் கொண்டாடப் பெற்றன என்பதும், தெய்வச் சிறப்புடைய ஊரைப் போற்றுதலும், தீதுதீர் காவேரி வையை கங்கை முதலியவற்றில் ஆறாட்டும், குமரி முதலிய கடலாட்டும் ஆகிய வழிபாட்டுச் சடங்குகளும் அக்கால மக்களால் மேற்கொள்ளப் பெற்றன என்பதும் சங்கத் தொகை நூல்களாலும் சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் இவ்விரு காப்பியங்களாலும் நன்கு புலனாகின்றன.

வடநாட்டில் வைதிக நெறிக்கு எதிராகத்தோன்றிய சமண புத்த சமயங்கள் தத்தம் கொள்கைகளைப் பரப்பும் நோக்குடன்

தமிழகத்தில் சங்ககாலத்தில் வேரூன்றின அவை வேரூன்றிய பின்னர்த் தத்தம்சமயக் கொள்கையைப் பரப்பும் அளவில் அமைந்து விடாது இங்குள்ள தெய்வக் கொள்கையினையும் புறம் பழிக்கத் தொடங்கின என்பது சிலப்பதிகாரத்தில் மாங்காட்டு மறையோன் கூற்றைப் புறக்கணித்துப் பேசிய கவுந்தியடிகள் கூற்றால் உய்த்துணரப்படும். சிலப்பதிகாரத்தையடுத்து மணிமேகலைக் காப்பியம் இயற்றப்பெற்ற காலத்தில் தமிழகத்திற் பல்வேறு சமய வாதிகளும் மக்கள் பேரவையிலே தத்தம் சமயவுண்மைகளைக் குறித்து உறழ்ந்து பேசுதற்கேற்ற வாய்ப்பு காவிரிப்பூம்பட்டினம் முதலிய தமிழகப் பேரூர்களில் நிகழும் இந்திரவிழா முதலிய திருவிழாக் காலங்களில் நாடாள் வேந்தரால் அளிக்கப் பெற்றது. இச்செய்தி,

> "ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
> பட்டி மண்டபம் பாங்கறிந் தேறுமின்"
>
> (மணிமேகலை - விழாவறை காதை)

எனவரும் மணிமேகலைத் தொடரால் இனிது புலனாகின்றது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து முன்னர் இல்லாத சமயப் பகுப்புகளும், மத மாறுபாடுகளும் இத்தென்றமிழ் நாட்டிலே தோன்றித் தமிழ் மக்களது ஒற்றுமை யுணர்வைச் சிதைத்து அவர்களை ஒருவரோடொருவர் மாறுபடச் செய்து அலைக்கழிக்கலாயின.

அசோக வேந்தன் காலந் தொடங்கிக் கி.பி. முதல் நூற்றாண்டு வரையில் ஏறக்குறைய முந்நூறாண்டுகள் தமிழகத்திற் குடியேறி, இந்நாட்டு மக்களோடு ஒன்றி அமைதியாய் வாழ்ந்த புத்த சமணத் துறவிகள், பாண்டிய நாட்டிலும் சோழநாட்டிலும் தமிழ் வேந்தது அரசு நிலை குலையத் தொடங்கிய நிலையில் தமிழ் நாட்டின் மேற் படையெடுத்து வந்த அயலவராகிய கருநடமன்னர் முதலியோரது துணைகொண்டு தம் சமயக் கொள்கைகளை மிக முயன்று தமிழகத்திற் பரப்பும் பணியில் ஈடுபடலாயினர்; தமது கொள்கைக்கு இணங்காத தமிழ் மக்களையெல்லாம் தம் மதங்களில் திருப்புதற்கு அரசியற் சார்பு பெற்றுத் தவறான தந்திரங் களையெல்லாம் கையாள் வாராயினர். இதனால் தமிழாசிரியர்க்கும் சமண புத்த சமயத் தார்க்குமிடையே வழக்குகளும், எதிர்வழக்குகளும் அடுத்தடுத்து நிகழ்ந்தன. அதனால் ஒருசார் மதக் கொள்கையினையுடையார் பிறிதொரு மதக் கொள்கையாளரிடமிருந்து தம்மை வேறுபடுத்தித்

தம்மை உயர்த்திக் கோடற்கும், தம் கொள்கையினையுடன்படாத பிறரைத் தம்மினின்று வேறுபடுத்திக் காட்டுதற்கும் சைவர், வைணவர், புத்தர், சமணர், வைசேடிகர், நியாயவாதிகள், உலகாயதர், மாயாவாதிகள் என்றாங்கு வெவ்வேறு குழுவினர்க்கு வெவ்வேறு சமயப் பெயர் கொடுத்து வழங்கும் நிலை சமயவாதிகளிடையே நிலைபெற்று வேரூன்றலாயிற்று. சமயம் மதம் என்ற பெயர்களும், அப்பெயர்களாற் பகுத்துரைக்கப்படும் பிரிவினைகளும் இன்றி எல்லோரும் ஒன்றுபட்ட பொதுமை யுணர்வினராய் எல்லாம் வல்ல ஒரு முழுமுதற் கடவுளையே பல்வேறு வடிவிற் பல்வேறு பெயர்களில் வணங்கி இவ்வாறு அமைதி நிலையில் வாழ்ந்த தமிழ் மக்களிடையே வடக்கிருந்து வந்து நிலை பெற்ற சமண, புத்த சமயத்தவர்களாலும் அவர்களோடு முரண்பட்டு வந்த வைதிகக் குழுவினராலுமே பல்வேறு மதங்களும் மதப்போர்களும் இந்நாட்டிற் கிளைத்து வளர்ந்தன. இவ்வாறு இந்நாட்டில் முரண்பட்டு வளர்ந்துள்ள பல்வேறு மதங்களும் வடக்கிருந்து தமிழகத்திற் குடியேறின அயலவர்களாலேயே பல்கின என்பதற்கு அம்மதங்கள் பலவும் வடமொழிப் பெயர் கொண்டு உலவுதலும், அம்மதங்களைப் பற்றிய நூல்களெல்லாம் வடமொழியில், எழுதப் பெற்றிருத்தலுமே உறுபெருஞ் சான்றாகும். இதனை நன்குணர்ந்த சுவாமி விவேகானந்தர் மதச் சண்டைகளும் சாதிவேற்றுமைக் கலகங்களும் பல்குதற்கு ஒருபெருங் கருவியாய் அமைந்தது வடமொழியே எனவும், அம்மொழி நூல்கள் தொலைந்து போகுமானால் இப் போராட்டங் களும் தொலைந்து போகும் எனவும் வருந்திக் கூறியுள்ளார். (மறைமலை அடிகளாரின் தமிழர்தம் நூல். பக்கம் 22) பழைய தமிழ் நூல்களிற் சமயப் போருக்காவது சாதிச் சண்டைக்காவது இடமில்லை என்பதைச் சங்க இலக்கியங்களால் நல்குணரலாம்.

இன்னவுரு, இன்னநிறம் என்றும் அறியவொண்ணாத செம்பொருளாகிய இறைவனைத் தூணுருவில் நிறுத்தி வழிபடும் வழிபாடு பண்டைக் காலத்தில் சமயவேறுபாடு இல்லாத பொதுமை வாய்ந்த கடவுள் வழிபாடாகவே நிகழ்ந்து வந்துள்ளது. இதன் வளர்ச்சியே சிவலிங்க வணக்கமாகும்.

மன்னுயிர்களுக்கு உள்ளும் புறம்பும் நின்று அருள் புரியும் முழுமுதற்கடவுளை உலகிற் காணப்படும் புறப் பொருள்களுள் ஒன்றாலாகிய உருவிலோ, அன்றி அகத்துள் கருதியுணரப்படும்

அருவிலோ வைத்து வழிபடும் வழிபாடு இறை இயல்பினை நன்கு விளக்காதென வுணர்ந்த முன்னைய அருளாளர்கள், அம்முதல்வன் உயிர்களின் அகத்தே உள்ளிருந்தெழும் சோதியாகவும், உலகின் புறத்தே தோன்றி இருள் நீக்கும் சுடராகவும் திகழுந் திறத்தினை மக்கள் உணர்ந்து போற்றும் முறையில் அருவுருவாகிய இச் சிவலிங்கத் திருவுருவினை அமைத்து வழிபடுவாராயினர். இவ்வுண்மை,

> காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
> நீணாக மணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்
>
> (பெரிய. சாக்கிய நாயனார்-8)

எனவரும் சேக்கிழார் வாய்மொழியால் நன்கு தெளியப்படும்.

இலிங்கம் என்ற சொல் அடையாளம், குறி என்று பொருளுடையது. காண்டற்கரிய கடவுளை மனத்தாற் குறித்து வழிபடுதற்குரிய குறியாகவும், அடையாளமாகவும் அமைந்ததே இச்சிவலிங்கத் திருமேனியாகும். ஆராத பேரன்புடையராய் அறுவகைக் குற்றங்களையும் ஒழித்து, ஐம்புலன்களையும் அடக்கி இறைவனருளிய அருள் ஞானத்தைப் பெற்ற பெருந்தவ முனிவரது உள்ளத்துள்ளே சோதி வடிவாய்த் திகழும் இறைவனது அருள் திருமேனியின் அமைப்பினைப் புலப்படுத்தும் குறியாக அமைந்ததே சிவலிங்கத் திருமேனி. சிவலிங்கத்தின் அடிப்பீடம் ஆன்மாக்களின் நெஞ்சத் தாமரையாகவும், அதன் நடுவே நாட்டப்பெற்ற பாணம் அவ்உயிர்களின் உள்ளத்தில் எழும் சோதிப் பொருளாகிய இறைவனாகவும் கொண்டு அமைந்ததே சிவலிங்கத் திரு உருவம். இவ்வுண்மை 'மலர் மிசை ஏகினான்' என்னும் வள்ளுவர் வாய்மொழியாலும் 'மலர்மிசை எழுதரு பொருள்' (1-12-5) எனவரும் ஆளுடைய பிள்ளையார் திருவாக்காலும் புலனாதல் காணலாம்.

> "எரியாய தாமரைமேல் இயங்கினாரும்" (6-16-7)

எனவரும் நாவுக்கரசர் அருள்மொழியும்,

> "நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலே ஓர் நால்விரல்" (7-45-9)

எனவரும் சுந்தரர் வாய்மொழியும் இக்கருத்தினைப் புலப்படுத்தல் காணலாம்.

இவ்வாறு எல்லார்க்கும் பொதுவாகத் தோன்றிய சிவலிங்க வழிபாடு இறைவனை உருவமாகக் கொண்டு வழிபடும் சிவயோகிகள்

வழிபாட்டிற்கும் இடைப்பட்டதாய்ப் பொதுமையின் அமைந் தமையின் இது தெய்வக் கொள்கையுடைய பல சமயத்தார்க்கும் பொதுமையுடையதாகவே அமைந்து வந்துள்ளது.

தெய்வம் உண்டு என்னும் தெளிவு பெறாத மீமாம்சகர், வைசேடிகர். நையாயிகர் முதலியோரும் வைதிகத்திற்குப் புறம்பான அருகர், புத்தர் முதலிய சமயத்தாரும் தத்தம் கொள்கைகளில் மாறுபாடுடையவராய்த் தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலைந்தனராயினும், அன்னோர் தத்தம் சமய ஆசிரியர்களை வழிபடும் வழிபாட்டுத் திறத்தில் ஒருமையுடையராதலை உலகியலிற் காண்கிறோம். இவ்வாறு மக்கட் குலத்தார் தெய்வம் உண்டென்னும் தெளிவு பெறாத நிலையிலும், தங்களை அன்பினால் நல்வழிப் படுத்தும் தந்தை, தாய், ஆசிரியன் முதலிய பெரியோர்களை நோக்கிச் செய்யும் வழிபாடுகள் எல்லாவற்றையும் உலக முதல்வனாகிய இறைவனே ஏற்றுக் கொண்டு அருள்புரிகின்றான் என்பது திருமுறை ஆசிரியர்கள் முதலிய சிவநெறிச் செல்வர்களின் துணிபாகும். தெய்வத்தை உடன்படுவனவும், உடன்படாதனவுமாக உலகில் வழங்கும் சமயங்கள் யாவும் மக்களை அவரவர் தம் பக்குவ நிலைமைக்கு ஏற்பப் படிப்படியாக உயரச் செய்து பேரின்பம் அளிக்கும் பெருங் கருணைத் திறத்தால் உலகமுதல்வனாகிய இறைவனால் வகுத்தருளிச் செய்யப் பெற்றனவே என்பது நம் முன்னோர் கண்ட உண்மையாகும். இவ்வாறு உலகச் சமயங்கள் எல்லாம் இறைவன் ஒருவனாலேயே படிகால்முறையாக அமைக்கப்பட்டன என்னும் இந் நுட்பம்,

ஆரிருள் அண்டம் வைத்தார் அறுவகைச்
சமயம் வைத்தார் (4-30-5)

எனவும்,

'முறை முறை நெறிகள் வைத்தார்' (4-38-7)

எனவும்,

'பேணித் தொழுமவர் பொன்னுலகாளப் பிறங்கருளால்
ஏணிப்படிநெறி இட்டுக் கொடுத் திமையோர் முடிமேல்
மாணிக்கமொத்து மரகதம்போன்று வயிர மன்னி
ஆணிக் கனகமும் ஒக்கும் ஐயாறன் அடித்தலமே' (4-92-16)

எனவும் வரும் அப்பரடிகள் வாய் மொழிகளால் இனிது புலனாகும்.

கடவுட் கொள்கை யென்னும் உள்ளீடில்லாத சமயங்களை "இருமுச் சமயத்து ஒருபேய்த் தேர்" (திருவாசகம், திருஅண்டப் பகுதி 79) எனவும், கடவுட் கொள்கையுடை அகச் சமயங்களைத் 'திருத்தகும் அறுவகைச் சமயம்' (திருஅண்டப்பகுதி 16-17) எனவும், மணிவாசகப் பெருமான் குறிப்பிடுவதால் அவர்காலத்து அகச்சமயம் அறுவகையாகவும், புறச்சமயம் அறுவகையாகவும் வழங்கின எனக் கருத வேண்டியுள்ளது. சாருவாகம் (உலகாயதம்), முதலிய எல்லாச் சமயமும் இறைவன் ஒருவனாலேயே அருளிச் செய்யப்பெற்ற மையின் அவ்வச் சமயத்தார் அளவில் அவை பிரமாணமாகக் கொள்ளத் தக்கனவே. மந்த உணர்வினராய மக்கள், உலக இன்பமே பெரும்பயன் எனவும், தமக்குப் புறம்பாயுள்ள உடம்பு முதலியவற்றை ஆன்மா எனவும் அபிமானம் செய்து உழலும் நிலையின் அன்னோர்க்கு இரங்கிய இறைவன், துன்பம் முதலியவற்றோடு விரவுவதால் உலக இன்பம் பேருறுதிப்பயன் அன்று எனவும், உடம்பு முதலியன ஆன்மா அல்ல எனவும் உணர்த்தி, அவர்களது உணர்வு அவ்வளவில் நிலை பெறுதற் பொருட்டு அதனினும் நுட்பப் பொருளை உணர்த்தத் தொடங்கின் அன்னோர் ஏற்றுக் கொள்ளும் உணர்வு பெறாமையின் தூல உடம்பே ஆன்மா எனவும், அவ்வுடம்பு நசித்தலே பேருறுதிப்பயன் எனவும் அறிவுறுத்தி யருளினான். பின்னர் அவ்வாறு அறிவுறுத்தும் நெறியிலே ஒழுகி இறைவனது திருவருளுக்கு உரியராய் ஆணவமல மறைப்பினின்றும் சிறிது நீங்கி, உடம்பே ஆன்மா, உடம்பு நசித்தலே பேருறுதிப்பயன் எனத் தாம் முன்பு கொண்ட கொள்கையில் ஐயப்பாடுடையராயினர். அங்ஙனம் ஐயுற்ற மாந்தர்களுக்கு, உடம்பு முதலியன ஆன்மா அல்ல என்று மறுத்தற்பொருட்டுப் புத்த சமயத்தை அறிவுறுத்தி யருளினான். இவ்வாறு மக்களின் மன உணர்வினை வளர்த்தற் பொருட்டே மேலும் மேலும் ஏணிப் படிகளாகப் பல்வேறு சமயங்களையும் இறைவன் வகுத்தருளினான் என்பர் பெரியோர்.

"இது, தைத்திரியத்தில் அதிகாரி பேதம் பற்றி அன்ன மயகோசம் பிரமம்" என்றும் அதனை மறுத்து மேல், அதனிற் சூக்குமமாகிய பிராணமய கோசம் பிரமம் என்றும் அதற்குமேல் மனோமயகோசம் பிரமம் என்றும், அதற்கு மேல் விஞ்ஞானமய கோசம் பிரமம் என்றும், அதற்கு மேல் ஆநந்த மயகோசம்பிரமம் என்றும் ஒன்றற் கொன்று சூக்குமமாய் உணர்த்துதல் போலவும்,

கவுசிதக உபநிடதத்தில் அதிகாரி பேதத்தால் இந்திரன் தைத்தியனுக்குத் தன்னையே பிரமமாகக் கூறியது போலவும் கொள்க. அங்ஙனம் புல்லை எதிரே காட்டி ஆக்களைப் பிடிக்குமாறு போலச் சோபான முறைமைபற்றிக் கூறியது என்பதூஉம், அவை எல்லாம் ஒருவாற்றாற் பிரமாணம் என்பதூஉம் சூதசங்கிதையிற் காண்க" (சிவஞான பாடியம் சிறப்புப்பாயிரம்) என மாதவச் சிவஞான முனிவர் தரும் விளக்கம் இங்கு எண்ணத் தகுவதாகும்.

இனி, பலவகைச் சமயங்களிலிருந்தும் இறைவனை, உண்மையாகப் போற்றும் அன்பர்கள் எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் அவரவர் நினைந்த திருமேனி கொண்டு அங்கங்கே தோன்றி அருள்புரிதல் இறைவனது இயல்பென்பதும், கடவுட்கொள்கையில்லாத பிற சமயத்தாரும் தத்தம் சமயத் தலைவர்களை நோக்கிச் செய்யும் வழிபாடுகள் யாவும், முழுமுதற் முன்னைய அருளாசியர் துணிபாகும்.

எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்கு
இங்கே என்று அருள்புரியும் எம்பெருமான். (2-40-6)

என ஆளுடைய பிள்ளையாரும்.

"ஆரொருவர் உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்" (6-18-11)

"பாராழி வட்டத்தார் பரவியிட்ட
பன்மலரும் நறும் புகையும் பரந்து தோன்றும்" (6-18-5)

"இருநிலத்தார் இன்புற்று அங்கு ஏத்துமடி
இன்புற்றார் இட்டபூ ஏறுமடி." (6-6-5)

என ஆளுடை அரசரும்,

"அறிவினான் மிக்க அறுவகைச் சமயம்
அவ்வவர்க் கங்கே ஆரருள் புரிந்து" (7-55-9)

என ஆளுடைய நம்பிகளும் அருளிய அருளுரைகளைக் கூர்ந்து நோக்குங்கால், பல சமயங்களால் போற்றப்படும் எல்லாத் தெய்வங்களாகவும் முன்னின்று அருள் புரிவோன் எல்லாம் வல்ல சிவபெருமானே என்னும் உண்மை திருமுறை ஆசிரியர்கள் துணிபாதல் நன்கு புலனாகும்.

மக்கள் தங்கள் குறுகிய நோக்கத்தால் வேறுபட்டுத் தமக்கெனப் புதியனவாகச் சமயங்களைக் கற்பித்துக் கொண்டாலும்,

*அன்னோர் கற்பனைகளுக்கெல்லாம் தானுமுடனாய் நின்று அருள் செய்யும் இயல்புடையோன் இறைவன் என்பதனை.*

"வாதுசெய்து மயங்கும் மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள்
யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்
மாதவ னல்லால் தேவர் மற்றில்லையே" (5-100-4)

*எனவும்*

"விரிவிலாஅறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்து
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்" (4-60-10)

*எனவும் திருநாவுக்கரசர் தெளிவுபடுத்தியுள்ளமை காணலாம்.*

*ஏணிப்படி நெறிகளாக அமைக்கப் பெற்ற அகம் புறமென்னும் அறுவகைச் சமயங்களிலும் ஒழுகும் உள்ளத்தினரைத் தெய்வம் ஒன்றே என்னும் தெளிவு பெறச் செய்தலும், அங்ஙனம் தெளிந்த தொண்டர்களைச் சிந்தையும் தெளிவுமாகித் தெளிவினுள் சிவமுமாகிப் பேரின்பத்தைப் பெற்று மகிழும் சிவநெறியாகிய செந்நெறிக்கே ஏற்றதலும் முழுமுதற்கடவுளது திருவருளின் திறமாகும். இவ்வுண்மையினை,*

"போற்றுந்தகையன பொல்லா முயலகன் கோபப்புன்மை
ஆற்றுந் தகையன ஆறுசமயத் தவரவரைத்
தேற்றுந் தகையன தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே
ஏற்றுந் தகையன இன்னம் பரான்றன் இணையடியே" (4-99-7)

*எனவரும் திருவிருத்தத்தில் அப்பரடிகள் விளக்கியுள்ளமை காணலாம். இவ்வாறு எல்லாச் சமயத்தாராலும் மேற்கொள்ளப் பெறும் வழிபாடுகள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு அவ்வவர்க்கு அவ்வவர் தெய்வமாய்த் தோன்றி அருள்புரியும் சமயங்கடந்த தனிமுதற் பொருளாகவே சிவநெறிச் செல்வர்கள் இறைவனைப் போற்றி வந்துள்ளார்கள். இச்செய்தி,*

பரிதியானைப் பல்வேறு சமயங்கள்
கருதியானைக் கண்டார் மனமேவிய
பிரிதியானைப் பிறர் அறியாத தோர்
சுருதியானைக் கண்டீர் தோழற்பாலதே. (5-94-5)

*எனவரும் திருநாவுக்கரசர் அறிவுரையானும்,*

மனமது நினைய வாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுத லகற்றி வாழும் செயலறமானால் யார்க்கும்
முனமொரு தெய்வம் எங்கும் செயற்கு முன்னிலையாமன்றே.

*எனவரும் சிவஞான சித்தியார் (**113** பக்கம்) திருவிருத்தத்தாலும் நன்கு விளங்கும்.*

*தெய்வம் உண்டென்னும் தெளிவுடைய அகச்சமயத்தார் செய்யும் வழிபாடு முழுமுதற் கடவுளை அடையும்படிச் செய்யும் என்பதனை ஒத்துக் கொள்வதில் தடையில்லை, தெய்வங் கொள்கையே யில்லாத புறச்சமயத்தார் தத்தம் சமயத் தலைவர்களை நோக்கிச் செய்யும் வழிபாடுகள் முழுமுதற் பொருளாகிய இறைவனைச் சார்தல் எவ்வாறு பொருந்தும்? என்பதொரு வினா இவ்விடத்தில் எழுவது இயல்பு. எல்லாம் வல்ல இறைவன் உயிர்க்குயிராய் யான்டும், நீக்கமற நிறைந்துள்ளான் என்பது சான்றோர் துணிபாதலின் புறச்சமயத்தலைவரிடத்தும் அம்முதல்வன் இடங்கொண்டுள்ளான் என்பது தெளிவு. எனவே அச் சமயத்தலைவர்களை நோக்கிச் செய்யும் வழிபாடுகளையும் அவர்கள் வழியாக இறைவன் ஏற்றுக் கொள்கிறான் என்பதில் சிறிதும் ஐயுறவில்லை. இந்நுட்பம், சிவபெருமானை நினையாமலும் திருவைந்தெழுத்தினை முறைப்படி ஓதாமலும், பச்சிலையும் நீருங்கொண்டு வழிபாடு செய்யாமலும் வேறுயாராகவோ நினைக்கும் புறச்சமயத்தார் உள்ளத்திலும் இடைமருதீசனுடைய பொன்னார் திருவடியே நண்ணி அருள்வழங்கும் என்பதும், ஆறு சமயத்தார் செய்யும் வழிபாடுகளெல்லாம் இடைமருதீச னொருவனையே வந்து சார்வன என்பதும் ஆகியவுண்மையினை*

ஓராதே அஞ்செழுத்து முன்னாதே பச்சிலையுந்
நேராதே நீரும் நிரப்பாதே - யாராயோ
எண்ணுவா ருள்ளத் திடை மருதர் பொற்பாதம்
நண்ணுவா மென்னுமது நாம்

*எனவும்,*

அன்றென்றும் ஆமென்றும் ஆறு சமயங்கள்
ஒன்றொன்றோ டொவ்வா துரைத்தாலும் என்றும்
ஒருதனையே நோக்குவா ருள்ளத் திருக்கும்
மருதனையே நோக்கி வரும்.

எனவும் வரும் திருவிடைமருதூர் மும்மணிக் கோவைச் செய்யுட்களால் திருவெண்காட்டடிகளார் இனிது விளக்கியுள்ளார். இப்பாடல்கள் முற்குறித்த வினாவுக்கு ஏற்றவிடையாதல் காணலாம்.

இங்ஙனம் சிவபெருமான் சமயங்கடந்த தனிமுதற் பொருளாக விளங்கும் மாட்சியினை,

இடத்துறை மாதரோ டிருடம் பென்றும்
நடத்தினை நள்ளிருள் நவிற்றினை யென்றும்
புலியதள் என்பொடு புனைந்தோ யென்றும்
பலிதிரி வாழ்க்கை பயின்றோ யென்றும்
அருவமும் உருவமும் ஆனா யென்றும்
திருவமர் மாலொடு திசைமுகனென்றும்
உளனே யென்றும் இலனே என்றும்
தளராளென்றும் தளர்வோனென்றும்
ஆதி யென்றும் அசோகினன் என்றும்
போதியிற் பொலிந்த புராண னென்றும்
இன்னவை முதலாத் தாமறி யளவையின்
மன்னிய நூலின் பன்மையுள் மயங்கிப்
பிணங்கும் மாந்தர் பெற்றிமை நோக்கி
அணங்கிய அவ்வவர்க்கு அவ்வவையாகி யடையப்
பற்றிய பளிங்கு போலும்,
ஒற்றி மாநக ருடையோய் உருவே.

(திருவொற்றியூர் ஒருபாவொபஃது) எனவரும் திருப் பாடலில் திருவெண்காட்டடிகள் விரித்துக் கூறியுள்ளார்.

“திருவொற்றியூரில் எழுந்தருளிய பெருமானே! மாதொரு பாகனாகிய நின்னைத் திருமாலென்றும், பிரமனென்றும், அருக னென்றும் புத்தனென்றும் பல்வேறு பெயர்களாற் சமயவாதிகள் பலர் மாறுபடக் கூறினாலும் யாவர்க்கும்மேலாம் இறைவனாகிய நீ அவ்வச்சமயத்தவர்களுக்கு அவரவர் நினைத்த திருமேனி கொண்டு தோன்றி அருள் புரிகின்றாய். பளிங்கு தன்கண் சார்ந்த பொருளின் தன்மைகளைப் புலப்படுத்தி அவற்றின் தன்மை தனக்கெய்தலின்றித் தனித்து விளங்குமாறு போன்று மேம்பட்டு விளங்குதல் நின்திருவுருவின் இயல்பென உணர்ந்தோம்” என்பது இத்திருப்பாடலின் பொருளாகும். இத்திருப்பாடலை அடியொற்றியமைந்தது,

“சுருதி வானவனாம் திருநெடுமாலாம்
சுந்தர விசும்பின் இந்திரனாம்
பருதி வானவனாம் படர்சடை முக்கட்
பகவனாம் அகவுயிர்க் கமுதாம்
எருது வாகனனாம் எயில்கள் மூன்றெரித்த
ஏறுசேவகனுமாம் பின்னும்
கருதுவார் கருதும் உருவமாம் கங்கை
கொண்ட சோளேச் சரத்தானே”

எனவரும் கருவூர்த்தேவர் திருவிசைப்பாவாகும்.

இதுகாறும் எடுத்துக் காட்டியவற்றால் தெய்வங் கொள்கை யுடையாரும், அக்கொள்கையினை உடன் படாதாருமாகிய எல்லாச் சமயத்தார் செய்யும் வழிபாடுகளும் முழுமுதற் பொருளாகிய இறைவன் ஒருவனையே சாருமென்பதும், பல சமயத்தாரும் தத்தம் தத்துவக் கொள்கைகள் காரணமாக முரண்பட்டு நிற்கும் சமயப் பிணக்கங்களில் ஈடுபட்டு மக்கள், தம்முள் மாறுபட்டுக் கலாம் விளைத்தல் இறைவனது அருட் குறிப்புக்கு மாறான செய்கை என்பதும் திருமுறை ஆசிரியர்கள் மேற்கொண்டொழுகிய சமயப் பொதுநிலைக் கொள்கை (சைவத்தின் சமரசம்) ஆதல் நன்கு புலனாதல் காணலாம்.

இவ்வாறு சங்காலம் முதலாக நம் நாட்டில் நிலவி வரும் சமயப் பொதுநிலைக் கொள்கைக்கு மாறான மதப் பூசல்களும், மதச்சடங்குகளும், பிற்காலத்தில் பெருகிய சாதி வேறுபாடுகளும் தமிழகத்திற் பரவி நாட்டு மக்களின் ஒற்றுமையுணர்வினைச் சிதைத்து அயல் நாட்டாருக்கு நம்மை அடிமைப்படுத்திய இருட் காலத்தே இறைவனது அருளால் தோன்றியவர் அருட் பிரகாச வள்ளலார். மக்கள் அனைவரையும் ஒரு குலத்தவராகக் கருதி மன்னுயிர்களுக்கெல்லாம் அன்பு செய்யும் அருள் நலம் வாய்ந்த அடிகளார், தம் காலத்தின் சமய வேறு பாடுகளால் நிலவிய பகைமையுணர்ச்சியைப் போக்கி எல்லாச் சமயவழிபாடுகளும் முழுமுதற் பொருளாகிய ஒன்றையே சென்று சார்வன என முன்னோர் கொண்டொழுகிய சமயப் பொது நிலையை யாவரும் உணர அறிவுறுத்தலையே தமது குறிக்கோளாகக் கொண்டனர். உத்தஞான சிதம்பரமாகிய வடலூர்ப் பெருவெளியில் எல்லா மக்களும் தத்தம் வேறுபாடுகளை மறந்து ஒரேகுலத்தார் என்னும் ஒற்றுமை

*யுணர்வுடன் முழுமுதற் பொருளை அருவுருவத் திருமேனி யுடையதாய்ப் பேரொளிப் பிழம்பினதாய், ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ்சோதியாம் நிலையில் கருதி வழிபட்டு உய்தியடைதற் பொருட்டு ஞானசபையை நிறுதியருளி னார்கள் என்பது யாவரும் அறிந்த செய்தியாகும்.*

வேறுபடும் சமய மெல்லாம் புகுந்து பார்க்கில்
விளங்கு பரம் பொருளேநின் விளையாட்டல்லால்
மாறுபடும் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள் போல் வயங்கிற் றம்மா (தாயு-கல்லா-25)

*எனத் தாயுமானப் பெருந்தகையார் அறிவுறுத்திய சமயப் பொது நிலைக் கொள்கையைத் தமிழ்மக்கள் நெஞ்சத்தில் நன்கு வேரூன்றச் செய்து, அதன் பயனாக நாட்டில் நிலவும் சமயப் பூசல்களை அறவே அகற்றுதலைத் தமது குறிக்கோளாகக் கொண்டு அருட்பிரகாச வள்ளலார் அருளிய திருப்பாடல்கள் பலவாகும். இறைவனை விழைந்த ஆருயிர்த் தலைவி ஒருத்தியின் அநுபவ மாலையில்,*

பெருகியபேர் அருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகை என்கணவர் திருப்பேர்புகல் என்கின்றாய்
அருகர் புத்தர் ஆதி என்பேன் அயன்என்பேன்நாரா
யணன் என்பேன் அரன் என்பேன் ஆதிசிவன் என்பேன்
பருகு சதாசிவம் என்பேன் சத்தி சிவம் என்பேன்
பரமம் என்பேன் பிரமம் என்பேன் பரப்பிரம மென்பேன்
துருவு சுத்தப் பிரமம் என்பேன் துரியநிறை வென்பேன்
சுத்தசிவம் என்பன் இவை சித்து விளையாட்டே
(திருவருட்பா-5801)

*எனத் தன் ஆருயிர்த் தலைவனாகிய இறைவன் பல்வகைச் சமயத் தாராலும் வழிபடப் பெறும் ஒருவனாகத் திகழும் உண்மையினைத் தலைவி தன் தோழிக்க எடுத்துரைக்கின்றாள். அது கேட்ட தோழி ஞானப் பெருவெளியாகிய அம்பலத்திலே அருள் நடம் புரியும் நம் பெருமானுக்குப் புறச் சமயக் கடவுளர்களின் பெயர்களையும் நீ இயைத்துரைப்பது பொருந்துமா என வினவுகின்றாள். அவள் கேட்டவினாவுக்கு விடைகூறுவதாக அமைந்தது,*

சிற்சபையில் நடிக்கின்ற நாயகனார் தமக்குச்
சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ என்றாய்

பிற்சமயத்தார் பெயரும் அவர் பெயரே கண்டாய்
பித்தர் என்றே பெயர் படைத்தார்க்கு எப்பெயர் ஒவ்வாதோ
அச்சமயத் தேவர் மட்டோ நின்பெயர் என்பெயரும்
அவர்பெயரே எவ்வுயிரின் பெயரும் அவர் பெயரே
சிற்சபையில் என்கணவர் செய்யும் ஒருஞானத்
திருக்கூத்துக் கண்டளவே தெளியும் இது தோழி
(திருவருட்பா 5802)

எனவரும் பாடலாகும்.

இதன் கண், இந்நாட்டில் இதுவரை தோன்றி வளர்ந்துள்ள சமயங்களின் தெய்வப் பெயர்களும், இனிப் புதுவதாகத் தோன்ற விருக்கும் சமயங்களின் தெய்வப் பெயர்களும், இந்நாட்டில் முன் இல்லாதனவாய்ப் பின் வந்து புகுந்த சமயங்களின் தெய்வப் பெயர்களும் எல்லாம் வல்ல இறைவன் ஒருவனையே குறிக்கும் எனம்வு, பித்தன் என்ற பெயரையே விரும்பி ஏற்றுக் கொண்ட பெருமான் பிற சமயப் பெயர்களையும் வெறுக்காது ஏற்றுக் கொள்வான் எனவும் சுவைபடக் கூறும் நிலையில் அமைந்தது,

"பிற்சமயத்தோர் பெயரும் அவர்பெயரேகண்டாய்
பித்தர் என்றே பெயர் படைத்தார்க்கு எப்பெயர் ஒவ்வாதோ"

என்ற தொடராகும்.

ஒன்றாய்ப் பலவாய் உயிர்க்குயிராய் விளங்கும் இறைவன் ஞானமயமாகிய பெருவெளியிலே திருவருட்பேரொளி வடிவாய் எல்லார்க்கும் பொதுவாய் நடம் புரிந்தருள் கின்றான் என்னும் பேருண்மையை அறிவுறுத்தும் நிலையில் அமைந்ததே தில்லைச் சிற்றம்பலத் திருக்கோயிலாகும். எல்லாம் வல்ல இறைவன் சமயங் கடந்த தனிமுதற் பொருளாய் எல்லாவுயிர்களும் உய்திபெறும் முறையில் இம்மன்றத்திலே அருட்கூத்து இயற்றுகின்றான் என்பது சிவநெறிச் செல்வர்களது துணிபாகும். பல்வேறு சமயங்களையும் கடைப்பிடித்துத் தொழுகின்ற எல்லா மக்களும் தம் மிடையேயுள்ள வேற்றுமைகளை மறந்து "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" எனத் திருமூலர் அறிவுறுத்திய பொதுமை நிலையில் நின்று இறைவனை வழிபடும் முறையில் அமைந்ததே இத்தில்லையம்பலமாகிய பொதுமன்றமாகும். இவ்வாறு எல்லாச் சமயங்களையும் தனக்கு அங்கமாகக் கொண்டு சமயங் கடந்த தனிமுதற் பொருளை

*வழிபடும் சைவசமயத்தினரால் சோதிப்பொருளாகிய இறைவனது இயல்பினை எல்லார்க்கும் புலப்படுத்தும் நிலையில் அமைக்கப் பெற்ற இத்தெய்வசபையின் அமைப்பினையும் இதனைக் கண்டு அமைத்த சைவ சமயத்தின் சிறப்பினையும் அறிவுறுத்தும் நிலையில் அமைந்தது,*

"சைவ சமயமே சமயம் சமயா தீதம்பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டு மிந்தக் கருத்தை விட்டுப்
பொய்வந் துழலும் சமய நெறி புகுதல் வேண்டாம் முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாரும் செகத்தீரே"

*எனத் தாயுமானார் அருளிய திருப்பாடலாகும். அப் பெருந் தகையார் அருளிய வண்ணம் சமயாதீதப் பழம் பொருளாகிய இறைவனை ஞானப்பொதுவில் ஆடல் புரிவோனாகக் கண்டு வழிபடும் தெய்வசபையினையே அருட்பிரகாச வள்ளலார் உத்தரஞான சிதம்பரமாகிய வடலூர்ப் பெருவெளியில் **1879** ஆம் ஆண்டில் நிறுவியருளினார்கள். வள்ளலார் நிறுவிய தெய்வசபையில், இயற்கை உண்மைத் தனிப்பெயரும் பொருளாய், இயற்கை விளக்கத் தனிப்பெரும் பதமாய், இயற்கை இன்பத் தனிப் பெருஞ்சுகமாய்ப் பிரிவின்றி நிறைந்த தன்மையராகிய அருட்பெருஞ்சோதி ஆண்டவரது வழிபாடு எல்லாச் சமயத் தார்க்கும் உரிய பொது வழிபாடு எல்லாச் சமயத்தார்க்கும் உரிய பொது வழிபாடாக நிகழ்ந்து வருவது இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தகுவதாகும்.*

*அருட்பெருஞ்சோதி - அருட்பெருஞ்சோதி*
*தனிப்பெருங்கருணை - அருட்பெருஞ்சோதி*

*எனவரும் இத் தொடரையே திருவருட்பிரகாச வள்ளலார் தாம் பரப்ப எண்ணிய சுத்த சன்மார்க்கத்திற்குரிய மந்திர மொழியாக அறிவுறுத்தியுள்ளார். இவ்வுண்மை வள்ளலாரின் பேருபதேசமாகிய உரைநடைப் பகுதியாலும், விண்ணப்பங்களாலும் அருட் பெருஞ்சோதி அகவலாலும் நன்கு தெளியப்படும். "தயவு கருணை அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும்; ஆதலால் பெரிய பெருந்தயவுடைய பேரறிவேயாம். இஃது வாச்சியார்த்தம் (சொல்லின் பொருள்) இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால் முடிவான இன்பாநு பவம் பெறுவதற்குத் தடையில்லை" "சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றின் அது தான் வந்து முற்றும் (தாயுமானவர் - கருணாகரக் கடவுள்) என்னும் பிரமாணத்தால் உணர்க" என*

வள்ளலார் தாம் அறிவுறுத்திய திருமந்திரத்தின் பொருளைச் சுருக்கமாக விளக்கியுள்ளமை காணலாம்.

அருளே திருமேனியாகக் கொண்ட இறைவனை அகத்தும் புறத்தும் பொருளாகக் கொண்டு இடைவிடாது நினைந்து போற்றும் அடியவர் உள்ளத்துள்ளே அம்முதல் வனது பெருங்கருணை வெள்ளம் அகத்தேயும் நிறைந்து புறத்தேயும் வெளிப்பட்டு உலகில் துன்புறும் உயிர்களது துயர்களைத் துடைக்கும் பற்றுக்கோடாய் விளங்கும் என்பது,

கருணைநிறைந்து அகம்புறமும் துளும்பி வழிந்
துயிர்க் கெலாம் களைகண் ஆகித்
தெருள் நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற
கண்ணுடையோய் சிதையா ஞானப்
பொருள் நிறைந்த மறையமுதம் பொழிகின்ற
மலர்வாயோய் பொய்ய னேன்றன்
மருள்நிறைந்த மனக்கருங்கற் பாறையுமுட்
கசிந்துருக்கும் வடிவத் தோயே! (திருவருட்பா 2070)

என அடிகள் அருளிய திருப்பாடலால் அறிவுறுத்தப் பெற்றுள்ளமை காணலாம். எல்லா அண்டங்களின் அகத்திலும் அவற்றைக் கடந்து அப்பாற்பட்டு அவற்றின் புறத்திலும் மன்னுயிர்களின் உள்ளத்திலும், ஒளியுருவாய்த் தோன்றி உலகின் புற இருளையும் உயிர்களின் அக இருளையும் நீக்கி அருள்புரியும் - பேரருளும் பேராற்றலுமுடைய இறைவன் பெருஞ்சோதியாகத் திகழ்கின்றான் என்னும் இவ் வுண்மையினை,

காரொளிய திருமேனிச் செங்கண்மாலும்
கடிக்கமலத் திருந்தவனும் காணாவண்ணம்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனை மயக்கம் தீர்க்கும்
ஏரொளியை இருநிலனும் விசும்பும் விண்ணும்
ஏழுலகும் கடந்தண்டத் தப்பால் நின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. (6-1-11)

எனவரும் பெரிய திருத்தாண்டகம் நன்கு புலப்படுத்தக் காணலாம். இதன்கண் செங்கண்மாலும் கடிக்கமலத் திருந்தவனும் (பிரமனும்) காணா வண்ணம் சீரொளிய தழற் பிழம்பாய் நின்ற தொல்லைத்

திகழ்ஒளியென்றது, எல்லாம் வல்ல இறைவன் அண்டத்தினுள்ளே ஒளியுரு வினனாய்த் திகழும் திறத்தைக் குறிப்பதாகும். இங்ஙனம் தோன்றும் ஒளியினை அண்ட ஒளி என்பர் பெரியோர். சிந்தைதனை மயக்கம் தீர்க்கும் ஏரொளி என்றது, கண்ணை மறைத்து நிற்கும் புற இருளைப் போலன்றி ஏனைய பொறி களையும் மறைப்பதாய், உயிர்களது அறிவு இச்சை தொழில்களையும் மறைந்து நிற்கும் ஆணவமாகிய அகவிருளைப் போக்கும் பொருட்டு உயிர்களின் சிந்தையில் தோன்றி நின்றருளும் திருவருள் ஒளியினை. உடம் பினகத்தே உயிர்களின் உள்ளே தோன்றும் இவ்வொளியினைப் பிண்ட ஒளி என்பர் பெரியோர். (பிண்டம் -உடல்), 'இரு நிலனும் விசும்பும் விண்ணும் ஏழுலகும் கடந்து அண்டத்து அப்பால் நின்ற பேரொளி' என்றது, அண்டங்களிலுள்ள ஞாயிறு விண்மீன் முதலிய எல்லாப் பொருள்களுக்கும் ஒளிவாங்குவதாய் அண்டங்களைக் கடந்து தோன்றும் பேரொளியினை. இதனை அகண்டவொளி என்பர் அறிஞர். இதன் இயல்பினை,

அண்டமாரிரு ளூடு கடந்தும்பர்
உண்டு போலுமோர் ஒண்சுடர் அச்சுடர்
கண்டிங் காரறிவார் அறிவாரெலாம்
வெண்டிங்கட் கண்ணி வேதியன் என்பரே. (5-97-3)

எனவரும் திருக்குறுந்தொகையில் திருநாவுக்கரசர் விளக்கியருளிய திறம் நினைந்து போற்றற் குரியதாகும். இங்ஙனம் எல்லாம் வல்ல இறைவன் தன்னிற் பிரிவிலா அருளையே திருமேனியாகக் கொண்டு உயிர்களின் அகத்திலும் அண்டங்களின் உள்ளும் புறமும் சோதிப் பொருளாகத் திகழும் திறத்தினை,

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர் விட்டுள்ள எங்கள் சோதி
மாதுக்கம் நீக்கலுறுவீர் மனம் பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே. (3-54-5)

எனவரும் திருப்பாசுரத்துள் ஆளுடைய பிள்ளையார் விளக்கி யுள்ளமை அறிதற் குரியதாகும். இத்திருப்பாசுரத்தில் "சுடர் விட்டுளன் எங்கள் சோதி" எனவரும் தொடரில் சுடர் என்றது அண்டத்தின் அகத்தும் புறத்தும் காணப்பெறும் ஒளியின் பரந்து திகழும் பருமை நிலையையும், சோதி என்றது, உயிர்களின் அகத்தே திகழும் நுண்மை நிலையையும் குறிப்பதாகும் எனக் கொள்ளுதல் பொருந்தும்.

*இத்திருப்பாசுரத் திருப்பாடலுக்கு உரை கூறப் புகுந்த சேக்கிழார் பெருமான் :-*

தோன்று காட்சி சுடர்விட்டுளன் என்பது
ஆன்ற அங்கிப் புறத்தொளியாய் அன்பின்
ஊன்ற உள்ளெழுஞ் சோதியாய் நின்றனன்
ஏன்று காண்பார்க் கிதுபொரு ளென்றதாம். (பெரிய - சம்பந்தர் - 825)

"மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம் பற்றும் என்பது
ஆதிச்சுடர்ச் சோதியை அன்பின் அகத்துள்ளாக்கிப்
போதித்த நோக்குற் றொழியாமற் பொருந்தி வாழ்ந்து
பேதித்த பந்தப் பிறப்பின்நெறி பேர்மின் என்றாம்." (பெரிய - சம்பந்தர் 826)

*எனவரும் செய்யுள்களால் இதன் பொருளைத் தெளிவுபடுத்தி யுள்ளார். சுடர் என்பது ஒளிப் பொருளின் புறத்தோற்றத் தையும், சோதி என்பது அதன் அகத்தோற்றத்தையும் குறிக்கும் நிலையில், இத்திருப் பாசுரத்தில் ஆளப் பெற்றுள்ளமை மேற்காட்டிய சேக்கிழார் வாய்மொழியாற் புலனாதல் காணலாம்.*

"சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே" (திருவாசகம்-அருட்பத்து -1)

*எனவரும் திருவாசகத் தொடரும் இப்பொருளில் ஆளப் பெற்றுள்ளமை காண்க.*

"இரந்திரந்துருக என்மனத்துள்ளே எழுகின்ற சோதியே"
(திருவா-கோயிற்-6)

*எனவரும் திருவாசகம் உயிர்களின் உள்ளத்தெழும் சோதியாய் இறைவன் விளங்கும் திறத்தைச் சுட்டி நிற்றல் காண்க. அன்பினாற் கசிந்துருகும் நெஞ்சத்தினராகிய அடியாருள்ளத்திலும் ஞானமயமான அம்பலத்திலும் ஒளியே பெருக எல்லாம் வல்ல இறைவன் எழுந்தருளியுள்ளான் என்பதனை,*

"உருகுதலைச் சென்ற உள்ளத்தும் அம்பலத்தும் ஒளியே
பெருகுதலைச் சென்று நின்றோன்" (திருக்கோவையார் - 104)

*எனவரும் திருச்சிற்றம்பலக் கோவையாரில் மணிவாசகப் பெருந்தகையார் விளக்கியுள்ளார்.*

*உலகில் உள்ள ஞாயிறு, திங்கள், தீ, விண்மீன்கள் ஆகிய சுடர்களுக்கெல்லாம் ஒளி வழங்குவது இறைவன் திருவடியாகிய அருள் ஒளியே என்பதனை,*

"மெய்ச் சுடருக் கெல்லாம் ஒளிவந்த பூங்கழல்
உத்தர கோச மங்கைக் கரசே." (திருவாச - நீத்தல் விண்ணப்பம் 15)

எனவரும் தொடரால் திருவாதவூரடிகள் விளக்கியுள்ளமை காணலாம்.

இவ்வாறு இறைவனை அகத்தும் புறத்தும் ஒளியுருவினனாக வைத்துப் போற்றும் வழிபாட்டு நெறியே இறைவன் ஆழநிழலில் அமர்ந்து அருந்தவ முனிவர் நால்வர்க்கும் அறிவுறுத்திய ஒளி நெறியாகும் என்பதனை,

"ஓரால் நிழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க்கு ஒளிநெறி காட்டினை" (1-12-6/8)

எனவரும் திரு எழுகூற்றிருக்கைத் தொடரில் ஆளுடைய பிள்ளையார் தெளிவுபடக் கூறியுள்ளமை காணலாம். இங்ஙனம் சோதிப் பொருளாக இறைவனைப் போற்றி வழிபடும் இவ் வொளிநெறியினையே திருவாதவூரடிகள் சிறப்பு வழிபாடாகக் கொண்டனர் என்பது,

"ஆதியும் அந்தமு மில்லா அரும்பெருஞ் சோதியை"

"கேழில் பரஞ்சோதி கேழில்பரங்கருணை"

"சோதியாய்த் தோன்றும் உருவமே."

என்றாங்கு வரும் திருவாசகத் தொடர்களால் இனிது விளங்கும். அறிவினாற் சிவனேயாகிய மாணிவாசகப் பெருந்தகையார் அருளிய திருவாசகத்தேனை இடைவிடாது பருகி இன்புற்ற இராமலிங்க வள்ளலார் வாதவூர் அடிகள் அறிவுறுத்திய சோதி வழிபாடே இக் காலத்தில் சமய வேறுபாடின்றி எல்லா மக் களையும் தம்பால் ஈர்க்கவல்லது என்னும் மெய்ம்மையைத் தெளிந்து 'அருட்பெருஞ்சோதி' அருட்பெருஞ்சோதி - தனிப் பெருங்கருணை அருட்பெருஞ்சோதி' என்னும் மெய்ம் மொழியைச் சோதி வழிபாட்டிற்குரிய திருமந்திரமாக அறிவுறுத் தருளிய திறம் இங்கு மனங்கொளத்தகுவதாகும் இம் மந்திரத்தில் அமைந்த அருட்பெருஞ்சோதி தனிப் பெருங்கருணை என்ற தொடர்கள் திருவாவூதரடிகள் அருளிய திருவெம்பாவை எட்டாம் திருப்பாடலில் உள்ள 'கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை' என்ற தொடரை அடியொற்றி அமைந்தனவாகும். கேழில் பரஞ்சோதி = ஒப்பு இல்லாத பெருஞ்சோதி, என்றது

ஆதியும் அந்தமுமில்லாத அரும்பெருஞ்சோதியாகிய கடவுளை, கேழில் பரங்கருணையென்றது, அம்முதல்வனினின்றும் பிரித்துணர வொண்ணாத திருவருள் விளக்கமாகிய சிவசத்தியை. எல்லாம் வல்ல இறைவன் அருளே உருவாகத் திகழும் தனிநிலையில் 'சிவம்' எனவும், தனது பேரருளின் விரிவாய் உலகுயிர்களில் எல்லாம் கலந்து நின்று அவற்றைத் தொழிற் படுத்தும் நிலையில் 'சத்தி' எனவும் திகழ்கின்றான் என்பர் பெரியோர். இந்நுட்பம்,

> கற்பனை கடந்தசோதி கருணையே உருவமாகி
> அற்புதக் கோலம்நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
> சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
> பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி
> (பெரிய-தில்லைவாழ் -2)

எனவரும் சேக்கிழாரடிகள் வாய்மொழியால் இனிது புலனாதல் காணலாம்.

இதுகாறும் கூறியவாற்றால் உலகெலாம் இயக்கியருளும் அருளே உருவாகிய இறைவன், அண்டங்கள் எல்லாவற்றிற்கும் அப்பாலும், அண்டத்தின் உள்ளும், ஆன்மாக்களின் அகத்திலும் சுடர்விட்டு விளங்கும் சோதியாய்த் திகழ்கின்றான் என்பதும், அருட்பெருஞ்சோதி ஆண்டவனாகிய அம்முதல்வனது தனிப் பெருங்கருணையே உலகுயிர்களை யெல்லாம் சூழ்ந்து தனது விரிவுக்குள் அடக்கிக் கொண்டு மன்னுயிர்களின் வாழ்க்கைக்குப் பற்றுப் கோடாக அமைந்துள்ளது என்பதும், எல்லாம் வல்ல சிவபரம் பொருளைச் சமயங் கடந்த நிலையில் ஒளிப் பிழம்பினனாகப் போற்றும் முறையில் அமைந்ததே திருச்சிற்றம் பலமாகிய தெய்வ சபை என்பதும் ஆகிய உண்மைகள் ஒருவாறு விளக்கப் பெற்றன. இவை திருமூலர் திருமந்திரம் முதலிய சைவத் திருமுறைகளிலும் தாயுமானவர் பாடல்களிலும் இடம் பெற்றுள்ளனவேயன்றிப் புதியன அல்ல. இவ்வுண்மைகளைத் திருவுளங் கொண்ட இராமலிங்க வள்ளலார் உலக மக்களை ஆண்டவன் திருவருளில் ஈடுபட்டு உய்திபெறச் செய்யும் முறையில்,

> அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
> தனிப் பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

என்னும் திருமந்திரத்தை மக்களுக்கு உபதேசித் தருளினார்.

தவமான சத்தியஞானப் பொதுவில்
துவமார் துரியஞ் சொருபமதாமே. (திருமந்திரம் - 25 38)

*எனத் திருமூலரும்,*

செப்பரிய சமயநெறி யெல்லாந் தந்தம்
தெய்வமே தெய்வமெனுஞ் செயற்கையான
அப்பரிசா ளருமஃதே பிடித்தா ரிப்பால்
அடுத்தஅந் நூல்களும் விரித்தே அநுமானாதி
ஒப்பவிரித் துரைப்ப ரிங்ஙன் பொய் மெய்யென்ன
ஒன்றிலை ஒன்றெனப்பார்ப்ப தொவ்வாதார்க்கும்
இப்பரிசாஞ் சமயமாய் அல்லவாகி
யாதுசமயமும் வணங்கும் இயல்பதாகி (தாயுமா - ஆகார -9)

இயல்பென்றும் திரியாமல் இயம மாதி
எண்குணமும் காட்டியன்பால் இன்பமாகிப்
பயனருளப் பொருள்கள் பரிவாரமாகிப்
பண்புறவுஞ் சௌபான பட்சங்காட்டி
மயலறு மந்திரஞ் சிட்சை சோதிடாதி
மற்றங்க நூல் வணங்க மௌன மோலி
அயர்வறச் சென்னியில் வைத்து ராசாங்கத்தில்
அமர்ந்தது வைதிகச் சைவம் அழகிதந்தோ (தாயுமா - ஆகார -10)

*எனத் தாயுமான அடிகளும் அருளிய திருப்பாடல்களால் சத்திய ஞானப் பொதுவாகிய சிதம்பரம் என்னும் சிற்றம்பலத்தின் இயல்பும், எல்லாம் வெளியே எனத் திகழும் அத் தெய்வ சபையினை எல்லாச் சமயத்தவரும் வந்து இறைஞ்சாநிற்பர் என்னும் உண்மையும் நன்குபுலப்படுத்தப் பெற்றுள்ளமை காணலாம். இவ்வாறு முன்னைய அருளாளர்களால் விளக்கப் பெற்றதும், சமய வேறு பாடின்றி எல்லாச் சமயத்தாரும் அன்பினாற் கூடியிருந்து வழிபாடு செய்தற் குரிய பொதுமை வாய்ந்ததுமாகிய தெய்வ சபையினையே வள்ளலார் உத்தரஞான சிதம்பரமான வடலூர்ப் பெருவெளியில் இற்றைக்கு **114** ஆண்டுகட்கு முன்னே நிறுவி யுள்ளார்கள் என்பது தமிழ் மக்கள் எல்லாரும் உளங்கொளத்தக்க செய்தியாகும்.*

*எனவே, வள்ளலார் கண்ட உத்தரஞான சிதம்பரத்து சத்தியஞானசபை வழிபாடு முன்னைப் பழமைக்கும் பழமைய தாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையதாய் விளங்கும் தனிச் சிறப்புடையது என்பது நன்கு தெளியப்படும்.*

# 3. ஆன்ம நேய ஒருமைப்பாடு

ஆன்ம நேய ஒருமைப்பாடு என்பது மன்னுயிர்த் தொகுதி யெல்லாவற்றையும் ஓர் இனமெனக் கருதி எல்லா உயிர்களிடத்தும் அன்புடையராயொழுகும் ஒருமையுணர்வின் இன்றியமையா மையைக் குறிப்பதாகும். ஆன்மா - உயிர்; நேயம்; அன்பு; ஒருமை; அன்பெனும் பாசத்தால் எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணும் மனத்தின் ஒருமைப்பாடு. உயிர் என்பது காட்சிக்குப் புலனாகாத அருவப்பொருள்; "காணாமரபிற்று உயிரென மொழிப" (தொல்-களவியல்-சூ-ந. உரைமேற்கோள்) என்பது பழம்பாடல். காணமுடியாத உயிரின் உண்மையைக் காணப்படும் அதன் உடம்பினைக் கொண்டுநாம் கருதியுணர் கின்றோம். உயிரோ உணருந்தன்மையது, உடம்போ உணர்வற்றது. உயிர் என்றும் அழியாதநிலை பேறுடையது. அது பற்றியே அதனை "மன்னுயிர்" என வழங்குகிறோம். உயிரினது நிலைக்களமாகிய உடம்போ அழியக் கூடியது, அறிவில்லாததும் அழியக் கூடியதுமாகிய இவ்வுடம்பிற்கும் அறிவுடையதும் நிலைபேறுடையதுமாகிய உயிருக்கும் உண்டாகிய தொடர்புக்குக் காரணம் யாது என்னும் ஐயம் எழுதல் இயல்பு. இங்ஙனம் தோன்றும் ஐயத்தினை நீக்கி உயிருக்கும் உடம்புக்கும் ஏற்பட்ட தொடர்பினை விளக்கு முறையிலமைந்தது "அன்போடியைந்த வழக்கென்ப, ஆருயிர்க்கு என்போடியைந்த தொடர்பு" (குறள்-78) என வரும் திருக்குறளாகும். காணாமரபினதாகிய உயிர்க்குக் காணப்படும் உடம்போடு உண்டாகிய தொடர்ச்சியினை அன்பென்னும் உயிர்ப்பண்பினை வளர்த்தற் பொருட்டு வந்த நெறியின் பயன் என்று சொல்லுவர் அறிந்தோர்' என்பது இதன் பொருளாகும். அருவாகிய உயிர்கள் உருவாகிய உடம்பினைப் பெற்றல்லது தம்முள் அன்பினை வளர்த்தல் இயலாமையால் அன்பாகிய உயிர்ப் பண்பினை வளர்த்தற் பொருட்டே அருவாகிய உயிர்க்கு உருவாகிய உடம்பு அளிக்கப்

பெற்றது என்பதாம். 'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி' என்றாங்குப் புல் முதல் மக்கள் ஈறாகிய உடம்புகள் உயிர்க்குப் படிகால் முறையாகப் படைத்து வழங்கப் பெற்றன என்பர் பெரியோர். இத்தகைய உயிரினத்தில் உயர்திணை எனப்போற்றப் பெறும் மன உணர்வினைப் பெற்ற மக்கட் கூட்டத்தார் இல்வாழ்க்கைக்கண் நின்று மனை, மக்கள், சுற்றம் நட்பு என எல்லோரிடத்தும் அன்புடையராய் வாழ்ந்ததின் பயனாகவே பேரின்பமாகிய வீடு பேற்றினைப் பெறுதற்குரியர் என்பது "அன்புற்றமர்ந்த வழக்கென்ப வையகத் தின்புற்றா ரெய்தும் சிறப்பு" (அன்புடைமை-5) எனவரும் திருக்குறளால் அறிவுறுத்தப் பெற்றது.

ஓரறிவுயிராகிய புல்முதல் ஆறறவு உயிராகிய மக்கள் ஈறாக எல்லா உயிர்களும் தாம் பெற்றுள்ள உடம்புகளால் வேறுபட்டுத் தோன்றினும், ஊழ்வினை காரணமாகப் பிறக்கும் பிறப்பு இயல்பினால் ஒத்த தன்மையுடையனவே என்பது' 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் (972) எனவரும் வள்ளுவர் வாய்மொழியால் நன்கு விளங்கும். உயிர்கள் செய்த நன்றும் தீதுமாகிய இருவினைப் பயன்களைச் செய்த உயிர்களே அனுபவிக்கும்படி வரையறுத்து ஊட்டுவது ஊழாகிய நியதி தத்துவமென்ப. இறைவனது ஆணையாகிய திருவருட் சத்தியெனப்படும் இந்நியதி காரண மாகவே உலகிற் பல்வேறு உயிர்களும் பல்வேறு உருவினைப் பெற்றனவாய், மாறிப் பிறந்து வருகின்றன' என்பர் சைவ சித்தாந்திகள். இவ்வாறு உயிர்த் தொகுதிகள் தாம் தாம் பிறக்கும் இடவகை யாலும் அவ்வப்பொழுது மேற்கொள்ளும் உடல் வகையாலும் வேறுபட்டனவாயினும், உணர்வுடைய பொருளாய் உயிரெனப் பேசப்படுந் தன்மையில் ஒற்றுமையும், உயிர்ப்பண்பாகிய அன்பின் தொடர்ச்சியினால் உறவும் உடையனவேயாம். இவ்வுண்மையைச் சங்க காலச் சான்றோர் தம் அநுபவத்தால் உணர்ந்து, ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கு வித்திட்டுள்ளார்கள். இந்நுட்பம்,

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவதன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே, மின்னொடு

வானம் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் றெரிந்தன மாதலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை இகழ்தல் அதனினு மிலமே (புறம் 192)

*எனவரும் கணியன் பூங்குன்றார் பாடலால் உய்த்துணரப்படும். வானத்தினுலவும் மேகம் பெருமழையைப் பெய்தமையால் உண்டாகிய வெள்ளப்பெருக்கு மலை முகட்டில் உள்ள கற்களை யலைத்துக்கொண்டு பேராறாக இழியும் நிலையினை யொத்தது உலகினை இயக்கும் பேராற்றலினால் முறைப்படுத்தப்படும் ஊழாகிய நியதி என்பதும், அவற்றினால் ஈர்த்துச் செல்லப்படும் மிதவை (தெப்பம்) போன்றது மன்னுயிர்த் தொகுதி என்பதும், ஊழின் வயப்பட்ட வுயிர்கள் உலகிற் பல்வேறு நாடுகளிலும், பல்வேறு இனங்களிலும், பிறந்தும், இறந்தும் உழன்று இருவினைப் பயன்களை நுதர்தலின், அவ்வுயிர்கட்கு யாதும் ஊரே, யாவரும் உறவினரே என்பதும் மக்கள் அடையும் நன்றும் தீதும் ஆகியன பிறரால் தரப்படுவன அல்ல. அவரவர் செய்த வினையின் பயனாகத் தாமே வருவன என்பதும், உலகிலேயே மக்கள் பெறும் உயர்வு தாழ்வுகட்கு அன்னோர் இயற்றிய இருவினையாகிய ஊழ் என்னும் முறைமையே காரணமாதலால் நல்வினையால் உயர்ந்த பெருமக்களை வியந்து புகழ் தலையோ, அன்றித் தீவினையால் தாழ்வுற்ற சிறியவர் களை எண்ணி இகழ்தலையோ மெய்யுணர்ந் தோராகிய தத்துவ ஞானிகள் ஒருபோதும் மேற்கொள்ள மாட்டார்கள் என்பதுமாகிய உண்மைகள் இப்பாடலில் தெளிவுபடுத்த பெற்றுள்ளமை காணலாம்.*

*படைப்புக் காலந் தொடங்கி மன்னுயிர்கள் ஊழ்வினை காரணமாகப் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு உடம்புகளிலும் பிறந்திருந்து அலமரு நிலையில், அவ்வுயிர்கட்கு யாதும் ஊராகவும், யாவரும் உறவினராகவும் அமைந்துள்ள திறத்தினை,*

அகில லோகமும் அனந்த யோனியும்
நிகிலமும் தோன்ற நீ நினைந்தநாள் தொடங்கி
எனைப்பல யோனியும் நினைப்பரும் பேதத்து
யாரும் யாவையும் எனக்குத் தனித்தனித்
தாயராகியும் தந்தையராகியும்

வந்திலாதவர் இல்லை யான் அவர்
தாயராகியும் தந்தைய ராகியும்
பிறவா நிலமும் இல்லை அவ்வயின்
இறவா நிலமும் இல்லை (11-ஆம் திருமுறை - திருக்கழுமலமும்மணிக்.7)

எனத் திருவெண்காட்டடிகள் விரித்துக் கூறியுள்ளார். இங்கெடுத்துக் காட்டிய பாடற் பகுதி "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனவரும் புறநானூற்று அடிக்குரிய உரைவிளக்கமாக அமைந்துள்ளமை காணலாம்.

உயிர்களுக்கு மறுபிறப்பு உண்டு என்னும் கொள்கையை உடன்பட்ட புத்த சமண சமயத்தாரும், இருவினைப் பயனால் இறந்தவுயிர் மீளவும் பிறக்குங்கால் வெவ்வேறு இடங்களிற் சென்று பிறக்கும் எனவும், அவ்வுயிரிடத்தே அன்பு செலுத்துவோர் அஃது எங்கே பிறந்தது என்று அறியமுடியாமையால் எல்லா உயிர் களிடத்திலும் அன்பு செலுத்துதல் வேண்டும் எனவும் கூறுவர். சோழ இளவரசனாகிய உதயகுமரன் என்பான், மாதவியின்மகள் மணிமேகலையை விரும்பி அவளைப் பின் தொடர்ந்து செல்லும் போது, துறவியாகிய அவள் காயசண்டிகை என்ற பெண்ணின் வடிவமுடையவளாக உருமாறினாள். காயசண்டிகையின் கணவனாகிய வித்தியாதரன் அவள் மணிமேகலை என்பதை அறியாமல் தன் மனைவி காயசண்டிகையே என எண்ணி அவளைத் தொடர்ந்து வந்த உதயகுமரனை வாளால் வெட்டி வீழ்த்தினான். அதனைக் கேட்ட சோழ மன்னன் தன்மகன் இறந்ததற்குச் சிறிதும் வருந்தாமல், மணிமேகலையைச் சிறையில் வைத்தான். தன் புதல்வனை இழந்த அரசமாதேவி தன் மகன் இறந்ததற்குக் காரண மாயிருந்த மணிமேகலையை இனி உயிரோடு வைக்கமாட்டேன் எனச் சினமுற்று மணிமேகலையைச் சிறையினின்றும் விடுவித்து, அவளைப் புழுக்கறையில் அடைத்துப் பலவாறு துன்புறுத்தினாள். தான் பெற்ற மந்திர ஆற்றலால் அத்துன்பங்களை யெல்லாம் பொறுத்துக் கொண்ட மணிமேகலை, சிறிதும் மாற்றமின்றிக் காணப்பட்டாள். அதனைக் கண்டு வியந்த அரசமாதேவி நடுக்க முற்றவளாய், என்மகனை இழந்த துன்பத்தால் உனக்கு இத்தகைய கொடுமைகளைச் செய்தேன். இவற்றைப் பொறுத்தருளவேண்டும் என மணிமேகலை சென்ற பிறப்பில் நீலபதியின் வயிற்றில் தோன்றிய "இராகுலன்" என்பவனைத் திட்டிவிடம் என்ற பாம்பு

*தீண்ட அவன் இறந்த பொழுது, அவன் மனைவியாக இருந்த யான் அத்துயரத்தைப் பொறாது தீயிற் பாய்ந்து உயிர் துறந்தேன் அவ் விராகுலனே இப்பிறப்பில் உனக்கு மகனாக வந்த உதயகுமாரனாவான். அவன் முன்பிறப்பில் பாம்பு தீண்டி இறந்தபொழுது அவனது பிரிவாற்றாது யான் தீப்பாய்ந்து உயிர் விட்ட அந்நாளில் இளங்கோவாகிய அவன் பொருட்டு அரசியாகிய நீ எங்கிருந்து அழுதாய்? அப்போழுது அவனுக்கும் உனக்கும், மகன் - தாய் என்னும் உறவு முறைமை இன்மையின் அழாதிருந்தாயல்லவா? பூங்கொடி போல்பவளே! இப்பொழுது அவன் உன் மகனாகிய நிலையில் இறந்த பொழுது பிற உயிர்க்குத் தீங்கு செய்தலாகிய பொருந்தாத செயல்களைச் செய்துவிட்டாய். இனி நீ நின்மகனது உடலை நினைந்து அழுதாயா? அல்லது அவனது உயிரை நினைந்து அழுதாயா? உடலை நினைந்து அழுதாயானால் அவனது உடம்பையும் (எண்ணெய் முதலிய பாதுகாப்புப் பொருளில்) பேணிவைக்காமல் அதனை இடு காட்டில் இட்டவர்கள் யார்? இல்லை, உயிரை நினைந்து அழுதாயானால் அவ்வுயிர் சென்று புகும் உடம்பு அவ்வுயிர் செய்த வினைப்பயனால் பெறுவதாதலின் யாராலும் தெரிந்து காணுதற்கரியதாகும். அவ்வுயிர்க்கு, உண்மையான அன்பினைச் செலுத்துவாயானால், அவ்வுயிரோடு தொடர்புடைய எல்லா உயிர்களிடத்திலும் இரக்கமுள்ளவளாய் அன்பு செலுத்துதல் வேண்டும். என ஆன்மநேய ஒருமைப் பாட்டுணர்வினை அறிவுறுத்துவதாக அமைந்தது,*

யாங்கிருந் தழுதனை யிளங்கோன் றனக்குப்
பூங்கொடி நல்லாய்! பொருந்தாது செய்தனை
உடற்கழுதனையோ? உயிர்க்கழுதனையோ?
உடற்கழு தனையேல் உன் மகன் தன்னை
எடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே!
உயிர்க்கழுதனையே லுயிர் புகும் புக்கில்
செயப்பாட்டு வினையால் தெரிந்துணர்வரிய
தவ்வுயிர்க் கன்பினை யாயினாய்தொடி
எவ்வுயிர்க் காயினு மிரங்கல் வேண்டும்.

(மணிமேகலை - சிறைவிடுகாதை 61-71)

*எனவரும் மணிமேகலைத் தொடராகும்.*

ஆருயிர்களிடத்திலே செலுத்தும் அன்பு எவ்வுயிர்கட்கும் உயிராகிய சிவபரம் பொருளிடத்தும் சென்று சேரும் இயல்பின தாகும். உயிர்ப் பண்பாகிய அன்புக்கும், உயிர்க்குயிராகிய சிவத்துக்கும் உள்ள பிரிக்கமுடியாத அன்பின் தொடர்பினை யுணர்த்துவது,

“அன்பு சிவமிரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே” (திருமந்திரம்.270)

எனவரும் திருமந்திரமாகும்.

இறைவனையடைவதற்குச் சாதனமாகிய அன்பும் அதனால் அடையத்தகும் பயனாகிய சிவமும் என அன்பையும் சிவத்தையும் இருவேறு, பொருளாகப் பிரித்துரைப்பர் அவற்றின் இயல்பினை உள்ளவாறு அறியாதார். உயிர்களிடத்துக் காணப்படும் அன்பே சிவ பரம்பொருளின் விரிந்த விளக்கமாகும் என்பதை எத்துணை யறிஞர்களும் உள்ளவாறு அறியமாட்டாராயினர். உயிர்ப் பண்பாகிய அன்பே சிவத்துவ விளக்கமாகும் என்னும் இம் மெய்மையினை யாவரும் (அனுபவத்தால்) அழுந்தி அறிந்த பின்னர் அன்னோர் எவ்வுயிரிடத்தும் விரிந்து விளங்குவதாய்த் தம்பால் நிலைபெற்ற அன்பே சிவமாகி விரிந்து தோன்ற அத்தகைய சிவத்தின் வியாபகத்துள்ளே (விரிவினுள்ளே) அன்புருவாய்ப் பிரிப்பின்றி அமர்ந்திருந்தார்கள் என்பது இத்திருமந்திரத்தின் பொருளாகும்.

எவ்வுயிரும் நீங்காதுறையும் இறையாகிய சிவத்தின் விரிந்த விளக்கமே உயிர்களிடத்துக் காணும் அன்பாகிய பண்பென உணர்ந்து அன்புருவாகிய பரமசிவனிடத்தே நீங்காத பேரன் புடையராய் வழிபட்டு ஒழுகுவோரே எல்லா உயிர்க்கும் அன்புடையார் தமக்கும் அன்புடையார் ஆவர். இவ்வுண்மையை உணராதார் அன்பு சிவம் என்பன தனித்த இரு வேறு பொருள்கள் எண்றெண்ணிப் பிழைபடப் பேசுவார் என்பார், “அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்” என்றார்.

உயிர்க்குணமாகிய அன்பு என்பது சிவபரம் பொருளின் திருவுருவ விளக்கமேயன்றி அதனின் வேறாய பிறிதொரு பொருளன்று என்பார், “அன்பேசிவமாவது” என்றார். ஈறிலாப்

*பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே என்னுடை அன்பே; "அன்பினில் விளைந்த ஆரமுதே" என்பன திருவாசகம். சிவத்துவ விளக்கமாகிய அன்பினைப் பெருக்குவதற்கே உயிர்கட்கு என் போடியைந்த இவ்வுடம்பு கொடுக்கப் பெற்ற தென்பது,*

அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு (73)

*எனவரும் பொதுமறையாற் புலனாகும்.*

மகிழ்தி மடநெஞ்சே மானுடரில் நீயும்
திகழ்தி பெருஞ்சேமஞ் சேர்ந்தாய் - இகழாதே
யாரென்பே யேனும் அணிந்துழல்வார்க் காட்பட்ட
பேரன்பே யின்னும் பெருக்கு. (அற்புத -31)

*எனவரும் காரைக்கால் அம்மையார் அருளிச் செயலும்,*

'அழலார் வண்ணத் தம்மானை அன்பிலணைத்து வைத்தேனே'

*எனவரும் அப்பர் (4-15-7) அநுபவமொழியும் இங்கு ஒப்பு நோக்கி உணரத்தக்கனவாகும். அன்பு என்பது சிவத்துவ விளக்கமே என்பதும் அவ்விளக்கத்தை முழுவதும் பெற்றோர் சிவத்தோடு பிரிவின்றி யுடனாம் வீடு பெற்றினைப் சிவத்தோடு பிரிவின்றி யுடனாம் வீடு பேற்றினைப் பெற்றவராவார் என்பதும் உணர்த்துவார், 'அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின் அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே' என்றார். தெளிவு பற்றி அமர்ந்திருந்தார் என இறந்த காலத்தாற் கூறினார். இங்கு அறிதல் என்பது அழுந்தியறிலாகிய அநுபவத்தினை.*

முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான
அன்பினை எடுத்துக்காட்ட அளவிலா ஆர்வம்பொங்கி
மன்பெருங் காதல்கூர வள்ளலார் மலையை நோக்கி
என்புநெக்குருகி யுள்ளத் தெழுபெரு வேட்கையோடும்
(பெரிய புராணம் - கண்- 102)

நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏறத்தாமும்
பேணுதத்துவங்கள் என்னும் பெருகு, சோபானம் ஏறி
ஆணையாஞ் சிவத்தைச்சார அணைபவர் போலஐயர்
நீணிலை மலையை ஏறி நேர்படச் செல்லும் போதில்
(பெரிய கண்ணப்பர் 103)

பொங்கிய ஒளியினீழல் பொருவிலன் புருவமானார்
(பெரிய கண்ணப்பர் 104)

"முன்னைப் பிறதுறை வேட்கை நீங்கி
அன்பு கொண்டுய்ப்பச் செல்லும் அவர்" (பெரிய கண்ணப்பர் 114)

சார் வருந்தவங்கள் செய்து முனிவரும் அமரர் தாமும்
கார்வரையடவி சேர்ந்துங் காணுதற்கரியர் தம்மை
ஆர்வமுன் பொங்க ஆரா அன்பினிற் கண்டு (பெரிய கண்ணப்பர் 128)

முன்பு திருக்காளத்தி முதல்வனார் அருள்நோக்கால்
இன்புறு வேதகத்திரும்பு பொன்னானாற் போல் யாக்கைத்
தன் பரிசும் வினையிரண்டும் சாருமல மூன்று மற
அன்பு பிழம்பாய்த் திரிவார் அவர் கருத்தின் அளவினரோ
(பெரிய கண்ணப்பர் 154)

*எனவரும் சேக்கிழார் வாய்மொழிகள் அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரது இயல்பினை உள்ளவாறு உணர்த்துதல் காணலாம்.*

ஈசனுக்கன்பில்லார் அடியவர்க் கன்பிலார்
எவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்கு மன்பிலார்
பேசுதென் அறிவிலாப் பிணங்களை நாமிணங்கிற்
பிறப்பினினும் இறப்பினினும் பிணங்கிடுவர் விடுநீ
(சிவஞானசித்தியார் பக்கம் - 323)

*எனவரும் அருள்தந்தி சிவனார் வாய்மொழியும் இங்கு நோக்கத் தகுவதாகும்.*

*"ஈசனுக்கன்பில்லார், அடியவர்க்கன்பிலார், எவ்வுயிர்க்கு மன்பிலார் தமக்குமன்பிலார்" என மேற் காட்டிய சித்தியார் தொடர், சிந்தனைக் கெட்டாத சிவபரம் பொருளைச் சிந்தனைக்குரிய பொருளாகக் கொண்டு வழிபடும் கால் "மாலறநேயம்" "மாலறநேயம் மலிந்தவராகிய அடியார் திருவேடமே அன்பினால் வழிபடத் தக்கது. ஆதலின் திருவேடமே அன்பினால் வழிபடத்தக்கது. ஆதலின் அடியாரிடத்து உண்மை யன்பு செலுத்தாதவர்கள் இறைவனிடத்தும் உண்மையான அன்பில்லாதவர்கள், ஆகவே தம்மிடத்தும் உண்மையான அன்பில்லாதவர்களே" என்னும் உண்மையினை வலியுறுத்தும் முறையில் அமைந்ததாதலின்,*

"அடியவர்க் கன்பில்லார், ஈசனுக் கன்பில்லார், எனவே எவ்வுயிர்க்கும் அன்பிலார் தமக்கும் அன்பில்லார்" என முடித்துக்கூறும் நிலையில் இத்தொடருக்குப் பொருள் காண்பார் முன்னையோர். மகவெனப் பல்லுயிரனைத் தையும் ஒக்கப் பார்க்கும் செல்வக் கடவுள் தொண்டராகிய அடியார்களிடத்தே செலுத்தும் அன்பானது அவர்தம் உயிர்க்குயிராய் உள் நின்ற ஈசனிடத்தும் அவ்வடியார்களால் பேணிக்காக்கப்படும் ஆருயிர்களிடத்தும் இருபாலும் ஒப்பச் செல்லும் என்பதை அருணந்திசிவனார் இத்தொடராற் புலப்படுத்தியுள்ளமை காணலாம். அடியாரிடத்துச் செலுத்தும் அன்பே ஆருயிர்களிடத்தும் செல்லும் என்னும் இக்குறிப்பினால் அருளாளர்களது உள்ளத்திலிருந்தே ஆன்ம நேய ஒருமைப் பாட்டுணர்வு தோன்றும் என்னும் உண்மை புலப்படுத்தப் பட்டமை இங்கு நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

எவ்வுயிர்க்கும் உயிராய், அன்பே உருவாய்த் திகழும் சிவபரம் பொருளிடத்தே உண்மையான அன்பினைச் செலுத்த எண்ணுவோர் அப் பரம்பொருள் எழுந்தருளியுள்ள கோயில்களாகத் திகழும் ஆருயிர்களிடத்திலே உண்மையான அன்பினைச் செலுத்துதல் வேண்டுமென அறிவுறுத்துவது,

'எவ்வுயிரும் நீங்காது உறையும் இறை சிவமென்று
எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' (சைவசமயநெறி)

எனவரும் முன்னைச் சான்றோர் வாய்மொழியாகும்.

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே!" (தாயு- பராபரக்கண்ணி 65)

எனவரும் தாயுமானவர் பாடலும் இக்கருத்தை வலியுறுத்தல் காணலாம். மேற் குறித்த வண்ணம் தாம் பெற்ற தெய்வ அருட்கருணையால் 'ஆருயிர்கட்கெலாம் நான் அன்பு செயல் வேண்டுனெ' இறைவனை இறைஞ்சி எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணும் தபோதனருள் ஒருவராகிய அருட்பிரகாசவள்ளலார், இக்கால மக்கள் உய்தி பெறும் நிலையில் அறிவுறுத்திய செந்நெறிக் கொள்கையே' "ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையாகும். இத்தகைய ஒருமைப்பாட்டின் விளக்கமாக அமைந்தன.

உயிரெலாம் ஒருநீ திருநடம் புரியும்
ஒருதிருப் பொது என அறிந்தேன்
செயிரெலாம் தவிர்ந்தேன் திருவெலாம் அடைந்தேன்
சித்தெலாம் வல்லதொன் றறிந்தேன்
மயிரெலாம் புளகித் துளமெலாம் கனிந்து
மலர்ந்தனன் சுத்தசன்மார்க்கப்
பயிரெலாம் தழைக்கப் பதியெலாம் களிக்கப்
பாடுகின்றேன் பொதுப்பாட்டே! (திருவருட்பா - 5426)

எவ்வுயிரும் பொதுவெனக் கண்டிரங்கி உப
கரிக்கின்றார் யாவர் அந்தச்
செவ்வியர்தம் செயலனைத்தும் திருவருளின்
செயல் எனவே தெரிந்தேன் இங்கே
கவ்வை இலாத் திருநெறி அத்திருவாளர்
தமக்கேவல் களிப்பால் செய்ய
ஒவ்வியதென் கருத்தவர் சீர் ஓதிடஎன்
வாய்மிகவும் ஊர்வ தாலோ (திருவருட்பா - 5296)

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம் உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம் பெருமான் நடம்புரியும்
இடம் என நான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தை மிக விழைந்த தாலோ. (திருவருட்பா -5-98)

எவ்வுயிர்த்திரளும் என்னுயிரனவே
எண்ணிநல் இன்புறச் செயவும்
அவ்வுயிர்களுக்கு வரும் இடையூற்றை
அகற்றியே அச்சநீக்கிடவும்
செவ்வையுற் றுனது திருப்பதம் பாடிச்
'சிவ சிவ' வென்று கூத்தாடி
ஒவ்வுறுகளிப்பால் அழிவுறாதிங்கே
ஓங்கவும் இச்சை காண் எந்தாய் (திருவருட்பா 3403-)

*எனவரும் திருவருட்பாப் பனுவல்களாகும்.*

## 4. உயிரிரக்கம்

உலகிற் பேணுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்றவர்கள் இப்பிறப்பினால் அடையத்தக்க பயனைக் காலம் உள்ளபோதே அறிந்து அடைதல் வேண்டும் என்பது இராமலிங்க வள்ளலாரது பெருவேட்கையாகும். எல்லா வுலகங்களையும் எல்லாப் பொருள் களையும் எல்லாவுயிர்களையும் எங்கும் நிறைந்த இயற்கை விளக்க மாகிய தனது அருள் என்னும் சத்தியால் தோன்றி விளங்க விளக்கஞ் செய்விக்கும் முழுமுதற் பொருளே கடவுள். உண்மையறிவின்ப வடிவினராகிய கடவுளின் முழுநிறைவாகிய இயற்கை யின்பத்தைப் பெற்றுத் தம்முடைய விழைவு அறிவு செயல் என்பன எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் தடைபடாமல் நிகழ வாழ்கின்ற ஒப்பற்ற பெருவாழ்வை அடைவதே மக்கட் பிறவியால் ஒவ்வொரு வரும் அடைதற்குரிய பெரும் பயனாகும். உலக மக்கள் தமது உயிர்க்குயி ராகிய கடவுளின் திருவருளைத் துணையாகக் கொண்டல்லது மேற்குறித்த பெரும்பயனை அடைதல் இயலாது என்னும் மெய்யுணர்வு கைவரப்பெற்ற வர்களே இவ்வுலகில் அருட்பருவ வளர்ச்சியைப்பெற்ற அருளாளராவர்.

உலகெலாம் இயக்கும் அருட்பெருஞ்சோதியாகிய இறை வன் ஓரறிவுயிராகிய புல்முதல் ஆறறிவுயிராகிய மக்கள் ஈறாக எல்லாவுயிர்களிலும் நீங்காது எழுந்தருளியுள்ளான். மக்கள் அம்முதல்வனது திருவருளைப் பெறவேண்டுமானால் இறைவனது அருள்விளக்கத்திற்கு நிலைக் களமாகத் திகழும் எல்லாவுயிர் களிடத்திலும் நீங்காத அன்புடையராய் உலகியலில் உயிர்கள் படுந்துயரத்திற்கு உளம் இரங்கியும் அவற்றின் துயர்களைத் துடைத்தும் நலம்புரியும் சீவகாருணிய ஒழுக்கத்தினை மேற்கொள்ளுதல் இன்றி யமையாததாகும்.

இவ்வுலகிற் பசியினாலும் நோயினாலும் பகையினாலும் மன்னுயிர்கள் படுந் துயரங்களை நேரிற் கண்டிருந்தும் அவற்றைப் போக்கும் வழிகளை ஒருசிறிதும் நினையாது தமது உயிர்வாழ்க்கை ஒன்றனையே இனிதெனக் கருதி வாழ்வார் மிகப் பலர், யார் எக்கேடு கெட்டால் நமக்கென்ன? நாம் மட்டும் சுகமாக வாழ்ந்தாற்போதும் என்று தன்னலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு எவ்வகை யிலும் பிறர்க்குப் பயன்படாது வாழ்வோர் எத்துணைப் பேரறிவும் பேராற்றலும் பெருஞ்செல்வமும் உடையராயினும் அவர்கள் பெற்றுள்ள அறிவும் ஆற்றலும் செல்வமும் முதலாயின உயர்திணை மாந்தராகப் பிறந்துள்ள அவர்தம் மக்கட் பண்பின் வளர்ச்சிக்கோ அன்றி அவரைச் சூழ்ந்துள்ள மக்கட் குலத்தாரது நல்வாழ்வுக்கோ ஒருசிறிதும் பயன்படுவதில்லை. இவ்வாறு ஒருவாற்றானும் பிறர்க்குப் பயன்படாத இன்னோரது பேதைமை நிலையினை யெண்ணி இரங்குவதாக அமைந்தது.

"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்னோய்போற் போற்றாக்கடை" (315)

எனவரும் திருக்குறளாகும். இராமலிங்க வள்ளலார் அருளிய திருவருட்பா அறிவுறுத்தும் அறங்கள் பலவற்றுள்ளும் தலை சிறந்து விளங்குவது சீவகாருணிய ஒழுக்கம் சீவன் - உயிர், காருணியம் - என்பது பிறவுயிர்கள் படும் துன்பத்தினைக் கண்டால் அறிவுடைய நன் மக்களுள்ளத்திலே இயல்பாகத் தோன்றும் இரக்கவுணர்வு காரணமாகப் பிற உயிர்களின் துயரங்களைப் போக்குதற்கு முற்பட்டு முயலும் கருணைத்திறம், கொல்லாமை, புலாலுண்ணாமை; ஏழைகளின் பசிதீர்த்தல் என்னும் மூவகையறங்களையும் உள்ளடக்கியதே சீவகாருணிய ஒழுக்கமாகும்.

காணா மரபினவாகிய உயிர்களுக்குக் காணுதற்குரிய உடம்புகள் படைத்தளிக்கப் பெற்றதன் நோக்கம் எல்லா உயிர்களும் தம்மையொத்த மன்னுயிர்களை உணர்ந்து அன்பு செலுத்துதற் பொருட்டேயாம் என்பதும், அவ்வாறு உயிர்கள்பால் அன்பு செலுத்தும் உணர்வுரிமை மன உணர்வு பெற்ற மக்கட் குலத்தார்க்கே நன்கு அமைந்துள்ள தென்பதும் ஆகிய உண்மையினை ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமை என்ற தொடரில் அருட் பிரகாச வள்ளலார் தெளிவாகப் புலப்படுத்தி யுள்ளார்கள். நன்றும் தீதும் பகுத்துணர வல்ல மாந்தர்கள் தம் இனத்தார் படும் துயரங்களையும்

தம்மினும் தாழ்ந்த விலங்கு பறவை முதலிய அஃறிணை உயிர்கள் படும் துன்பத்தையும் கண்டு அத்துன்பங்களைக் களைதற்குரிய அருள் முயற்சியாகிய இரக்க உணர்வினைப் பெறுதல் வேண்டு மென்பது வள்ளலார் அறி வுறுத்திய உயிர் இரக்கமாகிய ஒழுக்க நெறியின் குறிக்கோளாகும். இத்தகைய அருளுணர்வு உயிர்க் குயிராகிய தெய்வத்தின் திருவருள் பெற்றோர்க்கே உள்ளத்தில் கருணையாக நிறைந்து பிற உயிர்கள் படும் துனபத்தைத் துடைக்க வல்ல பேராற்றலை மக்களுக்கு வழங்குவதாகும்.

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே" (தாயு. பரா-கண்ணி 5)

எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணும் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தை வைப்ப தெந்நாளோ
(தாயு-பரா. எந். கண்ணி. 12)

எனத் தாயுமானப் பெருந்தகையார் எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல் எண்ணி அவ்வுயிர்கள் படும் துயரத்துக்கு உளம் இரங்கி அவற்றின் துன்பங்களைத் துடைக்க முற்படும் கருணைத் திறமாகிய உயிர் இரக்கவுணர்வினை இறைவனது திருவருளால் பெறுதல் வேண்டுமென்பதனை நன்கு வலியுறுத்தியுள்ளார்.

இத்தகைய உயிர் இரக்க உணர்வு இறைவனது திருவருள் ஒன்றினாலேயே பெறுதற்குரியது என்பதனை மகா தேவ மாலையில் "கருணை நிறைந்து அகம்புறமும் துளும்பி வழிந்து உயிர்க்கெலாம் களைகணாகித்தெருள் நிறைந்த இன்ப நிலை வளர்க்கின்ற கண்ணுடையோய்" என இறைவனைப் போற்று முகத்தால் வள்ளலார் அறிவுறுத்தி யுள்ளமை காணலாம்.

உயிர்க்குயிராகிய கடவுளின் இயற்கை விளக்கமே அருள் எனப்படும். "அருள் என்பது தொடர்பு பற்றாது (உறவு முறை கருதாது) இயல்பாக எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை" என விளக்கம் தருவர் பரிமேலழகர். செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்தெடுக்கப் பெற்ற சிறப்புடைய செல்வமாவது அருளால் வரும் செல்வமே; ஏனைப் பொருளால் வரும் செல்வங்களோ இழிந்தாரிடத்தும் உள்ளன. மன்னுயிர்களை ஓம்பி அவ்வறத்தினால் மேம்படுதலாகிய அருட்செல்வம் அறிவொழுக்கங்களாற் சிறந்த உயர்ந்தோரிடத்திலேயே நிலைத்து நிற்கும். ஆதலால், அவ்வருளால்

வரும் செல்வமே எல்லாச் செல்வங்களிலும் சிறப்புடைய செல்வ மாகும் என அறிவுறுத்துவது,

"அருட் செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள" (குறள் 241)

எனவரும் திருக்குறளாகும்.

பிறரை ஏவும் முறையில் நீண்ட ஆணைமொழிகளைப் பேசுதலும் தாம் விரும்பிய இடங்களுக்கு நினைத்த மாத்திரத் திலேயே விரைந்து செல்லுதற்குரிய ஊர்திகளை ஏறிச் செலுத்துதலும் செல்வத்தின் பயனென எண்ணி நுண்ணுணர்வு இல்லாதார் பிறர்க்கு உதவி செய்யாது தமது வாழ்க்கையை வீணேகழிப்பர். அன்பு, நாண், ஒப்புரவு கண்ணோட்டம், வாய்மை என்னும் பண்பினால் நிறைந்த சான்றோர்கள், தம்மையடைந்தவர்கள்படும் துயரத்துக்கு அஞ்சி அவர்கட்கு வேண்டுவன அருளும் உயிர் இரக்கமாகிய பண்பினையே பெருஞ் செல்வமாகக் கொண்டு மன்னுயிர்களின் துயரங்களைப் போக்குதலே தம்முடைய வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்வார்கள். இவ்வுண்மையைச் சங்கத் தமிழ்ச் சான்றோர் ஒருவர் நற்றிணைப் பாடலொன்றில் தெளிவாக விளக்குகின்றார்.

தன் பிரிவினால் வருந்தும் தலைவியின் துயரத்தை உணராது புறத்தொழுக்கம் ஒழுகும் தலைவனைத் தோழி கண்டித்துரைப்ப தாக அமைந்தது,

அரிகால் மாறிய அங்கண் அகன்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவயின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாணர் ஊர
நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வமன்று தம் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வ மென்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே. (நற்றிணை - 210)

எனவரும் நற்றிணைச் செய்யுளாகும்.

"நெல்லின் அரிந்ததாளாகிய அடிப்பகுதி மறு உழவால் மாறிய அழகிய இடமகன்ற வயலிடத்தே மறுசால் உழுததினால்

ஈரம் உலராத அவ்வயற் பகுதியிலே விதைத்தற் பொருட்டு விதைகளைக் கொண்டு செல்லப்பட்ட கூடைகள் பல்வேறு வகைப்பட்ட மீன்களைக் கொண்டு மீளும் புதுவருவாய் நீங்காத மருதநிலத்து ஊரின் தலைவனே! பிறரை ஏவல் கொள்ளும் நிலையில் நீண்ட ஆணை மொழிகளைக் கூறுதலும், விரைந்து செல்லும் ஊர்திகளை ஊர்ந்து செலுத்துவதும் உயர்ந்த செல்வமெனக் கருதப்படமாட்டா. அவை தாம் தாம் செய்த தொழிற் பயனால் நுகரும் நுகர்ச்சியேயாகும். பண்பால் நிறைந்த சான்றோர் நுகரும் நுகர்ச்சியேயாகும். பண்பால் நிறைந்த சான்றோர்களால் உயர்ந்த செல்வமெனக் கூறப்படுவது, தம்மைச் சேர்ந்தோரது துன்பத்தைக் கண்டு அஞ்சும் பண்போடு கூடிய அருளுடைமையாகிய செல்வம் ஒன்றேயாகும். அதுவே எல்லாச் செல்வங்களுக்கும் மேலான சிறப்புடைய செல்வமாகும்" என்பது இப்பாட்டின் பொருளாகும்.

தன்னையடைந்தவர்களுடைய துன்பத்தைக் கண்டு இரங்கித் துயர் துடைக்க முற்படும் அருளுடைமையாகிய செல்வமே சான்றோர்களால் செல்வமென மதிக்கப்படுவது என்னும் இவ் வுண்மையினை 'மிளை கிழான் நல்வேட்டனார்' என்னும் புலவர் மேற்காட்டிய நற்றிணைப் பாடலில் வற்புறுத்தியுள்ளமை காணலாம்.

கணவனும் மனைவியுமாக அன்பினாற் கூடி வாழ்ந்தார் உறவுமுறை முதலிய தொடர்பு நோக்காது எல்லா உயிர்களிடத்தும் இரக்கமுடையராய் வாழும் அன்பின் முதிர்ச்சியே அருளாகும். "அருளென்னும் அன்பீன் குழவி" என்றார் தெய்வப்புலவரும். கணவனும் மனைவியுமாகக் கூடிவாழும் இருவர்க்கும் உரியனவாகக் கூறப்படும் பிறப்பு முதலிய பத்துவகைப் பொருத்தங்களுள் உயிரிரக்கமாகிய அருட்பண்பும் ஒன்றாகும் என ஆசிரியர் தொல்காப்பியனார் அறிவுறுத்தியுள்ளார்.

தன் ஆருயிர்த்தலைவியைப் பிரிந்து மன்னனுக்குத் துணையாய் வினைவயிற் சென்ற தலைவன், அத்தொழில் நிறைவேறிய நிலையில் தலைவியின் பிரிவுத்துன்பத்தை நீக்குதற் பொருட்டுத் தேரில் ஏறி விரைந்து வருகின்றான். அவ்வாறு வரும்போது வழியிடையே அமைந்த காடுகளிலே மலர்களில் உள்ள தேனைப்பருகி ஆணும் பெண்ணுமாகக் கூடி இன்புற்றிருக்கும் வண்டுகளின் அன்பின் நிலையை எண்ணிப் பார்க்கின்றான். மணிகட்டிய தன் தேர் அக்காட்டின் வழியே விரைந்து செல்லுமானால் தன் தேரில் கட்டிய

மணிகளின் பேரொலியின் அதிர்ச்சியினால் அவ்வண்டுகள் துன்புறுமே எனச் சிந்திக்கின்றான். தன்னுடைய தேரின் ஆரவாரம் காட்டில் உள்ள வண்டுகளாகிய சிற்றுயிர்களுக்கு அதிர்ச்சியைத் தந்து துன்பம் விளைக்காதவாறு தன்தேரிற் கட்டிய மணியின் நாவினை ஒலியெழாதபடி கயிற்றால் பிணித்துக் கட்டிக் காட்டின் வழியே செல்கின்றான். இவ்வாறு வண்டுகளாகிய சிற்றுயிர்க்கும் துன்பம் விளையாதவாறு உயிரிக்க உணர்வுடையோனாய்த் தேரில்வரும் தலைமகனது அருள் விளக்கத் தோற்றப் பொலிவினைத் தோழி அவனது ஆருயிரனைய தலைவிக்குப் புலப்படுத்தும் நிலையில் அமைந்தது,

"பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா வார்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் தோன்றும் குறும்பொறை நாடன்" (அகநானூறு 4)

எனவரும் அகநானூற்றுப் பாடற்பகுதியாகும்.

இத்தொடர், ஒத்த அன்புடைய காதலராகிய தலைவன் தலைவி யென்னும் தலைமக்கள் அனைவர்க்கும் பிறவுயிர்களின் துன்பந்துடைக்க முற்படும் உயிரிரக்கவுணர்வு இன்றி யமையாதது என்பதனை அறிவுறுத்தும் நிலையில் அமைந்துள்ளமை காணலாம்.

பறம்புமலைத் தலைவனாகிய பாரிவள்ளல் மலை வளங்காணத் தேரிற் சென்று தன் தேரினை ஓரிடத்தே நிறுத்திவிட்டு உலவச் சென்றவன், சிறிது நேரம் கழித்து மீண்டு வந்து தன் தேரினைப் பார்த்தபோது அவ்வழியிலே தான் படர்தற்குரிய கொழுகொம்பின்றித் தளர்ந்து அசைந்த முல்லைக்கொடி யொன்று தன் தேரினைப் பற்றிச் சிறிது படர்ந்திருந்த காட்சியைக் கண்டான். படர் கொம்பின்றித் தன் தேரைப் பற்றிய ஓரறிவுயிராகிய அந்த முல்லைக் கொடியின் தளர்ச்சியை நீக்கக் கருதிய அருளுள்ளம் படைத்தோனாகிய பாரிவேள், தான் ஊர்ந்து வந்த தேரினையே அக்கொடி படர்தற்குரிய கொழு கொம்பாக நிறுத்திவிட்டு நடந்து சென்றான் என்பது சங்க இலக்கியம் கூறும் வரலாற்றுச் செய்தியாகும். உயிரிக்க முடைய உரவோனாகிய பாரிவேள் முல்லைக்கொடிக்குத் தன் தேரை அளித்த அருள்வழிப்பட்ட இரக்கவுணர்வினை நினைந்து,

"பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி" (புறம் 200)

எனப் பொய்யாநாவிற் புலவர் பெருமானாகிய கபிலர் உள்ளம் உருகுகின்றார். தம்மைத் துன்பமின்றிக் காத்துக் கொள்ளும் மனவுணர்வும் செயலாற்றலும் வாய்க்கப் பெற்ற மக்கள் படுந் துன்பத்தினை அகற்றுவதோடு அமைந்து விடாமல், அத்தகைய உணர்வுவன்மை வாய்க்கப் பெறாத சிற்றுயிர்களின் துயரத்தையும் உணர்ந்து போக்கும் உயிரிரக்க உணர்வுடையராய்ப் பண்டைத் தமிழ் வேந்தர் வாழ்ந்தார்கள். சோழர்குல முதல்வனாகிய சிபி என்னும் மன்னன், பருந்தின் தாக்குதலுக்குப் பயந்து தன்னை அடைக்கலமாக அடைந்த புறாவைப் பாதுகாத்தல் வேண்டியும், அப்புறாவை உணவாக நாடித் தொடர்ந்து வந்த பருந்தின் பசியினைப் போக்குதல் வேண்டியும் தன் உடம்பினை அரிந்து பருந்துக்கு அளித்துப் பருந்தின் பசித் துன்பத்தை யகற்றிப் புறாவினைப் பாது காத்தான் என்பது தமிழகத்தின் தொன்மை வரலாறாகும். நிலத்தின் மேல் உயிர் வாழ்வார்க்குக் கதிரவனது வெய்யில் வெப்பத்தால் உண்டாகும் தளர்ச்சி நீங்கும்படி கதிரவனின் வெப்பத்தைத் தம் சடைக்கற்றைகளால் தாங்கிக் காற்றையே உணவாகக் கொண்டு கதிரவனது சுழற்சியோடு உடன் திரியும் அருளுள்ளம் படைத்த முனிவர்கள் சிலர் உள்ளார் என்பதும், அவர்களது சடைக்கற்றை யினாலே கதிரவனது வெம்மை மறைக்கப் பெற்று மன்னுயிர்கள் வாழ்வுக்கு வேண்டு மளவு கதிரவனது வெம்மை கொடுக்கப் பெறுகிறது என்பதும் நம் முன்னோர்களின் நம்பிக்கையாகும். இவ்வாறு ஞாயிற்றின் மிகுவெப்பத்தைத்தணித்து மன்னுயிர்களுக்கு வேண்டுமளவு குறைத்துத் தரும் விரிசடை முனிவர்கள் 'வேணாவியோர்' என வழங்கப் பெறுவர். மன்னுயிர்களின் துயர் நீக்கும் இவர்களுக்கு இறைவனது திருவருள் உடனிருந்து உதவி புரிகின்றது என்பதனை,

"விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது ஒருகை" (திருமுருகு. 107-108)

என நக்கீரனாரும்

"சுடரொடு திரிதரும் முனிவரும் அமரரும்
இடர்கெட அருளும் நின் இணையடி தொழுதேம்" (சிலப். வேட்டுவவரி)

என இளங்கோவடிகளும் முறையே முருகப் பெருமானையும் கொற்றவையையும் பரவிய பாடல்களில் போற்றியுள்ளனர். இவ்வாறு உலக நலன் கருதி ஞாயிற்றைச் சூழ்ந்து வரும் விரிடை முனிவர்களும் வியப்புற்று மயங்க வளைந்த சிறகினையும் கூரிய நகத்தினையுமுடைய பருந்தின் தாக்குதலுக்குப் பயந்து தன்னை யடைக்கலமாக அடைந்த குறுநடைப் புறாவினதுவருத்தத்துக்கு அஞ்சி, தனது துயரத்தைப் பொருட் படுத்தாது புறவினைத் தொடர்ந்த பருந்தினது பசியை அடக்குதல் வேண்டிப் புறாவின் நிறை அளவிற்கு ஈடாகத் தனதுடம்பினைத் தராசில் நிறுத்துத் தந்தவன், வரையா வண்மையும் பேராற்றலும் படைத்த சோழ மன்னன் சிபி என்பவனாவான். சிற்றுயிர்கள்படும் துன்பத்துக்கு இரங்கித் தன் உடம்பினையே பருந்துக்கு உணவாக அளித்த இவ்வேந்தர் பெருமானின் உயிரிரக்க உணர்வினை,

நிலமிசை வாழ்நர் அலமரல் தீரத்
தெறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்
காலுணவாகச் சுடரொடு கொட்கும்
அவிர்சடை முனிவரும் மருளக் கொடுஞ்சிறைக்
கூருகிர்ப் பருந்தி னேறுகுறித் தொரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி அஞ்சிச் சீரை புக்க
வரையா யீகை யுரவோன் (புறம். 43)

எனத் தாமப்பல்கண்ணனார் என்னும் புலவர் பெருமான் நெஞ்சம் நெகிழ்ந்து போற்றியுள்ளமை இங்கு நினைக்கத் தகுவதாகும்.

பேகன் என்னும் வள்ளல், குளிரால் நடுங்கிய மயிலின் துன்பத்தைக் கண்டு ஆற்றாது உயிரிரக்கத்தால் தான் அணிந்திருந்த பொன்னாடையைப் போர்த்தி அதன் குளிரைப் போக்கினான் என்ற செய்தி சங்க இலக்கியத்திற் புலவர் பெருமக்களால் பாராட்டிப் போற்றப் பெற்றுள்ளது.

மடத்தகை மாமயில் பனிக்கு மென்றருளிப்
படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலியான் பேக
உடாஅ போரா வாகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த எங்கோ
கடாஅயானைக் கலிமான்பேகன் (புறம் 145)

எனப் பரணரும்,

வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும் (சிறுபாண். 84-87)

என இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரும் பேகனது உயிரிரக்கத்தினை உள்ளங்கசிந்து போற்றியுள்ளமை காணலாம்.

இவ்வாறு, உயிர்கள் படும் துயரத்தைக் கண்டு உள்ளம் இரங்கி அவற்றின் துன்பங்களை விரைந்து நீக்க முற்படும் உயிரிரக்க உணர்வு ஆறறிவுபடைத்த மக்கட் குலத்தார்க்கு இன்றியமையாதது என்பதும், இங்ஙனம் பிற உயிர்கள் படும் துயரத்தைக் கண்டு இரங்கும் அருளொழுக்கம் வாய்க்கப் பெறாதார் பெற்றுள்ள அறிவினால் சிறிதும் பயனில்லை யென்பதும்,

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தன்னோய்போல் போற்றாக் கடை (திருக்குறள் 315)

எனவரும் திருக்குறளினால் வலியுறுத்தப் பெற்றுள்ளமை முன்னரும் கூறப்பட்டது.

தனக்குப் பிறர்செய்யுந் துன்பங்கள் தன்னுயிர்க்கு வருத்தம் தருதலைத் தன் அனுபவத்தால் அறிந்த ஒருவன் தன்னையொத்த நிலைபேறுடைய பிற உயிர்கட்குத் தான் இன்னா செய்தல் என்ன காரணத்தாலோ? என அவனது பேதைமையை நினைந்து தெய்வப் புலவர் திருவள்ளுவர் இரங்குவதாக அமைந்தது,

தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல் (திருக்குறள் 318)

எனவரும் திருக்குறளாகும்.

இதுகாறும் எடுத்துக்காட்டிய குறிப்புக்களால் பண்டைத் தமிழ் மக்கள் எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி இரங்கும் உயிரிரக்க உணர்வுடையராய் ஒழுகினமை நன்கு புலனாகும். இவ்வாறு தமிழ் முன்னோர் கொண்டொழுகிய உயிரிரக்க ஒழுகலாறாகிய சீவகாருணிய ஒழுக்கத்தை மீண்டும் வற்புறுத்தி எல்லா மக்களும் மேற்கொள்ளச் செய்த பெருமை வடலூர் அருட்பிரகாச வள்ளலாருக்குரிய தனிச் சிறப்பாகும்.

இனி, இவ்வொழுகலாறு பற்றி வள்ளலார் தரும் விளக்கங் களை இங்குத் தொகுத்து நோக்குதல் இன்றியமையாதது.

"உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க ஆன்ம லாபத்தைக் காலமுள்ள போதே அறிந்து அடைய வேண்டும்."

எல்லா அண்டங்களையும் எல்லாப் புவனங்களையும் எல்லாப் பொருள்களையும், எல்லாச் சீவர்களையும், எல்லா ஒழுக்கங் களையும் எல்லாப் பயன்களையும் தமது பூரண இயற்கை விளக்க மாகிய அருட்சத்தியால் தோன்றி விளங்க விளக்கம் செய்விக்கின்ற இயற்கை உண்மை வடிவினராகிய கடவுளின் பூரண இயற்கை இன்பத்தைப் பெற்று எக்காலத்தும், எவ்விடத்தும் எவ்வளவும் தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரிய வாழ்வே இந்த மனிதப் பிறப்பினால் அடையத்தக்க ஆன்ம லாபமாகும்.

சீவகாருணிய ஒழுக்கத்தினால் கடவுளின் அருளைப் பெறக் கூடுமல்லது வேறெந்த வழியாலும் சிறிதும் பெறக் கூடாது. அருள் என்பது கடவுள் தயவு. கடவுள் இயற்கை விளக்கம். சீவகாருண்யம் என்பது சீவர்கள் ஆன்ம இயற்கைவிளக்கம்.

இதனால் தயவைக் கொண்டு தயவைப் பெறுதலும் விளக்கத்தைக் கொண்டு விளக்கத்தைப் பெறுதலும் கூடும். வேறொன்றினால் பெறக்கூடாமை அநுபவம் ஆதலின் சீவகாருண் யத்தைக் கொண்டு இறைவனது அருளைப் பெறுதல் கூடும். வேறொன்றினாலும் பெறுதல் இயலாது.

கடவுள் அருளைப் பெறுதற்கு உயிரிரக்கமாகிய சீவகாருண்யமே வழி. உயிரிரக்கமாகிய சீவகாருண்யம் மக்கள் உள்ளத்தே விளங்கும் போது அறிவும் அன்பும் உடனாக நின்று விளங்கும். அதனால் பிறவுயிர்க்கு உதவி செய்யத் தோன்றும். அந்த ஆற்றலால் எல்லா நன்மைகளும் தோன்றும். மக்கள் உள்ளத்தில் உயிரிரக்கம் மறையும் போது அறிவும் அன்பும் உடனே மறைந்துவிடும். அதனால் பிற உயிர்க்கு உதவி செய்ய வேண்டுமென்ற ஆற்றல் மறையும். அது மறையவே எல்லாத் தீமைகளும் தோன்றும் ஆதலின் புண்ணியம் என்பது சீவகாருண்யமே என்றும் பாவமென்பது சீவகாருண்யம் இல்லாமையே என்றும் அறிதல் வேண்டும்.

சீவகாருண்ய ஒழுக்கத்தினால் மக்கள் உள்ளத்துள் தோன்றும் இரக்கத்தின் விளக்கமே கடவுள் விளக்கம். அவ்வொழுக்கத்தினால் வரும் இன்பமே கடவுள் இன்பம். இவ்விளக்கத்தையும் இன்பத்தையும் பல்கால் கண்டு நுகர்ந்து நிறைவு பெற்றவர்களே சீவன் முத்தர்கள் ஆவர். அவர்களே கடவுளை அறிவால் அறிந்து கடவுள் மயமான வர்கள். உயிர்களுக்கு உயிர்களின் தொடர்பாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக் கொண்டு தெய்வ வழிபாடு செய்து வாழ்தலே சீவகாருணிய ஒழுக்கமெனப்படும்.

உயிர்கள், பசி, தாகம், இச்சை, எளிமை, பயம் கொலை இவைகளால் துக்கத்தை அநுபவிக்கக் கண்ட போதாகினும், கேட்டபோதாகினும் இவ்வாறு உண்டாகுமென்று அறிந்த போதாகினும் உயிர்களின் தொடர்பாக ஆன்ம உருக்கம் உண்டாகும். உயிர்களெல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கை உண்மை ஏகதேசங்களாய் எல்லாம் வல்ல கடவுளால் உடம்போடு கூட்டிப் படைக்கப்பட்டமையால் ஒத்த உரிமை உள்ள சகோதரர் களேயாவர். சகோதரர்களுள் ஒருவர் ஒரு ஆபத்தால் துக்கப்படுகின்ற போதும் துக்கப்படுவார் என்று அறிந்தபோதும் அவரைத் தமது சகோதரர் என்று கண்ட மற்றொரு சகோதரருக்கு உருக்கம் உண்டாவது சகோதர உரிமையாம்.

ஆகவே, ஒருயிர், துன்புறக் கண்டபோதும் துன்பப்படும் என்று அறிந்த போதும் மற்றொரு உயிர்க்கும் உருக்கம் உண்டாவது பழைய ஆன்ம நேய உரிமை என்று அறிதல் வேண்டும். துக்கப்படு கின்றவரைத் தமது சகோதரர் என்று அறியத் தக்க “ஆன்ம அறிவு” என்னும் கண்ணானது அறியாமை இருளால் மறைக்கப்பெற்று ஒளி மழுங்கினபடியாலும் அவைகளுக்கு உதவும் கருவிகளாயமைந்த மனம் முதலான கண்ணாடிகளும் ஒளிதரும் ஆற்றல் இன்றித் தடிப்புள்ளவைகளாக இருந்தபடியாலும் மக்கட்குலத்தாரிடையே சகோதர உரிமை இருந்தும் சீவகாருண்யம் உண்டாகாமலிருந்தது. இதனால் சீவகாருண்யம் உள்ளவர்கள் மன்னுயிரனைத்தையும் ஒக்கப் பார்க்கும் உயர்விளக்கம் உள்ளார் என்று அறிதல் வேண்டும்.

உலகிற் பலர் பசிதாகம் பயம் முதலியவற்றால் மிகவும் துன்புறக் காண்கின்றோம். இவர்கள் முன்னைப் பிறப்பில் சீவகாருண்ய ஒழுக்கத்தை விரும்பாமல் வன்னெஞ்சத்தவராய்த் தீது நெறியில் நடந்தவராகையால் கடவுளின் ஆணைப்படி பசி தாகம் பயம் முதலியவற்றால் துன்பப்படுகிறார்கள் என்றறிய வேண்டும்.

சீவகாருண்ய ஒழுக்கம் சிறிதுமில்லாத புலி, சிங்கம் முதலிய விலங்குகள் திரியும் காட்டிலே இவ்வுலகியல் ஒழுக்கம் நிலைபெறாது. அதுபோல் சீவகாருண்யமில்லாத மனிதர்கள் வாழுமிடத்திலும் இவ்வுலகியல் ஒழுகலாறு செவ்வையாக நடைபெறாது. சீவகாருண்யம் இல்லாத போது மக்கள் உள்ளத்தே அருள் விளக்கம் தோன்றாது; அது தோன்றாபோது கடவுள் நிலை கை கூடாது; அது கைகூடாத போது வீடுபேற்றின்பத்தினை ஒருவரும் அடைய மாட்டார்கள். ஆகவே பரலோக ஒழுக்கமும் சீவகாருண்யத் தாலேயே கைகூடு மென்று அறிதல் வேண்டும் சீவகாருண்யம் ஆன்மாக்களின் இயற்கை விளக்கமாதலால் அந்த இயற்கை விளக்கம் இல்லாத உயிர்களுக்குக் கடவுள் விளக்கம் அகத்திலும் புறத்திலும் வெளிப்படவே மாட்டாது. உயிர்களெல்லாம் இயற்கைவிளக்கமாகிய கடவுளது அருள் அறிவுக் கறிவாய் விளங்குவதற்கு ஒத்த உரிமையுடைய இடங்களாக அமைந்துள்ளன. அவ்வுயிர்கள் உடம்புடன் கூடி அன்புடையராய் வாழ்தற்குப் பூதகாரியமான உடம்புகளே உரிமையாக உள்ளன. அவ்வுடம்புகளில் இரக்கம் மறைபடும். அதனால் கடவுளின் அருள் விளக்கம் வெளிப்படாது; அப்போது அறியாமையே மிக்குத் தோன்றும்; அதுவே ஆன்மாக்களின் அறிவு, இச்சை, தொழில்களைக் கட்டுப்படுத்தும் பிணிப்பு ஆகிவிடும். ஆகவே ஒவ்வோர் ஆன்மா வுக்கும் பூதகாரியமாகிய உடம்பு இன்றியமையாததாகும். அவ்வுடம்புக்கு மாயை என்னும் சடப்பொருளே முதற் காரணமாகும். ஆதலால் அந்த மாயையின் பல்வேறு விளைவுகளாகிய பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம், கொலை என்பவைகளால் உயிர்கள் பெற்ற உடம்புகளுக்கு அடிக்கடி இடையூறுகள் நேரிடுகின்றன. அத்தகைய இடர்கள் நேராமல் அகக்கருவி புறக்கருவியாகிய வற்றின் உதவியைப் பெற்ற தம்முடைய அறிவைத் துணையாகக் கொண்டு மிகவும் விழிப்போடு முயற்சி செய்து அவ்விடர்களைத் தடுத்துக் கொள்வதற்குத் தக்க வல்லப சுதந்தரம் (ஆணையாகிய உரிமை) மக்கள் உயிருக்கு அருளால் கொடுக்கப் பெற்றுள்ளது. மன உணர்வுடைய மக்கள் எல்லோரும் தமக்குக் கொடுக்கப்பட்ட வல்லப சுதந்தரமாகிய அவ்வுரிமையினைக் கொண்டு உடம்புடன் வாழ்ந்து தமக்கு நேரிடும் இடர்களை நீக்கி ஆன்ம லாபத்தைப் பெறுதற்கு முயற்சி செய்யக்கடவர்.

ஊழ்வினையாலும் விழிப்பின்மையாலும் வரும் இடர்களை நீக்கிக் கொள்ள மாட்டாமல் வருந்துகின்ற பிற உயிர்களின் வாழ்க்கையில் நேரும் இடர்களை நீக்கத் தக்க ஆற்றல் பெற்ற மக்கள், அவ்வுயிர்கள் படும் துன்பத்தை நீக்குவித்தல் வேண்டும். அவ்வாறு இடர் நீக்கும் தரத்தில் பசி, கொலை என்பவற்றால் வரும் துன்பம் தவிர, தாகம் பிணி இச்சை எளிமை பயம் என்பவற்றால் வரும் துன்பங்களை மாற்றுவது அபரஜீவ காருண்யம் (இயல் கருணைத்திறம்) எனப்படும். இது உலக இன்பத்தை மாத்திரம் சிறிது உண்டுபண்ணும். பிற உயிர்களுக்குப் பசியினால் வரும் துன்பத்தை யும் கொலையினால் வரும் துன்பத்தையும் நீக்குவது பரசிவ காருண்யம் (பெருங்கருணைத்திறம்) எனப்படும். இது இவ்வுலக இன்பங்களையும் அளவிறந்த சித்தின்பங்களையும், எக்காலத்தும் அழியாத முத்தி இன்பத்தையும் கடவுளால் நல்குவதாகும். இவ்வாறு மன்னுயிர்களுக்கு நேரிடுகின்ற அல்லல்களைப் போக்குதற்குரிய வல்லப சுதந்தரமும் அறிவும் இருந்தும், அவ்வாறு செய்யாமல் தமது ஆற்றலை வஞ்சித் தொழுகும் மாந்தர்க்கு இவ்வுலக இன்பத்தோடு முத்தியின்பத்தை யும் அநுபவிக்கின்ற உரிமை இறையருளால் இல்லாதொழிந்தது. இன்னோர் இக்காலத்தில் நகருகின்ற புவன போகங்களையும் இழந்து விடுவர் என அருள் நூல்கள் விதித்திருக் கின்றன. ஆகவே தமக்கு நேரும் இடர்களைப் போக்குதற்குரிய அறிவும் சுதந்தரமுமில்லாத சிற்றுயிர்களின் துன்பங்களை நீக்கத் தக்க அறிவும் சுதந்தரமும் வாய்க்கப் பெற்ற மாந்தர்கள் தமக்குள்ள வல்லப சுதந்தரத்தை வஞ்சித்து மறையாமல் பிறவுயிர்கள் படுந் துன்பத்தினை அருளால் நீக்க முற்படுவதே சீவகாருண்யத்தின் முக்கியமான குறிக்கோளாகும். உயிரிரக்க ஒழுகலாறாகிய இதன்கண் உண்மையாக நம்பிக்கை வைத்துப் பசித்த சீவர்களுக்கு ஆகாரத்தால் பசி நீக்கவும் கொலைப்படும் சீவர்களுக்கு உரிய காலைத்தில் வந்து தடுக்கும் செயல் வகையால் கொலைத் துன்பத்தை நீக்கியும், இவ்வாறு மனநிறைவாகிய இன்பத்தை உண்டு பண்ணுவதே அறிவறிந்த மக்கட் பிறப்பினால் அடைதற்குரிய மேலான நற்பயனாரும்" என அருட்பிரகாச வள்ளலார் தாம் எழுதிய சீவகாருண்ய ஒழுக்கம் என்ற நூலின் முற்பகுதியில் தெளிவாக விளக்கியுள்ளார்.

அருட்பிரகாச வள்ளலார் இறைவனை முன்னிலைப் படுத்திப் போற்றிய 'பிள்ளைப் பெரு விண்ணப்பம்' என்னும் பனுவலில்

"*சீவகாருண்யம்*" *என்ற வடமொழித் தொடர்ப் பொருளை உயிரிரக்கமெனத் தமிழ்த் தொடராக்கி விளக்கம் தந்துள்ளார்கள்.* ***இந்நுட்பம்:***

வருமுயிர் இரக்கம் பற்றியே உலக
வழக்கில் என் மனஞ் சென்ற தோறும்
வெருவி நின்னடிக்கே விண்ணப்பித்திருந்தேன்
விண்ணப்பம் செய்கின்றேன் இன்னும்
உருவ என்னுயிர்தான் உயிரிரக்கம் தான்
ஒன்றதே இரண்டிலை இரக்கம்
ஒருவில் என் உயிரும் ஒருவும் என்னுள்ளத்
தொருவனே நின்பதத் தாணை (திருவருட்பா. 3506)

தலைவர்கள் எல்லாம் தனித்தனி வணங்கும்
தலைவனே இன்னும்என் உளமும்
மலைவிலென் னறிவும் நானும் இவ்வுலக
வழக்கிலே உயிரிரக்கத்தால்
இலகுகின்றனம் நான் என் செய்வேன் இரக்கம்
என்னுயிர் என்னவே றிலையே
நிலைபெறும் இரக்கம் நீங்கில் என் உயிரும்
நீங்கும்நின் திருவுள மறியும். (திருவருட்பா. 3507)

ஆதலால் இரக்கம் பற்றிநான் உலகில்
ஆடலே யன்றி யோர்விடயக்
காதலால் ஆடல் கருதிலேன விடயக்
கருத்தெனக் கில்லை என்றிடல்இப்
போதலால்சிறிய போதும் உண்டதுநின்
புந்தியில் அறிந்தது தானே
ஈதலால் வேறோர் தீதெனத் திடத்தே
இல்லைநான் இசைப்பதென் எந்தாய் (திருவருட்பா. 3508)

என்னையும் இரக்கம் தன்னையும் ஒன்றாய்
இருக்கவே இசைவித்திவ் வுலகில்
மன்னிவாழ் வுறவே வருவித்த கருணை
வள்ளல் நீ நினக்கிது விடயம்
பன்னல் என் அடியேன் ஆயினும் பிள்ளைப்
பாங்கினால் உரைக்கின்றேன் எந்தாய்

இன்னவா றெனநீ சொன்னவாறு இயற்றா
திருந்த தோர் இறையுமிங்கிலையே (திருவருட்பா 3509)

*சரியை 'கிரியை: யோகம், ஞானம் எனப் படிவழியாக அமைந்த நால்வகை நெறிகளையும் கடைப்பிடித்து ஆறாதாரங் களிலும் முழுமுதற் பொருளைத் தியானிக்கும் சிவயோக நிலையிலும் "அவனே தானேயாகிய" அந்நெறியில் ஏகனாகி இறைபணி நிற்றலாகிய ஞானநன்னிலையினும் நிலைபெற்ற அருட் பிரகாச வள்ளலார், உலக மக்கள் அனைவரும் உயிர்க்குயிராகிய இறைவன் திருவருளை எளிதிற் பெற்று ஈறிலாப் பேரின்பத்தை நுகர்தற்குரிய சிறந்த உபாயமாக உயிரிரக்கம் என்னும் சீவகாருண்ய ஒழுக்கத்தையே சிறப்பாக வலியுறுத்தியுள்ளார்கள். சீவகாருண்ய ஒழுக்க நெறியில் நிற்போர் அருட் பெருஞ்சோதியாகிய ஆண்டவனைத் தம் அகத்தே கண்டு வழிபடுதற்குரிய தியானம், யோகம், தவம் ஆகியவற்றை யாவரும் உணர எளியமுறையில் அறிவுறுத்தியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தகுவதாகும்:-*

***"அகம் அகப்புறம், புறம், புறப்புறம் என்கின்ற நாலிடத் திலும் கடவுட்பிரகாசம் உள்ளது. அதனில் காரியத்தாலுள்ள விபரம்:- பிண்டத்தில் அகம் ஆன்மா. ஒருபொருளினது உண்மையையறிதல் ஆன்ம அறிவு. பிண்டத்தில் அகப்புறம் ஜீவன் ஒரு வஸ்துவின் பியோசனத்தையறிந்த அறிவே ஜீவ அறிவு. பிண்டத்தில் புறம் கரணம். ஒரு வத்துவின் நாமரூபத் தையும், குணகுற்றங்களையும், விசாரித்தறிதல் கரணமாய மன அறிவு. பிண்டத்தில் புறப்புறம், கண் முதலிய இந்திரியங்கள், ஒரு பொருளினது, நாமரூப குணகுற்றங்களை விசாரியாமல் அந்தப் பொருளைக் காணுதல் இந்திரியக்காட்சி, சீவக்காட்சி, ஆன்மக் காட்சியுமுண்டு. இதுபோல் அண்டத்தில் அகம், அக்கினி. அண்டத்தில் அகப்புறம் சூரியன். அண்டத்தில் புறம் சந்திரன், புறப்புறம், நட்சத்திரங்கள். ஆகவே பிண்டத்தில் நாலிடம் அண்டத்தில் நாலிடம் ஆக எட்டிடத்திலும் கடவுட்பிரகாசம் காரியத்தாலுள்ளது. காரணத்தால் உள்ள இடம் பிண்டத்தில் புருவமத்தி. அண்டத்தில் பிரமாகாசம். காரண காரியமாயுள்ள இடம் நான்கு. பிண்டத்தில் விந்து நாதம். அண்டத்தில் மின்னல் இடி. சர்வயோனியிடத்தும் விந்து விளக்கமாகிய மின்னலிடத்தும் நாதவிளக்கமாகிய***

**இடியிடத்தும் இதல்லாது, 'பாரொடு விண்ணாய்ப் பரந்ததோர் சோதி என்றும் சோதியுள்சோதியுள் சோதியாயும்... மேற்குறித்த அகமாகிய ஆன்மப்பிரகாசமே ஞானசபை. அந்தப் பிகாசத்துக்குள்ளிருக்கும் பிரகாசம் கடவுள். அந்த உள்ளொளியின் அசைவு நடம். இதுதான் ஞானாகாச நடன மென்றும் அசைவுற்றதே நடராச ரென்றும் ஆனந்தநடன மென்றும் சொல்லுகின்றது. ஆதலால் நாம் தினம் ஆறுகாலத் திலும் மேற்குறித்த பிரகாசமே சபையாகவும் அதன் உள்ளொளியே பதியாகவும் வணங்கவேண்டும். எக்காலத் திலும் புருவமத்தியின் கண்ணே நம்முடைய கரணத்தைச் செலுத்த வேண்டும்."**

*என வள்ளலார் தரும் தியான விளக்கம் இங்குமனங் கொளத்தகுவதாகும்.*

*அருட்பொருஞ்சோதி அகவலில் தமிழ் நெடுங்கணக்கின் உயிர்வர்க்கத்தில் வைத்து அருட் பெருஞ்சோதியைப் போற்றும் வள்ளலார் "ஔ" காரத்தையடுத்து ஆய்த (ஃ) எழுத்தில் வைத்து உணர்த்தும் நிலையில் திருநிலைத் தனிவெளி, சிவவெளி யெனுமோர், அருள் வெளிப்பதிவளர் அருட்பெருஞ்சோதி (அகவல் 27-28) எனக் கூத்தப் பெருமானைப் போற்றுகின்றார். இத்தொடரில் அருள் வெளிப் பதி என்பது இருகண்களுக்கு இடையே புருவ மத்தியில மைந்த இடைவெளியினை. இது கீழ் இரண்டும் மேல் ஒன்றும் ஆக அமைந்த (ஃ) முப்புள்ளி வடிவாகிய ஆய்தவெழுத்தினைப் போன்று இரண்டு கண்களுக்கு மேல் மத்தியில் அமைந்திருத்தலின் "ஔ" கார எழுத்தினையடுத்துக் கூறப் பட்டுள்ளமை உய்த்துணர்தற்கு உரியதாகும். இத்தியான முறையினை: -*

நெற்றிக்கு நேரே புருவத்திடைவெளி
உற்று உற்றுப் பார்க்க ஒளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரமனிருந்திடும்
சிற்றம் பலமென்று தேர்ந்துகொண்டேனே (2770)

*எனவரும் திருமந்திரத்தில் திருமூல நாயனார் தெளிவாகக் குறித்துள்ளமை காணலாம். இத் திருமந்திரப் பொருளை அடியொற்றி: -*

"கையறவி லாதுநடுக் கண் புருவப் பூட்டு
கண்டுகளி கொண்டு திறந்துண்டு நடு நாட்டு" (5-528)

எனவும்,

உளத்தினும் கண்ணினும் உயிரினும் எனது
குளத்தினும் நிரம்பிய குருசிவபதியே (அகவல் 1037-38)

எனவும், வள்ளலார் தரும் அநுபவ விளக்கம் இங்கு ஒப்பு நோக்குதற்குரியதாகும்; குளம் என்றது நெற்றியினை.

இவ்வாறு நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளியில் உள்ளத்தை ஒன்ற வைத்து இறைவனைத் தியானிக்கும் இம் முறையே சிறந்த தவமாகுமென்பதனை,

மன்புருவ நடு முதலாய் மனம் புதைந்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வார் (3259)

எனவரும் தொடரில் வள்ளலார் குறிப்பிட்டுள்ளமை காணலாம்.

உண்மையான ஞானமென்பது உயிர்களிடத்திலும் உயிர்க்கு யிராகிய இறைவனிடத்திலும் செலுத்தும் அன்பே யாகும். இவ்வுண்மை

ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர்
ஞானம் உண்டார் (பெரிய சம்பந்தர் - 843)

என வரும் சேக்கிழார் வாய் மொழியால் நன்கு தெளியப்படும். அன்பின் மிகுதியாகிய ஆர்வத்தையுடைய உருகு மனத்தடியார்கள் பிறவிவேர் அறுக்கும் இறைவனைக் கண்டு இன்புறுவர். எவ் வுயிர்க்கும் இரங்குதலாகிய அன்பினையுடையவர்கள் எவ்விடத்தும் இறைவன் திருவடியினைக் கண்டு மகிழ்வார்கள் என்னும் உண்மையினை,

ஆர்வமுடையவர் காண்பர் அரன்றன்னை
ஈரமுடையவர்காண்பார் இணையடி (திருமந்திரம் 273)

எனவரும் தொடரில் திருமூலநாயனார் அறிவுறுத்தி யுள்ளமை காணலாம். அன்பினில் விளைந்த ஆரமுதே என்பது திருவாசகம், 'ஈர அன்பினர் யாதும் குறைவிலார்' என்பது பெரிய புராணம். இத்திருமுறையின் பொருளை மக்கள் எல்லோரும் உணர்ந்து உயிரிரக்கமுடையவராய் அருட்பெருஞ்சோதியாண்ட வரைக் கண்டு போற்றி உய்தி பெறுதல் வேண்டும் என்னும் பெரு

*வேட்கையினாலேயே அருட்பிரகாச வள்ளலார் சீவகாருணிய வொழுக்கத்தினை நன்கு வற்புறுத்துவாராயினர். இவ் உயிரிரக்க உணர்வினைக் கடைப்பிடித்து ஒழுகாதவர்கள் சிவபரம் பொருளைக் கண்டு உய்தி பெறுதல் இயலாது என்பதனை*

'ஈரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார்'

(பாரதி அறுபத்தாறு பக்கம் - 257)

*எனத் தேசிய கவி பாரதியார் குறித்துள்ளமை இங்கு நோக்கத் தகுவதாகும்.*

# 5. பசிப்பிணி மருத்துவர்

உடம்போடு கூடிய உயிர்கள் எல்லாவற்றிற்கும் பொது வாயமைந்தது பசியாகும். இது உயிர்கள் கருவாய்ப்பதிந்த நாள் தொட்டு அவ்வுயிரது உடம்பின் உள்ளே நிலைபெற்று, உடல் வளர்ச்சிக்குள்ள உணவினைப் பக்குவப்படுத்தி செரிக்கச் செய்யும் தீயாகும். உடல் வளர்ச்சிக்கு வேண்டிய உணவினை அவ்வப்பொழுது பக்குவப்படுத்தி நிற்கும் பசியாகிய இத்தீயானது, உரிய காலத்தில், உடலுக்குத் தர வேண்டிய உணவு உரிய காலத்தில் தரப்பெறாத நிலையில் வயிற்றின் உள்ளிருந்து மூண்டு வெதுப்புவது; உயிர்களின் கருவி கரணங்களைத் தளர்ச்சியுறச் செய்தல் இத் தீயின் செயலாகும். எனவே உடம்பொடு கூடிய உயிர்கள் இத்தகைய பசித்தீத் தணிய உரிய காலத்தில் உணவினை உட்கொள்ளுதல் இன்றியமையாத தாயிற்று. உணவினை முதலாகக் கொண்டதே உயிர்கள் பெற்றுள்ள உடம்பாகும். இத்தகைய உணவினைப் பெறவியலாது மக்கள் பசியால் வருந்திய பொழுது அவர்களுக்கு வேண்டிய உணவினைக் கொடுத்தவர்கள், அவர்தம் உடம்போடு உயிரை நிலைத்திருக்கச் செய்தமையால், அவர்கள் உயிர் கொடுத்தவராகவே மதித்துப் போற்றப் பெறுவர். இங்கு உணவெனப்படுவது நிலமும் நீரும் விரவிய நிலையில் விளையும் நெல் முதலிய தானியங்களும், காய் கனிகள் முதலியனவுமாகும். மக்களுக்கு இன்றியமையாத உணவுப் பொருள்களை விளைவிக்கும் நோக்குடன் நீரையும் நிலத்தையும் ஒரு வழிக்கூட்டி வளம்பெறச் செய்தவர்கள், இவ்வுலகத்து உடம்பையும் உயிரையும் படைத்தவர் எனப் பாராட்டப் பெறுவர். இவ்வுண்மை.

''நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே.
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே,

நீரும் நிலனும் புணரியோா் - ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே.''          (புறம். 18)

*எனக் 'குடபுலவியனார்' என்னும் புலவர் பாண்டியன் நெடுஞ் செழியனைப் பாடிய புறநானூற்றுப் பாடலில் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளமை காணலாம்.*

*வறியோராகிய மக்கள் உணவு பெறாது பசித் தீயால் வாட்டமுற்ற போது பொருளுடைய செல்வர்கள், அவர்களுக்கு வேண்டும் உணவு அளித்து அவர்தம் பசித்தீயைத் தணிவித்தல் வாழ்வியல் அறமாகும். பொருளை ஈட்டியவர்கள் தாம் ஈட்டிய பொருளைச் சேமித்து வைக்கும் நிதிக்களமாக (வங்கித்) திகழ்வது, பசி தீர்த்தலாகிய அவ்வறமேயாகும். இவ்வுண்மையினை,*

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி.          (குறள் - 226)

*எனவரும் திருக்குறளில் திருவள்ளுவர் விளக்கியுள்ளமை காணலாம். (அற்றார் - பொருளற்றாராகிய வறியவர்கள்)*

*உயிர்களின் பண்பு நலன்களும் கருவி கரண இயக்கங்களும் அழிய உயிர்க்கு இறுதி தரும் நிலையில் வருவது பசி நோயாதலால் 'அழி பசி' என்றார் திருவள்ளுவர்.*

''குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி''

(மணிமேகலை - பாத்திரம் பெற்ற காதை 76-80)

*எனவரும் மணிமேகலைத் தொடர் மேற்குறித்த 'அழிபசி' என்னும் திருக்குறள் தொடருக்குரிய விளக்கமாக அமைந்துள்ளமை காணலாம்.*

மானங் குலங்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம்உயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் - பத்தும்
பசிவந்திடப் போம் பறந்து.          (நல்வழி - 26)

எனவரும் ஔவையார் வாய் மொழியும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. பசி நோயானது, இவ்வுடம்பின் உள் நின்று உயிர்களின் ஞான ஒழுக்கங்கள் யழித்து அதனால் இனிவரும் உடம்புகளுக்கும் துன்பம் செய்தலின் "பசி யென்னும் தீப்பிணி" என்றார் திருவள்ளுவர்.

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது. (திருக்குறள் - 227)

எனவரும் திருக்குறள், உணவுண்ணப் புகுவோர், தம்மையடுத்த ஏழை எளியவர்களின் பசித்தீத் தணியத் தம்மிடத்துள்ள உணவுப் பொருளைப் பகுத்தளித்து உண்ணுதல் வேண்டும் எனவும், அவ்வாறு வறியவர்க்குப் பகுத்தளித்து எஞ்சியதை உண்பாரைப் "பசி" யென்று சொல்லப்படும் தீய நோய் தீண்டுதல் இல்லை எனவும் அறிவுறுத்துகின்றது.

அதிகமான் நெடுமான் அஞ்சி, என்னும் வள்ளல் தான் உண்ணத் தொடங்கும் போது சிறிய அளவுடைய சோறாயிருந் தாலும் அதனை மிகப் பல உண்கலங்களிலும் பகுத்துப் படைத்துப் பலரோடும் உடனிருந்து உண்பான் எனவும், மிக்க அளவினையுடைய சோறாயிருந்தாலும் அதனைப் பல உண்கலன்களிலும் படைத்துப் பலரோடு உண்பான் எனவும், அவ்வாறு பகுத்துண்ணுதலாகிய அறத்தினையுடைய அவ்வள்ளல் நம்மைவிட்டுப் பிரிந்தனனே எனவும், செயலற்று இரங்கும் நிலையில்,

"சிறுசோற்றானும் நனிபல கலத்தன் மன்னே
பெருஞ் சோற்றானும் நனிபல கலத்தன் மன்னே" (புறம் - 235)

என ஔவையார் வருந்திப் பாடியுள்ளார்.

"சோறு எல்லார்க்கும் பொதுவாதலால் சிற்றளவுடைய சோறாயினும் அதனைப் பல உண்கலன்களிலும் பகுத்துப் பலரோடும் உடனிருந்து உண்பன், அத்தகைய பெரியோன் இன்று இல்லையே. மிக்க அளவினையுடைய சோறாயினும் அதனைப் பல உண்கலன் களிலும், பகுத்துப் பலரோடும் உண்பன், அத்தகைய நெடுமான் அஞ்சி இன்று நம்மைவிட்டுப் பிரிந்தனனே" என்பது மேற்குறித்த தொடரின் பொருளாகும். இதனால் தன்னிடமுள்ள உணவுப் பொருள் சிறிய அளவினதாயினும் பெரிய அளவினதாயினும் பசியால் வருந்துவோர் பலர்க்கும் பகுத்தளித்து உண்ணும்

பகுத்துண்டலாகிய நல்லறத்தைத் தன் வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகியவன் அதிகமான் நெடுமான் அஞ்சி என்னும் வள்ளல் என்பது புலப்படுத்தப்பட்டமை காணலாம்.

எல்லா நூல்களிலும் கூறப்படும் நல்லறங்களைத் தொகுத் தெடுத்து எல்லா மக்களுக்கும் பொதுப்படக் கூறும் அறநூலாசிரிய ராகிய திருவள்ளுவர், கொல்லாமை என்னும் நல்லறத்தை விளக்கும் அதிகாரத்தில் கொல்லாமையாகிய அறத்திற்கு அடிப்படை யாயமைந்தது பகுத்துண்ணுதலாகிய இவ்வறமே என்பதனை,

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம் தலை" (திருக்குறள்-322)

எனவரும் திருக்குறளில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

உண்ணுதற்குரிய உணவினைப் பசியால் வருந்திய உயிர் களுக்குப் பகுத்துக் கொடுத்து எஞ்சியதனைப் பின் தான் உண்டு, எல்லா உயிர்களையும் சோர்ந்தும் இறப்பு நேராமல் குறிக்கொண்டு பாதுகாத்தல் அறநூலுடையார் தொகுத்த நல்லறங்கள் எல்லா வற்றுள்ளும் முதன்மையாகிய அறமாகும் என்பது மேற்காட்டிய குறளின் பொருளாகும்.

இதனால் கொல்லாமையாகிய அறத்திற்குப் பகுத்துண்ணு தலாகிய அறம் அடிப்படையாய் அமைந்த உண்மை நன்கு புலப்படுத்தப் பெற்றமை காணலாம்.

தவச் செல்வர்களுக்குரிய வலிமையாவது, தம்மையுற்ற பசிப்பிணியைப் பொறுத்துக் கொள்ளுதல். அத்தகைய தவ வலிமையும் வறியோரது பொறுத்தற்கரிய பசியைத் தமது பகுத்துண்ணும் அறத்தால் ஒழிப்பாரது வலிமைக்குப் பிற்பட்டதேயாகும். தாமும் பசியால் வருந்திப் பிறரது பசி வருத்தத்தையும் தீர்க்க மாட்டா தாராகிய தவச் செல்வர்களது வலிமையைக் காட்டிலும் தாமும் பசியால் வருந்தாது பிறரது பசிப்பிணியையும் தீர்ப்பாராகிய இல்லறத்தராது வலிமை மிகவும் சிறந்த தென்பது இக்குறளால் நன்கு வலியுறுத்தப்பட்டது.

ஊண், உடை, உறையுள் என்பனவற்றை நாடிப் பெறும் முயற்சி, வாழ்க்கையின் முதற்படியாகும். வயிறார உண்டு மகிழ்தலே எல்லாருடைய விருப்பமாகும். அருளும் ஆற்றலும் நிரம்பிய பெருவள்ளல்கள் பசியால் துன்புறும் எளியவர்களுக்கு

வேண்டும் உணவளித்து அவர்களை ஊக்கத்துடன் உழைக்கும் நல்லுணர் வுடையவர்களாகச் செய்தார்கள். தங்களை அடைந்தவர் களுடைய வயிற்றுப் பசியைத் தணித்தலே இவ்வள்ளல்களின் வாழ்க்கைக் குறிக்கோளாக அமைந்தது. பரிசிலர் சுற்றத்துப் பசிப்பகையாகி விளங்கிய இவ்வள்ளல்களை நாடாளும் மன்னர்களும் பாராட்டிப் போற்றினார்கள். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் ஆட்சியில் சோழநாட்டில் உள்ள சிறுகுடி என்னும் ஊரின் தலைவனாய் விளங்கிய பண்ணன் என்பான், பசியால் வருந்தி வரும் எளியவர்களுக்குப் பெருஞ்சோறு கொடுத்துப் போற்றி வந்தான். பிறர் வறுமை நோக்கி உதவும் பண்ணனது பேரறச் செயலை வேந்தர் பெருமானாகிய கிள்ளிவளவன் கேள்வி யுற்றான். பண்ணன் வாழும் சிறுகுடிக்குச் சென்று அவனுடைய நல்லறச் செயல்களைப் பாராட்டி மகிழ வேண்டுமென எண்ணித் தானும் ஒரு பரிசிலன் போல் அவனுடைய சிறுகுடிக்குப் புறப்பட்டுச் சென்று அவ்வூரின் எல்லையை அடைந்தான். புது வருவாயை யுடையதாகிய பழுத்த மரத்தின் கண்ணே பறவைக் கூட்டம் ஒலித்தாற் போன்று பண்ணனது மனையிற் பெருந்திரளாகக் கூடியுண்ணும் மக்களின் ஆரவாரம் அவ்வூருக்கு நெடுந்தொலை விலேயே கேட்டது. மழை பெய்யுங் காலத்தை முன்னறிந்து தம் முட்டைகளை மேட்டு நிலத்திற்குக் கொண்டு செல்லும் சிறிய எறும்புகளின் வரிசை போன்று பண்ணன் வீட்டில் பெரிய சுற்றத் தினருடன் கூடியுண்ட சிறு பிள்ளைகள் அடுத்த வேளைக்குப் பயன்படும்படி தங்கள் கைகளிலே சோற்றுத் திரளைக் கொண்டு செல்லும் அழகிய தோற்றத்தினைக் கிள்ளிவளவன் தன் கண்ணாரக் கண்டான். பண்ணன் இரவல்பால் வைத்த அருளுடைமையை எண்ணி மனமுருகிய மன்னன், "யான் உயிர் வாழும் நாளையும் தனக்குரிமையாகப் பெற்றுப் பண்ணன் வாழ்வானாக" எனப் பாராட்டி வாழ்த்தும் நிலையில்,

"யான்வாழு நாளும் பண்ணன் வாழிய
பாணர் காண்கிவன் கடும்பின திடும்பை
யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
ஊணொலி யரவந் தானுங் கேட்கும்
பொய்யா வெழிலி பெய்விட நோக்கி
முட்டை கொண்டு வற்புலஞ் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக்கேய்ப்பச்

சோறுடைக் கையர் வீறுவீ றியங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டுங் கண்டும்
மற்று மற்றும் வினவுதுந் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவ னில்லம்
அணித்தோ, சேய்த்தோ கூறுமி னெமக்கே" (புறம் - 173)

எனவரும் பாடலைப் பாடியுள்ளான்.

'யான் உயிர் வாழும் நாளையும் பெற்றுப் பண்ணன் வாழ்வானாக. பாணரே! காண்பீராக இந்தப் பரிசிலனது சுற்றத்தின் வறுமையை, புது வருவாயை யுடைத்தாகப் பழுத்த மரத்தின் கண்ணே புள்ளினம் ஒலித்தாற் போன்ற ஊணாலுண்டாகிய ஆரவாரந்தானும் இவ்வூர்ப்புறத்தே கேட்கின்றது. பருவந்தப்பாத மழை பெய்யுங் காலத்தைப் பார்த்துத் தம் முட்டைகளைக் கொண்டு மேட்டு நிலத்தினை யடையும் மிகச்சிறிய எறும்பினது சிலவாகிய வரிசையை யொப்பச் சோறுடைக் கையினராய் வேறு வேறு போகின்ற பெரிய சுற்றத்தோடும் கூடிய பிள்ளைகளைக் காண்கின்றோம். கண்டு வைத்தும் எம்பசி வருத்தத்தானும் வழிவரல் வருத்தத்தானும் பின்னரும் பின்னரும் விதுப்புற்று (மனத்தின் விரைவுற்று)க் கேளாநின்றேம் பசிநோய் தீர்க்கும் மருத்துவனது மனை அணித்தோ? சேய்மைக் கண்ணதோ? எங்களுக்குத் தெரியச் சொல்லுமின்' என்பது இப்பாட்டின் பொருளாகும்.

ஒருவருடைய இயல்புகளைக் கூறி வாழ்த்துவோர், "ஆயிரம் வெள்ளம் வாழ்க" என்றது போலத் தம்மனம் விரும்பிய அளவு வாழ்த்துதல் உலகியலிற் பெரும்பாலும் நிகழும் வாழ்த்தியல் முறையாகும். மக்கள் கருவாய்ப் பதிகின்ற அன்றே அவர்களுக்குரிய வாழ்நாளும் வரையறை செய்யப் பெற்றனவாதலின் அதற்கு மேலும் பல் ஆண்டுகள் வாழ்கவென வாழ்த்துதல் நிலை பேறுடைய வாழ்த்தாகாதென எண்ணிய புலவர் சிலர், "ஊழால் நினக்கு வரையறுக்கப்பட்ட நாள் முழுதும் இனிதாக இருப்பாயாக" என வாழ்த்துதலும் உண்டு. இவ்விரு வகை வாழ்த்துக்களிலும் வாழ்த்து வார்க்கு வரும் இழப்பெதுவுமில்லை ஆனால் பசிப்பிணி மருத்து வனாக விளங்கிய பண்ணனை வாழ்த்தக் கருதிய கிள்ளிவளவன், தனக்குத் தெய்வத்தால் வரையறுக்கப்பட்ட வாழ்நாட் பகுதியில் இதுகாறும் கழிந்தன போக இனி எஞ்சியிருக்கின்ற நாளையும்

பண்ணன் தன்வாழ் நாட்களுடன் சேர்த்துப் பெற்று இனிது வாழ்வானாக என வாழ்த்துகின்றான். இச்செயல், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாகிய பண்ணனது ஈகைத் திறத்தையும், அவன் செய்யும் அறச் செயல்களில் ஈடுபட்டுத் தன்னை மறந்து உள்ளமுருகிய வேந்தர் பெருமானாகிய கிள்ளிவளவனது விரிந்த உள்ளத்தின் உயர்வையும் நன்கு தெளிவிப்பதாகும்.

நுகர்தற்குரிய இனிய உணவுகளைப் பெற்ற பொழுது 'அவற்றை யாமே தனித்து உண்போம், எம்மிடத்துக் கொண்டு வந்து தருக' என்று உணவுப் பொருள்களிலே விருப்பமுடையோர் கூறுவர். அங்ஙனம் கூறும் தன்னலத்தினைத் துறந்த தூய நெஞ்சம் உடையவர்களே தம்மிடமுள்ள பொருளைப் பிறர்க்குப் பகுத்துக் கொடுத்துண்ணும் ஆண்மையுடையவராவர். தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெற்றியினையுடைய இப்பெருமக்களே பிறர்க்குப் பகுத்துண்ணுதலாகிய அறத்தால் நாட்டு மக்களது பசிப்பிணியை நீக்க வல்ல பேராண்மை படைத்தவராவர். காப்பியாற்றுக் காப்பியனாரென்னும் புலவர், களங்காய்க்கண்ணி நார் முடிச் சேரல் என்னும் வேந்தர் பெருமானை நோக்கி,

உலகத்தோரே பலர்மற் செல்வர்
எல்லா ருள்ளுநின் னல்லிசை மிகுமே
... .... .... .... .... .... ....
இனியவை பெறினே தனிதனி நுகர்கேம்
தருகென விழையாத் தாவி னெஞ்சத்துப்
பகுத் தூண் டொகுத்த வாண்மைப்
பிறர்க்கென வாழ்திநீ யாகன் மாறே. (பதிற்றுப்பத்து - 38)

எனப்பாடிய இப்பாடலில் சேரலாதனாகிய வேந்தன் தன்பாலுள்ள உணவுப் பொருள்களையெல்லாம் ஒருசேரத் தொகுத்துப் பசியால் வருத்தமுற்ற பலர்க்கும் பகுத்தளித்தலால் பசிப்பிணியை அகற்றிய பேராண்மை படைத்தவன் என்பதனையும், இவ்வாறு பகுத்துண்ணலாகிய இவ்வறத்தால் தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருமகனாகிய இவன் உலகில் வாழும் செல்வமுடையாரெல்லாருள்ளும் சிறந்த புகழுடையானாகத் திகழ்கின்றான் என்பதனையும் விரித்துக் கூறியுள்ளார்.

'வறியோர்க்குப் பகுத்துண்ணுதலாகிய அறச்செயல் மன்னர்கள் முதலிய பெருஞ்செல்வர்களால் மட்டுமின்றி ஏழை எளிய

மக்களாலும் நாளும் மேற்கொள்ளுதற்குரிய எளிமை யுடையதே என்பதனை,

'யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி' (திருமந்திரம் 252)

எனத் திருமூல நாயனார் அருளிய திருமந்திரத் தொடரால் நன்கு உணரலாம்.

திருஞானசம்பந்தப் பிள்ளையாரும், திருநாவுக்கரசரும் அடியார் திருக்கூட்டத்தோடு திருவீழிமிழலையில் தங்கியிருந்த போது பெரும்பஞ்சம் உண்டாயிற்று. அப்போது வீழிமிழலைப் பெருமான் அவ்விருவர் கனவிலும் தோன்றி, 'இப்போது ஏற்பட்டுள்ள பஞ்சத்தால் நீங்கள் உங்கள் பசிகருதிச் சிறிதும் மனவருத்தம் அடைய மாட்டீர்களாயினும் உங்களை வழிபட்டு வரும் அடியார்கள் கூட்டத்தின் பசிநோயை அகற்றுதல் வேண்டி நாள்தோறும் உங்கள் இருவர்க்கும் படிக்காசு அளிக்கின்றோம்' எனக் கூறியருளி அவ்விருவர்க்கும் நாள்தோறும் படிக்காசு அளித்தருளினன் என்பதும், நாளும் படிக்காசு பெற்ற அவ்விருவரும் அக்காசினைக் கொண்டு உணவுப் பொருள் வாங்கித் தங்கள் திருமடத்தில் அடியார் அனைவர்க்கும் பகலுமிரவுமாகிய இருபொழுதிலும் பசிதீரத் திருவமுது படைத்தனர் என்பதும் திருத்தொண்டர் புராணத்திற் கூறப்படும் வரலாற்று நிகழ்ச்சியாகும்.

அல்லார் கண்டத் தண்டர்பிரான்
    அருளாற் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப்
    பரமனடியார் ஆனார்கள்;
எல்லாம் எய்தி உண்கவென
    இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லாற் சாற்றிச் சோறிட்டார்
    துயர்கூர் வறுமை தொலைத் திட்டார்.
(பெரிய- திருநாவுக்கரசர் 259)

எனவரும் சேக்கிழார் வாய்மொழி, பொருட் சார்பு பெறாத அடியார்களின் பசித்துன்பத்தினை இறைவனது அருட்சார்பினால் நீங்கியருளிய சம்பந்தர் திருநாவுக்கரசராகிய பெருமக்கள் இருவரது தொண்டின் திறத்தினை விரித்துரைத்தல் காணலாம்.

பிற உயிர்கள் படும் துன்பத்தினைக் கண்டால் அறிவுடைய நன்மக்கள் உள்ளத்திலே இரக்கவுணர்வு தன்னியல்பில் தோன்றுவ தாகும். இத்தகைய இரக்கங் காரணமாகப் பிற உயிர்களின் துயரங்களைப் போக்குதற்கு முற்பட்டு முயலும் அருளாளர்களின் கருணைத் திறம் கொல்லாமை, புலாலுண்ணாமை ஏழைகளின் பசி தீர்த்தல் என்னும் இம் மூவகை அறங்களினும் படர்ந்து செயற்படுவதாகும்.

மேற்குறித்த மூவகை அறங்களுள்ளும் பொருட் செல்வம் உடையோர், ஏழைத் தொழிலாளர், முதலிய பலதிற மக்களும் தம் வாழ்வில் எளிதிற் கடைப்பிடித்தற்குரிய தலைசிறந்த அறமாகத் திகழ்வது, பசியால் வாட்ட முற்றவர்களின் பசிப்பிணியைத் தீர்த்தலாகிய "அன்னதானம்" ஒன்றேயாகும்.

பசித்தோர்க்கு உணவளித்தலின் இன்றியமையாமையினை அருட்பிரகாச வள்ளலார் தாம் இயற்றிய சீவகாருண்ய ஒழுக்கம் என்ற உரைநடை நூலில் பின் வருமாறு விரிவாக விளக்கியுள்ளார்.

"பசியினால் வரும் துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வருமின்பம் பர இன்பமாகும். அவை இம்மையில் யோகசித்தி களாலும், ஞானசித்திகளாலும் வருகின்ற இன்பங்களும் முடிவில் அனுபவிக்கப்படும் மோட்ச இன்பமும் ஆகுமென்றறிய வேண்டும். உண்பதற்கு ஆகாரமில்லாமல் சோர்வடைந்த சீவர்களுக்குச் சீவகாருண்யத்தால் ஆகாரம் கொடுக்க உண்டு பசி நீங்கிய தருணத்தில், அந்தச் சீவகர்களுக்கு அகத்தினிடத்தும், முகத்தினிடத்தும் தழைத்துப் பொங்கித்ததும்புகின்ற இன்பமும், அதுகண்ட போது கொடுத்தவர்களுக்கு அகத்திலும் முகத்திலும் அவ் வாறுண்டாகிற இன்பமும், ஆன்ம சகிதமாகிய கடவுள் கரணத்தில் பூரணமாகத் தோன்றுகின்றவை யாதலால் பர இன்பம் என்றறிய வேண்டும்.

வஸ்திரம், இடம், நிலம், பொன், பொருள் முதலானவைகள் இல்லாமல் துன்பப் படுகின்றவர்கள், அத்துன்பங்களை மன எழுச்சியால் சகித்துக் கொண்டு உயிர் தரித்துத் தங்களால் செய்யக் கூடிய முயற்சியைச் செய்யக்கூடும். பசியினால் துன்பம் நேரிட்ட போது, மன எழுச்சியால் அத்துன்பத்தை சகித்துக் கொள்ளக் கூடாது சகிக்கத் தொடங்கில் உயிரிழந்து விடுவார்கள். பசி நேரிட்ட போது பெற்றோர்கள், பிள்ளைகளை விற்றும் பிள்ளைகள் பெற்றோர்களை விற்றும், மனைவியைப் புருடன் விற்றும், புருடனை மனைவி

விற்றும் அந்தப் பசியினால் வரும் துன்பத்தை மாற்றிக் கொள்ளத் துணிவார்களென்றால், அன்னியமாகிய வீடு, மாடு, நிலம், உடைமை முதலியவைகளை விற்றுப் பசியை நீக்கிக் கொள்வார்களென்பது சொல்ல வேண்டுவதில்லை. உலக முழுதும் ஆளுகின்ற சக்கரவர்த்தி யாகிய அரசனும் பசி நேரிட்ட போது தனது அதிகார உயர்ச்சி முழுதும் விட்டுத் தாழ்ந்த வார்த்தைகளால், பசி நேரிட்டது, என்ன செய்வது? என்று அருகிலிருக்கின்ற அமைச்சர்களிடத்துக் குறை சொல்கிறான். பகைவரால் எறியப்பட்ட மார்பிலுருவிய பாணத்தையும் கையாற்பிடித்துக் கொண்டு எதிரிட்ட பகைவரையெல்லாம் அஞ்சாது ஒரு நிமிடத்தில் வெல்லத்தக்க சுத்தவீரரும் பசி நேரிட்ட போது சௌரியத்தை - வீரத்தை இழந்து பசிக்கஞ்சிப் பக்கத்தில் நிற்கின்றவரைப் பார்த்து, 'இளைப்பு வருமே' சண்டை எப்படிச் செய்வது? என்று முறையிடுகின்றார்கள். இவ்வுலக போகங்களோடு இந்திர போக முதலிய போகங்களையும் துரும்பாக வெறுத்து முற்றும் துறந்து அறிவையறிந்து அநுபவம் விளங்கிய ஞானிகளும் இந்திரியங்களை அடக்கி மனோலயஞ் செய்து உண்மை நிட்டை யிலிருக்கின்ற யோகிகளும், இறந்தோரை எழுப்பத் தக்க அளவிறந்த மகத்துவங்கள் விளங்கிய சித்தர்களும், முனிவர்களும் தவசிகளும், பசி நேரிட்டபோது தங்கள் தங்கள் அனுபவ லட்சியங்களை விட்டு அடுத்த ஊரை நோக்கிப் பலிக்கு - பிச்சைக்கு வருகின்றார்கள். பலி நேராத போது - பிக்கைக்கிடைக்காத போது நிலை கலங்கு கிறார்கள். சொப்பனத்தில் ஒரு இழிவரினும் அது குறித்து உயிர் விடத்தக்க மானிகளும் பசி நேரிட்ட போது சொல்லத் தகாத வரிடத்தும் சொல்லி மானங்குலை கின்றார்கள். சாதி, சமய ஆசாரங்களில் அழுத்தமுடைய ஆச்சாரியர்களும் பசி வந்தால் ஆசாரத்தை மறந்து ஆகாரத்திற்கு எதிர் பார்க்கிறார்கள். கல்வி கேள்விகளில் நிரம்பி அறிதற்கரிய நுட்பங்களை அறிந்து செய்தற்கரிய செய்கைகளைச் செய்து முடிக்க வல்லவர்களும், பசி நேரிட்ட போது அறிவுங் கருத்தும் அழிந்து தடுமாறுகிறார்கள். இராப்பகல் தோன்றாது புணர்ச்சியின்பத்திற் பொங்குகின்ற காமிகளும் பசிநேரிட்டபோது புணர்ச்சியை மறந்து காமத்தைக் கசந்து கலங்குகிறார்கள். நாமே பெரியவர், நமக்கு மேற் பெரியவர் இல்லை என்று இறுமாப்படையென்ற அகங்காரிகளும் பசிநேரிட்ட போது ஆங்காரங் குலைந்து ஆகாரம் கொடுப் பவரைப் பெரியராகப் புகழ்கின்றார்கள். ஒருவகைக் காரியங்களில் அநகே வகைகளால்

உபசரிக்கச் செய்கின்ற டம்பர்களும் பசிநேரிட்ட போது டம்பத்தை இழந்து மயங்குகின்றார்கள். இவரிவர் இப்படி இப்படியாகில் ஒருவகை யாதாரமுமில்லாத ஏழைகள், பசிநேரிட்ட போது என்ன வாழ்வு என்று சொல் வார்கள். அந்தக் காலத்தில் அந்த ஏழைகளுக்கு ஆகாரம் கிடைத்தால் எப்படிப்பட்ட சந்தோஷம் உண்டாகும். அந்த சந்தோஷத்தைத் தோற்றுவித்தவர்களுக்கு எப்படிப்பட்ட லாபம் கிடைக்கும். இப்படிப்பட்ட தென்று சொல்லுதற்கு அருமை என்றறிய வேண்டும்.

சீவர்களுக்குப் பசி அதிகரிங்குங்காலத்தில் சீவ அறிவு விளக்க மில்லாமல் மயங்குகின்றது. அது மயங்கவே அறிவுக் கறிவாகிய கடவுள் விளக்கம் மறைபடுகின்றது. அது மறையவே புருடதத்துவம் சோர்ந்து விடுகின்றது. அது சோரவே ப்ரகிருதி தத்துவம் மழுங்கு கின்றது. அது மழுங்கவே குணங்களெல்லாம் பேதப்படுகின்றன. மனம் தடுமாறிச் சிதறுகின்றது - புத்தி கெடுகின்றது. சித்தங் கலங்குகின்றது; அகங்காரம் அழிகின்றது; பிராணன் சுழல்கின்றது; பூதங்களெல்லாம் - புழுங்குகின்றன. வாத, பித்த, சிலேட்டுமங்கள் நிலை மாறுகின்றன; கண் பஞ்சடைந்து குழிந்து போகின்றது. காது கும்மென்று செவிடு படுகின்றது. நா உலர்ந்து வறளுகின்றது. நாசி குழைந்து உலர்கின்றது. தோல் மெலிந்து ஸ்மரணை கெடுகின்றது, கை, கால், சோர்ந்து துவளுகின்றன. வாக்குத் தொனிமாறிக் குளறுகின்றது. பற்கள் தளருகின்றது. ரோமம் வெளிக்கின்றது. நரம்புகள் குழைந்து நைகின்றன. நாடிகள் கட்டு விட்டுக் குழைகின்றன. எலும்புகள், கருகிப் பூட்டுகள் நெக்கு விடுகின்றன. இருதயம் வேகின்றது. மூளை சுருங்குகின்றது சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றது. ஈரல் கரைகின்றது. இரத்தமும் சலமும் சுவறுகின்றன. மாமிசம் குழைந்து தன்மை கெடுகின்றது. வயிறு பகீரென்றெரிகின்றது. தாப சோபங்கள் மேன்மேலும் உண்டாகின்றன. உயிரிழந்து விடுவதற்கு மிகவுஞ் சமீபித்த அடையாளங்களும் அநுபவங்களும் மேன் மேலும் தோன்றுகின்றன. பசியினால் இவ்வளவு அவத்தைகளும் தோன்றுவது சீவர்களுக் கெல்லாம் பொதுவாகவேயிருக்கின்றது.

இவ்வளவு அவத்தைகளும் ஆகாரங் கிடைத்தபோது உண்டு பசி நீங்க நீங்குகின்றன. அப்போது தத்துவங்களெல்லாம் தழைத்து உள்ளங் குளிர்ந்து அறிவு விளங்கி அகத்திலும் முகத்திலும் சீவகளையுங் கடவுட்களையுந் துளும்பி ஒப்பில்லாத திருப்தியின்பம் உண்டா கின்றது - இப்படிப்பட்ட இன்பத்தை உண்டு பண்ணுகின்ற

புண்ணியத்துக்கு எந்தப் புண்ணியத்தை இணையென்று சொல்லலாம். இந்தப் புண்ணியத்தைச் செய்கின்ற புண்ணியவான்களை எந்தத் தெய்வத்துக்குச் சரி என்று சொல்லலாம்? எல்லாத் தெய்வங்கட்கும் மேலாகிய கடவுளம் சமென்றே சத்தியமாக அறியவேண்டும். இதனால் நரக வேதனை சனனவேதனை என்கின்ற மூன்று வேதனை களும் கூடி முடிந்த வேதனையே பசி வேதனை என்றும், அகம், புறம், நடு, கீழ் மேல் பாகம் என்கிற எவ்விடத்தும் நிறைந்து எக்காலத்தும் வேறுபடாத மோட்ச இன்பமே ஆகாரத்தினாலுண்டாகும் திருப்தியின்பம் என்றும் அறியப்படும்.

பசியில்லாவிடில் சீவர்கள் ஆகாரங் குறித்து ஒருவரை யொருவர் எதிர்பார்க்க மாட்டார்கள்; எதிர்பாராத பட்சத்தில் உபகாரச் செய்கை தோன்றாது - அது தோன்றாத போது சீவகாருணியம் விளங்காது. அது விளங்காதபோது கடவுளருள் கிடைக்கமாட்டாது. ஆதலால் பசியும் கடவுளாற் கொடுக்கப்பட்ட ஓர் உபகாரக் கருவியென்றே அறியவேண்டும்.

பசியினால் துன்பப் படுகின்றவர்கள் ஆகாரத்தைக் கண்ட காலத்தில் அடைகின்ற சந்தோஷம் தாய், பிதா, பெண்டு, பிள்ளை, காணி, பூமி, பொன், மணி முதலான வைகளைக் கண்ட காலத்திலும் அடையார்களாயின் ஆகாரம் உண்ட காலத்தில் உண்டாகும் சந்தோஷம் எப்படிப்பட்டதாக இருக்கும்? ஆதலால் இந்த ஆகாரத்தின் சொரூப ரூப சுபாவங்களும் கடவுளருளின் ஏகதேசத்தின் சொரூப ரூப சுபாவங்களாகவே அறிய வேண்டும்.

பசி என்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினும் பற்றி எரிகிற போது ஆகாரத்தால் அவிக்கின்றது தான் சீவகாருண்யம் - பசி என்கிற விஷக்காற்றினால் ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்து ஆகாரங் கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே ஜீவகாருண்யம். கடவுளியற்கை விளக்கத்திற்கு இடமாகிய சீவ தேகங்களென்கிற ஆலயங்கள் பசியினால் பாழாகுந் தருணத்தில் ஆகாரங் கொடுத்து அவ்வாலயங்களை விளக்கஞ் செய்விப்பதே சீவகாருண்யம். கடவுள் இன்பத்தைப் பெறுகின்ற நிமித்தம் தேகங் களிலிருந்து குடித்தனஞ் செய்கின்ற சீவரது தத்துவக் குடும்ப முழுதும் பசியினால் நிலை தடுமாறி அழியுந் தருணத்தில் ஆகாரங் கொடுத்து அக்குடும்ப முழுதும் நிலைபெறச் செய்வதே சீவகாருணியம். - பசி என்கிற புலியானது ஏழை உயிர்களைப்

பாய்ந்து கொல்லத் தொடங்கும் தருணத்தில் அப்புலியைக் கொன்று அவ்வுயிரை இரட்சிப்பதே சீவகாருண்யம் பசி என்கிற விஷம் தலைக்கேறிச் சீவர் மயங்குந் தருணத்தில் ஆகாரத்தால் அவ்விஷத்தை இறக்கி மயக்கந்தெளியச் செய்வதே சீவகாருணியம் - பசி என்கிற கொடுமையாகிய தேள் வயிற்றிற் புகுந்து கொட்டுகின்ற போது கடுப்பேறிக் கலங்குகின்ற ஏழைகளுக்கு ஆகாரத்தால் அக்கடும்பை மாற்றிக் கலக்கத்தைத் தீர்ப்பதே சீவகாருணியம் - வெயிலேறிப் போகின்றதே, இனி பசியென்கிற வேதனை வந்து சம்பவிக்குமே! இந்த விதி வசத்திற்கு என்ன செய்வது! என்று தேனில் விழுந்த ஈயைப் போல, திகைக்கின்ற ஏழைச் சீவர்களுடைய திகைப்பை நீக்குவது தான் சீவகாருணியம் - இருட்டிப் போகின்றதே, இனி ஆகாரங் குறித்து எங்கே போவோம்! யாரைக் கேட்போம்! என்ன செய்வோம்! என்ற விசாரத்தில் அழுந்திய ஏழைச் சீவர்களது விசாரத்தை மாற்றுவதே சீவகாருணியம் - நடந்து நடந்து காலுஞ் சோர்ந்தது, கேட்டுக் கேட்டுக் காதும் சோர்ந்தது, நினைத்து நினைத்து மனமுஞ் சோர்ந்தது, இனி இப் பாவிவயிற்றுக்கு என்ன செய்வோம்! என்று கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துக் கண்ணீரை மாற்றுவதே சீவகாருணியம் - பகற்போதும் போய்விட்டது. பசியும் வருத்துகின்றது, வேறிடங்களிற் போக வெட்கந் தடுக்கின்றது; உயிரை விடுவதற்கும் உபாயந் தெரிய வில்லை; இவ்வுடம்பை ஏன் எடுத்தோம்! என்று மனமும் முகமும் சோர்ந்து சொல்வதற்கு நாவெழாமல் உற்பாத சொப்பனங் கண்ட ஊமையைப் போல் மனம் மறுகுகின்ற மானிகளாகிய சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து மானத்தைக் காப்பதுவே சீவகாருணியம் - நாம் முன் பிறப்பில் பதித்தவர்கள் பசிக்குறிப்பறிந்து பசியை நீக்கியிருந்தால், இப்பிறப்பில் நமது பசிக் குறிப்பறிந்து பசியை நீக்குவதற்குப் பிறிதொருவர் நேர்வார். அப்போது அப்படிநாம் செய்ததில்லை, இப்போது நமக்கிப்படிச் செய்வாருமில்லை; என்று விவகரித்துக் கொண்டு தூக்கம் பிடியாமல் துக்கப்படுகின்ற ஏழைச் சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்கித் தூக்கம் பிடிக்கவைப்பதே சீவகாருணியம் - தேகமுழுதும் நரம்புகள் தோன்றப் பசியினால் இளைத்து உயிரொடுங்கி மூர்ச்சை மூடிய காலத்தும் அயலாரைக் கேட்பது துணியாமற் கடவுளை நினைத்து நினைத்து நெருப்பிற் படுத்து நித்திரை செய்யத் தொடங்குவாரைப் போல அடிவயிற்றிற் கொடிய பசி நெருப்பை வைத்துப் படுக்கத் தொங்குகின்ற விவேகி

களுக்கு ஆகாரங்கொடுத்து அந்தப் பசி நெருப்பை ஆற்றுவதே சீவகாருணியம் - நேற்றுப் பட்டினி கிடந்தது போல் இன்றும் பட்டினி கிடக்கத் துணிவோமாயினும் பட்டினி சகியாத நமது ஏழை மனைவி வயிற்றுக்கு யாது செய்வோம்?

இவள் பசியைக் குறிப்பதும் பெரிதல்ல, வார்த்திப திசையால் (முதுமைத்தளர்ச்சியால்) மிகவும் சோர்ந்த நமது தாய் தந்தைகள் இன்றும் பட்டினி கிடந்தால் இறந்து விடுவார்களே! இதற்கென்ன செய்வோம்? பசியினால் அழுதழுது களைத்த நமது புத்திரர்களது சோர்ந்த முகத்தை எப்படிப் பார்ப்போம்? என்று எண்ணி எண்ணிக் கொல்லன் உலையிலூத மூண்ட நெருப்பைப் போல், பசி நெருப்பும், பயநெருப்பும், விசாரநெருப்பும், விசாரநெருப்பும் உள்ளே மூண்ட படியிருக்கக் கன்னப்புடையில் கைகளை வைத்துக் கொண்டு கண்களில் நீர் கலங்க வருந்துகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்து வருத்தத்தை மாற்றுவதே சீவகாருணியம் - கண், கை, கால் முதலிய உறுப்புகளிற் குறைவில்லாதவர்களாய் ஆகாரஞ் சம்பாதிக்கத் தக்க சத்தியுள்ளவர்களும் பசியால் வருந்தி இதோ படுத்திருக்கின்றார்கள், குருடும் செவிடும் ஊமையும் முடமுமாக இருக்கின்ற நமக்கு ஆகாரம் எந்த வழியாற் கிடைக்கும்? பசி எப்படி நீங்கும்! என்று தனித் தனிநினைத்து நினைத்துத் துக்கப்படுகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்குவதே சீவகாருணியம் - பசியினால் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தாராயினும், எந்தச் சமயத்தாராயினும், எந்தச் சாதியா ராயினும் அவர்கள் தேச ஒழுக்கம், சமய ஒழுக்கம் சாதி ஒழுக்கம் செய்கை ஒழுக்கம் முதலானவைகளைப் பேதித்து விசாரியாமல், எச்சீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாக விளங்குவதை அறிந்து பொதுவாகப் பார்த்து அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியம், சன்மார்க்க ஒழுக்கத்திற்கு ஒத்த சத்துவ ஆகாரத்தால் பசி நிவர்த்தி செய்து கொள்ளத்தக்க மிருகம் பறவை ஊர்வன தாவரம் என்கின்ற உயிர்களுக்குப் பசி வந்த போது பசி நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியம்.

பசியை நிவர்த்தி செய்து கொள்ளத் தக்க புவன போக சுதந்திரங்களைப் பெறுதற்குரிய அறிவிருந்தும் பூர்வகர்மத்தாலும் அஜாக்கிரதையாலும் அச் சுதந்தரத்தைப் பெற்றுக் கொள்ளாமல்

பசியினால் வருந்துகின்ற சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து அந்தப் பசி வருத்த்தை நீக்கித் திருப்தி யின்பத்தை உண்டு பண்ணுவதற்குக் காரணமாகிய சீவகாருணியம் என்கின்ற திறவு கோலைக் கொண்டு தான் மோட்சமாகிய மேல்வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழவேண்டும். ஆதலில் சீவகாருணிய மென்கின்ற மோட்ச வீட்டுத் திறவுகோலைக் காலமுள்ள போதே சம்பாதித்துக் கொண்ட சமுசாரிகள் சரியை கிரியை யோகம் ஞானம் என்கிற சாதன சகாயங்களை வேண்டாமல் எக்காலத்தும் அடையாத இன்ப வீட்டை அடைந்து அவ்வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே புகுந்து நித்திய முத்தர்களாய் வாழ்வார்கள்.

புண்ணிய பூமிகளை வலஞ்செய்தல், புண்ணியதீர்த்தங் களிலாடல் புண்ணியதலங்களில் வசித்தல், புண்ணிய மூர்த்திகளைத் தரிசித்தல், தோத்திரஞ் செய்தல், ஜெபஞ் செய்தல் யாகஞ் செய்தல், பூஜை செய்தல் முதலிய சரியை கிரியைகளைச் செய்கின்ற விரதிகளும் பக்தர்களும் இருடிகளும், உணவை நீக்கி உறக்கத்தை விட்டு விஷயச் சார்புகளைத் துறந்து இந்திரியங்களை அடக்கி மனோலயஞ் செய்து யோகத்திலிருக்கின்ற யோகிகளும் அளவிறந்த சித்தி யின்பங்களைப் பெற்ற சித்தர்களும், நித்தியா நித்தியங்களை அறிந்து எல்லாப் பற்றுக்களையும் துறந்து பிரமானுபவத்தைப் பெற்ற ஞானிகளும், சீவ காருணியம் என்கிற திறவு கோலைச் சம்பாதித்துக் கொள்ளாதவர்களானால், மோட்ச மென்கிற மேல்வீட்டிற்கு முன்னும் பின்னுமாக ஏறிச் சமீபத்திற் காத்திருந்து மீளவும் அத் திறவுகோலைச் சம்பாதிக்கத் திரும்புவார்களல்லது, கதவைத் திறந்து உள்ளே புகுந்து இன்பத்தை அடைந்து வாழ மாட்டார்களென்று உண்மையாக அறிய வேண்டும். இதனால், அறிவு விளங்கிய சீவர்களுக்கெல்லாம் சீவகாருணியமே கடவுள் வழிபாடு என்றும் அறியப்படும்.

அன்றியும் சீவகாருணிய ஒழுக்கத்தை உடையவர்களாகி அருந்தல், பொருந்தல் முதலிய பிரபஞ்ச போகங்களை அனுபவிக் கின்ற சமுசாரிகளெல்லாம் சர்வ சக்தியுடைய கடவுளருளுக்கு முழுதும் பாத்திரமாவார்கள். சீவகாருணியம் ஒழுக்கமில்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம் முதலியவை களைச் செய்கின்றவர்கள். கடவுளருளுக்குச் சிறிதும் பாத்திரமாகார்கள். அவர்களை ஆன்ம விளக்கமுள்ளவர்களாவும் நினைக்கப்படாது.

சீவகாருணியமில்லாது செய்யப்படுகிற செய்கைகளெல்லாம் பிரயோஜனமில்லாத சாலச் செய்கைகளே யாகுமென்று அறிய வேண்டும்.

எல்லாச் சீவர்களும் கடவுள் இயற்கையுண்மை ஏக தேசங்களாகலாலும் அவரவர் இடங்களிற் கடவுள் அருள் விளக்கம் விளங்குவதாலும் சமுசாரிகளுள் தமது தாய் தந்தை புணர்ந்தோர் மக்கள் துணைவர் முதலிய குடும்ப மட்டில் பசியாற்றிக் கொள்ளத் தக்க அற்ப சக்தியுள்ள சமுசாரிகள் தாய் பிதா, மக்கள் துணைவர் முதலிய குடும்பத்தாரைப் பசியினாற் பரிதபிக்க விட்டு விட்டு அயலார்க்குப் பசியாற்றல் தொடங்குதலும், தம்மிடத்துப் பசியது வந்த அயலாரை அந்தப் பசியால் பரிதபிக்க விட்டுத் தம் குடும்பத்தார் பசியையாற்றத் தொடங்குதலும் கடவுளருளுக்குச் சம்மதமல்ல. ஆதலால் தமது குடும்பச் செலவைக் கூடிய மட்டில் சிக்கனஞ் செய்து இருதிறத்தார் பசியும் நீக்குதல் வேண்டுமென்றும், அற்ப சத்தியினுங் குறைபட்டுத் தமது குடும்ப மட்டிலும் பசியாற்று விப்பதற்குப் பிரயாசையால் மிகச் சிறிய முயற்சியுடைய சமுசாரிகள் தமது குடும்ப மட்டிலாவது பசியாற்றுவித்துக் கொண்டு தம்மிடத்துப் பசித்து வந்த அயலார் விஷயத்தில் மிகவும் தயவுடையவர்களாகி அவர் பசியை மற்றொருவரைக் கொண்டாவது ஆற்றுவிப்பதற்குத் தக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் இயல்புள்ள பிரபல சமுசாரிகள் தங்கள் தங்கள் வருவாய்க்குத் தக்க வகையில் தாய், பிதா, புணர்ந்தோர், மக்கள், துணைவர், உறவினர், சினேகர், அதிதிகள், பெரியர், அடிமைகள் அயலார், பகைவர் முதலியவர் களுக்கும், தமது குடும்பத்திற்குச் சகாயமாகத் தேடிய பசு, எருது, எருமை, ஆடு, குதிரை, தாவரம் முதலிய பிராணிகளுக்கும், பசியை ஆற்றுவித்துத் திருப்தியின்பத்தை உண்டு பண்ண வேண்டுமென்றும், விவாகம் புத்திரப் பேறு, தெய்வம் படைத்தல் முதலிய பலவகைச் செய்கைகளில் வேறு வேறுசடங்குகளும் வேறு வேறு வினோ தங்களும் வேறு வேறு பெருமைப்பாடுகளும் குறித்துப் பொருட் செலவு செய்தலை அமைத்து, விவாக முதலிய அந்தந்தச் செய்கை களிலும் பசித்த சீவர்களுக்குப் பசியை ஆற்றுவித்து இன்பத்தை உண்டு பண்ணுகின்ற சிறப்பினையே செய்ய வேண்டும், என்றும் அப்படிச் செய்யின் பசித்தவர் பசி நீங்கி அடைந்த இன்பத்திலும் அனேக மடங்கு அதிகமான இன்பத்தைத் தாம் அடைவார் களென்றும் சத்தியமாக அறிய வேண்டும்.

சமுசாரிகள் விவாக முதலிய விசேஷ காரியங்களில் பந்தலை அலங்கரித்தும், வேறு வேறு சடங்குகளைச் செய்வித்தும், ஆடல், பாடல், வரிசை ஊர்வலம் முதலிய வினோதங்களையும் அப்பவர்க்கம், சித்திரான்னம் முதலிய பெருமைப் பாடுகளையும் நடத்தியும் எக்களிப்பில் அழுந்தியிருக்குந் தருணத்தில் பசித்த ஏழைகள் முகத்தைப் பார்க்கவும் சம்மதிப்பதில்லை. இப்படிப்பட்ட சந்தோஷ காலத்தில் தமக்காயினும் தமது மக்கள் துணைவர் முதலியோர்களுக்காயினும் ஒவ்வோர் ஆபத்து நேரிடுகின்றது. அப்போது அவ்வளவு சந்தோஷத்தையும் இழந்து துக்கப்படு கிறார்கள். இப்படித் துக்கப்படும் போது அலங்காரஞ்செய்த பந்தலும், சங்கல்ப விகல்பமான சடங்குகளும், பாடல் வாத்தியம் வரிசை ஊர்வலம் முதலிய வினோதங்களும் அப்பவர்க்கம், சித்திரான்னம் முதலிய பெருமைப் பாடுகளும் அந்த ஆபத்தைத் தடை செய்யக் கண்டதில்லை, அந்தச் சுபகாரியத்தில் உள்ள படியே பசித்த சீவர்களுக்கு ஆகாரங்கொடுத்துப் பசியை நீக்கி அவர்கள் அகத்திலும் முகத்திலும் கடவுள் விளக்கத்தையும் கடவுளின் பத்தையும் வெளிப்படச் செய்திருந்தார்களானால் அந்த விளக்க மும் இன்பமும் அத்தருணத்தில் நேரிட்ட ஆபத்தை நீக்கி விளக்கத்தையும் இன்பத்தையும் சத்தியமாக உண்டு பண்ணு மல்லவா? ஆதலின் விவாக முதலிய விசேஷச் செய்கைகளிலும் தங்கள் தங்கள் தரத்திற்கு ஒத்தபடி பசித்தவர்களது பசியை ஆற்றுவித்துத் திருப்தி இன்பத்தை உண்டு பண்ணுவது முக்கியம் என்று அறியவேண்டும். சூலை, குன்மம், குஷ்டம், முதலிய தீராத வியாதிகளால் வருந்துகின்ற சமுசாரிகள் தங்கள் தரத்திற்கு ஒத்தபடி பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாக அனுசரித்தார்களானால் அந்தச் சீவகாருணிய அனுசரிப்பே நல்ல மருந்தாக அந்த வியாதிகளை நிவர்த்தி செய்து, விசேஷ சௌக்யத்தை உண்டு பண்ணுமென்பது உண்மை. பல நாள் சந்ததியில்லாமல் பலபல விரதங்களைச் செய்து வருந்துகின்ற சமுசாரிகள் தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளது பசியை ஆற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார் களானால், அந்தச் சீவகாருண்ய அனுசரிப்பு நல்ல அறிவுள்ள சந்ததியை உண்டு பண்ணுமென்பது உண்மை. அற்ப வயதென்று குறிப்பினால் அறிந்து கொண்டு இறந்து போவதற்கு அஞ்சி விசாரப் படுகின்ற சமுசாரிகள் தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழை களுக்குப் பசியை ஆற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களானால்

அந்தச் சீவகாருணிய அனுசரிப்பு தீர்க்காயுளை உண்டு பண்ணு மென்பது உண்மை. கல்வி அறிவு செல்வம் போகம் முதலியவை களைக் குறித்து வருந்துகின்ற சமுசாரிகள் தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாக அனுசரிப்பார்களேயானால் அந்த சீவகாருணிய அனுசரிப்பு கல்வி அறிவு செல்வம் போகம் முதலானவைகளை உண்டு பண்ணு மென்பது உண்மை.

பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே விரமாகக் கொண்ட சீவகாருணியமுள்ள சமுசாரிகளுக்குக் கோடையில் வெயிலும் வருத்தாது; மண்ணும் சூடு செய்யாது பெருமழை, பெருங்காற்று, பெரும் பனி பேரிடி பெரு நெருப்பு முதலிய உற்பாதங்களும் துன்பம் செய்விக்க மாட்டா. விடுசீகை (வைசூரி அம்மை) விஷக்காற்று விஷசுரம் முதலிய அசாத்தியப் பிணிகளுமுண்டாகா. அந்தச் சீவகாருணியமுள்ள சமுசாரிகள் ஆற்று வெள்ளத்தாலும் கள்ளர்களாலும் விரோதிகளாலும் கலக்கப்படார்கள். அரசர் களாலும் தெய்வங்களாலும் அவமதிக்கப்படார்கள். காருணிய முள்ள சமுசாரி களது விளைநிலத்தில் பிரயாசை யில்லாமலே விளைவு மேன்மேலும் உண்டாகும் - வியாபாரத்தில் தடையில்லாமல் லாபங்களும், உத்தியோகத்திற் கெடுதியில்லாத மேன்மையும் உண்டாகும் - சுற்றங்களாலும் துஷ்ட ஜந்துக் களாலும் துஷ்டப் பசாசுகளாலும் துஷ்ட தெய்வங்களாலும் பயஞ்செய்யப்படார்கள் - சீவகாருணிய முள்ள சமுசாரிகளுக்கு எப்படிப்பட்ட ஆபத்துக்களும் அஜாக்கிரதை யினாலும் ஊழ்வகையினாலும் சத்தியமாக வாரா.

பசித்தவர்களுக்குப் பசியாற்றுவித்து இன்பத்தை உண்டு பண்ணுகின்ற சீவகாருணிய ஒழுக்க மாகிய மேலான விரதமானது தேவர்கள், மனிதர்கள், பிரமச்சாரிகள், சமுசாரிகள், தவசிகள், சந்நியாசிகள், ஆண்சாதியர், பெண் சாதியர், வார்த்திபர், வாலிபர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் முதலிய யாவராலும் அவசியம் செய்யத் தக்கதென்பது கடவுளாணையென்றறிய வேண்டும்.

பசித்தவர்களுக்குப் பசியை நீக்குகின்ற விஷயத்தில் புருஷனைப் பெண்சாதி தடுத்தாலும், பெண்சாதியைப் புருஷன் தடுத்தாலும், பிள்ளைகளைத் தந்தை தடுத்தாலும், தந்தையைப் பிள்ளைகள் தடுத்தாலும் சீஷரை ஆசாரியர் தடுத்தாலும், அடியாரை ஆண்டவன் தடுத்தாலும், குடிகளை அரசன் தடுத்தாலும் அந்தத் தடைகளால்

சிறிதுந் தடைபடாமல் அவரவர் செய்த நன்மை தீமைகள் அவரவரைச் சேருமல்லது வேறிடத்திற் போகா வென்பதை உண்மையாக நம்பிச் சீவகாருணிய ஒழுக்கத்தை நடத்த வேண்டு மென்றும் அறியவேண்டும். உள்ளபடி பசியால் வருந்துகின்ற சீவர்களுக்கு ஆகாரங்கொடுக்க நினைத்த போது, நினைத்த புண்ணியரது மனம் வேறு பற்றுக்களை விட்டுச் சுத்தக்கரணமாகி நினைத்த படியால் அந்தப் புண்ணியர்களை யோகிகளென்றே உண்மையாக அறியவேண்டும். ஆகாரங் கொடுக்க நினைத்தபடி உபசரித்துக் கொடுக்கும்போது, அவருண்ணுவது தாமுண்ணுவதாக அறிந்து களிக்கின்ற படியால் ஞானிகளென்றே உண்மையாக அறிய வேண்டும். ஆகாரங் கொடுக்க உண்டு பசி தீர்ந்தவர்களுக்கு அத்தருணத்தில் ஆன்மாவின் உள்ளும் புறத்தும், கீழும் மேலும், நடுவும் பக்கமும் நிறைந்து கரண முதலிய தத்துவங்களெல்லாம் குளிர்வித்துத் தேகமுழுதும் சில்லென்று தழைய முகத்தினிடமாகப் பூரித்து விளங்குகின்ற கடவுள் விளக்கத்தையும் திருப்தியின்பமாகிய கடவுளின் இன்பத்தையும் பிரத்தியட்சத்தில் தரிசித்து அனுபவிக் கின்றார்களாதலால், அந்தப் புண்ணியர்கள் கடவுளைக் கண்டவர் களென்றும் கடவுளின்பத்தை அனுபவிக்கின்ற முத்தரென்றும் அறிய வேண்டும். பசி நீங்க உண்டு சந்தோஷித்தவர்கள் இந்தப் புண்ணியர்களைத் தெய்வமாகப் பாவிக்கின்றார் களாதலால், இவர்களே தெய்வமுமென்று உண்மையாக அறிய வேண்டும்.

சீவகாருணிய ஒழுக்கமுடையவர்களாகிச் சீவர்களைப் பசியென்கிற அபாயத்தினின்றும் நீங்கச் செய்கின்ற உத்தமர்கள், எந்தச் சாதியாராயினும், எந்தச் சமயத்தவராயினும், எந்தச் செய்கையையுடையவர்களாயினும், தேவர், முனிவர் சித்தர் யோகர் முதலிய யாவராலும் வணங்கத்தக்க சிறப்புடைய வராவர்களென்று சர்வ சக்தியையுடைய கடவுள் சாட்சியாகச் சத்தியஞ் செய்யப்படு மென்று அறிய வேண்டும்.

மேற்குறித்த வள்ளலாரின் அருள் மொழிகள் உயிர்களில் உணர்வொழுக்கங்களை அழித்து அவ்வுயிர்கட்கு இறுதி விளைப்பதாகிய பசிப்பிணியின் கொடுமையினையும் அற்றார் அழிபசி தீர்த்தலாகிய நல்லறத்தினை மேற்கொண்டு செய்வோர் அடைதற்குரிய பெரும் பயன்களையும், வறியோரது பசிதீர்த் தலாகிய அறத்தினைச் செய்யாது மக்கள் மேற்கொள்ளும் அறச்

செயல்களும் தீர்த்த யாத்திரை முதலிய கடவுள் வழிபாடுகளும் எத்தகைய பயனையும் தரமாட்டா என்பதனையும் மக்கள் உள்ளத்தில் பதியும்படி அறிவுறுத்தும் மெய்ம் மொழிகளாக அமைந்துள்ளன. இவ்வாறு வறியோரது பசிப்பிணியை மாற்றுதலின் இன்றியமை யாமையை எல்லோர் உள்ளத்திலும் நன்கு பதியும்படி தெளிவாக வற்புறுத்திய அருளாளர் அருட்பிரகாச வள்ளலார் ஒருவரே எனக் கூறுதல் மிகவும் பொருத்தமுடையதாகும்.

அருளறத்தின் திருவுருவாய்த் தோன்றிய அடிகளார் வாடிய பயிரைக்கண்ட போதெல்லாம் உளம் நைந்து வாடினார். பசியினால் இளைப்புற்று வீடு தோறும் அயர்ந்த வெற்றரைக் கண்டு உளம் வெதும்பினார். நீங்காத நோயால் வருந்துவோரைக் கண்டு உளம் வருந்தி மருந்தளித்துப் பிணிதீர்த்தார். உலகில் ஏழை மக்கள் பசியால் வருந்துகின்றார்கள் என நண்பர்கள் சொல்லக் கேட்ட போதெல்லாம் உளம் பகீரெனத் துடித்தார். மானமுடையராய்ப் பிறர்பால் இரந்துண்ண மனமின்றி ஏழைகளாய் நெஞ்சு இளைத்த வர்களைக் கண்டு இளைப்புற்றார்.

வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்

நீடிய பிணியால் வருந்துகின்றோர் என்
நேருறக் கண்டுளந்துடித்தேன்
ஈடின் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்
சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன். (3471)

எட்டரும் பொருளே திருச்சிற்றம் பலத்தே
இலகிய இறைவனே உலகில்
பட்டினி யுற்றோர் பசித்தனர் களையால்
பரதவிக் கின்றன ரென்றே
ஒட்டிய பிறராற்கேட்ட போ தெல்லாம்
உளம் பகீரென நடுக் குற்றேன்
இட்ட இவ்வுலகிற் பசியெனில் எந்தாய்
என்னுளம் நடுங்குவ தியல்பே. (3431)

எனவரும் திருவருட்பாப் பாடல்கள் மக்கட் சமுதாயத்திலே பசிப்பிணியால் விளையும் துயரங்களை யெண்ணி அடிகளா ருள்ளம் அடைந்த வேதனையினை யுணர்த்துவனவாகும்.

உலகியல் வாழ்விற் பசியின் கொடுமையினை உள்ள வாறுணர்ந்து உள்ளங்கவன்ற இராமலிங்க வள்ளலார் மக்கட் சமுதாயத்திலே பசிப்பிணியினை அறவே நீக்கத் திருவுளங் கொண்டு சீவகாருணிய ஒழுக்கத்தை அன்றாட நடைமுறையிற் செயற்படுத்து தற்கென்றே உத்தர ஞான சிதம்பரம் எனப் பெறும் வடலூரில் சத்தியதருமச் சாலையை நிறுவிப் பசிப்பிணி மருத்துவராகத் திகழ்ந்தார். அடிகளாரது அருட்பணி சமுதாய வாழ்வில் நலிவுற்ற மக்களுக்கு உதவுவதே உண்மையான தெய்வத் திருப்பணியாகும் எனக் கொண்ட அவர்தம் சீவகாருணிய ஒழுக்கத்தினை நன்கு புலப்படுத்துதல் காணலாம்.

பண்டைத் தமிழ்க் காப்பியங்களில் ஒன்றாகிய மணி மேகலையில் ஆபுத்திரனும் அறவண அடிகள் என்னும் புத்ததுறவி பால் உபதேசம் பெற்றுத் துறவு பூண்ட மாதவியின் மகள் மணிமேகலையும் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்னும் உயர்ந்த குறிக்கோளுடன் பிச்சை யெடுத்தாவது மக்களது பசிப்பிணியைப் போக்கிய செய்திகள் நன்கு விரித்துக் கூறப் பெற்றுள்ளன. சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் திருவருட் பிரகாச வள்ளலார் தோன்றி நம் நாட்டில் எத்தகைய வேறுபாடும் கருதாது மக்களது பசிப்பிணியினை நீக்குதற் கென்றே சத்தியதருமச்சாலையை நிறுவித் தமது திருவருட் புலமைத் திறத்தால் ஏழையெளியவர்கட்குப் பசிதீர உணவளிப்பதே கடவுட் பணி என்ற எண்ணத்தினை மக்கள் உள்ளத்திலே நன்கு நிலை பெறச் செய்தருளினார்கள். அடிகளார் சமுதாய வளர்ச்சிக்கெனத் தொடங்கிய இச் செயல், மக்களது ஆட்சி யுருப்பெற்று வளரும் இக்கால அரசியல் ஆட்சி முறைக்கு அரண் செய்யும் நிலையில் அமைந்துள்ளமை அறிந்து போற்றத் தகுவதாகும்.

# 6. கொலையும் புலையும் தவிர்த்த குரிசில்

“இலங்கும் உயிர் உடல் அனைத்தும் ஈசன் கோயில்”

என்பது,

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே. (திருமந்திரம் 1823)

எனவரும் திருமூலர் வாய்மொழியால் அறிவுறுத்தப்பெறும் பேருண்மையாகும்.

கருணைக் கடலாகிய இறைவனுக்கு ஊனினாலாய இவ்வுடம்பு ஆலயமாகவும், உடம்பின் உட்கருவியாகிய உள்ளம் கருவறையாகிய பெருங்கோயிலாகவும் அம்முதல்வனது பொருள் சேர் புகழ்த்திறங்களை எடுத்துரைத்து வாழ்த்துதற்குரிய வாயானது, அக்கோயிலுக்குரிய கோபுர வாயிலாகவும், ஐயத்துக் கிடமின்றி மெய்ப் பொருளை உணர்ந்து போற்றும் சிவஞானத் தெளிவுடை யோர்களுக்கு அவர்தம் ஆன்மாவே இறைவன் எழுந்தருளி அருள் வழங்குதற்குரிய சிவலிங்கமாகிய அருட் குறியாகவும், ஆன்மாவைக் கள்ளத்தால் தன்வழி ஈர்த்து நிற்கும் ஐம்புலன்களே ஒளி தரும் நல்விளக்காவும் அன்னோர் அகத்தே புரியும் சிவபூசையில் அமைதற்குரியன என்பது இத் திருமந்திரத்தின் பொருளாகும்.

தெளிந்த சிந்தனையினர்களாகிய சிவஞானிகள் செய்யும் இவ்வகப் பூசையானது, எல்லா உயிர்களிடத்திலும் இறைவன் நீக்கமின்றி எழுந்தருளியிருக்கும் நீர்மையை நன்கு வற்புறுத்தும் நிலையில் அமைந்துள்ளமை காணலாம். இவ்வாறு உயிர்கள் யாவும் இறைவனை வழிபடுதற்குரிய அருட்குறியாகத் திகழும் உண்மையை உணர்ந்த அருளாளர்கள் மன்னுயிர்களை இரக்கமின்றிக் கொல்லுதலும்,

அவற்றின் ஊனைத்தின்று தம்முடம்பைப் பெருக்குதலும் ஆகிய தீவினைகளை மனத்தாலும் எண்ணமாட்டார்கள். உயிர்களைக் கொல்லாமையும் அவற்றின் ஊனாகிய புலாலை உண்ணாமையு மாகிய அருளறவழியில் ஒழுகுவோர் எல்லாவுயிர்களும் தம்மைக் கைகூப்பித் தொழும் தெய்வ நிலையை இவ்வுலகில் வாழும் பொழுதே அடை கின்றார்கள். இவ்வுண்மை,

> கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
> எல்லா வுயிரும் தொழும். (திருக்குறள் 260)

எனவரும் தெய்வப்புலவர் வாய்மொழியால் நன்கு தெளியப்படும்.

வேள்வியிலும் சிறு தெய்வ வழிபாடுகளிலும் ஆடு, கோழி முதலிய சிற்றுயிர்களைப் பலியிடும் வழக்கம் நம் நாட்டு மக்களிடையே நெடுங்காலமாக நிலைபெற்று வந்தது என்பதனைப் பலரும் அறிவர். இவ்வாறு மக்கள் தம்முடைய சொந்த விருப்பம் நிறைவேறுதற் பொருட்டுப் பிறவுயிர்களைப் பலியிடும் வழக்கம் நம் தமிழகத்தைப் பொறுத்த வரையில் இடைக்காலத்தில் வந்ததென்றே எண்ண வேண்டியுள்ளது.

பண்டைய நாளில் தமிழகத்தில் வாழ்ந்த தறுகண்மை மிக்க பெருவீரர்கள், தம் நாட்டு மக்கள் போரில் பகைவரை வென்று வெற்றி பெறுதல் வேண்டுமென்னும் உயர்ந்த குறிக்கோளுடன் தம்முயிரையே, அவிப்பலியாக பலிப் பொருளாகத் தந்து வெற்றித் தெய்வமாகிய கொற்றவையை வழிபட்டார்கள் என்பது பழந்தமிழ் நூல்களாலும் பிற்காலத்தில் வீரர்களைப் பற்றி வரையப் பெற்றுள்ள கல்வெட்டுக்களாலும் அறியப்படும் வரலாற்றுச் செய்தியாகும். இவ்வாறு தம்முயிரையே அவிப்பலியாகத் தந்து தெய்வத்தை வழிபடும் நெஞ்சத் திண்மை வாய்க்கப் பெறாது கோழைகளாகிய பிற்காலத்தார், தாம் விரும்பிய காரியம் நிறைவேற வேண்டித் தம்முயிர்க்கு ஈடாக ஆடு கோழி முதலான சிற்றுயிர்களையே தெய்வத்துக்குப் பலியாக இட்டு வழி படத் தொடங்கினர். இத்துய பழக்கமே பிற்காலத்தில் நாடு முழுவதும் எளிதிற் பரவுவதாயிற்று. இவ்வாறு மக்கட் குலத்தார் பகைவரை வெற்றி கொள்ளுதல், தம் உடம்பின் நோய் நீங்குதல் முதலிய பலன்களைப் பெறுதல் வேண்டித் தம்மைத்தாம் பாதுகாத்துக் கொள்ளும் வன்மையில்லாத எளிய உயிர்களைத் தெய்வத்துக்குப் பலியாக இடும் கொலைப் பழக்கத்தை மேற்கொண்டனர். இதனால் தெய்வத்துக்குப்

பலிஇடப்பட்ட உயிருடம்பின் ஊனினை நிவேதனப் பொருளாகக் கொண்டு புலால் உண்ணும் பழக்கமும் நாளடைவில் மிகுதிப்படுவ தாயிற்று. இவ்வாறு தெய்வ வழிபாட்டில் சிற்றுயிர்களைக் கொன்று பலியிடுதலாகிய இச்செயல் மக்களது பகுத்தறிவுக்கும் எல்லாவுயிர் களிடத்தும் நிறைந்திருக்கும் இறைவனது திருவருட் குறிப்பிற்கும் ஏலாத மூடப்பழக்கமென்பதனை அருளாளர் அனைவரும் நன்குணர்வர். மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் அன்பு, அருள் முதலிய உயிர்ப்பண்பின் வளர்ச்சிக்கும் இன்றியமையாத ஒழுகலாறு, கொலையும் புலையுந் தவிர்ந்த அருளற வாழ்வேயாகும்.

இத்தகைய நல்லற வாழ்வினைக் கற்றார் - கல்லாதார் ஆகிய எல்லாரும் உளமுவந்து ஏற்றுக்கொண்டு "கொல்லாமை - புலால் உண்ணாமை" ஆகிய இவ்விரு பேரறங்களையும் தமது வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகும் வண்ணம் தெளிவாக அறிவுறுத்திய அருளாளர் அருட்பிரகாச வள்ளலாரே யாவர்.

ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்வடநாட்டிற் குடி புகுந்த ஆரிய இனத்தார் தம்முடைய வேதநெறிப்படி செய்தயாகங்களில் ஆடு, மாடு முதலிய விலங்கினங்களைக் கொன்று தம்மால் வழிபடப் பெறும் இந்திரன், வருணன் முதலிய தேவர்கட்கு அவியுணவாக இட்டு வந்தனர். இவ்வாறு வைதீக யாகங்களில் விலங்கினங்களாகிய சிற்றுயிர்களைக் கொல்லும் செயல் மிகுந்து காணப்பட்ட நிலையிலேயே அருளாளர்களாகிய - மகாவீரரும் கௌதம புத்தரும் நம்நாட்டிலே தோன்றி இத்தகைய கொலை வேள்விகளைத் தடுத்துநிறுத்தும் அருட்பணியில் ஈடுபட்டனர். அவ்வருவளாளரது அறிவுரையினைச் செவிமடுத்த மக்கள் எவ்வுயிர்களிடத்தும் இரக்கம் உடையராய் கொலையும் புலையும் தவிர்த்து வாழும் அருளற நெறியினைக் கடைப்பிடித் தொழுகுவாராயினர். இவ்வாறு, கொல்லாமை - புலாலுண்ணாமை யாகிய இரு பேரறங்களையும் கடைப்பிடித்து வாழுதற்குரிய நெறிமுறையினை வகுத்தளித்த அருளாளர்களுள் முதன்மை பெற்று விளங்குபவர் சமணசமயத் தலைவராகிய மகாவீரர் ஒருவரே எனக் கூறுதல் மிகவும் பொருத்த முடையதாகும். அறவழியில் பொருளீட்டி அப்பொருளால் இன்பம் நுகர்ந்துவாழும் நெறிமுறையினைக் கூறும் வாழ்வியல் நூலாகிய திருக்குறளை அருளிச் செய்த தெய்வப் புலமைத் திருவள்ளுவனார், புலால்மறுத்தல், கொல்லாமை என்னும்

அதிகாரங்களில், இவ்விரு பேரறங்களையும் அருளாளராகிய சான்றோர்க்கு உயிரினும் சிறந்தனவாக வற்புறுத்தியுள்ளமை இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

கொலைத் தொழிலின் காரியமாகவும், மீண்டும் அதனைத் தூண்டுதலால் கொலைகளுக்குக் காரணமாகவும் அமைந்தது, ஊன் உண்ணுதலாகிய தீவினை. இத்தகைய பாவச்செயல் அருட்குண முடையார்க்கு எவ்வாற்றானும் பொருந்தாது என்பதனை அறிவுறுத்துவதே திருக்குறளில் உள்ள "புலால் மறுத்தல்" என்னும் அதிகாரமாகும். புலால் மறுத்தல் - ஊன் உண்ணுதலை ஒழித்தல் (புலால் - ஊன்). மக்களது உடம்பு நெல், கோதுமை முதலிய தானியங்கள், இலை, பூ, காய்கனிகள் ஆகியவற்றை உணவாகக் கொண்டே உரிய அளவில் வளர்தற் குரியதாகும். இயல்பாகக் கிடைக்கும் இத் தாவரவுணவுகளைக் கொண்டே மனிதன் தன் உடம்பை நன்முறையில் வளர்த்துக் கொள்ள முடியும். உடல் வளர்ச்சிக்குப் போதுமான இவ்வுணவுகள் இருக்கவும் பிறிதோர் உயிரைக் கொன்று அதன் ஊனினை உணவாகக் கொள்ள விரும்புவது அதன் மேலும் தன் உடம்பினை வீங்கச் செய்தலாகும் எனவும், இவ்வாறு தன் உடம்பைப் பெருக்கப் பிறிதோர் உயிரைக் கொன்று அதன் ஊனைத் தின்பவன் 'அருள்' என்னும், பண்பினைப் பெறுதல் இயலாது எனவும் புலாலுண்ணுதலைக் கண்டு இரங்கும் நிலையில் அமைந்தது,

> தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிதூன் உண்பான்
> எங்ஙனம் ஆளும் அருள். (251)

எனவரும் திருக்குறள் ஆகும்.

புலால் என்பது பிறிதோர் உடம்பின் புண்ணாகும். இவ்வாறு அதன் இழிவினைத் தெரிந்து கொண்டவர்கள் அதனை உண்ணா திருத்தல் வேண்டும் எனப் பொருந்து மாறாகிய உத்தியினால் புலால் உணவின் இழிவினைப் புலப்படுத்துவது,

> உண்ணாமை வேண்டும் புலாஅல், பிறிதொன்றன்
> புண்ண துணர்வார்ப் பொறின். (257)

எனவரும் திருக்குறளாகும்.

வேள்வித் தீயின்கண் நெய் முதலிய அவி உணவினைச் சொரிந்து ஆயிரம் யாகங்களைச் செய்வதைவிட உடம்பினின்று ஓர்

*உயிரைப் போக்கி அதன் ஊனை உண்ணாதிருத்தல் மிகப் பெரிய அறமாகும் என அறிவுறுத்துவார்.*

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. (259)

*என்றார் திருவள்ளுவர்.*

*ஆயிரம் வேள்விகளைச் செய்து அல்லற்படுவதைக் காட்டிலும், புலால் உண்ணுதலாகிய தீவினை ஒன்றைச் செய்யாது சும்மா யிருத்தலே உயிர்க்குப் பெரும்பயன் விளைக்கும் என்பதனை இத் திருக்குறள் நன்கு வற்புறுத்தல் காணலாம்.*

*இவ்வாறு சான்றோர் பலரும் உயிர்ப்பலியையும் புலாலுண வினையும் தீயன என விலக்கிய நிலையிலும் இத் தீமைகள் பழக்கங் காரணமாக இவ்வுலகில் மக்களிடையே தொடர்ந்து வருதல் கண்டு அருளாளர் பலரும் மனங்கவன்று வருந்தியுள்ளார்கள்,*

"கொல்லா விரதமொன்று கொண்டோரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே" (பரா - 192)

*எனவும்,*

"கொல்லா விரதங்குவலய மெல்லா மோங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே" (பரா - 54)

*எனவும் தாயுமானப் பெருந்தகையார் நெஞ்சம் நெகிழ்ந்துரைக்கும் வாய்மொழிகள் எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணும் அருளுடைய மெய்யடியார்கள் உள்ளத்திலே நிலைபெற்றுள்ள உயிரிரக்கப் பண்பினை நன்கு புலப்படுத்தல் காணலாம்.*

*புலாலுணவுண்பதில் பெருவிருப்பமுடையார் சிலர் மக்களை நலியும் சிறுதெய்வங்களாக நாட்டிலே பல் பெயர் தந்து நாட்டி அத்தெய்வங்களுக்குப் பலியிடுதற்கென ஆடு கோழி முதலிய வற்றை ஆரவாரத்துடன் கொண்டு செல்லும் கொடுமையைக் கண்ட இராமலிங்க அடிகளார், புந்தி நொந்து உளம் நடுக்குற்றார். இத்தகைய தீமைக்குச் சார்பாக அமைந்த சிறுதெய்வக் கோயில்களைக் கண்டகாலத்திலும் அவற்றை அஞ்சி விலகினார்.*

நலிதரும் சிறிய தெய்வ மென்று ஐயோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்

பலிதரும் ஆடு பன்றி குக்குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவும்கண்டே
புந்தி நொந்துளம் நடுக்குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங்கோயில்
கண்ட காலத்திலும் பயந்தேன்"

எனவும்,

துண்ணெனக் கொடியோர் பிறவுயிர்கொல்லத்
தொடங்கிய போதெல்லாம் பயந்தேன்
கண்ணினால் ஐயோ பிறவுயிர் பதைக்கக்
கண்டகா லத்திலும் பயந்தேன்,
மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி
வகைகளும் கண்டபோ தெல்லாம்
எண்ணிஎன் னுள்ளம் நடுங்கிய வதனை
எந்தைநின் திருவுள மறியும். (3473)

எனவும் திருவருட் பிரகாசவள்ளலார் கொலையும் புலையும் ஆகிய செயல்களின் கொடுமையினையும் புலாலுண்ணாமையாகிய அறத்தின் சிறப்பினையும் படிப்போர் நெஞ்சம் நெக்குருக எடுத்துக் கூறியுள்ளார். கற்போர் நெஞ்சம் கசிந்துருகும் நிலையிற் பாடப்பெற்ற இத் திருப்பாடல்கள் அருட்பிரகாச வள்ளலாரது உள்ளத்தின் உயிரிரக்கவுணர்வினை நன்கு புலப்படுத்துவனவாம். இங்ஙனம் வள்ளலாரது திருவுள்ளம் உலகியலில் ஈடுபடும்பொழு தெல்லாம் உயிரிரக்கம் பற்றியே செல்வதாயிற்று.

இரக்கவுணர்வையும், அடிகளாரையும் பிரித்துணர வொண்ணாத நிலையில் எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி யிரங்கும் தெய்வ அருட்கருணை வடிவாகவே இராமலிங்க அடிகளார் திகழ்ந்தார் என்பது அவர்பாடியருளிய திருவருட்பா பாடல்களால் இனிது விளங்கும்.

புலால் உண்ணும் கருத்துடையோர் சிறந்த கல்வியும் உலகம் வியந்து போற்றத்தக்கஅற்புதச் செயலும் பேரறிவும் பேராற்றலும் பெற்று விளங்கினாலும் அன்னார்மெய் யுணர்வுடைய ஞானிகளாக மதிக்கத்தக்கார் அல்லர் என்பது அருட்பிரகாச வள்ளலாரது திருவுள்ளக் கருத்தாகும். இக்கருத்தினை அடிகளார் தம் குருவின்

மேலும், தம்மை ஆட்கொண்டருளிய இறைவன் மேலும் ஆணை யிட்டுக் கூறுகின்றார்,

"மருவாணைப் பெண்ணாக்கி ஒருகணத்திற்
கண்விழித்து வயங்கும் அப்பெண்
உருவாணை யுருவாக்கி இறந்தவரை
எழுப்புகின்ற உறுவ னேனும்
கருவாணை யுற இரங்காது உயிருடம்பைக்
கடிந்துண்ணுங் கருத்தனேல் எம்
குருவாணை எமது சிவக் கொழுந்தாணை
ஞானியெனக் கூறொணாதே" (திருவருட்பா. 3027)

என்பது அடிகளார் கூறும் ஆணைமொழியாகும். தன்னிடத்தில் வந்த ஆண்மகனைப் பெண்ணாக மாற்றிக் கன்மூடித் திறப்பதற்குள் அப்பெண்ணை அழகிய ஆணுருவாக மாற்றவும், இறந்தோர்களை உயிர்பெற்றெழுமாறு செய்யவும் வல்ல அற்புதச் சித்தித் திறம் பெற்ற முனிவனாயினும், உயிரின்பால் சிறிதும் இரக்கமின்றிக் கரிய இரும்பினாலாகிய வாளினால் நையும்படி அவ்வுயிரின் உடம்பைத் தடிந்து உண்ணுங் கருத்துடையனாயின் அத்தகைய இரக்கமற்ற கொடிய நெஞ்சினனாகிய அவனை ஞானியெனக் கூறுதல் ஒண்ணாது என்பதனை எனது குருவின் மேலும் என்னுயிர்க்குயிராந் தெய்வமாகிய சிவபரம்பொருளின் மேலும் ஆணையிட்டு உறுதி கூறுகிறேன் என்பது மேற்குறித்த திருப்பாடலின் பொருளாகும்.

மக்களிற் பெரும்பாலோர் புலால் உண்ணும் பழக்கத்தினை எளிதிற்கைவிட்டு நீங்கும் ஆற்றலற்றவராயினும் இருவகைப் பற்றுக்களையும் துறந்து மெய்யுணர்வுடைய ஞானிகளாவார். அத்தீய செயலினைத் தாம் உள்ளுதலும் தீதாகும் என்பதனை வலியுறுத்தும் நிலையில் அமைந்தது இத்திருவருட்பாவாகும்.

இதுபற்றியே தெய்வப்புலவர் திருவள்ளுவரும் புலால் மறுத்தலாகிய இவ்வறத்தினைத் துறவறவியலில் அருளுடைமை யதிகாரத்தின் பின்னும், தவம் என்ற அதிகாரத்தின் முன்னும் வைத்தருளினார் எனக் கருத வேண்டியுளது. எனவே புலால் மறுத்தலாகிய விரதம் அருளுடைமையின் காரியமாகவும் தவத்தின் காரணமாகவும் அமைந்தது என்பது இங்கு உளங் கொளத் தகுவதாகும்.

# 7. ஓதாதுணர்ந்த மாதவச் செல்வர்

நம்முன்னோர் செய்த நற்றவத்தின் பயனாக அறந்தரும் நாவுக்கரசும் ஆலாலசுந்தரரும் பிறந்தருளிய திருமுனைப் பாடி நாட்டிலே (தென்னார்க்காடு மாவட்டத்திலே) இற்றைக்கு 163 ஆண்டுகளுக்கு முன்னே மருதூர் என்னும் சிற்றூரில் வாழ்ந்த கருணீக வேளாளர் இராமையாப்பிள்ளை அவர்கட்கும், அவர்தம் ஆறாவது மனைவியராகிய சின்னம்மையாருக்கும் ஐந்தாவது மகவாகத் தோன்றியவர் இராமலிங்க வள்ளலார். இவர் இளமை யிலேயே தந்தையையும் தாயையும் இழந்து தமையனார் சபாபதிப் பிள்ளை அவர்களால் வளர்க்கப் பெற்றார். சென்னையில் மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் கல்வி பயின்று புராணச் சொற்பொழிவு செய்தலைத் தமது வாழ்க்கைப் பணியாகக் கொண்டிருந்த சபாபதிப்பிள்ளை அவர்கள், தம் தம்பியாரைத் தம் ஆசிரியராகிய மகாவித்துவான் முதலியாரிடம் கல்வி கற்க அனுப்பிவைத்தார். மகாவித்துவான் முதலியாரவர்கள் கருவிலே திருவுடையராகிய இராமலிங்கரது பக்குவ நிலையையும், நுண்மாண் நுழை புலத்தையும் கூர்ந்துணர்ந்து இவர் தாமே பயிலும் தரமுடையாரென்பதனை எண்ணிக் கல்வி பயிற்றுவதைக் கை விட்டார். இந்நிலையில் இராமலிங்கர் சென்னையில் கந்த கோட்டத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானை நாள்தோறும் வழிபட்டுக் கற்றதனாலாய பயனைப் பெற்று மகிழ்ந்தார்.

செந்தமிழ்க் கடவுளாகிய முருகப்பெருமானையே தமது வழிபடு கடவுளாகவும், முதற் குரவனாகவும் கொண்டு தமிழ் நூல்களைப் பிறரிடம் சென்று ஓதாமல் தாமே பயின்று தேனினுமினிய செந்தமிழ்ப் பாடல்களைப் பாடும் தெய்வப்புலமை கைவரப் பெற்றார். திருஞானசம்பந்தரைத் தமது வழிபடு குருவாகவும், ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்கும் தேனினுமினிய திருவாசகத்தைத் தமது

வழிபாட்டு நூலாகவும் கொண்டு இறைவன் திருவருளில் திளைத்து மகிழும் செம்புலச் செல்வராகத் திகழ்ந்தார். ஆதலின் இராமலிங்கரை ஓதாதுணர்ந்த மாதவச் செல்வரெனப் போற்றுதல் பெரிதும் பொருத்த முடையதாகும்.

இராமலிங்கர் தாம் ஐந்து திங்கள் நிரம்பிய குழந்தையா யிருந்த போது அவர்தம் தந்தையார், மனைவி மக்களுடன் சிதம்பரஞ் சென்று திருச்சிற்றம்பலத்தில் அருள் நடம் புரியும் கூத்தப்பெருமானை வழிபாடு செய்து சிற்றம்பலத்தில் அருவ நிலையிலுள்ள சிதம்பர ரகசிய (திருவம்பலச் சக்கர) தரிசனத்துக்காக நின்ற சமயம் தில்லைவாழந்தணர் இரகசியத்திரையைத் தூக்கி ரகசிய தரிசனம் காட்டியபோது அனைவரும் கண்டு வணங்கின ரென்பதும் அந்நிலையில் தாயின் கையில் குழந்தையாயிருந்த இராமலிங்கரும் அத்தெய்வ அருட்காட்சியைக் காணும் உணர்வுடையராய்க் கண்டு மகிழ்ந்தாரென்பதும்

தாய்முதலோ ரொடு சிறிய பருவமதில் தில்லைத்
தலத்திடையே திரைதூக்கித் தரிசித்தபோது
வேய்வகைமேல் காட்டாதே என்றனக்கே எல்லாம்
வெளியாகக் காட்டியஎன் மெய்யுறவாம் பொருளே (திருவருட்பா 4133)

எனவரும் அடிகளாரது வாய்மொழியால் நன்கு துணியப்படும்.

இங்ஙனம் இராமலிங்கர் தமது குழந்தைப் பருவத்தில் கண்டுணர்ந்த சிதம்பர ரகசிய தரிசனமாகிய அருட் பெருஞ்சோதி வழிபாட்டினைத் தமது நாற்பத்தொன்பதாம் அகவையில் வடலூர்ப் பெருவெளியாகிய உத்தர ஞான சிதம்பரத்திலே சத்தியஞானசபையில் அமைத்துக் காட்டியமை இங்குக் கருதற்குரியதாகும்.

ஞானமே திருமேனியாகவுடைய குமாரசிவமாகிய இறைவன் "கரவாகிய கல்வியுளார் கடைசென்று இரவாவகை" இராமலிங்கருக்கு மெய்ப்பொருட் கல்வியாகிய நிதியத்தை வாரி வழங்கினான் என்பது அடிகள் வரலாற்றிற் காணப்பெறும் சிறப்புடைய நிகழ்ச்சி யாகும். "ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து" எனத் தெய்வப்புலவர் அருளியவாறு முன்னைப் பிறப்பில் பெற்ற கல்வி அறிவு ஒழுக்கமாகிய அநுபவங்கள் விட்டகுறை தொட்டகுறை என்னுமாறு இராமலிங்கருக்குத் தன்னியல்பில் புலப்பட்டுத் தோன்றுமாறு இறைவன் அருள்புரிந்தனன். தமது

மூன்றாவது ஆண்டிலேயே காழிக்கவுணியப் பிள்ளையார் உமையம்மையார் அளித்த பாலடிசிலைப் பருகி வேத முதலாய எல்லாக் கலைகளையும் ஓதாது உணர்ந்தருளினார் என்பது வரலாறு. ஓதாதுணர்ந்த ஆளுடைய பிள்ளையாராகிய பெருமானைத் தமது குருவாசகக் கொண்டு நாள்தோறும் பிள்ளையார் அருளிய திருநெறிய தமிழாகிய திருமுறைகளை ஓதிவழிபட்ட இராமலிங்க வள்ளலாரும் பிளர் துணையின்றிக் கலைநூல்களைத் தாமே பயின்றுணரும் புலமைநலம் பெற்று ஓதாதுணர்ந்த மாதவச் செல்வராயினார் என்பது அவர்தம் வாழ்க்கை வரலாற்றால் இனிது புலனாகின்றது.

தாம் பள்ளியிற் சென்று பிறர்பாற் கல்விபயிலாத நிலையில் தம்முள்ளத்திருந்து கலைநூல்களை அறிவுறுத்திய குருவும், ஒன்பதாம் ஆண்டளவாகிய இளமைப் பருவத்திலேயே தன் திருவருளுக்குரிமை செய்து தன்பொருள்சேர் புகழ்த்திறங்களைச் செந்தமிழாற் பாடச் செய்தருளிய தெய்வமும் ஆகத் திகழ்பவன் எல்லாம் வல்ல குமாரசிவமாகிய கூத்தப்பெருமானே என்னும் இவ்வுண்மையினை,

ஏதுமறியா திருளில் இருந்த சிறியோனை
எடுத்துவிடுத் தறிவுசிறி தேய்ந்திடவும் புரிந்து
ஓதுமுறை முதற்கலைகள் ஓதாமல் உணர
உணர்விலிருந் துணர்த்திஅருள் உண்மைநிலை காட்டித்
தீதுநெறி சமயநெறி செல்லுதலைத் தவிர்த்துத்
திருஅருள்மெய்ப் பொதுநெறியில் செலுத்தியும் நான் மருளும்
போதுமயங் கேல்மகனே என்று மயக்கெல்லாம்
போக்கி எனக்குள்ளிருந்த புனித பரம்பொருளே. (3053)

ஐயறிவிற் சிறிதும்அறிந் தனுபவிக்கத் தெரியா
தழுதுகளித் தாடுகின்ற அப்பருவத் தெளியேன்
மெய்யறிவிற் சிறந்தவருங் களிக்கவுனைப் பாடி
விரும்பியருள் நெறிநடக்க விடுத்தனை நீயன்றோ
பொய்யறிவிற் புலைமனத்துக் கொடியேன் முன்பிறப்பில்
புரிந்ததவம் யாததனைப் புகன் றருள வேண்டும்.
துய்யறிவு கறிவாகி மணிமன்றில் நடஞ்செய்
சுத்தபரி பூரணமாம் சுசரூபப் பொருளே (3055)

சுற்றதுமற் றவ்வழிமா சூததுு என்றெண்ணாத்
        தொண்டரெலாம் கற்கின்றார் பண்டுமின்றுங் காணார்
எற்றதும்பு மணிமன்றில் இன்பநடம்புரியும்
        என்னுடைய துரையே நான் நின்னுடைய அருளாள்
கற்றது நின்னிடத்தேபின் கேட்டது நின்னிடத்தே
        கண்டது நின்னிடத்தே உட்கொண்டது நின்னிடத்தே
பெற்றது நின்னிடத்தே இன்புற்றது நின்னிடத்தே
        பெரியதவம் புரிந்தேன் என்பெற்றி அதிசயமே (3044)

ஓதாதுணர்ந்திட ஒளி அளித் தெனக்கே
        ஆதார மாகிய அருட்பெருஞ்சோதி (அகவல் 23, 24)

*எனவும்,*

“வேண்டாமை வேண்டுகின்றோர் நிற்க மற்றை
        வேண்டுவார் வேண்டுவன விரும்பி நல்கும்
தூண்டாத மணிவிளக்கே பொதுவிலாடும்
        சுடர்க்கொழுந்தே என்னுயிர்க்குத் துணையே என்னை
ஆண்டாறு மூன்றாண்டில் ஆண்டு கொண்ட
        அருட்கடலே என்னுள்ளத் தமர்ந்ததேவே
ஈண்டாவ எனச்சிறிய அடியேன் உள்ளத்
        தெண்ணம் அறிந்தருளாயேல் என் செய்கேனே” (2697)

என்னை யறியாப் பருவத்தாண்டு கொண்ட
என்குருவே எனக்குரிய இன்பமே. (2698)

நாதாபொன் அன்பலத்தே அறிவானந்த நாடகஞ்செய்
பாதா துரும்பினும் பற்றாத என்னைப் பணிகொண்டெல்லாம்
ஓதாதுணர உணர்த்தி உள்ளேநின் றுளவுசொன்ன
நீதா நினைமறந் தென்நினைக்கேன் இந்த நீணிலத்தே. (2775)

வேண்டார் உளரோ நின்னருளை
        மேலோரன்றிக் கீழோரும்
ஈண்டார் வதற்கு வேண்டினரால்
        இன்று புதிதோ யான்வேண்டல்
தூண்டா விளக்கே திருப்பொதுவிற்
        சோதிமணியே ஆறொடு மூன்
றாண்டாவதிலே முன்னென்னை
        ஆண்டாய் கருமை அளித்தருளே (3597)

உலகியலோ டருளியலும் ஒருங்கறியச் சிறியேன்
உணர்விலிருந் துணர்த்தி (3159)

*எனவரும் வள்ளலார் வாய்மொழிகள் அகச் சான்றுகளாயமைந்து நன்கு புலப்படுத்தல் காணலாம்.*

*மாற்றமனங்கழியநின்ற இறைவனை வழிபடும் நெறிகளில் அன்பு மீதுர்ந்த பத்திமைப் பாடல்களால் அம்முதல்வனுடைய புகழ்த்திறங்களை இசையுடன் போற்றி வழிபடுதலே எளிமையும் இனிமையும் வாய்ந்த நெறியாகுமென்பர் பெரியோர்.*

பத்திமைப் பாடலறாத ஆவூர்ப் பசுபதியீச்சரம் பாடுநாவே.
(திருஞானசம்பந்தர் 1-8-2)

பத்தனாய்ப் பாடமாட்டேன் (அப்பர் 4-23-1)

அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்
(சேக்கிழார் பெரிய - தடுத்தாட்கொண்ட -70)

பாடும் பணியே பணியா யருள்வாய் (கந்தர நுபூதி - 1)

*எனவரும் அருளாசிரியர்கள் வாய்மொழிகள் இத்தகைய பத்திமைப் பாடற்றொண்டின் சிறப்பினை வற்புறுத்துவன ஆகும். இவ்வாறு இறைவனுடைய மெய்யான புகழ்த் திறங்களை இனிய பாடல்களில் அமைத்துப் பாடிப் போற்றுதல் என்பது இறைவன் அருள்பெற்றார்க் கன்றி ஏனையோர்க்கு உலகியற் புலமையால் மட்டும் எளிதில் இயலாத தொன்றாம். உலகியற் புலமையை மட்டும் கொண்ட புலவர்கள் பாடும் செய்யுட்களிலெல்லாம் சிந்தையால் அளவுபடாத இறைவனது "புகழ்த்திறங்கள் அடங்கிவிடுவன அல்ல." "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்றவாறு இறைவனது திருவருள் தூண்டுதலின் பயனாக அம்முதல்வன்பால் பேரன்புடைய பத்திநலம் வாய்ந்த பெருமக்கள் பாடிய பாடல்களே இறைவனது அருளின்நீர்மையை உலக மக்கள் உள்ளத்தால் உணர்ந்து போற்றும் படி விரித்துரைக்கவல்ல ஆற்றல் வாய்ந்தன வாகும். எல்லாம் வல்ல இறைவனது திருவருட் கடலில் படிந்து சைவநெறி உலகேழும் பாலிக்கும் தகைமையில் தெய்வநெறிச் சிவம் பெருக்கிய திருநாவுக்கரசர், இயல் இசைத்தமிழாகிய பத்திமைப் பாடல்களால் பாடுமாறு தம்மை உள்நின்றுபாடச் செய்தவன் தம்முயிர்க் குயிராகிய இறைவனே என்னும் உண்மையினை,*

பத்திமையால் பணிந்தடியேன் தன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில்வித்தானை. (6-54-3)

எனவும்,

பன்னிய செந்தமிழ்மாலை பாடுவித்தென்
சிந்தை மறுக்கறுத்ததிரு வருளினானை (6-84-4)

எனவும் வரும் தொடர்களில் புலப்படுத்தியுள்ளமை இங்கு நினைக்கத்தக்கது.

செந்தமிழ்ச் சிவநெறியில் வாழையடி வாழையாக வந்த திருக்கூட்டமரபினருள் ஒருவராய்த் தன்னை அன்பினால் வழிபட்டு வரும் இராமலிங்கருக்குத் தன் புகழ்த்திறங்களைத் தேனினுமினிய செந்தமிழ்ப் பாடல்களால் பாடுந்திறத்தினை உள்நின்று வழங்கியருளியவன் எல்லாம் சிவபெருமானே என்பது,

உருவத்திலே சிறியேனாகி யூகத்தி லொன்றுமின்றித்
தெருவத்திலே சிறு கால்வீசி யாடிடச் சென்ற அந்தப்
பருவத்திலேநல் அறிவளித்தே உனைப்பாடச் செய்தாய்
அருவத்திலே உருவானோய் நின்தண்ணளி யார்க்குளதே. (2218)

ஏதுமொன் றறியாப் பேதையாம் பருவத்
தென்னைஆட் கொண்டெனை உவந்தே
ஓதும் இன்மொழியால் பாடவே பணித்த
ஒருவனே என்னுயிர்த் துணைவா
வெம்மாலைச் சிறுவரொடும் விளையாடித் திரியும்
மிகச்சிறிய பருவத்தே வியந்துநினை நமது
பெம்மான்என் றடிகுறித்துப் பாடும் வகைபுரிந்த
பெருமானே நான் செய்த பெருந்தவமெய்ப் பயனே (4165)

எனவரும் அவர்தம் வாய்மொழிகளால் இனிது விளங்கும்.

அருட்பிரகாச வள்ளலார் சங்க நூல்கள், திருக்குறள் நாலடியார் முதலிய நீதி நூல்கள், பன்னிரு திருமுறைகள். சித்தாந்த சாத்திரங்கள், திருவிளையாடல், திருப்புகழ் கந்தரநுபூதி, துறைமங்கலம் சிவப்பிரகாசர் நூல்கள் பட்டினத்தார் தாயுமானார் முதலியோர் அருளியபாடல்கள் ஆகிய செந்தமிழ் நூல்களையும் வேத சிவாகம உபநிடதங்கள் முதலிய வடமொழி நூல்களையும் இறைவன் திருவருளால் தாமே பயின்றுணர்ந்த தவநெறிச் செல்வர் என்பது அவர்கள் அருளிய திருவருட்பாப் பாடல்களில் அவற்றின் சொல்லையும்

*பொருளையும் கருத்துக்களையும் எடுத்தாண்டுள்ளமையால் நன்கு விளங்கும். கலைமகளைப் போற்றும் பாடலில்,*

'சங்கம் வளர்ந்திடவளர்ந்த தமிழ்க்கொடியே (2427)

*எனத் தமிழின் வண்ணமாகப் போற்றியுள்ளார். இத் தொடர்ப் பொருளைச் சிந்திக்குங்கால் பத்துப்பாட்டு எட்டுத் தொகை முதலிய சங்க இலக்கியத்தில் வள்ளலாருக்குள்ள ஈடுபாடு புலனாகும்.*

*சாதி சமய வேற்றுமையின்றி உலகமக்கள் அனைவரும் அன்பினால் ஒன்றுபட்டு வாழ்தற்குரிய நெறிமுறைகளை வற்புறுத்தும் வாழ்வியல் நூலாகிய திருக்குறளை வள்ளலார் தம் பாடல்களில் பல இடங்களிலும் எடுத்தாண்டுள்ளார். நெஞ்சறி வுறுத்தல் என்ற பகுதியில் வெகுளியை அடக்குதலின் இன்றியமையாமையை வற்புறுத்துங்கால்,*

பாபக்கடற்கோர் படுகடலாம் பாழ்வெகுளிக்
கோபக் கடலிற் குளித்தனையே - தாபமுறச்
செல்லாவிடத்துச் சினந்தீது சொல்லிடத்தும்
இல்லதனில் தீயதென்ற தெண்ணிலையோ மல்லல்பெறத்
'தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க' என்றதனைப்
பொன்னைப்போல் போற்றிப் புகழ்ந்திலையே
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல் என்னும்
திகழ்வாய்மையும் நீ தெளியாய் (432-4-5)

*எனவரும் நெஞ்சறிவுறுத்தற் பகுதியில் "வெகுளாமை" என்ற அதிகாரத்தில் வரும் மூன்று திருக்குறளையும் ஒரு சேர எடுத்தாண்டமை காணலாம்.*

நாழிகைமுன் நின்றார் இந்தரார் நிலைகுலைய வீழ்ந்துயிர்தான்
சென்றார் எனக் கேட்டுந் தேர்ந்திலையே (475)

*என யாக்கை நிலையாமையை உணர்த்தும் இக்கண்ணி.*

புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை - இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான் தன் கேள்அலறச்
சென்றான் எனப்படுத லான் (நாலடியார் 29)

*எனவரும் நாலடியார் செய்யுளை அடியொற்றி யமைந்திருத்தல் காணலாம்.*

*பரஞ்சோதி முனிவர்பால் உபதேசம் பெற்ற மெய்கண்ட தேவநாயனாருக்குத் திருவெண்ணெய் நல்லூரில் உள்ள பொல்லாப் பிள்ளையார் சித்தாந்தச் செம்பொருளை விளங்க அருளிச்செய்த திறத்தையும், கணேசர் கபிலருக்கு அருள் செய்த திறத்தையும்,*

விண்ணவர் புகழும் மெய்கண்ட நாதன்
 வித்தகக் கபிலனாதியர்க்கே
கண் அருள் செயும்நின் பெருமையை அடியேன்
 கனவிலும் நனவிலும் மறவேன் (2533)

*எனவரும் வல்லபை கணேசர் பிரசாதமாலையில் விளக்கியுள்ளமை காணலாம்.*

*புறத்தே உலகியற் பொருளைப் பற்றி ஓடும் இயல்பினதாகிய மனமானது ஆன்ம அறிவுக்குக் கட்டுப்பட்டு அடங்குதலால் வரும் பயனை எடுத்துரைப்பது,*

சுற்றிமனம்
தானடங்கின் எல்லாச் சகமும் அடங்குமொரு
மானடங் கொள்பாத மலர்வாய்க்கும் (திருவருட்பா 608/9)

*எனவரும் நெஞ்சறிவுறுத்தல் கண்ணியாகும்.*

*இது, சிவஞானிகளது மன அடக்கத்தால் உலக மக்களுக்கு உண்டாகும் நலங்களை விரித்துரைக்கும் நிலையிலமைந்த பின்வரும் திருக்களிற்றுப்படியார் பாடலின் சொற்பொருள் நலன்களை நினைவு படுத்தும் முறையில் அமைந்துள்ளமை காணலாம்.*

தாமடங்க இந்தப் தலமடங்கும் தாபதர்கள்
தாமுணரில் இந்தத் தலமுணரும் - தாமுனியில்
பூமடந்தை தங்காள் புகழ்மடந்தை போயகலும்
நாமடந்தை நில்லாள் நயந்து.

*சிவஞானம் பெற்ற ஞானிகளுக்கும் பழக்க வாசனையால் அவர்தம் அறிவு புறத்தே செல்லுதல் கூடும். அவ்வாறு தம் அறிவு புறத்தே செல்லாதவாறு மடக்கி அகத்தே ஒரு குறியின்கண் நிறுத்தி நிட்டைகூடும்படி திருவைந்தெழுத்தை ஓதும் முறையில் உள்ளத்தே வைத்துச் சிந்திக்கச் சிந்தனையானது, புறத்தே செல்லும் நோக்கத்தைப் பற்றறக் கெடுத்து, ஞானசொரூபத்தை இனிது விளக்கி ஈறிலின்பமயமான பூரண நிலையிற் கொண்டு செலுத்தும். ஆதலால்*

*சித்தத்தே இறைவனைச் சிந்தித்து வழிபடுவோர் அப்பூசைக்கு அங்கமாக அகத்தே செய்தற்குரிய தியானத்தையும் திருவைந் தெழுத்தைச் சாதனமாகக் கொண்டே செய்தல்வேண்டும் எனவும், அவ்வாறு செய்யும் முறையில் இறைவன் வெளிப்பட்டுத் தோன்றுவன் எனவும், அந்நிலையில் ஆன்மாவுக்கு ஆண்டானடிமைத் திறம் இனிது வாய்க்குமெனவும் வற்புறுத்துவது,*

அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை கூரண்டரனை
அஞ்செழுத்தால் அர்ச்சித் திதயத்தில்

அஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோமங் கோதண்டஞ் சானிக்கில்
அண்டானாம் சேடனாம் அங்கு.

*எனவரும் சிவஞானபோத வெண்பாவாகும். இதன்கண் குண்டலி என்றது உந்தித்தாமரையை. இதுவே அகப் பூசைக்குரிய வேள்வித் தானம். இதயம் என்றது நெஞ்சத் தாமரையை. இது அகப்பூசைக் குரிய பூசைத் தானமாகும். கோதண்டம் என்றது புருவநடுவினை. இது தியானத் தானமாகும். சானித்தல் தியானித்தல், அண்டன் என்றது எல்லா அண்டங்களையும் இயக்கும் இறைவனை. சேடன் என்றது அம்முதல்வனுக்கு என்றும் அடிமைத் திறத்தினனாகிய ஆன்மாவை.*

*இங்ஙனம் இவ்வெண்பாவில் குறித்துள்ள அகப்பூசை முறைகளை எல்லாம் சுருக்கித் தரும் முறையில் அமைந்தது,*

'அஞ்செழுத்தால் அர்ச்சித்து அமர்வோரும்' (திருவருட்பா - 671)

*எனவரும் நெஞ்சறிவுறுத்தலாகும்.*

*இச்செயலை நானே செய்தேன், இதனைப் பிறர் செய்தார், இஃது என்னுடையது, இதற்குரிமையுடைய வினைமுதல் யானே, என எண்ணும் இம்மனக்கோணலை ஞானத்தீயால் வெதுப்பி நிமிர்த்து ஆன்மாவாகிய தான் "என் செயலாவது யாதொன்று மில்லை, எல்லாம் நின்செயலே," என இறைவன் அருள் வழியடங்கிச் செந்நெறியில் நிற்பாராயின் மெய்ப்பொருளாகிய இறைவன் நேரே வெளிப்பட்டுத் தன்னையே அவர்கட்கு அளித்து நிற்பான், அந்நிலையில் ஆன்மாவின் வினைகள் யாவும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தோடியொழிவனவாம். இவ்வாறன்றி நான்*

செய்வேன் என்னும் செருக்குடன் இருப்பார்க்கு இறைவன் வெளிப்படுதலின்றி அவர்தம் வினைப்பயனை அவரே நுகரும்படி செய்வன்; மேலும் கன்மங்களைச் செய்விப்பன். சிவஞானம் வெளிப்பட்டாலன்றி இவ்வுலகில் ஒருவருக்கும் யான் எனது என்னுஞ் செருக்கு அறாது என அறிவுறுத்துவது,

"யான் செய்தேன் பிறர்செய்தார் என்ன தியானென்னும்
இக்கோணை ஞானஎரி யால்வெதுப்பி நிமிர்த்துத்
தான்செவ்வே நின்றிடஅத் தத்துவன் தான் நேரே
தனையளித்து முன்னிற்கும் வினையொளித் திட்டோடும்

நான்செய்தேன் எனுமவர்க்குத் தானங் கின்றி
நண்ணுவிக்கும், போகத்தைப் பண்ணுவிக்கும் கன்மம்
ஊன்செய்யா ஞானந்தான் உதிப் பினல்லாமல்
ஒருவருக்கும் யானெனதிங் கொழியாதன்றே.

(சித்தியார் - சுபக்கம் 305)

எனவரும் சிவஞான சித்தியாராகும். இப்பாடற்பொருளை உளங்கொண்ட அருட்பிரகாச வள்ளலார் இந்நிலைக்கு மாறாக எனது செயல் அமைந்துள்ளதே என இரங்கி இனிச் செய்யத்தக்கது எதுவென்பதனை நீயே ஓதியருளுதல் வேண்டும் என இறைவனை வினவும் முறையில் அமைந்தது,

யாதும் உன்செயலாம் என அறிந்தும்
ஐய வையமேல் அவர்இவர் ஒழியாத்
தீது செய்தனர் நன்மை செய்தனர்நாம்
தெரிந்து செய்வதே திறம் என நினைத்துக்
கோது செய்மலக் கோட்டையைக் காவல்
கொண்டு வாழ்கிறேன் கண்டிட இனிநீ
ஓது செய்வ தொன் றென்னுயிர்த் துணையே
ஒற்றி மேவிய உலகுடையோனே. (1114)

எனவரும் திருவருட்பாவாகும்.

அருவம், அருவுருவம், உருவம் என்னும் முக்கூற்றினுள் அடங்காது இவற்றிற் கெல்லாம் அப்பாற்பட்டு விளங்கும் ஒருவனாகிய இறைவன், ஒவ்வொரு தத்துவங்களிலும் நின்று கொண்டு தத்தம்தொழில்களைச் செய்யும் சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், ஈசன், உருத்திரன் மால், அயன் என்னும்

*முத்திறத்து ஒன்பது தெய்வக் கூற்றினும் வேற்றுமையின்றிக் கலந்து நின்று அவ்வத் தொழில்களைச் செய்வித்தருள்கின்றான் என்னும் உண்மையினை விளக்குவது,*

சிவம்சத்தி நாதம்விந்து சதாசிவம் ஈசன்
உவந்தருள் உருத்திரன்தான் மால்அயன் ஒன்றில் ஒன்றாய்ப்
பவந்தரும் அருவ நாலிங் குருவநா லுபயமொன்றாய்
பவந்தரும் அருவ நாலிங் குருவநா லுபயமொன்றாய்
நவந்தரு பேதம் ஏகநாதனே நடிப்பன் என்பர்
(சிவஞானசித்தி - சுபக்கம் 164)

*எனவரும் சிவஞான சித்தியாராகும்.*

*மேற்குறித்த ஒன்பது வடிவங்களுள் முற்குறித்த சிவ முதலான நான்கும் அருவத் திருமேனிகள் எனவும், சதாசிவம் ஒன்றும் அருவுருவத்திருமேனி எனவும், மகேசன் உருத்திரன் மால் அயன் என்னும் நான்கும் உருவத்திருமேனிகள் எனவும் இவ்வாறு மூவகைகளாகக் குறித்த ஒன்பது தெய்வநிலைகளையும் இயக்கிநிற்கும் முழுமுதற் பொருளாக விளங்குபவன், இறைவன் ஒருவனே எனவும் அருணந்திசிவனார் கூறிய பாடற் பொருளை,*

உருநான்கும் அருநான்கும் நடுவே நின்ற
உருஅருவ மொன்றும் இவை உடன்மேல்உற்ற
ஒருநான்கும் இவை கடந்த ஒன்றுமாய் (திருவருட்பா - 2172)

*எனவும்,*

ஒன்பதாகிய உருவுடைப் பெருமான் (திருவருட்பா 1038)

*எனவும்,*

நவநிலைக்கும் அதிகாரம் நடத்துகின்ற அரசாய்
நண்ணியநின் பொன்னடிகள் (திருவருட்பா 3094)

*எனவும் வரும் திருவருட்பாத் தொடர்களில் அருட் பிரகாச வள்ளலார் விரித்தும் தொகுத்தும் விளக்கி யுள்ளமை அவர்தம் சித்தாந்த சாத்திரப் புலமையை நன்கு தெளிவுபடுத்துவதாகும்.*

*அருட்பிரகாச வள்ளலார் அருளிய நெஞ்சறிவுறுத்தலில் வள்ளலார் தம் நெஞ்சினை நோக்கி இன்னின்னார் இருக்குமிடங் களைச் சேராதே எனத் தம் நெஞ்சிற்கு அறிவுறுத்தும் முறையில்* ***630***

*முதல் **651** வரையுள்ள கண்ணிகள், சைவசமய சந்தான குரவராகிய உமாபதிசிவம் அருளிய நெஞ்சுவிடு தூதில் **110** முதல் **119** ஆம் அடிவரை உள்ள பகுதியினை அடியொற்றி யமைந்துள்ளமை காணலாம்.*

*தில்லைச் சிற்றம்பலவன் கோயில் முதலாக, திருக் கயிலாயம் ஈறாக உள்ள திருத்தலங்களில் கோயில் கொண்டருளிய சிவபெருமானை நோக்கி விண்ணப்பம் செய்யும் முறையில் வள்ளலார் பாடிப் போற்றிய விண்ணப்பக் கலிவெண்பா, உமாபதி சிவம் அருளியதெனக் கருதப்படும் ''கோயில் திருவேட்களம்'' எனத் தொடங்கும் திருப்பதிக் கோவையென்னும் பனுவலை அடியொற்றி அமைந்ததாகும். இவ்விண்ணப்பக் கலிவெண்பா இத்திருத் தலங்களில் பாடிய திருமுறை ஆசிரியர்களின் வரலாறுகளையும், இப்பதிகளில் பாடப் பெற்ற திருப்பதிகங்களின் சொற்பொருள் அமைப்பினையும், இங்கு எழுந்தருளியுள்ள இறைவனுடைய அருள் நலன்களையும் விரித்துப் போற்றும் முறையில் **417** கண்ணிகளால் இயன்றதாகும். இன்று முதல் **277** வரை உள்ள கண்ணிகளில் தில்லை முதல் கயிலை ஈறாக உள்ள தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்கள் குறிக்கப் பெற்றன. **278** முதல் அமைந்த பிற்பகுதியில் கயிலைப் பெருமானை நோக்கி வள்ளலார் வேண்டிய விண்ணப்பம் இடம் பெற்றுள்ளது.*

வெளியாய் வெளிக்குள் வெளியாய் ஒளிக்குள்
ஒளியாகி நின்ற வுனை (1973)

*எனவரும் வள்ளலார் அருளிய சிவநேச வெண்பாத் தொடர்,*

வெளியில் வெளியில் வெளியன் வெளியில்
ஒளியில் ஒளியில் ஒளியன் (கண்ணி 33)

*என உமாபதி சிவம் அருளிய நெஞ்சுவிடுதூதில் உள்ள தொடரினை நினைவுபடுத்துதல் காணலாம்.*

உன்னால் எனக்காவது உண்டதுக் கண்டதுவே
என்னாலுனக் காவ தேதுளது (1984)

*எனவரும் சிவநேச வெண்பாத் தொடர்,*

''பொன்னாற் பிரயோசனம் பொன்படைத் தார்க்குண்டு பொன்படைத்தோன்
தன்னாற் பிர யோசனம் பொன்னுக்கங் கேதுண்டு''

(திருக்காளத்தி -2)

*எனவரும் பட்டினத்தடிகள் பாடற்றொடரை நினைவு கூறும் முறையில் அமைந்திருப்பது காணலாம்.*

கூகா என அடுத்தோர் கூடியழாத வண்ணம்
சாகா வரமெனக்கே தந்திட்டான் (5510)

*எனவரும் வள்ளலார் வாய்மொழி,*

"கூகா என என்கிளை கூடியழப்
போகாவகை மெய்ப்பொருள் பேசியவா" (கந்தர நுபூதி)

*எனவரும் அருணகிரியார் வாய்மொழியைத் தன்னகத்தில் கொண்டு விளங்குவதாகும்.*

'கட்டிமுண்டகரபாலி'

*எனத் தொடங்கும் தில்லைத்திருப்புகழில்*

'துக்கம்வெந்துவிழ ஞானமுண்டு குடில்
வச்சிரங்களென மேனி தங்கமுற
சுத்தகம் புகுத வேதவிந்தையொடு - புகழ்வேனோ' (திருப்புகழ் 361)

*எனவரும் பகுதியை ஒத்தது,*

மன்னுகின்ற பொன்வடிவும் மந்திரமாம் வடிவும்
வான் வடிவும்கொடுத்தெனக்கு (திருவருட்பா 4150)

*என வள்ளலார் பாடியருளிய தொடராகும்.*

ஆவதும் நின்னால் அழிவதுவும் நின்னால் எனயான்
நோவதுவும் கண்டு அயலில்நோக்கினையே
(நெஞ்சறிவுறுத்தல். கண்ணி 586)

*என வள்ளலார் தம்நெஞ்சை நோக்கிக் கூறிய கூற்று.*

கொடுக்க வல்லதும் கெட்டவர் தங்களை
எடுக்க வல்லதும் இம்மனம் (பிரபுலிங்கலீலை. சாதகாங்ககதி - 15)

*எனத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் மனத்தின் இயல்பைக் குறித்துக்கூறிய கருத்தினை நினைவுபடுத்துதல் அறியத்தக்கதாகும்.*

*வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரியவிருத்தம் ஆசிரியம் ஆகிய நால்வகைப் பாக்களால் சம்பந்தர் நாவரசர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய சமயகுரவர் நால்வரையும் பரவும் முறையில்*

*நால்வர் நான் மணிமாலை என்னும் பனுவலைப்பாடிப் போற்றியவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளாவர். நான்மணிமாலை என்னும் இப்பனுவலின் சிறப்பினை உணர்ந்த அருட்பிரகாச வள்ளலார், சமயகுரவர் நால்வரையும் தனித்தனியே போற்றும் முறையிற் பாடிய பனுவல்கள் ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை, ஆளுடைய அரசுகள் அருள்மாலை, ஆளுடைய நம்பி அருள்மாலை, ஆளுடைய அடிகள் அருள்மாலை என்னும் நால்வகைப் பனுவல்களுமாகும். இவற்றுள்,*

வருபகற் கற்பம் பலமுயன்றாலும்
வரலருந் திறனெலாம் எனக்கே
ஒருபகற் பொழுதில் உறஅளித்தனை நின்
உறுபெருங்கருணை என் உரைப்பேன்
பெருமண நல்லூர்த் திருமணம் காணப்
பெற்றவர் தமையெலாம் ஞான
உருவடைந்தோங்கக் கருணை செய்தளித்த
உயர்தனிக் கவுணிய மணியே (3235)

*எனவரும் பாடல் ஆளுடைய பிள்ளையார் அருண்மாலையில் அமைந்துள்ளது. இப்பனுவல் நால்வர் நான்மணிமாலையில் ஞானசம்பந்தரைப் போற்றிப் பாடிய*

கொள்ளைகொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர்ப்பிடித்துத்
தள்ளும் திருஞான சம்பந்தா

*எனவரும் திருப்பாடற் கருத்தை உளங்கொண்டியற்றப் பெற்றிருப்பது காணலாம்.*

*ஆளுடைய அரசு அருண்மாலையில்*

தேர்ந்த உளத்திடை மிகவும் தித்தித் தூறும்
செழுந்தேனே சொல்லரசாம் தேவேமெய்ம்மை
சார்ந்து திகழ் அப்பூதி அடிகட்கின்பம்
தந்தபெருந் தகையே எம் தந்தையே என்
கூர்ந்தமதி நிறைவே என் குருவே எங்கள்
குலதெய்வமே சைவக்கொழுந்தே துன்பம்
தீர்ந்த பெரு நெறித்துணையே ஒப்பிலாத
செல்வமே அப்பனெனத்திகழ்கின் றோனே. (திரு. 32 46)

*எனவரும் பாடல்,*

உற்றான் அலன்தவம் தீயினின் றானலன் ஊண்புனலா
வற்றான் அலனுகர்வுந் திருநாவுக்கரசு எனுமோர்
சொற்றான் எழுதியும் கூறியுமே என்றுந்துன்பில்பதம்
பெற்றான் ஒருநம்பி அப்பூதி என்னும் பெருந்தகையே.
(நால்வர் நான்மணிமாலை 38)

*எனவரும் சிவப்பிரகாசர் பாடலை அடியொற்றியதாகும்.*

*இப்பாடலில் 'என்றும் தும்பில்பதம் பெற்றான் ஒரு நம்பி அப்பூதி என்னும் பெருந்தகையே' என்னுந் தொடர்ப் பொருளை, 'மெய்மை சார்ந்து திகழ் அப்பூதி அடிகட்கு இன்பம் தந்த பெருந்தகையே' என்ற தொடரில் வள்ளலார் விளக்கியுள்ளமை காணலாம்.*

*ஆளுடைய நம்பிகள் அருண்மாலையில்,*

தேன்படிக்கும் அமுதாம்உன்
திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை
நானறியேன் நாஒன்றோ
ஊன்படிக்கும் உளம்படிக்கும்
உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அனுபவங்காண்
தனிக்கருணைப் பெருந்தகையே (3253)

இன்பாட்டுத் தொழிற் பொதுவில்
இயற்றுகின்ற எம்பெருமான்
உண்பாட்டுக் குவப்புறல்போல்
ஊர்பாட்டுக் குவந்திலர் என்
றென்பாட்டுக்கிசைப்பினும் என்
இடும்பாட்டுக் கரணமெலாம்
அன்பாட்டுக் கிசைவதுகாண்
அருட்பாட்டுப் பெருந்தகையே (3253)

பேரூரும் பரவைமனப் பிணக்கற எம்பெருமானை
ஊரூரும் பலபுகல ஒளிரவில் தூதன் எனத்
தேரூரும் திருவாரூர்த் தெருவுதொறும் நடப்பித்தார்
ஆரூர நின்பெருமை அயன்மாலும் அளப்பரிதே. (3256)

*எனவரும் மூன்று பாடல்களும்,*

படியிலா நின்பாட்டில் ஆரூர நனிவிருப்பன் பரமனென்ப
தடியனேன் அறிந்தனன் வான்றொழுமீச னினைத்தடுத்தாட்
கொண்டு மன்றித்
தொடியுலா மென்கைமட மாதர்பால்
நினக்காகத் தூது சென்றும்
மிடியிலா மனைகடொறு மிரந்திட்டு
முழன்றமையால் விளங்கு மாறே.

எனச் சிவப்பிரகாசர் சுந்தரரைப் போற்றும் நால்வர் நான்மணிமாலைப் பாடலின் பொருள் விளக்கமாக அமைந்துள்ளமை காணலாம்.

திருவாசகத்துக்குப் பொருள் யாது என வினவிய அன்பர்களைத் தில்லைக் கோயிலுக்குள் அழைத்துக் கொண்டு சென்று இதற்குப் பொருளாவார் தில்லைச் சிற்றம்பலவரே எனக் கூறித் தேடுகின்ற ஆனந்தச் சிற்சபையிற் சின்மயமாய் ஆடுகின்ற சேவடியாகிய அருள் வெளியில் கலந்தவர் மணிவாசகப் பெருமான். அவரைப் போற்றுவதாக அமைந்தது.

பெருந்துறை புகுந்து பேரின்பவெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே
வாசக மதற்கு வாச்சியந்
தூரக லல்குல்வேய்த் தோளிடத் தவனே (8)

எனவரும் நால்வர் நான்மணிமாலைப் பாடலாகும்.

வாசகம் - சொல்; வாச்சியம் - பொருள். வேய்த் தோளிடத் தவன் - பசிய மூங்கில் போலும் தோளினையுடையாளாகிய உமையை யிடப்பாகத்திற் கொண்டவனாகிய சிவபெருமான்.

இதன்கருத்தினை அடியொற்றியது.

வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்
ஒருமொழியே என்னையும்என் உடையனையும் ஒன்றுவித்துத்
தருமொழியாம் என்னில் இனிச் சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்பி அயல் கூடுவதேன் கூறுதியே. (திரு. 3264)

எனவரும் ஆளுடைய அடிகள் அருள் மாலையாகும்.

திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசத்துக்கும் உருகார் என்பது தமிழகத்தில் வழங்கும் பழமொழியாகும். கற்போர், கேட்போர் நினைப்போராகிய எல்லோரது உள்ளத்தையும் உருக்கும்

ஆற்றல் திருவாசகத்துக்கே உண்டு என்பதனை மேற்குறித்த பழமொழியாலறியலாம். மலங்கெடுத்து மனங்கரைக்கும் திருவாசகத் தினை இடைவிடாது ஓதி நெஞ்சம் நெக்குருகப் பெற்றவர் அருட்பிரகாச வள்ளலாராதலின், தாம் பயின்ற திருவாசகம் தம் உள்ளத்தை உருக்கி ஆன்மாவாகிய தம்மையும் தம்மையுடை யானாகிய சிவபெருமானையும் ஒன்றுபடுத்திச் சிவானுபவமாகிய பெரும்பயனை நுகர்ந்து இன்புறச் செய்தது என்பார் நின் வாசகத்தில் ஒருமொழியே என்னையும், என் உடையனையும் ஒன்றுவித்துத் தருமொழியாம்' என மாணிவாசகப் பெருமானை வள்ளலார் உளம் உவந்து போற்றினார். ஒன்றுவித்துத் தருதலாவது, நெக்குநெக்கு நினைப்பவர் நெஞ்சுளே புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியனாகிய இறைவனை நினைவாரையும் நினைக்கப் பொருளாகிய இறைவனையும் ஆன்மாவாகிய தன்னையும் பிரித்துணர ஒண்ணாதபடி அவனே தானாகச் செய்தல்.

அருட்பிரகாசவள்ளலார் அறிவுறுத்திய சமரச சன் மார்க்க அநுபவநெறிக்குச் சிறந்த இலக்கியமாகத் திகழ்வது தாயுமானார் அருளிய பாடற் பகுதியாகும்.

சன்மார்க்க முத்தி முதலே சர்வபரிபூரண
அகண்ட தத்துவமான சச்சிதாநந்த சிவமே (தாயு. சச்சி -6)

எனவும்,

வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே (சித்தர்கணம் 1 முதல் 10)

எனவும் வரும் தாயுமானவர் வாய்மொழிகள் இக்கருத்தை வற்புறுத்துவன ஆகும்.

'வேதாந்த சித்தாந்த சமரசமும் வருமோ' (திருவருட்பா 3378)

எனவரும் வள்ளலார் வாய்மொழி இங்கு ஒப்புநோக்கத் தகுவது.

'எங்கள் பதம் எங்கள் பதம் என்றுசமயத்தேவர்
இசை வழக்கிடு நற்பதம்' (1960-1)

எனவரும் திருவடிப்புகழ்ச்சித் தொடர்,

'சமய கோடிகளெலாம் தன்தெய்வ மென்தெய்வ மென்று
எங்கும் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது' (தாயு. 1)

எனவரும் தாயுமானார் அருளிய பரசிவ வணக்கத்தை நினைவு படுத்துதல் காணலாம்.

மதுரையில் சோமசுந்தரக் கடவுள் தன் அடியார்க்கு அருளும் பொருட்டு நிகழ்த்தியருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல் களுள் பலவற்றை நினைந்து நெஞ்சம் நெக்குருகிய இராமலிங்க வள்ளலார் அவற்றைத் தாம் அருளிய திருவருட்பாப் பாடல்களில் எடுத்துரைத்துப் போற்றியுள்ளமை திருவிளையாடற் புராணத்தில் வள்ளலார்க்கு உள்ள ஈடுபாட்டினை நன்கு புலப்படுத்தும்.

எல்லாம்வல்ல இறைவன் செம்மனச் செல்வியாகிய வந்தி அம்மையார் பொருட்டு வையை வெள்ளத்தை அடைத்தல் வேண்டிக் கூலியாளாக எழுந்தருளி வையைப் பெரு வெள்ளத்தை யடைக்க மண்சுமந்து கூலி கொண்டு பாண்டியமன்னன் ஓச்சிய பிரம்பினால் மொத்துண்ட எளிமைத்திறனை எண்ணி யெண்ணி இரங்கும் நிலையில் அமைந்துள்ளது,

வன்பட்ட கூடலில் வான்பட்டவையை வரம்பிட்டநின்
பொன்பட்ட மேனியில் புண்பட்ட போதில் புவி நடையாம்
துன்பட்ட வீரர் அந்தோ வாதவூரர்தம் தூய நெஞ்சம்
என்பட்டதோ இன்று கேட்ட என் நெஞ்சம் இடி பட்டதே (2251)

என இராமலிங்க வள்ளலார் பாடிய பாடல் ஆகும்.

இப்பாடல் மதுரையில் இறைவன் தன்னைவழிபடும் அடியார் கட்கு எளிவந்து நிகழ்த்திய திருவிளையாடல் நிகழ்ச்சிகளில் வள்ளலாரது உள்ளத்தோய்வினை நன்கு புலப்படுத்தல் காணலாம்.

அளிய நெஞ்சம் ஓர் அறிவுருவாகும்
அன்பர் தம்புடை அணுகிப் அருள்போல்
எளிய நெஞ்சினேற் கெய்திடா தேனும்
என்னில் பாதிமட் டீந்தருள்வாயேல்

களிய மாமயல் காடற எறிந்தாங்
காரவேரினைக் களைந்து மெய்ப்போத
ஒளிய வித்தினால் போகமும் விளைப்பேன்
ஒற்றிமேவிய உலகுடையோனே. (திருவருட்பா 1117)

எனவரும் இப்பாடலில் "அளிய நெஞ்சம் ஓர் அறிவுருவாகும் அன்பர்" என்றது, இறையருளால் அளிதரும் ஆக்கையைப் பெற்றுச் சிவஞானமே உருவாகத் திகழ்ந்த மணிவாசகப் பெருமானை. இங்கு

'ஓர்' அறிவுருவமாகுமன்பர், என்ற தொடர், 'மாணிக்கவாசகர் அறிவினாற் சிவமே என்பது திண்ணம் என்ற இலக்கணக் கொத்தின் நூலாசிரியரான சுவாமிநாத தேசிகர் கூறிய மொழியினை நினைவுபடுத்தும் நிலையில் அமைந்துள்ளமை காணலாம்.

நமது நாட்டில் வழங்கும் சமயங்களை ஆறு சமயங்களாகத் தொகுத்தும், பின் அவற்றையே அகச்சமயங்கள் ஆறு, புறச் சமயங்கள் ஆறு எனப்பகுத்தும் கூறுவர் முன்னுள்ளோர். அகமும் புறமுமாகிய சமயங்களிடையே யமைந்த வேறுபாடுநோக்கி அகம், அகப்புறம், புறம், புறப் புறம் என நான்காகப் பிரித்துக் கூறுவர் சிவஞான முனிவர். தொல்காப்பியத்தில் அகம் புறம் என்று இரண்டாங் அடக்கிக் கூறியபொருளைத் தம்முள் வேறுபாடு நோக்கிப் பன்னிரு படலத்தில் அகம், அகப்புறம், புறம், புறப்புறம் எனப்பகுத்தோதியவாறு போல்வது இப்பகுப்பு முறையாகும்.

அகம்புறம் மற்றை அகப்புறம் புறத்தே
அடுத்திடும் புறப்புறம் நான்கில் (3640)

எனவரும் திருவருட்பா பாடற்றொடரில் இப்பகுப்பு முறை இடம் பெற்றுள்ளமை இங்கு ஒப்புநோக்கத் தகுவதாகும்.

அருட்பிரகாச வள்ளலார், ஒழிவில் ஒடுக்கம் தொண்டை மண்டல சதகம் என்னும் நூல்களை ஆராய்ச்சியுரையுடன் பதிப்பித்துள்ளமையும் சின்மயதீபிகை, மனுமுறைகண்ட வாசகம், சீவகாருணிய ஒழுக்கம் என்னும் உரைநடை நூல்களை இயற்றி யுள்ளமையும் வள்ளலாரின் பரந்த கல்விப்புலமையை எடுத்துக் காட்டுவனவாகும். வள்ளலார் அறிவுறுத்தும் தத்துவ நுண் பொருள் களுக்குக் காழிக் கண்ணுடைய வள்ளலார் இயற்றிய நூலும் சிவஞானவள்ளலார் இயற்றிய நூல்களும், திருப்பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் இயற்றிய கொலை மறுத்தல் என்னும் நூலும், அதற்குத் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் இயற்றிய சுத்தசாதகம் முதலிய நூல்களும் முன்னூற் சான்றுகளாக அமைந்துள்ளன. இக் குறிப்புக்களை உற்று நோக்குங்கால் வள்ளலார்க்குத் தமிழ் நூற் பரப்பினுள் அமைந்த புலமைத்திறம் இனிது புலனாகும். இவ்வாறே சமய நுட்பம் பற்றி உபநிடதங்கள், ஆகமங்கள் முதலிய வடமொழி நூல்களை இராமலிங்கவள்ளலார் இறைவன் அருளால் ஓதாதுணரப் பெற்றார் என்பது திருவருட் புகழ்ச்சியிலமைந்த வடமொழித் தொடர்களாலும் நாதாந்தம் முதலிய ஆறந்தங்களின் இயல்புரைக்கும் திருவருட்பா பகுதிகளாலும் நன்கு தெளியப்படும்.

# 8. சன்மார்க்க நெறி வளர்த்த தவச் செல்வர்

மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஐம்பொறிகளின் வழியாக உலக நுகர்ச்சிகளில் ஊற்றுணர்வு, சுவையுணர்வு, ஒளியுணர்வு, நாற்றவுணர்வு, ஓசையுணர்வு என்னும், ஐம்புல ஆசைகளிலும் தன்னை மறந்து தாழும் தன்மை மக்களது மனத்தியல் பாகும். இவ்வாறு உலக நுகர்பொருள்களில் ஈர்த்துச் செல்லும் ஐம்பொறி உணர்வுகளையும் அடக்கும் வன்மையின்றி ஐயுணர்வின் வழியே செல்லும் மனத்தினைத்திருத்தி அவ்வைந்தையும் அடக்கியாள வல்ல ஆற்றலை உயிர்கட்கு வழங்குதல் இறைவனது அருளியல்பாகும். நல்லொழுக்க நெறி நிற்பார்க்கு இன்றியமையாத புலனடக்கத்தையும் பொய்மையே பெருக்கும் பாசங்களின் நீக்கத்தையும் தந்து நல்வழிப்படுத்தற் பொருட்டு எல்லாம் வல்ல இறைவன் உயிர்க்குயிராய் உள் நின்றுணர்த்திய ஒழுக்க நெறியே உண்மையான சமய நெறியாம். இவ்வுண்மை.

> பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
> நெறிநின்றார் நீடு வாழ்வார். (குறள் -6)

எனவரும் திருக்குறளால் அறிவுறுத்தப்பட்டது.

இங்கு “பொறிவாயில் ஐந்தவித்தான்” என இறைவனைக் குறித்தது, இறைவன் தனக்கு ஐம்பொறி வாயிலாக நிகழும் ஐம்புல ஆசைகளைத் தன் ஞானத்தால் அடக்கிவென்றான் என்ற கருத்திற் கூறியதன்று. இறைவனுக்கு ஞானமே திருமேனி யென்பது திருக்குறள் முதலதிகாரத்து இரண்டாம் குறளில் வாலறிவன் என்ற தொடரால் உணர்த்தப்பட்டது. ஐம்புல ஆசைகளால் உந்தப்பட்டு எத்தகைய பொருள்களையும் விரும்புதலும் வெறுத்தலுமாகிய தன்மை இறைவனுக்கு இல்லையென்பது, வேண்டுதல் வேண்டாமையிலான் (குறள்-4) என்பதனால் இவ்வதிகாரத்தில் முன்னமே அறிவுறுத்தப் பட்டது. எனவே ஐம்பொறிவாயிலாகச் செல்லும் ஐம்புலவுணர்வு

இறைவனுக்கு இல்லாமையும் அவை இல்லையாகவே அவற்றை அடக்குதல் வேண்டாமையும் தானே பெறப்படும். அப்படியானால் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்ற தொடரின் பொருள்தான் யாது? என்ற வினா எழுதல் இயல்பு. விருப்பு வெறுப்புடைய உயிர்கள் ஐம்புல உணர்வுகளால் மயங்கி அவற்றை அடக்கும் வலியின்றி அல்லற்படும் துன்ப நிலையிலே அருளாளனாகிய இறைவன் ஐம்புலவுணர்வுகளையும் ஒருங்கே அடக்கியாளும் ஆற்றலைத் தந்து மெய்ம்மையான ஒழுக்க நெறியினை மக்களுக்கு அறிவுறுத்தி யருள்கின்றான் என்பதே இதன் பொருளாகும். ஐம்பொறிகளை அடக்க வல்ல பேராற்றல் இயல்பாகவே பாசங்களின் நீங்கிய இறைவனுக்கு அன்றி ஏனைய வுயிர்கட்கு இல்லை என்பதும், எனவே புலனுணர்வினராகிய மாந்தர்களால் வகுத்துரைக்கப் பெறும் நெறிகள் அவர்தம் விருப்பு வெறுப்புகளின் வழியமைந்த குறுகிய நெறிகளாவதன்றி எல்லாவுயிர்களும் இகலின்றிச் செல்லும் மெய்ம்மை வாய்ந்த பெருநெறியாக அமைதல் இயலாதென்பதும் இத்திருக்குறளால் அறிவுறுத்தப்படும் அரிய வுண்மைளாகும்.

"வேண்டில் ஐம்புலன் என் வசமல்ல" (திருமுறை -7-60-7)

எனவும்,

"வறிதே நிலையாத விம் மண்ணுலகின்
நரனாக வகுத்தனை நானிலையேன்
பொவாயிலிவ் வைந்தினையுமவியப்
பொருதுன் னடியே புகுஞ்சூழல் சொல்லே" (திருமுறை -7-3-3)

எனவும் நம்பியாரூரர் அருளிய தேவாரத் தொடர்கள் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' எனவரும் திருக்குறட் பொருளைப் புலப்படுத்தி நிற்றல் காணலாம். 'பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார்' என்ற தொடரை

"பொய்யிலா மெய்ந்நெறிக்கே தக்கிருந்தார்" (2-42-1)

என விரித்துப் பொருள் கொள்வர் ஆளுடைய பிள்ளையார். எல்லாம் வல்ல இறைவனே உலகமக்கள் உய்தி பெறுதல் வேண்டி மெய்ந் நெறியாகிய ஒழுக்க நெறியினை வகுத்து அருளினான் என்பது,

"மேவிய வெந் நரகத்தில் அழுந்தாமை நமக்கு
மெய்ந்நெறியைத் தான் காட்டும் வேத முதலானை" (7-40-10)

எனவரும் சுந்தரர் வாய்மொழியால் நன்கு புலனாகும்.

இறைவனால் வகுத்தருளப்பெற்ற "மெய்ந்நெறியாகிய" இச்சமய நெறியினைத் திருநெறி எனவும், பெருநெறி எனவும் சன்மார்க்க மெனவும் திருமுறை ஆரியர்கள் தாம் அருளிய திருப்பாடல்களில் வழங்கியுள்ளமை இங்குக் குறிப்பிடத் தகுவதாகும்.

உயிர்கள் உய்தி பெறுதற் பொருட்டு இறைவனால் வகுத் தளிக்கப் பெற்ற ஒழுக்க நெறியே சமயம் ஆகும். உயிர்கள் தம் முயற்சியால் சென்றடைய வொண்ணாத வீடுபேற் றின்பமாகிய 'திரு' வினை வழங்கும் சிறப்புடைய தாகலின் இதனைத் திருநெறி யெனவும், சாதி மத வேறுபாடின்றி உலக மக்கள் எல்லோரும் அன்பினால் ஒருங்கு கூடிச் செல்லுதற்குரிய விரிவுடைய வழியாதலின் பெருநெறி எனவும், சத்து (உள்ளது) என்னும் முழுமுதற் பொருளாகிய இறைவன்பாற் கொண்டு செலுத்தும் நன்னெறியாதலின் சன்மார்க்க மெனவும் வழங்கப் பெறுவதாயிற்று. சத் + மார்க்கம் = சன்மார்க்க மெனத்திரிந்து வழங்குதல் தமிழ்மரபு. சத்து = உள்ளது - என்றது என்றும் மாறாதுள்ளதாகிய முழுமுதற் கடவுளை.

ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. (திருக்குறள் - 357)

எனவரும் திருக்குறளில் எல்லாம் வல்ல இறைவனை "உள்ளது" என்ற சொல்லால் திருவள்ளுவர் குறித்துள்ளமை இங்கு ஒப்பு நோக்கத் தகுவதாகும். தத்தம் உணர்வு கொண்டு மக்களால் வகுத்துரைக்கப் படும் சமயங்கள் யாவும் அவரவர்தம் விருப்பு வெறுப்புகட்கேற்ப மாறுபடுதல் இயல்பு. வேண்டுதல் வேண் டாமை இல்லானாகிய இறைவனால் எல்லாவுயிர்களும் அன்பினால் ஒருங்கு கூடி உய்திபெறுதல் வேண்டுமென்னும் பொதுநோக்குடன் வகுத்தருளிய ஒழுக்கநெறியே உண்மை நெறியாகிய சன்மார்க்கமாகும்.

இறைவனை ஆண்டவனாகவும் உயிராகிய தன்னை அம் முதல்வனது அடிமையாகவும் எண்ணி அன்பினால் வழிபடும் நெறியினைத் தாசமார்க்கம் எனவும், எல்லாம் வல்ல ஆண்ட வனைத் தந்தையாகவும் தன்னை அம்முதல்வனது மைந்தனாகவும் கருதி அன்பு செலுத்தும் நெறியினைச் சற்புத்திர மார்க்கமெனவும், இறைவனை ஆருயிர்த் தோழனாகக் கொண்டு வழிபடும் முறையினைச் சகமார்க்கமெனவும், இறைவனை ஆருயிர்க் காதலனாகவும், அவனது அருளார் இன்பத்தினை விரும்பி நிற்கும் ஆன்மாவாகிய

தன்னைக் காதலியாகவும் கொண்டு போற்றும் முறையினைச் சன்மார்க்கமெனவும் வழங்குதல் சைவ சமய மரபு, இந்நெறிகள் நான்கினையும் முறையே, தொண்டு நெறி, மகன்மை நெறி, தோழமை நெறி, அகத்திணை நெறி எனத் தமிழில் வழங்குதல் ஏற்புடையதாகும். மேற் குறித்த நால்வகை மார்க்கங்களையும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற பெயர்களால் வழங்குதலே பெரு வழக்கமாகும்.

சரியை முதலாக மேற் கூறப்பட்ட நால்வகை நெறிகளும், ஒன்றின் ஒன்று தொடர்புடையனவாய்ச் சத்தாகிய முழுமுதற் பொருளிடத்தே உயிர்களைச் சேர்ப்பிக்கும் நெறிகளாதலின் இந்நான்கினையுமே சன்மார்க்கமென்ற சொல்லால் வழங்குதல் திருமூல நாயனார், தாயுமானார் அருட்பிரகாச வள்ளலார் ஆகிய திருவருட் என்றோர் அனைவருக்கும் ஒத்த முடிபாகும்.

விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்பு மலர் காய் கனிபோல் அன்றோ பராபரமே. (தாயு-பா-157)

எனவரும் பாடலில் நால்வகை நெறிகளையும் மெய்ஞ்ஞானம் நான்கும் எனத் தாயுமான அடிகள் குறித்துள்ளமையால் ஞானத்தில் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்னும் நால்வகை நெறிகளையும் குறித்ததே சன்மார்க்கம் என்ற இச்சொல் என்பது நன்கு புலனாகும்.

இத்தகைய சன்மார்க்க நெறியானது எல்லாம்வல்ல சிவபெருமானால் உயிர்கள் உய்தற் பொருட்டு வகுத்தருளிச் செய்யப்பட்டது என்றும், இறைவனே குருவாய் எழுந்தருளி முனிவர் பெருமக்களுக்கு அருளிச் செய்ய அவர்கள் வழியே ஆசிரியர் - மாணவர் என்னும் வழிமுறையில் நாட்டில் தொடர்ந்து நிலை பெற்று வருவதாதலின் இதனைக் குறிநெறி என்றும், சிவபரம் பொருளால் அருளிச் செய்யப் பெற்றமையின் சிவநெறி என்றும் வழங்குவர் திருமூலத்தேவர், இவ்வுண்மை,

சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத்துள் ளார்க்கு வகுத்து வைத்தானே. (திருமந். 1478)

எனவரும் திருமந்திரத்தால் புலனாதல் காணலாம்.

உயிர்களைச் சிவத்துடன் ஒன்றுமாறு உணர்த்தும் சிவ சமயத்தின் தனி முதல்வனாகிய இறைவன் ஆன்மாக்கள் பாசப் பிணிப்பினின்று விடுபட்டு உய்தி பெற வகுத்தருளிய உபதேச நெறியாகிய குருநெறி ஒன்றுள்ளது. அதுதான் சிவமாந்தன்மைப் பெருவாழ்வை நல்கும் சிவநெறியாகும். சன்மார்க்கமாகிய அதனைச் சேர்ந்து உய்திபெற உலகில் வாழ்வார்க்கு வகைபெற விளக்கி வைத்தருளினான் நந்தியாகிய இறைவன் என்பது இத்திருமந்திரத்தின் பொருளாகும். சத் + மார்க்கம் என்னும் வடமொழித் தொடரில் சத் = என்றது உள்ளது; என்றது, எக்காலத்தும் மாறாது உள்ள முழு முதற் பொருளாகிய இறைவனை. மார்க்கம் - நெறி. இறைவன் அருளிய ஞானநன்னெறியாகிய இந்நெறி குருவழியாக உபதேச முறையிற் பெறுதற்குரியது என்பார்; "உய்ய வகுத்த குருநெறி" என்றார். சன்மார்க்கமாகிய சிவநெறி, வையத்து வாழ்வார் வானுறை யும் தெய்வத்துள் வைக்கப்படுதலாகிய சிவமாந்தன்மைப் பெரு வாழ்வைப் பெற்று இன்புறுதற் பொருட்டு இறைவனால் வகுத்தருளிச் செய்யப்பெற்றது என்பார், தெய்வச்சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய வையத்துள்ளார்க்கு வகுத்து வைத்தானே" என்றார் திருமூலர். 'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்'. (50) எனவரும் திருக்குறள் இங்கு நினைத்தற்குரியது.

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி" எனத் திருவள்ளுவர் கூறிய ஒழுக்க நெறியினையே 'குருநெறி' எனவும், சிவநெறி எனவும் சன்மார்க்கம் எனவும் திருமூலர் குறித்துள்ளமை காணலாம். சிவநெறிச் செல்வர்களால் மேற்கொள்ளப் பெற்றுவரும் சன்மார்க்க நெறியானது சமயாதீதப் பழம் பொருளாகிய சிவத்தையே வழிபடும் உறுதிப்பாடுடையது ஆதலின் எல்லாச் சமயத் தாராலும் வழிபடப் பெறும் முழுமுதற் பொருள் ஒன்றே என்னும் பொதுமை யுணர்வு இந்நெறியிலே உருப்பெற்று வளர்வதாயிற்று.

சைவ சமயத்தார் மேற்கொண்ட சன்மார்க்க நெறியின் பயனாக எல்லாச் சமயங்களையும் ஒப்ப நோக்கும் பொதுமை யுணர்வு தமிழகத்தில் உருப் பெற்று நிலவுவதாயிற்று.

சைவப் பெருமைத் தனிநாயகன் நந்தி உலகம் உய்ய வகுத்த தெய்வச் சிவநெறியாகிய சன்மார்க்க நெறியில் நின்ற திருமூலர் "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" (2104) என்ற திருமந்திரப் பாடலில் இத்தகைய சமயப் பொதுமையைப் புலப்படுத்தியுள்ளார்.

*சிவயோகியாராகிய திருமூலதேவரைத் தொடர்ந்து பின்வந்த தமிழ் நாட்டுச் சித்தர்கள் சமயங்கட்கிடையே ஒற்றுமையுணர்வை வளர்க்கும் நோக்கும், சமயப் பொதுமையுணர்வாகிய சமரச வுணர்வினைத் தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தி வந்துள்ளார்கள். இவ்வாறு தமிழகச் சித்தர்களால் அறிவுறுத்தப் பெற்ற சமரச நெறியினை 'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை' (சித்தர் கணம் - 1-10) எனவும், 'சமயங்கடந்த மோன சமரசம்'. (சின்ம யானந்த குரு -4) எனவும் தாயுமானார் சிறப்பித்துப் போற்றியுள்ளார்.*

*உலகாயத முதல் சைவ சித்தாந்தம் முடிவாக, மக்களால் மேற்கொள்ளப் பெற்றுவரும் எல்லாச் சமயங்களும், உலக முதல்வனாகிய இறைவனால் மன்னுயிர்கள் உய்தற் பொருட்டு அவரவர் பக்குவ நிலைக்கு ஏற்பப் படிப்படியாகத் தோற்றுவிக்கப் பெற்றனவே என்பர் பெரியோர்.*

*இவ்வாறு மக்களது பக்குவ நிலைக்கேற்பக் கொள்கைகளால் வேறுபட்ட பல்வேறு சமயங்களையும் படைத்தருளிய இறைவனே, மக்கள் தம்முள் முரண்பட்டு இகல் கொள்ளாதபடி இச்சமயங்கள் எல்லாவற்றையும் ஒப்பு நோக்கும் நல்லுணர்வினை மக்களுக்கு உணர்த்தவல்ல சமயங்கடந்த சமரசநெறியினையும் வகுத்தருளினால் இவ்வுண்மை,*

வைகை யெனும் பூதமாதியை வகுத்ததனுள்
    அசரசர பேதமான
யாவையும் வகுத்து நல்லறிவையும் வகுத்துமறை
    யாதி நூலையும் வகுத்துச்
சைவமுதலாம் அளவில் சமயமும் வகுத்துமேற்
    சமயங் கடந்த மோன சமரசம் வகுத்த நீ. (சின்மயானந்த குரு -4)

*எனத் தாயுமான அடிகள் ஆலமர்செல்வனாகிய குருமூர்த்தியைப் பரவிப் போற்றும் பாடலால் இனிது புலனாம்.*

*இங்ஙனம் எல்லாச் சமயங்களையும் இகலின்றி ஒப்பமதித்து ஏணிப்படி நெறிகளாகத் தழுவிக் கொள்ளும் பொதுமையுணர்வு சைவ சமயத்தார் மேற்கொண்டுள்ள சன்மார்க்க நெறியிலேயே தொன்று தொட்டு நிலைபெற்று வந்துள்ளது. இந்நுட்பம் சைவத் திருமுறை களையும் சைவசித்தாந்த சாத்திரங்களையும் சைவ இலக்கியங்கள் பிறவற்றையும் கூர்ந்து நோக்குவார்க்கு இனிது புலனாகும்.*

"எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்கு
இங்கேஎன் றருள்புரியும் எம்பெருமான்" (2-4-06)

*என ஆளுடைய பிள்ளையாரும்,*

"ஆறுசமயத்து அவரவரைத்தேற்றும் தகையன....
.... ..... ..... இன்னம்பரான் இணையடியே" (4-100-7)

"ஏணிப்படி நெறி இட்டுக் கொடுப்பன" (4-92-16)

*என ஆளுடைய அரசரும்,*

அறிவினால் மிக்க அறுவகைச் சமயத்து
அவ்வவர்க்கு அங்கே ஆரருள் புரிந்து (7-55-9)

*என ஆளுடைய நம்பியும்,*

"அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர்பொருளால்"
(சிவஞானசித்தியார் சுபக் - 1)

மனமது நினைய வர்க்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங்கு இச்சித்த தெய்வம் போற்றி
சினமுதலகற்றி வாழுஞ் செயலற மானால் யார்க்கும்
முனமொரு தெய்வம் வந்து செயற்கு முன்னிலையாய் அன்றே
(சிவஞானசித்தியார் 113)

*என அருள்நந்தி சிவனாரும் அருளிய பொருளுரைகள் இத்தகைய சமரச உணர்வினை நன்கு வலியுறுத்தல் காணலாம்.*

*"உலக மக்கள் உய்தற் பொருட்டே உலகிற் பல்வேறு சமயங்களும் தோற்றுவிக்கப் பெற்ற நிலையில் அவற்றுள் யாம் மேற்கொண்ட இச்சமய ஒழுகலாறே சிறந்தது ஏனையோர் மேற்கொண்ட பிறசமய ஒழுகலாறுகள் அத்துணைச் சிறப் புடையன அல்ல எனச் சமய வாதத்தினை மேற்கொண்டு மக்களிடையே வேற்றுமை, உணர்வினைத் தோற்றுவிக்கும் வித்துணர்வுடையோர் செயலைக் கண்டால், எங்கள் பெருமானாகிய இறைவன், அவர்தம் பேதைமையை எண்ணிச் சிரிப்பான். மக்கள் மேற்கொண்ட தவநெறியாகிய சமயம் எதுவாயிருந்தால் என்ன? அவர்கள் எந்த நாட்டில் எந்த நிறத்தினராய்ப் பிறந்தால் என்ன? எல்லாச் சமய நெறிகளும் இறைவனை அடைந்து உய்தி பெறுதற்கு அமைக்கப் பெற்றனவே என்னும் உண்மையை உடன்பட்டுப் பிணக்கின்றி*

இறைவனை யுணர்ந்து போற்றுவார்க்குச் சிவமாநகராகிய வீடு பேற்றினை விரைவில் அடைதல் எளிதாகும்'' என அறிவுறுத்துவது,

இத்தவம் அத்தவம் என்றிரு பேரிடும்
பித்தரைக் காணின் நகுமெங்கள் பேர்நந்தி
எத்தவம் ஆகிலென் எங்குப் பிறக்கிலென்
ஒத்துணர் வார்க்கொல்லை யூர்புகலாமே. (திரு. 156)

எனவரும் திருமந்திரமாகும். இதன்கண் ''ஒத்துணர்வார்'' என்து, சமயவேறுபாட்டினைக் கருதாமல் இறைவனால் அருளிச் செய்யப் பட்ட சமயங்கடந்த மேல்நிலையாகிய சமரசத்தினை உடன்பட்டு ஒழுகுவோராகிய சன்மார்க்கச் செல்வர்களை. இத்தகைய சமரச சன்மார்க்க நெறியே இறைவனது திருவருளைக் கூடுதற்குரிய நல்ல உபாயமாகும் என்பது,

'ஒத்துச் சென்றுதன் திருவருட் கூடிடும்
உபாயம தறியாமே' (திருவாசி 43)

எனவரும் வாதவூரடிகள் வாய்மொழியால் நன்கு புலனாகும்.

அறுவகைச் சமயங்களும் இறைவனையடைதற்கு வகுத்த நெறிகளே என்பதனை அறிவுறுத்துவது

''ஒன்றது பேரூர் வழி யாறதற்குள்
என்றது போல இருமுச் சமயமும்
நன்றிது தீதிது வென்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயை யொத்தார்களே'' (திருமந்திரம் -598)

எனவரும் திருமந்திரமாகும்.

''சென்றடைதற்குரிய பெரிய ஊர் ஒன்றே, அதனையடையும் வழிகள் ஆறு உள்ளன, என்றாற் போன்று அறுவகைச் சமயங்களும், முழுமுதற் பொருள் ஒன்றையே யடைவதற்குச் சாதனமாக உள்ளன. அவ்வாறாகவும் யாம் கூறும் இதுவே நன்று; பிறர் கூறும் அது தீது என்று சொல்லித் தம்முட் பிணங்கி வாதிடும் சமய வாதிகள், மலையைப் பார்த்துக் குரைத்து ஓடும் இழிந்த நாயினை ஒத்தவராவர்.'' என்பது இதன் பொருள். எல்லாச் சமயங்களும் மக்கள் அறிவு நலம் பெற்று ஒழுகுதற் பொருட்டே அறிஞர்களால் வகுத்துரைக்கப் பட்டன என்றும், அவற்றிடையே அமைந்த ஒருமையுணர்வினைக் காணமுயலாது அவற்றின் வெளித் தோற்றத்தை மட்டும் கண்டு

*மருண்டு வாதித்துப் பிணங்குவோர் மலையைக் கண்டு மருண்டு குரைத்துக் கொண்டு கடிக்க ஓடும் நாயினைப் போன்று பிறர் கூறும் மொழியின் பொருளை உள்ளவாறு உணரும் தெளிவின்றித் தம் சொற்களைப் பயனில்லாதவைகளாகச் செய்கின்றார்களே என்றும் இரங்கி வருந்துவார். "குன்று குரைத்தெழு நாயை ஒத்தார்களே" என்றார் திருமூலர். ஞானமே திருமேனியாகவுடைய இறைவன் சமயங்கள் தோறும் அருளிச் செய்த ஆகமங்களில் கூறப்பட்ட மெய்யுணர்வு பற்றிய முடிவுகள் எல்லா ஆகமங்களிலும் ஒத்துச் சென்று முழுமுதற் பொருள் ஒன்றையே நோக்கிச் செல்வன என்பார், "ஒன்று அது பேரூர் வழி ஆறு அதற்குள" என்றார்.*

சுத்த வடிவியல்பாக வுடைய சோதி
சொல்லிய ஆகமங்க ளெல்லாம் சூழப்போயும்
ஒத்து முடியும் கூட ஓரிடத்தே
ஒருபதிக்குப் பல நெறிகள் உளவானாற்போல்
பித்தர்குண மதுபோல ஒருகா லுண்டாய்ப்
பின்னொருகா லறிவின்றிப் பேதையோராய்க்
கத்திடும் ஆன்மாக்க ளுரைக் கட்டிற்பட்டோர்
கனகவரை குறித்துப் போய்க் கடற்கேவீழ்வர்;
(சித்தியார் பரபக்கம் - 9)

*எனவரும் அருள்நந்திசிவனார் பாடல் மேற்குறித்த திருமந்திரத் திற்கு உரிய விளக்கமாக அமைந்துள்ளமை இங்கு ஒப்பு நோக்கற் பாலதாகும்.*

"கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையின் மறைகளாலும் இயல்பரும் பொருளிதென்னத்
தொல்லையி னொன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல் பெருஞ் சமயம் சொல்லும் பொருளும் போற் பரந்த அன்றே"
(கம்பர். பால-ஆற்றுப் - 19)

*எனக் கவிச்சக்கரவர்த்தி கம்பரும்.*

"வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கில்
விளங்குவரம் பொருளேநின் விளையாட்டல்லால்
மாறுபடும் கருத்தில்லை முடிவில்மோன
வாரிதியில் நதித்திரள் போல் வயங்கிற்றம்மா"
(தாயுமான - கல்லாலின் - 25)

*எனத் தாயுமானாரும் எல்லாச் சமயங்களையும் சமரச உணர்வுடன் ஒப்பமதித்தல் வேண்டும் என அறிவுறுத்தி யுள்ளார்கள். இவ் வுண்மையினையே வள்ளலாரும்,*

"பொங்குபல சமயமெனும் நதிகளெல்லாம்
புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கு ஓங்கும்
கங்குகரை காணாத கடலே எங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதியே அன்பர்
தங்கநிழல் பரப்பிமயல் சோடை யெல்லாந்
தணிக்கின்ற தருவே பூந்தடமே ஞானச்
செங்குமுத மலரவரு மதியே எல்லாம்
செய்யவல்ல கடவுளே தேவதேவே" (திருவருட்பா 2118)

*எனவரும் திருவருட்பாவில் வெளியிட்டுள்ளது இங்கு ஒப்பு நோக்குதற்குரிய தாகும்.*

*"சொல்லால் விரித்துரைத்தற்கு அரிய நுண்ணிய தத்துவ வுண்மைகளைத் தம்பாற்கொண்ட சமய நெறிகள்யாவும் தத்தம் தெய்வமே தெய்வமென்று வற்புறுத்துவன. அச்சமயங்களை மேற்கொண்டொழுகுவோர்களும் அக் கொள்கையினையே உறுதியாகப் பற்றிக்கொண்டு தத்தம் சமயக் கொள்கைகளை நிலைநாட்ட அச்சமய நூற் பொருள்களைக் கருதலளவை முதலிய அளவைகளால் யாவரும் ஒத்துக் கொள்ளும் முறையில் விரித்துரைப் பார்கள். அவர் கூறுவனவற்றுள், பொய் இது, மெய் இது என அவற்றுள் ஒன்றினை இல்லை என்றோ உண்டென்றோ பார்த்து ஒரு முடிவுக்கு வருதல் எத்துணை அறிவுடை யோர்க்கும் இயலாத செயலாயுள்ளது. இத்தகைய சமயங்களாகியும், இவற்றின் வேறாயும் எல்லாச் சமயங்களும் ஏற்றுக் கொள்ளும் பொது வுண்மைகளை யுடையதாகியும், தன்னியல்பில் எக்காலும் திரிபடையாமல் விளங்குவது சைவம். இது இயமம் முதலிய எண்வகைக் குணங் களையும் புலப்படுத்தி உயிர்கட்கு இன்பத்தை நல்கி நற்பயன்களை அருளுதற் கேற்ற பிரிவுடைய சூழலை யுடையதாய் மயக்கமற்ற சிக்ஷை, சோதிட முதலிய ஆறங்கங்களும் தன் கண் அடங்க படிமுறையே நற்பொருள்களை யறிவுறுத்தி ஞானவடிவமாகிய மோனமுடியைச் சொன்னியிற் சூட்டி அரசிருக்கையில் அமர்ந்திருப்பாகும். இத்தகைய வைதிக சைவம், ஐயோ? மிகவும் அழகியதாகும்.*

சைவசமயச் சான்றோர்களால் ஞான நன்னெறியாக வகுத்துரைக்கப் பெற்றது, எல்லாச் சமய நெறிகளையும் தனக்க அங்கமாகக் கொண்ட சமயங்கடந்த மோன நிலையாகிய சன்மார்க்க நெறியாகும். இந்நெறி அணிமா முதலிய எண்வகைச் சித்திகள் கைவரப் பெற்ற சித்தர்கட்கும், பேசாஅநுபூதி பெற்ற மாதவச் செல்வர்களுக்கும், இந்திரன் முதலிய பதவிகளை வேண்டிப் பெற்றவர்கட்கும் தாயகமாகத் திகழுந் தன்மையது. இங்ஙனம் இம்மை, மறுமை, வீடு என்னும் மும்மை நலங்களையும் வேண்டி யோர்க்கு வழிவழி நின்று உதவும் திறத்தில்கற்பகத்தருப் போன்று இறைவனது திருவருளின் தன்மையை வெளிப்படுத்திக் காட்டுதற்குப் பொருந்திய நெறியே இச் சன்மார்க்கநெறியாதலின் இதுபோன்று அதிசயம் விளைப்பதொரு சமயநெறி பிறிதொன்று மில்லை.

இத்தகைய சன்மார்க்க மென்னும் ஞானநெறியின் பொருளும் எல்லாச் சமயங்களிலும் மேம்பட்டு விளங்கும் சைவசமயத்து உண்மைகளாகிய குறியீட்டுப் பொருளும் பிரிவற ஒரு பொருளேயாகித் தோன்றுவதால் சமயநெறியும் சமயநெறியில் அடையும் பயனும், இச்சமயத்தில் இயைந்து தோன்றுவது போன்றதொரு ஒற்றுமைத் தன்மை பல்வேறு சமயநெறிகளில் எதினிலும் யாம் கண்டதில்லை. சொல்லால் வெளியிட்டுக் கூறுதற்கு அரிய தில்லையம்பலத்தில் நாம் பார்த்தபோது, அங்கு எந்தச் சமயத்திற்குரிய அடையாளம் இருக்கிறது? (ஒன்றுமில்லை) எல்லாம் ஞான வெளியே என உணர்ந்து எல்லாச் சமயத்தோர்களும் தில்லைப் பொதுமன்றினை வணங்கிப் போற்று கின்றார்கள். "கல்லின் தன்மையதாகிய நெஞ்சத்தையுடைய எனக்குக் கூட அம்மன்றினைக் கண்டவுடன் வீடுபேற்றின்பமாகிய பேரானந்தத்தினை நுகரும் நிலையுண்டாகிறது" எனத் தாயுமான வடிகள் சைவ சமயத்திலுள்ள ஞான நன்னெறியாகிய சன்மார்க்கத்தின் சிறப்பினையும் அந்நெறியின் பயனாக எல்லாச் சமயத்தாரும் தம்முள் இகலின்றி ஆன்மநேய ஒருமைப் பாட்டுணர்வினராய்ச் சமயங்கடந்த தனிமுதற் பொருளை வணங்குதற்குரிய பொதுமை வாய்ந்த திருக்கோயிலாகத் தில்லையம்பலம் - திகழவும், இதனாற் பயன் கொள்ள முயலாத ஏனையோரின் இரங்கத்தக்க நிலையினையும் எண்ணி வியந்து கூறும் முறையில் அமைந்தன: -

செப்பரிய சமயநெறி யெல்லாந் தந்தம்
தெய்வமே தெய்வமென்னும் செயற்கை யான
அப்பரி சாளரும் அஃதே பிடித்தாலிப்பால்
அடுத்த அந்நூல்களும் விரிந்தே அநுமானாதி
ஒப்பவிரித் துரைப்பர் இங்ஙன் பொய் மெய் யென்ன
ஒன்றிலை ஒன்றெனப் பார்ப்ப தொவ்வா தார்க்கும்
இப்பரிசாஞ் சமயமுமாய் அல்லவாகி
யாது சமயமும் வணங்கும் இயல்பதாகி

(தாயுமானவர் - ஆகார புவனம் - சிதம்பர ரகசியம்-9)

இயல்பென்றுந் திரியாமல் இயம மாதி
எண்குணமும் காட்டியன்பால் இன்பமாகிப்
பயனருளப் பொருள்கள் பரிவாரமாகிப்
பண்புறவும் சௌபான பக்ஷங்காட்டி
மயலறு மந்திர சிக்ஷை சோதிடாதி
மற்றங்க நூல் வணங்க மௌனமோலி
அயர்வறச் சென்னியில் வைத்து ராசாங்கத்தில்
அமர்ந்தது வைதிக சைவம் அழகிதந்தோ

(தாயுமானவர் - ஆகாரபுவனம் - சிதம்பர ரகசியம் 10)

அந்தோ ஈததிசயமிச் சமயம் போலின்
றறிஞர்எலாம் நடு அறிய அணிமா ஆதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கும் மற்றும்மற்றும்
இந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கும்
இதுவன்றித் தாயகம் வேறில்லை யில்லை
சந்தான கற்பகம் போல் அருளைக் காட்டத்
தக்கநெறி இந்நெறியே தான் சன்மார்க்கம்

(தாயுமானவர் - ஆகாரபுவனம் - சிதம்பர ரகசியம் - 11)

சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமய சங்கேதப் பொருளுந் தானொன்றாகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்டதில்லை
பகர்வரிய தில்லைமன்றுள் பார்த்தபோதங்
கென்மார்க்கம் இருக்குது எல்லாம் வெளியே என்ன
எச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்

சன்மார்க்க நெஞ்சமுள எனக்குந் தானே
கண்டவுடன் ஆனந்தங் காண்ட லாகும்

(தாயுமானவர் - ஆகாரபுவனம் - சிதம்பர ரகசியம் -12)

*எனவரும் பாடல்களாகும்.*

*"எல்லாம் வெளியே" என்றது, சிதாகாசம் எனப்படும் ஞான ஆகாயத்தை. இப்பெருவெளியே திருச்சிற்றம்பலமெனப் போற்றப் பெறுகிறது. மெய்ஞ்ஞானமயமான இவ்வம்பலத்திலே எல்லாம் வல்ல இறைவன் உலகுயிர்கள் உய்யும் வண்ணம் ஒரு பெரும் தனிக்கூத்து இயற்றியருள்கின்றான், என மெய்ந் நூல்கள் கூறுகின்றன. மெய்யுணர்விற்குப் புலனாகும் சிவபோகமாகிய பேரின்பத்தை அன்புடைய அடியார்கள் தம் ஐம்பொறி அளவாலும் எளிதிற் பெற்று இன்புறும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் பேரொளிப் பிழம்பாய் நின்று ஆடல் புரிகின்றான். இவ்வெட்ட வெளியில் நிகழும் இறைவனது திருக்கூத்தினை ஆளுடை பிள்ளையார் கண்டு வணங்கி மகிழ்ந்ததிறத்தினை*

அண்ணலார் தமக்களித்த மெய்ஞ்ஞானமே
யான அம்பல முந்தம்
உண்ணிறைந்த ஞானத் தெழுமானந்த
ஒருபெருந் தனிக் கூத்தும்
கண்ணின் முன்புறக் கண்டு கும்பிட்டெழும்
களிப்பொடுங் கடற்காழிப்
புண்ணியக் கொழுந்தனையவர் போற்றுவார்
புனிதராடிய பொற்பு. (பெரியபுராணம் திருஞான - 160)

உணர்வின் நேர்பெற வருஞ்சிவ போகத்தை
ஒழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர
அருளினை எனப் போற்றி
இணையில் வண் பெருங் கருணையே ஏந்திமுன்
எடுத்த சொற் பதிகத்தில்
புணரு மின்னிசை பாடினர் ஆடினர்
பொழிந்தனர் விழிமாரி. (பெரியபுராணம் திருஞான - 161)

*எனவும்*

"விண்ணாயகன் கூத்து வெட்டவெளியே திளைத்துக்
கண்ணா ரமுதுண்டார் காலம்பெற அழுதார்" (-163)

எனவும் வரும் திருப்பாடல்களில் சேக்கிழாரடிகள் தெளிவாக விளக்கியுள்ளார்.

தில்லைப் பொன்னம்பலத்திலே சோதிப்பொருளாகிய இறைவன் தனது அருளாகிய பேரொளி அண்டத்திலும் ஆருயிர்களின் அகத்திலும் அண்டத்து அப்புறத்திலும் எவ்வுலகத்திலும் விளங்கா நிற்ப ஆடியருளும் திறத்தினை "அரியானை" எனத் தொடங்கும் பெரிய திருத்தாண்டகததில் 'தொல்லைத் திகழ் ஒளி' எனவும், 'சிந்தைதனை மயக்கம் தீர்க்கும் ஏரொளி' யெனவும், 'அண்டத்து அப்பால் நின்ற பேரொளி' யெனவும் வரும் தொடர்களால், திருநாவுக்கரசர் விளக்கியருளி யுள்ளார். இத்திருத்தாண்டகம், தில்லையம்பலத்திலே இறைவன் அருட்சோதித் தெய்வமாக ஆடல்புரியும் திறத்தினை விரித்துரைத் துள்ளமை காணலாம். இக்கருத்திலேயே,

"அளவா ஒளிவளர் தில்லை ஒருவன்"

என வாதவூரடிகளும் (திருச்சிற்றம்பலக்கோவை -- 16)

"ஒளிவளர் விளக்கே" எனத் திருமாளிகைத் தேவரும்,

"திருவளர் திருச்சிற்றம்பலம்" எனக் கருவூர்த் தேவரும்,

'அலகில் சோதியன்' எனச் சேக்கிழாரடிகளும் அம்பலக் கூத்தனை ஒளியுருவினனாகப் போற்றியுள்ளமை காணலாம்.

தில்லைச் சிற்றம்பலத்தில் திருவம்பலச்சக்கரத்தில் வைத்துப் போற்றப்பெறும் சிதம்பர ரகசிய வழிபாடு 'எல்லாம் வெளியே' எனத் தாயுமானாரும் "விண்ணாயகன் கூத்து வெட்ட வெளியே திளைத்து" எனச் சேக்கிழாரடிகளும் கூறிய பொருளுரைகளுக்கு இலக்கியமாகத் திகழ்தல் காணலாம்.

இதுகாறும் எடுத்துக் காட்டியவற்றால் தில்லைப் பொதுவினில் நிகழும் திருச்சிற்றம்பல வழிபாடு சைவ சமயத்தார் மட்டுமின்றி எல்லாச் சமயத்தாரும், ஆன்மநேய ஒருமைப் பாடுடையராய்ச் சமயாதீதப் பழம்பொருளாய சிவபரம் பொருளை அறிவுப்பெரு வெளியில் ஒளிப் பிழம்பாகக் கண்டு போற்றும், சமயங்கடந்த சமரச சன்மார்க்க வழிபாடாக அமைந்துள்ளமை நன்கு துணியப்படும்.

*திருமூலநாயனார் முதல் தாயுமானார் ஈறாக உள்ள செந்தமிழ்ச் சான்றோர் பலரும் அறிவுறுத்திய சமரச சன்மார்க்க ஒளிவழி பாட்டினை உலகமுழுதும் பரப்புதல் வேண்டும் எனத் திருவுளங் கொண்ட அருட்பிரகாச வள்ளலார், சாதிமத வேறுபாடின்றி மக்களனைவரும் ஒருங்கு சென்று வழிபடுதற்குரிய பொதுமைத் திருவருள் நிலையமாகப் பார்வதிபுரம் என்னும் வடலூரில் சத்திய ஞானசபையைக் கி.பி. 1872 இல் தோற்றுவித்தருளினார் .*

*வடலூரில் அருட்பிரகாச வள்ளலாரால் நிறுவப் பெற்ற சத்தியஞானசபையானது சிதம்பரத்தில் ஞான ஆகாசமாகத்திகழும் திருச்சிற்றம்பலமாகிய சிற்சபையின் அமைப்பினை யுடையதாகும்.*

*தில்லையம்பலத்தில் கூத்தப் பெருமான் எழுந்தருளிய பீடத்திற்கு மேற்கே சிதாகாசப் பெருவெளியாகிய அருவத்தான மாகத் திகழ்வது சிதம்பர ரகசியம். இது ஞானவெளியென்பதனை அன்பர் பலரும் நன்குணர்வர். இராமலிங்கர் ஐந்துமாதக் குழந்தையாக இருந்த போதே அவர்தம் பெற்றோர்கள் தில்லையில் கூத்தப்பெருமானை வழிபட வந்தனர். தில்லைவாழ் அந்தணர் சிதம்பர ரகசியத்தின் திரையினைத் தூக்கிக் கற்பூரம் காட்டித் தரிசனம் செய்வித்தார். அப்போது பெற்றோர் கையிலிருந்த கைக் குழந்தையாகிய இராமலிங்கரும் அத்தரிசனத்தைக் கண்டு கூத்தப் பெருமான் திருவருளால் அவ்விரகசியத்தின் தத்துவ விளக்கத் தினை உணர்ந்து கொண்டார் என்பது வரலாறு. இச்செய்தி,*

"தாய்முதலோரொடு சிறிய பருவமதில் தில்லைத்
தலத்திடையே திரைதூக்கத் தரிசித்த போது
வேய்வகை மேல் காட்டாதே என்றனக்கே எல்லாம்
வெளியாகக் காட்டிய என்மெய்யுறவாம் பொருளே" (4:33)

*எனவரும் வள்ளலார் வாய்மொழியால் இனிது புலனாகின்றது. இவ்வாறு வள்ளலார் தம் குழந்தைப் பருவத்திலே தில்லைப் பெருங்கோயிலில் கூத்தப் பெருமான் உணர்த்த உணர்ந்து கொண்ட "எல்லாம் வெளியே" (தாயுமானார்) என்னும் அநுபவ உண்மை யினைத் தமது நாற்பத்தொன்பதாம் வயதில் உத்தரஞான சிதம்பரம் என்னும் வடலூரிலே ஏழு திரைகளை நீக்கி அருட்பெருஞ்சோதி ஆண்டவரைக் கண்டுபோற்றும் சோதிதரிசன அமைப்பினை அமைத்துக் காட்டியருளினார் எனக் கருத வேண்டியுள்ளது.*

தில்லைப் பெருங்கோயிலில் சிதம்பர ரகசியத்தினை மறைக்கும் நிலையில் அமைக்கப் பெற்றுள்ள திரை ஒன்றே என்பதனை யாவரும் அறிவர். அங்ஙனமாகவும் வடலூரில் வள்ளலார் அமைத்துள்ள திரைகள் ஏழாகும். “சுடர் விட்டுளன் எங்கள் சோதி” என ஆளுடையபிள்ளையாரும் “சிந்தைதனை மயக்கந் தீர்க்கும் ஏரொளி” என அப்பரடிகளும் “இரந்திரந்துருக என் மனத்துள்ளே எழுகின்ற சோதியே” என மணிவாசகப் பெரு மானும் அருளிய வண்ணம் ஆன்மாக்களின் அகத்தே தோன்றும் உள்ளொளியைக் கண்டு மகிழ்தலாகிய அருளநுபவத்தை எல்லோரும் உணர்ந்து உய்திபெறுதல் வேண்டும் என்னும் பெருங் கருணைத் திறத்தால் புறத்தே பாவனையாகக் காட்டுவதே வள்ளலார் அமைத்த சத்திய ஞான சபையின் அருட் பெருஞ்சோதி வழிபாடாகும். தோற்றமில் காலமாகத் தம்மை பிணித்துள்ள ஆணவமலப் பிணிப்பின் காரணமாக ஆன்ம அறிவினை மறைத்துள்ள தத்துவப் படலங்களாகிய திரைகள் ஏழெனவும், அவை நீங்கப் பெற்றால் அருட்பெருஞ் சோதியாண்டவரைத் தரிசித்துப் பிறவிப் பிணிப்பகலப் பேரின்ப வாழ்வை அடைந்து இன்புறலாம் எனவும் அறிவுறுத்துவதே வடலூர் சத்தியஞான சபையின் வழிபாட்டு முறையாகும்.

ஆன்மாவை அநாதியே பற்றியுள்ள ஆணவமலமானது ஆன்மாவின் அறிவு, விழைவு, செயல் ஆகியவற்றை மறைத்து நிற்கும் எனவும், இறைவனது அருட்சத்தியானது மறைப்பாற்றலாய் ஆன்மாவுடன் கூடி நின்று ஆன்மாவை விட்டு ஆணவமலம் கழலும் பக்குவத்தை யுண்டாக்கி, அங்ஙனம் மலபரிபாகம் பெற்ற ஆன்மாக்களுக்கு மீளவும் பழைய அருட்சத்தியாய்த் தோன்றிச் சிவனுடைய திருவருளிலே கூட்டுவிக்கும் (சிவப்பிரகாசம் 30) எனவும் சைவ சித்தாந்த நூல்கள் கூறும். பெற்ற தாயானவள் பிள்ளைகளின் நோயினை நீக்குதல் வேண்டிக் கசப்புடைய மருந்தினை மறைத்துக் கொடுக்கும்போது சினமுடையவள்போல் தோன்றி நோய் நீங்கிய நிலையிற் பழைய பேரன்பினை யுடையளாய் இனிய உணவினைப் பிள்ளைக்கு நல்குவது போலவே, இறைவனது திருவருளாகிய சத்தியும் ஆன்மாக்களின் ஆணவப் பிணிப்பாகிய மலம் கழலுதல் வேண்டிச் சினமுடைய திரோதாயியாக நின்று உயிர்கட்கு வினைப் பயன்களாகிய மருந்தினை மறைத்து உண்பித்து அம்மலநோய் நீங்கிய நிலையிலே ‘பழைய திருவருட் சத்தியாகத் தோன்றிச் சிவபரம் பொருளைக் கண்டு மகிழும் பெற்றியை

அளித்தருளும். இவ்வுண்மையினை, 'முற் சினமருவு திரோதாயி கருணையாகித் திருந்திய சத்திநிபாதம் திகழுமன்றே' (சிவப்பிரகாசம் - 48) என வரும் திருவிருத்தத்தில் உமாபதி சிவாச்சாரியார் விளக்கி யுள்ளார்.

இவ்விளக்கத்தினை யுளங்கொண்ட இராமலிங்க வள்ளலார், சோதி வழிபாட்டில் எழு திரைகளை அமைத்துள்ளார். தில்லைச் சிற்றம்பலத்தில் சிதம்பர ரகசியத்தினை மறைத்துள்ள திரையானது, தில்லையம்பலத்தில் ஒளியுரு வாய்த்திகழும் பரம்பொருளை ஆன்மா காணுதற்குத் தடையாயுள்ள ஆதிசத்தியினைக் குறிப்ப தாகும். ஆதி சத்தி பராசத்தி முதலிய சத்திகளாய் ஒன்றன் பின் ஒன்றாய் அமைந்து ஆன்மாவை மறைத்துள்ள திரைகள் ஒன்றன் பின் ஒன்றாகவிலக ஆன்மாவானது அப்பாலுக்கப்பாலானாகிய பரம்பொருளை முறையே கண்டு தெளியும் முறையில் இரக சியத்தின் முன்னுள்ள திரையானது தூக்கிக் காட்டப்படுகின்றது. இவ்வுண்மையினை,

"பரைதூக்கிக் காட்டியகாலே - ஆதி
பரை இவர்க்கப்பால் அப்பால் என்றுமேலே
திரைதூக்கிக் காட்டுதல் பாரீர் - திருச்
சிற்றம்பலத்தே திருநடஜோதி" (திருவருட்பா 4594)

எனவரும் கண்ணியில் இராமலிங்க வள்ளலார் விளக்கிய நுட்பம் கூர்ந்துணரத் தகுவதாகும். தில்லைச்சிற்றம்பலத்தில் அமைக்கப் பெற்றுள்ள திரையானது ஒன்றேயாயினும் அதன் முன்பக்கம் கறுப்பாகவும் பின்பக்கம் சிவப்பாகவும் அமைந்துள்ளது. இத் திறத்தினைக் கூர்ந்து நோக்குங்கால் திரையின் முன்பக்கமுள்ள கருமைநிறம் ஆதிசத்தியாகிய மறைப்புச் சத்தியையும் பின்பக்க முள்ள சிவப்பு நிறம் ஆன்மாக்கள் சிவனையடைதற்குத் துணை புரிவதாகிய திருவருட்சத்தியையும் குறித்துள்ளமை நன்கு புலனாதல் அறியலாம்.

மேற்குறித்த கறுப்பும் சிவப்புமாகிய இருவகை நிறங்களுக் குள்ளேயே எழுவகை நிறங்களும் அடங்கும் என்பதனை உணர்த்த எண்ணிய அருட்பிரகாச வள்ளலார், ஆன்மாவின் அறிவினை மறைந்துள்ள மறைப்பு நிலைகளை வகைப்படுத்தி உணர்த்தும் முறையில் 1. கரும்பெருந்திரை 2. நீலப் பெருந்திரை, 3. பச்சைத் திரை 4. செம்மைத் திரை, 5. பொன்மைத்திரை, 6. வெண்மைத்திரை,

**7.** *கலப்புத்திரை என ஏழுதிரைகளாகப் பகுத்துக் கூறியுள்ளார் எனக் கருதுதல் பொருத்தமுடையதாகும். அருட் பெருஞ்சோதியை ஆன்மா காணவொண்ணாதபடி மறைத்து நிற்கும் மேற்குறித்த ஏழு திரைகளேயன்றி விடயநிலைகளையும் தத்துவநிலைகளையும் ஆன்மா உள்ளவாறு காண வொண்ணாத படி தனித்தனி மறைக்கும் வெவ்வேறு திரைகளும் உளவென்பதும் அவையனைத்தும் முற்குறித்த ஏழு பெருந்திரைகளிலேயே அடங்கிவிடும் என்பதும் வள்ளலார் கருத்தாகும். இந்நுட்பம்,*

> "விடய நிலைகளை வெவ்வேறு திரைகளால்
> அடர்புற மறைக்கும் அருட்பெருஞ்சோதி" (அகவல் 827 -8)

*என்பது முதல்*

> "மறைக்குந் தலைவர்கள் வகை பல கோடியை
> அறத்தொடு மறைக்கும் அருட்பெருஞ்சோதி" (அகவல் 859 -60)

*என்பதீறாகவுள்ள அருட்பெருஞ் சோதியகவற் பகுதியால் உய்த் துணரப்படும்.*

*இவ்வாறு ஆன்மா, தலைவனாகிய இறைவனையும் உயிராகிய தன்னையும் தனக்குத் தநுகரண புவனே போகங்களாகப் பயன்படும் தத்துவத் தொகுதிகளையும் மறைத்து நிற்கும் யாவும் மறைப் பாற்றலாகிய திரோதான சத்தியின் தொடர்புடையனவே யென்பது,*

*"ஆன்மப் பிரகாசத்தை மறைக்க மாயாசக்திகளாகிய ஏழு திரைகளுண்டு. அவையாவன;*

> கறுப்புத் திரை மாயாசத்தி
> நீலத்திரை கிரியா சத்தி
> பச்சைத் திரை பராசத்தி
> சிவப்புத்திரை இச்சசத்தி
> பொன்மைத் திரை ஞான சத்தி
> வெண்மைத்திரை ஆதிசத்தி
> கலப்புத்திரை சிற்சத்தி

*என அருட்பிரகாச வள்ளலார் தரும் விளக்கத்தால் உய்த் துணரப்படும்.*

*"நிலம், நீர், நெருப்பு, வளி, வான், மகத், அகங்காரம் என்னும் ஏழு திரைகளாகக் கூடிய தத்துவத்துள் ஒளிரும் ஞானசைபயிலே*

*உலக நடனமும் அதற்கு மேற்பட்ட நடனமுமாம் பரமநடனத்தைக் குகேசன் ஆடியருள்கின்றான். (தகராலய - ரகசியம் 14) நில முதல் நாகமீறாகிய முப்பத்தாறு தத்துவங்களும் சகத் (பிருதிவி) முதல் மகத் இறுவாய்க் கிடந்த ஏழிலும் அடங்குதலின் அவை பூ, (நிலம்) உதகம் (நீர்) ஆரல், (நெருப்பு) உயிர் (வளி) வியோமம், (ஆகாயம்) அகந்தை (அகங்காரம்) மகத் (பிரகிருதி) என்னும் ஆவரணங்கள் (மறைப்புத் திரைகள்) ஆகக் கூறப்பட்டன" பூத தன்மாத்திரை ஐந்தும், அகங்காரம், மகத் என்னும் இரண்டுமாகிய ஏழு கிரந்திகட்கு (முடிச்சுகட்கு) ஆதாரமாயுள்ள குணதத்துவ காரணத்தை' எனவரும் மிருகேந்திர வுரை சத்தாவரண விவரத்தை யுணர்த்துகின்றது. ஆவணம் - மறைவு, அதுவே திரையெனவும் படும்.*

*"சத்திய சங்கற்பன் குணசொரூபமான திரைச்சீலையினால் தன்னை மறைத்துக் கொண்டு கன்ம பலனை அனுபவிப்பவன்போ லிருக்கின்றனன்" - என மைத்திராய ணியவுபநிடதமும், "இவன் எல்லாப் பூதங்களகளகத்து மறைந்து பிரகாசியாதிருக்கின்றனன்" எனக் கடோபநிடதமும் கூறுகின்றன.*

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்"

*என்பது அப்பர் அருளிச் செயல்.*

*முன்னர்க் கூறப்பட்ட ஆவரணங்களாகிய ஏழு திரைகளையும் நீக்கித் தூய்மை மிகுந்தமெய்ஞ்ஞானப் பார்வை கெடாதாருடைய ஞான நேத்திரமே ஆகாசங்களின் மேற்பட்ட சிதம்பர குகேசனது நடனத்தை தரிசிக்கும் எனவும் ஆணவ விருளின் மறைப்புண்டு கிடப்பாருடைய கண்கள் அவ்வா காசத்துடன் கலந்து நின்று காணுந்தன்மைய அல்ல " (தகராலய ரகசியம் --16)*

*எனவும் தவத்திரு பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் இறைவனை ஆன்மா காண வொண்ணாதவாறு மறைத்து நிற்கும் ஏழு திரைகளைப் பற்றித் தந்துள்ள பிறிதொரு விளக்கம் இங்குச் சிந்தித்து உணர்தற் குரியதாகும்.*

*இச்சபையைத் தோற்றுவித்ததற்கு நிலைக்களமாகிய சமரச சன்மார்க்கம் என்னும் பொதுநெறி சைவசமயச் சான்றோர்களால் வளர்க்கப் பெற்று வந்ததாயினும், அதனைத் தோற்றுவித்து வளர்த்த பெருமக்கள் விரிந்த மனமும் நிறைந்த அருட்குணமும் உடையவர்*

களாதலால் தாம் மேற்கொண்டு ஒழுகிய சன்மார்க்க நெறி "சைவ சமயத் துக்கே உரியது" என்ற எல்லையில் அமைந்து விடாது எல்லாச் சமயத்தார்களையும் அன்பினால் தழுவிக் கொள்வதாய் உலகமக்கள் எல்லோரும் உய்தி பெறுதற்கேற்ற விதியுடைய பெருநெறியாய் விளங்குதல் வேண்டும் என்ற குறிக்கோளுடன் அந்நெறியினை எல்லா மக்களும் பின்பற்றி ஒழுகுதற்கேற்ற பொது நெறியாக (சமயங் கடந்த மோன சமரச நெறியாக) அமைத்து உதவினார்கள்.

19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய அருட்பிரகாச வள்ளலார், தம் காலத்தில் சாதிசமய வேறுபாடுகளால் மக்கள், பல்வேறு பிரிவினராய் ஒற்றுமையின்றி அயலவர் ஆட்சியுட்பட்டு உரிமை யிழந்தும், பசி, பிணி, பகை என்பனவற்றால் அல்லற்பட்டும் வருந்திய அவல நிலையைக் கண்டு பெரிதும் வருந்தினார். இரக்கமே உருவாகிய அவர் இறைவனது திருவருளை இடை விடாது போற்றி அதன் துணைக்கொண்டு உலக மக்களின் துன்பத்தைத் துடைக்க உறுதி கொண்டார்.

தன்னலம் கருதாது உலக நலங்கருதித் தம் முன்னோர் கண்ட சமரச சன்மார்க்க நெறியினையே தமக்கு உறுதுணையாகக் கொண்டார்.

தமிழ் முன்னோர் கண்ட மெய்ந்நெறியினை இக் காலத்து மக்கள் நன்கு புரிந்து மேற்கொள்ளும்படி, எளிய இனிய இயல் இசைத் தமிழ் நடையில் உரையும் பாட்டுமாக எல்லார்க்கும் விளங்க விளக்கியருளினார். தாம் அறிவுறுத்தும் சன்மார்க்கமாகிய பொது நெறி சைவ முதலான சமயங்களின் எல்லையுட்பட் டடங்கிய தன்று; எல்லாச் சமயங்களையும் கடந்து அப்பாற் பட்டது என்னும் உண்மையை உலகமக்கள் தெளிவாக உணரும்படி சமரச சன்மார்க்கம் என்ற பெயரளவில் அமையாது சமரச சுத்த சன்மார்க்கம் என அடைமொழி தந்து பெயர் விளக்கம் செய்தார். இந்நெறி என்றும் மாறாத முழுமுதற் பொருளாகிய சங்கம், சாலை, சபை ஆகிய மூன்றும், முறையே சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் எனவும், சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை எனவும் வழங்கப் பெறுவனவாயின. சன்மார்க்க நெறிக்கு வித்திட்ட சைவ சமயத்தார், முழுமுதற் கடவுளைச் 'சிவம்' என்ற பெயரால் வழங்குதல் மரபு. பொதுமறையருளிய திருவள்ளுவர் இறைவனைச் செம்பொருள் என்ற சொல்லாற் குறிப்பிடுவர். இரண்டும் ஒன்றே என்னுங்

கருத்தில் 'செம்பொருளான சிவமெனலாமே' என்றார் திருமூலர். இறைவனைக் குறித்து வழங்கும் 'சிவம்' என்ற இச்சொல் 'சிவகதிநாயகன்' (சிலப் -10-180) என்றாற் போன்று சமணர் முதலிய பிற சமயத்தவராலும் இறைவனுக்குரிய பொதுமை வாய்ந்த திருப்பெயராக ஏற்று வழங்கப் பெற்றுள்ளது. இந் நுட்பத்தினைக் கூர்ந்துணர்ந்த வள்ளலார், சாதிமத வேறுபாடின்றி எல்லோராலும் வழிபடப் பெறும் பரம்பொருளைச் சமய எல்லைக்கு அப்பாற் பட்ட நிலையில் 'சுத்த சிவம்' என அடைமொழி கொடுத்துப் போற்றியுள்ளமை சமயச் சூழலுக்குள் அகப்படாத அவர்தம் பொதுமை யுணர்வை நன்கு புலப்படுத்துவதாகும்.

தூய மெய்யுணர்வும் அன்புமே தனக்குரிய திருமேனியாகக் கொண்டு திகழ்பவன் இறைவன் என்பது, "வாலறிவன்" எனத் தெய்வப்புலவரும், 'அன்பே சிவம்' எனத் திருமூலரும் அருளிய பொருள் மொழிகளால் புலனாதல் காணலாம்.

உலகெலாம் போற்றும் முழுமுதற் கடவுளாகிய பரம் பொருள் ஒருவரே என்பதும், அருட்பெருஞ்சோதி ஆண்டவராகிய அவ்விறை வரையே மெய்யன்புடையராய், மாந்தர் தம் அகத்தும் புறத்தும் ஒளிவடிவில் வழிபட வேண்டு மென்பதும், சிறு தெய்வங்களின் பெயரால் ஆடு, கோழி முதலிய சிற்றுயிர்களைப் பலியிடுதல் கூடாதென்பதும், சாதி சமய வேறுபாடுகளிலும் சாத்திர கோத்திரச் சண்டைகளிலும் பொருளற்ற சடங்குகளிலும் உலக மக்கள் ஈடுபட்டுத் தம்முட் பிணங்கித் தம்வாழ்வின் பயனை வீணாக்குதல் கூடாதென்பதும், எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி உயிரிரக்க முடையவராய் வாழும் ஆன்மநேய ஒருமைப்பாட் டுரிமையினைக் கடைப்பிடித்தல் வேண்டு மென்பதும், உயிர்க் கொலையும், புலாலுணவும் நீக்கி, ஏழை எளியவர்களின் பசிப்பிணியினைப் போக்கும் சீவகாருணிய ஒழுக்கமே மக்கள் மரணமிலாப் பெருவாழ்வாகிய பேரின்ப நிலையைப் பிரகாச அடிகளார் கண்ட சமரச சுத்த சன்மார்க்கத்தின் தலைசிறந்த கொள்கைகளாகும். இக்கொள்கைகள் வடலூர் வள்ளலார் அருளிய திருவருட்பா ஐந்து திருமுறைகளிலும் பொதுவாகவும், ஆறாம் திருமுறையிலும், சன்மார்க்க சங்க விண்ணப்பங்கள், சீவகாருண்ய ஒழுக்கம் முதலிய உரைநடை நூல்களிலும் சிறப்பாகவும் விளக்கப் பெற்றுள்ளன:

அருள்நிலை விளங்கு சிற்றம்பலம் எனுஞ்சிவ
 சுகாதீத வெளி நடுவிலே
அண்ட பகிரண்ட கோடிகளும் சராசரம்
 அனைத்தும் அவை ஆக்கல் முதலாம்

பொருள் நிலைச் சத்தரொடு சத்திக ளநந்தமும்
பொற்பொடு விளங்கி ஓங்கப்
புறப்புறம் அகப்புறம் புறம்அகம் இவற்றின்மேல்
பூரணா கார மாகித்
தெருள் நிலைச் சச்சிதானந்த கிரணாதிகள்
சிறப்ப முதல் அந்தம் இன்றித்
திகழ்கின்ற மெய்ஞ்ஞான சித்தி அநுபவநிலை
தெளிந்திட வயங்கு சுடரே
சுருள்நிலைக் குழலம்மை ஆனந்த வல்லிசிவ
சுந்தரிக் கினிய துணையே
சுத்த சிவ சன்மார்க்க நீதியே அருட்பெருஞ்
சோதி நடராச பதியே. (திருவருட்பா - 3651)

*எனவரும் திருவருட்பா, சமய வேறுபாடின்றி உலக மக்கள் எல்லோராலும் வழிபடப் பெறும் திருச்சிற்றம்பலமென்னும் சிதாகாசப் பெரு வெளியினடுவே அருட்பெருஞ் சோதியாண்டவர் திருநடம் புரியும் இயல்பினை விரித்துப் போற்றுவதாகும்.*

உற்றியலும் அணுவாதி மலைஅந்த மானஉடல்
உற்றகரு வாகி முதலாய்
உயிராய் உயிருக்குள் உறும் உயிராகி உணர்வாகி
உணர்வுள் உணர்வாகி உணர்வுள்
பற்றியலும் ஒளியாகி ஒளியின் ஒளியாகிஅம்
பரமாய்ச் சிதம்பரமும் ஆய்ப்
பண்புறு சிதம்பரப் பொற்சபையும் ஆய்அதன்
பாங்கோங்கு சிற்சபையும் ஆய்த்
தெற்றியலும் அச்சபையின் நடுவில் நடம் இடுகின்ற
சிவமாய் விளங்கு பொருளே
சித்தெலாம் செய்எனத் திருவாக் களித்தெனைத்
தேற்றிஅருள் செய்த குருவே
மற்றியலும் ஆகிஎனை வாழ்வித்த மெய்ஞ்ஞான
வாழ்வேஎன் வாழ்வின் வரமே
மணிமன்றில் நடுநின்ற ஒருதெய்வமே எலாம்
வல்ல நடராசபதியே (திருவருட்பா - 3665)

*இத்திருவருட்பா ஒளியின் ஒளியாகிய இறைவன் பெரு வெளியாய் ஞானவெளியாய்த் திகழும் சிதம்பரத் திருத்தலத்தே பொன்னம்*

*பலமும், சிற்றம்பலமுமாய் இணைந்து விளங்கும் தெய்வசபையிலே திருக்கூத்தாடியருளும் திறத்தினை எடுத்துரைத்துப் போற்றுவதாகும்.*

பாராதி பூதமொடு பொறிபுலன் கரணமும்
பருதியும் காலம் முதலாப்
பகர்கின்ற கருவியும் அவைக்குமேல் உறுசுத்த
பரமாதி நாதம் வரையும்
சீராய பரவிந்து பரநாத முந்தனது
திகழங்கம் என்று ரைப்பத்
திருவருட் பெருவெளியில் ஆனந்த நடனமிடு
தெய்வமே என்றும் அழியா
ஊராதி தந்தெனை வளர்க்கின்ற அன்னையே
உயர் தந்தையே என் உள்ளே
உற்றதுணையே என்றன் உறவேஎன் அன்பே
உவப்பே என்னுடைய உயிரே
ஆராலும் அறியாத உயர்நிலையில் எனைவைத்த
அரசேஅருட்சோதியே
அகரநிலை முழுதுமாய் அப்பாலும் ஆகிநிறை
அமுத நடராச பதியே. (திரு- 3670)

*இத்திருவருட்பா,*

*நிலம்முதல் நாதம் ஈறான தத்துவங்கள் அனைத்தும் தன் திருமேனியின் அங்கங்கள் என்று சொல்லுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருச்சிற்றம்பலமாகிய திருவருட் பெருவெளியில் ஆனந்தத் திருக்கூத்து இயற்றும் திறத்தினை எடுத்துரைத்துப் போற்றுவதாகும்.*

உரைவிசுவம் உண்டவெளி உபசாந்த வெளிமேலை
உறுமவுன வெளிவெளியின் மேல்
ஓங்குமா மவுனவெளி யாதியுறும் அனுபவம்
ஒருங்க நிறை உண்மை வெளியே
திரையறு பெருங்கருணை வாரியே எல்லாஞ்செய்
சித்தே எனக்கு வாய்த்த
தெய்வமே ஒன்றான தெய்வமே உய்வகை
தெரித்தெனை வளர்த்த சிவமே
பரைநடு விளங்குமொரு சோதியே எல்லாம்
படைத்திடுக என்றெ னக்கே

பண்புற உரைத்தருட் பேரமு தளித்தமெய்ப்
பரமமே பரம ஞான
வரைநடு விளங்கு சிற்சபை நடுவில் ஆனந்த
வண்ணநடம் இடு வள்ளலே
மாறாத சன்மார்க்க நிலைநீதியே யெலாம்
வல்லநட ராச பதியே. (திருவருட்பா - 3621)

*இத்திருவருட்பா,*

*உலகம் அனைத்தையும் தன்னுள் அடக்கியும், உயிர்கட்கு மன அமைதி தந்தும், மோன மென்னும் ஞான வரம்பைத் தன்னகத்தே கொண்டும் பேசா அநுபூதியாகிய அநுபவம் ஒருங்கே நிறைந்த உண்மைப் பெருவெளியிலே விளங்கும் சிற்றம்பலத்திலே இன்ப நடம்புரியும் வள்ளல் என்றும் மாறாத சன்மார்க்க நெறியில் நிலைத்துள்ள நீதியே யுருவாகிய கூத்தப்பிரான் என்பதனை விளக்குவதாகும்.*

பூதமுதலாய பல கருவிகள் அனைத்தும் என்
புகல்வழிப் பணிகள் கேட்பப்
பொய்படாச் சத்திகள் அனந்த கோடிகளுமெய்ப்
பொருள் கண்டசத்தர் பலரும்
ஏதமற என்னுளம் நினைத்தவை நினைத்தாங்
கிசைந்தெடுத் துதவ என்றும்
இறவாத பெருநிலையில் இணைசொலா இன்புற்
றிருக்கஎனை வைத்த குருவே!
நாதமுதல் இருமூன்று வரையந்த நிலைகளும்
நலம்பெறச் சன்மார்க்க மாம்
ஞானநெறி ஓங்க ஓர் திருவருட் செங்கோல்
நடத்திவரு நல்ல அரசே
வாதமிடு சமயமத வாதிகள் பெறற்கரிய
மாமதியின் அமுத நிறைவே
மணிமன்றின் நடுநின்ற ஒரு தெய்வமே எலாம்
வல்ல நடராச பதியே. (3673)

*தத்துவ நெறிகளாகிய ஆறந்தங்களுக்கும் உரிய நலன்கள் பல வற்றையும் தருவது சன்மார்க்க ஞானநெறி யென்பதும், அத்தகைய பெருநெறி உலகில் ஓங்கும்படி எல்லாம் வல்ல இறைவன் திருவருட் செங்கோல் நடத்தி வருகின்றான் என்பதும், அம்முதல்வன், தன்முன்*

முரணிவாதிடும் மதிமயக்கமுடைய மதவாதிகளால் பெற்று அநுபவித்தற்கரிய அமிழ்தத்தின் நிறைவாக அழகிய சபையிலே அருள் நடம்புரியும் ஒரு பெருந்தெய்வமாகத் திகழ்கின்றான் என்பதும் அம் முதல்வனே தன்னை வழிபடும் அடியார்கள் நினைத்த நற்செயல்களை யெல்லாம் அவர்கள் நினைந்த வண்ணமே இனிது நிறைவேற்றி அவர்களை இறவாத பெருநிலையில் இன்புற்றிருக்க வைக்கும் குருவாகவும் விளங்குகின்றான் என்பதும் ஆகிய உண்மைகளை விளக்குவது இத்திருவருட்பா.

சமயவாதிகள் தத்தம் மதங்களே சிறந்தன என்ற உரை அளவில் நின்று விடாமல் மதவெறி பிடித்து ஒரு மதத்தாரை மற்றொரு மதத்தார் வருத்தித் துன்புறுத்தும் நிலையில் மதப் போர்களால் மக்கள் உற்ற அல்லல் களை எல்லாம் எண்ணி வருந்திய இராமலிங்க வள்ளலார், தம் வழிபடு கடவுளாகிய முருகப் பெருமானை நோக்கித் தம் இளம்பருவத்தே பாடிய கந்த கோட்டப் பதிகத்தில் "ஒருமை யுடன்நினது" எனத் தொடங்கும் பாடலில் "பெருநெறி பிடித்தொழுக வேண்டும், மதமான பேய் பிடியாதிருக்கவேண்டும்" என இரந்து வேண்டியுள்ளார். இளமைப் பருவத்திலேயே அவர்கள் வேண்டிய இவ் விண்ணப்பத்தை ஏற்றருளிய இறைவன், பிற்காலத்தில் அடிகளார் தம் உள்ளத்தே குருமுதல்வனாகத் தோன்றி "நீ என் பிள்ளை, உலகத்தில் உள்ள சமயநெறி மதநெறிகளெல்லாம் பேயால் பிடியுண்டு பித்தேறிய பிள்ளைகளின் விளையாட்டு என்பதனை உள்ளவாறு உணர்ந்து கொள்ள மாட்டாத மக்கள், சாதி மத பேதங்களாலும் சாத்திர சோத்திரங்களாலும் பல்வேறு வகையினராய் வேறுபட்டுத் தம்முட் போர் செய்து உலக வாழ்க்கையில் ஒருபயனும் பெறாது வீணே இறந்தொழிந்தார்கள். இனிமேலும் உலகமக்கள் இவ்வாறு கெட்டொழியாதபடி என் அன்புக்குரிய பிள்ளையாகிய, நீ தூய்மையுற்ற சுத்த சன்மார்க்க நெறியினை உலகத்தார்க்கு எடுத்துக்காட்டி, இந்நெறியால் அடைதற்குரியதே மெய்ப் பொருள் என்பதை அவர்களுக்கு விளங்க உணர்த்தி எல்லா உயிர்களும் அழகிய இன்ப நிலையினைப் பெறும்படி செய்வாயாக! என் அன்புக்குரிய பிள்ளை நீயே யாதலால் அவ்வுரிமை பற்றி இப்பணியை விரைந்து செய்க என உனக்குக் கட்டளையிட்டோம். இப்பெரும் பணியினைச் செய்தல் என்னால் இயலுமோ இயலாதோ என்று நின் மனத்தில் ஐயுறாதே" என அறிவுறுத்தியருளினான். இவ்வாறு குரு முதல்வனாகிய இறைவன் அருளிய கட்டளையை

*ஏற்றுக் கொண்ட அருட்பிரகாச வள்ளலார் உலக மக்கள் உய்தி பெறச் சமரச சுத்த சன்மார்க்க நெறியினைப் பரப்புதலையே தமது வாழ்வின் கடமையாகக் கொள்வாராயினர். இச் செய்தி,*

பேருற்ற உலகிலுறு சமய மதநெறி எலாம்
பேய்ப் பிடிப்புற்ற பிச்சுப்
பிள்ளைவிளையாட்டென உணர்ந்திடா துயிர்கள் பல
பேதமுற் றங்கு மிங்கும்
போருற் றிறந்து வீண்போயினார் இன்னும்வீண்
போகாத படி விரைந்தே
புனிதமுறு சுத்த சன்மார்க்க நெறி காட்டிமெய்ப்
பொருளினை உணர்த்தி எல்லாம்
ஏருற்ற சுகநிலை அடைந்திடப் புரிதி நீ
என் பிள்ளை யாதலாலே
இவ்வேலை புரிக என்றிட்டனம் மனத்தில்வே
றெண்ணற் என்ற குருவே
நீருற்ற ஒள்ளிய நெருப்பே நெருப்பினுள்
நிறைந்திருள் அகற்றும் ஒளியே
நிர்க்குணா னந்தபர நாதாந்த வரை ஓங்கு
நீதி நடராசபதியே. (6377)

*எனவும்*

பன்னெறிச் சமயங்கள் மதங்கள் என்றிடும்ஓர்
பவநெறி இதுவரை பரவிய திதனால்
சென்னெறி அறிந்திலர் இறந்திறந் துலகோர்
செறிஇருள் அடைந்தனர் ஆதலின் இனிநீ
புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி எனும்வான்
புத்தமு தருள்கின்ற சுத்தசன் மார்க்கத்
தன்னெறி செலுத்துக என்றஎன் அரசே
தனிநடராச என் சற்குரு மணியே. (3696)

*எனவும் வரும் திருவருட்பா பாடல்களால் நன்கு புலப்படுத்தப் பெற்றுள்ளமை காணலாம்.*

*எல்லாம் வல்ல இறைவன் அருட்பெருஞ்சோதி ஆகிய திருவருள் ஒளியினை வள்ளலாருக்கு அன்புடன் அளித்து எத்தகைய சமயநெறிகளையும் தனக்கு அங்கமாக ஏற்றுக் கொள்ளும் ஒருமை*

*யுணர்வை நல்கும் சிவநெறி நிலை பெறச் செய்து அவர் உள்ளத்தில் கலந்திருந்து,' "என் அன்புமகனே, எமன்எனும் அவன் இனி நின்னை அணுகுதல் இல்லை. ஆகவே இறவாத பெருநெறியில் இளைப்பற வாழ்வாயாக எனத் தன் அருட் சார்பினை நல்கி அருளினான் என்பதும், அவனது திருவருளைச் சார்பாகக் கொண்டே" "சமரச சுத்தசன்மார்க்க சங்கம்" என்னும் திருவருட் சமுதாய அமைப்பு வள்ளலாரால் நிறுவப் பெற்றதென்பதும் ஆகியவற்றைப் புலப் படுத்தும் நிலையில் அமைந்தது:*

அமரரும் முனிவரும் அதிசயித்திடவே
அருட்பெருஞ் சோதியை அன்புடன் அளித்தே
கமமுறு சிவநெறிக் கேற்றி என்றனையே
காத்தென துளத்தினில் கலந்தமெய்ப் பதியே
எமன் எனும் அவன்இனி இலைஇலை மகனே
எய்ப்பற வாழ்க என்றியம்பிய அரசே
சமரச சன்மார்க்க சங்கத்தின் முதலே
தனிநட ராசஎன் சற்குரு மணியே. (3702)

*எனவரும் திருவருட்பாவாகும்.*

*சமரச சன்மார்க்க நெறியினை மேற்கொண்டு எல்லாம் வல்ல இறைவனே தன் ஆருயிர்த் தலைவனாகவும், தம்மை அவனது அருளாரின்பத்தினை வேண்டி நிற்கும் காதலியாகவும் கொண்டு போற்றும் அடிகளார், நாயகனால் தாம்பெற்ற பேரின்பப் பெருவாழ்வை வெளியிட்டுரைப்பதாக அமைந்தது,*

பொய்பிடித்தார் எல்லோரும் புறத்திருக்க நான்போய்ப்
பொது நடங்கண் டுளங்களிக்கும் போது மணவாளர்
மெய்பிடித்தாய் வாழியநீ சமரச சன்மார்க்கம்
விளங்க உலகத்திடையே விளங்குக என்றெனது
கைபிடித்தார் நானும் அவர் கால்பிடித்துக் கொண்டேன்
களித்திடுக இனியுனைநாம் கைவிடோம் என்றும்
மைபிடித்த விழியுலகர் எல்லாரும் காண
மாலையிட்டோம் என்றெனக்கு மாலை யணிந்தாரே. (5769)

*எனவரும் திருவருட்பாவாகும்.*

*இறைவனது திருவருட் குறிப்பின் வண்ணம் சமரச சுத்தசன்மார்க்க நெறியினை மேற்கொண்டு பார்வதிபுரம் என்ற*

வடலூரில் சத்தியஞானசபையை நிறுவினார் அருட் பிரகாச வள்ளலார். எல்லாம் வல்ல இறைவன் ஒளி நடம்புரியும் திருப் பொதுவாகிய மன்றினிடத்தே உலக மக்கள் எல்லோரும் ஒருமைப் பாடுடையராய் வந்து வழிபாடு செய்து எல்லா நலன்களையும் பெற்று உய்திபெறுதல் வேண்டும் எனவும், இத்தகைய பொது மக்றமாகிய தெய்வத் திருச்சபைக்கு உலக மக்கள் எல்லோரும் அறிவு திரு, ஆற்றல், காரணமாக, ஒத்தார், உயர்ந்தார், தாழ்ந்தார் என்னும் வேற்றுமையின்றி ஊக்கமுடையராய்ச் சமுதாய வாழ்விலும் அரசியல் வாழ்விலும் தம்முள் ஒத்த உரிமையினைப் பெற்று உலகியலை நடத்துதல் வேண்டும் எனவும், இராமலிங்க வள்ளலார் அருட்பெருஞ்சோதி யாண்டவரை வேண்டிப் போற்றுச் சுத்தசன் மார்க்க வேண்டுகோளாக அமைந்தன,

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்பு செயல்வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான்சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல்வேண்டும்
தப்பேது நான்செயினும் நீ பொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே. ---(4079)

அத்தாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல்வேண்டும்
அருட்பெருஞ்சோதியைப் பெற்றே அகங்களித்தல் வேண்டும்
செத்தாரை மீட்டும் இங்கே எழுப்பியிடல் வேண்டும்
திருச்சபைக்கே அடிமைகளாய்ச் செய்வித்தல் வேண்டும்
ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுளராகி உலகியல் நடத்தல் வேண்டும்
எத்தாலும் அழியாத வடிவதிலே நானும்
எந்தாயும் ஒன்றாக இனிதுறல் வேண்டுவனே. (4082)

எனவரும் திருவருட்பாப் பாடல்களாகும்.

முன்னைத் தமிழ்ச் சான்றோர் தோற்றுவித்து வளர்த்த சன்மார்க்க நெறியினைச் சமயங்கடந்த மோன நிலைக்கு உரியதாக விரிவு செய்து வளர்க்கத் திருவுளங் கொண்ட அருட்பிரகாச வள்ளலார், சமரச சுத்த சன்மார்க்க நெறியினைப் பரப்புதற்குரிய திருவருள் நிலையமாக வடலூரிலே உத்தரஞான சிதம்பரம் சத்திய

ஞானசபை தோன்றுதற்கும், அது நிலைபெற்று வளர்வதற்கும் உயிர்க்குயிராய் உடனிருந்து அருள் புரிந்து வரும் அருட்பெருஞ் சோதி ஆண்டவரின் கருணைத் திறத்தை எண்ணி நெஞ்சம் நெக்குருகி அருட்பெருஞ்சோதி ஆண்டவரை வேண்டுவதாக அமைந்தது,

**சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்**

*திருச்சிற்றம்பலம்*

*"இயற்கை உண்மையர் என்றும், இயற்கை அறிவினர் என்றும், இயற்கை இன்பினர் என்றும், நிர்க்குணர் என்றும் சிற்குணர் என்றும் நித்தியர் என்றும், சத்தியர் என்றும், ஏகர் என்றும். அநேகர் என்றும், ஆதியர் என்றும், அனாதியர் என்றும், அமலர் என்றும், அருட்பெருஞ்சோதியார் என்றும். அற்புதர் என்றும்" நிரதிசயர் என்றும், நிரதிசயர் என்றும், எல்லாம் ஆனவர் என்றும், எல்லாம் உடையவர் என்றும், எல்லாம் வல்லவர் என்றும் குறிக்கப்படுதல் முதலிய அளவு கடந்த திருக்குறிப்பு திரு வார்த்தைகளால், சுத்த சன்மார்க்க ஞானிகள் துதித்தும், நினைத்தும் உணர்ந்தும், புணர்ந்தும் அனுபவிக்க விளங்குகின்ற தனித்தலைமைப் பெரும்பதியாகிய பெருங் கருணைக் கடவுளே; தேவரீர் திருவருட் சமூகத்தில் துரும்பினும் சிறியேமாகிய யாங்கள் சிற்றறிவால் செய்து கொள்ளும் சிறு விண்ணப்பங்களைத் திருச் செவிக்கு ஏற்பித்தருளி எங்களை இரஷித்தருளல் வேண்டும்.*

*எல்லாச் சத்திகளும், எல்லாச் சத்தர்களும் எல்லாத் தலைவர் களும் அறிந்து கொள்ளுதற்கு மிகவும் அரியதாய் எல்லாத் தத்துவங் களுக்கும், தத்துவிகளுக்கும் அப்பால் அப்பாலாய் விளங்கும் ஒரு சுத்தமுள்ள வெளியில் தமக்கு ஒருவிதத்தாலும் ஒப்புயர்வு சிறிதும் குறிக்கப்படாத தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ் ஜோதியராகி விளங்குகின்ற தேவரீரது தனிப்பெருந் தன்மைக்கு, மெய்யறி வுடையோரால் விதிக்கப்பட்ட வேதாக மங்களும், பெருந்தகை வாசகத்தைப் பெறாது சிறுதகைவாசகங் களைப் பெற்றுத் திகைப் படைகின்றன என்றால், மலத்திற் புழுத்த புழுவினும் சிறியேமாகிய யாங்கள் திருச்சமூகத்தில் விண்ணப் பித்தற்கு உரிய பெருந்தகை வாசகத்தை எவ்வாறு அறிவோம்; எங்ஙனம் செய்வோம்; ஆதலின் கருணாநிதியாகிய கடவுளே; யாங்கள் விண்ணப்பிக்கின்ற அற்ப வாசகத்தில் உரிமை நோக்காது அங்கீகரித்தருளி எங்களைக் காத்தருளல் வேண்டும்.*

தாயினும் சிறந்த தயவுடைக் கடவுளே! இயற்கையே அஞ்ஞான இருளில், அஞ்ஞான உருவில் அஞ்ஞானிகளாய் அஞ்ஞானத்தில் பயின்று ஏதும் தெரியாது கிடந்த எங்களைத் தேவரீர் பெருங் கருணையால் பவுதிக உடம்பில் சிறிது அறிவு தோற்றிவிடுத்த அஞ்ஞான்று தொட்டு இஞ்ஞான்று வரையும் அது கொண்டு அறிவே வடிவமாய், அறிவே உருவாய் அறிவே பொறியாய், அறிவேமனமாய், அறிவே அறிவாய் அறிவே அனுபவமாய் அனுபவிக்கத் தெரிந்து கொள்ளாது, குற்றமே வடிவாய்க், குற்றமே அறிவாய், குற்றவே அனுபவமாய் அனுபவிக்கின்ற சிறியேங்கள் திருச்சமூகத்தின் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பமும் குற்றமே வடிவாய் குற்றமே குறிக்கும் என்று அறிந்தோமாயினும் குற்றங் குறியாதவகை விண்ணப்பம் செய்வதற்கு ஒருவாற்றானும் உணர்ச்சி யில்லோ மாதலில், துணிவு கொண்டு விண்ணப்பிக்கின்றோம். குற்றங்களையே குணங்களாகக் கொள்ளுதல் தேவரீர் திருவருட் பெருமைக்கு இயற்கையாதலின் இவ்விண்ணப்பங்களில் குற்றங் குறியாது கடைக்கணித்தருளிக் கருணை செய்தல் வேண்டும்.

அஞ்ஞான இருளில் ஒன்றும் தெரியாது உணர்ச்சியின்றிக் கிடந்த காலம்போக, அவ்விருளை விட்டு நீங்கிய காலத்தே இவ்வுலகினிடத்து புல், நெல், மரம், செடி, பூடு முதலியவாகவும் கல், மலை, குன்று, முதலியவாகவும் பிறந்து, களையுண்டல், வெட்டுண்டல், அறுப்புண்டல், கிள்ளுண்டல், உலர்ப்புண்டல். உடைப்புண்டல், வெடிப் புண்டல் முதலிய பல்வேறு அவத்தை களால் இறந்து இறந்து அத் தாபரயோனி வர்க்கங்களெல்லாம் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தோம். பின்னர் எறும்பு, செல், புழு, பாம்பு, உடும்பு, பல்லி முதலியவாகவும், தவளை சிறுமீன், முதலை சுறா திமிங்கிலம் முதலியவாகவும் பிறந்து பிறந்து தேய்ப்புண்டல் நசுக்குண்டல், அடியுண்டல், பிடியுண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்து, இறந்து அவ்வூர்வன, நீர் வாழ்வன யோனிவர்க்கங்களெல்லாம் சென்று சென்று உழன்று, உழன்று அலுப்படைந்தோம். பின்னர் ஈ, வண்டு. தும்பி குருவி, காக்கை, பருந்து, கழுகு முதலியவாகப் பிறந்துபிறந்து, அடியுண்டல், பிடியுண்டல், அலைப்புண்டல் உலைப்புண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அப்பறவை யோனி வர்க்கங் களெல்லாம் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தோம். பின்னர் அணில், குரங்கு, நாய், பன்றி, பூனை, ஆடு, மாடு யானை,

குதிரை, புலி, கரடி முதலியவாகப் பிறந்து பிடியுண்டல் அடியுண்டல், குத்துண்டல், வெட்டுண்டல், தாக்குண்டல், கட்டுண்டல், தட்டுண்டல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அவ்விலங்கு யோனிவர்க் கங்ளெல்லாம் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந் தோம். பின்னர் பசாசர் பூதர், இராக்கதர், அசுரர் முதலியராகப் பிறந்து பிறந்து அலைப்படுதல் அகப்படுதல், அகங்கரித்தல் அதிகரித்தல், மறந்து நிற்றல், நினைந்து நிற்றல், மயக்குறுதல் திகைப் புறுதல், போரிடுதல். கொலைப்படுதல், முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அத் தேவ யோனி வர்க்கங்களெல்லாம் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தோம். பின்னர் காட்டகத்தார் கரவு செய்வார் கொலை செய்வார் முதலியவராகப் பிறந்து பிறந்து பயப்படல் சிறைப்படல், சிதைப்படல் முதலிய அவத்தைகளால் இறந்து இறந்து அந்நரகயோனி வர்க்கங்களெல்லாம் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தோம்.

அங்ஙனம் யாங்கள் அப்பிறவிகள் தோறும் அடைந்த அலுப்பும், அச்சமும், அவலமும் களைப்பும் துன்பமும் திருவுளத்தடைத்து இரங்கியருளி அழியாப் பெருவாழ்வைப் பெறுதற்குரிய உயரறிவுடைய இம்மனித தேகத்தில் செலுத்தியருளிய தேவரீரது பெருங் கருணைக்கு யாங்கள் செய்யும் கைம்மாறு ஒன்று தெரிந்தோமில்லை.

உயிர்கள் அகத்தும், புறத்தும், அகப்புறத்தும் புறப் புறத்தும் நீக்கமின்றி நிறைந்து விளங்குகின்ற அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரே!

இம்மனித தேகத்தில் செலுத்திய காலத்திலும் தாய் வயிற்றிலும், சிசுப்பருவத்திலும் குமாரப்பருவத்திலும் பல்வேறு அவத்தைகளால் அறிவின்றி இருந்தோமாகலின் தேவரீர் பெருங்கருணைத் திறத்தை அறிந்துகொள்ளாமல் வீண்பொழுது கழித்தோம். அப்பருவம் கழிய இப்பருவத் தினிடத்தே எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும் எல்லா உயிர்களையும், எல்லாப் பொருள்களையும் மற்ற எல்லாவற்றையும், தோற்றுவித்தும் விளக்கஞ் செய்வித்தும், துரிசு நீக்குவித்தும் பக்குவம் வருவித்தும், பலன் தருவித்தும் எங்கும் பூரணமாகி விளங்குகின்ற ஓர் உண்மைக் கடவுள் உண்டென்றும், அக்கடவுளை உண்மையன்பால் கருதி வழிபாடு செய்யின் அக் கடவுள் திருவருள் நம் கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்கு

மென்றும், அத் திருவருள் விளக்கத்தால் மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் தவிர்த்து எக்காலத்திலும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் தடை படாத பேரின்ப சித்திப் பெருவாழ்வை அடைதல் கூடுமென்றும் எங்கள் அறிவில்தேவரீர் திருவருளால் உண்மைப்பட உணர்த்தியருளப் பெற்றோம். அவ்வுணர்ச்சியைப் பெற்றது தொடங்கி கடவுள் வழிபாடு எஞ்ஞான்று செய்வோம்? மரணம் பிணி, மூப்பு, முதலிய அவத்தைகள் எப்போது நீங்கும்? என்றும் அழியாத பேரின்ப சித்தி எக்காலங் கிடைக்கும் என்று எண்ணியெண்ணி வழிதுறை தெரியாமல் வருந்தி நின்ற தருணத்தே,

களைப்பறிந்து உதவும் கருணைக் கடலாகிய கடவுளே! தேவரீர் "நெடுங்காலம் மரணம் முதலிய அவத்தைகளால் துன்புற்றுக் களைப்படைந்த உங்களை அவ்வவத்தைகளின்றும் நீக்கிக் களைப் புறுகலக்கமும் தவிர்த்து, அழியாத பேரின்ப சித்தியை அடைவித்தற் பொருட்டாகவே பூர்வஞான சிதம்பரத்தின் வடபால் பார்வதிபுரம் என்று குறிக்கப்படுகின்ற உத்தரஞான சித்திபுரத்தில் யாம் அளவு கடந்த நெடுங்காலம் சித்தியெலாம் விளங்கத் திருவருள் நடஞ்செய்வோம்" என்றும் அதுதருணம் மிகவும் அடுத்து சமீபித்த தருணம் என்றும், அப் பதியினிடத்தே யாம் அருள் நடம்புரிவதற்கு அடையாளமாக ஒரு ஞானசபை காணுதல் வேண்டும் என்றும் திருவருட் குறிப்பால் அறிவித்ததுமன்றி அருளுருவாகி எங்கள் அகத்தும் புறத்தும் அமர்ந்தருளி யாதொரு தடையுமின்றி அத்திரு ஞானசபையும் தோன்றி விளங்கச் செய்வித்தருளிய தேவரீர் பெருங்கருணையைக் கருதும் தோறும் பெருங்களிப்படைகின்றோம். இனி, அத்திரு ஞானசபையை அலங்கரித்தல் வேண்டுமெனக் குறிப்பித்த வண்ணம் அலங்கரிக்கத் தொடங்குகின்றோம். அருட் பெருஞ்சோதி ஆண்டவரே! தேவரீர் அருளுருவாகி எங்கள் அகத்தும், புறத்தும் அமர்ந்தருளி யாங்கள் செய்யும் இவ்வலங்காரத் திருப்பணியில் எவ்விதத்தாலும் யாதொரு தடையும் வாராத வண்ணம் செய்வித்து அவ்வலங்காரத் திருப்பணியை முற்று வித்தருளல் வேண்டும்.

சர்வ வல்லபராகிய தனித் தலைமைக் கடவுளே! அத்திரு வலங்காரத் திருப்பணி முற்றிய தருணத்தே தேவரீர் அமர்ந்தருளி அற்புதத் திருவருள் விளக்கத்தால் எங்களையும் இவ்வுலகில் இத்தேகத்தைப் பெற்ற மற்றவர்களையும் உண்மை அடியர்களாக்கி,

உண்மையறிவை விளக்கி, உண்மை இன்பத்தை அளித்துச் சமரச சுத்த சன்மார்க்க நிலையில் வைத்துச் சத்திய வாழ்வை அடைவித்து நித்தியர் களாக்கி வாழ்வித்தல் வேண்டும். எல்லாம் உடைய அருட் பெருஞ்சோதி அற்புதக் கடவுளே. இது தொடங்கி எக் காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் தடையாகிய சமயங்கள் மதங்கள் மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம் ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்தில் பற்றாத வண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்வளவும் எவ்விதத்தும், விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்.

“எல்லாமாகிய தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ் சோதி ஆண்டவரே, தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம், வந்தனம்” என அருட்பிரகாச வள்ளலார் இறைவனை, நோக்கி வேண்டிய இவ்விண்ணப்பம் வள்ளலார் கண்டுணர்த்திய சமரச சன்மார்க்கத் திருநெறிக்குரிய இலக்கணமாகவும் இலக்கியமாகவும் அமைந்துள்ளமை உணர்ந்து இன்புறுதற்குரியதாகும்.

# 9. சமுதாயச் சீர்திருத்தச் சான்றோர்

தமிழ் நாட்டில் தொன்மைக் காலத்தில் மக்களை நிலத் தாலும் தொழிலாலும் சுட்டுவதன்றி நிறத்தாற் பகுத்துரைக்கும் சாதி வேறுபாடு இடம் பெறவில்லை. தமிழகத்தில் வடவாரியர் குடி புகுந்தபடியால் நால்வகை வருணமாகிய சாதிப் பாகுபாடும் அதன்வழி வந்த கோத் திரமும் குலப்பிரிவும் மெல்ல மெல்லப் புகுத்து நிலை கொள்வனவாயின. இப்பிரிவுகள் தமிழ்நாட்டில் நிலை பெற்றகாலம் கடைச் சங்க காலத்தினை ஒட்டியதாகும். அக்காலத்தில் வாழ்ந்த தமிழ்மக்கள் வருணப் பிரிவின் உயர்வு தாழ்வுகளை உடன்படாது கல்வி ஒழுக்கம் முதலியவற்றிற்கே முதலிடம் தந்தனர். இச்செய்தி,

> "வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
> கீழ்ப்பா லொருவன் கற்பின்
> மேற்பா லொருவனும் அவன்கட் படுமே" (புறம் - 183)

எனப் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கூறுதலால் உய்த்துணரப்படும்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒக்கும் எனவும், ஒழுக்கம் உடைமையே குடிமையெனவும், ஒழுக்கத்திலிருந்து வழுவுதல் மக்களிலும் தாழ்ந்த பிறப்பாய்க் கருதப்படும் எனவும், வேதம் ஓதுதலால் பார்ப்பனர் உயர்ந்தோர் என, ஒரு சிலரால் உயர்த்திக் கூறப்படினும் ஒழுக்கத்தில் வழுவு வராயின் இழிந்த பிறப்பினராகவே கருதப்படுவரெனவும் கல்லாதார், உயர்ந்த சாதியெனக் கருதப்படும் குடியிற் பிறந்தாராயினும் அவர்களால் தாழ்ந்தகுலம் எனக் கருதப்படும் குடியிற்பிறந்து கல்வியினாற் சிறப்படைந்த மக்களது பெருமையை ஒருசிறிதும் பெற்றாரல்லரெனவும் மக்கள் வாழ்விற்பெறும் பெருமை யென்பது அவர்கள் பிறந்த குடிப்பிறப்பாலும் செல்வ அளவாலும் வருவதன்று

*எனவும் தாமியற்றிய உலகப் பொதுமறையில் தெளிவாக வற்புறுத்திக் கூறியுள்ளார். திருவள்ளுவர் காலத்தில் சமுதாய வாழ்வில் சாதிப் பிரிவு வேரூன்றத் தொடங்கியமையும் அதற்குத் திருவள்ளுவர் முதலிய சான்றோர்கள் சிறிதும் இடம் கொடுக்கக் கூடாது என வற்புறுத்தினமையும் மேலெடுத்துக் காட்டிய திருக்குறட் கருத்துக்களால் நன்கு துணியப்படும்.*

**இதற்குரிய குறட்பாக்கள்:**

ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 133

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்(பு) ஒழுக்கம்குன்றக் கெடும். 134

மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றாரனைத்திலர் பாடு. 409

மேலிருந்தும் மேல்லார் மேல்லர் கீழிருந்தும்
கீழல்லா கீழல் லவர். 973

*என்பனவாகும்.*

*'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனக் கணியன்பூங்குன்ற னார் பாடிய புறநானூற்றுப் பாடல், அன்பினால் ஒன்றுபட்டு வாழ்தற்குரிய மக்களினத்தை நிற வேற்றுமை காரணமாகப் பல்வேறு சாதிகளாகப் பகுத்து அவர்தம் ஒற்றுமையைச் சிதைக்கும் இத்தீய பழக்கத்தினை அறவே ஒழித்து, எல்லா மக்களும் ஒரு குலத்தவரே என்னும் மெய்ம்மையை அறிவுறுத்துவதாகும். மக்கள் அனைவரும் ஒரு குலத்தவரேயென்னும் இவ்வுண்மையை அடிப்படையாகக்கொண்டு எல்லோராலும் வழிபடப்படும் தெய்வமும் ஒன்றே என்னும் சமய ஒருமைப்பாட்டினையும் இணைத்துக் கூறும் நெறியிலமைந்தது,*

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" (2104)

*என்னும் திரு மந்திரமாகும்.*

*சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனாரும் திருமூல தேவ நாயனாரும் வற்புறுத்திய வண்ணம் உலகிற் பல்வேறு இடங்களில் பல்வேறு நிலையினராக வாழும் எல்லா மக்களையும் ஒரே*

குடும்பத்தினராக மதித்து அன்பு செய்யும் மெய்யுணர்வுக் கொள்கை யானது சைவத் திருமுறை ஆசிரியர்கள் எல்லோரிடத்தும் சிறப்பாக அமைந்திருந்தது என்பது அவர்கள் பாடியருளிய திருப்பாடல்களால் நன்கு புலனாகும்.

குலச்சிறைநாயனார் சிவனடிக்குத் தொண்டுபட்ட அடியார் களைச் சாதி வேறுபாடு கருதாமல் ஒரே குலத்தினராக மதித்துப் போற்றிய செய்தியினை,

"நாடவர் நாடறிகின்ற குலமிலராகக் குலமதுண்
டாகத் தவம்பணி குலச்சிறை" 3-(20-6)

எனவரும் தொடரில் திருஞான சம்பந்தப் பிள்ளையார் உவமுவந்து பாராட்டுகின்றார்.

குறியில் நான்கு குலத்தின ராயினும்
நெறியில் அக்குலம் நீங்கினராயினும்
அறிவு சங்கரற் கன்ப ரெனப்பெறின்
செறிவுறப் பணிந்தேத்திய செய்கையார் (பெரிய - குலச்சிறை -4)

என வரும் பாடலில் மேற்காட்டிய தொடர்ப் பொருளைச் சேக்கிழார் பெருமான் விரித்துக் காட்டியமை இங்குக் கருதத் தகுவதாகும்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார், திருநீலகண்ட யாழ்ப் பாணருடன் திருச்சாத்தமங்கையை வழிபடச் சென்ற போது அப்பதியிலுள்ள திருநீல நக்கராகிய அந்தணர் ஆளுடைய பிள்ளை யாரையும், அடியார்களையும் வரவேற்று விருந்து செய்து உபசரித்தனர் எனவும், இரவுப் பொழுதாகிய நிலையில் ஞானசம்பந்தர், நீலநக்கரை நோக்கி, நீலகண்ட யாழ்ப்பாணருக்கு இங்குத் தக்க ஓர் இடம் கொடுத்தருளுவீர் எனக் கூறியருளினர் எனவும், அவ்வுரை கேட்ட நீலநக்கர் பெருமகிழ்ச்சியடைந்து தம் வீட்டின் நடுவே அமைந்த வேள்விச் சாலையின் பக்கத்திலே உள்ள கூடத்தில் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர்தம் மனைவியார் மதங்கசூளாமணியாரும் அன்றிரவு துயில் கொள்ள இடங் கொடுத்தாரெனவும், அந்நிலையில் நீல நக்கரால் வளர்க்கப்பெறும் வேள்விக் குண்டத்தின் தீ வலஞ்சுழித்து ஓங்கியது எனவும், அவ்வேள்வித் துயின் ஒளி முன்னைய நிலையைக் காட்டிலும் மிக்கு ஒளிர்ந்தது எனவும் சேக்கிழார் பெருமான் திரு நீலநக்க நாயனார் புராணத்தில் விரித்துக் கூறியுள்ளார். கி.பி. ஏழாம்

நூற்றாண்டில் பாணர், பறையர் முதலியோர் மரபு இழிந்த குலமாகக் கருதப்பட்டு வந்தது என்பதும் அன்புடைய அடியார்களது பிறந்த குலத்தின் தாழ்வினை மனங்கொள்ளாது அவர்தம் பத்தித் திறத்தின் பெருமையைப் போற்றித் தம்மோடு ஒத்த குலத்தவராகவே மதித்துப் போற்றுதல் வேண்டுமென்பது திருஞான சம்பந்தப் பிள்ளையாரது கொள்கையென்பதும் அக்கொள்கையை வரவேற்று அதன்படி நடந்தவர் திருநீலநக்கர் என்பதும், இவ்வாறு பண்டைக் குலத்தின் அமைப்பினைப் பொருட்படுத்தாது தொண்டர்களைப் பேரன்பின் திறத்தால் நன்கு மதித்துப் பேணுதலே மெய்யுணர்ந்தாரது கடமையாகுமெனக் கொண்டவர் திருத்தொண்டர் புராண ஆசிரியர் சேக்கிழார் நாயனாரென்பதும் மேற்குறித்த செய்தியால் நன்கு தெளியப்படும்.

தமிழகத்தில் தம்காலத்தில் வேரூன்றியிருந்த சாதி வேறு பாட்டின் தீமையை உணர்ந்து அதனைக் கண்டித்த அருளாளர் களுள் திருநாவுக்கரசரும் ஒருவர். கேட்டினை விளைவிப்பதாகிய சாதி உயர்வும் சுற்றத்தொடர்பும் ஏனைய பாசங்களும் ஒழிந்து மிகவும் மேலான பேரின்ப வாழ்வினையடைய வேண்டுமென்ற விருப்புடையார்க்குத் திருவானைக்காவில் எழுந்தருளியுள்ள பெருமான் தானே எதிர்ப்பட்டு அருள்புரிவார். ஆகவே, இளமை பொருந்திய நெஞ்சமே! அம்முதல்வனைப் பேரன்பினால் நினைந்து போற்றுவாயாக என நெஞ்சிற்கு அறிவுறுத்தும் நிலையில் அமைந்தது,

நேசமாகி நினைமட நெஞ்சமே
நாசமாய குலநலஞ் சுற்றங்கள்
பாசமற்றுப் பராபர ஆனந்த
ஆசையுற்றிடும் ஆனைக்கா அண்ணலே. (அப்பர் 5-31-9)

எனவரும் திருக்குறுந்தொகையாகும்.

மக்களினம் உயர்வடைதற்குரிய கல்வியறிவு ஒழுக்கங்களைப் பாராட்டாது போலியாகிய தம் சாதியின் உயர்ச்சியையே பாராட்டிக் கொண்டு ஏனையோரை இகழ்தல் மக்களது அன்பின் வழிபட்ட ஒற்றுமையினைச் சிதைத்துக் கேடு சூழ்வதாம் என்பதனை அறிவுறுத்துவார், மேற் குறித்த பாடலில் ''நாசமாய குலநல'' மெனச் சுட்டினார்.

தம்முடைய சாதிவழிப் பட்ட கோத்திர்த்தையும் அதன் கிளை வழியாகிய குலத்தையும் உயர்ந்தனவாகக் கொண்டு அதனை மக்கட் சமுதாயத்திலேயே நாட்டுதல் கருதித் தம் வருணாசிரமக் கொள்கைக்கு ஆதாரமாகப் பேசித் திரியும் குற்றமுடையவர்களும் திருநாவுக்கரசர் காலத்தில் வாழ்ந்தனர். அன்னோர் தம்முடைய சாதிப் பெருமையையும் சாத்திரப் புலமையையும் பேசும் அளவிலேயே நின்று விட்டனர். எத்தகைய வேறுபாடுமின்றி எல்லா மக்களாலும் அன்பு செலுத்துவதற்குரிய கொள்கலமாகத் திகழ்பவன் எல்லாம்வல்ல சிவபெருமானே என்னும் உண்மை யினை அன்னோர் தெளியமாட்டாராயினர். அத்தகையவர்களை நோக்கி அறிவுறுத்து வதாக அமைந்தது,

சாத்திரம் பல பேசுஞ் சழக்கர்கள்!
கோத்திரமுங் குலமுங்கொண் டென்செய்வீர்
பாத்திரஞ் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளுமாற்பேறரே (5-60-3)

எனவரும் திருகுறுந்தொகையாகும். கோத்திரம் - சாதிப் பிரிவு, குலம் - பண்பின் வழிபட்ட குடிப்பிறப்பின் வகை.

அக்காலத்தில் வேதியர்களிற்சிலர் ஒருகையில் தண்டமாகிய கோலும், புல்லால் முடைந்த ஆசனமும், மற்றொரு கையில் தர்ப்பையும் மார்பில் மான்தோலும் பூண்டு வெறும் விரதமே யுடையவராய் வருந்திய நிலையினையுளங்கொண்ட நாவுக்கரசர், யாவராலும் வழிபடுதற்குரிய முழுமுதற் கடவுளாகிய மயிலாடு துறைப் பெருமானை நோக்கித் 'தம் உள்ளத்தே நுண்ணிய பொருளை யுணர்ந்தோர்க்கு உடலின் பறத்தே முப்புரி நூல் அணிதலும் இன்றியமையாத ஒன்றோ' என வினவுவதாக அமைந்தது,

கோலும் புல்லும் ஒருகையிற் கூர்ச்சமும்
தோலும்பூண்டு துயரமுற் றென்பயன்
நீலமாமயி லாடு துறையனே
நூலும்வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்கட்கே (5039-9)

எனவரும் திருக்குறுந்தொகையாகும்.

இத்திருப்பாடலில், உயிர்க்குயிராகிய நுண்ணிய மெய்ப் பொருளை உணர்ந்து வழிபடும் நிலையில் தம் உள்ளத்தைச் செலுத்தாது தண்டமும் தருப்பையும் முப்புரிநூலும் தாங்கிய

புறவேடங்களையுடைய விரதியராயொழுகும் வேதியர் செயல் முடிந்த பயனாகிய வீடு பேற்றின்பத்தினை நல்காது என்னும் குறிப்பு இடம் பெற்றுள்ளமை காணலாம்.

விரதமே பரமாக வேதியரும்
சரதமாகவே சாத்திரங் காட்டினர். (போற்றி - வரி 5051)

எனவரும் திருவாதவூரடிகள் வாய்மொழியும்,

*ஆதி மறையோதி அதன்பயன் ஒன்றுமறியா*
*வேதியர்சொல் மெய்என்று மேவாதே* (நெஞ்சுவிடுதூது)

எனவரும் உமாபதி சிவனார் அறிவுரையும் இங்கு ஒப்பு நோக்கி யுணரத் தக்கனவாகும்.

எல்லாம் வல்ல முழுமுதற் பொருளாகிய இறைவனை அன்பினால் நினைந்து போற்றும் மெய்யடியார்கள் சாதியின் போலித் தன்மையை உணராத மக்களால் உயர்காவும், தாழ்வாகவும் பேசப்படும் எந்தக் குலத்திற் பிறந்தவராயினும் அவர்களின் நெற்றியிலேயிடப்பட்ட திருநீறும் அவர்களால் பூணப் பெற்ற சிவமணி மாலையும் முதலிய திரு அடையாளங்களைக் கொண்ட திருவேடத்தினைக் காணப்பெற்றால் இதுவே இறைவனுடைய திருவுருவமாம் எனத் தெளிந்து, அவர் பிறந்த சாதி புறத் தோற்றம் முதலியவற்றை எண்ணி வெறுப்படையாமல் அவ்வடியார்களைக் கண்டபொழுதே, இவர்கட்கு நாம் அடிமைத் தொண்டு செய்ய வேணுமென்ற விருப்புடையராய் அவர்களை உவப்புடன் நோக்கி, இங்கு நம் முன்தோன்றுமிவர், தெய்வத் தன்மையுடைய அடியார், மாற்றம் மனங்கடந்த நிலையில் உள்ள அம்முதற் பொருளே இவரையாட்கொண்ட கடவுள் என்றுகூறி அடியாரையும் இறைவனையும் இரண்டுபடப் பேசுகின்ற பேதவுணர்வின் நீங்கி, இவரே நாம் வழிபடுங் கடவுள் எனத் தெளிந்த உணர்வுடையராய் அடியாரைச் சிவனாகவே கருதி வழி பட்டொழுகும் தொண்டர் களது தூய நெஞ்சத்தினுள்ளே கன்றாப் பூரில் புறத்தே நடுதறியாகக் காட்சியளிக்கும் இறைவனை அகத்தே கண்டு மகிழவாய் என அறிவுறுத்தும் நிலையிலமைந்தது,

எவரேனுந் தாமாக விலாடத்திட்ட
திருநீறும் சாதனமும் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்டபோது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்துநோக்கி

இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி
இரண்டாட்டாதொழிந்து ஈசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியர் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே. (6-61-3)

*எனவரும் திருத்தாண்டகமாகும்.*

*ஆதிசைவ அந்தணராகிய சுந்தரர் தமக்குமுன் வாழ்ந்த அருளாசிரியர்களாகிய திருநாவுக்கரசரையும், திருஞானசம்பந்தப் பிள்ளையாரையும், தமக்குக் குருவாகக் கொண்டு அவ்விருவருடைய திருப்பதிகங்களையும் இறைவன் திருமுன் அன்பினால் ஓதி அடியார்க்கடியராம் பெரும் பேற்றினைப் பெற்றவர் என்பது,*

*"நாவின்மிசை யரையன்னொடு தமிழ்ஞானசம்பந்தன்
யாவர் சிவனடியார்களுக்கடியானடித் தொண்டன்"* (7-78-9)

*எனவும்,*

"நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ்மாலை
சொல்லியவே சொல்லி யேத்துகப்பானை" (7-67-5)

*எனவும் வரும் அவருடைய வாய்மொழியால் நன்கு விளங்கும்.*

*இந்நாட்டில் இடைக்காலத்தில் வந்து புகுந்து பெருந்தீமை யாகிய சாதி வேற்றுமையினைக் களைதற் பொருட்டு நம்பியாரூர ரால் அருளிச் செய்யப் பெற்ற திருப்பதிகம் திருத்தொண்டத் தொகையாகும். மாதவம் செய்த தென்திசை வாழவும் மக்கள் படும் எல்லாக் கேட்டிற்கும் காரணமாய் யான், எனது, என்னும் ஆணவத்தின் விளைவாய் இந்நாட்டில் வேரூன்றிய தீமையாகிய சாதிவேற்றுமை யொழியத் திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகத்தை அருளிச் செய்யவும் இறைவன் திருவருளால் திருக்கயிலாயத்தினின்றும் தமிழகத்தில் திருவவதாரம் செய்தவர் நம்பியாரூரர் ஆவர். இவ்வுண்மையினை,*

"மாதவம் செய்த தென்றிசை வாழ்ந்திடத்
தீதிலாத் திருத்தொண்டத் தொகைதரப் போதுவார்"
(பெரிய-திருமலைச்-25)

*எனவரும் பாடலில் சேக்கிழாரடிகள் குறிப்பிட்டுள்ளமை காணலாம். ஆணவத்தின் விளைவாகிய சாதி வேறு பாட்டினால் வரும் தீமையை இல்லையாகச் செய்யும் ஆற்றல் வாய்ந்த செந்தமிழ்ப் பதிகம் சுந்தரர்*

பாடிய இத்திருத் தொண்டத் தொகை என்பதனை அறிவுறுத்துவது 'தீதிலாத் திருத்தொண்டத்தொகை' யென்னும் சேக்கிழார் வாய்மொழியாகும்.

மாதொரு பாகனார்க்கு வழிவழி அடிமை செய்யும் ஆதிசைவ வேதியர் குலத்துள் தோன்றிய நம்பியாரூரர், திருவெண்ணெய் நல்லூர்ச் சபையிலே 'இவன் என் அடியான்' என இறைவனால் ஆளோலையினைக் காட்டி வழக்குரைத்து அடிமை கொண்ட செய்தியினைத் தாம் பாடிய திருப்பதிகங்களிற் பலவிடங்களிலும் நெஞ்சம் நெகிழ்ந்துருகிப் போற்றியுள்ளார். இவ்வாறு எல்லாம் வல்ல இறைவனால் ஆட்கொள்ளப் பெற்று அம்முதல்வனுக்குத் தாம் தொண்டுபட்ட உரிமைத் திறமாகிய சாதனத்தின் பயனாகத் தாம் பெற்ற பெரும் பயனே அடியார்க்கடியன் ஆகிய தம்மை என்பதனை,

'ஆள்தான் பட்டமையால் அடியார்க்குத் தொண்டு பட்டு' (7-121-2)

எனவரும் அடியில் நம்பியாரூரர் தெளிவாகக் குறித்துள்ளமை காணலாம்.

உலகியலிற் பேசப்படும் சாதி குலம் முதலிய வேற்றுமைக்கு இடமின்றி இறைவனுக்குத் தொண்டு பட்டார் அனைவரையும் அன்பினாற் போற்றிவழிபடுதலே சிவநெறிச் செல்வர்கள் அனைவருக்கும் உரிய தலையாய கடமை என்பதனை வற்புறுத்துவது "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு மடியேன்" எனத் தொடங்கும் திருத்தொண்டத் தொகைத் திருப்பதிமாகும்.

சாதி மத வேறுபாட்டுக்கு இடமில்லாத பண்டைத் தமிழர் நெறியாகிய சிவநெறியின் தொன்மைச் சிறப்பினை அறிவுறுத்து வது இத்திருத்தொண்டத் தொகையாதலின் இதனைத் "தொன்று சீர்த்திருத் தொண்டத்தொகை" யெனவும், "தென்தமிழ்ப் பயனாய் வந்த திருத்தொண்டத் தொகை" யெனவும் சேக்கிழார் அடிகள் சிறப்பித்துப் போற்றியுள்ளார்.

நம்பியாரூரர் அருளிய இத்திருப்பதிகத்தில் தில்லை வாழ் அந்தணர் முதலாகத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஈறாகப் பல்வேறு குடும்பங்களில் தோன்றிப் பல்வேறு தொழில்களையுடையாராய் வாழ்ந்த அடியார்கள் அனைவரும் ஒத்த நிலையில் சிறப்பித்துப் போற்றப் பெற்றுள்ளமை காணலாம்.

திருவெண்ணெய்நல்லூர்ப் பெருமான் வேதியர் உருவில் தோன்றி வெண்ணெய் நல்லூர்ச் சபையில் - "ஆரூரன் என் அடியான்" என ஆளோலை காட்டி வழக்குரைத்த போது, ஆதிசைவராகிய தாம் அவ்வேதியர்க்கு அடிமையாதல் பொருந்துமோ என அவை முன் தம்நிலைமையைப் புலப்படுத்தினார். அத்தகைய நம்பியாரூரரே, திரு ஆரூர்ப்பெருமான் திருவருளால் அந்தணர், குயவர், பாணர் முதலிய வேற்றுமைகளை அறவே களைந்து அடியார் எல்லார்க்கும் அடியேன் எனப் போற்றிப்பாடிய பதிகமாதலால் இத்திருப்பதிகம் உலகியலில் இடம் பெற்றசாதி வேற்றுமையென்னும் தீமையினை அறவே களையும் ஆற்றல் வாய்ந்த அருமருந்தாயிற்று. இவ்வாறு சாதியென்னும் தீமையை இல்லையாக்கி அறவே களைந்த இத்திருப் பதிகத்தைத் 'தீதிலாத் திருத்தொண்டத் தொகை' என அருண் மொழித்தேவர் சிறப்பித்து பெரிதும் பொருத்தமுடையதேயாம்.

சாதி வேறுபாடாகிய இத்தீமை அருளியல் வாழ்விலன்றிச் சமுதாய வாழ்விலும் இடம் பெறுதல் கூடாது என்னும் மெய்ம்மையை வற்புறுத்தும் நிலையில் அமைந்தது வன்தொண்டராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளது வரலாறாகும். ஆதிசைவ அந்தணராகிய ஆரூரர், உருத்திர கணிகையர் குலத்தில் தோன்றிய நங்கை பரவை யாரையும், வேளாண்குடியில் தோன்றிய சங்கிலி யாரையும் திருமணம் செய்து கொண்டு பல்வேறு அடியார்களுக்கு அமுதளித்து வாழ்ந்தமையும், அந்தணராகிய சோமாசி மாறர், அரசராகிய சேரமான் பெருமாள் குறுநில மன்னரான பெருமிழலைக் குறும்பர், வேளாண் குடியினராகிய கோட்புலியார், ஏயர்கோன் கலிக்காயர் முதலிய பல்வேறு குடும்பத்தினராகிய அடியார்கள் பலரோடும் அன்பினாற் கலந்து அளவளாவின்மையும், கோட்புலியார், வனப்பகை சிங்கடி என்னும் தன் பெண் மக்கள் இருவரையும் அடிமைப் பெண்களாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்ட, அவ்விரு பெண்களையும் தம்முடைய இரு குழந்தைகளாக ஏற்றுக் கொண்டு வளர்த்தமையும், தாம் பாடிய திருப்பதிகத்திருக்கடைகாப்பில் வனப்பகை சிங்கடி என்னும் அவ்விருபெண்களுக்குத் தந்தையாகத் தம்மைக் குறிப்பிட்டுள்ள மையும் ஆகிய செய்திகள் சமய வாழ்வில் மட்டுமின்றிச் சமுதாய வாழ்விலும் சாதி வேற்றுமையை அறவே களைந்தவர் நம்பியாரூரர் என்னும் மெய்ம்மையினை நன்கு வற்புறுத்தும் நிகழ்ச்சிகளாகும்.

நுண்ணறிவு வாய்க்கப்பெறாத மக்கள், எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒக்குமென நம் தமிழ் முன்னோர் கூறிய பொருளுரையினை உணராது, இடைக் காலத்தில் வந்து புகுந்த சாதி குலம் என்னும் போலி வேற்றுமைகளையே மெய்யென்றெண்ணித் தடுமாற்றம் அடைவாராயினர், அந்நிலையில் அருளாளர் பலர் தோன்றி இவ்வேற்றுமைகள் உண்மையாவன அல்ல எனவும் மக்களது வாழ்க்கைப் புணையினைக் கீழ்மேலாக ஈர்த்து அலைக்கும் இச்சுழியில் அகப்பட்டுத் தடுமாறாது இறைவனருளால் யான் எனது, என்னும் செருக்கின்றி எவ்வுயிர்களையும் ஒப்பமதித்து உய்தலே சான்றோர் கடனாமெனவும் அறிவுறுத்துவாராயினர். சாதி வேற்றுமையினைக்களைதல் வேண்டும் என அறிவுறுத்தும் முறையில் அமைந்தது,

> "சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
> ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
> பேதை குணம், பிறருருவம், யானெனதென்னுரை மாய்த்துக்
> கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே" (திருவா. கண்ட)

எனவரும் மாணிக்கவாசக சுவாமிகளின் மணிமொழியாகும்.

அன்பினால் அளவளாவி மகிழவேண்டிய மக்கட் குலத்தாரைப் பிறப்பினால் மேல் கீழ் என்னும் வேற்றுமைக்கு உட்படுத்தி அல்லல் விளைவிக்கும். சாதி வேற்றுமையைப் போலவே பிற்காலத்தில் சமய வேற்றுமைகளும் பலவாகத் தோன்றி மக்களது ஒற்றுமையைச் சிதைப்பன ஆயின.

ஆகவே பொருளற்ற சாதி வேற்றுமையைப் போலவே பயனற்ற சமயவேற்றுமைகளும், மக்களது ஒற்றுமை வாழ்வுக்கு ஒவ்வாதனவாகிய பல்வேறு சமய சாத்திரங்களும் கண்டித்து ஒதுக்கத் தக்கன என்பதும், இத்தகைய வேற்றுமைகளுள் அகப் பட்டோர் தம்மைப் பேணுவாரின்றிப் பிறவிக் கடலில் வீழ்ந்து எண்ணில்லாத காலம் துன்புறுவர் என்பதும், இங்ஙனம் அவலக் கடலுட் கிடந்து அல்லற்படாதவாறு தம்மை ஆண்டு கொண்டருளியவன் எல்லாம் வல்ல இறைவன் என்பதும் ஆகிய உண்மைகளை அறிவுறுத்தி மகிழும் நிலையில் திருவாதவூரடிகள் அருளியது,

> உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்
> சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறும்

கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளுஞ்
செயலைப் பரவி நாம் தெள்ளேணங் கொட்டாமோ (தெள்ளேணம் 17)

எனவரும் திருவாசகமாகும்.

இங்ஙனம் தமிழ் முன்னோராகிய சான்றோரனைவரும் மக்களது அன்பின் வழிப்பட்ட நல்வாழ்வுக்குத் தடையாகவுள்ள சாதி சமய சாத்திர வேறுபாடுகளைக் காலந்தோறும் கண்டித்து ஒதுக்கி வந்திருப்பினும் இவ்வேற்றுமைகள் யாவும் நீர்ப்பாசி போல் மீண்டும் மீண்டும் நாட்டில் நிலைபெற்று வருவனவாயின. இவ் வேற்றுமைகளால் ஒற்றுமையிழந்த மக்கள் பல்வேறு வகையினராகப் பிரிந்து தம்மில் முரண்டுபட்டுத் தமது அறிவு, ஆண்மை, பொருள் என்னும் மூவகையாற்றல்களையும் இழந்து அயல் நாட்டார்க்கு அடிமைப்படும் அவல நிலைக்கு உள்ளாயினர். உலகியல் வாழ்விலும் அருளியலாகிய தெய்வ வழிபாட்டு நெறியிலும் ஒற்றுமையின்றி இழிநிலையுற்ற இந்நாட்டு மக்களை அடிமை நிலையினின்றும் விடுவித்து உரிமையுணர்வினராகச் செய்து 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' எனத் திருமூலர் அருளியவாறு நன்றே நினைந்து "நமனில்லை" என அச்சமின்றி வாழலாம் எனவும் அறிவுறுத்திய பெருமை அருட்பிரகாச வள்ளலார்க்கேயுரிய தனிச் சிறப்பாகும். சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி மக்களது ஒற்றுமையுணர்வுக்குத் தடையாகவுள்ள சாதி சமய சாத்திர வேற்றுமைகளைத் தம்முடைய செழுந்தமிழ்ப் பாடல்களாலும், சீவகாருண்ய வொழுக்கத்தின் வழிப்பட்ட செயல்முறைகளாலும் வேரறக்களைந்த அருளாளர் இராமலிங்க வள்ளலார் ஒருவரே எனக் கூறுதல் மிகவும் பொருத்தமுடையதாகும்.

பார்ப்பனர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என வட நூல்களிற் கூறப்படும் நால்வகை வருணங்களும் பிரம்மச்சரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம் சந்நியாஸம் எனப்படும் நால்வகை ஆசிரமப் பகுப்புக்களும் இவற்றுக்கு உரியவாக நியமித்துரைக்கப் படும் உலகியல் நடைமுறைகளும் முதலாக வடமொழி மிருதி நூல்களிற் கூறப்படுவனயாவும் அறிவாற்றல்களிற் குறைந்த சிறுபிள்ளைகள் தம் விளையாட்டுக்களில் வரையறை செய்து கொள்ளும் விளையாட்டு விதிகளைப் போல்வனவேயன்றி மெய்ந் நெறிக்குரிய நடைமுறைகளாகமாட்டா. மக்களுடம்பின் மேற் போர்க்கப் பெற்றுள்ள தோலின் நிறங்களைக் கொண்டு அவர்களது

கல்வி நலம் பண்புநலம் முதலியவற்றைக் கண்டறிவார் ஒருவருமில்லை. வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலிய இவற்றின் பொய்ம்மையினை நீ அறிவுக் கண்ணைத் திறந்துகண்டு தெளி வாயாக என உயிர்க்கு உயிராகிய இறைவனே உள்நின்று உணர்த்தத உணர்ந்த அருளாளர் இராமலிங்க வள்ளலாராவார். இவ்வுண்மை,

"நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளை விளையாட்டே
மேல்வருணம் தோல் வருணம் கண்டறிவார் இலை நீ
விழித்திதுபார் என்றெனக்கு விளம்பிய சற்குருவே" (4174)

எனவரும் வள்ளலார் வாய்மொழியால் நன்கு தெளியப்படும்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என அன்பினால் ஒரு குடும்பத்தவராக ஒன்றிவாழ்தற்குரிய மக்கட் குலத்தாரை, இவர் இன்ன மதத்தினர் இன்னசாதியினர் எனப் பல்வேறு வகையின ராகப் பிரித்து வேறுபடுத்தற்குக் காரணமாயுள்ள சாதி மதங்கள் யாவும் பின் வந்தோராற் கற்பனைசெய் துரைக்கப்பட்டனவேயன்றி மெய்ம்மையாவன அல்ல என்னும் இவ்வுண்மையை இறைவனருளால் இளம் பருவத்திலேயேயுணரப் பெற்வர் அருட்பிரகாச வள்ளலார், இந்நுட்பம்,

"சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்சோதி" (அகவல்)

எனவரும் அவரது வாய்மொழியால் இனிது புலனாதல் காணலாம்.

சாதி சமய சாத்திர வேற்றுமைகளை யெல்லாம் அறவே தவிர்த்து மக்களனைவரையும் ஒருகுலத்தவராகக் காணும் பொதுமை நெறியே சன்மார்க்க நெறியாகும் என்பதனை உள்ளவாறு உணர்ந்து மக்களெல்லாம் சன்மார்க்க நெறியில் ஒழுகி உய்தி பெறுதல் வேண்டும் என உலக மக்களை அறைகூவி யழைத்தவர் இராமலிங்க வள்ளலார். இவ்வுண்மை

"சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்
சாத்திரக் குப்பையுந் தணந்தேன்" (4075)
"இச்சாதி சமய விகற்பங்களெலாந் தவிர்த்தே
எவ்வுலகும் சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும்" (4086)

"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே யபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர் அவர்தாமே
வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றேன் உமையே" (5566)

"கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக
மலைவறு சன்மார்க்கம் ஒன்றே நிலைபெறமெய் உலகம்
வாழ்ந்தோங்கக் கருதியருள் வழங்கினை என்றனக்கே" (3768)

"சாதி மதம் சமயமுதற் சங்கற்ப விகற்பமெலாந் தவிர்ந்து போக
ஆதிநடம் புரிகின்றான் அருட்சோதி எனக் களித்தான்" (4508)

எனவரும் வள்ளலார் அருண்மொழிகளால் நன்கு புலனாகும்.

மேற்குறித்த சாதி மத விகற்பங்கள் யாவும் மெய்ம்மையாவன அல்ல என்பதும், இவ்வேற்றுமைகள் யாவும் மக்களினத்தாரை அறியாமையென்னும் இருட்குழியில் தள்ளுவன ஆதலால் இவற்றை இருந்த இடந்தெரியாமல் அறவேயகற்றி மக்களைத் தெளிவுடையராய்த் திகழ்ந்தின்புறச் செய்யும் சுத்த சன்மார்க்க நெறியே உலகிற் சிறந்து ஓங்குதல் வேண்டும் என்பதும் இறைவனது அருள் விளக்கம் பெற்ற இராமலிங்க வள்ளலாரது பெரு வேட்கையாகும். எல்லோரும் இன்புற்றிருக்க நினைக்கும் தமது பெருவேட்கையினையும், இதுவரை உலகிற் பசியும் பிணியும் பகையும் காரணமாகக் கொதிப்புற்ற மக்கள் அக்கொதிப்படங்கிக் கொலைகளவு முதலிய குற்றங்களை விட்டொழித்து இவ்வுலகில் என்றும் இன்பம் பெருக வாழ்வார் என்பதனையும் அறிவுறுத்தும் முறையில் அமைந்தன,

"இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப்போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம
வழக்கெலாம் குழிக்கொட்டிமூடி மண்மூடிப்போட்டு

தெருட்சாருஞ் சுத்த சன்மார்க்க நன்னீதி
சிறந்து விளங்க ஓர்சிற்சபை காட்டும்
அருட்பெருஞ்சோதி என் ஆண்டவர்நீரே" (4654)

"மதித்த சமயமத வழக்கெல்லாம் மாய்ந்தது
வருணாச் சிரமமெனு மயக்கமும் சாய்ந்தது
கொதித்த வேலாகாசாரக் கொதிப்பெல்லாம் ஒழித்து
கொலையும் களவும் மற்றைப் புலையும் அழிந்தது" (4503)

எனவரும் திருவருட்பாப் பாடல்களாகும். வள்ளலார் வற்புறுத்திய இக்கருத்தினையே துறவுப்பெருஞ் செல்வராகிய பாம்பன் குமரகுரு தாச சுவாமிகளும் "தள்ளற் பாலது சாதிவிகற்பமே" (தகராலய ரகசியம் - பாயிரம் 3) என உறுதிப்படுத்தியருளினர். "சாதிப்பெருமை சிறுமைகள் பாராட்டுதலாலுறும் அகங்காரமும் அசட்டையும் வருண ஆச்சிரம தரும கருவசங்கற்பம் பந்தம்" என்பது எசுர்வேத சிராலம்போபநிடதம் கூறுகின்றபடி வீடு" பேற்றிற்கு விக்கின மாதலின், "தள்ளற்பாலது சாதி விகற்பமே" என்றார். வேதமுடிகளிற் போதரும் தகராலய ரகசியத்தைக் கேட்டலும் அறிதலும் எல்லாச் சாதியார்க்கும் பொருந்தா என மறுப்பார் மாற்றத்தை மறுத்துப் பக்குவமுடையார் எம் மரபின ராயினும் உரியார் என நிறுவியவாறு" எனவரும் அதன் உரையால் இனிது விளங்கும்.

மக்களைப் பிரித்து வேற்றுமைப்படுத்தும் சாதி என்னும் பகுப்பு வெறுங்கற்பனையேயன்றி நிலையானது அன்று என்பதையும், மக்களை ஈகை முதலிய நற்செயல்களால் வகைப்படுத்துப் போற்றும் சிறப்புடைய பகுப்பே என்றும் நிலையுடைய தென்பதனையும்,

"சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி"

எனவரும் பாடலில் ஔவையார் தெளிவாகக் குறித்துள்ளார்.

கொலையும் புலையுந் தவிர்ந்த நன்மக்களை அகவினத்தார் என்றும், கொலையும் புலையும் முதலான குற்றம் புரிவோரைப் புறவினத்தார் என்றும் இருதிறத்தினராக வள்ளலார் பிரித்துக் கூறிய பகுப்பும் மக்களது உயிர்ப்பண்பு பற்றியமைந்த உயர்வு தாழ்வு

பற்றியதே யன்றி வினைவயத்தால் வரும் பிறப்பு வேற்றுமை பற்றிய தன்றென வுணர்தல் வேண்டும்.

இவ்வாறு தெய்வப் புலவர் திருவள்ளுவர் திருமூலர் முதலிய அருளாசிரியர் முதல் சென்ற நூற்றாண்டில் தோன்றிய அருட்பிரகாச வள்ளலார் வரை வாழையடி வாழையாக வந்த செந்தமிழ்ச் சான்றோர் அனைவரும் சாதிப் பகுப்பின் பொருளற்ற தன்மையினை எடுத்துரைத்து விளக்கியிருக்கவும், அதனை உளங்கொள்ளாமல் உலக மக்களிற் பெரும்பாலார் சாதி இன வேற்றுமையினை உண்மையென நம்பி உலக மக்களது ஒருமைப் பாட்டுணர்வுக்குத் தடையாக அறியாமையிருளில் அகப்பட்டு அவலமுறுகின்றார்களே என வருந்திய பாவேந்தர் பாரதிதாசனார், அறிவியற்கலைகள் பல வளர்ந்த இக்காலத்திலும் இவ்வுலகம் இருட்டறையில்தான் இருக்கின்றது என்னுங்கருத்தில்,

"இருட்டறையில் உள்ளதடா உலகம், சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே"

என இரங்கிப் பாடியுள்ளமை இங்கு நினைக்கத் தகுவ தாகும். இக்காலத்தில் இந்திய நாட்டின் ஒற்றுமையுணர்வு நிலைபெறுதல் வேண்டும் என்னும் நோக்குடன் சாதி மதத்தின் வேறுபாடற்ற தேசிய ஒருமைப் பாட்டினை வற்புறுத்தி வரும் அரசியல் வாதிகளும், சமூகச் சீர்திருத்தவாதிகளும் அருட்பிரகாச வள்ளலார் அறிவுறுத்திய சமரச சுத்த சன்மார்க்கநெறியின் மேன்மையினை நாட்டு மக்களுக்கு நன்கு புலப்படுத்தும் கடமையினை மேற்கொள்வராயின் சாதி சமய இன வேற்றுமை கருதாத உலக ஒருமைப்பாட்டுணர்வினை உண்மையாக நிலை நாட்டிய பெருமைக்கு உரியவராவர் என்பது உறுதி.

# 10. சிவனருள் பெற்ற சித்தர்

*அருட்பிரகாச வள்ளலார் அறிவுறுத்திய மரணமிலாப் பெரு வாழ்வுக்கு உறுதுணையாவன அணிமா முதலிய எண்வகைச் சித்திகளாகும், அவற்றுள்,*

1. *அணிமா என்பது தன்னை அணுவாகச் சுருக்கிக் கொள்ளும் திறன்.*
2. *மகிமா என்பது தன்னை மலை போலப் பெருக்கிக் கொள்ளும் ஆற்றல்.*
3. *கரிமா என்பது அளவிடமுடியாத கனமுடையதாகச் செய்தல்.*
4. *லகிமா என்பது ஆகாயம் போல நொய்ம்மை யுடையதாகச் செய்தல்.*
5. *பிராப்தி என்பது எங்கும் தானாக விரிந்து எல்லா வற்றையும் தன்பால் தருவிக்கும் திறன்.*
6. *பிராகாமியம் என்பது விரும்பிய பொருள்களைப் படைத்து விரும்பிய வடிவில் சேர்ந்து நுதர்தல்.*
7. *ஈசத்துவம் என்பது தத்துவங்களை நீங்காது நின்று விரும்பிய படி நடத்துதல்.*
8. *வசித்துவம் என்பது தத்துவங்களில் கலந்து எங்கும் வியாபித்து எல்லாவற்றையும் தன்பால் ஈர்த்துக் கொள்ளும் ஆற்றல்.*

*இங்குக் கூறப்பட்ட எண் வகை ஆற்றல்களும் கைவரப் பெற்றவர்களே சித்தர்களாவர். இச்சித்திகளனைத்தும் உலகத்தாரை வியக்கச் செய்யும் ஆற்றலுடையன. இறைவனருவளால் எண் வகைச் சித்திகளும் கைவரப் பெற்று இவ்வுலகியல் அளவில் நின்று விடாது எல்லாம் வல்ல இறைவனுக்குரிய எண்குணங்களிலும் திளைத்த நெஞ்சத்தினராக மன்னுயிர்களின் இன்னல்களைக் களைவதே தம்முடைய வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு அழியா உடம்புடன் வாழ்பவர்களே சிவசித்தர் எனப் போற்றப் பெறுவர்.*

உலக உயிர்கள் மும்மலப்பிணிப்பால் உறும் அல்லல்களை நீக்குதற் பொருட்டு அருளே வாட்படையாகவும், நாதமே போர்ப் பறையாகவும், தந்நிலையில் தாழாமையாகிய மானமே பரியாகவும், நல்லறிவே வெண்குடையாகவும், திருநீறே கவசமாகவும் கொண்டு மாயப்படைகளை எதிர்க்கும் நிலையில் திருப்படை எழுச்சியினைச் செப்ப வந்த திருவாதவூரடிகள், மெய்த்தொண்டு புரியும் தொண்டர் களை முன்னே செல்லும் தூசிப்படை யாகவும், பத்திமை நெறியைப் பரப்பும் அடியார்களை இருபக்கங் களிலும் சென்று பகைப் படையினை வளைக்கும் கைகோட் படையாகவும், அறிவாற்றல் பெற்ற சிவயோகிகளை நடுவே செல்லும் பேரணிப் படையாகவும், மனத் திண்மையும் செயலாற்றலும் வாய்ந்த சித்தர்களை தம்சேனை எதிரிப் படைகளால் தாக்கிப் பின்னிடாதவாறு தடுத்துப் பின் நின்று செலுத்தும் கூழைப் படையாகவும் செல்லும் படி பணிப்பது,

தொண்டர்காள் தூசி செல்வீர்
 பத்தர்காள் சூழப்போகீர்
ஒண் திறல் யோகிகளே
 பேரணி உந்தீர்கள்
திண்திறற் சித்தர்களே
 கடைக் கூழை செல்மின்கள்
அண்டர்நா டாள்வோம் நாம்
 அல்லற் படைவாராமே. (திருப்படை எழுச்சி 2)

எனவரும் திருவாசகமாகும்.

இங்குச் சொல்லப்பட்ட, தூசிப்படை, கைகோட்படை, பேரணிப்படை, கூழைப்படை என்னும் நால்வகைப் படைகளுள் கூழை என்பது முன்னே சென்ற மூவகைப் படைகளும் பின் வாங்காத படி அவற்றைப் பின்னின்று தாங்கிச் செலுத்தும் ஆற்றல் மிக்க படைப் பிரிவாகும். உலகில் அல்லற் படை உயிர்களைத் தாக்காத வாறு பேரின்ப நாட்டினை கைப்பற்றிக் கொள்ளும் ஞானப் போரில் கூழைப் படையாக நின்று தாங்கிச் செலுத்தும் திண்மையும், ஆற்றலும் வாய்ந்தவர்கள் "சிவசித்தர்களே" என்பதுபுலப்பட "திண்திறல் சித்தர்களே கடைக் கூழை செல்மின்கள்" எனத் திருவாதவூதரடிகள் பணித்தருளியுள்ளமை சித்தர்களின் சிறப்பினைப் புலப்படுத்துவதாகும். உலகமக்கள் அல்லற் படாதவாறு மன்னுயிர் களை உய்வித்தலே குறிக்கோளாகக் கொண்டு தன்னலங் கருதாது

வாழும் திண்திறல் சித்தர்களில் ஒருவராக வைத்துப் போற்றுதற் குரியவரே நம் அருட்பிரகாச வள்ளலார் ஆவர். இந்நுட்பம் திருவருட்பாவினை ஊன்றிப் பயில்வார்க்கு இனிது புலனாகும். வள்ளலார் பெற்ற சித்திநெறி அவர்தம் ஆன்ம முயற்சியால் வந்தது அன்று. உயிரிரக்கமே தனது வடிவாகக் கொண்டு எல்லாவுயிர் களிடத்தும் அன்பு செலுத்தும் தூய நெஞ்சத்தினராகிய இராமலிங்க வள்ளலார் வடலூரில் தருமச்சாலையில் தங்கியிருந்தபோது எல்லாம் வல்ல சிவபெருமானே சித்தராக நள்ளிரவில் செம்பருக்கைக் கற்கள் வருத்த நடந்தருளி வள்ளலார்பால் எழுந்தருளித் திருக் கதவம் திறந்திடும் என்று சொல்லி உள்ளே புகுந்து தம்கையிலுள்ள திருநீற்றுப் பையிலிருந்து பெருவண்ணக் கொழுந்தாகிய பொற்பூப் போலும் ஞான விளக்கத்தினை நல்கிச் சித்தித் திறத்தை வழங்கியருளினார் என்பதும், அங்ஙனம் வழங்கிய இறைவன், "மகனே வருந்தாதே இதனை வாங்கிக்கொள். இங்கு மகிழ்ந்து உறைக, உலகில் விளையாடி வாழ்க, மயக்கத்தை ஒழித்து மகிழ்க, துன்பமெலாம் நீங்குக. சீல நிலையுற வாழ்க, பண்பொடு வாழ்ந்திடுக, உரிமையொடு வாழ்க, மந்தவுருவாம் மனத்தால் மயக்க முறேல் அஞ்சேல், பெருமையிலே பிறங்குக நீ, கொலை ஒழிந்த நிலை தனியே பொருந்துக, நண்ணி நீ எண்ணியவாறு நடத்துக, தயவினொடு வாழ்க" என வாழ்த்தி, தன்னுருவம் போன்றதொரு சத்தியினைத் தந்து இன்னும் நெடுங்காலம் புலவர்தொழ வாழ்க என வாழ்த்தி மறைந்தருளினாரென்பதும் ஆகிய செய்திகள் வள்ளலார் அருளிய அருட்பிரகாச மாலை என்னும் பனுவலில் பல முறையும் குறிக்கப் பெற்றுள்ளன. இவ்வாறு எல்லாம் வல்ல சிவபெருமான் நள்ளிரவில் வள்ளலார்பால் எழுந்தருளித் திருக்கதவந்திறப்பித்து எல்லாம் செய்யவல்ல சித்தித் திறத்தை அறிவுறுத்தியருளினார் என வள்ளலார் நெஞ்சம் நெக்குருகிப் பாடுதலால், அவர் நள்ளிரவில் சிவயோக நிலையில் அமர்ந்திருந்த போது இறைவனருளால் சித்தி நிலை கைவரப் பெற்றமை நன்கு புலனாகும்.

உலக மக்களது ஆரவாரத்திற்கு இடமின்றி எல்லோரும் உறங்கும் நள்ளிரவிலே தனித்திருந்து செய்யும் சிவயோக நிலையே இறைவன் அடியார்கட்குத் தோன்றும் துணையாய் எழுந்தருளி அருள் வழங்கும் வாய்ப்பினை யுடையதாகும், இந்நுட்பம்,

"தூங்கிருள் நடு நல்யாமத் தோர் மழலையாழ்சிலம்ப
வந்தகம் புகுந்தோன் மருவிடம் திருவிடை மருதே" (திருவிசைப்பா - 179)

என வரும் கருவூர்த் தேவர் அருளனுபவத்தால் இனிது எலனாதல் காணலாம்.

இங்ஙனம் யோகிகள் தனித்திருக்கும் நள்ளிரவில் அவர்கட்குக் கட்புலனாகத் தோன்றி யருள்புரிதலும் அவர்கள் மக்கள் பலரொடும் சூழ இருக்கும் நிலையிலே தோன்றாத் துணையாயிருந்து அருள்புரிதலும் இறைவனது இயல்பாகும். இவ்வியல்பினை,

"நான்தனிக்கும் தருணத்தே
தோன்றுகின்ற துணையாய்
நான்தனியா விடத்தெனக்குத்
தோன்றாத துணையாய்" (3114)

எனவரும் பாடலில் அருட்பிரகாச வள்ளலார் தம் அநுபவ நிலையில் வைத்துப் புலப்படுத்தியுள்ளமை இங்கு நினைக்கத் தகுவதாகும்.

இறைவனருளால் சித்தித் திறம் பெற்ற அருட்பிரகாச வள்ளலார் தாம் ஒருவர் மட்டும் முத்தி நிலையாகிய பேரின்ப வாழ்வில் திளைத்தலைக் காட்டிலும் மன்னுயிர்களின் துன்பத்தைத் தம் சித்தித் திறத்தால் போக்கிப் பல்லுயிர்க்கும் நலம்புரிதலே இன்பம் பெருகுந் திருத்தொண்டாகவும், தமது வாழ்வின் கடமையாகவும் கொள்வாராயினர்.

இங்ஙனம் முத்தி நெறியைச் சாதனமாகவும் சித்தி நெறியை அதன் பயனாகவும் வள்ளலார் கொண்டமைக்குரிய காரணம் தந்நலம் கருதாது பிற உயிர்களின் நலங்கருதிச் செயற்படும் அவர்தம் பெருங்கருணைத் திறமேயாகும்.

"பெரியதோர் ஞானம் நான்கினும் ஆசை
முத்தி பெற்றிடவும் பெற்றிலேன்
உரியதோர் இச்சையெனக்கிலை என்றன்
உள்ளம் நீ அறிந்ததே எந்தாய்" (3399)

எனவரும் வள்ளலார் வாய்மொழி அவர் தமக்கென எதனையும் விரும்பாமையை நன்கு புலப்படுத்துதல் காணலாம்.

"கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்."

(பெரியபுராணம் திருக்கூட்டச் சிறப்பு 8)

என எவ்வுயிர்க்கும் அன்புடையராகிய அடியார்களின் இயல்பு குறித்து அருண்மொழித் தேவர் குறிக்கும் இலக்கணத்திற்கு நம் அருட்பிரகாசவள்ளலார் இலக்கியமாகத் திகழ்கின்றார் எனக் கூறுதல் பெரிதும் பொருத்தமுடையதாகும்.

வள்ளலார், உலக மக்கள் துன்பம் நீங்கி இன்பம் பெறுதற்குரிய வண்ணம் சன்மார்க்க நெறியை வளர்க்கவும், அந்நெறிக்குரிய ஒழுக்கமும் மெய் வாழ்க்கையும் பெற்றுச் சிற்சபை நடமும் பொற்சபை நடமும் நாள்தொறும் கண்டு பாடி நின்றாடி உலகத் துயிர்க்கெலாம் இன்பம் விளைத்தல் வேண்டுமெனவும் பிறருடைய துன்பங்களைப் போக்கி இறைவன் திருவடிக்கு அன்புடையவராகச் செய்தல் வேண்டுமெனவும், புலை, கொலை இரண்டும் நீக்கிய நெறியில் உலகெலாம் நடக்கத் தாமுயலுதல் வேண்டுமெனவும், மன்னுயிர்களின் வருத்தத்தினைத் தீர்க்கும் நல்வரத்தினைத் தமக்குத் தந்தருள வேண்டுமெனவும், தீமை இல்லாத இவ்விருப்பத்தை இறைவனாகிய நீயே அறிவிக்க அறிந்து இத்தகைய விண்ணப்பத்தை நின்பால் தெரிவித்துக் கொள்கின்றேன் எனவும் அம்மையப்பனாகிய இறைவனை நோக்கிப்பாடிய பிள்ளைச் சிறு விண்ணப்பப் பாடல்கள் "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" எனத் திருமூலர் அருளிய வண்ணம் வள்ளலார் கொண்ட அருள் வேட்கையினை நன்கு புலப்படுத்துவன ஆகும்.

சிவனருளால் தாம் சித்தி பெற்ற திறத்தைப் புலப்படுத்து வனவாக அமைந்தன,

"திருப்பொதுவில் திருநடம் நான்
சென்று கண்ட தருணம்
சித்தி என்னும் பெண்ணரசி
எத்தி என்கைப் பிடித்தாள்" (3381)

"உலகிற் பெருந்திறற் சித்திகள் எல்லாம்
சிறந்திட உனக்குத் தந்தனம் எனஎன்
சென்னி தொட்டுரைத்தானை"

சாகாவரங் கொடுத் தென்றுந் தடைபடாச்
சித்திகள் எல்லாம் அளித்தனை எனக்கு (3848)

பொன் செயல் வகையை உணர்த்தி என்னுளத்தே
பொருந்திய மருந்தை... ..... (3969)

சபை எனதுளமெனத் தானமர்ந் தெனக்கே
அபய மளித்ததோர் அருட்பெருஞ் ஜோதி (அகவல் 155-56)

வழிநின் பேரருள் வாழிநின் பெருஞ்சீர்
ஆழியொன்றளித்த அருட்பெருஞ்ஜோதி (அகவல் 1559-60)

அன்பையும் விளைவித் தருட்பேரொளியால்
இன்பையும் நிறைவித் தென்னையும் நின்னையும்
ஒருரு வாக்கியா னுன்னியபடியெலாம்
சீருறச் செய்துயிர்த் திறம்பெற அறியா
அருளமு தளித்தனை யருணிலை யேற்றினை
அருளறி வளித்தனை யருட்பெருஞ்சோதி (1569-74)

உலகினுள் உயிர்களுக் குறுமிடையூ றெலாம்
விலக நீயடைந்து விலக்குக மகிழ்க
சுத்த சன்மார்க்க சுகநிலை பெறுக
உத்தமனாகுக ஓங்குக என்றனை (1589-1592)

மகனே பிறிந்திடேம் சிறிதும் பிறிந்திடேம் உலகில்
பெருந்திறல் சித்திகள் எல்லாம்
சிறந்திட உனக்கே தந்தனம் ..... (திருவருட்பா - 3847)

உள்ளம் தளிர்த்திடச் சாகாவரங் கொடுத் தென்றும்
தடைபடாச் சித்திகள் எல்லாம் அளித்தனை எனக்கே (திருவருட்பா 3848)

குணம் அறியேன் செய்தபெருங் குற்றமெலாம் குணமாகக்
கொண்டருளி என்னுடைய குறிப்பெலாம் முடித்து
மணமுறு பேர் அருளின்ப அமுதமெனக்களித்து
மணிமுடியுஞ் சூட்டி எனை வாழ்கஎன வாழ்த்தித்
தணவலிலா தென்னுளத்தே தான்கலந்து நானுந்
தானுமொ ருவடிவாகித் தழைத்தோங்கப் புரிந்தே
அணவுறுபேர் அருட்சோதி அரசு கொடுத்தருளி
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந்தருளே (திருவருட்பா 4188)

*எனவரும் திருவருட்பாப் பாடல்களாகும்.*

# 11. மரணமிலாப் பெருவாழ்வு

இறைவனது திருவருட் சுதந்திரத்தை வேண்டிப் பெற்ற அருட்பிரகாச வள்ளலார் அழியும் தன்மையதாகிய ஊனுடம் பினை மாற்றி அழியா இயல்பினதாகிய அருளுடம்பினைப் பெற்று உலக மக்கள் எல்லோரும் எக்காலத்தும் இவ்வுலகில் நிலை பெற்று வாழ வேண்டும் என்னும் ஆராத பெரு வேட்கையுடன் "சித்தாய வேடத்தாய்" **(6-62-1)** என அப்பரடிகள் அருளியவாறு எல்லாம் வல்ல சித்தராய் எழுந்தருளிய இறைவனைச் செந்தமிழ்ப் பனுவலால் பரவிப் போற்றிய சித்தராவார்.

நாம் பெற்றுள்ள பூதவுடம்பு என்றாவது ஒரு நாள் அழியக் கூடியதே. நிலவாத அப் புலால் உடம்பினை மாற்றி அன்பும் அருளும் இன்பும் உருவாகிய தூய நல்ல உடம்பினை இறைவன் அருளால் இப்பிறப்பிலேயே பெற்ற, இவ்வுலகம் உள்ளளவும் இறைவனை அன்பினால் போற்றி ஆருயிர்கட்கெல்லாம் அன்புடையராய் வாழ்தல் என்பது இறைவனருளால் பெறுதற் குரிய திருவருள் வாழ்வாகும். இத்தகைய சித்தித் திறத்தால் பெறுதற்குரிய திருவருள் வாழ்வினையே "மரணமிலாப் பெருவாழ்வு" என வள்ளலார் தாம் பாடிய பனுவல் களில் பல இடங்களிலும் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாம் பெற்றுள்ள யாக்கையும், இளமையும், செல்வமும் நிலையுடையன அல்ல என்னும் உண்மையை நிலையாமை என்னும் அதிகாரத்தில் வற்புறுத்திய திருவள்ளுவர், நம்முடைய உயிரை நாம் பெற்றுள்ள உடம்பினின்றும் பிரித்து மரணத்தை யுண்டாக்கும் கூற்றுவனையும் தவ வன்மையால் வெல்லுதல் கூடும் என்னும் உண்மையைக்

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. (-269)

எனவரும் திருக்குறளில் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

யாவராலும் தடுக்க வொண்ணாத நிலையில் உடம்பினின்றும் உயிரைப் பிரிக்கும் தெய்வ ஆற்றலே கூற்று என வழங்கப்படும் என்பார், "மாற்றரும் கூற்றம்" என்றார் தொல் காப்பியர். இவ்வாறு யாவராலும் தடுக்க வொண்ணாத கூற்றுவனது ஆற்றலையும் தவ வலியால் மாற்றிவிடுதல் கூடுமென்பதே மேற்காட்டிய திருக்குறளின் கருத்தாகும். எல்லா வகையாலும் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாதவாய் மன்னுயிர்களை அவை நிலை பெற்றுள்ள உடம்பினின்றும் நீக்குதலாகிய கொலைத் தொழிலைச் செய்யாது கொல்லாமை என்னும் நல்லறத்தை மேற்கொண்டு ஒழுகுவாரது வாழ்நாளின் மேல் காலமறிந்து உயிருண்ணவரும் கூற்று செல்லமாட்டாது என அறிவுறுத்துவது,

"கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ் நான் மேல்
செல்லா துயிருண்ணும் கூற்று" (-326)

எனவரும் திருக்குறளாகும்.

கொல்லாமையை விரதமாக மேற்கொண்டொழுகுவானது வாழ்நாளின்மேல் உயிருண்ணும் கூற்று செல்லாது எனவே அவனுக்கு மரணமில்லை என்பதாம்.

"மிகப்பெரிய அறம் செய்தாரும் மிகப்பெரிய பாவஞ் செய்தாரும் முறையானன்றி இம்மை தன்னுள்ளே அவற்றின் பயன் அனுபவிப்பரென்னும் அறநூற்றுணிபு பற்றி இப்பேரறஞ் செய்தான் தானும் கொல்லப்படான். படானாகவே அடியிற் கட்டிய வாழ்நாள் இடையூறின்றி யெய்துமென்பார் வாழ்நாள் மேல் கூற்று செல்லா தென்றார். செல்லாதாகவே காலம் நீட்டிக்கும், நீட்டித்தால் ஞானம் பிறந்து உயிர் வீடு பெறுமென்பது கருத்து" எனப் பரிமேழகர் தரும் விளக்கம், கொல்லாமையை விரதமாகக் கொண்டொழுகுவார் இவ்வுலகில் மரணமின்றி நெடிது வாழ்ந்து பின்னர் வீடுபெறுவர் என்னும் உண்மையை வற்புறுத்தல் காணலாம். தன்னை வழிபடுவோரது நெஞ்சத் தாமரையிலே நிலைபெற வீற்றிருந்தருளும் இறைவனுடைய மாட்சிமை பொருந்திய திருவடிகளை இடைவிடாது தியானிப்போர் இந்நிலவுலகின்கண் தம் உடம்பிற்கு அழிவின்றி நெடுங்காலம் வாழ்வார்கள் என்னும் உண்மையை அறிவுறுத்துவது,

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்." (-3)

எனவரும் திருக்குறளாகும்.

மலர்மிசை ஏகினான் - தன்னை அன்பால் நினைவாரது உள்ளத் தாமரையின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து எழுந்தருளியிருப்பவன். அடி சேர்தல் என்பது அம்முதல்வனுடைய திருவடியை இடைவிடாது தியானித்து அவனோடு ஒன்றுபட்டுச் சிவயோக நிலையில் இருத்தல். இவ்வாறு சிவயோக நிலையில் நின்று சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்களே முற்காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த சித்தர்களாவர். தாம் பெற்ற சித்தித்திறத்தால் தம் உடம்பினை அழியா நிலையுடையதாகச் செய்து உலகெங்கும் சென்று மன்னுயிர்களுக்கு நலம் செய்வதையே தமது கடமையாகக் கொண்டு இறவாமல் பிறவாமல் வாழ்பவர்களே சித்தர்களெனப் போற்றப் பெறுவர். தம்முள்ளத் தாமரையில் எழுந்தருளிய உயிர்க் குயிராகிய இறைவனை இடைவிடாது தியானித்துப் போற்றும் தவயோகிகளாகிய சித்தர்கள் தமது உடம்பிற்கு அழிவின்றி நீடுவாழ்வார்கள் என்பதே இத்திருக்குறளின் கருத்தாகும். இடம் வரையாது நீடுவாழ்வார் என்று கூறாமல், நிலமிசை நீடுவாழ்வார் என இடத்தினை வரைந்து கூறினமையால் இங்கு நீடுவாழ்தல் என்பது அழியா உடம்போடு நிலமிசை நிலைத்து வாழ்தலாகிய மரணமிலாப் பெருவாழ்வையே குறிக்கும் எனக் கொள்ளுதல் மிகவும் பொருத்தமுடையதாகும்.

உலகத்தில் உடம்புடன் கூடிப்பிறந்தவர்கள் இறத்தலும், அவ்வுடம்பை 'விட்டு இறந்தவர்கள் மற்றொரு உடம்பினைப் பெற்று மீளப் பிறத்தலும் புதுமையான செய்தி அன்று; தொன்று தொட்டு நடைபெற்று வரும் உயிர்களின் பொதுவாழ்க்கை முறையே ஆகும். இம் முறையினை 'உயிர்போகு போதுநெறி' என்பர் இளங்கோவடிகள். இவ் உண்மையினை, "பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும் புதுவதன்றே தொன்றியல் வாழ்க்கை" (சிலப்பதிகாரம் 30-ஆம் காதை 139-140) என மாடல மறையோன் கூற்றாக இளங்கோவடிகள் புலப்படுத்தியுள்ளார்.

ஒருவனுக்குச் சாக்காடு வருதல் உறக்கம் வருதலோடு ஒக்கும் எனவும், அதன் பின்பு பிறப்பு வருதல் உறங்கி விழித்தலோடு ஒக்கும் எனவும் இவ்வாறு காரண காரியத் தொடர்ச்சியாய்ப் பிறப்பும்

இறப்பும் கரையின்றித் தொடர்ந்து வருதலால் பிறவியைப் பெருங்கடல் எனவும் திருவள்ளுவர் குறித்துள்ளார். இவ்வாறு நிலையின்றி அழியக் கூடிய உடம்பினைப் பெற்றுப் பிறந்த மக்கள், தம் ஐம் பொறிகளை ஒருநெறிப் படுத்திச் செம்பொருளாகிய இறைவனைச் சிந்தித்துச் செய்யும் மிக்க தவவன்மையால் தம்முடைய தவ உடம்பை நிலத்தில் வீழ்ந்து அழிய விடாமல் என்றும் அழியா நிலை உடையதாகச் செய்து அவ்வுடம்புடன் கூடியே தவப் பயனைப் பெற்றுத் தாம் விரும்பிய இடங்களுக்கெல்லாம் விரைந்து செல்லும் பேராற்றல் உரையராகத் திகழ்வார்கள் என்பது சங்ககாலத் தமிழ் மக்களது வாழ்வியலிற் காணப்படும் பேருண்மையாகும். இந்நுட்பம்,

'தவம்செய் மாக்கள் தம் உடம்பு இடாது
அதன்பயன் எய்திய அளவை மான' (பொருநர் - 95 - 96)

எனவரும் பொருநர் ஆற்றுப் படைத்தொடரால் நன்கு பயனாகும். மிக்க தவத்தைச் செய்கின்ற தவச்செல்வர்கள் தம்முடைய தவம் செய்த உடம்பை நிலத்தில் போடாது அழியா உடல்பெற்று அவ்வுடம்புடன் இருந்து தவத்தாற் பெறும் பயனைப் பெற்ற தன்மையை ஒப்ப என்பது மேற் காட்டிய தொடரின் பொருள் ஆகும். அழியா உடம்பினைப் பெற்ற இத்தவச் செல்வர்கள் அவ்வுடம்புடன் கூடிய வானுலகம் முதலிய எல்லா இடங்களுக்கும் சென்று வருவார்கள் என்பது.

"உடம்பொடு சென்மார் உயர்ந்தோர் நாட்டே" (புறம் - 392)

எனவரும் புறப்பாடலால் நன்கு புலனாகும்.

கற்புடைத் தெய்வமாகிய கண்ணகியார், தமது பழைய உடம்போடு கூடியே விண்ணுலகினின்றும் தெய்வவுருப் பெற்று வந்த கோவலனுடன் மலைவாழ் குறவர் கண் காண வானோர் உலகம் புக்கனர் என்ற செய்தி சிலப்பதிகாரத்திற் கூறப்பட்டது.

பாலைக்கவுதமனார் என்னும் புலவர்பெருமான் இமையவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்னும் சேர மன்னனைப் பதிற்றுப்பத்து மூன்றாம் பத்தினால் பாடிய நிலையில், அம்மன்னன் பாடிப்பெறும் பரிசிலாக "நீர் வேண்டிய பொருளைக் கொள்வீராக" என்ற பொழுது, அவர் - யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புக வேண்டும் எனக் கேட்க, சேர

மன்னனும் பார்ப்பாரிற் பெரியோரை அழைத்து ஒன்பது பெருவேள்விகளைச் செய்து பத்தாவது வேள்வியைத் தொடங்கிய நிலையில் புலவர் பெருமானாகிய பார்ப்பனியையும் யாவரும் காணாராயினர் என்ற செய்தி பதிற்றுப்பத்து மூன்றாம்பத்தின் பதிகத்தில் கூறப்பட்டுள்ளது.

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் பாலைக் கவுதமன் விரும்பியவாறு தக்க பார்ப்பனர்களைக் கொண்டு வேள்விகளைச் செய்து பாலைக் கவுதமனாரையும் அவர் தம் வாழ்க்கைத் துணைவியாகிய பார்ப்பனியையும் உடம்பொடு வானுலகத்திற்கு ஏற்றிய இச்செய்தியினை

> ''வண்டமிழ் மறையோற்கு வானுறை கொடுத்த
> திண்டிறல் நெடு வேற் சேரலன்'' (சிலப்பதி...... கட்டுரைகாதை 63-4)

எனவும்,

> நான் மறையாளன் செய்யுட் கொண்டு
> மேனிலையுலகம் விடுத்தோன். (சிலப். 28 நடுநற் காதை 137-8)

எனவும், வரும் தொடர்களில் இளங்கோவடிகள் குறித்துள்ளமை இங்கு ஒப்பு நோக்குதற்குரியதாகும்.

மேற்குறித்த செய்திகள் யாவும் இவ்வுலகில் வாழும் மக்கள் தாம் பெற்ற பூதவுடம்போடு விண்ணுலகிற்குச் செல்ல முடியும் என முன்னோர் கொண்ட நம்பிக்கையைப் புலப்படுத்தும் நிலையில் அமைந்தன.

இனி இவ்வுலகில் வாழும் பொழுதேயே தம் உடம்பினை நல்லொழுக்க நெறியாலும் அன்பு அருள் முதலிய உயர் பண்பு களாலும் நன்கு பாதுகாத்து வளர்த்தலினால் மரணமின்றி நெடுங்காலம் வாழமுடியும் என்பதனைத் தமிழ் முன்னோர் நன்கு உணர்ந்திருந்தனர் என்பதும், அத்தகைய நிறைவுடைய வாழ்க்கையினால் நிறைந்த அறிவினைப் பெற்றுத் திகழ்ந்தனர் என்பதும் 'பாண்டியன், மாகீர்த்தி இருபத்திநாலாயிரம்யாண்டு அரசு வீற்றிருந்தானாதலின் அவனும் அவன் அவைலுள்ளோரும் அறிவு மிக்கிருத்தலின் அவர்கள் கேட்டிருப்ப அதங்கோட்டாசிரியர் கூறிய கடாவிற்கெல்லாம் குற்றம் தீர விடை கூறுதலின் அரில்தப என்றார்' (தொல் - எழுத்து - பாயிரம்) எனவரும் நச்சினார்க்கினியர் உரையால் உய்த்துணரப்படும்.

*ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்து, காமம், வெகுளி, மயக்கம் ஆகிய குற்றங்களை நீக்கி நல்லொழுக்க நெறியினை மேற்கொண்டு இறந்த காலம், நிகழ்காலம், எதிர் காலமென்னும் முக்கால நிகழ்ச்சிகளையும் உணர வல்ல முழுதுணர்வுடைய "அறிவர்" என்னும் கூட்டத்தாரும், அவ்வறிவர் கூறிய நூல்நெறியில் நின்று வீடு பெறமுயலும் நிலையில் இமயம், நியமம், ஆசனம், வனிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைதல், சமாதி என்னும் எண்வகை யோக அமைப்பினையுடையராய் ஒழுகும் தவச்செல்வர்களும் தாம் தாம் மேற்கொண்டொழுகும் நிலையில் தமக்கு ஒப்பாரும் மிக்காரு மின்றி வென்றியுடையராய் விளங்கினார்கள். இச்செய்தி,*

மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும் (தொல்- புறத்திணை - 15)

*எனவரும் தொல்காப்பியத் தொடரால் இனிது விளங்கும் அகத்திய முனிவர் முதலியோர் "அறிவர்" என்னும் பக்கத்தவர். "தாபதர்" தவஞ்செய்வார் எனப்படுவோர். அவர்கள் - தவஞ் செய்வோரும், யோகஞ் செய்வோரும் என இருவகைப்படுவர். ஊண் நசையின்மை, நீர் நசையின்மை, வெப்பம் பொறுத்தல், தட்பம் பொறுத்தல், இடம் வரையறுத்தல், ஆசனம் வரையறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய் வாளாமை என எட்டும் தவஞ் செய்வார்க்குரிய செயல் முறைகளாகும். முற்கூறிய இமயம் நியமம் முதலியன யோகம் செய்வார்க்குரியன. முக்காலமு முணர்ந்த அறிவரும், தவமும், யோகமும் செய்வாராகிய தாபதரும் சங்க காலத்தில் 'வாழ்ந்திருந்தனர் என்பது மேற்குறித்த தொல்காப்பியத் தொடராலும், அறிவன் வாகை, தாபத வாகை என்னும் புறத்திணைத் துறைகளிலமைந்த சங்கச் செய்யுட்களாலும் உய்த்துணரப்படும்.*

ஓவத்தன்ன விடனுடை வரைப்பிற்
பாவையன்ன குறுந்தொடி மகளிர்
இழைநிலை நெகிழ்ந்த மள்ளற் கண்டிகும்
கழைக்க ணெடுவரை யருவியாடிக்
கான யானை தந்த விறகிற்
கடுந்தெறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே. (புறநானூறு - 215)

எனவரும் புறப்பாடல் தவத்தின் வெற்றியைக் குறித்த தாபத வாகை என்னும் துறையிலமைந்ததாகும்.

“மூங்கிலிடத்தேயுடைய நெடிய மலையினின்று விழும் அருவி நீரிற் குளித்துக் காட்டுயானை கொணர்ந்த விறகினால் வேள்விக் குண்டத்தில் செந்தீயை வளர்த்து முதுகின் புறத்தே தாழ்ந்த தனது சடையைப் புலரும் படிசெய்து கொண்டிருக்கிற இத் தவச்செல்வன் முற்பருவத்தில் ஓவியம் போலும் அழகினையுடைய தன் வீட்டின் கண்ணே பாவை போலும் வளையணிந்த மகளிருடைய அணிகலன்கள் கழலுமாறு அன்பு மீதூர உபசரிக்கப்பட்டவன் என்பதனைக் கண்டுகொண்டேம்” என்பது இப்பாடலின் பொருளாகும்.

இப்பொழுது மலையருவியில் நீராடிக் காட்டு யானை தந்த விறகினால் வேள்வி செய்து தன் புறத்தே தாழ்ந்த ஈரச்சடை புலரும்படி தவநிலையில் இருப்போனாகிய இவன், முன்பு தன் இல்லத்திலே காதல் மகளிர் காமுறப் பேரழகனாய் வாழ்ந்தவன் என்பதனை இப்பொழுது கண்டு கொண்டோம்’ என வியந்து போற்றுவதாக அமைந்தது மாற்பித்தியார் பாடிய இப்புறப் பாடலாகும்.

“.இம்மையின்பம் நல்கும் இவ்வுலகியல் வாழ்வையும் வீடு பேற்றின்பத்தை நல்கும் தவ வாழ்வையும் சீர் தூக்கிப் பார்த்தால் தவ வாழ்வை நோக்க இவவுலகியல் வாழ்வு வெண் சிறுகடுகின் அளவு கூட நிறையில் நில்லாது. ஆதலால் பேரின்பமாகிய வீடு பேற்றில் விருப்பமுடையோர் இவ்வுலகியல் வாழ்வைக் கைவிட்டுத் தவ வாழ்வை மேற் கொண்டனர். இவ்வாறு எல்லாப் பற்றுக்களையும் விட்டுத் துறவடைந்தவர்களை எல்லாச் செல்வத்துக்கும் தெய்வமாகிய திருமகள் விட்டுநீங்க மாட்டாள்” எனத் தவத்தின் சிறப்பினை விளக்குவதாக அமைந்தது.

பருதி சூழ்ந்தவிப் பயங்கெழுமாநிலம்
ஒரு பகலெழுவ ரெய்தி யற்றே
வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்
கையவி யனைத்து மாற்றா தாகலிற்
கைவிட்டனரே காதல ரதனால்
விட்டோரை விடாஅ டிருவே
விடாஅ தோரிவண் விடப்பட் டோரே (புறநானூறு - 358)

என வான்மீகியார் பாடிய பாடலாகும்.

இப்பாடற் பொருளை ஊன்றி நோக்குங்கால் உலக நிலையாமையையும், நிலையுடைய பெரும் பொருளையடையச் செய்யும் தவத்தின் ஆற்றலையும் உணர்ந்து தவநிலையில் சென்ற பெருமக்கள் தமிழகத்தில் தொடர்ந்து வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பது நன்கு தெளியப்படும்.

"யோகிகளாய் உபாயங்களால் முக்காலமுணர்ந்த மாமூலர் முதலியோர், அறிவன் தேயத்து அனைநிலை வகையோராவர்; அவர்க்கு மாணாக்கராகித் தவஞ்செய்வோர் தாபதப் பக்கத்தராவர்" என நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் பெருமை வாய்ந்த சிவயோகியராகிய திருமூல நாயனாரையும் அவர்தம் மாணாக்கர் களையும் குறித்தெனக் கருத வேண்டியுள்ளது.

யாப்பருங்கலம் செய்யுளியல் புறநடைச் சூத்திரவுரையில் "ஆரிடப்போலி" என்னும் செய்யுள் அமைப்பினை விளக்கக் கருதிய யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் "இலை நலவாகினும்" (204) என்னும் முதற் குறிப்புடைய திருமந்திரத்தினை மூலர் வாக்கு எனக் குறித்துள்ளார். எனவே திருமூலர், தமிழ் நாட்டு முனிக்கணத்தைச் சேர்ந்தவர் என்பது நன்கு தெளியப்படும்.

திருமூல நாயனார் இந்நிலவுலகில் மூலன் உடம்புடன் நெடுங்காலம் சிவ யோகத்திலமர்ந்திருந்தார் என்பது 'ஒப்பில் எழுகோடியுக மிருந்தேனே' (திருமந்திரம் 74) எனவும், "இருந்தேன் இக்காயத்தே எண்ணில்கோடி" திரு - 80 எனவும், வரும், அவர்தம் வாய்மொழிகளால் நன்கு துணியப்படும் 'இக்காயத்தே' என்று திருமூலர்ச்சுட்டியது சிவயோகியாராகிய அவர், மூலன் என்னும் "இடையன்" உடம்பிற் புகுந்து நிலைபெற்ற பின்னராதலின் திருமூலனால் "இக்காயம்" எனச் சுட்டப்பட்ட உடம்பு மூலன் என்னும் ஆயனுடைய உடம்பு எனக் கொள்ளுதல் வேண்டும்.

திருமூலர் தம்முடன் நந்தியெம்பெருமான்பால் உபதேசம் பெற்றவர்களான சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்னும் நந்திகள் நால்வரையும், சிவயோக மாமுனி, மன்று தொழுத பதஞ்சலி, வியாக்ரமர் ஆகியவர்களையும் தம்மொடும் சேர்த்து எண்மராகக் குறித்துள்ளார். (திருமந்திரம் - 67)

திருமூலருடைய மாணாக்கர்கள் மாலாங்கன், இந்திரன், சோமன், உருத்திரன், கந்துரு, காலாங்கி, கஞ்சமலையன் என்னும் பெயரினராகிய எழுவர் (திருமந்திரம் - 69)

இந்நிலவுலகில் தாம் நெடுங்காலம் தங்கியிருந்த காரணத்தை விளக்கக் கருதிய திருமூலர் தம்முடைய மாணாக்கர்களாகிய இந்திரன் - மாலாங்கன் முதலியோரை நோக்கிக் கூறும் முறையில்

"இருந்தவக் காரணங் கேளிந் திரனே
பொருந்திய செல்வப் புவனா பதியாம்
அருந்தவச் செல்வியைச் சேவித்தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியினாலே" (திரு-75)

மாலாங்கனே யிங்கு நான் வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்கமாக மொழிந்த திருக் கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே (திரு-77)

எனவரும் பாடல்களில் எடுத்துக் காட்டியுள்ளமை காணலாம்.

"இந்நிலவுலகில் மூலனுடம்புடன் தாம் நெடுங்காலம் தங்கியிருத்தற்குரிய நோக்கம் சிவத்துடன் பிரிப்பின்றி விளங்கும் அருட்சத்தியாகிய புவனாபதியென்னும் அருந்தவச் செல்வியை வழிபட்டு அவ்வன்னையின் திருவருளால் இவ்வுலகில் பத்தி நெறியையும், யோக நெறியையும், ஞான நெறியையும் நிலைபெறச் செய்து இறைவனது அருட் கூத்தினை விளக்கும் தமிழ் வேதமாகிய திருமந்திரப் பனுவலை அருளிச் செய்தற் பொருட்டேயாம்" எனத் திருமூல நாயனார் தம் மாணாக்கர்கட்கு அறிவுறுத்தும் நிலையில் அமைந்தன மேற் காட்டிய திருமந்திரப் பாடல்களாகும், மூலன் என்னும் ஆயன் இறந்த நிலையில் அவனால் மேய்க்கப் பெற்ற பசுக்கள் உற்ற துயரங் கண்டு அதனை நீக்குதற் பொருட்டு ஆயனாகிய மூலனுடலுட் புக்குத் திருமூலராயெழுந்தவர் சிவயோகியராகிய செந்தமிழ்ச் சித்தர். இவர் இறைவனருளால் சதாசிவமூர்த்தியை ஒத்துச் சிவாகமப் பொருளை அறிவுறுத்தும் முற்றுணர்வும் தேவர்க் கெல்லாம் முதன்மையும் உடையவராக அழியா உடம்புடன் திகழ்ந்தார் என்பது வரலாறு இச்செய்தி; -

'நந்தியருளாலே மூலனை நாடிப்பின்
நந்தியருளாலே சதாசிவனாகினேன்
நந்தியருளால் மெய்ஞ்ஞானத்துள் நண்ணினேன்
நந்தியருளாலே நானிருந்தேனே' (திருமந்திரம் - 92)

எனவரும் இவரது வாய்மொழியால் நன்கு புலனாகும்.

திருமந்திரப் பனுவல்களை அருளிய சிவயோகியாராகிய திருமூலநாயனார் இறைவனருளால் தாம் பெற்ற எண்வகைச் சித்திகளால், இத்தமிழகத்தே பத்தி நெறியையும் ஞான யோக நெறிகளையும் பரப்பியருளிய திருவருட்சித்தர் ஆவர். அவர் வழியாகத் தமிழகத்தில் சித்தி நெறி தொடர்ந்து வளர்ந்து வந்தது, பிற்காலத்தில் வாழ்ந்த பதினெண் சித்தர்களிற் பலர் திருமூலர் அறிவுறுத்திய சித்தி நெறியினை மேற்கொண்டு வாழ்ந்தவர்களே. இவ்வகையில் திருமூலர் மரபு தாயுமான அடிகளாருக்குக் குருவாகிய மௌனகுரு என்னும் ஆசிரியர் காலம் வரை தொடர்ந்து நிலைபெற்று வந்துள்ளது. தாயுமானார் காலத்திலும் இத்தகைய சித்தர்கணத்தார் வாழ்ந்திருக்கிறார்கள். "மூலன் மரபில் வரு மௌனகுருவே", எனவும், 'வித்தகச் சித்தர்கணமே' எனவும் தாயுமான அடிகளார் தம்முடைய குருவாகிய மௌனகுருவையும் தம் காலத்தில் வாழ்ந்த சித்தர் கணங்களையும் அழைத்துப் போற்றும் பாடல்களால் இச்செய்தி நன்கு புலனாதல் காணலாம்.

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் நிலவிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமூலரைக் குருவாகக் கொண்டு சிவயோக நெறியினை மேற்கொண்டொழுகியவர் என்பது, 'நம்பிரான் திருமூலனடி யார்க்குமடியேன்' (7-39-6) எனவும் "நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால் விரல்" (7-45-9) எனவும் வரும் அவர்தம் வாய்மொழியால் நன்கு விளங்கும்.

சுந்தரர் காலத்தில் வாழ்ந்த "பெருமிழலைக் குறும்பர்" என்னும் பரமயோகி சுந்தரமூர்த்தி சுவாமிகளையே குருவாகக் கொண்டு சிவயோகம் பயின்று அதன் பலனாகச் சுந்தரர் நாளை கயிலை செல்ல இருக்கின்றார் என்பதனை உணர்ந்து அதற்கு முதல் நாளிலேயே சிவயோக நெறியாற் கயிலாயத்தை அடைந்தார் என்ற செய்தி திருத்தொண்டர் புராணத்தில் விரித்துரைக்கப் பெற்றுள்ளது.

ஆன்மாக்கள் மும்மலப்பிணிப்பினின்றும் விடுபட்டு இறைவனது அருளால் பேரின்பப் பெரு வாழ்வினை அடைதற் பொருட்டு முத்தி நெறியை வகுத்தருளிய உமையொருபாகனாகிய இறைவனே உலக உயிர்களின் இன்னலைப் போக்க விரும்பும் அருளாளர்க்கெனச் சித்தி நெறியையும் வகுத்துக் காட்டியுள்ளான் என்னும் இவ்வுண்மையை,

"முத்தா முத்திதரவல்ல முகிழ்மென் முலையாள் உமைபங்கா
சித்தா சித்தித்திறங் காட்டும் சிவனே தேவர் சிங்கமே" (7-52-1)

என நம்பியாரூரர் நன்கு புலப்படுத்தியுள்ளார்.

சிவயோக நெறியில் ஒழுகுபவர்களாகிய சித்தர்கள் தாம் இவ்வுலகில் கொண்டுள்ள ஊனுடம்பினையே இறைவனின் திருவருளின் ஆற்றலால் என்றும் அழியாத ஒளியுடம்பாக்கி எவ்விடத்தும் எக்காலத்தும் தடையின்றிச் சென்று மன்னுயிர் களின் துன்பங்களைப் போக்கி யுய்விக்க வல்ல பேராற்றல் படைத்தோர் ஆவர். ஆகவே அவர்தம் ஒளியுடம்பு என்றும் அழியா நிலைமைத் தாகும் என்பர் பெரியோர்.

சேய்ஞலூர்ப் பிள்ளையாராகிய சண்டேசர் தாம் செய்த சிவபூசையினைத் தடுத்த தந்தையின் கால்களைத் தடிந்த போது, இயல்பாகவே பாசங்களின் நீங்கிய சோதிப் பொருளாகிய சிவபெருமான் வெளிப்பட்டு "நம் பொருட்டால் எடுத்த தாதையை விழ எறிந்தாய்; அடுத்த தாதை இனி உனக்கு நாம்" என்றருளி, அவரையணைத்துத் தடவி அருள் செய்தான் என்றும், அங்ஙனம் இறைவனால் தீண்டப் பெற்றமையால் சண்டேசருடைய மாயா காரியமாகிய உடம்பு ஒளியுடம்பாக மாற "அந்த உடம்புடன்" அரனார்க்கு மகனார் ஆயினார் எனவும் கூறுவர் சேக்கிழார் பெருமான்.

செங்கண் விடையார் திருமலர்க்கை
தீண்டப் பெற்ற சிறுவனார்
அங்கண் மாயை யாக்கையின்மேல்
அளவின் றுயர்ந்த சிவமயமாய்ப்
பொங்கி எழுந்த திருவருளின்
மூழ்கிப் பூமேல் அயன்முதலாம்
துங்க அமரர் துதி செய்யச்
சூழ்ந்த ஒளியில் தோன்றினார். (பெரிய - 1265)

எனவரும் பெரியபுராணப் பாடலை ஊன்றி நோக்குங்கால் நாம் பெற்றுள்ள மாயா காரியமாகிய ஊனுடம்பு எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் நோக்கத்தால் மாயையின் அசுத்தம் நீங்கிச் சிவமயமாய்த் தூய ஒளியுடம்பாகத் திகழும் என்பது சேக்கிழார் பெருமான் கருத்தாதல் நன்கு தெளியப்படும். பரிச வேதியானது, தான் தீண்டிய பொருளைப் பொன்னாக மாற்றுதல் போல, இறை வனது அருளாகிய கை தீண்டப் பெற்றமையால் சேய்ஞலூர்ப் பிள்ளையாருடைய மாயா காரியமாகிய உடம்பும் கரணங்களும்

தூய சிவ உடம்பும் சிவ கரணங்களும் ஆக மாற்றப்பெற்ற திறத்தை விளக்குவார், செங்கண் விடையார் திருமலர்க்கை தீண்டப்பெற்ற சிறுவனார், அங்கண் மாயை யாக்கையின் மேல் அளவின்றுயர்ந்த சிவமயம் ஆயினாரென்றார்.

"இறைவனது திருவருளில் மூழ்கித் திளைத்த சண்டேசப் பிள்ளையாரது திருமேனி சிவத்துவ விளக்க மாகிய பேரொளியினைப் பெற்று விளங்கியது என்பார் "சூழ்ந்த ஒளியில் தோன்றினார்" என்றார்.

சிவ அபராதம் செய்தமையால் தன்தாதை எச்சதத்தனுடைய கால்களை மழுப்படையால் வெட்டி வீழ்த்திய சிறிய பெருந் தோன்றலாகிய விசாரசர்மர், தாம் முன் பெற்றிருந்த மாயா காரியமாகிய உடம்பு அதன் தன்மை திரிந்து சிவமயமாய் ஒளியுடன் தோன்றிய நிலையில் சிவனார்க்கு மகனார்" எனச் சிறப்பித்துப் போற்றப் பெறும் நற்பேற்றினைப் பெற்றார் என்பார்,

"வந்து மிகைசெய் தாதைதாள் மழுவால் துணித்த மறைச் சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே அரசனார் மகனார் ஆயினார்"

என்றார் சேக்கிழாரடிகள்.

அந்த உடம்பு தன்னுடனே அரனார் மகனார் ஆயினார் என்றது, மாயை உடம்பு அதன் தன்மை திரிந்து சிவமயமாய்ப் பொங்கி எழுந்து திருவருளில் மூழ்கிச் சிவவொளியில் தோன்றிய தாதலின் அவ்வுடம்புடனேயே சிவனார் மகனாராவதற்கு ஏதுவாயிற்று. "ஊனுயிர்வேறு செய்தான்" - யானையின் மேல் என்னுடல் காட்டுவித்ததான் "மானவ யாக்கையொடு" என்பன இத்தன்மையை விளக்குவனவாம் - (பெரிய - சண்டேசர் - சிவக்கவிமணி உரை) என இப்பாடலுக்குச் சிவக்கவிமணி அவர்கள் தரும் விளக்கம் இங்கு மனங்கொள்ளத்தகுவதாகும்.

சேரமான் பெருமான் நாயனாரும் அவர் தம் சோழராகிய நம்பியாரூரரும் இவ்வுலகில் தாம் பெற்ற மனித உடம்புடனேயே திருக்கயிலாயத்தை அடைந்தனர் என்பது வரலாறு.

"களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேல்கொள்ள" (திருவிசைப்பா - 189)

எனப் பூந்துருத்தி நம்பிகாடநம்பியும்.

ஞான ஆரூரரைச் சேரரை அல்லது நாம் அறியோம்
மானவ ஆக்கையொடும்புக் கவரை வளரொளிப்பூண்
வானவ ராலும் மருவற் கரிய வட கயிலைக்
கோனவன் கோயில் பெருந்தவத்தோர் தங்கள் கூட்டத்திலே
(திருத்தொண்டர் திருஅந்தாதி - 86)

என நம்பியாண்டார் நம்பியும் அருளிய பொருளுரைகளால் இவ்வரலாறு வலியுறுத்தப் பெற்றமை காணலாம். இதற்கு அகச் சான்றாக அமைந்தது, சுந்தரர் திருக்கயிலை சென்றபோது பாடியருளிய

தானெனை முன்படைத்தான் அதறிந்து தன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர் கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊனுயிர்வேறு செய்தான் நொடித்தான் மலை உத்தமனே தேவாரம்
(7-100-1)

எனத் தொடங்கும் திருப்பதிகமாகும்.

இதன் முதற்பாடலில் வரும் ஊன் உயிர் வேறு செய்தான் என்ற தொடருக்குச் சிவக்கவிமணி அவர்கள் பின்வருமாறு தரும் விளக்கம் இங்கு நினைவு கூரத்தகுவதாகும்.

"ஊன் உயிர் வேறு செய்தான்" ஊன் = கருவி கரணங்களோடு கூடிய உடல், உயிர் = ஆன்மா. இவற்றை வேறு செய்தலாவது, அவை இவ்வுலகிற் சரித்த நிலையினின்றும் வேறுதன்மையாகச் செய்தல்.

ஊன் வேறு செய்தல் - பசு கரணங்கள் பதி கரணங்களாகச் செய்தல் பகல் விளக்குப் போல அருளொளியில் அடங்கச் செய்தல். உயிர் வேறு செய்தல் - மாயா கருவிகளால் அறிந்து ஏகதேவப் படாமல் அருளொளியில் அடங்கி வியாபகமாக அறியச் செய்தல்."

"முடியேன் இனிப் பிறவேன் பெறின் மூவேன்
முக்கண்மூர்த்தி" (7-1-4)

என நம்பியாரூரர் அருட்டுறையிறைவரை நோக்கிப் போற்று கின்றார். இத்திருப்பாடல் தொடரில் "நினக்குத் தொண்டு பட்ட அடியேன் இனி இறக்கமாட்டேன், பிறக்க மாட்டேன் உடம்பு முதுமையடைய மாட்டேன்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதலால்

அவர் இறைவனருளாற் பெற்ற பேறுசாவா மூவாப் பெருவாழ்வு என்பது நன்கு தெளியப்படும்.

"உலகிற் சாவாதவர் பிறவாதவர் தவமேமிக வுடையார்
மூவாதபன் முனிவர் தொழும் முதுகுன்று" (1-12-6)

என ஆளுடையபிள்ளையார் திருமுதுகுன்றத்தில் இறைவனை வழிபட்டு வாழும் பெருந்தவச் செல்வர்களாகிய சித்தர்களைச் சிறப்பித்துரைக்கின்றார். இத்தலத்தில் வாழும் முனிவர்கள் சாவாமையையும் பிறவாமையையும் உடையராய் முதுமை யடையாத திருமேனியுடன் கூடி முதுகுன்றப் பெருமானை வழிபட்டு மரணமிலாப் பெருவாழ்வு வாழ்கின்றார்கள் என்பது மேற்குறித்த சம்பந்தர் தேவாரத்தால் நன்கு புலனாகின்றது.

"விரை மலரோன் செங்கண்மால் ஈசன் என்னும் மூவராய முதல் ஒருவானகிய இறைவன், திருமுதுகுன்றத்தில் தேவராயும், அசுரராயும், சித்தராயும் செழுமறை சேர் நாவராயும் நில முதல் ஐம்பூதங்களாகியும் கலந்து நின்று அருள் புரியும் திறத்தினை விளக்குவது,

"தேவராயும் அசுரராயுஞ் சித்தர் செழுமறைசேர்
நாவராயும் நண்ணு பாரும், விண், எரி, கால், நீரும்
மேவராய விரைமலரோன் செங்கண்மால் ஈசன் என்னும்
மூவராயமுத லொருவன் மேயதுமுதுகுன்றே" (1-53-1)

எனவரும் ஆளுடையபிள்ளையார் அருளிய பாடலாகும்.

மூவா உடம்பினராகிய முனிவர்கள் திருமுதுகுன்றப் பெருமானை அன்பினால் நெஞ்சம் நெகிழ்ந்துருகிப் போற்றுந் திறத்தினையும், ஐம்புலன் செற்ற அவர்கள் மோனிகளாய்த் தனித்திருந்து தவம்புரியும் இயல்பினையும்,

தேவாசிறியோம் பிழையைப் பொறுப்பாய் பெரியோனே
ஆவா என்றங் கடியார் தங்கட் கருள்செய்வாய்
ஓவா வுவரி கொள்ள வுயர்ந்தா யென்றேத்தி
மூவா முனிவர் வணங்கும் கோயில் முதுகுன்றே, (2-64-1)

எனவும்

ஞானிகளாயுள்ளார்கள் நான்மறையை
முழுதுணர்ந்தைம் புலன்கள் செற்று

மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
தவம் புரியும் முதுகுன்றமே. (1-131-10)

எனவும் வரும் திருப்பாடல்களில் ஆளுடையபிள்ளையார் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளமை இங்கு நினைத்தற்குரியதாகும்.

இங்ஙனம் முனிவர்கள் விரும்பிப் போற்றும் முழு முதற் பொருளாகிய முதுகுன்றப் பெருமான் தன்னை வழிபடும் மார்க்கண்டேயர் முதலிய முனிவர்கட்கு, என்றும் இறவாத பெருவாழ்வினராய் நிலமிசை நீடு வாழ்தல் வேண்டி அவர்தம் வாழ்நாள் மேல்வரும் கூற்றின் ஆற்றலை மாற்றித் தடுக்கும் அருட்செயலை,

"முனிவர்க்கு அருங்கூற்றைக் குமைத்த நம்பி"
(நம்பி என்ற திருப்பதிகம் -5)

என நம்பி ஆரூரர் குறித்துள்ளமை திருமுதுகுன்றத்தில் சாவாதவர் பிறவாதவர் தவமே மிகவுடையார் மூவாதபன் மனிவர்கள் வாழ்ந்த செய்தியினை வலியுறுத்தல் காணலாம்.

உடம்போடு கூடிவாழும் உயிர்கட்கு அவ்வுடம்பை விட்டு இறத்தலாகிய சாதலைக் காட்டிலும் துன்பந் தருவது பிறிதொன்று மில்லை என்பார்,

"சாதலின் இன்னாதது இல்லை" (குறள் - 230)

என்றார் திருவள்ளுவர். இவ்வாறு சாதலால் வருந் துன்பத்தினை மனவுணர்வு படைத்த மாந்தர்கள் தாம் மேற்கொண்டு செய்யும் தவத்தின் ஆற்றலால் மாற்றி இவ்வுலகில் இறவாநிலையை அடைதல் கூடும் என்னும் உண்மையினை,

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. (குறள். 269)

எனவரும் திருக்குறளில் தெய்வப் புலவர் வற்புறுத்திக் கூறியுள்ளமை காணலாம்.

உலகமக்கள் தாம் செய்யும் தவமுயற்சியால் ஊழையும் வென்று இவ்வுலகில் அழியாது நிலை பேறுடைய உடம்பினராய் நெடுங்காலம் வாழ்தற்குரிய வண்ணம் எண்வகைச் சித்திகளும் கைவரப்பெற்று நிலமிசை நீடுவாழும் நெறியினை உலகினர்க்கு

அறிவுறுத்திய பெருமை தமிழ் நாட்டுச் சித்தர் கணத்தார்க்குரிய தனிச் சிறப்பாகும். இத்தகைய சித்தர் கணத்தாருள் குருவாகத் திகழ்ந்தவர் திருமூலதேவர் என்பது அறிஞர் பலரும் நன்கறிந்த செய்தியாகும்.

சித்தர்கணத் தலைவராகிய திருமூலர் சிவபெருமானைப் போற்றி அம்முதல்வன் திருவருளால் எண்வகைச் சித்திகளும் கைவரப் பெற்ற சிவயோகிகளாகிய சித்தர்கள் பெற்ற மரணமிலாப் பெருவாழ்வாகிய இறவாப் பெருநிலையினைப் பெறுதற்குரிய நெறி முறையினையும் அந் நெறியாற் பெறுதற்குரிய பயனையும்,

பெற்றார் உலகிற் பிறியாப் பெருநெறி
பெற்றார் உலகிற் பிறவாப் பெரும் பயன் (திருமந்திரம் - 132)

எனவும்

ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரித்துக்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக்
கூற்றை யுதைக்கும் குறியது வாமே. (திருமந்திரம் 571)

எனவும்

இக்கை வலக்கை இரண்டையும் மாற்றி
துதிக்கையால் உண்பார்க்குச் சோரவும் வேண்டாம்
உறக்கத்தை நீக்கி உணரவல்லார்கட்கு
இறக்கவும் வேண்டாம் இருக்கலுமாமே. (திருமந்திரம் - 801)

எனவும்

நாவின் நுனியை நடுவே சிவிறிடிற்
சீவனும் அங்கே சிவனும் உறைவிடம்
மூவரும் முப்பத்து மூவரும் தோன்றுவர்
சாவதுமில்லை சதகோடியூனே. (திருமந்திரம் - 803)

எனவும் வரும் திருமந்திரப் பாடல்களில் விரித்து அருளிச் செய்துள்ளமை காணலாம். இங்கு எடுத்துக் காட்டப் பெற்ற திருமந்திரப் பாடல்கள் மக்கள் மரணமிலாப் பெரு வாழ்வினைப் பெறுதற்கு இன்றியமையாத சாகாக் கல்வியின் விளக்கமாக அமைந்துள்ளமை அறிஞர்களால் ஊன்றி நோக்கற் பாலதாகும்.

*சைவ சமயகுரவர் நால்வரும் தாம் பெற்றிருந்த ஊனுடம்பு இறைவன் திருவருளால் மாயா காரியமாகிய தன்மையினின்றும் நீங்கித் தூய ஒளியுடம்பாய் மாறிய நிலையில் வீடுபேற்றினை அடைந்தார்கள் என்பது அவர்களது வரலாறுகளால் இனிது புலனாகும். திருநல்லூர்ப் பெருமணப்பதியில் (ஆச்சாள்புரம் என வழக்கும் ஊரில்) நம்பியாண்டார் நம்பியின் திருமகளை மணந்த ஆளுடைய பிள்ளையார், தம் திருமணங்காண வந்தோர் அனைவரும் தாம் பெற்றுள்ள ஊனுடம்புடனே நல்லூர்ப் பெருமணத் திருக் கோயிலில் தோன்றிய இறைவனது அருட்பெருஞ் சோதியிற்புகத், தம் மனைவியாரோடும் அதனை வலம் வந்து அச்சோதியில் புகுகின்றவர், ஆன்மபோதம் ஒடுங்கிய நிலையில் இறைவனுடன் ஒன்றியுடனாகும் வீடுபேற்றினை அடைந்தார் என்ற செய்தியினை,*

காதலியைக் கைப்பற்றிக்கொண்டு வலஞ்செய்தருளித்
தீதகற்ற வந்தருளும் திருஞான சம்பந்தர்
நாதன்எழில் வளர்சோதி நண்ணியத னுட்புகுவார்
போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி யுடனானார்.

(பெரிய - சம்பந்தர் - 1253)

*எனவரும் திருப்பாடலில் சேக்கிழார் பெருமான் தெளிவாகக் குறித்துள்ளார்.*

*ஆண்ட - அரசாகிய அப்பரடிகளார் திருப்புகலூரில் உழவாரத் திருப்பணி செய்துகொண்டிருக்குங்கால் தம்முடைய மன முதலிய அகக் கருவிகள் உலகியற்பொருள் களிற்புறத்தே செல்லுதலை ஒழிந்து தம்வசம் அடங்கிய நிலையில் 'எண்ணுகேன் என் சொல்லி யெண்ணுகேனோ எம்பெருமான் திருவடியே எண்ணினல்லால்' எனத் தொடங்கும் திருத்தாண்டகத் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றிப் 'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்' எனப் புகன்று தம்முடைய உடம்பு நண்ணரிய சிவானந்த ஞான வடிவேயாகி ஒளியுருப்பெற்ற நிலையில் திருப்புகலூர் அண்ணலார் சேவடிக்கீழ் அமர்ந்தருளினார் என்பதனை,*

மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக் கீழ் ஆண்டவர சமர்ந்திருந்தார்.

(பெரிய - திருநாவு - 427)

*எனவரும் திருப்பாடலில் அருண்மொழித்தேவராகிய சேக்கிழார்*

தெளிவாகக் குறித்துள்ளமை காணலாம். இத்திருப்பாடலில் குறிக்கப்பட்ட திருநாவுக்கரசரது முத்தி நிலையைச் சிவக்கவி மணியவர்கள் பின்வருமாறு விளக்குவர்;

"அஞ்ஞான்று தூயவெண்ணீறுதுதைந்த பொன் மேனி முதலியனவாக உலகர் கண்டு கொண்டிருந்த நாயனாரது திருவுருவம் என்னவாயிற்று எனின், கருப்பூரச் சோதி போலக் கரைந்து இறைவனது அருள்ஒளி நிறைவினுக்குள் கலந்ததென்க."

நன்தனார் : 'உலகுய்ய நடமாடும் எல்லையினைத் தலைப்பட்டார் யாவர்களும் கண்டிலரால்' என்றதும் (பெரிய - திருநாளைப்போவார் - 35)

மணிவாசகனார் - "இத்திருவாசகத்துக்குப் பொருளாவர் இவரே என்று ஆனந்தப் பெருங் கூத்தரைக் கை காட்டித் தம் முருவங் காட்டாமல் மறைந்தார்" என்றதும் இங்கு வைத்து நோக்கத்தக்கன. "பூம்புகலூர் மேவிய புண்ணியனே உன்னடிக்கே போதுகின்றேன்" என்று சொல்லிக் கொண்டு புகலூர்ப் பெரு மானது அருள் நிறைவுக்குள் உலகர் காணாவகை (அப்பர்) உருக்கரத்து மறைந்தனர் என்பதாம்" என்பது சிவக்கவிமணியவர்கள் தரும் விளக்கமாகும். இனி நம்பியாரூரராகிய சுந்தரரும் அவர்தம் தோழர் சேரமான் பெருமாளும் தம்முடம்பினைக் களையாமல் அவ்வுடம் புடனேயே திருக்கயிலாயத்தை யடைந்தார்கள் என்ற செய்தி முன்னர் விளக்கப்பெற்றது. அறிவினாற் சிவனேயாகிய மணிவாசகப் பெருந்தகையார் தாம் பாடிய திருவாசகத்துக்குப் பொருள் வினவிய தில்லை வாழ் அந்தணர் முதலிய அன்பர்களுக்கு, திருவாசகத்துக்குப் பொருளாவார் தில்லைச் சிற்றம்பலவ ராகிய இவரே எனக் கையாற்சுட்டித் தம்முடைய பசுகரணங்கள் எல்லாம் பதிகரணங் களாக மாறிய நிலையில் தமது உடம்புடன் தில்லைச் சிற்றம் பலமாகிய ஞானவெளியில் கலந்து மறைந்தருளினார் என்பதும், தில்லைப் பெருமான் திருவாதவூரடிகளைப் பாலுடன் விரவிய நீர்போலத் தமது திருவருள் விளக்கத்துள் அடக்கிக் கொண்டருளினார் என்பதும் அடிகளது முத்திப்பேறு பற்றிய வரலாறாகும். இச் செய்தி,

"செய்காட்டும் கமுகடவித் தில்லையுளார் பொருள் கேட்கக்
கைகாட்டித் தம்முருவங் காட்டாமல் மறைந்தாரைப்
பைகாட்டும் பேரரவப் பணியுடையார் தமக்கன்பு
மெய்காட்டிப் பாலுடனே மேவியநீ ராக்கினார்"

(திருவாதவூரடிகள் புராணம் திருவடி பெற்ற சருக்கம் - 29)

எனவரும் திருவாதவூரடிகள் புராணத்தால் நன்கு தெளியப்படும். எனவே சைவ சமய குரவர் நால்வரும் செம்பு இரத குளிகையினாற் செழும் பொன்னாக மாறியது போன்று தாம் இவ்வுலகிற் பெற்றிருந்த ஊனுடம்பு இறைவனது அருளால் தூய ஒளியுடம்பாய் மாறிய நிலையில் இறைவனது திருவருள் ஒளியிற்கலந்து வீடு பெற்றார்கள் என்பது நன்கு தெளியப்படும்.

சிவயோக நெறியில் ஒழுகியவர் ஔவையார். அவர் அருளிய குறள், வீடு பேற்று நெறியினை விளக்கும் முறையில் அமைந்த ஞான நூலாகும். துரிய நிலையில் நின்று சுடரொளிப் பிழம்பாகிய சோதிப் பொருளைக் காணலுற்றார்க்கு, இறம்பும் பிறப்பும் அற்ற பேரின்ப நிலை வந்து எய்தும் எனவும், சிவயோக நிலையில் நின்று ஐம்பொறி வழிகளையடைத்துச் செம்பொருளை இடைவிடாது தியானிக்கும் தவச்செல்வர்கள் நரைதிரையின்றித் துஞ்சலில்லா நல்லவுடம்புடன் திகழ்வார்கள் எனவும், அவர்களது உடம்புக்குச் சாவில்லை எனவும் அறிவுறுத்தும் முறையில் அமைந்தன.

துரியங்கடந்த சுடரொளியைக் கண்டால்
மரணம் பிறப்பில்லை வீடு. (218)

உரைசெயும் ஓசை உரைசெய் பவர்க்கு
நரைதிரை யில்லை நமன். (224)

வாக்கு மனமு மிறந்த பொருள்காணில்
ஆக்கைக் கழிவில்லை யாம். (226)

அஞ்சு புலனின் வழியறிந்தார் பின்னை
துஞ்சுவ தில்லை யுடம்பு. (232)

நாபி யகத்தே நலனுற நோக்கிடில்
சாவது மில்லை யுடம்பு. (233)

எனவரும் ஔவை குறளாகும்.

இங்ஙனம் யோகநெறியில் செம்பொருளைச் சிந்தித் துணரும் பயிற்சியினால் இறவாப் பெருநிலையை அடைவேத சாகாக் கல்வியாகும் என்பது,

‘சாகாதிருப்பதற்குத் தான் கற்ற கல்வியன்றோ
வாகான மெய்க்கல்வி வருத்த நீ கல்மனமே’

எனவரும் இடைக்காட்டுச் சித்தர் பாடலால் இனிது புலனாகும்.

பிறவாதிருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்துவிட்டால்
இறவாதிருக்க மருந்துண்டுகாண் இது எப்படியோ
அறமார் புகழ்த்தில்லை யம்பல வாணர் அடிக்கமலம்
மறவாதிருமனமே அதுதான் நன் மருந்துனக்கே.

*எனப்பட்டினத்தாரும்,*

'இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகி' (திருப்புகழ் - 228)

'மரணப்ரமாதம் நமக்கில்லையாம்' (கந்தரலங்காரம் - 21)

*என அருணகிரிநாதரும் அருளிய பொருளுரைகள் இறைவனருளால் இவ்வுலகில் மரணமிலாப்பெருவாழ்வினை யடைந்தவர்கள் பெற்ற அநுபவநிலையைப் புலப்படுத்துவனவாகும்.*

*திருமூலர் வழிமரபில் வந்த மௌனகுருவின் அருளுபதேசம் பெற்றுச் சித்தர் கணங்களைக் கண்டு வழிபடும் பேறு பெற்ற தாயுமானப் பெருந்தகையார், சித்தர் நெறியின்படி, முத்தியிலும் மூவகைத்தேக சித்திகள் உண்டு எனவும், அத்தகைய சித்தியினைப் பெற்ற சித்தர்கள் எண்ணற்றவர்களாய் உள்ளார்கள் எனவும் கூறும் முறையில் அமைந்தது*

'முக்தியிலும் தேகம் இசை மூவிதமாம் சித்தி பெற்றோர்
எத்தனை பேர் என்றுரைப்ப தெந்தாய் பராபரமே' (பராபரக்கண்ணி 209)

*எனவரும் பராபரக் கண்ணியாகும். இதன்கண் மூவிதமாம் சித்தி என்பதற்கு, 'அருவசித்தி, உருவசித்தி, அருவுருவ சித்தி ஆகிய மூன்று விதமாகிய சித்தி' என விளக்கந்தருவர் அட்டாவதானம் பூவை கலியாண சுந்தரமுதலியார், மேற்குறித்த மூவகைச் சித்திகளுள்,*

'வெளியாய அருளில் விரவும் அன்பர் தேகம்
ஒளியாய்ப் பிறங்கியதும் உண்டோ பராபரமே' (பராபரக்கண்ணி 190)

*என அருவுருவ சித்தியின் இயல்பினையும்,*

"சத்தாகி நின்றோர் சடங்கள் இலிங்கமென
வைத்தாரும் உண்டோ! என் வாழ்வேபராபரமே" (பராபரக்கண்ணி 244)

*என அருவுருவ சித்தியின் இயல்பினையும்,*

"சித்த நிருவிகற்பஞ் சேர்ந்தார் உடல் தீபம்
வைத்த கர்ப்பூரம் போல் வயங்கும் பராபரமே" (பராபரக்கண்ணி 245)

என அருவசித்தியின் இயல்பினையும் தாயுமான அடிகள் விளக்கி யுள்ளமை இங்கு நினைக்கத் தகுவதாகும். இங்கு குறிப்பிடப் பெற்ற மூவகைச் சித்திகளுள் நம்பியாரூரர் முத்திநிலை உருவசித்தியையும், நாவுக்கரசர் முத்திநிலை அருவுருவசித்தி யினையும், மாணிக்க வாசகரது முத்திநிலை அருவசித்தியினையும் குறிக்கும் எனக் கூறுதல் மரபு.

அருட்பிரகாச வள்ளலார் உலகில் பரப்ப எண்ணிய சமரச சுத்த சன்மார்க்க நெறியானது சைவ சமயத்திற் கால்கொண்டு வளர்ந்தது என்பது திருவருட்பாவில் தோய்வுள்ள அனைவருக்கும் ஒத்த முடிவாகும்.

சைவ சமயமானது எல்லாப் பாசங்களையும் அறுத்து இறைவனுடைய திருவடியில் பிரிவற ஒன்றியிருத்தலாகிய ஈறிலாப் பேரின்பமாகிய முத்தி நெறியையும் உயிர்க்குயிராகிய இறைவனைச் சிவயோக நெறியில் நின்று வழிபட்டு எண்வகைச் சித்திகளும் கைவரப் பெற்று இப் பிறவியில் பெற்றுள்ள உடம்பினை அழியாத ஒளியுடம்பாமாற்றிக் கொண்டு உலகில் எல்லா இடங்களுக்கும் நினைத்த அளவிலே விரைந்து சென்று மன்னுயிர்களின் துன்பம் துடைத்து இன்பம் நல்குதற்குரிய சித்திநெறியையும் தன்பாற் கொண்டதாகும். எனவே தேவர், முனிவர், சித்தர், வேந்தர் முதலிய பல திறத்தவர்களும் இச்சமயத்தினை மேற்கொண்டு சித்தியையும், முத்தியையும் பெறுவாராயினர். இவ்வுண்மை,

விண்ணவர் இந்திரன் முதலோர் நாரதாதி
விளங்கு சப்தரிஷிகள் கன வீணைவல்லோர்
எண்ணரிய சித்தர் மனுவாதி வேந்தர்
இருக்காதி மறைமுனிவர் எல்லாம் இந்தக்
கண்ணகல் ஞாலம் மதிக்கத்தானே உள்ளங்
கையில் நெல்லிக்கனிபோலக் காட்சியாகத்
திண்ணியநல் லறிவாலிச் சமயத்தன்றோ
செப்பரிய சித்தி முத்தி சேர்ந்தாரென்றும்

(தாயுமா - ஆகா - சிதம்பரரகசியம் -8)

எனவரும் தாயுமான அடிகளார் வாழ்மொழியால் இனிது புலனாகும்.

உலகில் மரணமிலாப் பெருவாழ்வு பெற்று மன்னுயிர் களுக்கு நலஞ்செய்தலையே தமது வாழ்க்கை நோக்கமாகக் கொள்ளும்

சித்தி நெறியாளர்க்கும், "எய்த்தேன், நாயேன் இனி இங்கிருக்கில்லேன் இல்வாழ்க்கை வைத்தாய், வாங்காய் வானோரறியா, மலர்ச் சேவடியானே". (திருவாசகம்) என உலக வாழ்வினை வெறுத்து இறைவன் திருவடியையே விரும்பிய முத்தி நெறியார்க்கும் சைவ சமயமே சார்பாக உள்ளதென்பது மேற்குறித்த தாயுமானார் பாடலால் நன்கு விளங்கும்.

"அக அனுபவமே உண்மை, உபயவகையாகிய அபர மார்க்கம் தேகபூஷணாதி காமிய சித்தியைத் தரும் உண்மை, நீக்கமற்ற சொரூபஞானத்தைத் தருமென்றறிக. மேற்படி உபாயங்களை ஒருவாறு தெரிவிப்பதும் சைவ சமயம் தவிர வேறு எவ்வித சமயங்களிலும் இல்லை. இந்த வேதாகமங்களில் மாத்திரம்தான் ஏமசித்தி, ஞான சித்தி முதலிய சித்திகளைச் சொல்லி இருக்கின்றது. மற்றைய எந்தச் சமயங்களிலும் மேற்படி சித்திகளையும், சாகாக் கல்வியையும், சொல்லவில்லை" என வள்ளலார் கூறியிருப்பதும் இக்கருத்தை வலியுறுத்தல் காணலாம். சைவசமயத்துள் விரித்துரைக்கப்படும் முத்திநெறி, சித்திநெறி, என்னும் இருவகை நெறிகளுள், முத்திநெறியினைச் சாதனமாகவும், சித்திநெறியினை அதனாற் பெறத்தக்க முடிந்த பயனாகவும், மேற்கொண்டவர் அருட்பிரகாச வள்ளலார் ஆவர். இவ்வாறு தாம் மேற்கொள்ளு தற்கேற்ற உள்ளுணர்வைத் தூண்டியவர், அருட்பெருஞ்சோதி ஆண்டவரே என்பதனை,

முத்தி என்பது முன்னுறு சாதனம்,
அத்தக வென்ற அருட்பெருஞ்சோதி. (அகவல் 249-250)

எனவும்

சித்திஎன்பது நிலை சேர்ந்த அனுபவம்
அத்திறம் என்ற என் அருட் பெருஞ்சோதி (அகவல் 251-252)

எனவும் வரும் தொடர்களில் வள்ளலார் குறித்துள்ளமை இங்கு நோக்கத் தகுவதாகும்.

தமிழ்ச் சான்றோர்களால் நெடுங்காலமாக மேற்கொள்ளப் பெற்று வரும் சன்மார்க்க நெறியினை இவ்வுலகில் என்றும் இறவாப் பெருநெறியாகிய சாகாக் கலையுடன் தொடர்புபடுத்தி யதன் மூலம் உலகமக்களுக்கு மரணமிலாப் பெருவாழ்வை அறிவுறுத்த வந்த அருளாளர் வடலூர் வள்ளலார் எனக் கூறுதல் மிகவும் பொருத்த முடையதாகும்.

திருமூலர் திருமந்திரத்திலும், ஆளுடையபிள்ளையார் ஆளுடைய அரசு, ஆளுடைய நம்பி பாடியருளிய தேவாரத் திருமுறைகளிலும் சிறப்பாக ஆளுடைய அடிகளாகிய மாணிக்க வாசகர் அருளிய திருவாசகப் பனுவலிலும் தோய்ந்த உள்ள முடைய இராமலிங்க அடிகளாருக்கு அப்பெருமக்கள் அறிவுறுத்திய சன்மார்க்க நெறியின் பயனாகிய சிவானுபவமும் அருளனுபவமும் உயிரிரக்கமும் இயல்பாகத் தோன்றுவன ஆயின. இவற்றின் பயனாக இவ்வுலக வாழ்வில் மக்கட்குலத்தார்க்கு உளவாகிய பசி, பிணி, பகை ஆகிய துன்பங்களையும், மக்களது அறியாமையினால் விலங்கு பறவை முதலிய சிற்றுயிர்கள்படும் துன்பங்களையும் அகற்றுதற்குரிய ஆற்றலைத் தமக்கு வழங்குமாறு இறைவனை வேண்டி நெஞ்சம் நெக்குருகிப் போற்றினார். உயிர் இரக்கமே உருவாகிய இராமலிங்க அடிகளார், உலக நலங்கருதி வேண்டிய விண்ணப்பத்தினை உளங் கொண்ட எல்லாம் வல்ல சிவபெருமான் அடிகளாருக்குக் கனவிலும், நனவிலும், ஒளி நினைவிலும் நாளும் தோன்றி முத்தி நெறியின் உண்மையை உணர்த்தி மன்னுயிர்க்கு நலஞ்செய்யும் சித்திநெறியை வழங்கி யருளினார் என்னும் செய்தி அடிகளார் பாடியருளிய திருவருட்பா விலுள்ள அகச்சான்றுகளால் வலியுறுத்தப் பெறுகிறது.

சில்வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவுடைய மக்கள், உடம்பின் நிலையாமையையுணர்ந்து தம் உடம்பு மூவாமலும் சாவாமலு மிருத்தற்குரிய வழிமுறைகளை மேற்கொண்டொழுகுதல் வேண்டும். உடம்பு இவ்வுலகில் நிலை பெற வாழும் வன்மையைப் பெற்றால் அதன் பயனாக அவ்வுடம்பில் நிலைபெற்றுள்ள உயிரின் அறிவும் அன்பு முதலிய பண்புகளும் வளம் பெற்று நிறைவடைதல் இயலும். எனவே இவ்வுடம்பு பசிபிணி முதலியவற்றால் மெலிவடைந்து இறவாதபடி இதனை நிலைபெறச் செய்வது சன்மார்க்க நெறியினை மேற்கொண்ட சித்தர்களின் தலையாய கடமையாயிற்று.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ் ஞானம் சேரவுமாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே. (திருமந்திரம் - 472)

எனவரும் திருமூலர் வாய்மொழி உடம்பினை அழியாது காக்க வேண்டியதன் இன்றியமையாமையைப் புலப்படுத்துவதாகும்.

எனவே சன்மார்க்க நெறியில் நின்றோர் கற்கத்தக்க கல்வி "சாகாக்கலை" என்பது நன்கு பெறப்படும். உடம்பு நெடுங்காலம் நிலை பெறுதற்கு ஐம்புலனடக்கம் இன்றியமையாததாகும்.

சாகாக்கல்வியை விரும்பும் சன்மார்க்கருக்கு எல்லா உயிர் களிடத்தும் எப்பொருள்களிலும் கலந்து விளங்குவது சிவபரம் பொருள் ஒன்றேயென எங்கும் சிவமாகக்காணும் ஒருமையுணர்வு மிகவும் இன்றியமையாததாகும். ஐம்புலன்களையும் அடக்கியாளும் உரன் என்னும் திண்மை வேண்டும். பிறர் இட்ட பணியைச் செய்யும் அடிமையுணர்வின் நீங்கிச் சீவசுந்தர முடையராய்த் தம் உழைப்பால் வரும் தூய உணவே அவர் உண்ணத் தக்க பொருந்திய உணவாகும். இவ்வுண்மையினை அறிவுறுத்துவது,

ஒன்றாகக் காண்பதே காட்சி; புலனைந்தும்
வென்றான்தன் வீரமே வீரம் - என்றானும்
சாவாமற் கற்பதே கல்வி; தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண். (ஔவையார் - தனிப்பாடல்)

எனவரும் ஔவையார் பாடலாகும்.

வள்ளலார் அறிவுறுத்திய சன்மார்க்க நெறியிலும் ஔவையார் பாடலில் கண்டவாறு நால்வகைக் கருத்துகள் இடம் பெற்றுள்ளன. அவையாவன (1) சாகாக் கல்வி (2) ஒன்றே சிவம் என அறியும் அறிவு, (3) ஐந்துமலங்களையும் வென்றவர்களது வல்லபம், (4) வேகாக்கால், போகாப்புனல், சாகாத்தலை ஆகியவற்றின் நுட்பத் தினை யுணர்ந்து, எல்லாவற்றையும் விளைவித்தலாகிய சித்தித் திறம் என்னும் நான்குமாகும். இந் நால்வகைப் பொருள்களையும் எல்லாம் வல்ல இறைவனே குருவாக எழுந்தருளி வந்து உபதேசித்து இதுவே நீ பெற்ற சுத்த சன்மார்க்கத்தின் மரபாகுமென வள்ளலார்க்கு அறிவுறுத்தி யருளினான். இச்செய்தியினை

சாகாத கல்வியே கல்வி ஒன்றே சிவம்
　　தான் என அறிந்த அறிவே
தகும் அறிவும் மலம் ஐந்தும் வென்றவல்லபமே
　　தனித்த பூரண வல்லபம்
வேகாத காலாதி கண்டு கொண்டு எப்பொருளும்
　　விளைய விளைவித்த தொழிலே

மெய்த் தொழிலதாகும் இந்நான்கையும் ஒருங்கே
　　வியந்தடைந் துலக மெல்லாம்
மாகாதலுற எலாம் வல்ல சித்தாகி நிறை
　　வானவரமே இன்பமாம்
மன்னும் இது நீ பெற்ற சுத்த சன்மார்க்கத்தின்
　　மரபென்றுரைத்த குருவே
தேகாதிமூன்றும் நான் தருமுன் அருள்செய்தெனைத்
　　தேற்றி அருள் செய்த சிவமே
சிற்சபையில் நடுநின்ற ஒன்றான கடவுளே
　　தெய்வ நடராச பதியே. (திருவருட்பா - 3678)

*எனவரும் பாடலால் வள்ளலார் விளக்கியுள்ளமை காணலாம்.*

சாகாத்தலை என்பது - சிவாக்கினி
வேகாக்கால் என்பது - காரணவாயு
போகாப்புனல் என்பது - காரணோதகம்

*இவை மூன்றும் சாகாத கல்வியைத் தெரிவிக்கும் என்பதும் அடிகளார் தரும் பொருள் விளக்கம்.*

*நாம் பெற்ற உடம்பு இறவாதிருக்க வேண்டுமானால் சிவயோகத்தால் மூலாக்கினியை உள்ளிருந்தெழுப்பி உள்ளே மதி மண்டபத்தின் அமுதம் உருகி ஒழுக அதனைப் பருகி, குண்டலினி சத்தியாகிய அம்மையால் வளர்க்கப் பட்டு நரை திரையின்றி வளரும் அழியாத உடம்பினைப் பெறுதலே சாகாக் கல்வி எனப்படும்.*

“இன்னம் பிறப்பதற்கிடமெல்லில் இவ்வுடலம்
　　இறவாதிருப்ப மூலத்
தெழுமங்கி அமிர்தொழுக மதி மண்டலத்திலுற
　　என்னம்மை குண்டலினிபால்
பின்னம் பிறக்காது சேயென வளர்ந்திடப்
　　பேயேனை நல்க வேண்டும்” (தாயு-சச்சிதா -9)

*எனவும்*

‘கால்பிடித்து மூலக்கனலை மதிமண்டலத்தின்
மெலெழுப்பில் தேகம் விழுமோ பராபரமே’ (-தாயு பராப - 156)

*எனவும்*

*வரும் தாயுமானார் வாய்மொழிகள் மேற்குறித்த சாகாக் கல்வியின் பயனை விரித்துரைப்பனவாகும்.*

"மதிமண்டலத்தமுதம் வாயார உண்டே" (திருவருட் - 3832)

'இந்தார் அருளமுதம் யானருத்தல்' (திருவருட் 3833)

'சாகா அருளமுதம் நான் அருந்தி' (திருவருட் - 3834)

'அருளோங்கு தண்ணமுதம்' (திருவருட் - 3835)

'வானோர்க்கினிதெனவே மாமறைகள்
சாற்றுகின்ற ஞானோதய அமுதம்' (திருவருட். 3836)

'எல்லாமும் வல்லசித்தென் றெல்லா மறைகளும்
சொல் நல்லார் அமுதமது' (திருவருட் 3837)

'ஏழ்நிலைக்கு மேற்பால் இருக்கின்ற
தண்ணமுதம்' (திருவருட். 3838)

'ஈன உலகத்திடர் நீங்கி இன்புறச்செய்
ஞான அமுதம்' (திருவருட் 3839)

'திரையோதசத்தே திகழ்கின்ற ஒன்றே
வரையோது தண்ணமுதம்' (திருவருட் 3840)

'சோதிமலை வீட்டில் தூயதிரு அமுதம்' (திருவருட். 3841)

'இதுபதி இதுபொருள் இதுசுகம் அடைவாய்'
இதுவழி எனஎனக் கியல்புற உரைத்தே
'விது அமுதொடு சிவ அமுதமும்' அளித்தே
மேனிலைக் கேற்றிய மெய்ந்நிலைச் சுடரே
பொதுநடம் இடுகின்ற புண்ணியப் பொருளே!
புரையறும் உளத்திடைப் பொருந்திய மருந்தே
சதுமறை முடிகளின் முடியுறு சிவமே
தனிநட ராசஎன் சற்குரு மணியே! (திருவருட் - 3693)

*எனவரும் வள்ளலார் வாய்மொழிகள் தாயுமானவர் பாடலிற் குறிக்கப்பட்ட மதியமுதத்தின் இயல்பினை விளக்குவதோடு அதற்கு மேலான சிவ அமுதத்தின் சிறப்பினையும் விளக்குதல் அறிந்தின்புறத் தக்கதாகும்.*

உலக மக்களில் கற்றார்கல்லாதார் ஆகிய எல்லோரும் ஊழ்வயத்தால் மரணமுறுதல் கண்டு ஆற்றாவள்ளலார், சில்வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவினராகிய மக்கள் நோயற்ற வாழ்வும், நிறைந்த பேரறிவும் உடையவராய்த் தாம் இறைவன்பால் பெற்ற சித்தி நெறியின் ஆற்றல் கொண்டு இறவாமல் பிறவாமல் என்றும் மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்வதற்குரிய சாகாக் கல்வியினைச் சன்மார்க்க நெறியில் நின்று பரப்புதலையே தமது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டருளினார் என்பது அடிகள் பாடியருளிய திருவருட்பாப் பாடல்களினால் நன்கு புலனாகிறது.

நோயுற்றாரையும், இறந்தாரையும் கண்டு ஆற்றாத கௌதம புத்தர் இரக்க உணர்வுடையராய் மக்களது துன்பம் துடைத்தற்குரிய வழிமுறைகளைக் காணுதல் வேண்டித் தமது அரசபதவியை ஒதுக்கித் துறவு பூண்டாரென்பது நம் நாட்டின் பழைய வரலாறாகும். புத்தர் பெருமானைப் போலவே நோய்களினாலும், சாதலினாலும் மக்கள் படும் துயரத்தை மாற்றத் திருவுளங் கொண்ட இராமலிங்க வள்ளலார் எவ்வுயிர்க்குஞ் சார்பாய் அன்பலத்திலே அருள் நடம் புரியும் செம்பொருளாகிய இறைவனது திருவருளைப் பெற்று அரியவற்றையெல்லாம் எளிதில் செய்து முடிக்கும் சித்தித் திற முடையராய் உறக்கத்திலும், சாவிலும் தோய்ந்துகிடக்கின்ற மக்களை விழித்தெழச் செய்து மரணமிலாப் பெருவாழ்வில் வாழும் நெறிமுறைகளை அறிவுறுத்தியருளினமை சென்ற நூற்றாண்டில் தமிழகத்தில் நிகழ்ந்த புதிய வரலாறாகும்.

உயிர்க்குயிராகிய முழுமுதற் பொருளை உள்ளம் உருகி வழிபட்டால் எல்லாச் சித்திகளையும் பெற்று எல்லா உயிர்களுக்கும் நன்மைதரும் அரிய செயல்களை எளிதிற் செய்து முடிக்கலாம் என வள்ளலார் இறைவன் அருளால் பெற்ற சித்தித் திறத்தை மக்கள் எல்லோரும் பெறுதல் வேண்டும் எனத் தம்மேல் ஆணையிட்டுக் கூறும் முறையில் அமைந்தது,

> எல்லாம் செயல்கூடும் என்னாணை அம்பலத்தே
> எல்லாம் வல்லான் றனையே ஏத்து. (திருவருட்பா - 3267)

எனவரும் வள்ளலார் வாய்மொழியாகும்.

எல்லாம் வல்ல அருட்பெருஞ்சோதி ஆண்டவன் இவ் ஒரு பிறவியிலேயே தம்மைப் படிப்படியாகத் திருத்தச் சன்மார்க்க

நெறியில் உயர்த்தி இறவா இன்பப் பெருவாழ்வு பெறுதற்குரிய தேக மாற்றத்தையும் சித்தித்திறங்களையும் அன்பு, அருள், இன்ப அநுபவங்களையும் அருளிய செய்தியை அருட்பெருஞ்சோதி வள்ளலார் சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பப் பகுதியில் விரித்து விளக்கியுள்ளார்.

"உலகியற்கண் பொன் விஷய இச்சை, பெண் விஷய இச்சை, மண்விஷய இச்சை முதலிய எவ்விஷய இச்சைகளிலும் என்னறிவை ஓர் அணுத்துணையும் பற்று விக்காமல் எல்லா உயிர்களையும் பொதுமையில் நோக்கி எல்லா உயிர்களும் இன்பமடைதல் வேண்டும் என்னும் கருணை நன்முயற்சியைப் பெறுவித்துச் சுத்த சன்மார்க்கத் தனிநெறி யொன்றையே பற்றுவித்து எக்காலத்திலும் நாசமடையாத சுத்ததேகம், பிரணவ தேகம் 'ஞானதேகம் என்னும் சாகாக் கலானுபவ தேகங்களும், தன் சுதந்தரத்தால் தத்துவங்கள் எல்லாவற்றையும் நடத்துகின்ற தனிப் பெருவல்லபமும், கடவுள் ஒருவரேயென்றறிகின்றவுண்மை ஞானமும், தரும சித்தி, யோகசித்தி, ஞானசித்தி முதலிய எல்லாச் சித்திகளும் பெறுகின்ற அருட்பேறும் பெற்று வாழ்கின்ற பேரின்பப் பெருவாழ்வில் என்னை அடைவிப் பதற்குத் திருவுளங் கொண்டு அருட்பெருஞ் சோதியாகி நான் எவ்விதத்தும் அறிதற்கரிய உண்மைப் பேரறிவை யறிவித்தும், நான் எவ்விதத்தும் காண்பதற்கரிய உண்மைக் காட்சிகளைக் காட்டு வித்தும் நான் எவ்விதத்திலும் செய்வதற்கரிய உண்மைப் பெருஞ் செயல்களைச் செய்வித்தும் நான் எவ்விதத்தும் அடைவதற்கரிய உண்மைப் பெரு நன்மைகளை அடைவித்தும், நான் எவ்விதத்தும் அனுபவித்தற்கரிய உண்மைப் பேரனுபவங்களை அனுபவிப்பித்தும் எனது அகத்திலும், புறத்திலும் இடை விடாது காத்தருளியெனது உள்ளத்திலிருந்து உயிரிற்கலந்து பெருந்தயவாற் றிரு நடஞ்செய்வித் தருளுகின்றீர்' என அருட் பெருஞ்சோதி ஆண்டவரை நோக்கி வள்ளலார் கூறியற இப் பெருவிண்ணப்பத்தில் இறைவன் தமது ஊன் உடம்பினைச் சுத்ததேகம், பிரணவதேகம், ஞானதேகங்களாக முறையே மாற்றி, தத்துவங்கள் எல்லாவற்றையும் தன் சுதந்திரத்தால் நடத்துகின்ற வல்லபத்தையும், கடவுள் ஒருவரே என்ற உண்மை ஞானத்தையும் கரும சித்தி, யோகசித்தி, ஞானசித்தி முதலிய எல்லாச் சித்திகளையும் அவற்றால் அடைதற்குரிய உண்மைப் பேரனுபவங்களையும் வழங்கியருளிய அருள் திறத்தினை நம்மனோர் உணர்ந்து தெளியும்படி விரித்து விளக்கியுள்ளமை காணலாம்.

காற்றாலே புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக் கருவியாலே
கோளாலே பிறஇயற்றும் கொடுஞ் செயல்களாலே
வேற்றாலே யெஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்யளிக்கவேண்டு மென்றேன் விரைந்தளித் தான் எனக்கே
ஏற்றாலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்
எந்தையருட் பெருஞ்சோதி யிறைவனைச்சார்வீரே
(திருவருட்பா - 5450)

ஆராலும் அறிந்து கொளற்கரிய பெரும் பொருளே
அம்மே என் அப்பா, என் ஐயா, என் அரசே
காராலும் கனலாலும் காற்றாலும் ககனக்
கலையாலும் கதிராலும் கடலாலும் கடல்சூழ்
பாராலும் படையாலும் பிறவாலும் தடுக்கப்
படுதலிலாத் தனி வடிவம் எனக்களித்த பதியே
சீராலும், குணத்தாலும் சிறந்தவர் சேர் ஞான
சித்திபுரத் தமுதே என்நித்திரை தீர்ந்துதவே. (திருவருட்பா - 4636)

மன்னுகின்ற பொன் வடிவும் மந்திரமாம் வடிவும்
வான்வடிவும் கொடுத்தெனக்கு மணிமுடியுஞ் சூட்டிப்
பன்னுகின்ற தொழில் ஐந்தும் செய்திடவே பணித்து
பண்புற என் அகம்புறமும் விளங்குகின்ற பதியே
உன்னுகின்ற தோறும் எனக்குள்ளம் எலாம் இனித்தே
ஊறுகின்ற தெள்ளமுதே ஒருதனிப் பேர்ஒளியே
மின்னுகின்ற மணிமன்றில் விளங்கு நடத்தரசே
மெய்யும் அணிந்தருள்வோய் என் பொய்யும் அணித்தருளே
(திருவருட்பா - 4150)

ஊன உடம்பே ஒளி உடம்பாய் ஓங்கிநிற்க
ஞான அமுதெனக்கு நல்கியதே - வானப்
பொருட்பெருஞ் சோதி பொதுவில் விளங்கும்
அருட்பெருஞ் சோதியது. (4823)

சுத்த வடிவும், சுகவடிவும் ஓங்கார
நித்த வடிவும் நிறைந்தோங்கு - சித்தெனுமோர்
ஞான வடிவுமிங்கே நான்பெற்றேன் எங்கெங்கும்
தானவிளை யாட்டியற்றத் தான். (5503)

நானே தவம்புரிந்தேன் நம்பெருமான் நல்லருளால்
நானே அருட்சித்தி நாடடைந்தேன் - நானே
அழியா வடிவம் அவைமூன்றும் பெற்றேன்
இழியாமல் ஆடுகின்றேன் இங்கு. (513)

கூகாஎன அடுத்தோர் கூடிஅழாத வண்ணம்
சாகா வரம்எனக்கே தந்திட்டான் - ஏகாவ
னேகா எனமறைகள் ஏத்தும்சிற் றம்பலத்தான்
மாகா தலனாய் மகிழ்ந்து. (5510)

உலகமெல்லாம் போற்ற ஒளிவடிவனாகி
இலக அருள் செய்தான் இசைந்தே - திலகன்என
நானே சன்மார்க்கம் நடத்துகின்றேன் நம்பெருமான்
தானே எனக்குத் தனித்து. (5391)

விரைந்து விரைந்து விரைந்து படிகடந்தேன்
மேற்பால் அமுதம் வியந்துண்டேன்
கரைந்து கரைந்து மனம் உருகக்
கண்ணீர் பெருகக் கருத்தயர்ந்தே
விரைந்து ஞான மணம் பொங்க
மணி மன்றரசைக் கண்டு கொண்டேன்
திரைந்து நெகிழ்ந்த தோலுடம்பும்
செழும்பொன் உடம்பாய்த் திகழ்ந்தேனே. (5482)

*எனவரும் வள்ளலார் வாய்மொழிகள் அவர் இறைவரரு ளால் பெற்ற இறவாப் பெருநிலையின் இயல்பினை இனிது புலப்படுத்தல் காணலாம். இராமலிங்க வள்ளலார் தம் இளமைப் பருவத்திலேயே ஆளுடைய பிள்ளையாரைக் குருவாகக் கொண்டு திருவருள் ஞானம் பெற்றவரென்பது,*

உலகியல் உணர்வோர் அணுத்துணை யேனும்
உற்றிலாச் சிறிய ஓர் பருவத்
திலகிய எனக்குள் இருந்தருள் நெறியில்
ஏற்றவுந் தரமிலா மையினான்
விலகுறுங் காலத்தடிக்கடி ஏற விடுத்துப்பின்
விலகுறா தளித்தாய்
திலக நற்காழி ஞானசம்பந்தத் தெள்ளமுதாம் சிவகுருவே.
(திருவருட்பா. 3226)

*எனவரும் பாடலால் விளங்கும்.*

*தாம் உலகியல் உணர்வு சிறிதும் பெற்றிராத இளம் பருவத்திலே தமக்குக் குருவாகிய சம்பந்தப் பிள்ளையார் தம் உள்ளத்திலிருந்து தம்மை அருள் நெறியில் ஒழுகப் பணித்ததும் தமக்குப் போதிய பக்குவ மில்லாமையால் அந்நெறியில் விலக நேர்ந்தபோது விலகாதபடி அடிக்கடி உடனிருந்து நன்னெறிப் படுத்தியதும் ஆகிய செய்திகளை வள்ளலார் இப்பாடலில் குறித்துள்ளமை காணலாம்.*

*இறைவன் அருளால் உயிர்கள் பெறுதற்குரிய அனுபவம் உயிர் அனுபவம், அருளனுபவம், சிவஅனுபவம் என மூன்று வகைப்படும் என்றும், இம்மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர் புடையன வென்றும் ஞானசம்பந்தப் பிள்ளையார் வள்ளலார் உள்ளத்திலிருந்து அறிவுறுத்தி யருளினார் என்னும் இச்செய்தி,*

உயிரனுபவம் உற்றிடில் அதனிடத்தே
ஓங்கரு ளனுபவம் உற்றிடும் அச்
செயிரில் நல் அநுபவத்திலே சுத்த
சிவவனுபவம் உறும் என்றாய்
பயிலுமூவாண்டில் சிவைதரு ஞானப்
பால் மகிழ்ந்துண்டு மெய்ந்நெறியாம்
பயிர் தழைத்துறவைத் தருளிய ஞானசம்
பந்தன் என்றோங்கு சற்குருவே. (3227)

*எனவரும் பாடலால் புலனாகும்.*

*தத்துவப்படிகளை முறையே ஏறிக் கடந்து தத்துவங் கடந்த மேல் நிலையாகிய தூய நாதமாம் இடத்திலே சார்ந்ததன் வண்ணமாமியல்பினை உடைய ஆன்மாவாகிய நினது இயல்பினை நீ என்னும் உணர்வின்றிப் பொருந்தி நுகர்தல் உயிரனுபவமாகும் என்று இவ்வளவு வெளிப்படையாக ஆன்மாவாகிய எனது இயல்பினை என்னிடத்தே யிருந்தபடி விளக்கி என்னை எனக்குரிய அநுபவப் பொருளாக அளித்தனையல்லவா? மூவாண்டில் உமையம்மையார் அளித்த ஞானப்பாலைப் பருகி மெய்நெறியை விளக்கிய ஞானசம்பந்தன் என்னும் உயர்வுடைய குருவே எனப்போற்றும் நிலையிலமைந்தது;*

தத்துவநிலைகள் தனித்தனி ஏறித்
தனிப்பர நாதமாந் தலத்தே
ஒத்ததன்மயமாம் நின்னை நீயின்றி
உற்றிடல் உயிரனுபவம் என்

றித்துணை வெளியில் என்னை என்னிடத்தே
இருந்த வாறளித்தனையன்றோ
சித்தநற்காழி ஞான சம்பந்தச்
செல்வமே எனது சற்குருவே (3228)

*எனவரும் திருப்பாடலாகும்.*

*ஒப்பற்ற மேலான தூயநாத வெளியின் மேலே நினது உயிரியல்பை அருளின் வண்ணமாக்கிப் பிறவாற்றால் துளக்க மின்றி எக்காலத்து முள்ளதாய்த் தோன்றி மேலான பரம் பொரு ளின் உள்ளும் புறமுமாகி இனிமையே விளங்க ஒருவாற்றாலும் வெளிப்படுத்த வொண்ணாத இயல்புடையதாக இருந்ததே அருளனுபவமாகு மென்று அடியேனுக்கு அறிவுறுத் தருளினாய் ஞான சம்பந்தன் என்னும் குருமணியே! எனப் போற்றுமுகமாக அருளனுபவத்தின் இயல்பினை விரித்துரைப்பது,*

தனிப்பரநாத வெளியின் மேல்நினது
தன்மயம் தன்மயமாக்கி
பனிப்பிலா தென்றும் உள்ளதாய் விளங்கிப்
பரம்பரத் துட்புறமாகி
இனிப்புற ஒன்றும் இயம்புறா இயல்பாய்
இருந்ததே அருளனுபவம் என்
றனக்கருள் புரிந்தாய் ஞான சம்பந்தன்
என்னும் என் சற்குரு மணியே. (3229)

*எனவரும் திருவருட்பாவாகும்.*

*என்றும் அழிவின்றி உள்ளதாய் விளங்கும் ஞானப் பெரு வெளியின் மேலே என்றும் உள்ள பொருளாய் உலகுயிர்கள் முழுவதும் நீக்கமற நிறைந்துள்ளதுவாய், எப்பொருட்கும் நடுவாய் ஆன்மாவாகிய எனக்கு உரிமை யுடையதாய் நானேயாய்க் கலந்திருப்பதாய் என்னைத் தனக்கு அடிமையாகவுடையதாய், உயிர் உணர்வினால் சுட்டிக் கூறுதற்கரிய சித்தாகிய சத்துப் பொருளாய் இன்ன தன்மைய தென்று வெளியிட்டுச் சொல்ல வொண்ணாத நிலையில் அப்பாலுக் கப்பாலதாய்த் தூய வெட்ட வெளியில் விளங்கும் சிவ பரம் பொருளோடு இரண்டறக் கலந்து இன்புறுவதே சிவ அனுபவம் ஆகுமென்று யான் உள்ளங் கொள்ள அவ்வநுபவத்தைத்தந்தருளிய உயர்வற உயர்ந்த குருவே' என்று*

*ஞானசம்பந்தப் பிள்ளையாரை அழைத்துப் போற்றும் முறையில் அமைந்தது.*

உள்ளதாய் விளங்கும் ஒரு பெருவெளியில்
உள்ளதாய் முற்றும் உள்ளதுவாய்
நள்ளதாய் எனதாய் நானதாய்த் தனதாய்
நவிற்றருந் தானதாய் இன்ன
விள்ளொணா அப்பால் இப்படிக்கப்பால்
பெருவெளிசிவ அனுபவம் என்
றுள்ளுற அளித்த ஞான சம்பந்த
உத்தம சுத்த சற்குருவே! (3230)

*எனவரும் திருப்பாடலாகும்.*

*இச்சிவானுபவத்தின் இயல்பினை விளங்க விரித்துரைப்பதாக அமைந்தது,*

தேன்தோய் கருணைச் சிவங்கலந்து தேக்குகின்ற
சான்றோர் தம் உள்ளம் தணவாதாய் - மான்றமலத்
தாக்கொழிந்து தத்துவத்தின் சார்பாம் - தருவொழிந்து
வாக்கொழிந்து மாணா மனமொழிந்து - ஏக்கமுற
வாய்க்கும் சுகமொழிந்து மண்ணொழிந்து விண்ணொழிந்து
சாய்க்கும் இராப்பகலும் தானொழிந்து - நீக்கொழிந்து
நானுமொழியா தொழிந்து ஞான மொழியா தொழிந்து
தானு மொழியா மற் றானொழிந்து - மோனநிலை
நிற்கும் பிரம நிரதிசயா னந்தமதாய்
நிற்கும் பரம நிருத்தனெவன்? (திருவரு...... 52 - 56)

*என்னும் திருவருட்பாவில் உள்ள நெஞ்சறிவுறுதல் பகுதியாகும்.*

*உயிர்கட்கு மலப்பிணிப்பினை அகற்றிப் பேரின்பம் நல்கி யருளும்சிவமும், அவ்வின்பத்தினை நுகரும் ஆன்மாவும், நுகர்தற் கருவியாகிய உயிர் அறிவும் தனித்து வெளிப்பட்டுத் தோன்றுதலன்றி நுகர்ச்சியளவில் ஓர் அளவு புலப்பட அமைந்ததே சிவானுபவ மென்னும் உண்மை இத்தொடரிற் புலப்படுத்தப் பெற்றுள்ளமை காணலாம்.*

*மேற்குறித்த மூவகை யனுபவங்களுள் முடிந்த அநுபவ மாகிய சிவானுபவத்திற்குப் படிநிலையாயமைந்தன, அருளனு பவமும், உயிரனுபவமுமாகும். ஆன்மாவின் அறிவிச்சை, செயல்களை*

மூடி மறைத்துள்ள ஆணவப் பிடிப்பை அகற்றுதற் குரிய சிவஞானமே அருளனுபவமாகும். அவ்வநுபவத்தை அடைதற்குரிய மருந்துணவாக அமைந்தது உயிரனுபவமாகும். இவ்வுண்மையை "யான் எனது என்னும் இருவகைப் பற்றும் அறும்படி உறுதியாகப் பற்றிக் கொள்வாயாக; இதுவே சத்தியம்" என அடியேனுக்குக் குருவாய் வந்து அறிவுறுத்தருளிய பெருங் கருணைத் திறத்தை எங்ஙனம் எடுத்துரைக்க வல்லேன் இறைவனால் அளிக்கப் பெற்ற முத்துச்சிவிகையில் ஏறி அமர்ந்து அருளாட்சி புரிந்த எனது தலைவனே! என ஞானசம்பந்தப் பிள்ளையாரைப் போற்றுவதாக அமைந்தது,

பொத்தியமூ மலப்பிணி தவிர்க்கும்
　　பொருள் அருளனுபவம் அதற்குப்
பத்தியம் உயிரின் அனுபவம் இதனைப்
　　பற்றறப் பற்றுதி இதுவே
சத்தியம் என என்தனக்கு அருள்புரிந்த
　　தனிப் பெருங்கருணை என் புகல்வேன்
முத்தியற் சிவிகை இவர்ந்தருள் நெறியில்
　　முதலர சியற்றிய துரையே! (3231)

எனவரும் திருவருட்பாவாகும்.

மேற்குறித்த வண்ணம் திருஞானசம்பந்தப் பெருமான் குருவாய்த் தோன்றி வள்ளலாருக்கு அறிவுறுத் தருளிய உயிரனுபவம், அருளனுபவம், சிவஅனுபவம் ஆகிய மூவகை அனுபவங்களும் ஒருங்கே பெற்ற செம்புலச் செல்வர் மாணிக்க வாசகர் என்பதனை வள்ளலார் உள்ளவாறு உணரப் பெற்றார். வான்கலந்த மாணிக்கவாசகர் பெற்ற பேரின்ப நிலையினையே தமக்குரிய சித்தி நிலையாகப் பெறுதல் வேண்டும் என விரும்பியவர் வடலூர் வள்ளலார். இம்மூவகை அனுபவங்களையும் வழங்கும் திருவருளிலக்கியமாகிய திருவாசகத்தை இடைவிடாது ஓதி நெஞ்சம் நெக்குருகினார். திருவாதவூரடிகள் திருவாய் மலர்ந் தருளிய திருவண்டப் பகுதித் திருவகவலைப் பல முறையும் ஓதி அதன் பொருளை மணிவாசகராகிய குருவருளால் நன்குணரப் பெற்றார். அதன் பயனாக வள்ளலார் உள்ளத்தே தோன்றி வளர்ந்த திருவருட் கல்வியே மரணமிலாப் பெருவாழ்வை நல்கும் சாகாக்கலை எனக்கருத வேண்டியுள்ளது.

எல்லாம் வல்ல இறைவன் உலகப் பெரும் பரப்பின் திரட்சிகளாகிய அண்டங்களெல்லாம் இல்நுழை கதிராகிய வெயில் ஒளியில் விளங்கித் தோன்றும் நுண்ணிய அணுக்களைப் போன்று மிகச் சிறியனவாகத் தோன்றத் தான் அவற்றினும் மிகமிகப் பெரும் பொருளாகி, எல்லா அண்டங்களுக்கும் அப்பாற்பட்டு விளங்கு தலாகிய பருமை நிலையினையும் உயிர்க்குயிராய் உள் நின்று எவ்வகைப் பொருள்களையும் ஊடுருவி இயக்கி அருளும் நுண்மை நிலையினையும் ஒருங்குடையவன். மேற்குறித்த இறை இயல்பினை அவன் திருவருளாலே உணரப் பெற்ற மணிவாசகப் பெருமான் அம்முதல்வனது பருமையும் நுண்மையுமாகிய இருவகை நிலையினையும் வியந்து போற்றுவதாக அமைந்தது, "திருவண்டப் பகுதி" என்னும் திரு அகவலாகும். இது "அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்" எனத் தொடங்கி அண்டங்களின் உள்ளும், புறமும் திகழும் இறைவனது பேராற்றலை விரித்துக் கூறுவதாதலின் "திருவண்டப்பகுதி" என வழங்கப் பெறுவதாயிற்று. இறைவன் செய்தருளும் ஐந்தொழில்களில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் என்னும் நான்கினைப் பற்றிப் பொதுவாகவும், இறைவன் தன்பால் அன்புடைய அடியார்கட்கு அருளுதலாகிய பேரின்ப நிலையினைக் குறித்துச் சிறப்பாகவும் தெரிந்து கொள்ளுதற்கேற்ற அரும் பொருள்கள் இதன்கண் விரித்துரைக்கப் பெற்றுள்ளன. சொற்பதங் கடந்த தொல்லோனான இறைவன், தம் பொருட்டுக் குருவாக எழுந்தருளி, அழியும் நிலைமைத்தாகிய ஊன் உடம்பை ஒழியச் செய்து அன்பினால் கசிந்து அருள் ஊற்றெடுக்கும் நிலைத்த யாக்கையினைத் தந்தருளிய திறத்தையும், மறையோர் கோலம் காட்டியருளிய குருவின் அருளுபதேசத்தால் தாம் அன்பும் தூரப் பெற்ற திறத்தையும், அந்நிலையில் இறைவன் அருளால் பெற்ற பேரின்பம், தாம் உடம்போடிருந்து பொறுத்தற் கியலாதபடி தமது அங்கங்களையெல்லாம் கொம்புத்தேன் கொண்டு உருவாக்கினன் என்று சொல்லுமாறு முழுவதும் தம்மைத் தன்னகத்தே அகத்தில் இயல்பினதாகிய உள்ளத்தைக் கொண்டு ஓர் உவத்தைச் செய்தாற் போன்று இன்பம் ஊற்றெடுத்துப் பாயும் உடம்பினைத் தமக்கு அருளிய இறைவன் கற்கண்டினை யொத்துச் சுவைதரும் விளாங்கனியை அப்படியே விழுங்கிய யானை போன்று உலக முள்ளளவும் தாமும் நிலை பெற்றிருக்குமாறு செய்தருளிய திறத்தினையும் விரித்துரைப்பதாக அமைந்தது,

காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க
நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்செமை யேற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி நாற்றிசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச்
சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியும் இல்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவில் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்றெனக் கெளிவந் தருளி
அழிதரும் ஆக்கை ஒழியச் செய்த ஒண்பொருள்
இன்றென;க கெளிவந் திருந்தனன் போற்றி
அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
ஆற்றா இன்பம் அலர்ந்தலை செய்யப்
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅல் மாமணிப் பிறக்கம்
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும்
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்தும்
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்
துற்றவர் வருந்த உரைப்பவர்க் கொளித்தும்
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க் கொளித்தும்
இத்தந்திரத்திற் காண்டு மென்றிருந்தோர்க்
கத்தந் திரத்தின் அவ்வயின் ஒளித்தும்
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
ஆணெனத் தோன்றி அலியெனப் பெயர்ந்து
வாள்நுதற் பெண்ணென ஒளித்துஞ் சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்
ஒன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்

பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலின்
தாள்தளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்மின்
பற்றுமின் என்றவர் பற்றுமுற் றொளித்துந்
தன்னே ரில்லோன் தானேயான தன்மை
என்னே ரனையோர் கேட்க வந்தியம்பி
அறைகூவி ஆட் கொண்டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்
உளையா அன்பென் புருக வோலமிட்
டலைகடற் றிரையின் ஆர்த்தார்த் தோங்கித்
தலைதடு மாறா வீழ்ந்து புலண்டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவுங்
கடக்களி றேற்றாத் தடப் பெரு மதத்தின்
ஆற்றேனாக அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்
ஏற்றா மூதூர் எழில் நகை யெரியின்
வீழ்வித்தாங்கன்
றருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை யொடுக்கினன்
தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தானெனைச் செய்தது
தெரியேன் ஆவா செத்தேன் அடியேற்
கருளிய தறியேன் பருகியு மாரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரைபுரைவித்
துவாக்கடல் நள்ளுநீர் உள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறுந்
தேக்கிடச் செய்தனன், கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுட லகத்தே
குரம்பை கொண்டின் தேன்பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்

எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவ
துள்ளங் கொண்டோர் உருச்செய் தாங்கெனக்
கள்ளு றாக்கை யமைத்தனன் ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன், என்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன்
பிரமன் மாலறியாப் பெற்றியோனே.

(திருவாசகம். திரு அண்டப்பகுதி 105-182)

எனவரும் திருவண்டப் பகுதியாகும்.

இதன்கண் "காதலர்க்கு எய்ப்பினில் வைப்பு," "பிச்செமை ஏற்றிய பெரியோன்" "உளையா அன்பு என்புருக" எனவரும் தொடர்களால் அன்புருவமும், "அருட்பெருந் தீயின் அடியோம் அடிக்குடில், ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன்" "அளிதரும்யாக்கை செய்தோன்," "கருணை வான்தேன் கலக்க அருளொடு பராவமு தாக்கினன்," எனவரும் தொடர்களால் அருளுருவமும்," ஆற்றா இன்பம், அலர்ந்தலை செய்யப் போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன்" கடக்களிறு ஏற்றாத் தடப் பெருமதத்தின் ஆற்றேனாக அவயவம் சுவைதரு கோற்றேன் கொண்டு செய்தனன்" "வாக்கிறந் தமுத மயிர்க்கால் தோறும் தேக்கிடச் செய்தனன்" "அற்புதமான அமுததாரைகள் எற்புத்துளை தொறும் ஏற்றினன்," "அள்ளூறாக்கை யமைத்தனன்" என்னும் தொடர்களால் இன்புருவமும் மணிவாசகப் பெருமான் பெற்றமையும், "கன்னல் கனிதேர்களி றெனக் கடைமுறை என்னையும் இருப்பதாக்கினன்" என்ற தொடரால், வாதவூரடிகள் மரணமிலாப் பெரு வாழ்வு பெற்றதிறமும் திருவண்டப்பகுதியாகிய இவ்வகவலில் தெளிய உணர்த்தப் பெற்றன என்பது இராமலிங்க வள்ளலார் துணிபாகும். இறைவன் திருவருளால் திருவண்டப் பகுதியின் தெளிந்தசாரமாகத் தாம் தெளிந்து உணர்ந்துகொண்ட இவ்வுண்மையினை,

உரு அண்டப் பெருமறை என்றுலகமெலாம் புகழ்கின்ற
திரு அண்டப் பகுதிஎனும் திரு அகவல் வாய் மலர்ந்த
குரு என்றெப் பெருந்தவரும் கூறுகின்ற கோவே நீ
இரு என்ற தனி அகவல் எண்ணம் எனக்கியம் புதியே.

(திருவருட்பா - 2309)

மன்புருவநடு முதலாமனம் புதைத்து நெடுங்காலம்
என்புருவாய் தவஞ்செய்வார் எல்லாரும் ஏமாக்க
அன்புருவம் பெற் றதன்பின் அருளுருவம் அடைந்து பின்னும்
இன்புருவம் ஆயினைநீ எழில் வாதவூர் இறையே. (திருவருட்பா 3259)

எனவரும் திருப்பாடல்களில் திருவாதவூரடிகளாகிய குருவைத் தாம் வினவி உணர்ந்து கொண்ட நிலையில் அப்பெருமானை நோக்கி அன்புருவம், அருளுருவம் இன்புருவம் ஆகிய மூவகை உருவங் களையும் பெற்ற சிறப்பினை வியந்து போற்றிய திறம் இங்குக் கூர்ந்துணர்ந்து மகிழத்தக்கதாகும்.

வள்ளலார் இறைவனருளால் தாம் பெற்றனவாகக் கூறும் சுத்த தேகம், பிரணவதேகம், ஞானதேகம் ஆகிய மூவகை உடம்புகளின் தன்மையினை,

'எளிய வாது செய்வாரெங்கள் ஈசனை
ஒளியை யுன்னி யுருகு மனத்தராய்த்
தெளிய வோதிச் "சிவாயநம" வென்னுங்
குளிகை யிட்டுப் பொன்னாக்குவன கூட்டையே. (திருமந்திரம் - 2709)

எனவும்,

'ஆமவரிற்சிவனாரருள் பெற்றுளோர்
போமலந்தன்னாற் புகழ் விந்து நாதம் விட்
டோமயமாகி யொடுங்கலி னின்மலந்
தோமறு சுத்தா வவத்தைத் தொழிலே' (திருமந்திரம் 2233)

எனவும்,

ஞானிக்குக் காயம் சிவமே தனுவாம்
ஞானிக்குக் காயம் உடம்பே யதுவாகும்
மேனிற்கும் யோகிக்கும் விந்துவும் நாதமும்
மோனிக்குக் காயம் முப்பாழ் கெட்ட முத்தியே. (திருமந்திரம் 2135)

எனவும் வரும் திருமந்திரப் பாடல்களால் திருமூலநாயனார் விளக்கியுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத் தகுவதாகும்.

இவ்வாறு இறைவனது திருவருட் சுதந்திரத்தை வேண்டி, அழியும் தன்மையதாய புலாலுடம்பினை மாற்றி அழியா வியல்பின தாய அருளுடம்பினைப் பெற்று உலக மக்கள் நெடுங்காலம் இவ்வுலகில் நிலைபெற்று வாழ்தல் வேண்டும் என்னும் ஆராத

பெருவேட்கையுடன் இறைவனைப் போற்றிய அருளாளர் இராமலிங்க அடிகளாவார்.

நாம் பெற்றுள்ள பூதஉடம்பு அழியும் தன்மையதாதலின் அதனை மாற்றி அன்பும், அருளும், இன்பும் உருவாகிய தூய நல்லுடம்பினை இறைவனருளால் பெற்று இவ்வுலகமுள்ளவும் இறைவனை அன்பினால் போற்றி ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செய்தலே இறைவனது திருவருளாற் கிடைத்தற்குரிய திருவருள் வாழ்வாகும்.

இங்ஙனம் பொல்லாப் புலாலுடம்பின் பசுகரங்களை யெல்லாம், பதிகரணங்களாக மாற்றி இறைவன் எழுந்தருளியமையால் பல்லுயிர்க்கும் அருள் சுரப்பதாகிய அன்புடைய அடியார்களது துய உடம்பின் நிலை பேற்றினையே அட்பிரகாச வள்ளலார் மரண மிலாப் பெருவாழ்வு எனக் குறித்தருளுகின்றார் எனக் கொள்ளுதல் ஏற்புடையதாகும்.

மரணமிலாப் பெருவாழ்வாகிய இக்குறிக்கோளினை வற்புறுத்தும் நோக்குடனேயே சன்மார்க்கநெறி நிற்போரது நல்லுடம்பினைத் தீயிலிட் டெரிக்காமல் சமாதி செய்யும் முறையினை வள்ளலார் வற்புறுத்தியுள்ளமை இங்கு நோக்கத் தகுவதாகும்.

மக்கள் இறந்தவழி அவர்தம் உடம்பினைப் புதைத்தலும் எரித்தலும் ஆகிய இருவகை ஈமச்சடங்கு முறைகளும் சங்ககாலத் தமிழகத்தில் இருந்தன. இறந்தோர் உடலைப் பள்ளமாகிய இடங்களில் புதைத்தலும் அறவாற்றி மூத்த அறிவுடைய பெரியோர்கள், அரசர்கள் போரில் வெற்றிவிளைத்த தறுகண் மறவர்கள் ஆகியோர் உடம்பினை வேட்கோவரால் வனையப்பட்ட பெருஞ் சால்களாகியதாழியினாற்கவித்து மூடிச் சமாதிசெய்தலும் அக்கால வழக்கமாயிருந்தன. இச்செய்தி,

“கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே
.... .... .... ..... ....
கொடிநுடங்கு யானை நெடுமாவளவன்
தேவ ருலகம் எய்தின னாகலின்
அன்னோற் கவிக்கும் கண்ணகன் தாழி
வனைதல் வேட்டனை யாயின் எனையதூஉம்
இருநிலந் திகிரியாப் பெருமலை
மண்ணாவனைதல் ஒல்லுமோ நினக்கே” (புறம் - 228)

எனவும்

"ஈமத்தாழி அகலிதாக வனைமே" (புறம் - 256)

எனவும் வரும் புறநானூற்றுப் பாடல்களால் இனிது விளங்கும். இவ்வாறு மக்களது உயிர்நீங்கிய உடம்பினை உள்ளே வைத்து மூடுதற்குரிய சால்கள் முதுமக்கள் தாழி என வழங்கப் பெற்றன. இத்தகைய தாழிகள் தென்னாட்டிற் பலவிடங்களிற் கண்டெடுக்கப் பெற்றுள்ளன. தமிழ் முனனோர்கள் இறந்தோர் உடம்பினைச் சுட்டெரித்தலின்றித்தாழியில் வைத்துப் புதைக்கும் பழக்கத் தினையும் கொண்டிருந்தார்கள் என்பது புதைபொருளாய் வினால் நன்கு புலனாகும்.

துறவிகளாகிய தவச் செல்வர்கள் இறந்த நிலையில் அவர்தம் உடம்பினைச் சமாதியில் வைத்து வழிபட்டுப் போற்றும் ஆரவாரமும் உலகியல் வாழ்வில் வாழ்ந்து உயிர்துறந்தோர் உடம்பினை அடக்கம் செய்யும் நிலையில் அவர்தம் சுற்றத்தார் அழுது புலம்பும் ஆரவாரமும் இடுகாட்டில் நிகழ்தலை,

துறவோர் இறந்த தொழுவிளிப்பூசலும்
பிறவோர் இறந்த அழுவிளிப் பூசலும் (மணிமேகலை 6 : 72, 73)

எனவரும் தொடரிற் சாத்தனார் குறித்துள்ளமை காணலாம். அரசர்கள் இறந்தால் அவர்தம் உடம்பினைச் சமாதி வைத்துக் கோயில் கட்டி வழிபடும் வழக்கம் தமிழகத்தில் இருந்தது. இவ்வுண்மை,

"அரசர்க் கமைந்தன ஆயிரங் கோட்டம்" (மணிமேகலை 6-166)

எனவரும் மணிமேகலைத் தொடராலும், சோழமன்னர்களுக்கு அமைந்த சமாதிக் கோயில் களாலும் நன்கு புலனாகும். இத்தகைய சமாதிக் கோயில்கள் 'பள்ளிப் படை' என வழங்கப்பட்டுள்ளமை கல்வெட்டுக்களாற் புலனாகும்.

மெய்யுணர்வு பெற்ற பெரியோர்கள் உயிர்துறந்தால் அவர்தம் உடம்பினை எரித்தல் கூடாது என்றும் அவ்வுடம்பினைச் சிறந்த இடத்திற் புதைத்துச் சமாதி செய்தல் வேண்டும் என்றும், சிவஞானிகளாகிய அவர்தம் உடம்பினைத் தீயிலிட்டு எரித்தால் நாட்டு மக்கள் வெப்பு நோயினால் வருந்துவர் என்றும், அவர்தம் உடம்பினைப் புதையாது நாய் நரி தின்னும்படிப் புறக்கணித்தால் நாட்டில் போருண்டாகி நாட்டு மக்கள் அழிவர் என்றும், ஞானிகள்

*உடம்பில் தீப்பற்றி எரியுமானால் அது இறைவனுறையுந் திருகோயிலைத் தீயிட்டதனை ஒக்குமென்றும் மழையின்றி நாட்டிற் பஞ்முண்டாகுமென்றும் ஆகவே ஞானிகள் உடம்பினைப் பாதுகாத்துச் சமாதியில் வைத்து வழிபட்டால் நாடாள்வேந்தரும் குடிமக்களும் இறைவனது அருளால் இனிய நல்வாழ்வினைப் பெற்று மகிழ்வார்கள் என்றும் திருமூல நாயனார் தெளிவாக அறிவுறுத்தி யருள்கின்றார்.*

"அந்தமில் ஞானிதன் ஆகம் தீயினில்
வெந்திடில் நாடெலாம் வெப்புத் தீயினில்
நொந்தது, நாய்நரி நுகரின் நுண்செரு
வந்துநாய் நரிக்குண வாகும் வையமே" (திருமந்திரம் - 1910)

"எண்ணிலா ஞானி யுடல் எரிதாவிடில்
அண்ணல்தம் கோயில் அழலிட்டது ஒக்குமால்
மண்ணின் மழைவிழா வையகம் பஞ்சமாம்
எண்ணரு மன்னர் இழப்பர் அரசே" (திருமந்திரம் - 1911)

"அந்தமில் ஞானி அருளை யடைந்தக்கால்
அந்த வுடல்தான் குகைசெய் திருத்திடில்
சுந்தர மன்னரும் தொல்புவி யுள்ளோரும்
அந்தமில் இன்ப அருள்பெறு வாரே" (திருமந்திரம் 1916)

*எனவரும் திருமந்திரப் பாடல்கள் சிவஞானிகளது உடம்பினை எரியிலிடாது புதைத்துச் சமாதிவைத்துப் போற்றுதலின் இன்றியமையாமையினை வற்புறுத்துவனவாகும்.*

*இவ்வாறு சிவஞானிகளுக்கு வற்புறுத்திய சமாதிக் கிரியையைச் சன்மார்க்கநெறி நிற்போர் அனைவர்க்கும் உரிய கிரியையாக இராமலிங்க வள்ளலார் வற்புறுத்தியுள்ளார். இறைவனை நினைப்பவர் யாவராயிலும் அவர் தம் உள்ளத்தையும் உடம்பினையும் இறைவன் தனக்குரிய கோயிலாகக் கொண்டு எழுந்தருளியுள்ளான் என்பது;*

'நினைப்பவர்மனம் கோயிலாக்கொண்டவன்' (தேவாரம் -5-2-1)

*எனவும்,*

'இறைவனே நீயென் னுடலிடங்கொண்டாய்' (திருவாசகம் - 392)

*எனவும்,*

'வினைபடுமுடல் நீ புகுந்து நின்றமையால்
விழுமியவிமானமாயினதே' (திருவிசைப்பா - 117)

எனவும் வரும் ஆன்றோர் அருளிச் செயல்களால் நன்கு புலனாம்.

எல்லோருடைய உள்ளங்களையும் இறைவன் கோயிலாகக் கொண்டு எழுந்தருளியுள்ளான் என்னும் மெய்ம்மையினை உள்ள வாறுணர்ந்து வழிபடும் நெறி சன்மார்க்கமாதலின், அந்நெறியினைக் கடைப்பிடித்தொழுகுவோரது உடம்பினைத் தீயிலிட்டு எரித்தல் கூடாதென்பதும் புதைத்து அடக்கஞ் செய்தலே முறையென்பதும் அருட் பிரகாச வள்ளலார் அறிவுறுத்திய அறிவுரையாகும் இதனைச் சமாதிவற்புறுத்தல் என்னுந்தலைப்பில் அமைந்த பத்துப்பாடல்களில் வள்ளலார் விரித்துக் கூறியுள்ளமை காணலாம்.

ஆன்மா உயிரைவிட்டுப் போயிற்று என்பதனைத் தெளிவாக அறிந்து கொள்ளாத நிலையிலேயே மூச்சடங்கியவுடனே இறந்து போயினார் எனக்கொண்டு அவர்தம் உடம்பினைச் சுட்டெரிக்குந் தவறான நிகழ்ச்சியும் சிலவிடங்களில் நேர்ந்து விடுகின்றது, இறப்பு என்பது உறங்குவது போன்றது. உயிர்ப்படக்கி யோகநிலையில் இருப்போரது உடம்பு செத்தாருடம்பினைப் போலக் காணப் படுவதும் உண்டு. அஃது எவ்வா றாயினும் அன்புடையார் உடம்பினைச் சுட்டெரிப்பது பண்புடைமையாகாதென்பதும் உலகவாழ்க்கையில் மெய்ம்மை வுணர்ந்தோரது உடம்புக்கு மதிப் பளித்து அதனைத் தீக்கு இரையாக்காது சமாதிசெய்தலே அன் புடையவர் செயலாம் என்பதும் வள்ளலார் திருவுள்ளக் குறிப்பாகும்.

பிறந்தவரை நீராட்டிப் பெருகவளர்த்
திடுகின்றீர் பேயரே நீர்
இறந்தவரைச் சுடுகின்றீர் எவ்வணஞ்சம்
மதித்தீரோ இரவில் தூங்கி
மறந்தவரைத் தீ மூட்ட வல்லீரால்
நும்மனத்தை வயிரம் ஆன
சிறந்தவரை எனப்புகழச் செய்துகொண்டீர்
ஏன் பிறந்து திரிகின்றீரே, (5608)

''குணம்புதைக்க உயிரடக்கம் கொண்டது சுட்
டால் அதுதான் கொலையாம் என்றே

வணம்புதைக்க வேண்டும் என வாய்தடிக்கச்
சொல்கின்றேன் வார்த்தை கேட்டும்
பிணம் புதைக்கச் சம்மதியீர் பணம் புதைக்கச்
சம்மதிக்கும் பேயரேநீர்
எணம் புதைக்கத் துயில்வார்நும் பாற்றுயிலற்
கஞ்சுவரே இழுதையீரே.”

*எனவரும் திருவருட்பாப் பாடல்களால் வள்ளலார் சமாதிக் கிரியையினை நன்கு வலியுறுத்தி யுள்ளமை அறியத்தகுவதாகும்.*

# 12. வள்ளலார் செந்தமிழ்

தமிழிலக்கிய வரலாற்றில் சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டினை ஒரு பொற்காலமெனக் கூறலாம். இக் காலத்திலே தான் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும் யாழ்ப்பாணத்து நல்லூர் சிவத்திரு ஆறுமுக நாவலர் அவர்களும், வடலூர் இராமலிங்க வள்ளலாரும் தோன்றித் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர் சமயமாகிய சைவசமய வளர்ச்சிக்கும் ஆக்கம் தரும் நிலையான பல புலமைப் பணிகளைச் செய்து உள்ளார்கள். திருவாவடுதுறை ஆதீனத்தின் மகாவித்துவானாகிய பிள்ளை அவர்கள் செந்தமிழ் நூல்களை நன்றாகப் பயின்றும், வடமொழியில் உள்ள நூல்களின் கருத்துக்களை உணர்ந்தும், மாணவர் பலருக்கும் ஆர்வமுடன் சிறந்த நூல்களைப் பாடம் சொல்லியும், தம்முடைய பாவன்மையால் தலபுராணங்கள் இருபத்திரண்டும், சரித்திரங்கள் மூன்றும், மான்மியம் ஒன்றும் காப்பியங்கள் இரண்டும், பதிகம் நான்கும், எமக அந்தாதி மூன்றும், வெண்பா அந்தாதி ஒன்றும் மாலை ஏழும், பிள்ளைத்தமிழ் பத்தும், கலம்பகம் இரண்டும், கோவை மூன்றும், உலா ஒன்றும், தூது இரண்டும், குறவஞ்சி ஒன்றும், சிலேடைவெண்பா ஒன்றும், கப்பற்பாட்டு, குருபரம்பரை அகவல், ஆனந்தக்களிப்பு, பொன்னூசல்மங்கலம், வாலி வாழ்த்து என்பனவும் ஆகப் பலவகைப் பனுவல்களை இயற்றியும், தமிழ் வளர்ச்சிக்கும், சைவசமய வளர்ச்சிக்கும், ஆக்கமான பல பணிகளைச் செய்துள்ளார்கள். மகாவித்துவான் பிள்ளை அவர்களின் பன்னூற் பயிற்சியும், கற்பனைத்திறமும், சைவ சித்தாந்தத் தத்துவத் தெளிவும், காப்பியச்சுவை நயங்களை விளக்கும் கற்பனைத்திறமும், பல்வகை யாப்பணியமைய இயல்பாக விரைந்து பாடும் பாவன்மையும், ஆகிய இவையாவும் இவர்களாற் பாடப் பெற்றுள்ள பல்வேறு பனுவல்களிலும் விரிந்து பரவி உள்ளன. மகாவித்துவானாகிய இப்புலவர் பெருமான், கவிச்சக்கரவர்த்தி கம்பர் இராமாயணமாகிய

ஒரு கதையினை எடுத்துக் கொண்டு, பல்வகைச்சுவை நயங்களும் பொதுள ஒரு காப்பியஞ் செய்தாற் போன்று ஏதேனும் ஒரு கதையினை எடுத்துக் கொண்டு பெருங் காப்பியம் ஒன்று பாடியிருப் பாரானால் இவர் கம்பரினும் விஞ்சிய பெரும்புலவராகப் பாராட்டப் பெற்றிருப்பார் என என் ஆசிரியப் பெருந்தகை யாழ் நூலாசிரியர் விபுலாநந்த அடிகளார் பலமுறை பலரிடமும் கூறக் கேட்டிருக் கின்றேன். இங்ஙனம் பேரறிஞர் பாராட்டும் வண்ணம் நிறைந்த புலமை வாய்ந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களது புலமை மாண்பினைத் தமிழ் மாணவர் பலரும் உணர்ந்து மகிழும்படி பிள்ளையவர்கள் பாடிய பனுவல்களில் அமைந்துள்ள சொற் பொருளணி நயங்களையும், பல்வேறு சுவை நயங்களையும் சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கையினையும் ஆராய்ந்து நூலுருவில் வெளிப்படுத்துதல் தமிழறிஞர்களின் தலையாய கடமையாகும்.

ஈழத்தில் தோன்றித் தமிழ் பயின்று விவிலிய நூலை உரைநடையில் மொழி பெயர்த்தும், நாடக நூல்கள் சில எழுதியும், கீர்த்தனங்கள் சில பாடியும் புகழ்பெற்ற ஆறுமுக நாவலர் தமிழ் நாட்டிற்கு வந்து சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். செந்தமிழும் சிவநெறியும் தழைத்தோங்குதற்கெனவே தமது வாழ்க்கைமுழுவதும் பிரமச்சரிய நிலையைக் கடைப்பிடித்து ஒழுகிய தவச்செல்வராகிய அவர், தமிழோடு, ஆங்கிலமும், வடமொழியும் கற்றவர். தமிழ் மாணவர்கள் தம் இளம் பருவ முதல் படிப்படியாகக் கற்றற்குரிய தமிழ்ப்பாட, நூல்களை முதற் பாலபாடம், இரண்டாம் பாலபாடம், மூன்றாம் பாலபாடம், நான்காம் பாலகாடம் எனப் படிப்படியே எழுதி உதவினார். தொல்காப்பியம், திருக்குறள், பரிமேலழகர் உரை, அகத்தியத் தேவாரத் திரட்டு திருவாசகம் திருக்கோவையார், திருத்தொண்டர் புராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் முதலிய இலக்கண இலக்கிய நூல்களையும், நன்னூல் விருத்தியுரை, இலக்கணக்கொத்து, நிகண்டு முதலிய கருவி நூல்களையும், கோயிற்புராணம், சைவசமயநெறி முதலிய பல நூல்களையும் பிழையறப் பதிப்பித்து உதவினார். தமிழ்மொழியினைப் பிழையறப் பதிப்பித்து உதவினார். தமிழ்மொழியினைப் பிழையறக் கற்றற்கு உறுதுணையாக நன்னூற் காண்டிகையுரை, இலக்கண வினாவிடை இலக்கணச் சுருக்கம், ஆகிய புது நூல்களை இயற்றினார்.

திருத்தொண்டர் புராணம், கந்தபுராணம் ஆகிய புராணத்தினை உரைநடையாக யாவரும் கற்றுணரும்படி அவற்றை (வசன நடையில்) வரைந்தும், பெரியபுராணம் வரலாற்றின் நுட்பங்களைக் கற்போர் உணர்ந்து பிறர்க்கும் எடுத்துரைத்துப் பயன்விளைக்கும் முறையில் உரைநடையில் சூசனம் (விளக்கம்) எழுதியும் சிவநெறிப்பணி புரிந்தார். தமிழ்ச் சுவை நயங்களையும், சமய உண்மைகளையும் பலரும் உணர்ந்து பயன் பெறும் முறையில் தமது நாவன்மை தோன்றச் சொற்பொழிவாற்றி நாவலார் என்னும் சிறப்புக்குரியவரானார். சைவர்கள் இளம்பருவ முதல் இன்றி யமையாது மேற்கொள்ளுதற்குரிய கடமைகளைக் குறித்துச் சைவ வினாவிடை, நித்தியகன்மவிதி முதலிய சிறு நூல்களை இயற்றினார். இவ்வாறு ஆறுமும் நாவலர் தமிழுக்கும் சைவத் துக்கும் செய்த பணிகள் பலவாகும். அப்பணிகளுள் பிழையற்ற பதிப்புமுறையும், உரைநடை யமைப்பும் இங்குச் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கனவாகும்.

சென்ற நூற்றாண்டில் தோன்றிய இராமலிங்க வள்ளலார் தம் தாய்மொழியாகிய தமிழின் இனிமையையும், மனத்தால் அறிதற்கரிய நுண்பொருள்களையும், சொற்களிற் புலப்பட வைக்கும் எளிமைத் திறத்தினையும் உலகுயிர்களை இயக்கும் பரம்பொருளைப் போற்றிப் பரவுதற் கினிய தெய்வத் திறத்தினையும் நன்குணர்ந்த செம்புலச் செல்வராவர். கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்கும் பயன்படும் வண்ணம் தாம் பெற்ற திருவருட் புலமையால் பாட்டும், உரையும் என இருதிறத்தாலும் செந்திறத்த தமிழோசை யமைய அமிழ்தினு மினிய தமிழ்மொழியை வளர்த்த அருளாசிரியர் இராமலிங்க வள்ளலாரேயாவர். வள்ளலார் பாடியருளிய பாடல்கள் ஆறாயிரத்துக்க மேற்பட்டன. பொதுவாகத் திருக்குறள் முதலிய தொன்னூல்களையும் சைவத் திருமுறைகளையும், சிறப்பாகத் திருவாசகத்தையும், சிந்தித்துணரும் நிலையில் அருட்பிரகாச வள்ளலார் பாடிய செழும் பாடல்கள் அனைத்தும் திருவாதவூரடிகள் அருளிய திருவாசகத்தைப் போலவே படிப்போர், பக்கத்திலிருந்து கேட்போர் சிந்திப்போர் ஆகிய எல்லோருடைய உள்ளங்களையும் உருகச் செய்வனவாகும். இக்காலத்தில் கற்றோரே யன்றி மற்றோரும் எளிதிற் புரிந்து படித்துணர்ந்து மகிழ்தற்குரிய வண்ணம் சொல்லின் எளிமையும் பொருளின் தெளிவும் உடையனவாகத் திருவருட்பாப் பாடல்கள் அமைந்திருபது தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் ஆக்கம் தருவதாகும்.

தென்தமிழும் வடமொழியும் ஓதாதுணர்ந்த இராமலிங்க வள்ளலார் வடமொழி முதலிய பிறமொழிகளுக்கில்லாத எளிமையும், தெளிவும் வாய்ந்த தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர் குடும்பத்தில் தம்மைப் பிறப்பித்தருளித் தென்மொழியால் தம்மைப் பாடுவித் தருளிய இறைவனது பெருங்கருணைத் திறத்தினை நினைந்து எல்லாம் வல்ல இறைவனை உள்ளம் கசிந்து போற்று கின்றார்.

"இடம்பத்தையும், ஆரவாரத்தையும்" பிரயாசத்தையும் பெருமறைப்பையும் போதுபோக்கையும் உண்டு பண்ணுகின்ற ஆரியம் முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது, பயிலுதற்கும் அறிதற்கும் மிகவும் எளிதாய்ப், பாடுதற்கும், துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய், சாகாக்கல்வியை எளிதில் அறிவிப்பதாய்த் திருவருள் பலத்தால் கிடைத்த தென் மொழி ஒன்றினிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென் மொழிகளால் பல்வகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித் தருளினீர்" எனச்சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெருவிண்ணப் பத்தில் இறைவனை நோக்கி அருட்பிரகாச வள்ளலார் கூறுவதாக அமைந்த இப் போற்றுதல், சேக்கிழார் அருளிய வண்ணம் ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழின் சிறப்பினை நன்கு புலப்படுத்தல் காணலாம்.

இராமலிங்க வள்ளலார் தம்முடைய தாய்மொழியாகிய தமிழ் இறைவனுக்கு உவப்பான மொழியென்பதனையும், கற்றோர் உள்ளத்தில் அமைதியை விளைவிக்குந் தன்மையது என்பதனையும், சிந்தைக்கும் மொழிக்கும் அப்பாற்பட்டு நின்ற இறைவனது புகழ்த் திறங்கள் தேவார ஆசிரியர் மூவர் அருளிய திருப்பதிகங்களுக்கு இசைந்தனவாய் முதிர்தீம்பாலும் முக்கனியும் வானோர் அமுதமும் நல்ல தேனும் கைப்புடையன் என்று சொல்லும் வண்ணம் மிக்க இனிப்புடையனவாய் விளங்குவன என்பதனையும் வடிக்குறும் தமிழ்த் தொண்டு அன்பருக்கு அருளும் வள்ளலே (876) எனவும் தண்டமிழ்க் கவிதைபோல் சாந்தமிக்கது (குடும்பகோஷம் (19) எனவும் மூவர் திருப்பாட்டினுக்கு இசைந்தே முதிர்தீம்பாலும் முக்கனியும் காவல் அமுதும் நறுந்தேனும் கைப்ப இனிக்கும் நின்புகழே". (908) எனவும், பண்ணாரும் மூவர் சொற் பாவேறு கேள்வியிற் பண்படா ஏழையின் சொற்பாவையும் இகழ்ந்திடாது ஏற்று (2606) எனவும் வரும் தொடர்களில் குறித்துப் போற்றி

யுள்ளமை தமிழ்ச் சுவையில் வள்ளலார் கொண்ட ஈடுபாட்டினை நன்கு புலப்படுத்துவனவாகும்.

சிற்சபையில் நடிக்கின்ற இறைவனது திருக்கூத்து இயல், இசை, நாடகம் என்னும் மும்மைத் தமிழுக்கும் ஏற்புடையதாய்ச் செந்தமிழை வளர்க்குந் திருக்கூத்தாக ஆன்மாக்களின் உள்ளம், உரை, செயல் ஆகிய முக்கரணங்களையும் திருத்தி மும்மை மலம் அகன்றொழியச் செம்மை நலம் பெறச் செந்தமிழை வளர்க்கும் திருக்கூத்தாகத் திகழும் திறத்தினை,

'எந்தையுனைப் பாடிமகிழ்ந் தின்புறவே வைத்தருளிச்
செந்தமிழில் வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய்' (4802)

எனவரும் தொடரில் அருட்பிரகாசவள்ளலார் விரித்துப் போற்றி யுள்ளமை தமிழ்மொழி யிடத்து வள்ளலார் கொண்டுள்ள பெருமதிப் பினையும் பேரார்வத்தினையும் நன்க விளக்குதல் காணலாம்.

திருவொற்றியூரில் எழுந்தருளியுள்ள வடிவுடை மாணிக்க மாகிய அன்னையைப் பரவிப் போற்றும் பனுவலில் 'மெய்யன்பர் புனைந்த தமிழ்ப் பாவால் நிறைந்த பொற்பாவாய்' (1469) என அம்மையை வள்ளலார் தமிழ்ப் பாவின் திருவுருவமாகப் பரவிப் போற்றியுள்ளமை காணலாம். வடிவுடை அம்மையைப் போற்றுவதாக அமைந்த இத்தொடர்,

'தொடுக்கும் கடவுட் பழம் பாடற் றொடையின்பயனே
நறைபழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே'

எனக் குமரகுருபர அடிகளார் மீனாட்சி அம்மையை அழைத்துப் போற்றிய பிள்ளைத் தமிழின் அம்மையை அழைத்துப் போற்றிய பிள்ளைத் தமிழின் தொடரை அடியொற்றி அமைந்துள்ளமை இங்கு நோக்கத்தகுவதாகும். செந்தமிழ்க் கடவுளாகிய முருகனை,

முன் செய்த மாதவத்தால் அருணகிரிநாதர்
முன்னே முறையிட்டு ஏத்தும்
புன்செயல்தீர் திருப்புகழை
ஏற்றருளும் மெய்ஞ்ஞான புனிதன் (2515)

எனவும், அம்முதல்வனது திருவடிப் பேரழகில் ஈடுபட்டு அத்திருவடிகளைக் கனவிலேலும் கண்டு மகிழ்தல் வேண்டும் என்னும் பெருவேட்கை தோன்றப்

'பண்ணேறு மொழியடியார் பரவியேத்தும்'
பாதமலர் அழகினை இப்பாவி பார்க்கின்
கண்ணேறு படுமென்றோ கனவிலேனும்
காட்டென்றால் காட்டு கிலாய் கருணை ஈதோ!

*(103) எனவும் வள்ளலார் குறித்துப் போற்றியுள்ளமை தெய்வத்திறம் பேசுவதற்கு ஏற்புடைய மொழி தமிழ் மொழியே என்னும் உண்மையினை நன்குபுலப்படுத்தல் காணலாம்.*

*உண்மையும் தெளிவும் வாய்ந்த மொழி தமிழ்மொழி என்பதும், அம் மொழியொன்றே எல்லாம் வல்ல பரம்பொருளின் உண்ம இயல்பினை உள்ளவாறு புலப்படுத்தும் என்பதும்,*

*'தெய்வச் சுருதிதமிழ்க் கன்றித் தீட்டா நிலைமைத்து' எனவரும் ஆன்றோர் வாய்மொழியால் நன்கு துணியப்படும்.*

*சைவசமய ஆசிரியர் நால்வரும் செம்பொருளாகிய சிவபரம் பொருளைப் பாடிப் போற்றிய செந்தமிழ்த் திருப்பாடல்களை இடைவிடாது ஓதி நெஞ்சம் கனிந்து உருகும் பேரின்ப அநுபவத்தினைப் பெற்ற இராமலிங்க வள்ளலார், சைவ சமய குரவர்கள் நால்வரும் செய்த தமிழ்ப் பாடல்கள், உலகவின் பத்திலேயே ஊறிக் கிடக்கும் காமுகர்களைக் கூடத் தம்பால் ஈர்க்கும் ஆற்றல் வாய்ந்தன என்னும் உண்மையை,*

சேல்வருங் கண்ணி இடத்தோய்நின் கீர்த்தியைச் சேர்த்தியந்த
நால்வரும் செய்தமிழ் கேட்டுப்புறத்தில் நடக்கச் சற்றே
கால்வரு மாயினும் இன்புருவாகிக் கனிமனம் அப்
பால் வருமே அதன்பாற் பெண்களை விட்டுப் பார்க்கினுமே (2332)

*என இறைவனை முன்னிலைப் படுத்திப் போற்றும் பாடலில் அருட்பிரகாச வள்ளலார் தமது கற்பனைத் திறம் விளங்க வெளியிட்டுள்ளமை அவர்தம் தமிழ் ஆர்வத்தை இனிது புலப் படுத்துவதாகும்.*

*அருட்பிரகாசவள்ளலார் தம் பாடலிற் பயன்படுத்திய மொழிநடை கற்றோர், கல்லாதோர், ஆகிய எல்லாரும் புரிந்து கொள்ளுதற்குரிய எளிமையும் இனிமையும் ஒருங்கு அமையப் பெற்றதாகும்.*

உலக வழக்கில் மக்களால் பேசப்படும் மொழி நடையினை அவ்வாறே செய்யுளாக யாத்தமைக்கும் யாப்பின் திறம் அருட்பிரகாச வள்ளலார்க்கு இயல்பாகவே கைவந்த கலைத்திறமாகும்.

மக்களுக்குப் புரியாத சொற்களை வலிந்து சேர்த்து அரிதுணர் பொருளனவாய்ச் செய்யுட்களைப் பாடும் ஏனைய புலவர்களைப் போலன்றி, உலகில் இயல்பாக வழங்கும் மொழிநடையினைச் சீரும், தொடையும் சிறக்க, தன்மை, உவமை, உருவகம் முதலிய அணிநலன்கள் அமைய இயல்பாகவே பாடலியற்றும் பாவன்மையினை இறைவன் திருவருளால் பெற்றஅருட்பாவலர் இராமலிங்க வள்ளலார் ஆவர். அவர்கள் பாடிய பாடல்களில் மோனை எதுகை, முரண், இயைபு, முதலிய தொடை நயங்களும் சொல்லும் பொருளும் பற்றிய அணி நயங்களும் இயல்பாகவே அமைந்துள்ளன என்பது திருவருட்பாப் பனுவல்களைப் படிந்து மகிழும் அன்பர்கள் அனைவர்க்கும் தெரிந்த செய்தியாகும்.

வள்ளலார் அருளிய பாடல்களில் ஆசிரியப்பா வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்களும் தாழிசை, துறை, விருத்தம் ஆகிய பாவினங்களும் வண்ணம், சந்தம் பற்றிய யாப்பு வகைகளும், கண்ணி, கும்மி, சிந்து, கீர்த்தனம், நாமாவளி, முதலிய இன்னிசைப் பாடல்களும், தலைவியும் தோழியும் உறழ்ந்து கூறுவனவாகவும், தலைவனும் தலைவியும் உறழ்ந்து கூறுவனவாகவும், நாடக அமைப்பில் அமைந்த உரையாடல்களும் இடம் பெற்றுள்ளமை காணலாம்.

வள்ளலார் பாடிய கண்ணி, சிந்து முதலிய யாப்பு வகைகளில் சில, தாயுமானவர் பாடல்களில் அமைந்த கண்ணி, சிந்து முதலிய யாப்பியல் வகையினை அடியொற்றியுள்ளன.

சைவ, சமய ஆசிரியர் நால்வரும் பாடியருளிய யாப்பு வகையினை அடி ஒற்றி அமைந்த இயலிசைத் தமிழ்ப் பதிகங்கள் பல திருவருட்பாவில் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு எல்லாம் வல்ல இறைவனை இசைநலம் பொருந்தப் பரவிப் போற்றும் பத்திப்பனுவல்களாக இராமலிங்க வள்ளலார் பாடிய பாடற் றொகுதியாகிய திருவருட்பா அமைந்துள்ளது. எனவே இயல், இசை நாடகமென்னும் முத்ததமிழுக்கும் சிறந்த இலக்கியமாகத் திருவருட்பா திகழ்கின்றமை தமிழ் மக்கள் செய்த தவப் பேறேயாகும்.

உலக மக்களது உணர்வுக்கு அணி செய்வதாய் ஆழ்ந்த பொருளைத் தந்து மக்களது அறிவினை வளர்ப்பதாய், அகமும் புறமுமாகிய உலகியல் ஒழுகலாறுகளை விரிந்துரைப்பதாய்த் தெளிவுடையதாய், அன்பும் அறனுமாகிய தெய்வப் பண்பினை வளர்ப்பதாயமைதலே சான்றோர் கவியின் இலக்கணம் என்பர் பெரியோர். அத்தகைய சான்றோர் கவிக்கு இலக்கியமாகத் திகழும் தன்மையது வள்ளலார் பாடிய திருவருட்பாவாகும்.

அருட்பிரகாச வள்ளலார் தம் உள்ளத்திலே அருட் பெருஞ்சோதி ஆண்டவனாகிய இறைவனை இடைவிடாது நினைந்து போற்றி மெய்யுணர்வு பெற்ற அருளாளர் ஆவர். ஆகவே அவர் சிந்தையில் ஊற்றெடுத்து வாயின் வழியாக வெளி வந்த செந்தமிழ்ப் பாடல்கள் யாவும் சொல்லாலும் பொருளாலும், கற்போர்க்கும் கேட்போர்க்கும், அறிவொளி பரப்பும் தன்மையன வாகவே அமைந்துள்ளன. ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து வருவது போன்று வள்ளலார் உள்ளத்தில் தோன்றி வரும் கவிப் பெருக்கும், கலைப்பெருக்கும் இந்நாட்டிற் பசியாலும் பிணியாலும் வாட்டமுற்று அறிவுக் கண்ணை இழந்து பள்ளத்தில் விழுந்த குருடர்கள் எல்லாம் கல்விக் கண் பெற்று உலகியல் வாழ்விலும், அருளியல் வாழ்விலும் உயர்ந்த பதவிகளைப் பெறுவதற்கு உரியவண்ணம் செய்தன. வறுமையிலும் பசிக்கொடுமையிலும் சிக்குண்டு துன்பக்குழியில் வீழ்ந்து துயருறும் ஏழை எளிய மக்களையெல்லாம் இறைவனது திருவருளாகிய ஒளியின் உதவி கொண்டு மேல்நிலை பெற வழிவகுத்த பெருமை வள்ளலார் பாடிய தெளிந்த தமிழ்ப் பாடல்களின் சிறப்பியல்பு ஆகும். இங்ஙனம் மக்களது கலங்கிய அறிவினைத் தெளிவிக்கும் திருவருட்பாவாகிய தமிழ் அமுதத்தைப் பருகிச் சுவை காணும் பண்புடைய பெருமக்கள் இவ்வுலகில் வாழும் நிலையிலேயே வானோர் அமிழ்தத்தினைப் பருகி மகிழுஞ் சிறப்பினைத் தம் வாழ்விற் கண்டுணர்ந்தோராவர்.

திருவருட்பாவினை நன்கு பயின்று இதன் சுவை நலத்தில் திளைத்து இன்புற்ற தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் வள்ளலார் பாடிய திருவருட்பாவின் இயல்பினை மனத்துட்கொண்டு செந்தமிழ்க் கவிதையின் மாட்சியினை விரித்துரைக்கும் முறையில் அமைந்தது,

உள்ளத்தில் உண்மைஒளி யுண்டாயின்,
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்,
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்
தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார். (பாரதியார் 22. தமிழ் 4)

*எனவரும் பாடலாகும்.*

*"பாட்டுக்கொரு புலவன் பாரதி" யென அறிஞர்களாற் போற்றப் பெற்ற தேசியகவி சுப்பிரமணிய பாரதியார், வள்ளலார் பாடிய திருவருட்பாவில் பெரிதும் ஈடுபாடுடையவர் என்பது, திருவருட்பாவில் காணப்படும் சிந்து, கண்ணி, கீர்த்தனம் முதலிய யாப்பு வகைகளை அடியொற்றிப் பலபாடல்கள் பாடி இருத்தலாலும் வள்ளலார் அறிவுறுத்திய மரணமிலாப் பெரு வாழ்வினை உளங்கொண்டு "சாகாவரம் அருள்வாய்" எனப் பாடிய இசைப் பாடலினாலும் சமயப் பொதுமையினை அறிவுறுத்தும் முறையில் பாடிய பிற தோத்திரப் பாடல்களினாலும் இனிது புலனாகும்.*

*இராமலிங்க வள்ளலார் பாடிய,*

களக்கமறப் பொதுநடம்நான் கண்டு கொண்ட தருணம்
கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்ததொரு காய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ வெம்பி உதிர்ந்திடுமோ
வெம்பாது பழுக்கினுமென் கரத்திலகப்படுமோ
கொளக்கருது மலமாயைக் குரங்கு கவர்ந்திடுமோ
குரங்கு கவராதெனது குறிப்பிலகப் படினும்
துளக்கம்அற உண்ணுவேனோ தொண்டைவிக்கிக் கொளுமோ
சோதி திருவுளம் எதுவோ ஏதும் அறிந்திலனே (3380)

*எனவரும் திருவருட்பாவை உளங்கொண்டு,*

களக்கமுறும் மார்லிநடம் கண்டுகொண்ட தருணம்
கடைச்சிறியேன் உளம்பூத்துக் காய்த்ததொரு காய்தான்
விளக்கமுறப் பழுத்திடுமோ வெதும்பி உதிர்ந்திடுமோ
வெம்பாது பழுக்கினுமென் கரத்திலகப் படுமோ

வளர்த்த பழம் கர்சன் என்ற குரங்கு கவர்ந்திடுமோ
மற்றிங்ஙன் ஆட்சிசெய்யும் அணில்கடித்து விடுமோ
துளக்கமற யான் பெற்றிங் குண்குவனோ, அல்லால்
தொண்டை விக்குமோ ஏதும் சொல்லரியதாமே.
(பாரதி - கோகலே - 33)

எனக் கோகலே சாமியாரைப் பற்றிப் பாரதியார் பாடியுள்ள பாடல், திருவருட்பாவில் பாரதியாருக்குள்ள ஈடுபாட்டை நன்கு புலப்படுத்துவதாகும். மேற்குறித்த கோகலே சாமியார் பாடல் தலைப்பின்கீழ் "இராமலிங்க சுவாமிகள்" "களக்கமறப் பொதுநடம் நான் கண்டு கொண்ட தருணம்" என்று பாடிய பாட்டைத் திரித்துப் பாடியது" எனப் பாரதியாரவர்களே குறிப்பிட்டு இருப்பது இவ்வுண்மையினை வற்புறுத்துவதாகும்.

அருட்பெருஞ் சோதியாகிய இறைவனைத் தம் உள்ளத்தே இடைவிடாது நினைத்துப் போற்றுவோர் நோயற்ற பொன்மயமான செம்மேனியுடையவராய், நரை, திரை, மூப்பு இன்றி மரணமிலாப் பெருவாழ்வினராய் நிலைத்த தூய உடம்பினைப் (சுத்ததேகம்) பெறுவார்கள் என்பதனை வள்ளலார் தாம் பாடிய திருவருட்பாப் பாடல்களில் பல இடங்களிலும் குறித்துள்ளமை காணலாம். இவ்விருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கந்தவேளது அருள்பெற்றுச் செந்தமிழ்ப் பனுவல் பாடிய தவப்பெருஞ் செல்வராகிய பாம்பன் குமரகுருதாச சுவாமிகள், வள்ளலார் அறிவுறுத்திய மரணமிலாப் பெரு வாழ்வினை முருகப் பெருமான் தன் அடியார்கட்கு வழங்கியருள்வான் என்பதனை,

நின்மலச் செஞ்சோதி வடிவுடையவுனை
யனவரத நினைப்போர்க் கென்றும்
பொன்மயச் செம்மேனி யுடம்புண்டாகு
நரை திரைகள் பொருந்தர் புன்கண்
தன்னுரத்தி னுயிர்கொள் கூற்றமணு
காதெதினுஞ் சத்தாய் நிற்குஞ்
சின்மயத்தின் தெருட் பிழம்பே யான் றொழுமோர்
வேற்சமர்த்தா சிவச் சீர்க்குன்றே. (பாம்பன் சுவாமிகள்)

எனவரும் பாடலில் தொகுத்துக் கூறியுள்ளார் வள்ளலார். செந்தமிழ்ப் பொருள் நலத்தில் பாம்பனடிகளார் கொண்டுள்ள பெரு மதிப்பினையும் பேரார்வத்தையும் இது நன்கு புலப்படுத்துவதாகும்.

*இவ்வுலகில் உயிர்கள் படும் துன்பத்தினைக் கண்டு உளம் பொறாது அவற்றின் துன்பத்தினைத் துடைக்க முற்படும் உயிரிரக்க உணர்வே தம் வடிவாகக் கொண்டு நெஞ்சம் நெக்குருகி மன்னுயிர் களின் துயரங்களைத் துடைத்தருளல் வேண்டும் என நெஞ்சத்தினை நெகிழ்விக்கும் செந்தமிழ்ப் பனுவல்களால் எல்லாம் வல்ல இறைவன்பால் இடைவிடாது முறையிட்டு வேண்டிய அருளாளர் இராமலிங்க அடிகளாராவார். தம் துயர் தீர்த்தருள்க என வேண்டும் தன்னலமின்றி மன்னுயிர்களின் துயர் துடைத்தல் வேண்டும் என இறைவனைப் போற்றும் முறையில் வள்ளலார் பாடிய பாடல்கள் உயிரிரக்க உணர்வின் இலக்கியமாக அமைந்துள்ளமை திருவருட்பாவின் தனிச் சிறப்பாகும். இவ்வுண்மை,*

கருணையே வடிவாய்ப் பிறர்களுக்கடுத்த
கடுந்துயர் அச்சமாதிகளைத்
தருண நின்னருளால் தவிர்த்தவர்க் கின்பம்
தரவும்வன் புலைகொலை இரண்டும்
ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க
உஞற்றவும் அம்பலந் தனிலே
மருவிய புகழை வழுத்தவும் நின்னை
வாழ்த்தவும் இச்சைகாண் எந்தாய் (7430)

மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக்கேட்டும்
கணமும்நான் சகித்திட மாட்டேன்
எண்ணுறும் எனக்கே நின்னருள் பலத்தால்
இசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்
நண்ணுமவ் வருத்தம் தவிர்க்கும்நல் வரந்தான்
நல்குதல் எனக்கிச்சை எந்தாய்.

பல்லிகள் பலவாயிடத்தும் உச்சியினும்
பகரும் நேர் முதற்பலவயினும்
சொல்லியதோறும் பிறர்துயர் கேட்கச்
சொல்கின்றவோ எனச் சூழ்ந்தே
மெல்லிய மனம்நொந் திளைத்தனன் வகை
வெங்குரல் செயுந்தோறும் எந்தாய்

வல்லியக் குரல்கேட் டயர் பசுப்போல
வருந்தினன்எந்தைநீ அறிவாய் (3432)

புன்புலால் உடம்பின் அசுத்தமும் இதனில்
புகுந்து நான் இருக்கின்ற புணர்ப்பும்
என்பொலா மணியே எண்ணி நான் எண்ணி
ஏங்கிய ஏக்கம் நீயறிவாய்
வன்புலால் உண்ணும் மனிதரைக்கண்டு
மயங்கி உள்நடுங்கி ஆற்றாமல்
என்பெலாம் கருக இளைத்தனன் அந்த
இளைப்பையும் ஐயநீ அறிவாய் (3450)

தலைநெறி ஞான சுத்த சன்மார்க்கம்
சந்ததம் முயலுறா தந்தோ
கலைநெறி உலகக் கதியிலே கருத்தைக்
கனிவுற வைத்தனர் ஆகிப்
புலைநெறி விரும்பினார் உலகுயிர்கள்
பொது எனக் கண்டிரங்காது
கொலைநெறி நின்றார் தமக்குளம் பயந்தேன்
எந்தைநான் கூறுவ தென்னே. (3477)

என வள்ளலார் பிற உயிர்களுக்கு நேரவிருக்கும் துன்பங்களை எண்ணி நெஞ்சங் கசிந்து பாடிய பாடல்கள் இவ்வுண்மையினை நன்கு புலப்படுத்துவனவாகும்.

எல்லாம் வல்ல இறைவனது திருவருளைப் பொருளாகக் கொண்டு தம் பாட்டின் திறத்தாலே கடவுள் உண்மையினையும், கொல்லாமை, புலாலுண்ணாமையாகிய சீவகாருண்ய ஒழுக்கத்தையும், மக்கள் எல்லோரும் ஒரு குலத்தாராய் அன்பினாலொன்றியிருந்து முழுமுதற் பொருள் ஒன்றையே மனமொழி மெய்களால் வழிபட்டு ஈறிலாப் பேரின்ப வாழ்வினை அடைந்து இன்புறுதற்கு ஏதுவாகிய சமரச சுத்த சன்மார்க்கத்தினையும் பரப்புதலையே தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருந்த வள்ளலார் நாம் பரப்ப எண்ணிய இவ்வுயர்ந்த கொள்கைகளை எல்லோரும் புரிந்து மேற்கொள்ளும் முறையில் இனிமையும், எளிமையும், தெளிவும் வாய்ந்த செந்தமிழ்ப் பாடல்களாலும், தெளிந்த உரைநடையாலும் வெளியிட்டு வந்தார்கள். வள்ளலார் அருளிய பாடல்கள் யாவும் நம் நாட்டில் கற்றோர், கல்லாதாராகிய எல்லா மக்களும் இறைவன்

திருமுன்னர் நின்று பாடிப் போற்றி 'மகிழற்குரிய இன்னிசைச் செழும் பாடல்களாக அமைந்துள்ளன என்பது யாவரும் அறிந்த செய்தியாகும். அத்தகைய பாடல்களில் சிலவற்றையேனும் இங்கு எடுத்துக்காட்டுதல் ஏற்புடையதாகும்.

இராமலிங்க வள்ளலார் தம் இளம்பருவத்திலேயே சென்னையில் கந்தகோட்டத்தில் எழுந்தருளிய முருகப் பெருமானைப் போற்றிப் பரவிய செந்தமிழ்ப்பனுவல் தெய்வ மணிமாலை என்பதாகும். அதன்கண் பாடலாக அமைந்தது,

ஒருமையுட னினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ஒன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும்
பொய்ம்மை பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்கவேவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழவேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட்டத் துள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே.
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. (8)

என்பதாகும். முன்னியது முடித்தருளும் முருகப்பெருமான் முன்னிலையில் நின்று தாம் விரும்பியவற்றை வேண்டும் முறை யிலமைந்த இப்பாடலில் பெரியோரைத் துணைக் கோடலும், சிற்றினஞ் சேராமையும் இறைவனுடைய பொருள்சேர் திறங்களைப் போற்றிப் பரவுதலும், பொய் கூறாமையும், பெருநெறியாகிய சன்மார்க்க நெறியில் ஒழுகுதலும், மக்களின் ஒற்றுமையைச் சிதைக்கும் மத வேற்றுமைக்கு இடம் கொடாதிருத்தலும், மனைவாழ்க்கைக்கு மாறான பெண்ணாசையை மறத்தலும், உயிர்க்குயிராகிய இறைவனை மறவாதிருத்தலும், நல்லறிவும், அருட் செல்வமும், பொருட் செல்வமும், நோயற்ற வாழ்வும், எங்களுக்கு அளித்தருளல் வேண்டும் என இறைவன் முன் நின்று வேண்டுதலும் ஆக உலகமக்கள் அனைவர்க்கும் உரிய உயர்ந்த

*வேண்டுகோளனைத்தும் அமைய வள்ளலார் இப்பாடலைப்பாடிய திறம் வியந்து பாராட்டுதற்குரியதாகும்.*

*இறைவன் திருவடித் தாமரைகளை இடைவிடாது சிந்தித்துப் போற்றுவார்க்கு உலகியல் வாழ்வில் பெறுதற்குரிய எல்லா நலன்களும் எளிதிற் கிடைக்கும் என அறிவுறுத்துவது,*

நீருண்டு பொழிகின்ற கார்உண்டு விளைகின்ற
நிலன் உண்டு புலனும் உண்டு
நிதியுண்டு, துதிஉண்டு, மதிஉண்டு, கதிகொண்ட
நெறியுண்டு, நிலையும் உண்டு
ஊருண்டு, பேர்உண்டு, மணிஉண்டு, பணிஉண்டு
உடையுண்டு, கொடையுமுண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தமுறும்
உளமுண்டு வளமுமுண்டு
தேருண்டு, கரியுண்டு, பரியுண்டு, மற்றுள்ள
செல்வங்கள் யாவுமுண்டு
தேனுண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியான முண்டாயில் அரசே
தாருண்ட சென்னையிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே (28)

*எனவரும் திருவருட்பா இது.*

பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கள் மித்திரர்கள்
பக்கமுண்டெக் காலமும்
பவிசுண்டு தவிசுண்டு திட்டாந்த மாகயம
படரெனும் திமிர மணுகாக்
கதியுண்டு ஞான மாங் கதிருண்டு சதிருண்டு
காய சித்திகளுமுண்டு
கறையுண்ட கண்டர்பால் அம்மைநின்தாளில்
கருத்தொன்று முண்டாகுமேல்.
நதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்டபர
ஞான ஆனந்த ஒளியே
நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே
நானெனு மகந்தை தீர்த்தென்

மதியுண்ட மதியான மதிவதன வல்லியே
மதுசூதனன் தங்கையே
வரைராசனுக்கு இருகண்மணியாயுதித்த மலை
வளர்காதலிப் பெண் உமையே.
(தாயுமானவர் 37 மலைவளர்காதலி 1)

எனவரும் தாயுமானவரின் பாடலை அடியொற்றி அமைந்திருத்தல் காணலாம்.

திருமுல்லை வாயிலை அடைந்த வள்ளலார், அங்கு எழுந்தருளியுள்ள பெருமானை நோக்கி அம்முதல்வனது திருவருளினியல்பை வினவுவதாக அமைந்தது,

தேன்என இனிக்கும் திருவருட் கடலே
தெள்ளிய அமுதமே சிவமே
வான் என நிற்கும் தெய்வமே முல்லை
வாயில் வாழ் மாசிலா மணியே
ஊன்என நின்ற உணர்விலேன் எனினும்
உன்திருக்கோயில் வந்தடைந்தால்
ஏன் எனக் கேளா திருந்தனை ஐயா
ஈதுநின் திருவருட் கியல்போ (653)

எனவரும் திருவருட்பாவாகும்.

திருவொற்றியூரில் எழுந்தருளிய எழுத்தறியும் பெருமானை நோக்கித் தம் துயர்துடைத்தருள வேண்டுமென இரந்து முறையிடும் முறையில் வள்ளலார் பாடியது, எழுத்தறியும் பெருமான் மாலை என்னும் பனுவலாகும். உலகியல் வாழ்வில் இன்னல் பல உற்றவர்கள் இறைவன் முன்னிலையில் நின்று போற்றிப் பரவுதற்கேற்ற எளிய தமிழ்நடையில் அமைந்தது இம்மாலையாகும். இதன் முதற்பாடல்,

சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை
முந்தை வினைதொலைத்துன் மொய்கழற்கா ளாக்காதே
நிந்தையுறும் நோயால் நிகழ வைத்தல் நீதியதோ
எந்தைநீ ஒற்றி எழுத்தறியும் பெருமானே (723)

என்பதாகும்.

ஞானகாயப் பெருவெளியில் திருக்கூத்தியற்றியருளும் நடராசப் பெருமானைக் குருவாகப் போற்றும் முறையில் அமைந்தது

*வள்ளலார் பாடிய நடராசபதி மாலை என்னும் பனுவலாகும். இதன்கண் அமைந்தது,*

காய்எலாம் கனியெனக் கனிவிக்கும் ஒருபெருங்
    கருணை அமுதே எனக்குக்
கண்கண்ட தெய்வமே கலிகண்ட அற்புதக்
    காட்சியே கனகமலையே
தாயெலாம் அனையஎன் தந்தையே ஒருதனித்
    தலைவனே நின் பெருமையைச்
சாற்றிட நினைத்திட மதித்திட அறிந்திடச்
    சார்கின்ற தோறும் அந்தோ
வாயெலாம் தித்திக்கும் மனம்எலாம் தித்திக்கும்
    மதியெலாம் தித்திக்குமென்
மன்னிய மெய்யறிவெலாம் தித்திக்கும் என்னில் அதில்
    வருமின்பம் என்புகலுவேன்.
தூய் எலாம்பெற்றநிலை மேல்அருட்சுகமெலாம்
    தோன்றிட விளங்கு சுடரே
துரிய வெளிநடுநின்ற பெரிய பொருளே அருட்
    சோதி நடராச குருவே, (3681)

*எனவரும் திருவருட்பாவாகும். எல்லாம் வல்ல இறைவனது புகழ்த்திறம் சிந்திக்கும் பொழுதும், பேசும் பொழுதும், சிந்தையிலும் நாவிலும் அள்ளூறித் தித்திக்கும் இயல்பினது என்பதனை இப்பாடலில் விரித்துரைத்துப் போற்றியுள்ளமை காணலாம். "அத்தன் ஆனந்தன் அமுதன்" என்றள்ளூறித் தித்திக்கப் பேசுவாய் (திருவாசகம் 157) எனவும் 'நினைத்தொறும், காண்தொறும், பேசுந்தொறும், எப்போதும் அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும் குனிப்புடையான்' (திருவா - 217) எனவும் வரும் மணிமொழிகள் இங்கு நினைக்கத் தக்கன வாகும்.*

*வள்ளலார் பாடிய அருள் விளக்க மாலையில் இரண்டாம் பாடலாக அமைந்தது,*

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த
    குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
    உகந்ததண்ணீரிடை மா்ந்த சுகந்த மணமலரே

மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல் அணிந்தருளே. (4097)

என்ற பாடலாகும்.

விளையாடும் இளம் பருவத்திலேயே என்னை மணந்து கொண்ட தலைவன் நீ என்பார், ஆடையிலே எனை மணந்த மணவாளா என அழைத்தார் (ஆடையிலே விளையாடும் பருவத்திலேயே - இளம் பருவத்திலே. ஆடையிலே என்பது உலகவழக்குச் சொல்), பாச ஞானத்தாலும் பசுஞானத்தாலும் உணர்தற்கரிய பரம்பொருளை அதன் முதல்வனது திருவருளே கண்ணாகக் கொண்டு சிந்தையிலே இடைவிடாது சிந்திக்குங்கால், அங்ஙனம் சிந்திப் போரது பிறவி வெப்பம் தணிய அவ்இறைவனது திருவடி ஞானம் தண்ணிய நிழலாய்த் தோன்றி குளிர்ச்சியை நல்கும் என்பர் மெய்கண்டார். (சூத்திரம் 9) இதனை நினைவு கூரும் முறையிலமைந்தது,

"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை
கிடைத்த குளிர்தருவே தருநிழலே"

எனவரும் தொடராகும்.

விளையாடும் இளம் பருவத்திலேயே என்னை மணந்து கொண்ட தலைவன் நீ என்பார், ஆடையிலே எனை மணந்த மணவாளா என அழைத்தார் (ஆடையிலே விளையாடும் பருவத்திலேயே - இளம் பருவத்திலே. ஆடையிலே என்பது உலகவழக்குச்சொல்), பாச ஞானத்தாலும் பசுஞானத்தாலும் உணர்தற்கரிய பரம்பொருளை அதன் முதல்வனது திருவருளே கண்ணாகக் கொண்டு சிந்தையிலே இடைவிடாது சிந்திக்குங்கால், அங்ஙனம் சிந்திப் போரது பிறவி வெப்பம் தணிய அவ்இறைவனது திருவடி ஞானம் தண்ணிய நிழலாய்த் தோன்றி குளிர்ச்சியை நல்கும் என்பர் மெய்கண்டார். (சூத்திரம் 9) இதனை நினைவு கூரும் முறையிலமைந்தது,

"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை
கிடைத்த குளிர்தருவே தருநிழலே"

எனவரும் தொடராகும்.

வெம்மை பொறாத கோடைக்காலத்திலே வழிநடப் போருக்குக் குளிர்ந்த மரநிழலும் ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரும் மெல்லென வீசுகின்ற தென்றற் காற்றும் ஒரு சேர இணைந்த நிலையில் ஏற்படும் இன்பத்தினை இறைவன் அருளால் விளையும் இன்பத்திற்கு உவமையாக எடுத்துரைக்கும் முறையில் அமைந்தது இப்பாடல்.

"மாசில்வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

எனவரும் அப்பர் தேவாரத்தின் விளக்கமாக அமைந்துள்ளமை ஒப்பு நோக்கி மகிழத்தகுவதாகும்.

உலக வாழ்க்கையில் மக்கள் விரும்பி நுகர்தற்குரிய முக்கனி களின் சாறுகள், சர்க்கரை, கற்கண்டு, தேன், பசும்பால், தேங்காய்ப்பால், இனிய வாதுமை, முந்திரிப் பருப்பின் பொடி, நல்லநெய் இவற்றையெல்லாம் கலந்து காய்ச்சிப் பதமறிந்து இறக்கிய நறும்பாகின் கட்டியைக் காட்டிலும் இன்சுவைதரும் தெள்ளிய அமுதமாகத் திகழ்வோன் கூத்தப்பெருமான் என்பதனை விரித்துரைத்துப் போற்றுவது.

தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்றாய்க் கூட்டிச்
சர்க்கரையும் கற்கண்டின் பொடியுமிகக்கலந்தே
தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலுந் தெங்கின்
தனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும்விரவி
இனித்த நறுநெய்யளைந்தே இளஞ்சூட்டினிறக்கி
எடுத்த சுவைக்கட்டியினும் இனித்திடும் தெள்ளமுதே
அனிதமறத் திருப் பொதுவில் விளங்கு நடத்தரசே
அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கலணிந்தருளே. (4106)

எனவரும் திருவருட்பாவாகும்.

"பழத்தின் இரதமாம் - பாலில் நெய்யாம்"

எனவரும் அப்பர் அருள் மொழி இங்கு நினைவுகூரத் தகுவதாகும்.

இங்ஙனம் பண்ணார்ந்த பாடலால் செந்தமிழ் மொழிக்கு வளஞ்சேர்த்த திருவருட் பிரகாச வள்ளலார், தமது உரைநடைத் திறத்தாலும், தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டு புரிந்துள்ளமை இங்குக்

குறிப்பிடத்தகுவதாகும். இராமலிங்க வள்ளலார் இயற்றி உதவிய உரைநடை நூல்களில் மனுமுறை கண்ட வாசகம், சீவகாருண்ய ஒழுக்கம் என்பன சிறப்பாகக் குறிப்பிடத் தக்கனவாகும். அருண் மொழித் தேவராகிய சேக்கிழார் நாயனார், தாம் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தில் அருளியல் ஆட்சியினை அறிவுறுத்தும் நோக்குடன் பாடியமைத்த மனுநீதி கண்ட புராணத்தை விரித்து விளக்கும் உரை நடை நூலாக அமைந்தது மனுமுறை கண்ட வாசகம் என்னும் இந்நூலாகும். இதன்கண், மனுச்சோழன் அவனுடைய பட்டத்தரசி, மைந்தன் வீதிவிடங்கன், அவனது தேர்க் காலினால் ஊரப்பட்டு இளங்கன்றினை இழந்த தாய்ப் பசு, வாயில் காவலர், மந்திரி, பழிக்குக் கழுவாய் கூறும் அந்தணாளர் முதலியோருடைய மன இயல்புகளை உலகியல் உணர்வும், கற்பனை நயமும், மெய்ப்பாட்டுணர்வும் பொருந்தவும், எவ்வுயிர்க்கும் இரங்கும் அருளின் திறம் மேம்பட்டு விளங்கவும் இனிய, எளிய தமிழ் நடையில் அருட்பிரகாச வள்ளலார் இயற்றி யமைத்துள்ளார். இந்நூலின் சொற்பொருள் அமைப்பு அறிஞர் களால் வியந்து பாராட்டத் தகுவதாகும்.

இராமலிங்க வள்ளலார் இயற்றிய சீவகாருண்ய ஒழுக்கம் என்னும் உரைநடை நூல் மூன்று பிரிவுகளை உடையதாகும். சீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு என்பது முதற்பிரிவு ஆகும். ஆன்ம இன்ப வாழ்வு என்பது இந்நூலின் இரண்டாம் பிரிவு ஆகும். சீவகாருண்யத்தின் சொரூபம் முதலியன மூன்றாவது பிரிவு. இந்நூல் முற்றுப் பெறாதது நம் தவக் குறைவேயாகும்.

அருட்பிரகாச வள்ளலார் தம் வாழ்க்கையின் குறிக்கோளாக மேற்கொண்ட சீவகாருண்ய ஒழுக்கம் பற்றிய இவ்வுரைநடை நூல், முழுமை பெற்றிருக்கு மாயின் இப்பொருள்பற்றி அடிகளார் திருவுள்ளத்தில் தோன்றிய கருத்துக்கள் அனைத்தையும் நம்மனோர் உணர்ந்து பயன் பெறுதற்கு வாய்ப்பா யிருந்திருக்கும். காழிக் கண்ணுடைய வள்ளலார் இயற்றிய ஒழிவிலொடுக்க என்ற நூலை இராமலிங்க வள்ளலார் பதிப்பித்துள்ளார்.

“வள்ளலார் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்
வள்ளன்மலர்த் தாடலைமேல் வைத்துரைத்தானுள்ளத்
தழிவிலடுக்குந்தேனை யன்பரெலா முண்ண
ஒழிவி லொடுக்கநூ லோர்ந்து”

எனவரும் ஒழிவிலொடுக்கச் சிறப்புப் பாயிரப் பாடலுக்கு இராமலிங்க அடிகளார் பேருரை வரைந்துள்ளார்கள். இவ்விளக்கம் "ஒழிவிலொடுக்கப் பாயிர விருத்தி" யென்ற பெயரால் வழங்கப் படுகிறது. இப்பாடலில் வள்ளல் குருராயன் என்ற பெயர்கள் திருஞான சம்பந்தப் பிள்ளையாரைக் குறித்தனவாகும்.

"குருராயன் என்பது திருஞானசம்பந்தப் பிள்ளையார்க்குச் சிறப்பிற் சிறப்பால் காரணப் பெயராய் நின்று ஓதியுணர்ந்து பன்னாள் பல சாதனங்களில் முயன்று முயன்று ஆசாரியத் தன்மை ஒருவாறு அரிதிற் கிடைக்கப் பெற்றும், ஒரோர் காலங்களில் அவத்தை வயப்பட்டு மயங்கும் மற்றை ஆசாரியார் போலாது ஓதாமல் வேதாக மாதிகளை முற்றுமுணர்ந்து இறைப்போதும் ஓர் சாதனங்களில் முயன்றதின்றி ஞானசாரிய அருள் இலக்கணங்கள் அனைத்தும் தாமே தம்பால் நிரம்பி நிற்ப அமர்ந்தனர் என்பதூஉம், ஓதியுணர்ந்த அவ்வாச்சாரியர்க்கெல்லாம் அவரவர் அறிவின்கண் அருவுருவாய் நின்று அறிவித்தும் ஆசாரிய உருவாய் வெளிநின்று அநுக்கிரகித்தும் நின்றனர் என்பதும், திருநோக்கம் செய்தல் முதலிய அறுவகைத் தீக்கையானும் அன்றித் தமது திருவுருவைக் காண்டல் நினைத்தல் மாத்திரையே பக்குவரல்லாரும் பக்குவராய்ப் பயன் பெற நின்ற திருவருட் பெருமையர் என்பதூஉம் குறித்த தென்றுணர்க. இங்ஙனம் ஓதாமல் வேதாக மமாதி உணர்ந்தமை முதலியவற்றை ஆசிரியர் கூறிய தன்மையு முன்னிலையும்" என்னும் திருவெண்பாவாற் காண்க.

அல்லதூஉம், குருராயன் என்பதும் வாதுவென்ற சம்பந்தன் என்பதற்கு மேனிற்க வைத்த விதப்புக் குறிப்பால் பிள்ளையார் இவ்வவதாரத்தின் மேனின்ற அவதாரத்தினும் குமார சற்குருவாய் அரனார்க்கும், அகத்தியனார்க்கும், உபதேசித்தருளிய ஆசாரியத் தலைமையும் குறித்ததெனக் கொள்க. அருணகிரிநாதர்,

> தென்னவனங் கனஞ்சூழ் காத்திரிநக சூலகரத்
> தென்ன வனங்கனந் தப்பத நீட்டினன் செல்வமும் பின்ன
> தென்னவனங்கனன் னீற்றாற்றிருத்திய தென்னவின்னந்
> தென்னவனங்கனங்கைச் சிலைக் கூனையும் தீர்த்தருளே.

என்றதனால், பிள்ளையார் இவ்வவதாரத்திற்கு மேனின்ற அவதாரத்தில் குமாரசற்குரு வென்பது காண்க,

*கல்லாடம்,*

உழன் மதிற் சுட்ட தழனகைப் பெருமான்
வணங்கி நின்றேத்தக் குருமொழி வைத்தோய்
குருமணி தேற நெடுமறைவிரித்தோய்.

*சித்தியார்.*

*"அருமறை ஆகமம் அங்கம் அருங்கலைநூல் தெரிந்த அகத்தியனுக் கோத்துரைக்கும் அருட்குருவாம் குருவை" என்பவைகளால் அரனார்க்கும் அகத்தியனார்க்கும் உபதேசித்த ஆசாரியத் தலைமையை உணர்க".*

*என இராமலிங்க வள்ளலார் ஆளுடைய பிள்ளையாரைக் குருராயன் என்ற பெயரால் காழிக்கண்ணுடைய வள்ளலார் குறித்தற்குரிய காரணத்தினை மேற்கோள் தந்து விளக்கியுள் ளார்கள். இவ்விளக்கம் இராமலிங்க வள்ளலாரது செந்தமிழ் உரைநடைத் திறத்திற்கும் பல நூல்களையும் ஓதாது உணர்ந்த புலமை நலத்திற்கும் சிறந்த இலக்கியமாகத் திகழ்தல் காணலாம்.*

*இராமலிங்க அடிகளார் காழிக்கண்ணுடைய வள்ளலார் இயற்றிய ஒழிவில் ஒடுக்கத்திற்குப் பேருரை வரையத் தொடங்கியதன் காரணம் கண்ணுடைய வள்ளலார்பால் இராமலிங்க அடிகளாருக் குள்ள பேரீடுபாடே யாகும்.*

*அடிகளார் பரப்ப எண்ணிய சீவகாருண்ய ஒழுக்கத்திற்கும், ஆழ்ந்த முடிவின் அனுபவ நிலைக்கும் நிலைக்களனாகத் திகழ்வன காழிக்கண்ணுடைய வள்ளலார் சிவஞான வள்ளார் ஆகியோர் நூல்களாகும்.*

*இவ்வுண்மை, வள்ளலார் சாத்திரங்களில் ஒன்றாகிய ஞான விளக்கம் என்ற நூலில் சீவகாருண்ய விளக்கம், இடம் பெற்றிருத் தலாலும், உபதேச மாலை என்ற நூலில் கொல்லா விரதத்தின் இன்றியமையாமை விரித்துரைக்கப் பெறுவதாலும்,*

'சித்தாந்தம் வேதாந்தம் செப்புதத்து வாந்தமிசை
புத்த கலாந்தமொடு போதாந்தஞ் - சுத்தமா
நாதாந்த மென்றிவைக ளாறு நவையென்றே
மீதானந் தேடி விடு.' (வள்ளலார் சாத்திரம் உபதேசமாலை - 40)

எனவரும் பாடலில் ஆறந்த உபதேசம் இடம்பெற்றிருத்தலாலும் நன்கு துணியப்படும்.

காழிக் கண்ணுடைய வள்ளலார் ஞானசம்பந்தப் பிள்ளை யாரைக் குருவாகக்கொண்டு ஒழுகியது போலவே இராமலிங்க அடிகளாரும் ஞானசம்பந்தரைக் குருவாகக் கொண்டு வழி பட்டமையாலும் இருவர்க்கும் வள்ளல் என்ற சிறப்புப்பெயர் வழங்கி வருவதாலும், காழிக் கண்ணுடைய வள்ளலார் நூல்களுக்கும் அருட்பிரகாச வள்ளலார் திருவருட்பாவுக்கும் நெருங்கிய தொடர் பிருத்தல் வேண்டும் என எண்ண வேண்டி யுள்ளது.

இராமலிங்க வள்ளலார் "தொண்டைமண்டலசதகம்" என்பதற்குத் தொண்டமண்டலம் என்னும் பெயர் இலக்கணமும் வழிபடுகடவுள் வணக்கப் பாட்டுரையும் வரைந்து அந்நூலைப் பதிப்பித்துள்ளமை பலரும் அறிந்த செய்தியாகும்.

திருத்தொண்டர் வரலாற்றினைக் காப்பியமாக இயற்ற வெண்ணியசேக்கிழார் அடிகட்குத் தில்லையம்பலவாணர் - முதலாக எடுத்துக் கொடுத்தருளிய மொழி "உலகெலாம்" என்பதாகும். இறைவனது அருள்வாக்காகிய "உலகெலாம்" என்னும் மெய்ம் மொழியாற் கட்டப்பட்ட பொருளைப் பல்லாற்றானும் விரித்து விளக்கும் முறையில் இராமலிங்க வள்ளலார் எழுதிய உரைநடை நூல் "உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கம்" என்பதாகும்.

> 'சுவை, யொளி, ஊறு, ஓசை நாற்றமென் றைந்தின்
> வகைதெரிவான் கட்டே உலகு' (திருக்குறள் - 27)

எனத் திருவள்ளுவரும்

> "வனந்தம் மண்ணினந்தம் வைத்து வைத்துப் பார்க்க எனக்கு
> ஆனந்தம் தந்த அரசே பராபரமே" (பராபரக்கண்ணி - 13)

எனத் தாயுமானாரும் கூறிய வண்ணம், தத்துவங்களின் அமைப்பில் உலகங்களைப் பல்வேறு வகையாக வள்ளலார் வகுத்துக் காட்டி யுள்ளார். இவ்வாறு ஒரு பொருளைப் பல்வேறு வகையாகப் பகுத்துக் காணும் அடிகளாரது கற்பனைத் திறத்திற்கு இவ்வுரை நடைநூல் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது.

வள்ளலார், தமிழ் என்னும் சொல்லுக்கிட்ட உரையும் மூலிகைக் குண அட்டவணை முதலிய மருத்துவக் குறிப்புக்களும் நித்தியகருமவிதி என்னும் நூலும் உபதேசக் குறிப்புக்களும், சுப்பிரமணியம், அருள் நெறி, திருவருள் மெய்ம்மொழி, பேருபதேசம் என்னும் கட்டுரைகளும் மக்கள் இம்மையினும், மறுமையினும் இன்பம் பெறுதற்குரிய சிறந்த பொருள்களை அறிவுறுத்தும் உரைநடை நூல்களாகும்.

சாதிசமய வேறுபாடின்றி மக்கள் எல்லோரும் எல்லாமாகிய தனிப் பெருந்தலைமை அருட்பெருஞ்சோதி ஆண்டவராகிய இறைவன் திருமுன் நின்று வழிபடும் நிலையில் இறைவனைநோக்கி, எல்லோரும் சேர்ந்து நின்று ஒரு குரலாக வேண்டும் வேண்டு கோளாக அமைந்தன.

1. சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்.
2. சமரச சுத்த சன்மார்க்கச் சத்தியப் பெரு விண்ணப்பம்.
3. சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்.

எனவரும் உரைநடை விண்ணப்பங்களாகும். இவ்விண்ணப் பங்கள் உலகமக்கள் அனைவரையும் ஒரு குடும்பத்தவராகவும், ஆருயிர்கள் அனைத்தையும் ஓரினமாகவும் உலக முதல்வனை அம்மையப் பனாகவும் கொண்டு எல்லா உயிர்களிடத்தும் இரக்க முடையராய் வாழும் வண்ணம் அருட் பிரகாச வள்ளலார் திருவுள்ளத்திற் கருதி வகுத்தருளிய அருளியல் வாழ்க்கையின் ஒழுங்குமுறையினை நன்கு வற்புறுத்துவன. இத்தகைய நல்வாழ்க்கைக்கு அரண் செய்யும் வண்ணம் இறைவனது திருவருளை வேண்டும் முறையில் இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், சீவ ஒழுக்கம், ஆன்ம வொழுக்கம் ஆகியவற்றின் இன்றியமையாமையை வற்புறுத்தும் முறையில் இவை அமைந்துள்ளமை காணலாம். இவ்விண்ணப்பங்களை ஊன்றிச் சிந்திப்பவர்கள் ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கியமாக வாழ்ந்தவர், அருட்பிரகாச வள்ளலார் என்பதனை நன்குணரப் பெறுவர் என்பது திண்ணம்.

நான்காவது உரைநடை விண்ணப்பமாக அமைந்தது, 'சமரச சுத்த சன்மார்க்க சங்கச் சத்திய விண்ணப்பம். இது, வள்ளலார் வகுத்த சமரச சன்மார்க்க சத்திய சங்கத்தின் உறுப்பினராகிய அன்பர்கள் அனைவரும் வடலூர்ப் பெருவெளியில் உள்ள சுத்த

சிவானுபவ ஞான சபையில் ஒருங்குகூடி அருட்பெருஞ்சோதி ஆண்டவரை முன்னிலைப்படுத்தி வேண்டும் சிறப்புடைய விண்ணப்பமாகும். இவ்விண்ணப்பத்தில் மக்கள் அடைதற்குரிய தேக சுதந்தரம், போக சுதந்தரம், ஜீவ சுதந்தரம் என்னும் மூவகைச் சுதந்தரங்களும், நீங்கிய இடத்தேதான் இவற்றிற்கு மேலாகிய திருவருட் சுதந்தரம் நமக்குக் கிடைக்கும் என்ற உண்மை நன்கு வலியுறுத்தப் பெற்றுள்ளமை காணலாம்.

அருட்பிரகாச வள்ளலார், தம்பால் அன்புடைய மாணவர் கட்கும், பெருமக்கட்கும், அறிஞர்கட்கும், தம் திருக்கரத்தில் வரைந்த கடிதங்களாகிய திருமுகங்கள் அடிகளாரது தெளிந்த தமிழ் உரைநடைத் திறத்தினையும், தம்பால் அன்புடையவர்களது நல்வாழ்க்கையில் அடிகளார் கொண்டிருந்த ஈடுபாட்டினையும், தம் அன்பர்கள் வறுமையாலும் பிணியாலும் துன்புற்ற நிலையில் அத்துன்பங்களைக் களையும் திறத்தில் இரக்கவுணர்வுடைய வள்ளலார் மேற்கொண்ட இறையருள் வழிப்பட்ட முயற்சி யினையும் நன்கு புலப்படுத்தும் நிலையில் அமைந்துள்ளமை காணலாம். இத்திருமுகங்களை ஊன்றி நோக்குவோர் இறைவன் திருவருள்வழி அன்றி எதனையும் செய்ய முற்படாத வள்ளலாரின் உள்ளப் பாங்கினையும், தம்பால் அன்புடையோருடைய வேண்டு கோளையும் மறுக்காது உடன்படும் நிலையில் வள்ளலாருக்கிருந்த கண்ணோட்டத்தினையும் தெளிவாக உணரப் பெறுவார்கள்.

இராமலிங்க வள்ளலார், தமது குறிக்கோளாகிய சீவகாருண்ய ஒழுக்கத்தினை மக்களிடையே பரப்புதல் வேண்டிச் சமரச வேத தர்மசாலை தொடங்கும் பொழுது, சாலைத் தொடக்க விழா அழைப்பாகவும், சாலை விளம்பரமாகவும், சாலை அன்பர்களுக்கு இட்ட கட்டளையளாகவும், ஞானசபை விளம்பரமாகவும், சபையில் உள்ளார்க்கு இட்ட ஒழுக்கக் கட்டளையாகவும், சன்மார்க்கப் பிரார்த்தனையாகவும், சபை வழிபாட்டு விதியாகவும் சித்திவளாக அமைப்பும் அதுபற்றிய வழிபாட்டு விதியாகவும் உரைநடையில் பல்வேறு விண்ணப்பங்களை எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

சன்மார்க்க சங்கக் கொள்கைகளைப் பரப்புதற் பொருட்டு "சன்மார்க்க விவேக விருத்தி" என்னும் பத்திரிகை ஒன்றினையும் தொடங்கியுள்ளார்கள்.

இளைஞர்முதல் முதியோர்வரை யாவர்க்கும் சன்மார்க்க நெறியைப் போதிக்கும் நிலையில் "சன்மார்க்க போதினி", என்கிற சாத்திரப் பாடசாலை ஒன்றினையும் தொடங்கி நடத்த எண்ணி இருந்தார்கள்.

இவ்வாறு மாணாக்கர் பலருக்கும் உயர்ந்த நூல்களைப் பாடஞ் சொல்லியும், ஒழிவிலொடுக்கம், சின்மய தீபிகை போன்ற தத்துவ நூல்களை விளக்கக் குறிப்புடன் சிறந்த முறையில் பதிப்பித்தும், சீவகாருண்ய ஒழுக்கம் பற்றியும் சன்மார்க்க நெறி பற்றியும் பொதுமக்கள் நன்குணர்ந்து கொள்ளும் முறையில் பத்திரிகை தொடங்கியும், தம்மை அடைந்தோர்களின் ஐயங் களைப் போக்கி மெய்யுணர்வளித்தும் இவ்வாறு நூலாசிரிய ராகவும், உரையாசிரியராகவும் போதகாசிரியராகவும், ஞானாசிரி யராகவும், பதிப்பாசிரியராகவும், இதழாசிரியராகவும் விளங்கிச் செந்தமிழ் வளர்த்த பெருந்தவச் செல்வர் வடலூர் இராமலிங்க வள்ளலார் ஆவார் என்பதனைத் தமிழ் உலகம் நன்கு உணர்தல் வேண்டும்.

சன்மார்க்க நெறி கண்ட சான்றோராகிய இராமலிங்க வள்ளலார், பாட்டும் உரையுமாக வளர்த்த செந்தமிழ், சாதி சமய வேறுபாடற்ற நிலையில் உலக மக்கள் எல்லோரையும் ஒரு குடும்பத்தாராக அன்பினால் ஒத்து வாழும் முறையில் ஒன்று படுத்தும் ஆற்றல் வாய்ந்த தாகும்; சிந்தனைக்கெட்டாத சிவபரம் பொருளை நாட்டு மக்கள் உள்ளத்திலே நிலைபெறச் செய்து உலகமக்களில் ஒத்தார், உயர்ந்தார், தாழ்ந்தார் என்னும் வேறுபா டின்றி ஒருமையுணர்வினராகி உலகியல்லாட்சியை நடத்தும் உரிமை வாழ்வினைத் தரும் ஆற்றல் வாய்ந்ததாகும்.

சிவயோகியராகிய திருமூலநாயனார் முதல் தாயுமான அடிகள் ஈறாகத் தமிழகத்தில் வாழ்ந்த ஞானச் செல்வர்கள் அருளிய நூல்களிற் கூறப்பட்ட தத்துவ உண்மைகளும், அருள் அநுபவங்களும் ஆகியவற்றின் தெளிவாகத் திகழ்வது, வள்ளலார் வளர்த்த செந்தமிழ் எனக் கூறுதல் பொருந்தும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர் எனவும், ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனவும், நம் தமிழ் முன்னோர்கள் அறிவுறுத்திய உலக ஒருமைப்பாட்டினை மீண்டும் நிலைபெறச் செய்யும் ஆற்றல்

வாய்ந்தது, வள்ளலார் வளர்த்த செந்தமிழே எனக் கூறுதல் பொருத்தமுடையதாகும்.

அருணகிரிநாதர், தாயுமானவர் முதலிய அருளாளர்கள் பாடிய பாடல்களைச் சேய்மையில் இருந்து கேட்போர் இப்பாடல் இன்னார் பாடியது என இனந்தெரிந்து கொள்ளுமாறு போலவே, இராமலிங்க வள்ளலார் பாடிய பாடல்களைக் கேட்போர் இப்பாடல் திருவருட்பாவைச் சேர்ந்தது என இனம்புரிந்து கொள்ளும்படி தமக்கென ஒருமொழி நடையை உருவாக்கிக் கொண்ட சிறப்பு வள்ளலார்க்கு உரியதாகும்.

# 13. செந்தமிழ்ப் புலமையினைத் தூண்டும் திருவருட்பா

அருட்பிரகாச வள்ளலார் பாடிய திருவருட்பாப் பனுவலில் பொதுமக்கள் எல்லோர்க்கும் பொருள் இனிது விளங்கக் கூடிய எளிய தமிழ்ச் சொற்களால் இயன்ற பாடல்களே மிகுதியாக உள்ளன. எளிய சொற்களால் இயன்றும் அரிதின் முயன்று நுண்ணிதின் ஆராய்ந்து உணர்தற்குரிய அரும்பொருட்களையும் வள்ளலார் பாடியுள்ளார். உணர்தற்கரிய பொருள்களையும், எண் பொருளவாக எல்லோரும் உணர்ந்து கொள்ளும்படி தெளிந்த சொல் நடையில் விரித்துக் கூறுதலும், கல்வியில் வல்லவர்களே நுண்ணிதின் ஆராய்ந்து உற்றுணரும் முறையில் திட்பமும் நுட்பமும் செறியக் கூறுதலும் ஆகிய இருவகை மொழி நடையும் மொழியின் வளர்ச்சிக்கு இன்றியமையாதன. இவற்றுள் எளிய நடையானது சொல்வோரது சொல்வன்மையை வளர்க்குந் தன்மையது. அரிய நடையானது கேட்போரது சிந்தனையைத் தூண்டி அவர்க்கு உய்த்துணரும் ஆற்றலை மிகுவிப்பதாகும். எனவே சொல்வோர், கேட்போர் என்னும் இருதிறத்தாருடைய உணர்வினையும் விரிவடையச் செய்யும் நிலையில் எளிய சொல் நடையும் அரியசொல் நடையுமாகிய இருவகை மொழி நடைகளும் ஒரு மொழியின் வளர்ச்சிக்கு இன்றியமை யாதனவே எனக்கருதிய இராமலிங்க வள்ளலார், எல்லோரும் எளிதிற் பொருளுணர்தற் குரிய தெளிந்த செழும் பாடல்களையும் ஆராய்ந்துணர்தற்குரிய குறிப்புடைய அரும்பொருட் பாடல்களையும் இயற்றியுள்ளார்கள். அவற்றுள் நுண்ணிதின் உணரும் அரும்பொருட் பாடல்களாக வள்ளலார் பாடிய திருவருட்பாப் பனுவல்களில் ‘இங்கித மாலையும்’ ஒன்று இதன்கண் ஒருதொடரினையே இருபொருள் படவும் மூன்று பொருள் படவும் ஆண்டுள்ள இடங்கள் பல

*உள்ளன. பிச்சைத் தேவராய் வந்தருளிய இறைவன் கூறிய மொழிகளும், அப்பெருமானை நோக்கிப் பிச்சையிட வந்த தலைவி கூறிய மொழிகளும், இத்தகைய சிலேடை அணிக்குரிய சிறந்த இலக்கியமாக அமைந்தமை முன்னர்க் கூறப்பட்டது. இவ்வாறே அடிகளார் பாடிய அருண்மொழிமாலை, இன்பமாலை என்பனவும் குறிப்பிற் பொருளுணர்த்தும் பல பொருள் தொடர்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குதல் காணலாம்.*

தளிநான் மறையீர் ஒற்றிநகர்
தழைத்து வாழ்வீர் தனிஞான
வெளிநா வரசை யைந்தெழுத்தா
லுவரி கடத்தி னீரென்றேன்
களிநாவலனை யீரெழுத்தாற்
கடலில் வீழ்த்தி னேமென்றார்
அளிநாண் குழலா யென்னடியவ்
வையர் மொழிந்த அருண்மொழியே. (1743)

*எனவரும் அருண்மொழிமாலைப்பாடல், ஆருயிர்த் தலை வனாகிய இறைவனுக்கும் அம்முதல்வன்பால் காதல் கொண்ட தலைவி யாகிய தனக்கும் இடையே நிகழ்ந்த இனிய உரையாடல் களைத் தலைவி தோழிக்கு உரைப்பதாக அமைந்ததாகும். "ஒற்றியூர்த் திருக்கோயிலில் நான் மறைப்பொருளா யெழுந்தருளிய இறைவனே, ஒற்றி நகர் செல்வ வளத்தால் தழைக்கும் வண்ணம் வாழ்பவரே ஒப்பற்ற சிவஞான ஒளிபெற்ற திருநாவுக்கரசரைத் திருவைந் தெழுத்தால் உவரி கடத்தினீர்" (கடலினின்றும் கரையேற்றியருளினீர்) என்று கூறினேன். (அதுகேட்ட இறைவர்) களிப்பு மிக்க நாவலூரில் தோன்றிய நம்பி ஆரூரனை இரண்டெழுத்தால் கடலில் வீழ்த்தினோம் என்று கூறுகின்றார். வண்டுகள் மொய்க்கும் மலரணிந்த கூந்தலையுடைய தோழியே! அத்தலைவர் கூறிய அருண் மொழியின் பொருள்தான் என்னேடி" என்பது இப்பாடலின் பொருளாகும். இதன்கண், நாவரசை ஐந்தெழுத்தால் உவரி கடத்தினீர் எனவரும் தலைவியின் கூற்று, நாவரசைத் திருவைந்தெழுத்தின் துணையால் கடலினின்றும் கரையேற உதவிய நீவிர் நும்பால் காதல் கொண்டு துயர்க் கடலில் வீழ்ந்து வருந்தும் என்னையும் கரையேற்றி உய்வித்தருள்வீராக என வேண்டும் குறிப்பினதாகும். (அது கேட்ட இறைவர்) களி நாவலனை*

ஈரெழுத்தால் கடலில் வீழ்த்தினோம் எனக் கூறியது, "கடலினின்றும் கரையேற்றுதல் மட்டும் எனது தொழிலன்று, அன்புடைய தோழர்களைக் கடலில் விழச்செய்து வேடிக்கை பார்த்தலும் எனது தொழிலேயாம் என்னும் குறிப்பினதாகும். இத் தொடரில் ஈரெழுத்து எனப்பட்டது. 'ஆசை' என்பதாகும். நாவலர்கோன் ஆரூரரின் உள்ளத்தில் தோன்றிய "ஆசை" யென்னும் இரண்டு எழுத்தினால் (அவனைக்) கடலில் (பரவையில்) விழச் செய்தோம், என்பது இத்தொடரின் பொருளாகும். இங்குக் கடல் என்றது, அதன் பரியாயப் பெயராகிய 'பரவை' என்ற சொல்லால் நங்கை பரவையாரைக் குறித்து ஆளப்பெற்றதாகும். நங்கை பரவையாரைக் காதலித்த நம்பியாரூரர் பரவையாரை அடையவேண்டுமெனத் தம்பால் தோன்றிய ஆசை எழு கடலினும் பெரியதாகும் எனத் தனித்திருந்து இரங்குவதாக அமைந்தது,

> பேர்பரவை பெண்மையினில் பெரும்பரவை விரும்பல்குல்
> ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை
> சீர்பரவை ஆயினாள் திருவுருவின் மென்சாயல்
> ஏர் பரவை இடைப்பட்ட என்னாசை எழுபரவை. (பெரிய-தடுத்தாட் - 148)

எனவரும் திருத்தொண்டர் புராணச் செய்யுளாகும். "இவளது பேர் நங்கை பரவை, இவளது பெண்மைக் குணங்களைக் கூறுமிடத்துப் பெரிய தேவரவை விரும்புகின்ற திலோத்தமை அரம்பை முதலிய மகளிரும் துதிக்கத் தக்க தெய்வமாகும். வரிசையாக விளங்கும் அழகிய பற்கள் முல்லை யரும்புகளாகும். திருமகளும் விரும்பும் அழகுடைய இவளது உடம்பின் அழகிய, மெல்லிய, சாயலின் பரப்பினுள் அகப்பட்ட என்னுடைய ஆசையானது ஏழுகடல் போன்றதாகும்" என்பது இதன் பொருளாகும். இச்செய்யுளில், திருவுருவின் மென்சாயல் ஏர் பரவையிடைப் பட்ட என் ஆசை எழுபரவை என வரும் தொடர்ப் பொருளை உள்ளத்தில் கொண்ட இராமலிங்க வள்ளலார் "களிநாவலனை ஈரெழுத்தால் கடலில் வீழ்த்தினேம்" என இறைவரது கூற்றில் வைத்து உணர்த்தினார். இத் தொடரில் ஈரெழுத்து என்றது 'ஆசை' என்னும் குறிப்பினது. கடல் என்றது அதன் பரியாயப் பெயராகிய 'பரவை' யென்ற பெயரால் அழைக்கப்படும் நங்கை பரவையாரைக் குறிக்கின்றது. இந்நுட்பம் மேற்காட்டிய பெரியபுராணச் செய்யுளோடு இச்செய்யுளை ஒப்பிட்டு நோக்குங்கால் நன்கு புலப்படுதல் காணலாம்.

“களிநாவலனை ஈரெழுத்தால் கடலில் வீழ்த்தினேம்” எனவரும் இத்தொடர், பெரியபுராணத்தில் வள்ளலார் கொண்டுள்ள ஆழ்ந்த புலமைத் திறத்தினையும் குறிப்புப் பொருள்படப் பாடலியற்றும் வள்ளலாரின் கவித்திறத்தினையும் ஒருங்கு புலப்படுத்துதல் காணலாம்.

சிற்சபையில் நடம்புரியும் கூத்தப் பெருமானை அறுகம் புல்லினால் அர்ச்சித்து வழிபட்டால் இவ்வுலக வாழ்வில் உயர்ந்த பதவிகளையும் மறுமையில் வீடுபேறாகிய முத்தியினையும் பெறலாம் என அறிவுறுத்துவது,

> பகுதி தகுதி விகுதி எனும் பாட்டில்
> இகலில் இடையை இரட்டித் - தகவின்
> அருச்சித்தால் முன்னாம் அது கடையாம் கண்டீர்
> திருச்சிற் சபையானைத் தேர்ந்து. (2724)

எனவரும் வெண்பாவாகும். பகுதி, தகுதி, விகுதி என்னும் சொல் வாய்பாடுகளை முன்னே நிறுத்தி, அச்சொற்களின் இடையே அமைந்த ‘கு’ கர எழுத்தை இரட்டியாக்கி (மூவிரண்டு, ஆறு, ‘கு’ அறுகு, ஆக்கி) அவ்வறுகம் புல்லினால் சிற்சபையில் ஆடல் புரியும் இறைவனைத் தகுதியுடன், அருச்சித்து வழிபட்டால் அம்மூன்று சொற்களின் இறுதி எழுத்தாகிய “தி” என்பதன் மும்மை, அஃதாவது ‘முத்தி’, வீடுபேறுமுடிவில் உளதாகும் என்பது இப்பாடலிற் குறிக்கப்படும் குறிப்புப் பொருளாகும். பகுதி, தகுதி விகுதி என்னும் சொற்களுள் இடையிலுள்ள ‘கு’ கரத்தை இரட்டியாக்குதலாவது மூன்று சொற்களின் இடையிலுள்ள ‘கு’கரம் மூன்றினையும் இரட்டி ஆறு “கு” ஆக்குதல், ஆறு-கு-அறுகு, என்றது அறுகம்புல்லினை. முன் என்றது, இங்குக் குறித்த மூன்ற சொற்களின் முதல் நின்ற எழுத்துக்களின் சேர்க்கையாகிய ‘பதவி’யினை. கடை என்றது, அச்சொற்களின் இறுதி எழுத்தாகிய மூன்று - ‘தி’ கரத்தினை (மூன்று தி- முத்தியினை).

இவ்வாறு குறிப்பிட்ட சில சொற்களை எடுத்துக் கொண்டு, அவற்றின் முதலிலும், இடையிலும், கடையிலும் நின்ற எழுத்துக் களைத் தனித்தனியே பிரித்து வெவ்வேறு சொற்களாக்கிக் குறிப்பினால் பொருளுணர்த்தும் முறையில் வள்ளலார் பாடிய பாடல்கள், எழுத்தியலமைப்பில் “மிறைக் கவி” (சித்திரகவி) புனையும் அவர் தம் புலமைத் திறத்துக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன.

வறுமையால் வருந்திய நாங்கள், ஈகைக் குணமில்லாத புல்லரை அணுகித் தாதா (வள்ளலே) எமக்கு வேண்டும் பொருளைத்தா (தருவாயாக) எனக் கேட்டுப் பயன்சிறிதும் பெறாது அலைந்து வருந்தினோம். ஒளி மழுங்காத மாணிக்க மணியே! திருவைந்தெழுத்தின் பொருளாகத் திகழ்பவனே! எம் தந்தையே! என உனது பெரும்புகழைப் போற்றித் துதித்து உய்தி பெறும்படி (எம் தலைமேல் நான்முகன்) எழுதாக் குறைக்கு நாங்கள் என்ன செய்ய முடியும். இதுவரையில் பட்ட துன்பம் எங்களுக்குப் போதாதா" என எல்லாம் வல்ல இறைவனை நோக்கி வருந்தி முறையிடும் நிலையில் அமைந்தது,

தாதாதா தாதாதா தாக்குறைக்கென் செய்குதும்யாம்
தாதாதா என்றுலகில் தான் அலைந்தோம் - போதாதா
நந்தா மணியே நமச்சிவாயப் பொருளே
எந்தாய் எனப்புகழ வே. (2725)

எனவரும் வெண்பாவாகும். இதன் முதலடியில் தா, தா, தா, தா, தா, தா, தா என வந்துள்ள ஏழு 'தா' என்னும் எழுத்துக்களின் பின் 'குறை' என்ற சொல்லை இயைத்தால் ஏழுதாக்குறை என்றாகும். ஏழு தாக்குறை = எழு தாக்குறை; என்றது, படைத்தற் கடவுளாகிய நான்முகன் உயிர்களை, மக்களுடம்போடு படைக்கும்பாலத்து, அவரவர் செய்தற்குரிய வினைகளையும் அவற்றின் பயன்களையும் அவரவர் தலையில் எழுதி வைப்பான் என்பது நம் சமயத்தவர் நம்பிகையாகும். இவ்வாறு எழுதும் பொறுப்புடைய நான்முகன், எங்கள் தலையில் எழுதும் போது 'இறைவனைப் புகழ்ந்து உய்தி பெறுக' என்று எழுதியிருப்பானானால் நாங்கள் உலகில் தகுதி யில்லாதாரைப் புகழ்ந்து ஒரு பயனும் பெறாது அலைந்து வருந்தியிருக்கமாட்டோம். இவ்வாறு அலைந்து வருந்தியது எங்கள் குறையன்று. இறைவனாகிய நின்னைப் புகழ்க என்று நான்முகனார் எங்கள் தலையில் எழுதாத குறையேயாகும் என இறைவனை நோக்கி அடிகளார் முறையிட்டுள்ள நயம் வியந்து பாராட்டுதற் குரியதாகும்.

ஆன்ம எழுத்து எனப்படும் "ய" என்னும் தமிழ் எண்ணாகிய "யகரத்தை ஐ (இறைவன் ஆகிய சிவத்துக்குப் பின்னால் வைத்து (சிவய" என) ச் செபித்தால் 'ஆ' வுடன் கூடிய ஈரைந்து (பத்தினையும்) ஆபத்தினையும் 'வி' யுடன் கூடிய ஈரைந்து (பத்தினையும்)

*விபத்தினையும் நீக்கும் ஆற்றல் பெறலாம். ஆவி = ஆன்ம இயல்பினை; ஈர் (கெடுக்கும்) ஐந்து = ஐவகை மலங்களையும் அகற்றலாம் - நீக்கலாம் - ஆவிக்கு - ஆன்மாவுக்கு உறுதியாகிய ஈரைந்து - (பத்தினையும் பற்றினையும் - அன்பினையும்) உறலாம் - பொருந்தலாம். (ஐந்தெழுத்தினைச் சேர்த்துச் செபிக்கும் முறையினை) ஆராய்ந்து (ஆவியாகிய) பிராணனது கலைகள் ஈரைந்து (பத்துடன்) ஓர் இரண்டையும் பன்னிரண்டினையும் கழியாமல் சேர்த்துக் கட்டிக் கொள்ளலாம் என அறிவுறுத்துவது,*

ஆவி யீரைந்தை அபரத்தே வைத் தோதில்
ஆவி யீரைந்தை அகற்றலாம் = ஆவியீர்
ஐந்துறலாம் ஆவி யீரைந் தறலாம் ஆவியீர்
ஐந்திடலாம் ஓரிரண்டோ டாய்ந்து. (2578)

*எனவரும் திருவருட்பாவாகும் இதன் கண் ஆவியீரைந்து என்றது, ஆன்ம எழுத்தாகிய "ய" என்னும் தமிழ் எண்ணின் குறியீடாயுள்ள யகரத்தை. "ஐ" என்றது, இறைவனைக் குறிக்கும் எழுத்தாகிய 'சி' கரத்தை, அபரத்தே வைத்தோதின் - முற்குறித்த 'ய' கரத்தை, 'சி' கரத்தின் பின்னே வைத்தோதினால்; அபரம் = பின், திருவைந் தெழுத்தினை ஓதுங்கால் இறை எழுத்தாகிய. சிகரத்தின் பின் ஆன்ம எழுத்தாகிய 'ய' கரத்தை ஓதும் முறையில் ஓதவேண்டும் என வற்புறுத்தும் நிலையில் 'ஆவி ஈர் ஐந்தை அபரத்தே வைத்தோதின்' என்றார். இரண்டாம் அடியில் ஆவியீரைந் தென்றது, 'ஆ' கார எழுத்தின் பின்னும், "வி" என்ற எழுத்தின் பின்னும் இயைந்த பத்தினை; ஆவின் பின் இயைந்த பத்து ஆபத்து; 'வி'யின் பின் இயைந்த பத்து விபத்து; சூக்கும் ஐந்தெழுத்தினை முறைப்படி ஓதினால் உலகில் நேரும் ஆபத்தையும் விபத்தையும் அகற்றலாம் என அறுவுறுத்துவது ஆவியீரைந்தை யகற்றலாம் என்ற தொடராகும். ஆபத்து - அச்சத்தை விளைவிக்கும் பொருள்களால் நேரும் துன்பம். விபத்து - எதிர்பாராத வகையில் இயற்கை மாற்றங்களால் நேரும் துன்பம். ஆவி ஈரைந்து உறலாம் = ஆன்மாவுக்கு உறுதியாகிய பத்து (பத்தியினைப்) பெறலாம். இங்குப் பத்து என்னுஞ் சொல் பத்தி என்ற பொருளில் வழங்கப் பெற்றது. பத்தென்னும் சொல் பத்தியைக் குறித்து வழங்குதல், "பத்தில னேனும் பணிந்திலனேனும்" (திருவாசகம் 602) எனவும், பத்துடையீர் ஈசன் பழவடியீர் (திருவா - 157) எனவும் வரும் திருவாதவூரடிகள் வாய் மொழிகளால் அறியப்படும்.*

ஆவி ஈர் ஐந்து - ஐந்து ஆன்மாவை வருத்தும் ஆணவம் கன்மம், மாயை, திரோதாயி, மாயேயம் என்னும் ஐவகை மலங்கள், அறலாம் - நீக்கிவிடலாம், ஈர்தல் - வருத்துதல். ஆவியீரைந்து ஓரிரண்டோடு ஆய்ந்து இடலாம் - பிராணனுக்குரிய கலைகள் பத்தோடு இரண்டினையும் (பன்னிரு கலைகளையும்) சேர்த்து (புறத்தே கழியாமல் - அகத்தே) கட்டிக் கொள்ளலாம் எனத் திருவைந்தெழுத்து ஓதுதலின் பயன்களை உய்த்துணரச் செய்யும் முறையில் இப்பாடல் அமைந்துள்ளமை சிந்தித்து உணரத் தகுவதாகும்.

கற்போர் தம் நுண்மாண் நுழைபுலனை வளர்த்துக் கொள்ளும் முறையில் அருட்பிரகாச வள்ளலார் பாடிய அரும் பொருட் பாடல்களில் கற்றோர் அறிவுக்கும் எட்டாத நிலையில் இப்பாடலின் பொருள் இதுதான் எனத் துணிந்து கூற வியலாத வாறு அமைந்த பாடல்களும் சில உள்ளன. அவற்றை யெல்லாம் நுண்ணிதின் ஆராய்ந்து பொருள்விளக்கந் தருதல் செந்தமிழ்ப் புலமையும் திருவருள் அநுபவமும் ஒருங்கு வாய்க்கப்பெற்ற சான்றோர்களின் தலையாய கடமையாகும்.

# 14. அகத்துறைப் பாடல்கள்

தொல்காப்பியப் புறத்திணையியலுள் ஏழாவதாகச் சொல்லப் படுவது பாடாண்திணை என்னும் ஒழுகலாறாகும். புலவர் பாடும் புகழினை விரும்பிய தலைவர்கள் தம்முடைய, அறிவு, திரு, ஆற்றல், ஈகை முதலிய பெருமிதப்பண்புகளை ஆளுதல் தன்மையாகிய ஒழுகலாற்றைக் குறித்து வழங்குவதே பாடாண் என்னும் சொல்லாகும். இது புலவராற் பாடப்பெறும் தலைமக்களது ஒழுகலாறாகிய பண்புடைமையினை உணர்த்தி நின்றது. போர்க் களத்தே அஞ்சாது போர்புரியும் மறவர்களின் தொழிலாகிய வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, என்பன வற்றைப் பொருளாகக் கொண்டு பாடப் பெறும் அறுவகைத் திணைப்பகுதிகளும், ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் அன்பினாற் கூடி வாழும் அகத்திணை ஒழுகலாற்றைப் பொருளாகக் கொண்டு பாடப்பெறும் காமப்பகுதியும் ஆகிய இவ்வெழு வகைகளும் பாடாண் திணையின் பொருட்கூறுகளாகும். மக்களைப் பொருளாகக் கொண்டு பாடுதற்குரிய காமப் பகுதியினைக் கடவுளைப் பொருளாகக் கொண்டு பாடினும் நீக்கார். கடவுளை மக்கள் காமுற்றதாகச் செய்யுள் செய்தலும் நீக்கப்படாது என்றார் தொல்காப்பியனார். இவ்விருவகையினையும் கடவுள் மாட்டுத் தெய்வப்பெண்டிர் நயந்த பக்கம் எனவும் கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் எனவும் முறையே குறிப்பிடுவர் இளம்பூரணர். இவ்விரு வகையுடன் கடவுள் மானிடப் பெண்டிரை நயத்தலையும் சேர்த்து மூன்றாகக் கொள்வர் நச்சினார்க்கினியர். "காமம் என்னாது காமப்பகுதி என்றதனானே கைக்கிளை, அன்பின் ஐந்திணை, பெருந்திணை என்னும் எழுதிணைக்குரிய காமமும், காமஞ்சாலா இளமையோள்வயிற் காமமும் அன்று; இது வேறோர் காமம் என்று கொள்க" என்பர் நச்சினார்க்கினியர்.

*கடவுள் என்னும் சொல் தெய்வம் என்னும் பொதுப் பொருளில் மட்டுமன்றி உலகப் பொருள்கள் எல்லாவற்றையும் இயக்கி நிற்கும் முழுமுதற் பொருளாகிய இறைவனைக் குறிக்கும் சிறப்பு முறையில் இங்கு ஆளப் பெற்றுள்ளது. எனவே எல்லாம் வல்ல பரம்பொருளைத் தம் ஆருயிர் நாயகனாக எண்ணிக் காமுற்றுப் பேரன்பு செய்யும் வழிபாட்டு முறையும் தொல்காப்பியனார் காலத்துத் தமிழகத்தில் நிலவியிருந்தமை நன்கு தெளியப்படும். சைவத் திருமுறை ஆசிரியர்களாகிய ஆழ்வார்களும் எல்லாம் வல்ல இறைவனை ஆருயிர் நாயகனாகவும் தம்மை அவனது அருள்வேட்ட தலைவியாகவும் கொண்டு போற்றிய ஞான நன்னெறிப் பாடல் களாகிய திருவருள் இலக்கியத்திற்கு அரண் செய்யும் இலக்கணமாகக் "காமப்பகுதி கடவுளும் வரையார், ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்" (தொல்.புற. 23) எனவரும் இத்தொல்காப்பிய நூற்பா அமைந்துள்ளமை காணலாம்.*

*தொண்டு நெறியிலும் மகன்மை நெறியிலும் தோழமை நெறியிலும் என்று எல்லாம் வல்ல முழுமுதற் பொருளாகிய கூத்தப் பெருமானைப் போற்றிய இராமலிங்க வள்ளலார், இறைவனை ஆருயிர்த் தலைவனாகவும் தம்மை அவனது அருள் வேட்ட தலைவியாகவும் கொண்டு (திருவாதவூரடிகள் மேற்கொண் டொழுகிய தலைவன் தலைவி உறவு நிலையில் நின்று) பாடிப் போற்றிய அகத்துறைப் பாடல்கள் திருவருட் பாவில் நிரம்ப இருத்தலை அன்பர்கள் நன்குணர்வார்கள். தம் ஆருயிர் நாயகனாகிய திருவொற்றியூர்ப் பெருமான்பால் காதல் கூர்ந்த தலைவி ஒருத்தி அம்முதல்வன் திரு வீதியில் உலாப் போந்த காட்சியினைக் கண்டு தான் பெற்ற பேற்றினைத் தன் பாங்கிக்கு எடுத்துரைப்பதாக அமைந்தது, திருவருட் பாவிலுள்ள திரு உலாப் பேறு என்னும் பதிகமாகும்.*

சேயைஅருளுந் திருஒற்றித் தியாகப் பெருமான் வீதிதனில்
தூயபவனி வரக்கண்டேன் சூழ்ந்தமகளிர் தமைக்காணேன்
தாயைமறந்தேன் அன்றியும் என்றனையும் மறந்தேன் தனிப்பட்டேன்
ஏயென் தோழி என்னடிநான் இச்சையமாய் நின்றதுவே! (1498)

*என்பது மேற்குறித்த பதிகத் திருப்பாடல்களுள் ஆறாம் பாடலாகும். இப்பாடலில் "தாயை மறந்தேன் அன்றியும் என்றனையும் மறந்தேன் தனிப்பட்டேன்" எனவருந் தொடர் :*

அன்னையையும் அத்தனையும் அன்றேநீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் றாளே! (6-25-7)

*எனவரும் அப்பர் அருள்மொழியை நினைவு படுத்துவதாகும்.*

*ஒற்றியூர்ப் பெருமானை விழைந்த தலைவி தன் ஆருயிர் நாயகனாகிய இறைவன்பால் நாரை, கிளி, முதலிய பறவைகளைத் தூது விடுவதாக அமைந்தது 'நாரையும் கிளியும் நாட்டுறு தூது' என்னும் தலைப்பில் அமைந்த பதிகமாகும்.*

கண்ணன் நெடுநாள் மண்ணிடந்தும்
காணக் கிடையாக் கழலுடையார்
நண்ணும் ஒற்றி நகரார்க்கு நாராய்
சென்று நவிற்றாயோ
அண்ணல் உனது பவனிகண்ட
அன்றுமுதலாய் இன்றளவும்
உண்ணு முணவோ டுறக்கமும்நீத்
துற்றாள் என்றிவ் வொருமொழியே. (1503)

*என்பது மேற்குறித்த பதிகத்தின் முதற்பாடலாகும்.*

*இப்பாடல்,*

குட்டத்துங் குழிக் கரையுங் குளிர்பொய்கைத் தடத்தகத்தும்
இட்டத்தா லிரைதேரு மிருஞ்சிறகின் மடநாராய்
சிட்டன்சீர்ச் சிறுத்தொண்டன் செங்காட்டங் குடிமேய
வட்டவார் சடையார்க்கென் வருத்தஞ்சென் றுரையாயே (3-63-3)

*எனவரும் ஆளுடைய பிள்ளையார் திருப்பாடலை யடியொற்றி யமைந்துள்ளமை காணலாம்.*

*தன் ஆருயிர் நாயகனைப் பிரிந்த நிலையில் தலைவி இரங்குவதாக அமைந்தது, முப்பத்தொரு பாடல்களால் இயன்ற 'இரங்கல் மாலை' யென்னும் பனுவலாகும். இறைவன் திருவுலா வந்ததைக் கண்ட தலைவி தன் மனம் அவனை விரைந்து சென்றடைந்தமையினை வியந்துரைப்பதாக அமைந்தது, திருவுலா வியப்பு' என்னும் பதிகமாகும். தலைவி தன் ஆருயிர்த் தலைவ னாகிய ஒற்றியூர்ப் பெருமானுடன் அன்பினால் உரையாடிய திறத்தை வியந்துரைப்பது "சல்லாப் வியன்மொழி" என்னும் பதிகமாகும்.*

வெற்றியிருந்த மழுப்படையார்
விடையார் மேரு வில்லுடையார்
பெற்றியிருந்த மனத்தர்தமுட்
பிறங்கும் தியாகப் பெருமானார்

சுற்றியிருந்த பெண்களெல்லாஞ்
சொல்லி நகைக்க வருகணைந்தார்
ஒற்றியிருமென் றுரைத்தேனான்
ஒற்றியிருந்தே னென்றாரே (1558)

என்பது இப்பதிகத்தின் ஐந்தாம் பாடலாகும். ‘வெற்றித் திறன் வாய்ந்த மழுப்படையை யுடையவரும் எருதினை ஊர்தியாகப் பெற்றவரும் மேருமலையை வில்லாக வளைத்தவருமாகி, அன்பு நிறைந்த மனமுடைய அடியார்களின் உள்ளத்தே விளங்கும் தியாகேசப் பெருமானாகிய தலைவர், என்னைச் சுற்றியிருந்த பெண்களெல்லாம் இவள் நாணமற்றவள் என்று சொல்லிச் சிரிக்க என்பக்கத்தே அணைந்தார். அதுகண்ட நான் என்னை நெருங்காது சிறிது தூரத்தில் தள்ளியிருப்பீராக என்று கூறுமுறையில் ‘ஒற்றியிரும்’ என்றுரைத்தேன். அதுகேட்ட தலைவர் நான் ஒற்றி (நெருங்கி)த் தானே யிருந்தேன் என்று கூறினார்’ எனத் தலைவி தோழியை நோக்கிக் கூறுவதாக அமைந்தது இப்பாடல். இதன்கண் ஒற்றியிரும் என்ற சொல் எம்மை விட்டுச் சிறிது தள்ளியிருப்பீராக என்ற பொருளில் தொண்டைநாட்டில் வழங்கும் வழக்குச் சொல்லாகும். ஒற்றியிருத்தல், தள்ளியிருத்தல், தள்ளியிருப்பீராக என்ற கருத்தில் ஒற்றியிரும் என்று வழக்குச் சொல்லால் தலைவி கூறினாளாக, அது கேட்ட தலைவர் அப்பொருளை உணராதவர்போல் நடித்து ஒற்றியிருந்தேன் (நெருங்கியிருந்தேன்) எனக் கூறியது, இருவர் கலந்துரையாடலில் நிகழ்ந்த இன்பமாகும். ஒற்றியிருந்தேன் எனவரும் இத்தொடர்க்கு ‘ஒற்றியூரிலிருப்பவனே நான்’ எனத் தலைவர் மறுமொழி கூறினாராகக் கொள்ளுதலும் ஓர் நயம். இவ்வாறே திருவருட்பா இரண்டாம் திருமுறையில் இன்பக்கிளவி முதல் இங்கிதமாலை ஈறாக உள்ள பகுதிகளும், ஆறாந் திருமுறையில் திருவடிப்பெருமை முதல் அநுபவமாலை ஈறாக உள்ள பகுதிகளும் அகத்துறைப் பாடல்களாகவே அமைந்துள்ளன.

கூத்தப் பெருமான்பால் காதல் கொண்ட தலைவி ஒருத்தி, அவ்விறைவரது திருவடிப் பெருமையைத் தன் தோழிக்கு விரித்துக் கூறுவதாக அமைந்தது, திருவடிப் பெருமை என்ற பனுவலாகும்.

திருவாளர் கனகசபைத் திருநடஞ் செய் தருள்வார்
தேவர்சிகா மணிஎனக்குத் திருமாலை கொடுத்தார்

உருவாளர் அருவாகி ஒளியாகி வெளியாய்
ஓங்குகின்றார் என்னுடைய உயிர்த்துணைவர் அவர்தம்
பெருவாய்மைத் திறம் சிறிதும் பேச முடியாதே
பேசுவதார் மறைகள் எலாம் கூசுகின்ற என்றால்
துருவாமல் இங்கெனக்குக் கிடைத்ததைஎன் சொல்வேன்
சொல்அளவில் லாதசுகம் தோன்றுவ தென்தோழி. (5625)

*என்பது "திருவடிப்பெருமை" என்ற தலைப்பில் அமைந்த முதற் பாடலாகும். தலைவி தலைவன் செயலைத் தாய்க்கு உரைப்பதாக அமைந்தது,*

அன்னப் பார்ப்பால் அழகாம் நிலையூடே
அம்பலம் செய்துநின் றாடும் அழகர்
துன்னப்பார்த் தென்னுயிர்த் தோழியும்நானும்
சூதாடுகின்ற அச்சூழலில் வந்தே
உன்னைப் பார்த்துன்னுள்ளே என்னைப் பாராதே
ஊரைப் பார்த்தோடி உழல்கின்ற பெய்யே
என்னைப் பார் என்கின்றார் என்னடி அம்மா
என்கை பிடிக்கின்றார் என்னடி அம்மா (5670)

*எனவரும் பாடலாகும். இதன்கண் அம்பலத்திலாடும் அழகராகிய இறைவர் தலைவியும் தோழியும் விளையாடும் இடத்திலே வந்து தலைவியை நோக்கி "உன்னைப் பார்த்து உன்னுள்ளே என்னைப் பாராதே. ஊரைப் பார்த்து ஓடி உழல்கின்ற பெண்ணே, என்னைப் பார்" எனக் கூறியது, உயிர்க் குயிராகிய இறைவன் ஆன்மாவை நோக்கி, 'புறப்பொருள்களில் உள்ளத்தைச் செலுத்தாமல் உன் உள்ளத்துள்ளே உயிர்க்குயிராய்த் திகழும் என்னைக் கண்டு உய்தி பெறுவாயாக' என அறிவுறுத்திய உபதேசப் பொருளை உளங்கொண்டதாகும்.*

*இறைவன்பால் காதல்கொண்ட தன் மகளது நிலைமை குறித்து நற்றாய் செவிலிக்குக் கூறுவதாக அமைந்தது,*

உணர்ந்தவர் தமக்கும் உணர்வரி யவன்என்
உள்ளகத் தமர்ந்தனன் என்றாள்
அணிந்தனன் எனக்கே அருள்மண மாலை
அதிசயம் அதிசயம் என்றாள்

துணிந்துநான் தனித்தபோது வந்தென்கை
தொட்டனன் பிடித்தனன் என்றாள்
புணர்ந்தனன் கலந்தான் என்றுளே களித்துப்
பொங்கினாள் நான்பெற்ற பொன்னே (5680)

*எனவரும் பாடலாகும். 'இது வனபவள வாய்திறந்து வானவர்க்கும் தானவனே என்கின்றாளால்' எனத் திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகப் பொருளை அடி ஒற்றி யமைந்துள்ளமை காணலாம். இத்துறையில்,*

ஏலுநன் மணிமா மன்றருட் சோதி
என்னுளத் தமர்ந்தனன் என்றாள்
பாலுமின் சுவையும்போன்றென தாவி
பற்றினன் கலந்தனன் என்றாள்
சாலும்எவ் வுலகும் தழைக்கஎன் தனக்கே
சத்தியை அளித்தனன் என்றாள்
மேலும்எக் காலம் அழிவிலேன் என்றாள்
மிகுகளிப் புற்றனள் வியந்தே. (5689)

*எனவரும் பாடல் இராமலிங்க அடிகளாகிய நாயகி தன் ஆருயிர்த் தலைவன்பால் பெற்ற பேரின்ப நிலையைப் புலப்படுத்தல் காணலாம்.*

*தேவர்கோ வறியாத தேவதேவனாகிய தலைவனை விரும்பிய தலைவி, அவன்பால் கொண்ட அன்புரிமைத் திறத்தினைத் தன்னுடைய தோழிக்கு எடுத்துரைப்பதாக அமைந்தது, தோழிக் குரிமை கிளத்தல்' என்னும் பதிகமாகும். அதன் முதற்பாடல்.*

நயந்தநட நாயகர் உன்நாயகரே எனினும்
நாடியமந் திரங்கள்சில கூடிஉரை யிடவே
வியந்து மற்றைத் தேவர்எலாம் வரவும் அவர்நேயம்
விரும்பாதே இருப்பதென்நீ என்கின்றாய் தோழி
வயந்தரும் இந்திரர் பிரமர் நாரணர்கா ரணர்கள்
மற்றையர்கள் மற்றையர்கள் மற்றையர்கள் எவர்க்கும்
பயந்தகுடி அல்லடிநான் திருச்சிற்றம் பலத்தே
பதிநடஞ்செய் அடிப்பணிக்கே பதித்தகுடி அறியே. (5690)

*எனவரும் பாடலாகும். இதன்கண் நடராசப் பெருமான் உன் ஆருயிர்த் தலைவராயினும் மறைமொழி மந்திரங்களால் ஏனைய*

*தேவர்களெல்லாம், அவ்விறைவரை யடைந்து வழிபடுகின்றார்கள். நீ அத்தேவர்கள்பால் அன்பு செலுத்தாது இருப்பதன் காரண மென்ன, என வினவிய தோழியை நோக்கி "இந்திரர், பிரமர், நாரணர், காரணர் முதலிய யாவர்க்கும் பயந்த கடி நானல்லடி, திருச்சிற்றம்பலத்தே நடஞ்செய்யும் திருவடிக்கே அடிமை செய்யும் கடியானேன் யான்" எனத் தலைமகள் மறுமொழி கூறுவதாக அமைந்த இப்பாடல், நாமார்க்கும் குடி அல்லோம் நமனை அஞ்சோம்..... சங்கவெண்குழையோர்காதிற் கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க் கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே **(6-98-1)** எனவும்,*

"என்றுநாம் யாவர்க்கு மிடைவோம் அல்லோம்
இருநிலத்தில் எமக்கெதிர் ஆவாரு மில்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்" (6-98-5)

*எனவும் வரும் திருநாவுக்கரசர் வாய்மொழியையும்,*

யாவர்கோன் என்னையும் வந்தாண்டு கொண்டான்
யாமார்க்கும் குடிஅல்லோம் யாது மஞ்சோம். (திருவாசகம் - 34)

*எனவரும் மணிவார்த்தையையும் நினைவுபடுத்துவது காணலாம். தன் ஆருயிர்த் தலைவராகிய இறைவரது வரவினை எதிர்பார்த் திருக்கும் தலைவி 'அவர்காலையிலே இங்கு வந்தமர்ந் தருள்வர்; ஆதலால் நம்மாளிகையை அலங்கரித்து வைப்பாயாக' எனத் தோழிக்கு உரைப்பதாக அமைந்தது, "தலைவி கூறல்" என்ற தலைப்பில் அமைந்த பதிகமாகும்.*

தந்தேகம் எனக்களித்தார் தம் அருளும் பொருளும்
தம்மயும் இங் கெனக்களித்தார் எம்மையினும் பிரியார்
எந்தேகம் அதிற்புகுந்தார் என்உளத்தே யிருந்தார்
என்உயிரில் கலந்த நடத் திறையவர் காலையிலே
வந்தேஇங் கமர்ந்தருள்வர் ஆதலினால் விரைந்தே
மாளிகையை அலங்கரித்து வைத்திடுதி இதற்குச்
சந்தேகம் இல்லைஎன்றன் தனித்தலைவர் வார்த்தை
சத்தியம் சத்தியம் மாதே சத்தியம்சத் தியமே. (5704)

*எனவரும் பாடல் இப்பதிகத்தின் முதற்பாடலாகும். இது 'தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னை' கொண்டதென் தன்னை' **(39***

*எனவும் 'தன்னைத்தந்தஎன்னாரமுதை' (408) எனவும் 'காணும் கரணங்க ளெல்லலாம் பேரின்பமெனப் பேணு மடியார்' (633) எனவும் வரும் திருவாசகத் தொடர்களின் பொருளை அடியொற்றி அமைந்துள்ளமை காணலாம்.*

*அம்பலத்தே திருநடஞ்செய்யும் கூத்தப்பெருமானாகிய தன் ஆருயிர்த் தலைவனை அணைந்து இன்புறும் நிலையினைப் பெற்ற தலைவி தன் மணவானனாகிய முதல்வனது இயல்பினையும் அம்முதல்வனால் தான் பெற்ற அருள் அநுபவத்தினையும் நூறு திருப்பாடல்களால் எடுத்துரைக்கும் பனுவல் அநுபவ மாலையென் பதாகும். அகத்துறைப் பாடல்களாகிய இவை, ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலந்து இன்புறும் பேரின்ப நிலையினை விளக்கு முறையில் அமைந்துள்ளன. உலகில் மன்னுயிர்கள் எல்லாம் உறங்கும் பொழுதும் தான் மட்டும் கனவிலும் நனவிலும் அருட் பெருஞ்சோதி இறைவரோடு இணைந்து இரவு பகலில்லா இன்ப வெளியில் மகிழ்ந்திருக்கும் திறத்தினைத் தலைவி எடுத்துரைப்பதாக அமைந்தது,*

கண்ணுறங்கேன் உறங்கினும்என் கணவரொடு கலக்கும்
    கனவே கண்டுள மகிழ்வேன் கனவொன்றோ நனவும்
எண்அடங்காப் பெருஞ்சோதி என்இறைவர் எனையே
    இணைந்திரவு பகல்காணா தின்புறச் செய்கின்றார்
மண்உறங்கும் மலைஉறங்கும் வளைகடலும் உறங்கும்
    மற்றுளவெலாம் உறங்கும் மாநிலத்தே நமது
பெண்உறங்காள் எனத்தாயர் பேசி மகிழ்கின்றார்
    பெண்கள் எலாம் கூசுகின்றார் பெருந்தவஞ் செய்கிலரே. (5715)

*எனவரும் பாடலாகும். இது*

மண்உறங்கும் விண்ணுறங்கும் மற்றுளஎல்லாம் உறங்கும்
கண்ணுறங்கேன் எம் இறைவர் காதலினாற் பைங்கிளியே.
(தாயு. பைங்கிளி. 44)

*எனவரும் தாயுமானார் பாடலை நினைவுப்படுத்துவது காணலாம். என்னாற் காதலிக்கப் பெற்ற தலைவனை தனக்குவமை யில்லாத இறைவன் என்பதை உணராமல் என்னை அச்சுறுத்திய தாய ரெல்லாம் யான் முதல்வன் மாலையிட்டு மகிழும் நிலையினைக் கண்டு ஆறுதல் உடையவர்களாய், என்னைக் கண்டு பெருமித*

*நிலையில் உள்ளார்கள். என்னை முன்னர் அயன்மையாகக் கருதிய மகளிரெல்லாம் இப்போது எனது உறவினை விரும்பி என் அருகில் அமர்ந்து என்னைப் பரவிப் போற்றுகின்றார்கள் எனத் தலைவி தான் பெற்ற இன்ப நிலையினைத் தோழிக்கு உரைப்பதாக அமைந்தது,*

வஞ்சமிலாத் துணைவருக்கே மாலைமகிழ்ந்தளித்தேன்
மறைகளுடன் ஆகமங்கள் வகுத்து வகுத்துரைக்கும்
எஞ்சலுறா வாழ்வனைத்தும் என்னுடைய வாழ்வே
எற்றோ நான்புரிந்த தவம் சற்றே நீ உரையாய்
அஞ்சுமுகம் காட்டியஎன் தாயரெலாம் எனக்கே
ஆறுமுகம் காட்டிமிக வீறுபடைக்கின்றார்
பஞ்சடிப் பாவைய ரெலாம் விஞ்சடிப்பாலிருந்தே
பரவுகின்றார் தோழி என்றன் உறவு மிக விழைந்தே. (5718)

*எனவரும் திருவருட்பாவாகும். இதன்கண் "அஞ்சுமுகம் காட்டியஎன் தாயரெலாம் எனக்கே ஆறுமுகம் காட்டி மிக வீறுபடைக்கின்றார்" எனவரும் தொடரில் 'அஞ்சு முகம்' தோன்றில் ஆறுமுகம் தோன்றும்' எனவரும் நக்கீரர் பாடற்றொடர் இடம் பெற்றிருத்தல் அறிந்து இன்புறத்தகுவதாகும்.*

*கண்ணுக்கினியராய் என்னுடைய அன்பினாற் கலந்த தலைவராகிய இறைவர் என்னை யணைந்த பொழுது என்னையும் என்கருவி கரணங்களையும் கண்டறியாத வளாயினேன். காணுங் கரணங்களெல்லாம் பேரின்பமெனப் பேணும் சிவபோக நுகர்வில், எண்ணத் தக்க உலக போகங்க ளெல்லாம் இச்சிவபோகத்தை நோக்கமிகமிகச் சிறியனவாம் என மறைகள் கூறும் அளவின் தன்மையினை இன்று அறிந்து கொண்டேன். சிதாகாசப் பெருவெளியில் ஆடல்புரியும் இறைவர் என் உயிரிற் கலந்த பொழுது வினைத்தொடர்பு அற்று யான் பெற்ற இன்பத்தினை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் யான் நுகரும் பேரானந்த மாகிய பெரும்போகம் அவ்வப்போது பொங்கி யெழுந்து என்னை விழுங்கித் தன் அகத்திட்டுக் கொண்டதனைக் காண்பாயாக' எனத் தலைவி தோழியை நோக்கிக் கூறுவதாக அமைந்தது,*

கண்கலந்த கணவர்எனைக் கைகலந்த தருணம்
கண்டறியேன் என்னையும் என்கரணங்கள் தனையும்
எண்கலந்த போகம் எலாம் சிவபோகம்தனில் ஓர்
இறைஅளவென் றுரைக்கின்ற மறைஅளவின் றறிந்தேன்

விண்கலந்த திருவாளர் உயிர்கலந்த தருணம்
வினைத்துயர்தீர்ந் தடைந்தசுகம் நினைந்திடுந்தோ றெல்லாம்
உண்கலந்த ஆனந்தப் பெரும்போகம் அப்போ
துற்றதென எனைவிழுங்கக் கற்றதுகாண் தோழி (5721)

*எனவரும் திருவருட்பாவாகும். இதன்கண் 'உண்கலந்த ஆனந்தப் பெரும்போகம் அப்போது உற்றதென எனை விழுங்கக் கற்றதுகாண்' எனவரும் தொடர் "யானாகிய என்னை விழுங்கி வெறுந் தானாய் நிலை நின்றது தற்பரமே" (கந்தரநுபூதி 28) எனவரும் அருணகிரிநாதர் அநுபவ மொழியை அடியொற்றி யமைந்துள்ளமை காணலாம்.*

*ஆருயிர்த் தலைவனாகிய இறைவனை யணைந்த தலைவி, தன்னுடம்பு முழுதும் பச்சைக் கற்பூர நறுமணம் இடைவிடாது வீசும் இயல்பினையும் இத்தகைய நறுமணம் துரிய நிலையிலுள்ள இறைவன் திருமேனிக்கு அமைந்த இயற்கை மண மென்பதனையும் உலக மக்கள் அறிந்து கொள்ளமாட்டாராயினர். திருநீறுபூசிய இறைவனது திருமேனி முழுவதனையும் யான் காணப் பெற்றேன்; அம் மேனியை அணைந்தேன். ஆன்மாவாகிய யான் அம் முதல்வனோடு ஒன்றானேன், எனத்தலைவி தான் பெற்ற அருள் அநுபவத்தைத் தோழிக்கு உரைப்பது,*

கற்பூர மணக்கின்ற தென்னுடம்பு முழுதும்
கணவர் திருமேனியிலே கலந்த மணம் அதுதான்
இற்பூத மணம்போல மறைவதன்று கண்டாய்
இயற்கை மணம் துரியநிறை இறைவடிவத் துளதே
பொற்பூவும் நறுமணமும் கண்டறியார் உலகர்
புண்ணியனார் திருவடியில் நண்ணியவா றதுவே
நற்பூதி யணிந்ததிரு வடிவு முற்றும் தோழி
நான்கண்டேன் நான்புணர்ந்தேன் நான் அது ஆனேனே (5723)

*எனவரும் அநுபவமாலைப் பாடலாகும். தலைமகள் கூற்றாகிய இப்பாடல்,*

கருப்பூரம் நாறுமோ கமலப் பூநாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் ஆழி வெண் சங்கே
(நாலாயிர திவ்வியப் பிரபந்தம் - 56)

*எனவரும் நாச்சியார் திருமொழியை நினைவுப்படுத்துவதாகும்.*

*"என்னைக்கண்டோர் சிலர் 'இவள் கள்ளுண்டவளைப் போல் மயங்கிக் கிடக்கின்றாள்' எனச் சொல்வார்கள். "தோழியே ஆனந்தத்தைத் தரும் கள்ளினையான் பொன்னம்பலத்தின் நடுவிலே கண்டதுண்டு, சிற்றம்பலத்தை யடைந்து அக்கள்ளியினை யுண்டது முண்டு. என்னால் உண்ணப் பெற்ற அக்கள்ளானது உலகத்தவரால் இகழப்படுகின்ற பல பொருள்களிலிருந்தும் இறக்கிய இழிந்த கள் அன்று; எக்காலத்தும் இறவாத நிலையில் மக்களை நிலை பெறச் செய்யும் கள் ஆகும். உலகத்தார் உண்டபொழுது அவர்களை மயக்கும்படியான கள் அதுவன்று; உள்ளத்தில் மயக்கம் அத்தனையும் அறவே யொழித்துத் தெளிவாகிய ஞானத்தினைத் தரும் கள் யானுண்ட கள் ஆகும் என்னால் உண்ணப்பட்ட கள்ளானது உலகியல் வாழ்வில் துன்புற்றார் பிறரும் என்னை அடுத்தடுத்துக் கண்டால் அவர்களுக்கு அறிவினை வழங்கும் இயல்பினை யுடைய தாகும்" என இறைவன்பால் காதல் மீதூர்ந்து அவனையணைந்து இன்புற்ற தலைவி தான் பெற்ற பேரின்ப மகிழ்ச்சியினைத் தன் தோழிக்கு எடுத்துரைப்பதாக அமைந்தது,*

கள்ளுண்டாள் எனப்புகன்றார் கனகசபைநடுவே
    கண்டதுண்டு சிற்சபையில் உண்டதும் உண்டடிநான்
எள்ளுண்ட பலவிடயத் திருக்குங்கள் அன்றே
    என்றும்இறவா நிலையில் இருத்துங்கள் உலகர்
உள்ளுண்ட போதுமயக் குற்றிடுங்கள் அலவே
    உள்ளமயக் கனைத்தினையும் ஒழித்திடுங்கள் மடவாய்
அள்ளுண்ட பிறரும் எனை அடுத்தடுத்துக் கண்டால்
    அறிவுதரும் அவர்க்கு இங்கே யான் உண்டகள்ளே (5725)

எனவரும் பாடலாகும். நினைந்த அளவிலே களிப்பினை யடைதலும் கண்ட அளவிலே மகிழ்ச்சியை எய்துதலும் கள்ளுண் டார்க்கு இல்லை. இவ்விரு தன்மையும் காமமுடையார்க்கே உண்டு என்பார், திருவள்ளுவர். 'உள்ளக்களித்தலும் காணமகிழ்தலும் கள்ளுக்கு இல், காமத்திற்குண்டு' என்பது திருக்குறள். உணர்வு அழியாத நிலை களித்தலெனவும், உணர்வழிந்த நிலை மகிழ்தலெனவும் வேறுபாடு காட்டுவர் பரிமேழகர். கள்ளுண்டாள் எனப் புகன்றார் என்னும் தொடலில் "கள்" எனப்பட்டது. அறியாமையைத் தரும் மதுவினை. கனகசபையிற் கண்டதும் சிற்சபையில் உண்டதும் ஆகிய கள் என்றது, இறைவனது அருண்ஞானமாகிய இனிய தேனினை. "அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த பொந்தைப் பரவி நாம் பூவல்லி கொய் யாமோ" **(276)** நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும், எப்போதும், அனைத்தெலும்

*புள்நெக ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடை யானுக்கே* **(217)** எனவரும் திருவாசகத் தொடரில் குறிக்கப்படும் சிவானந்தத் தேனினை மயக்கத்தை விளைப்பதாய், உலகத்தாரால் உண்ணப்படும் கள்ளினை மாயக்கள் எனவும், உடம்பினுள்ளே கோயில் கொண்டருளிய இறைவனது மெய்ஞான திருவடித் தாமரையில் ஊற்றெடுத்துப் பெருகும் பேரின்பமான தேனை மெய்ஞ்ஞானக் கள் எனவும் வேறுபிரித்து உணர்த்தும் முறையில் அமைந்தது,

காயத்துள்மெய்ஞ்ஞானக் கள்ளுண்ண மாட்டாதே
மாயக்கள் ளுண்டாரென் றுந்தீபற
வறட்டுப் பசுக்களென் றுந்தீபற (திருவுந்தியார் 43)

எனவரும் திருவுந்தியாராகும். தன் ஆருயிர்த் தலைவனாகிய இறைவனோடு தான் அணைந்த காலத்தில் பெற்ற பேரின்ப அநுபவம் பிறருக்குச் சொல்லால் வெளியிட்டுரைக்க வொண்ணா தென்பதனையும், அதனை உள்ளவாறு அநுபவித்தவராலேயே உணரமுடியுமென்பதனையும் தலைவி தோழிக்கு எடுத்துரைப்பதாக அமைந்தது,

மனையணைந்து மலர் அணைமேல் எனை அணைந்த போது
மணவாளர் வடிவென்றும் எனது வடிவென்றும்
தனைநினைந்து பிரித்தறிந்த தில்லையடி எனைத்தான்
சற்றுமறியேன் எனில்யான் மற்றறிவதென்னே
தினைஅளவா யினும் விகற்பஉணர்ச்சி யென்பதிலையே
திருவாளர் கலந்தபடி செப்புவதெப் படியோ
அனை அணைந்தால் இவ்வாறுநான் கேட்பேன் அப்போ
துன்னறிவும் என்னறிவும் ஓரறிவாம் காணே. (5729)

எனவரும் திருவருட்பாவாகும். பேரின்ப அனுபவம் இன்ன தன்மைத் தெனச் சொல்லால் வெளியிட்டு உரைக்க வொண்ணாத நிலையில் அப்பாற்பட்ட தென்பதனைச் சிற்றின்ப அநுபவத்தில் வைத்து விளக்குவது,

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்என்றாற் சொல்லுமா றெங்ஙனே. (திருமந்திரம் 2944)

எனவரும் திருமுலநாயனார் அருளிய திருமந்திரமாகும்.

*'கூத்தாடிக் கணவருக்கோ மாலையிட்டு மணந்தாய்' எனத் தன்னை வினவும் தோழியை நோக்கிப் "பேதையே இப்பூமி னிடத்தும் வானுலகிலும் பாதலத்திலும் அண்டத்திலும் அண்ட வெளியின் அப்புறத்தே யுள்ள அண்ட கோடிகளிலும் பதிந்து நிகழும் இயக்கத்தின் விளக்கமெல்லாம் என் தலைவர் தம் திருவடிமலர் கொண்டு திரு அம்பலத்தில் நிகழ்த்தும் திருக்கூத்தின் அருள் விளக்கமேயாகும்; இது உண்மை என்று அருமறைகளும் ஆகமங்களும் பறை சாற்றுகின்றன. அவ்வுண்மையைக் கேட்டறிந்து நீ என்பால் கொண்ட வாட்ட மெல்லாம் தவிர்வாயாக" எனத் தலைவி தோழிக்கு அறிவுறுத்துவதாக அமைந்தது,*

கொடியிடைப்பெண் பேதாய்நீ அம்பலத்தே நடிக்கும்
கூத்தாடி என்றெனது கொழுநர்தமைக் குறித்தாய்
படிஇடத்தே வான்இடத்தே பாதலத்தே அண்ட
பகிரண்ட கோடியிலே பதிவிளக்கம் எல்லாம்
அடிமலர் கொண்டையர் செய்யும் திருக்கூத்தின் விளக்கம்
ஆகும் இது சத்தியம்என் றருமறை ஆகமங்கள்
கெடியுறவே பறையடித்துத் திரிகின்ற அவற்றைக்
கேட்டறிந்து கொள்வாய்நின் வாட்டமெலாந் தவிர்த்தே. (3760)

*எனவரும் திருவருட்பாவாகும். இப்பாடல் ஆட வல்லானாகிய இறைவன் இயக்க எல்லா அண்டங்களும் இயங்குகின்றன என்ற உண்மையை வற்புறுத்துவது காணலாம்.*

*"சிந்தைக்கும் மொழிக்கும் எட்டாத இறைவனது திருவருட் கூத்தினை அன்புறு சித்தாந்த நடனமாகவும், வேதாந்த நடனமாகவும் முதல் நடு ஈறு இல்லாத சோதி மன்றத்திலே நான்கண்டு கொண்டேன். தோழி அத்திருநடம் இன்ப மயமாய் ஆன்மாவும் சிவமும் ஒன்றாகவும், இரண்டாகவும், ஒன்றுமிரண்டு மின்றாகவும், எல்லாம் செய்ய வல்லதாகவும் தன்னிகரற்ற பரவெளியைக்கடந்த சமரசத் தனிப்பெரு நடனத்தையும் காணப்பெற்றேன். அதனால் எவ்வுயிர்க்கும் தனித்த சுகத்தினை நல்கும் பொதுமன்றத்தின் இயல்பு அதுவாகும்" எனத் தலைவி தான் கண்ட திருக்கூத்தின் வகைகளைத் தன்தோழிக்கு உரைத்ததாக அமைந்தது,*

என்புகல்வேன் தோழிநான் பின்னர்கண்ட காட்சி
இசைப்பதற்கும் நினைப்பதற்கும் எட்டாது கண்டாய்

அன்புறு சித்தாந்த நடம் வேதாந்த நடமும்
    ஆதிநடு அந்தமிலாச் சோதிமின்றில் கண்டேன்
இன்பமயமா யொன்றாய்இரண்டா யொன்றிரண்டும்
    இல்லதுவாய் எல்லாஞ்செய் வல்லதுவாய் விளங்கித்
தன்பரமாம் பரங்கடந்த சமரசப்பேர் அந்தத்
    தனிநடமும் கண்ணுற்றேன் தனித்தசுகப் பொதுவே. (5778)

*எனவரும் அனுபவ மாலைப் பாடலாகும். இப்பாடற் பொருளை ஊன்றி நோக்குங்கால் இதனைப் பாடிய அருட்பிரகாச வள்ளலார் வேதாந்த, சித்தாந்த, சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணத்துள் ஒருவராவர் என்பது நன்கு தெளியப்படும்.*

*"அம்பலத்தே ஆடல் புரியும் என மணவாளர் காலைப் பொழுதிலே இங்கு வந்து என்னைக் கலந்து இன்பம் தர உள்ளார். எனவே என் தோழியாகிய நீ இம்மனையகத்தே தங்காது புறத்தே செல்வாயாக என என்னை நோக்கிக் கூறுகின்றாய். உலகில் பெண்கள் தம் மகிழ்நரொடு கூடி இன்புறுதற்குரிய காலம் மாலைப்பொழுது என்பது உலகியலில் கண்ட வழக்கமாகும். நீ கூறுமாறு காலையில் கணவரோடு கலத்தலைக் கண்டிலேன். இது வியக்கத்தக்க தாயிருக்கிறது" என்று தோழியே நீ கூறாதே. 'நீ உலகியல் நூல் எழுதிவைத்ததை மனத்தினுட் கொண்டு தடுமாறு கின்றாய். ஆதலால் காலையிலே கணவரொடு கலத்தற்குரிய இவ்வுட்கருத்தினை அறியமாட்டாயாயினை. மக்கள் மேற்கொள் ளும் நல்லறச் செயல்களிலும் அறிவுடைய அம்முதல்வரைப் போற்றிக் கூடி ஞானப் பொருளாயுள்ள சான்றோர்கள் பலர் கண்டு மகிழும் சமரச சன் மார்க்க சங்கத்திலும் என் தோழியாகிய நீ சிறிது நேரம் தங்கியிருப்பாயானால் என் ஆருயிர் நாயகரை அங்கே காணலாம். பசி நோயினால் துன்புற்று வரும் ஏழைகட்கு அன்னம் பாலித்தல் முதலிய அறச் செயல்களிலும் மன்னுயிர்கள் உய்ய அம்முதல்வனை நினைந்து போற்றும் தியான நிலையிலும் அவ் இறைவர் பகற்பொழுதிலேயே எல்லோரும் காண வெளிப்பட்டு என் உயிரிற் கலந்து இன்பம் நல்குந் திறத்தினை நீ நேரிற் கண்டுணர் வாய்' எனத் தலைவி தன் தோழியொடு உரையாடியதாக அமைந்தது.*

மாலையிலே உலகியலார் மகிழ்நரொடு கலத்தல்
    வழக்கம்அதுகண்டனம் நீ மணவாளருடனே

காலையிலே கலப்பதற்கிங் கெனைப்புறம்போ என்றாய்
கண்டிலன் ஈததிசயம்என் றுணராயேல் என்தோழி
ஓலையிலே பொறித்ததைநீ உன்னுளத்தே கருதி
உழல்கின்றாய் ஆதலில் இவ்வளவறியாய் தருமச்
சாலையிலே சமரச சன்மார்க்க சங்கத்தனிலே
சற்றிருந்தாய் எனில் இதனை உற்றுணர்வாய் காணே. (5785)

*எனவரும் அனுபவமாலை **72**-ஆம் பாடலாகும். இப்பாடலில் தருமச்சாலையிலே சற்றிருந்தாயெனில் இதனை உற்றுணர்வாய் எனத் தலைவி தோழிக்குக் கூறுகின்றாள். இத்தொடரில் இதனை என்றது இறைவனாகிய தலைவன் காலைப் பொழுதிலேயே பலருங் காணத் தன் ஆருயிர்த் தலைவியோடு கலந்து இன்பம் நல்குதலை. இவ்வுண்மையினை வள்ளலார் தாம் எழுதிய ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற உரைநடை நூலில்,*

*“ஆகாரம் கொடுக்க உண்டு பசி தீர்ந்தவர்களுக்கு அத் தருணத்தில் ஆன்மாவின் உள்ளும் புறத்தும் கீழும் மேலும், நடுவும் பக்கமும் நிறைந்து கரண முதலிய தத்துவங்களெல்லாம் குளிர்வித்துத் தேகம் முழுதும் சில் என்று பழைய முகத்தினிடமாகப் பூரித்து விளங்குகின்ற கடவுள் விளக்கத்தையும் திருப்தி இன்பமாகிய கடவுளின் இன்பத்தையும் பிரத்தியட்சத்தில் தரிசித்து அனுபவிக் கின்றார் களாதலால் அந்தப் புண்ணியர்கள் கடவுளைக் கண்டவர்கள் என்றும், கடவுளின் இன்பத்தை அநுபவிக்கின்ற மூத்தர் என்றும் அறியவேண்டும்” எனத் தெளிவாக விளக்கி யுள்ளமை காணலாம். தம் பசிப்பிணி நீங்க ஆகாரத்தைப் பெற்று மகிழ்ந்த ஏழை எளியவர்களின் முகமலர்ச்சியிலே பலரும் காண வெளிப்பட்டுத் தோன்றும் ஆன்ம நாயகனாகிய இறைவன், அன்னமளித்து ஏழைகளின் முகமலர்ச்சி கண்டு மகிழும் ஆருயிர்த் தலைவியொடு கலந்து ஈறிலாப் பேரின்பத்தை நல்கி அருளுவான் என்னும் உண்மை மேற்குறித்த வள்ளலார் வாய்மொழியில் நன்கு புலப்படுத்தப் பெற்றுள்ளமை காணலாம். இனி சன்மார்க்க சங்கந்தனிலே சற்றிருந்தால் காணலாம், என்பது,*

எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை யுடையவரா யுவக்கின்றார்
யாவர் அவருளந்தான் சுத்த

சித்தருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமென நான்தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என்
சிந்தைமிக விழைந்த தாலோ. (5297)

எனவரும் பாடலில் வள்ளலார் குறித்துள்ளமையால் நன்கு புலனாகும். சிறிதும் மன்னுயிர்களிடத்திலே வேறுபாடு காட்டாது எல்லா உயிர்களையும் தம் உயிர்போன்று கருதி அவ்வுயிர்களுக்கு வரும் துன்பங்களைத் துடைத்து ஆன்ம நேய ஒருமைப்பாடு உடையவராய் மன்னுயிர்கள் அடையும் இன்பத்தைக் கண்டு மகிழ்கின்றவர்கள் யாரோ, அத்தகைய பெருமக்களுடைய உள்ளமே, தூய அறிவின் வடிவாய் எம் இறைவன் திருநடனம் புரியும் இடம் என்று நான் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். அத்தகைய சன்மார்க்க நெறியில் நின்ற அடியார்களுடைய திருவடிகட்கு ஏவல்புரிந்திட என்னுடைய சிந்தையானது பெருவிருப்ப முடையதாயிற்று' என்பது இப்பாடலின் பொருளாகும்.

ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையுடைய பலரும் கூடிய சன்மார்க்க சங்கத்திலேயே ஆருயிர் நாயகனாகிய இறைவன் வெளிப்பட்டுத் தோன்றுவான் என்பது வள்ளலார் கருத்தாதல் மேற்குறித்த பாடலால் நன்கு புலனாம். 'வாயாரத்தன்னடியே பாடுந் தொண்டர் இனத்தகந்தான் (6-8-5) எனவரும் அப்பர் அருள்மொழி இங்கு நினைக்கத் தகுவதாகும்.

அருட்பிரகாச வள்ளலாராகிய நாயகி, தன் ஆருயிர்த் தலைவனாகிய சிவபரம் பொருளோடு ஒன்றிச் சுத்தசிவ சாக்கிரம், சுத்த சிவ சொப்பனம், சுத்த சிவ சுழுத்தி, சுத்த சிவதுரியம், சுத்தசிவதுரியாதீதம் (தூய சிவ நனவு; தூய சிவ கனவு, தூய சிவ உறக்கம், தூயசிவ பேருறக்கம், தூய சிவ உயிர்ப்படக்கம்) என்னும் ஐவகை நிலைகளிலும், சிவமயமாய்க் கலந்து நிறைந்த பேரின்ப நிலையினைப் பெற்று மகிழ்ந்திருக்கின்ற தன்மையினை,

தனிப்படுமோர் சுத்தசிவசாக்கிர நல்நிலையில்
தனித்திருந்தேன் சுத்தசிவ சொப்பனத்தே சார்ந்தேன்
கனிப்படு மெய்ச் சுத்தசிவ சுழுத்தியிலே களித்தேன்
கலந்துகொண்டேன் சுத்தசிவ துரியநிலை அதுவாய்ச்
செனிப்பிலதாய் எல்லாமாய் அல்லதுவாம் சுத்த
சிவதுரியா தீதத்தே சிவமயமாய் நிறைந்தேன்

இனிப்புறு சிற்சபை இறையைப் பெற்ற பரிசதினால்
இத்தனையும் பெற்றிங்கே இருக்கின்றேன் தோழி (5809)

எனவரும் பாடலில் குறிப்பிட்டுள்ளமை காணலாம்.

வினவு தெரியாத இளம் பருவத்திலே உயிரிற் பிரிவின்றிக் கலந்து கலந்து இனிமை தரும் பெருந்தலைவராகிய நடராசப் பெருமான் என்னை வலிந்து அழைத்து ஐந்தொழில் ஆடலை நிகழ்த்தும் தம் திருவடிக்கே யான் பாடல் செய்து போற்றுமாறு பணித்தருளினார். அடக்கமில்லாத மனத்தையுடைய சிறியேன் செய்த குற்றங்களையெல்லாம் அழகிய விளையாட்டுச் செயல்களெனக் கொண்டு பொறுத்தருளி எனக்கு மணமாலை யணிந்து என்னைக் கூடினார். அருளும் ஞானமும் உடைய அப்பெருந்தலைவர் என்னைப் புறத்தே கலந்த கலப்பு உயிராகிய என்னை ஈறிலாப் பெருவாழ்வில் இன்புற்று ஓங்க அருளியது. அத்தலைவர் என் உயிரிற் கலந்து ஒன்றிய அகப்புணர்ச்சியால் விளைந்த இன்ப அநுபவத்தின் அளவு சொல்லால் வெளியிட் டுரைக்கும் தரத்த தாமோ? எனத் தலைவி ஆருயிர்த் தலைவனாகிய இறைவனால் தான் பெற்ற முடிவிலாப் பேரின்ப நிலையை யெடுத்துரைப்பதாக அமைந்தது,

அறியாத பருவத்தே என்னை வலிந்தழைத்தே
ஆடல் செயும் திருவடிக்கே பாடல் செயப் பணித்தார்
செறியாத மனச்சிறியேன் செய்த பிழையெல்லாம்
திருவிளையாட் டெனக்கொண்டே திருமாலை அணிந்தார்
பிறியாமல் என் உருவில் கலந்து கலந்தினிக்கும்
பெருந்தலைவர் நடராயர் எனைப்புணர்ந்தார் அருளாம்
அறிவாளர் புறப் புணர்ச்சி எனை அழியா தோங்க
அருளிய தீண்டகப் புணர்ச்சி அளவுரைக்க லாமே. (5813)

எனவரும் அநுபவ மாலையாகும்.

இதுகாறும் எடுத்துக் காட்டியவற்றால் திருவருட்பாவில் அமைந்த அகத்துறைப் பாடல்கள் யாவும் கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் என்ற அகப்புறத்துறையில் அடங்கு வனவாய் எல்லாம் வல்ல இறைவனை ஆருயிர்த் தலைவனாகவும் அவன் அருள் விழைந்த ஆன்மாவைத் தலைவி ஆகவும் கொண்டு பாடப் பெற்றன என்பது ஒருவாறு விளக்கப் பெற்றமை காணலாம்.

## 15. சுதந்தரம் பெற வழி வகுத்த தோன்றல்

உலகியல் வாழ்வில் பிறருடைய அதிகாரத்திற்குக் கட்டுப் பட்டுத் தமது உரிமையினை இழந்து வாழ்தலை அறிவும் ஆற்றலும் பொருளும் வாய்க்கப் பெற்ற மாந்தர் ஒரு பொழுதும் விரும்ப மாட்டார்கள். தாம் பிறந்த நாட்டில் தாம் தம் விருப்பப்படி சென்று உலவுதற்கும் தம் தகுதிக்கேற்ற தொழில்களைச் செய்து பொரு ளீட்டித் தத்தமக்குரிய இடங்களில் தங்கித் தாம் விரும்பிய தெய்வத்தை வழிபட்டு வாழ்வதற்கும் நாட்டு மக்களக்கு இயல்பாக அமைந்துள்ள உரிமை நிலையினையே சுதந்தரம் என்ற சொல்லால் நாளும் வழங்கி வருகின்றோம். இராமலிங்க அடிகளார் இந்நாட்டில் தோன்றிய கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நமது பாரதநாடு ஆங்கிலேயரது ஆட்சிக்கு உட்பட்டு உரிமையிழந் திருந்தது. அதனால் இந்நாட்டு மக்கள் தாம் பிறந்த நாட்டிலே பிறரது ஆட்சிக்கு அடங்கி அடிமைப்பட்டு அயலார் போற் சுதந்தரமின்றி வாழ நேர்ந்தது என்பதனை நம்மிற் பலரும் நன்கறிவார்கள்.

மக்களது பிறப்புரிமையாகிய இச் சுதந்தரம் என்பது மக்கட் சமுதாயத்தினரால் மட்டும் பாதுகாத்தற்குரிய அத்துணை எளிமையானதன்று என்பதனை உலகில் நாள்தோறும் நடைபெற்று வரும் பல்வேறு அரசியல் குழப்பங்களாலும் இனக்கலவரங் களாலும் நில நடுக்கம், எரிமலைகளின் குமுறல், புயல், இடி, மழை, வெள்ளம், கடலின் கொந்தளிப்பு முதலிய வற்றால் உளவாகும் பல்வேறு இடையூறுகளாலும் அநுபவத்தில் உணர்ந்து வருகின்றோம். இவ்வாறு நிகழும் உலகியல் நிகழ்ச்சிகளை யெல்லாம் நுனித் துணரும் நுண்ணறிவும், அன்பு அடக்கம் முதலிய சிறந்த பண்புகளும், செய்தற்கு அரியனவற்றையும் எளிதிற் செய்து முடிக்கும் செயல் திறனும் வாய்ந்து வாழ்க்கையில் மேன் மேலும் உயர்ந்து விளங்குதற் குரிய மனவுணர்வு கைவரப்பெற்றவர் மக்கட்குலத்தார் ஆவர்

இத்தகைய உணர்வுரிமையுடைய மக்களினத்தார், காலந்தோறும் பிறர்க்கு அடிமையாகி அல்லற் படுவதனையும் பிறரை அடிமை யாக்கி அல்லற்படுத்துவதனையும் எண்ணி வருந்திய இராமலிங்க வள்ளலார், தமது திருவருள நுபவத்தால் மக்கள் பெறுவதற்குரிய உண்மையான சுதந்தரமாவது எது என்பதனைத் தெளிவாக உலக மக்களுக்கு அறிவுறுத்தி யுள்ளமை இங்கு நோக்கத் தகுவதாகும்.

யான் எனது என்று உரிமை பாராட்டுதற்குரிய நிலையில் அமைந்த நமது உடம்பினையும் அந்த உடம்பினைக் கருவியாகக் கொண்டு நுகரப்படும் உலக நுகர்ச்சிகளையும் அந்நுகர்ச்சிகளை நுகரும் விளைமுதல் (கர்த்தா) ஆகிய ஆன்மாவையும் நமக்கே உரிய உடைமைப் பொருளாகக் கொண்டு உரிமை பாராட்டி வரு கின்றோம். நமது உடம்பு நாம் விரும்பியவண்ணம் தொழில் புரிதற்கும், விரும்பிய நாள்வரை நிலைபெறுதற்கும், உரிய தகுதியைப் பெறுவதே தேக சுதந்தரம் எனப்படும். உடம்போடு கூடிவாழும் நாம் இவ்வுலகில் விரும்பிய நுகர் பொருள்களை விரும்பிய வண்ணமே பெற்று நுகரும் உரிமையினைப் பெறுதல் போகசுந்தரம் எனப்படும். நமது ஆன்மா ஐம்புலன்களால் ஈர்க்கப் படாது நமது அறிவின் எல்லைக்குள் அடங்கி ஒழுகுதற் கேற்ற உரிமையுணர்வுடன் இருத்தலே சீவ சுதந்தரம் எனப்படும். இம் மூவகைச் சுதந்தரங்களையும் விரும்பிய நாம், இத்தகைய சுதந்தரங்கள் எளிதில் கிடைக்கப் பெறாமையால் நமது வாழ்க்கையின் பல்வகைத் துன்பங்களையும் அநுபவித்து வருகின்றோம். நமக்கு உரியனவாக நம்மால் விரும்பிப்படும் இச் சுதந்தரங்கள் யாவும் என்றும் நிலை பேறுடைய சுதந்தரங்கள் ஆகமாட்டா.

புண்ணிய பாவங்களாகிய இருவினைப் பயன்களை நுதர்தற்கும் ஈட்டுதற்கும் உரிய கருவிகளாக நாம் பெற்றுள்ள, மெய், வாய், கண், மூக்குச், செவியென்னும் ஐம்பொறிகளும் மாயை எனப்படும் அறிவற்ற சடப் பொருளின் காரியங்களாகுமே யன்றி அறிவுடைய உயிராகிய நம் வயத்தன ஆகமாட்டா. நாம் செய்யும் வினை நிகழ்ச்சிக்கு நிலைக்களமாகிய உலகியற் பொருள்கள் யாவும், மாயையின் காரியமாய், எல்லாம் வல்ல முழுமுதற் பொருளால் தரப்படுவனவே அன்றி, உயிராகிய நம்மால் இயற்றிக் கொள்ளப் படுவன அல்ல. நாம் பெற்றுள்ள உடம்பின் அகக் கருவிகளாகிய மனம் முதலியனவும் புறக்கருவிகளாகிய மெய் முதலியனவும்

தொழிற்படும் செயல்வகைகளும் உலகுயிர்களை இயக்கும் பேராற்றலாகிய முழுமுதற்பொருளின் வசத்தன அன்றி நம்வசத்தன அல்ல. உடம்பொடு கூடி நின்று வினைகளைச் செய்தற்கும் வினைப் பயன்களை நுகர்தற்கும், கருத்தாவான ஆன்மாக்களாகிய நாமும், விழைவு, அறிவு, செயல்களாகிய நம்முடைய ஆற்றல்களை இறைவன் விளக்கிய நிலையில் விளங்கப் பெற்றும் அல்லாத வழி விளங்கிக் கொள்ளும் வாய்ப்பு இன்றியும் தம்வயம் இழந்த நிலையில் உள்ளோம்.

இவ்வாறு தன்வயத்தரல்லாத ஆன்மாக்களாகிய நாம் தன் வயத்தனாகிய தனிமுதல்வனது அருளாணையின் வழி அடங்கி நடத்தற் குரியராதலே யன்றி நமக்கெனச் சுதந்தரமுடையேம் அல்லேம். இவ்வாறு நாம் பெற்றுள்ள தேகம், நாம் நுகர்தற்குள்ள போகம், நுகர்கின்ற சீவனாகிய நாம் என்னும் மூவகையாலும் நமக்குச் சுதந்தரம் இன்மையினை நன்குணர்ந்து இறைவனது திருவருளாணை வழி அடங்கி நடத்தலே நம்மைப் பிணித்துள்ள ஆணவம் மாயை கன்மமென்னும் மும்மலப் பிணிப்பினின்று விடுதலை பெற்று உண்மைச் சுதந்தரர் ஆதற்குரிய உபாயமாகும். இந்நுட்பம்,

> "நாமல்ல இந்திரியம் நம்வழியின் அல்ல வழி
> நாமல்ல நாமும் அரனுடைமை - ஆம் என்னில்
> எத்தனுவில் நின்றும் இறைபணியார்க் கில்லைவினை
> முற்செய்வினை யும்தருவான் முன்" (சிவஞானபோதம், வெண்பா - 63)

எனவரும் சிவஞான போத உதாரண வெண்பாவில் புலப்படுத்தப் பெற்றுள்ளமை காணலாம். தன் வயத்தரல்லாத ஆன்மாக்கள், இவ்வுலகில் தேக சுதந்தரம், போக சுதந்தரம், சீவ சுதந்தரம் ஆகிய மூவகைச் சுதந்சரங்கட்கும் காரணமாகிய திருவருட் சுதந்தரம் பெறுதற்குரிய உபாயத்தினையே மெய்கண்டதேவர், இவ் வெண்பாவில் அறிவுறுத்தியுள்ளார்.

உயிர்களாகிய நாம் நம்மளவில் சுதந்தரர்கள் ஆகமாட் டோம். நாம் நமக்குரியனவாக எண்ணியுள்ள தேகசுதந்தரம், போக சுதந்தரம், சீவ சுதந்தரம் என்னும் இவையாவும் வெறும் போலிச் சுதந்தரங்களே. இவை என்றும் நிலைபேறுடையன அல்ல, நிலையற்ற இவற்றை நமக்குரிய சுதந்தரமாகக் கொள்வதைக் கைவிட்டு எல்லாம் வல்ல கடவுளின் திருவருளின் ஆணை வழி அடங்கி

ஒழுகுதலே எல்லாச் சுதந்தரங்களுக்கும் சார்பாகிய திருவருட் சுதந்தரத்தினை அடைதற்குரிய உபாயமாகும் என்பது இவ் வெண்பாவினால் அறிவுறுத்தப் பெற்றது.

இதுவே அருட்பிரகாச வள்ளலாரது உறுதியான கோட்பாடாகும். இவ்வுண்மை, எல்லாம் வல்ல இறைவனை நோக்கி வள்ளலார் வேண்டிய சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் சத்திய விண்ணப்பத்தால் இனிது புலனாதல் காணலாம்.

"உத்தரஞான சித்திபுரம் என்றும், உத்தரஞான சிதம்பரம் என்றும் திருவருளால் ஆக்கப்பட்ட ஆக்கச் சிறப்புப் பெயர்களும், பார்வதிபுரம் என்றும் வடலூர் என்றும் உலகியலாற் குறிக்கப்பட்ட குறிப்புப் பெயர்களும் பெற்று விளங்குகின்ற தெய்வப் பதியினிடத்தே, இயற்கை விளக்க நிறைவாகியுள்ள ஒரு சுத்த சிவானுபவ ஞானசபையில் இயற்கை உண்மை நிறைவாகிய திருவுருவைத் தரித்து இயற்கை இன்ப நிறைவாகிய சிவானந்த ஒருமைத் திருநடச்செயற்கையை எவ்வுயிரும் இன்பமடைதற் பொருட்டே செய்தருளுகின்ற எல்லாம் வல்ல தனித் தலைமைக் கடவுளாகிய அருட்பெருஞ்சோதி ஆண்டவரே தேவரீரது திருவருட் சமூகத்தில் யான் செய்து கொள்ளுகிற சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்: -

இவ்வுலகினிடத்து ஆறறிவுள்ள உயர்வுடைத்தாகிய தேகத்தைப் பெற்ற யான், இத்தேகத்திற்கு இடைக்கிடை நேருகின்ற மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் நிவர்த்தி செய்து இத்தேகத்தையே நித்திய தேகமாக்கிக் கொண்டு எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எத்துணையும் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் வேண்டு மென்பதே எனது சத்தியமான அதிதீவிர விருப்ப முயற்சியாக இருக்கின்றது.

எனது விருப்ப முயற்சி இங்ஙனமாக, அவத்தைகள் எல்லா வற்றையும் நீக்கி இத்தேகத்தை நித்திய தேகமாக்கி எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் எதனால் பெறுதல் கூடுமென்று அறியத் தொடங்கிய தருணத்து, வேறு எந்த வழியாலும் பெறுதல் கூடாது; எல்லாமுடைய கடவுளது "திருவருட் சுதந்தரம் ஒன்றாலே" பெறுதல் கூடுமென்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி அறிந்தேன்.

பின்னர் திருவருட் சுதந்தரம் நமக்கு எந்த வழியால் கிடைக்குமென்று அறியத் தொடங்கிய தருணத்து, எனது யான் என்னும் தேக சுதந்தரம், போக சுதந்தரம் சீவ சுதந்தரம் என்னும் மூவகைச் சுதந்தரங்களும் நீங்கிய விடத்தே கிடைக்கும் என்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி அறிந்தேன்.

ஆகலில் எனது சுந்தரமாகக் கொண்டிருந்த தேக சுதந்தரத்தையும், போக சுதந்தரத்தையும், சீவ சுதந்தரத்தையும் தேவரீர் திருவருட்கே சர்வ சுதந்தரமாகக் கொடுத்துவிட்டேன். கொடுத்த தருணத்தே இத்தேகமும் சீவனும் போகப் பொருள்களும் சர்வ சுதந்தரராகிய கடவுள் பெருங்கருணையாற் கொடுக்கப் பெற்றன அன்றி நமது சுதந்தரத்தாற் பெற்றன அல்ல என்னும் உண்மையை அருளால் அறிவிக்கவும் அறிந்துகொண்டேன். இனி இத்தேகத்தினிடத்தும் சீவனிடத்தும் போகப் பொருள்களிடத்தும் தேவரீர் திருவருள் சாட்சியாக எனக்கு எவ்விதத்தும் யாதோர் சுதந்தரத் தோற்றமும் தோற்றமாட்டாது. தேவரீர் திருவருட் சுதந்தரத்தை என்னிடத்தே மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகள் எல்லாவற்றையும் தவிர்த்து இத்தேகத்தையே நித்திய தேகமாக்கி எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வில் என்னை வாழ்வித்தல் வேண்டும்.

இத்தே கத்தைப் பெற்ற எல்லாச் சீவர்களுக்கும் எனக்கு அறிவித்த வண்ணமே அறிவித்து அவரவர்களையும் உரிமையுடையவர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும். "தேவரீர் பெருங்கருணை ஆட்சிக்கு வந்தனம் வந்தனம்" என்பது வள்ளலார் இறைவனை நோக்கிச் செய்துகொண்ட விண்ணப்பமாகும். உலகியல் வாழ்வில் அறிவு, திரு, ஆற்றல் என்னும் மூவகையாலும் வேறுபாடுடைய மக்களினத்தார் அனைவரும் சமுதாய வாழ்விலும் அரசியல் ஆட்சியிலும் ஒத்த சம உரிமையினைப் பெற்றும் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் முதலிய நுகர் பொருள்களைத் தடையின்றிப் பெற்றும், பசியும் பிணியும் பகையும் இன்றி இனிது வாழ்தலே உண்மையான சுதந்தர வாழ்வாகும். இத்தகைய மெய்ம்மையான சுதந்தர வாழ்வே உலக நாடுகள் அனைத்திலும் நிலைபெறுதல் வேண்டுமென்பதும், அவ்வாறு நிலைபெறுதற்கு இறைவனது திருவருட் சுதந்தி ரத்தினைப் பெறுதல் இன்றியமையாததென்பதும், இத்தகைய நிறைவான சுதந்தரம் நிலைபெறுதற்குச் சன்மார்க்க நெறியினை மக்கள் கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டுமென்பதும் மேற்குறித்த சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பத்தால் நன்கு விளங்கும். மக்கள் பெறுதற்

குரிய எல்லாச் சுதந்தரங்களுக்கும் அடிப்படையான திருவருட் சுதந்தரத்தைப் பெற்றுப் பல்லுயிரனைத்தையும் மகவெனப் பாதுகாத்தருள் புரியும் செல்வக் கடவுள் தொண்டர்களின் நிலையுடைய நிறைவான சுதந்தர வாழ்வினை அறிவுறுத்தும் வகையிலமைந்தது,

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரன் நற்சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று மீளா ஆளாய்க்
கொய் மலர்ச் சேவடியிணையே குறுகினோமே!

என அப்பரடிகள் அருளிய மறுமாற்றத் திருத்தாண்டகமாகும். இதனை யுளங் கொண்டு தேசியகவி சுப்பிரமணிய பாரதியார்.

“பூமியில் எவர்க்கும் இனி அடிமைசெய்யோம் - பரி
பூரணனுக் கேயடிமை செய்து வாழ்வோம்!”

எனப் பாடிய சுதந்தரப் பாடல் உலகியலிற் பெறுதற்குரிய பல்வேறு சுதந்தரங்களுக்கும் அடிப்படையாகிய திருவருட் சுதந்தரத்தின் இன்றியமையாமையினை நன்கு தெளிவு படுத்தல் வேண்டும்.

இவ்வாறு உலக மக்கள் அனைவரும் இவ்வுலகில் நிலை பேறுடைய உண்மையான சுதந்தர வுணர்வினைப் பெற்று இனிது வாழ்தல் வேண்டும் எனத் திருவுளங் கொண்ட இராமலிங்க வள்ளலார், அருட் பெருஞ் சோதி யாண்டவரை நோக்கி வேண்டிய மேற்குறித்த விண்ணப்பத்தின் வாயிலாக உலகமக்கள் அனைவர்க்கும் உரியதாக அறிவுறுத்தப் பெற்ற சுதந்தர வுணர்வினை நூறாண்டு களுக்கு முன் சுதந்தரம்பெற உழைத்த பிற நாட்டறிஞர்கள் கூட இவ்வாறு சிந்தித்து வெளிப்படுத்திய தாகத் தெரியவில்லை. எனவே இற்றைக்கு நூற்றாண்டுகளுக்கு முன்னரே உலக மக்கள் அனைவரும் தம்முள் இகலின்றிச் சுதந்தர வாழ்வினைப் பெற வழிவகுத்த பெருமை தமிழ்ச் சான்றோராகிய அருட்பிரகாச வள்ளலார் ஒருவர்க்கே உரிய தனிச்சிறப்பு ஆகும் எனக் கூறுதல் மிகவும் பொருத்தமுடையதாகும். சன்மார்க்க நெறி பரப்பிய இராமலிங்க வள்ளலார் இற்றைக்கு நூறாண்டுகளுக்கு முன்னரே இறைவன்

திருஅருளால் தெளிந்து வகைப்படுத்து உணர்த்திய தேக சுதந்தரம், போக சுதந்தரம், சீவ சுதந்தரம், திருவருட் சுதந்தரம் ஆகிய சுதந்தர உணர்வுகளின் இயல்பினை மக்கள் எல்லோரும் நன்குணர்ந்து பயன்பெறும் வண்ணம் உலக மக்கள் அனைவர்க்கும் ஆங்கிலம் முதலிய பல்வேறு மொழிகளிலும் கட்டுரை வாயிலாகவும் சொற்பொழிவு வாயிலாகவும் அறிவித்தல் நம்நாட்டு அறிஞர் பெருமக்களின் தலையாய கடமையாகும்.

எல்லாம் வல்ல இறைவனை அம்மை யப்பனாகவும், அவனுடைய அருளாரின்பத்தினை நுகர்தற்குரிய உரிமை வாய்ந்த ஆன்மாவாகிய தம்மை அம்முதல்வனுடைய பிள்ளையாகவும் எண்ணி அன்பினால் நெஞ்சம் நெக்குருகிக் கற்போர் கேட்போர் சிந்திப்போராகிய எல்லாருள்ளத்தினையும் கசிவிக்கும் இனிய செந்தமிழ்ப்பனுவல்களாற் பாடிப் போற்றியவர் இராமலிங்க வள்ளலார். ஆதலின் அம்முதல்வனால் ''நீ நம் பிள்ளை'' என ஏற்றுக் கொள்ளப் பெற்றுத் 'திருவருட் சுதந்தரம்' பெற்ற செம்புலச் செல்வராயினார். இச்செய்தியினை,

துன்பெலாந் தீர்ந்தன சுகம்பலித்தது நினைச்
சூழ்ந்தருள் ஒளி நிறைந்தே
சுத்த சன்மார்க்க நிலை அனுபவம் நினக்கே
சுதந்தரமதானது லகில்
வன்பெலா நீக்கி நல்வழியெலாம் ஆக்கிமெய்
வாழ்வெலாம் பெற்று மிகவும்
மன்னுயிரெலாம் களித்திட நினைத்தனை உன்றன்
மனநினைப் பின் படிக்கே
அன்பநீ பெறுக உலவாது நீடூழிவிளை
யாடுக அருட்சோதியாம்
ஆட்சிதந்தோம் உனைக்கைவிடோம் கைவிடோம்
ஆணைநம் ஆணை என்றே
இன்புறத் திருவாக் களித்தெனுள்ளே கலந்
திசைவுடன் இருந்த குருவே
எல்லாஞ் செய்வல்ல சித்தாகி மணி மன்றினில்
இலங்கு நடராசபதியே. (திரு. 3676)

எனவரும் திருவருட்பாப் பாடல் நன்கு விரித்துரைத்தல் காணலாம்.

தனக்கென வாழாது மன்னுயிர்கள் நலம் பெறுதற் பொருட்டே இறைவனது திருவருளாணையாகிய திருவருட் சுதந்தரம் கைவரப்

பெற்ற அருட்பிரகாச வள்ளலார், தாம் பெற்றசுதந்தரத்தை மற்றவர்களும் பெற்றுநல்வாழ்வு பெறுதல் வேண்டும் என்னும் நோக்கத்தால் உலக மக்களை நோக்கி அறிவுறுத்தப்பெற்றதே,

எல்லாஞ் செயல்கூடும் என் ஆணை அம்பலத்தே
எல்லாம் வல்லான்றனையே ஏத்து (திருவருட்பா)

எனவரும் மறைமொழியாகும்.

நம் பாரத நாடு அயலார் ஆட்சியில் அடங்கி மக்கள் சுதந்தர மின்றி அடிமை வாழ்வில் வருந்திய காலத்தில், இந்நாட்டுமக்கள் சுதந்தர உணர்வுடையராய்த் தமது அடிமை விலங்கினைத் தகர்த்து உரிமை பெற்று எழுவதற்கு உழைத்த அறிஞர் பலருள் தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் முதல் வரிசையில் வைத்து எண்ணத் தக்கவர் என்பதனை இந் நாட்டு மக்கள் அனைவரும் நன்குணர்வர். தமது பாட்டின் திறத்தாலே நாட்டின் விடுதலயுணர்வைத் தோற்றுவித்த பெருங்கவிஞர் சுப்பிரமணிய பாரதி யாருக்கு வழிகாட்டியாக வாழ்ந்த தவச் செல்வர்களில் போற்றுதற்குரிய இராமலிங்க வள்ளலார் முதல் வரிசையில் வைத்து எண்ணத்தகும் தனிச்சிறப்புடையவராகத் திகழ்கின்றார். இவ்வுண்மை, “இந்துஸ்தானத்திற்குள் தமிழ் நாடு முதலாவதாகக் கண் விழித்தது. இராமலிங்க சுவாமிகள் போன்ற மகான்கள் தமிழ் நாட்டின் புதிய விழிப்பிற்கு ஆதிகர்த்தர்களாக விளங்கினார்கள்” எனவரும் பாரதியார் வாய்மொழியால் நன்கு புலனாகும்.

நம் நாட்டு மக்கள் அயலார் ஆட்சியுள்பட்டு வருந்திய துன்ப நிலையினைக் கண்டு நெஞ்சம் நெக்குருகிய அருட்பிரகாச வள்ளலார், அருளில்லாத அயலவரது ஆட்சி அடியோடு அகற்றப் பெறுதல் வேண்டும் எனவும், உயிர்க்குயிராகிய இறைவனது திருவருளில் திளைத்த சன்மார்க்கச் செல்வர்களே இந்த நாட்டினை ஆளுதல் வேண்டுமெனவும் இடைவிடாது எண்ணியவர் ஆவர். இவ்வுண்மை.

கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக
அருள் நயந்த நன் மார்க்கர் ஆள்க - தெருள்நயந்த
நல்லோர் நினைத்த நலம் பெறுக நன்று நினைத்
தெல்லோரும் வாழ்க இசைந்து (5618)

எனவரும் திருவருட்பாப் பாடலால் இனிது விளங்கும்.

இந்நாட்டிற் கல்வி, செல்வம் முதலியவற்றால் ஒத்தார், உயர்ந்தார், தாழ்ந்தார் ஆகிய எல்லா மக்களும் தம்முள் வேறுபாடின்றி ஒத்த உரிமை யுடையராகி நம் நாட்டின் அரசியல் ஆட்சியில் பங்கு கொள்ளும் வாய்ப்பினைப் பெறுதல் வேண்டு மென்பதே வடலூரர் வள்ளலாரின் உயர்ந்த குறிக்கோளாகும்.

*மக்களாட்சியின் அமைப்பினைப் பற்றிய இவ்வுயர்ந்த கருத்து,*

"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுளராகி உலகியல் நடத்தல் வேண்டும்." (4082)

என இராமலிங்க வள்ளலார் இறைவனை நோக்கி வேண்டிய சுத்த சன்மார்க்க வேண்டுகோளில் இடம் பெற்றிருத்தல் உணர்ந்து மகிழத்தகுவதாகும்.

# 16. திருமுறையும் திருவருட்பாவும்

நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த ஞான சம்பந்தப் பிள்ளையாரை வழிபடு குருவாகக் கொண்டு, செந்தமிழும் வடமொழியும் ஆகிய இருமொழிகளிலும் அமைந்த மெய்ந்நூற் பொருள்களை ஓதாதுணர்ந்த மாதவச் செல்வர் இராமலிங்க அடிகள் என்பது முன்னர் விளக்கப் பெற்றது.

காழிக் கவுணியப் பிள்ளையார் மூன்று வயது குழந்தையாகிய பிள்ளைப் பருவத்திலேயே உமையம்மையார் அளித்த ஞானப் பாலடிசிலை உண்டு, தமிழ் ஞானசம்பந்தராய்த் "தோடுடைய செவியன்" முதலாக உள்ள திருநெறிய தமிழாகிய திருப்பதிகங் களைப் பாடியருளினார் என்பது வரலாறு. பிள்ளையார் அருளிச் செய்த திருப்பதிகங்கள் பண்ணமைதி கருதி முதல் மூன்று திருமுறைகளாக வகுக்கப் பெற்றுள்ளன. ஆளுடைய பிள்ளையார் காலத்தவராகிய திருநாவுக்கரசர் அருளிச் செய்த திருப்பதிகங்கள், நான்கு, ஐந்து ஆறாம் திருமுறைகளாக வகுக்கப் பெற்றன. நம்பி ஆரூரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருப்பதிகங்கள், ஏழாம் திருமுறைகயாக அமைக்கப் பெற்றன. திருவாதவூ ரடிகளாகிய மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும் திருச்சிற்றம்பலக் கோவையும் எட்டாந் திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர் முதல் சேந்தனார் ஈறாக உள்ள ஆசிரியர் ஒன்பதின்மர் பாடியருளிய இன்னிசைச் செழும் பாடல்களாகிய திருவிசைப்பாவும் திருப் பல்லாண்டும் ஒன்பதாம் திருமுறை யாகவும், திருமூலநாயனார் அருளிய தமிழ் மூவாயிரமாகிய திருமந்திரம் பத்தாந் திருமுறையாக வும், திருவாலவாயுடையாராகிய சிவபெருமான் பாணபத்திரர் பொருட்டுச் சேரமான் பெருமாளுக்குப் பாடியருளிய திருமுகப்பாசுர முதலாக நம்பியாண்டர் நம்பிகள் அருளிய திருநாவுக்கரசர் திரு ஏகாதச மாலை ஈறாக அமைந்த நாற்பது பிரபந்தங்களும் பதினோராந்

திருமுறையாகவும், அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் பெருமான் பத்திச் சுவைந னிசொட்டச் சொட்டப் பாடியருளிய திருத்தொண்டர் புராணமாகிய பெரியபுராணம் பன்னிரண்டாந் திருமுறையாகவும் பின் வந்த சான்றோர்களால் முறைப்படுத்தப் பட்டன.

இவ்வருள் நூல்கள் அனைத்தும் தம்மை மறந்து சிவபரம் பொருளையே இடைவிடாது சிந்திக்கும் அருளாளர்களால் அருளிச் செய்ப்பட்டன வாதலின், "எனதுரை, தனதுரையாக" **(1-86-1)** என ஆளுடைய பிள்ளையார் அருளிய வண்ணம் எல்லாம் வல்ல இறைவனுடைய அருள்வாக்கெனவே கொள்ளத்தக்கனவாம்.

சைவ சமயகுரவர் நால்வருள் திருஞானசம்பந்தர் திரு நாவுக்கரசர், நம்பியாரூரர் ஆகிய மூவரும் அருளிச் செய்த தெய்வ இசைப்பாடலகளைத் தேவாரம் எனவும், மணிவாசகப் பெருமான் அருளிய பத்திப்பனுவல்களாகிய பாடல்களைத் திருவாசகம் எனவும் வழங்குதல் மரபு. இத்திருமுறைப் பனுவல்களை இடைவிடாது ஓதி உள்ளம் உருகப் பெற்றவர் இராமலிங்க வள்ளலார் ஆதலின், அவர் பாடியருளிய திருவருட்பாவில் பன்னிரு திருமுறைகளின் சொற்பொருள் நலங்கள் எங்கும் இடம் பெற்று விளங்கக் காண்கின்றோம். சமய குரவர் நால்வரும் அருளிய தேவார திருவாசகமாகிய அருட்பாடல்களை இடைவிடாது ஓதி நெஞ்சம் நெக்குருகிய அருட்பிரகாச வள்ளலார், அவ்வருளாசிரியர் அறிவுறுத்திய நெறியில் நின்று எல்லாம் வல்ல இறைவனைப்பாடிப் போற்றிய பனுவல் திருவருட் பாவாதலின், அப்பாடல்கள் யாவும் இறைவன் அருள்வழிநின்று முன்னோர் பாடிய திருமுறைகளின் விரிவுரையாகவும் நுண்பொருள் விளக்கமாகவும் அமைந்துள்ளமை காணலாம். அருட்பிரகாச வள்ளலார் சமய குரவர் முதலிய திருமுறையாசிரியர்களது வரலாற்றுச் செய்திகளையும் திருமுறைப் பாடல்களின் சொற்பொருள் அமைப்பினையும், தாம் பாடிய திருவருட்பாப் பனுவல்களிற் பலவிடங்களிலும், குறிப்பிட்டுப் போற்றியுள்ளார். இவற்றைக் கூர்ந்து நோக்குங்கால் திருமுறைகளில் இராமலிங்க வள்ளலார் கொண்டுள்ள அளப்பரும் ஈடுபாடும் அத்திருமுறைகளாற் பெற்ற அருளனுபவமும் இனிது புலனாகும்.

தமிழகம் சங்க காலத்துக்குப்பின் அயலவர் ஆட்சியுட் பட்டுத் தனக்குள்ள, தெய்வக் கொள்கை, தமிழ்வளர்ச்சி, தமிழர்

நாகரிகம் முதலிய தன் தொன்மை நலங்களிற் சிதைவுற்ற பொழுது, அச்சிதைவுகளை நீக்கித் தமிழ் நாட்டு அரசியல் உரிமையும், தமிழ் மக்களது வாழ்வியலும், மொழியுணர்வும், கலைவளமும் பண்டு போல் மீண்டும் சிறப்புற்று விளங்க இறைவன் அருளால் தோன்றித் தெய்வத்தமிழ் பரப்பிய செம்புலச் செல்வர்கள், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலிய திருமுறை ஆசிரியர்கள் ஆவர்.

பண்ணேறும் மொழியடியாராகிய தேவார ஆசிரியர்கள் மூவரும், தமிழகத்தில் ஊர்தோறும் சென்று தமிழ் மக்களை ஒன்றுகூட்டித் திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபடச் செய்யும் நோக்குடன் பாடிப் போற்றிய இன்னிசைத் திருப்பதிகங்கள் தமிழ்மக்களின் அச்சத்தை நீக்கித் தம் நாட்டினைத் தாமே ஆளும் உரிமையுணர்வினைக் கிளர்ந்தெழச் செய்தன என்பது தமிழக வரலாறு நமக்கு உணர்த்தும் பேருண்மையாகும்.

‘நாமார்க்கும் குடியல்லோம்’, ‘அஞ்சுவது யாதொன்று மில்லை அஞ்சவருவதும் இல்லை’ என்றாங்கு அப்பரடிகள் அருளிய மெய்மொழிகளை உளங்கொண்ட தமிழ் மக்களும், தமிழ் வேந்தர்களும் உரிமையுணர்வுடையராய் வீறு பெற்று எழுந்தனர். செந்தமிழ்ப் பாண்டிநாடு நன்றியிலா நெறியாகிய புறச்சமய இருளில் நீங்கித் திருவருள் வண்ணமாகிய திருநீற்றின் ஒளியுடன் கிழ்வதாயிற்று.

தேவாரத் திருப்பதிகங்களை அன்புடன் ஓதி இறைவனை வழிபட்ட ஆதித்தன், பராந்தகன், அருள்மொழித் தேவனாகிய இராசராசன், கங்கை கொண்ட சோழன் முதலிய பிற்காலச் சோழ மன்னர்கள், தம் நாட்டிலிருந்து அயலார் ஆட்சியை நீக்கியதுடன் தமிழகம் முழுவதனையும், ஒரு குடைக்கீழ் ஆட்சி புரியும் பேராற்றல் கைவரப் பெற்றனர்; வங்காளம் முதலிய வடநாட்டுப் பகுதிகளிலும், கடல் கடந்த வெளிநாடுகளிலும் தமிழரது ஆட்சியும் தமிழர் நாகரிகமும் தமிழ் மக்களின் தெய்வ வழிபாட்டு மரபுகளும் நிலைபெறச் செய்தனர். இவ்வாறு தமிழகத்திலும் வடநாட்டிலும் கடல் கடந்த ‘சயாம்’ முதலிய வெளிநாடுகளிலும், தமிழரது வீரமும், தமிழர் நாகரிகமும், பரவுவதற்குக் காரணமாய்த் தமிழ் மக்களுக்கு ஊக்கமும் உணர்வும் அளித்தவை, தேவார ஆசிரியர் முதலியோர் அருளிய திருமுறைப் பனுவல்களேயாகும். இவ்வுண்மை

திருகோயில்கள் தோறும் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்யத் தமிழ் மன்னர்கள் நிறுவிய அறக் கட்டளை (நிபந்தங்கள்) பற்றிய கல்வெட்டுச் செய்திகளால் நன்கு வலியுறுதல் காணலாம்.

புறச்சமய இருள்நீக்கித் தமிழ் மக்களது தெய்வ வழிபாட்டினை நிலை நிறுத்தும் நோக்குடன் பாண்டி நாட்டின் தலைநகரான மதுரையை யடைந்த திருஞான சம்பந்தர், திருஆலவாய்ப் பெருமானைப் பரவிப் போற்றும் நிலையில் அமைந்த திருப்பாடல்,

"நீலமாமிடற்று, ஆலவாயிலான்
பால தாயினார், ஞாலமாள்வரே" (1-94-1)

என்பதாகும்.

"மன்னுயிர்கள் உய்தல் வேண்டி ஆலகால மாகிய நஞ்சினைத் தன்மிடற்றில் அடக்கிய பேரருளாள னாகிய இறைவனது திருவருளின்வழி ஒழுகுவோரே இவ்வுலகத்தை ஆட்சி புரிவதற்கேற்ற பேராற்றல் படைத்தவர் ஆவர்" என்பது இத்திருப்பாடலின் பொருளாகும்.

இத்திருப்பாடல் பாடப் பெற்ற காலச் சூழ்நிலையினைக் கருத்திற் கொண்ட அருட்பிரகாச வள்ளலார் இப்பாடல், அயலவர் ஆட்சியுட்பட்டு அல்லற்படும் தம் காலச் சூழ்நிலைக்கும் ஏற்புடையதே எனத் தெளிந்தார். அத்தெளிவின் பயனாகத் தம் நெஞ்சத்துக்கு அறிவுறுத்தும் நிலையில் திருவொற்றியூர்ப் பெருமானைப் போற்றிப் பாடிய திருப்பதிகம், நெஞ்சொடு நேர்தல் என்னும் தலைப்பில் அமைந்த தாகும். அப்பதிகத்தின் இரண்டாம் பாடல்,

ஓடும் நெஞ்சமே ஒன்று கேட்டிநீ
நீடும் ஒற்றியூர் நிமலன் மூவர்கள்
பாடும் எம்படம் பக்க நாதன்தாள்
நாடு நாடிடில் நாடு நம்மதே. (755)

என்பதாகும்.

இது, மேற்குறித்த ஞானசம்பந்தப் பிள்ளையார் அருளிய பாடலின் சொற்பொருள் அமைப்பினையும், யாப்பு அமைதியினையும் அடியொற்றி அமைந்துள்ளமை காணலாம். இதன்கண் "மூவர்கள் பாடும் எம்படம்பக்க நாதன்" என்ற தொடர், தேவார ஆசிரியர்கள் மூவராலும் திருப்பதிகச் சொல் மாலைகளால் பாடிப் போற்றப் பெற்ற படம்பக்கநாத ராகிய திருவொற்றியூர் சிவபெருமானைக் குறித்ததாகும்.

*இங்கெழுந்தருளிய இறைவன், ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் என்னும் மூவரும் பாடிய தேவாரத் திருப்பதிகங்களை ஆர்வமுடன் கேட்டு அருள் புரிந்த திறத்தை*

*“நாட நல்லிசை நல்கிய மூவர்தம்*
*பாடல் கேட்கும் படம்பக்க நாதரே” (719)*

*எனவரும் அடிகளில் வள்ளலார் குறித்துப் போற்றி யுள்ளமை இங்கு நினைக்கத் தகுவதாகும். சிந்தைக்கும் மொழிக்கும் எட்டாததும், தேவர் முதலியோர்களால் அறியப் படாததும் ஆகிய இறைவனது பொருள்சேர் புகழ் திறத்தினை நாவெனும் ஒரு பொறிக்கு மட்டும் சுவை பயப்பனவாகிய பாலும், கனியும், அமுதும் தேனும், கசப்புடையன என்று ஒதுக்கும்படி அவற்றினும் மேலாய்ப் பாடும் நாவுக்கும், கேட்கும் செவிக்கும், நினைக்கும் சிந்தைக்கும் தீஞ்சுவை பயக்கும், செந்தமிழ்ப் பாமாலைகளால் போற்றிப் பரவியவர் தேவார ஆசிரியர்கள் மூவருமாதலால் அவர்களால் பாடப் பெற்ற திருப்பாட்டிற்கு இறைவனது மெய்ப்புகழ் இசைந்து அப்பாடல்ளுள் அடங்குவ தாயிற்று என அறிவுறுத்தும் முறையில் : அமைந்தது,*

தேவர் அறியார் மால் அறியான்
திசை மாமுகத்தோன் தான் அறியான்
யாவர் அறிவார் திரு ஒற்றி அப்பா!
அடியேன் யாதறிவேன்
மூவர் திருப்பாட்டினுக் கிசைந்தே
முதிர் தீம்பாலும் முக்கனியும்
காவல் அமுதும் நறுந்தேனும்
கைப்ப இனிக்கும் நின்புகழே. (908)

*எனவரும் திருவருட்பாவாகும்.*

*ஆளுடைய பிள்ளையார் தமது மூன்று வயதாகிய இளம் பருவத்திலேயே உமையம்மையார் அளித்த ஞானப் பாலையுண்டு திருநெறித்தமிழால் சைவ மெய்ந்நெறியைப் பரப்பும் சமய குரவராகத் திகழ்ந்தருளிய செய்தியினை,*

“பயிலு மூவாண்டிற் சிவைதரும் ஞானப்
பால் மகிழ்ந்துண்டு மெய்ந்நெறியாம்
பயிர் தழைந் துறவைத் தருளிய ஞான
பந்தன் என்றோங்கு சற்குருவே.” (3227)

*என ஞான சம்பந்தப்பிள்ளையாரை முன்னிலைப்படுத்திப் போற்றும் முகத்தாலும்,*

மாநத்த மலர்வயல் காழிக் கவுணியர் மாமணிக்கன்
றாநந்த இன்னமு தூற்றும் திருமுலை ஆரணங்கே (1420)

என வடிவுடையம்மையை முன்னிலைப்படுத்திப் போற்றும் முகத்தாலும் வள்ளலார் குறித்துள்ளமை காணலாம். நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞான சம்பந்தப் பிள்ளையாரது கைமலர் வருந்தாதவாறு திருக் கோலக்கா இறைவர் பொற்றாளம் அளித்தருளிய செய்தியை "ஓர் காழிப் பாலர்க்காக அன்று பசும் பொற்றாளங் கொடுத்த கோலக்கா மேவும் கொடையாளா" **(1962-கண்ணி-16)** எனவரும் தொடரில் வள்ளலார் குறித்துப் போற்றியுள்ளார்.

திருநெல்வாயில் அரத்துறையினை வழிபடச் சென்ற ஆளுடைய பிள்ளையார்க்கு அவர்தம் திருவடி வருந்தாதவாறு அறத்துறை யீசர், முத்துச் சிவிகை, குடை, சின்னம் ஆகியவற்றை அளித்தருளினார் என்பது வரலாறு. இந் நிகழ்ச்சியினை,

"முன்னங்காழி வள்ளலுக்கு முத்துச்சிவிகை குடையொடுபொற்
சின்னம் அளித்தோன் சிவபெருமான்." (1369)

எனவும்,

"எங்கள் காழிக் கவுணியரை எழில் கொள் சிவிகை ஏற்றி வைத்தார்" (1660)

எனவும்

"பேரோங்கு காழிக்கண் மெய்ஞ்ஞானப் பாலுண்ட செம்மணியைச்
சீரோங்கு முத்துச் சிவிகையின் மேல்வைத்ததேவ!" (2361)

எனவரும் தொடர்களில் வள்ளலார் குறித்துப் போற்றியுள்ளார்.

தம் மாமன் மகளை மணந்து கொள்ளும் விருப்பத்தால் அவளை உடனழைத்துக் கொண்டு செல்லும் வணிகன், திருமருகலில் தங்கியிருந்த பொழுது, நள்ளிரவில் விடந்தீண்டி இறந்தானாக, அவனுடன் வந்த நங்கையின் அரற்றுதலைக் கேட்ட ஆளுடைய பிள்ளையார், திருவுருமிரங்கி "சடையாயெனுமால்" என்னும் திருப்பதிகத்தைப் பாடி அவ்வணிகனை உயிர்ப்பித் தருளினார் என்பது வரலாறு. இவ்வருட் செயலை,

"ஏச்சகல
விண் மருவினோனை விடநீக்க நல்லருள்செய்
வண்மருகல் மாணிக்க வண்ணனே" (1962 கண்ணி 145)

எனவரும் தொடரில் மருகற் பெருமானைப் போற்று முகத்தால் குறிப்பிட்டுள்ளமை காணலாம்.

திருஞான சம்பந்தப் பிள்ளையார் திருவீழி மிழலையில் தங்கியிருக்கும் பொழுது அவரைக் காண விரும்பிய காழி நகர மாந்தர் வீழிமிழைக்க வந்து பிள்ளையாரைத் தொழுது தங்களுடன் காழிப்பகுதிக்கு எழுந்தருள, வேண்டுமென வேண்டிக் கொண்டார்கள். அவர்களது விருப்பத்தை உணர்ந்த பிள்ளையார் "இன்று கழித்து நாளை வீழி மிழலை யிறைவர் அருள் பெற்றுப் புறப்படுவோம்" எனக் கூறி அன்றிரவு துயிலமர்ந்தார். அந்நிலையில் வீழிமிழலைப் பெருமான் பிள்ளையார்க்குக் கனவில் தோன்றி "யாம் தோணியிலமர்ந்த வண்ணத்தை நீ இன்று வீழிமிழலையிற் காண்பாய்" என அருள்செய்து மறைந்தனர். துயிலுணர்ந்து விழிப்புற்று எழுந்த பிள்ளையார், கைகளைத் தலைமேற் குவித்திறைஞ்சித் திருவிழிமிழலைத் திருக்கோயிலுட் புகுந்து விண்ணிழி விமானத்தின் கண்ணே திருத்தோணிபுரத் திருக் கோலத்தைக் கண்டு மகிழ்ந்து "மைம்மருபூங்குழல்" என்ற திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினார். இத்திருப்பதிகத்தின் பாடல் தோறும் "புகலி நிலாவிய புண்ணியனே! மிழலை விண்ணிழி கோயில் விரும்பியது என்கொல் சொல்லாய்" எனப் பிள்ளையார் இறைவனை நோக்கி வினவிப் போற்றுவதுடன் இப்பதிகத்தின் ஒன்பதாம் திருப்பாடலில் எறிமழுவோடிளமான் கையின்றி யிருந்தபிரான் இது என் கொல் சொல்லாய்' (1-4-9) எனவரும் தொடரால் மானும் மழுவுங்கைக் கொள்ளாது வீற்றிருந்தருளும் தோணியப்பரது திருவுருவத்தை வீழி மிழலையிற் கண்ட அற்புத நிகழ்ச்சியையும் வெளியிட்டருளிய திறம் உளங்கொளத் தக்கதாகும்.

இவ்வரலாற்று நிகழ்ச்சியைத் தொகுத்துரைக்கும் முறையில் அமைந்தது,

ஏழியல் பண்பெற் றமுதோடளாவி
இலங்கு தமிழ்க்
கேழியல் சம்பந்தர் அந்தணர் வேண்டக்
கிளர்ந்த நற்சீர்

வீழியில் தம்பதிக் கேவிடை கேட்க
  வெற்பாளுடனே
காழியில் தன்னுருக் காட்டினரால்எம்
  கடவுளரே! (827)

*எனவரும் "திருவருள் வழக்க விளக்க"ப் பாடலாகும்.*

*திருஞானசம்பந்தப் பிள்ளையாரும் திருநாவுக்கரசரும் அடியார் திருக்கூட்டத்துடன் திருவீழி மிழலையில் தங்கியிருந்த போது பஞ்சம் உண்டாக, வீழிமிழலைப் பெருமான் அடியார் களின் பசிநீங்க, பஞ்சம் நீங்கும் வரையிலும், அவ்விரு பெரு மக்களுக்கும், நாள்தோறும் படிக்காசு வழங்கியருளினான் என்பது வரலாறு. இச் செய்தியை,*

"............ முன்னரசும்
காழிமிழலையரும் கண்டு தொழக் காசு அளித்த
வீழிமிழலை விராட்டுருவே" (1962 கண்ணி 126)

*எனவரும் கண்ணியில் வள்ளலார் விளக்கியுள்ளார்.*

*திருவோத்தூரில் வாழ்ந்த அடியார் ஒருவர் சிவனடியார் களுக்கெனத் தண்ணீர் இறைத்து வளர்த்த பனைகள் அனைத்தும் ஆண்பனையாக, அதுகண்ட புறச் சமயத்தார் அவ்வடியரை இகழ்ந்துரைத்தனர். அந்நிலையில் அவ்விகழ்ச்சியுரையைப் பெறாத அவ்வடியவர் அங்கு வந்த ஆளுடைய பிள்ளையாரிடம் முறை யிட்டார். அது கேட்ட பிள்ளையார் "பூத்தேர்ந்து ஆயன கொண்டு" என்னும் பதிகத்தினைப் பாடி ஆண்பனைகளை யெல்லாம் பெண்பனைகளாக மாற்றிக் குரும்பை ஈன்று காய்க்கும் படி செய்தருளினார். இச்செய்தியை வள்ளலார் "ஆண்பனை, பெண் பனை யாக்கி" **(3031)** எனவரும் தொடரில் குறித்துள்ளார்.*

*திருமயிலையில் வாழ்ந்த சிவநேசர் என்னும் வணிகர் தாம் பெற்ற பூம்பாவையும் தன் செல்வம் அனைத்தையும் பாண்டி நாட்டில் புறச்சமய இருள் நீக்கிச் சிவநெறி பரப்பிய ஞான சம்பந்தருக்கே உரிமை செய்து வாழ்ந்தார். தம்மகள் விடந்தீண்டி யிறக்க அவளது உடம்பைத் தீயிலிட்டு வெந்த சாம்பரையும், எலும்பையும் ஓர் குடத்தில் வைத்துப் பூசனை செய்து வந்தார். அந்நிலையில் ஆளுடைய பிள்ளையார் திருமயிலைக்கு எழுந் தருளினார். சிவநேசருடைய மகளது என்பு நிறைந்த குடத்தினைக்*

*கபாலீச் சரத்து இறைவன் திருமுன்னர் வைக்கும்படி செய்து 'மட்டிட்ட புன்னையங் கானல்' எனத் தொடங்குந் திருப்பதிகத்தை ஞானசம்பந்தர் பாடிய பொழுது, அந் குடத்தில் துவக்கப் பெற்ற எலும்பிலிருந்து பூம்பாவை உயிர் பெற்றெழுந்தாள் என்பது வரலாறு.*

*ஆளுடைய பிள்ளையார் எலும்பைப் பெண்ணாக்கிய இவ்வருட்செயல், சிவமே தாமாகி ஏகனாகி இறைபணி நிற்கும் அவரது உயர்வற வுயர்ந்த பெருமைக்கு ஏற்ற எடுத்துக்காட்டாகும் வியப்புடைய செயலாகாது எனவும், அவருடைய பெரும் புகழை உள்ளவாறு உணர்ந்த பிறர் ஒருவர் எடுத்துக் கூறுவா ராயினும் வெறும் சாம்பலும் தெய்வ வடிவாய் உயிர் பெற்றெழுவ தாகும் எனவும் அருட்பிரகாச வள்ளலார் ஆளுடைய பிள்ளையாரது சீர்த்தியை விரித்துப் போற்றுவதாக அமைந்தது,*

பண்ணால் உன்சீரினைச்சம் பந்தர்சொல வெள்ளெலும்பு
பெண்ணான தென்பார் பெரிதன்றே - அண்ணா அச்
சைவ வடி வாம்ஞான சம்பந்தர் சீருரைக்கில்
தெய்வவடி வாம் சாம்பர் சேர்ந்து, (திருவருட்பா 2008)

*எனவரும் சிவநேச வெண்பாவாகும்.*

*இறந்த பூம்பாவையின் எலும்பினை உயிர்பெற்றெழும் படி ஞான சம்பந்தர் செய்த இவ்வருட் செயலானது சிறிய போகத்தை நல்கும் அமிழ்தத்தை உணவாக உண்டு நெடுங்காலம் வாழ எண்ணிய தேவர்களை நோக்கி வானுலகம் இகழ்ந்து நகைப்பதற்கு ஏதுவாயிற்று என்னும் கருத்தமைய வள்ளலார் ஞானசம்பந்தரைப் போற்றியதாக அமைந்த பாடல்,*

நல்லமுதாம் சிவை தான்தரக் கொண்டுநின் நற்செவிக்குச்
சொல்லமுதந் தந்த எங்கள்பிரான் வளஞ்சூழ்மயிலை
இல்லமுதந் திகழ்பெண்ணாக என்னை எழுப்பிய நாள்
சில்லமுதம் பெற்ற தேவரை வானஞ் சிரித்த தன்றே. (2301)

*என்பதாகும்.*

*'சிறுமை யுடைய வானுலக இன்பத்தினையே பெரிதெனக் கருதி அமுதினை யுண்டு நெடுநாள் வாழும் தேவர்களாகிய நீவிர் வளமார்ந்த திருமயிலைப் பதியில் திருஞானசம்பந்தர் திருவாய்*

மலர்ந்தருளிய ஞானத் தமிழாகிய அமுதினைப் பருகி, என்பு பெண்ணுருவாகத் தோன்றிய அமிழ்தனைய பூம்பாவை சிவனருளைச் சிந்தித்துச் சிவத்தைச் சேர்ந்தாற் போன்று, தெய்வவமுதத்தைப் பருகிச் சிவமாந் தன்மைப் பெருவாழ்வைப் பெற முயலாது வீணே காலத்தைக் கழிக்கின்றீர்களே' என வானுலகம் தன்னிடத்தே வாழும் தேவர்களை நோக்கி இகழ்ந்து நகைப்பதாயிற்று என்பார்,

"வளஞ்சூழ் மயிலையில் அமுதந்திகழ் பெண்ணாக என்பை எழுப்பிய நாள் சில்லமுதம் பெற்ற தேவரை வானஞ் சிரித்தது" என்றார் வள்ளலார். சில்லமுதம் என்றது நிலையில்லாத சிறிய போகத்தை.

கவுணியப் பிள்ளையார், உமாதேவியார் நல்ல அமுதமாகிய திருமுலைப் பாலைப் பொற்கிண்ணத்தில் கலந்து தர அதனைக் கையிற்கொண்டு பருகி அதனை நாவினால் மறித்து, எல்லாம் வல்ல இறைவனும் அவன் அடியார்களும் தம் செவிகளாற் பருகும் சொல்லமுதமாகத் தந்தருளினார். எங்கள் பிரான் சம்பந்தன் செய்தருளிய இதனைப் புலப்படுத்தும் முறையில் அமைந்தது.

"சிவைநல்லமுதம் தரத் தான்கொண்டு நின் நற்செவிக்குச்
சொல்லமுதந் தந்த எங்கள்பிரான்."

என்னும் தொடராகும்.

சிவை = உமையம்மை. நல்லமுதம் = அம்மையார் அளித்த ஞானப்பாலமுதம். நாவினாற் பருகிய ஞானப் பாலைத் தேவாரத் திருப்பதிகம் என்னும் சொல்லமுதமாக அன்பர் பலரும் பருக அளித்த பெருமை காழிக் கவுணியர் பிரானாகிய வள்ளலுக்கே உரியதென்பது இத்தொடரின் கருத்தாகும்.

வள்ளலார் அருளிய இப்பாடல் ;

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைப் கரையினியற்
பாவான் மொழிஞானப்பாலுண்டு - நாவான்
மறித்தெஞ் செவியமுதா வார்த்த பிரான் றண்டை
வெறித் தண் கமலமே வீடு. (நால்வர் நான்மணிமாலை-1)

எனவரும் சிவப்பிரகாசரின் பாடற் பொருளை நினைவு கூரும் நிலையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

திருஞான சம்பந்தப் பிள்ளையார் நல்லூரில் வாழ்ந்த நம்பாண்டார் நம்பியின் திருமகளாரை மணந்து தீவலம் வருதலான சடங்கினை நிறைவேற்றும் நிலையில் "விருப்புறும் அங்கியாவார் விடையுயர்த்தவரே" யென்னும் சிந்தையராய்த் தீயினை வலம் வந்தார்; நல்லூர்ப் பெருமணத் திருக்கோயிலை யடைந்து "கல்லூர்ப் பெருமணம் வேண்டா" என்னும் முதற் குறிப்புடைய திருப்பதிகத்தைப் பாடி, அங்கு எழுந்த பெருஞ்சோதியில் காதலியைக் கைப்பிடித்துப் புகுபவர் தம் திருமணம் காண வந்த எல்லோரையும் முன்னேயனுப்பி அதன்பின் தாமும் தம் மனைவியாரும் இறைவனது எழில்வளர் சோதியிற்புகுந்து சிவபெருமானோடு ஒன்றி உடனானார் என்பது வரலாறு. இவ்வரலாற்று நிகழ்ச்சியை,

"…. ….. ….. ….. ….. விழிப்பாலன்
கல்லூர்ப் பெருமணத்தைக் கட்டுரைக்கச் சோதிதரு
நல்லூர்ப் பெருமணம்வாழ் நன்னிலையே" (1962 கண்ணி - 6)

என விண்ணப்பக் கலிவெண்பாவில் வள்ளலார் குறித்துள்ளமை காணலாம். இதன்கண் "விழிப்பாலன்" என்றது, சிவபெருமானது நெற்றிக் கண்ணில் தோன்றிய முருகப் பெருமானை, முருகப் பெருமானே, திருஞான சம்பந்தப் பிள்ளையாராகத் திருஅவதாரஞ் செய்தருளினார் என்பது அருட்பிரகாச வள்ளலாரின் நம்பிக்கை யாகும். அது பற்றியே ஞானசம்பந்தப் பிள்ளையாரை இத்தொடரில்

"விழிப்பாலன்" எனக் குறித்தார் வள்ளலார்.

"ஆருகதச் சமயக் காட்டை அழித்த வெங்கனலே போற்றி"

(முருகன் போற்றி 512)

எனவும்,

"சைவந்தழைக்கத் தழைத் தாண்டி - ஞான
சம்பந்தப் பேர்கொண் டழைத்தாண்டி" (சண்முகர் கொம்மி 534)

எனவும் வரும் தொடர்களில் ஞானசம்பந்தப் பெருமான் செய்த செயல்களை முருகப் பெருமான் செயல்களாக வள்ளலார் குறித்துப் போற்றியுள்ளமை காணலாம்.

இவ்வாறு ஞானசம்பந்தப் பிள்ளையாரை முருகப் பெருமானது திருஅவதாரமாகப் போற்றி வழிபடு மரபு கவிச் சக்கரவர்த்தி

ஒட்டக்கூத்தர் இயற்றிய தக்கயாகப் பரணியிலும், கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநுபூதி பாடிய அருணகிரிநாதர் அருளிய திருப்புகழிலும், சிதம்பர சுவாமிகள் அருளிய திருப்போரூர்ச் சந்நிதி முறையிலும் இடம்பெற்றுள்ளமை இங்கு ஒப்புநோக்குதற் குரியதாகும்.

பிறவிப் பெருங்கடலிற்கட்டுக் கரை காணாது வருந்தும் இயல்பினராகிய மக்கள் திருஞானசம்பந்தரது திருமணத்தைக் கண்டு உடன்சேவித்துச் செல்லும் நற்பேற்றினாலே நல்லூர்ப் பெருமணத் திருக்கோயிலில் தோன்றிய ஈறில் பெருஞ்சோதியிலே புகுந்து பிறவா நெறியாகிய பேரின்ப வாழ்வைத் தலைப் பட்டார்கள் என்னும் இவ்வரலாற்று நிகழ்ச்சியை உளங்கொண்டு நெஞ்சம் நெக்குருகிய வள்ளலார், இறைவனை நோக்கி முறையிடுவதாக அமைந்தது,

எங்கோவே யான்புகலி எம்பெருமான் தன்மணத்தில்
அங்கோர் பொருட்சுமையாள் ஆனேனேல் - இங்கேநின்
தாள்வருந்த வேண்டேன் தடைப்பட்டேன் ஆதலினில்
நாள்வருந்த வேண்டுகின்றேன் நான். (2009)

எனவரும் திருவருட்பாவாகும்.

'எம் ஆருயிர்த் தலைவனாகிய இறைவனை, புகலிசபதியில் தோன்றிய எம்பிரான் சம்பந்தரது திருமணத்தில் மணத்திற்கு வேண்டும் பொருட்களைத் தூக்கிச் செல்லும் பணியாட்களுள் ஒருவனாக யான் இருந்திருப்பேனானால் இவ்விடத்தை நின் திருவடி வருந்தும்படி பலமுறையும் வணங்கி வேண்டும் நிலையில் நினக்குச் சுமையாக இருக்கமாட்டேன். இத்திருமணத்தில் கலந்து கொள்ளாதபடி காலத்தால் தடைப்பட்டேன் ஆதலால் இந்நாளில் வருந்தும்படி நின்னைப் பலமுறையும் வேண்டிக் கொள்வே னாயினேன்'' என வள்ளலார் இறைவனை நோக்கிக் கூறுகின்றார். திருஞான சம்பந்தப் பிள்ளையார் தம் திருமணம் காண வந்தார் அனைவருக்கும் வீடுபேறளித்த அருள் உண்மையை நினைந்து போற்றுவது மேற்குறித்த சிவநேச வெண்பாவாகும். ஞானசம்பந்தப் பிள்ளையாரை இளம்பருவத்திலேயே குருவாகக் கொண்ட வள்ளலார், பிள்ளையார் அருளிய திருப்பதிகங்களை நாள்தோறும் ஓதிவருவதனை மரபாகக் கொண்டவ ரென்பதும், அவ்வாறு ஓதி வரும் நாளில் ''தோடுடைய செவியன் எனத் தொடங்கும் முதல் திருப்பதிகத்தின் திருக்கடைக் காப்புப் பாடலாகிய,

அருநெறிய மறைவல்ல முனியகன்
பொய்கை அலர்மேய
பெருநெறிய பிரமா புரமேவிய
பெம்மான் இவன்றன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர்ஞான
சம்பந்தன் னுரைசெய்த
திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை
தீர்தல் எளிதாமே (1-1-11)

எனவரும் பாடலை இறைவன் குறிப்பித்தருளினன் எனவும், அப்பாடலின் நுண் பொருளை நெடுநாள் தெரியாதிருந்த தாம், உயிர்க்குயிராய் இறைவன் மீண்டும் உள்நின்றுணர்த்த அப்பாடலிற் குறிக்கப்பட்ட பெருநெறி என்ற தொடர்ப் பொருளைத் தாம் உள்ளவாறு அறிந்து கொண்டதாகவும், ஞானசம்பந்தப் பிள்ளையார் அருளிய திருப்பதிகங்களாகிய திருநெறிய தமிழ் காலவேறு பாட்டால் மாற படாததெய்வத் தன்மைவாய்ந்த தமிழ்மறையாகும் என்பதனைப் பிற்காலத்தில் உணர்ந்து தெளிந்த தாகவும் அருட்பிரகாச வள்ளலார் படிப்படியாகத் தாம் பெற்ற திருவருள் விளக்கத்தைக் கூத்தப் பெருமானை நோக்கிக் கூறுவதாக அமைந்தது,

திருநெறிமெய்த் தமிழ்மறையாம் திருக்கடைக் காப்பதனால்
திருவுளங்காட்டிய நாளில் தெரிந்திலன் இச்சிறியேன்
பெருநெறி என் உளத்திருந்து காட்டியநா ளறிந்தேன்
பிழைபடாத் தெய்வமறை யிதுவெனப்பின் புணர்ந்தேன்
ஒருநெறியில் எனதுகரத் துவந்தளித்த நாளில்
உணராத உளவையெல்லாம் ஒருங்குணர்ந்து தெளிந்தேன்
தெருள்நெறிதந் தருளுமறைச் சிலம்பணித்த பதத்தாள்
சிவகாம வல்லிமகிழ் திருநடத் தெள்ளமுதே. (2802)

எனவரும். திருவருட்பாத் திருவருள் விலாசத் தலைப்பின் இரண்டாவது பாடலாகும்.

திருஞானசம்பந்தர் அருளிய மேற்குறித்த திருக்கடைக் காப்புப் பாடலில் ''பெருநெறி'' எனவும், ''திருநெறி'' எனவும் குறிக்கப்பட்டது, வள்ளலார் மேற்கொண்டொழுகிய சமரச சுத்த சன்மார்க்க நெறியாகும். இந்நுட்பம்,

திருநெறியொன்றே யதுதான் சமரசசன்மார்க்கச்
சிவநெறியென் றுணர்ந்துலகீர் சேர்ந்திடுமினீண்டு
வருநெறியி லெனையாட்கொண் டருளமுத மளித்து
வல்லப சத்திகளெல்லாம் வழங்கிய ஓர்வள்ளல்
பெருநெறியிற் சித்தாடத் திருவுருங்கொண் டருளிப்
பெருங்கருணை வடிவினொடு வருதருண மிதுவே
கருநெறிவீழ்ந் துழலாதீர் கலக்கமடை யாதீர்
கண்மையினாற் கருத்தொருமித் துண்மை யுரைத்தேனே (5587)

*எனவும்,*

சேர்ந்திடவே ஒருப்படுமின் சமரச சன்மார்க்கத்
திருநெறியே பெருநெறியாம் சித்தியெலாம் பெறாலாம்
ஓர்ந்திடுமின் உண்ணுதற்கும் உறங்குதற்கு முணர்ந்தீர்
உலகமெலாங் கண்டிடுமோர் உளவையறிந்திலிரே
வார்ந்தகடல் உலகறிய மரணமுண்டே அந்தோ
மரணமென்றாற் சடமெனுமோர் திரணமும் சம்மதியா
சார்ந்திடுமம் மரணமதைத் தடுத்திடலாங் கண்டீர்
தனித்திடு சிற்சபை நடத்தைத்தரிசனஞ் செய்வீரே. (5596)

*எனவும் வரும் திருவருட்பாக்களால் இனிது புலனாதல் காணலாம்.*

*மேற்கண்ட இப்பாடல்களிரண்டும் வள்ளலார் தோன்றுந் துணையாக இருந்து சித்திவளாகத் திருமாளிகையில் திருக் காப்பிட்டுக் கொள்வதற்குமுன் இறுதியாகப் பாடிய இருபத்தெட்டுப் பாடல்களில் அடங்கியன என்பதை அருட்பா அன்பர்கள் அனைவரும் நன்குணர்வர். "பெரு நெறிய.... பெம்மான்" என ஞானசம்பந்தர் நுண்பொருளாய்க் குறித்த பெருநெறி யினையே வள்ளலார் சமரச சுத்த சன்மார்க்கமாக விரித்துக் கூறியுள்ளார் என்பது இத்திருமூலர் அருளிய "திருநெறி", "பெருநெறி" எனக் குறிக்கப்படுவது குருமுகமாக அறிவுறுத்தப்படும் சன்மார்க்கச் சிவநெறியே என்னும் உண்மையினை,*

திருநெறியாவது சித்தசித் தன்றிப்
பெருநெறியாய பிரானை நினைந்து
குருநெறியாம் சிவமாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே. (திருமந்திரம் - 54)

*எனவரும் திருமந்திரப்பாடல் நன்கு விளக்குகிறது.*

குருநெறிக் கேஎன்னைக் கூட்டிக்
கொடுத்தது கூறரிதாம்
பெருநெறிக்கே சென்ற போக்குக்
கிடைப்பது பேய்உலகக்
கருநெறிக் கேற்றவர் காணற்
கரியது காட்டுகின்ற
திருநெறிக் கேற் கின்றது
உத்தரஞான சிதம்பரமே. (4052)

எனவரும் திருவருட்பாவினாலும் இவ்வுண்மை நன்கு வலியுறுத்தப் பெறுவது காணலாம்.

சுவை, ஒளி, ஊறு, நாற்றம், ஓசை எனப்படும் ஐம்புல உணர்வுகளும் தமக்குரிய நா, கண், மெய், செவி, மூக்கு என்னும் ஐம்பொறிகளில் நிலைத்திராது கலக்க முறவும் இவற்றைச் செலுத்துவதாகிய மனம் தான் செல்லுதற்குரிய நெறி இன்னதென்று அறியாது மயக்க முறவும், மனம் முதலிய அகக்கருவிகள் வாயிலாக வும் மெய் முதலிய புறக் கருவிகள் வாயிலாகவும் பொருள்களை அறிதற்குரிய உயிரின் அறிவு சிதைவுறவும், உடம்பில் வாய் வழியாகக் கோழை மேற்பட்டு வரவும் ஆன்மா அலமரும் இடர் நிலையில் 'அஞ்சற்க' என்று இறைவன் அருள் புரிவான் என்னும் உண்மையினை அறிவுறுத்தும் முறையிலமைந்தது,

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறி வழிந்திட்டு ஐம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்றருள் செய்வான். (தேவாரம் 1-130-1)

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரமாகும். இவ்வருளுரை யினைக் கூர்ந்து சிந்தித்த இராமலிங்க வள்ளலார் ஒரு நிலையில் நில்லாது உலகியலிற் பலவிடங்களிலும் பரந்து திரியும் நெஞ்சத்தினை நோக்கி, "நினக்கு அருள் புரியும் சிவபரம் பொருளை நினையாது உலகப் பொருள்களிற் சென்று அலைகின்ற நெஞ்சமே ஞானசம்பந்தர் அருளிய "புலனைந்தும் பொறிகலங்கி" என்ற பாடற் பொருளை, மயக்கத்தைச் செய்யும் மாயையாகிய மலத்தால் மறைப்புண்டு ஐயோ, மறந்து விட்டாயே" என வருந்தி அறிவுறுத்துவதாக அமைந்தது,

"இறைவனே
புனைந்தும் என்றருளும் பொன்
மொழியை மாயா
மலமொன்றி அந்தோ மறந்தாய்" (1965 கண்ணி 470)

எனவரும் 'நெஞ்சறிவுறுத்தல்' பகுதியாகும்.

இத்தொடரில் இறையோன் என்றது, சிவமாம் தன்மைபெற்ற திருஞானசம்பந்தப் பிள்ளையாரை.

திருஞான சம்பந்தப் பிள்ளையார், மங்கையர்க் கரசியாரும், குலச்சிறையாரும் வேண்டிக் கொண்ட வண்ணம் பாண்டிய நாட்டிற்கு எழுந்தருளி, அதன் தலை நகராகிய மதுரையை நெருங்கிய நிலையில் திருவாலவாயின் கோபுரம் தோன்ற அது கண்டு வியந்து நிலமிசைப் பணிந்து திருவாலவாய் இறைவரைப் போற்றிய திருப்பதிகம் 'மங்கையர்க்கரசி' எனத் தொடங்கும் பதிகமாகும். இப்பதிகத்தின் இரண்டாம் பாடலாகத் திகழ்வது,

வெற்றவே அடியா ரடிமிசை வீழும்
விருப்பினன் வெள்ளைநீ றணியும்
கொற்றவன் றனக்கு மந்திரி யாய
குலச்சிறை குலாவி நின்றேத்தும்
ஒற்றை வெள்விடைய னும்பரார் தலைவன்
உலகினி லியற்கையை ஒழிந்திட்டு
அற்றவர்க் கற்ற சிவனுறைகின்ற
ஆலவா யாவது மிதுவே. (3-120-2)

என்பதாகும். இதன்கண் முதலிரண்டிகளும் மந்திரியார் குலச் சிறையாரின் அடியார் பத்தியினையும் சிவபத்தியினையும் விளக்குவன. பன்னிரண்டடிகளும், திருவாலவாய்த் திருக் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனது திருவருளின் நீர் மையைப் புலப்படுத்துவன.

'உலகினில் இயற்கையை ஒழிந்திட்டு அற்றவர்க்கு அற்றசிவன்' எனவரும் இத்தொடர், உலகுயிர்களோடு ஒன்றாகியும். வேறாகியும், உடனாகியும் விளங்கும் இறைவனது அத்துவித நிலையைப் புலப்படுத்துவதாகும். இதன் கண் அற்றவர் என்றது, அளவற்ற அன்பின் திறத்தாலே உலகியல் நெறியாகிய பாசவாழ்வினை ஒழித்து' யாவராலும் செய்ய வொண்ணாத செயலைச் செய்து,

ஆன்ம போதம் அற்றுத் தம்மைச் சிவனருளிலே கொடுத்த மெய்யடியார்களை. அற்றவர்க்கு - பாசப் பிணிப்பினின்றும் நீங்கி இறைவன்பால் முழுதும் தன்னைக் கொடுத்துத் தான் அவனாய்த் தன் செயலற்ற சிவஞானியர்கட்கு. அற்றசிவன் தான் என்றும் அவர் என்றும் பிரிக்க வொண்ணாத இரண்டற்ற நிலையில் தன் செயலே அவர்கள் செயலாக அவ்வடியார்களோடு ஒட்டி வாழ்பவ னாகிய சிவபெருமான். அற்றசிவன் என்ற தொடரில் உள்ள அறுதல் என்னும் வினை, இரண்டற ஒன்றுபடுதலைக் குறித்தது. இஃது ஒட்டி வாழ்தல் எனவும் கூறப்படும். "உயிராவணம் செய்திட்டு உன்கைத் தந்தால் உணரப்படுவாரோடு ஒட்டி வாழ்தி" *(6-25-1)* எனவரும் அப்பர் அருளனுபவ மொழி இங்கு நினைக்கத் தகுவதாகும். "அற்றவர்க்கு அற்றசிவன்" என்னும் இத்தொடர்ப் பொருளை.

"முற்றும் அற்றவர்க்கற்றவன்" (இருபா இருபது *20)* எனவரும் தொடரில் அருள் நந்திசிவனார் விளக்கியுள்ளமை காணலாம். இத்தொடர் உலகெலாமாகி, வேறாய் உடனுமாய் நிற்கும் இறைவன், பாசப் பிணிப்பின் நீங்கித் தன்செயல் அற்று இறைபணி நிற்கும் சிவஞானயர்களோடு தன் செயலே அவர் செயலாகும்படி ஒன்றுபட்டு நிற்கும் அத்துவித நிலையைப் புலப்படுத்துவதாகும்.

இவ்வுண்மையினை.

"அற்றவர்கட் கற்றசிவ னாமென்ற அத்துவித
முற்றுமொழி கண்டருளின் மூழ்குநா ளெந்நாளோ
(தாயு - அறிஞருரை -2)

எனவரும் பாடலில் தாயுமான அடிகளார் தெளிய விளக்கி யுள்ளமை காணலாம்.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் அருளிய "அற்றவர்க்கற்ற சிவன்" என்ற தொடரின் பொருளையும் அந்தத் தொடருக்கு அருள்நந்திசிவனாரும், தாயுமான அடிகளும் கூறிய விளக்கத் தினையும் உளங்கொண்ட அருட்பிரகாச வள்ளலார், பாசப் பிணிப்பின் நீங்கித் தன் செயலற இறைபணியில் நிற்காத நெஞ்சத்

தினைத் திருத்திப் பணி கொள்ளுதற்குரிய பொன்மொழியாக விளங்குவது, சம்பந்தர் அருளிய அத்தொடர் மொழி என்றும், அம் மொழியை உலகத்தார் கூறும் மற்றை மொழிகளைப் போன்று புறக்கணித்து மறந்து விடலாகாதென்றும் தமது நெஞ்சத்திற்கு அறிவுறுத்தும் முறையிலமைந்தது,

"சம்பந்தர்
அற்றவருக்கு அற்றசிவனாமெனுமப் பொன்மொழியை
மற்றை மொழி போன்று மறந்தனையே." (1965-525)

எனவரும் நெஞ்சறிவுறுத்தல் கண்ணியாகும்.

அம்மை யப்பனாகிய இறைவனைத் "தாயானைத் தந்தையெனக் காயினானை" (3951) எனப் போற்றுவர் வடலூரர் வள்ளலார். 'தாயும் நீயேதந்தை நீயேசங்கரனே (1-50-7) என்பது ஆளுடைய பிள்ளையார் வாய் மொழியாகும். இறைவன் விழிப்பு நிலையிலும் உறக்க நிலையிலும் கனவு நிலையிலும் தமக்குத் தோன்றியருள் புரிந்த திறத்தை,

"நனவினும் கனவினும் எனக்கே நண்ணிய தண்ணிய அமுதை" (3966)

எனவரும் தொடரில் பரவிப் போற்றுவர் வள்ளலார் இத் திருவருட்பாத் தொடர்,

"நனவிலும் கனவிலும் நாளும் தன்னொளி
நினைவிலும் எனக்கு வந்தெய்தும் நின்மலன்" (3-21-1)

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரத்தை அடிஒற்றியமைந்தது.

பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானைப் "பிறப்பிலான் எங்கள் பரசிவ பெருமான்" - (884) என வள்ளலார் போற்றியுள்ளமை 'பிறப்பில் பெருமானைப் பின் தாழ் சடையானை' (1-80-2) எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரத்தை அடிஒற்றி அமைந்துள்ளமை காணலாம்.

இவ்வாறே அருட்பிரகாச வள்ளலார் சைவசமய ஆசிரியர் நால்வருள் திருநாவுக்கரசர், நம்பியாரூரர் மாணிக்கவாசகர் அருளிய

திருமுறைகளையும், திருமூலர் முதல் சேக்கிழார்நாயனார் ஈறாக வுள்ள ஏனையோர் அருளிய திருமுறைகளையும் தாம்பாடிய திருவருட்பாவில் எடுத்தாண்டு பொருள்விளக்கம் செய்துள்ளார்கள். அத்தகைய ஒப்புமைப் பகுதிகள் நிரம்பவுள்ளன. அவையனைத்தும் ஒருதனி நூலாக வெளிவரத் தக்கன ஆதலின் திருமுறையும் திருவருட்பாவும் என்ற இப்பகுதி இவ்வளவில் நிறைவு செய்யப் பெறுகிறது.

வாழி எனைத்தூக்கி வைத்த கரதலங்கள்
வாழிஎலாம் வல்ல மணிமன்றம் - வாழிநடம்
வாழி அருட்சோதி வாழி நடராயன்
வாழி சிவ ஞான வழி.

# கட்டுரைகள்

***சமயம்***

1. தேவார ஆசிரியர்கள் மேற்கொண்டொழுகிய சமயக் கொள்கை - கரந்தை வெள்ளிவிழா மலர் - கரந்தைத் தமிழ்ச் சங்கம் -1938

2. கருவூர்த் தேவர் - கல்விக் கழகக் கட்டுரை வெள்ளிவிழா நினைவு மலர் - கல்விக் கழகம், புதுச்சேரி -1951

3. இளைஞர்மாநாட்டுத் தலைமையுரை - சைவ சித்தாந்த மகாசபை பொன்விழா (சித்தாந்தம்) - சைவசித்தாந்த மகாசமாசம், சென்னை - 1955

4. நகரத்தாரும் திருமுறைப் பணியும் - ஸ்ரீகாசி நாட்டுக் கோட்டை நகரத்தார் சத்திரம் நூற்றாண்டு விழா மலர் - 1963

5. சைவசித்தாந்த வளர்ச்சி - திரிபுவன வீரேச்சுரம் மகாகும்பாபிஷேக மலர் - தருமையாதீனம், மாயூரம் - 1963

6. திருநாவுக்கரசு தேவர் - திருவாமூர் மகா கும்பாபிஷேக மலர், விழாக் குழுவினர், திருவாமூர் - 1963

7. திருமுறை வழிபாடு - முரசு, தனுஷ்கோடி மணி விழா மலர், விழாக்குழுவினர்-1967

8. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை - திருவிடைமருதூர் மகாகும்பாபிஷேக மலர் - திருவாவடுதுறை ஆதீனம் - 1970

9. திருவையாறும் சுந்தரமூர்த்திகளும் - மகா கும்பாபிஷேக மலர் - பஞ்சநதீஸ்வரர் தேவஸ்தானம், திருவையாறு - 1971

10. அறந்தரு நாவுக்கரசு - வெள்ளிவிழா மலர் - மணிவாசகர் மன்றம், அரியலூர் - 1972

11. சிதம்பரம் சிவகாமியம்மன் திருக்கோயில், கடலையமாந்தார் கோயில், தில்லையில் திருப்பாற்கடல் தீர்த்தமும், திருப்பெருந்துறைத் தீர்த்தமும் - சிதம்பரம் சிவகாமியம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக மலர் - திருப்பணிக்குழு - 1979

12. வெண்குன்று - கும்பாபிஷேக மலர் - சுவாமிநாத ஸ்வாமி தேவஸ்தானம், சுவாமிமலை

13. சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் 68ம் ஆண்டின் நிறைவு விழா தலைமைப் பேருரை - சித்தாந்தம் - சைவசித்தாந்த சமாஜம் - 1973

14. திருமுறைகளும் சிவஞானபோதமும் - ஆய்வுக்கோவை - இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், மூன்றாவது கருத்தரங்கம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - 1971

15. மணிவாசரும் மூவர் தமிழும் - திருமுறைக் கருத்தரங்கம் - ஸ்ரீமகாலிங்கப் பெருமான் திருக்கோவில், திருவிடைமருதூர் - 1973

16. சைவ நெறி - தமிழ்மலர் -தமிழ்ச் சங்கம், காரைக்குடி - 1974

17.திருவருட்பயன் - வெள்ளிவிழா மலர் - சிதம்பரம் ஸ்ரீராமகிருஷ்ண உயர்நிலைப் பள்ளி, சிதம்பரம் - 1975

18. தேவார, திருவாசகங்களில் திருவண்ணாமலை - அண்ணாமலையார் திருக்கோயில் கும்பாபிஷேக மலர் - திருப்பணிக் குழுவினர் - 1976

19. இளங்கோவடிகள் காலத்துச் சமய நிலை - பல்கலைக்கழக ஆண்டிதழ் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

20. இறைவன் தரும் இனிமை - தமிழ்ப்பொழில் - கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்

21. ஈங்கோய்மலை எழுபது - செந்தமிழ்ச் செல்வி - சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை

22. திருநின்ற செம்மை - சித்தாந்தம் - சைவசித்தாந்த மகாசமாசம், சென்னை.

23. அறுகயிறூசல் - சித்தாந்தம் - சைவசித்தாந்த மகாசமாசம், சென்னை.

24. ஐந்தவத்தை - தமிழ்த்துறைக் கருத்தரங்கு - அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - 1971

25. சிலம்பில் சைவம் - தமிழ்த்துறைக் கருத்தரங்கு - அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - 1973

26. மணிமேகலையில் சைவம் - தமிழ்த்துறைக் கருத்தரங்கு - அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - 1975

27. திருக்குறளில் சைவமும் வைணவமும் - தமிழ்த்துறைக் கருத்தரங்க - அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - 1975

**ஆ) இலக்கியம்**

28. பாசறை - வெள்ளிவிழா மலர் - யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்தி சங்கம் - 1950

29. பகுத்தூண் தொகுத்த ஆண்மை - செந்தமிழ்ச் செல்வி - சை.சி.நூற்.கழகம், சென்னை.

30. கல்வி - மங்கலங்கிழார் நினைவு மலர் - மங்கலங்கிழார் மன்றம், குருவராயப் பேட்டை - 1962

31. தமிழர் கல்வி நிலை - சென்னைப் பல்கலைக்கழக புதுமுக வகுப்புத் தமிழ் உரைநடை பகுதி - 2- சென்னைப் பல்கலைக்கழகம் - 1966

32. திருவள்ளுவர் நெறியில் திருமுறை ஆசிரியர்கள் - செங்கம் திருவள்ளுவர் கழகச் சிறப்பு மாநாட்டு மலர் - திருவள்ளுவர் கழகம், செங்கம் - 1967

33. உலகப் பொதுச் சமய நூல் - திருக்கழுக்குன்றம் சங்கு தீர்த்த புஷ்கரமேளா இலட்சதீப மலர், விழாக்குழுவினர், திருக்கழுக்குன்றம் 1968

34. குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ்- வெள்ளிவிழா மலர் - தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜனசங்கம் - 1970

35. அறிவுக்கருவி - முப்பால் மலர் - திருவள்ளுவர் கழகம் - 1970

36. திருக்குறள் கூறும் அறத்தின் அடிப்படை - திருவள்ளுவர் ஈராயிரமாண்டு சிறப்பு மலர் - தமிழ்நாடு தெய்வீகப் பேரவை, சென்னை - 1970

37. தலைசிறந்த உரையாசிரியர் - பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் திருவுருவச் சிலை திறப்பு - விழாக்குழுவினர் - 1970

38. திருக்குறளும் கீழ்க்கணக்கு நூல்களும் - கட்டுரைப் பொழில் - கரந்தைத் தமிழ்ச் சங்கம் - 1973

39. பண்புடைமை - சிதம்பரம் ஆர்.கனகசபைப் பிள்ளை மணிவிழா மலர் - மணிவிழாக்குழு - 1973

40. குறிஞ்சிப் பாட்டு ஆராய்ச்சி - சிதம்பரம் பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள் - சை.சி.நூற்.கழகம் - 1973

41. வானூர் மதியம் - தமிழ்ப் பொழில் - கரந்தைத் தமிழ்ச் சங்கம்

**இ) இலக்கணம்**

42. தொல்காப்பியம் - மறைமலையடிகள் நினைவு மலர் - நாகைத் தமிழ்ச் சங்கம்-1969

43. இறையனார் களவியலுரை - தமிழ்த் துறைக் கருத்தரங்கு - அண்ணாமலைப் பல்கலைக்கழகம் -1970

44. தொல்காப்பியம் கூறும் மொழியமைப்பு - தொல்காப்பியம் மொழியியல் - மொழியியல் துறை, அண்ணாமலைப்பல்கலைக்கழகம் - 1970

45. சார்பெழுத்துக் கொள்கை - இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் - மொ.துறை. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - 1974

46. அசையும் சீரும் - தமிழ்த் துறைக் கருத்தரங்கு - அண்ணாமலைப் பல்கலைக்கழகம் -1972

47. தொல்காப்பியத்தில் சில நூற்பாக்களின் பொருள் விளக்கம் - தமிழ்த்துறைக் கருத்தரங்க - அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - 1976

48. உத்திவகை - தமிழவேள் உமாமகேசுவரனார் நூற்றாண்டு கட்டுரைப் பூங்கா - தஞ்சாவூர் - 1984

**இசை**

49. ஆடற்கலை - கழகத்தின் 1008வது வெளியீட்டு விழா மலர் - தி.தெ.சை.சி.நூற்.கழகம் சென்னை - 1961

50. தேவாரத்திற் பயின்ற பண்களும் இசைக்கருவிகளும் - தமிழ் இசை 22ஆம் விழா மலர் - இராஜா அண்ணாமலை மன்றம் - 1964-65

51. தேவாரம் ஓதும் முறையின் பழமை - பண்ணாராய்ச்சி வெள்ளிவிழா - தமிழிசைச் சங்கம், சென்னை.

52. யாழ்நூலின் அமைப்பும் சிறப்பும் - பண்ணாராய்ச்சி வெள்ளிவிழா - தமிழிசைச் சங்கம்,

53. பண்ணார் தமிழ் - திருவானைக்கா திருக்கோயில் மகாகும்பாபிஷேக மலர் -திருப்பணிக் குழு - 1970

54. குரல், மத்திமமே - செந்தமிழ்ச் செல்வி - தி.தெ.சை.சி.நூற்.கழகம் சென்னை

55. சங்க காலத் தமிழ் வாணிபம் - வெள்ளிவிழா மலர் - அண்ணாமலைப் பல்கலைக்கழக கூட்டுறவு பண்டகசாலை -1956

56. சிதம்பர புராண ஆசிரியர் - வெள்ளிவிழா மலர் - ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி, மயிலம் - 1966

57. யாழ்நூல் ஆசிரியர் அருள்மிகு விபுலானந்த அடிகளார் - மணிவிழாச் சிறப்பு மலர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை - 1973

58. பாண்டித்துரைத் தேவர் - தமிழ்ப் பொழில் - கரந்தைத்தமிழ்ச் சங்கம் , தஞ்சை

59. தொல்காப்பியர் காலம் - இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர் - விழாக்குழுவினர்

60. திருவாசகம் வளர்த்த பெரியார் அண்ணாமலை ஐயா - வள்ளுவர் மன்றம் வெள்ளி விழா மலர் -1956

**(ஊ) ஒப்பீடு**

61. தொல்காப்பியமும் திருக்கோவையாரும் - தவத்திரு திருநாவுக்கரசு அவர்களின் 60வது ஆண்டு நிறைவு விழா மலர் - திருச்சிராப்பள்ளி-1981

62. பதிற்றுப்பத்தும் பாடாண் திணையும் - முத்துக்கோவை தமிழகப் புலவர் குழு வெளியீட்டு விழா மலர் - 1981

63. திருமுறைகளில் தில்லை - சைவசித்தாந்தப் பெருமன்றம் முத்துவிழா மலர் - சிதம்பரம் 1986

64. ஆளுடைய பிள்ளையார் மாலை (தனிப்பாடல் திருஞான சம்பந்தர் பற்றியது) - சுப்பையாபிள்ளை பவள விழா மலர் - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் - 1973

65. தொல்காப்பியத்தில் தத்துவ நெறிக்கொள்கைகள் - திருக்கோயில் - திருக்கோயில் - 1978

## பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| பிறப்பு | : | 14.01.1917 |
| மறைவு | : | 13.06.1988 |
| பெற்றோர் | : | கந்தசாமி, அமிர்தம் |
| ஊர் | : | தஞ்சை மாவட்டம் - திருநாகேச்சரம் |
| குடும்பம் | : | மனைவி திருமதி பொற்றடங்கண்ணி,<br>மகள் திருமதி மங்கையர்க்கரசி திருநாவுக்கரசு |
| கல்வி | : | திருப்பெருந்துறை தேவாரப்பாடசாலை (1928 - 1930).<br>அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வித்துவான் - (1930 - 1935); அறிஞர் கா.சுப்பிரமணிய பிள்ளை, சுவாமி விபுலானந்தர், நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகியோர் ஆசிரியர்கள். ஆய்வு மாணவர்.<br>அண்ணாமலைப் பல்கலைக் கழகம் - நாவலர் சோமசுந்தர பாரதியார் வழி காட்டி (1933 - 37) தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம் ஒப்பாய்வு. |
| கல்விப்பணி | : | கரந்தைத் தமிழ்ச்சங்கம் - விரிவுரையாளர் (1938 - 1943)<br>அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - விரிவுரை யாளர் (1943 - 1962)<br>அண்ணாமலைப் பல்கலைக் கழகம் - இணைப் பேராசிரியர் (1962 -77)<br>அண்ணாமலைப் பல்கலைக்கழக பேராசிரியர், துறைத் தலைவர் புலமுதன்மையர் (1977 - 79)<br>மதுரை காமராசர் பல்கலைக் கழகம் - சிறப்பு நிலைப் பேராசிரியர் (1979 - 1982) |

தமிழ்ப் பல்கலைக் கழகம் - இலக்கியத் துறைத் தலைவர், சிறப்பு நிலைப் பேராசிரியர், புல முதன்மையர் (1982 - 87)

எழுத்துப்பணி : **கவிதை:**

1. காக்கை விடுதூது - (இந்திமொழி கட்டாய பாட எதிர்ப்பு, 1939)

2. விபுலானந்தர் யாழ் நூலுக்குச் சிறப்புப் பாயிரம்

உரைநடை : சங்ககாலத் தமிழ் மக்கள்- (1948) சென்னை

குறிஞ்சிப் பாட்டாராய்ச்சி - பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள் (கழகப் பதிப்பு) திருநெல்வேலி

தமிழிலக்கிய வரலாறு - (தொல்காப்பியம் 1957)

தொல்காப்பியம் நன்னூல் - எழுத்ததிகாரம் (1962) (அ.நகர்)

சேக்கிழார் நூல் நயம் - (1970) சென்னை

பன்னிரு திருமுறை வரலாறு -1ஆம் பகுதி (1961)

பன்னிரு திருமுறை வரலாறு -2ஆம் பகுதி (1969) (தமிழக அரசு பரிசு பெற்றது) தில்லைப்பெருங் கோயில் வரலாறு (1984) சிதம்பரம் மணிவாசகர் பதிப்பகம்

திருவருட்பாச் சிந்தனை - (1986) சிதம்பரம் (தமிழக அரசு பரிசு பெற்றது)

தொல்காப்பியம் - நன்னூல் சொல்லதிகாரம் (1971). இசைத்தமிழ் 1979, சிதம்பரம்.

திருத்தொண்டர் வரலாறு (சுருக்கம்) 1986, அரிமழம்.

தொல்காப்பியம் பொருளதிகார ஆய்வு, 1987 தஞ்சாவூர்

சைவசித்தாந்த சாத்திர வரலாறு 2002

சைவசித்தாந்த தத்துவத்தின் வேர்கள்.

உரை : 1) அற்புதத் திருவந்தாதி, (1970) சிதம்பரம்

2) திருவுந்தியார், திருக்களிற்றுப் பாடியார் (1982) திருப்பனந்தாள்

3) திருமந்திர அருள்முறைத்திரட்டு (1973) சிதம்பரம்

4) கம்பராமாயணத்தில 16 படலங்கள் (1963)

5) திருவருட்பயன் - 1965 சென்னை.

அபதிப்பு : பரதசங்கிரகம் - 1954 - அண்ணாமலைப் பல்கலைக் கழகம் -சிதம்பரம்

உரைவளப் பதிப்பு : 1.தொல்காப்பியம்: புறத்திணையியல் - 1983
2. தொல்காப்பியம்: களவியல் - 1983
3. தொல்காப்பியம்: கற்பியல் - 1983
4. தொல்காப்பியம்; பொருளியல் - 1983
5. தொல்காப்பியம்; உவமையியல் - 1985
6. தொல்காப்பியம்; மெய்ப்பாட்டியியல் - 1986
7. தொல்காப்பியம்; செய்யுளியல் - 1989
ஆகியவை மதுரை காமராசர் பல்கலைக்கழக வெளியீடுகள்.

**சிறப்புகள்:**

1. சித்தாந்த செம்மல் - தூத்துக்குடி சைவசித்தாந்த சபை (1944)
2. திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர் - தருமபுரம் ஆதினம் (1971)
3. திருமுறை உரை மணி - காஞ்சிபுரம் ஸ்ரீசங்கர மடம் (1984)
4. கலைமாமணி - தமிழ்நாடு இயல் - இசை, நாடக மன்றம் (1985)
5. தமிழ்ப்பேரவைச் செம்மல் -மதுரை காமராசர் பல்கலைக் கழகம் (1984 - 1989)
6. தமிழகப் புலவர் குழு உறுப்பினர்
7. திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்கத் திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை நினைவு பொற்கிழி (1986)

**குறிப்புகள்**

குறிப்புகள்

**குறிப்புகள்**